திருக்குறள்

புதிய உரை

இதுவரை
வெளிவராத
புது உரை

பல்கலைப் பேரறிஞர்
டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா
M.A; M.P.Ed; Ph.D; D.Litt; D.Ed; FUWAI.

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

- திருமூலர், திருவள்ளுவர், வள்ளலார் போன்றவர்களுக்குப் பிறகு, தேகத்தின் தெய்வாம்சம் பற்றி மக்களிடையே, மகிமையை வளர்க்கும் பணியைக் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் செய்து வருகிறார்.

- **எங்கும் தமிழ், எதிலும் தமிழ்** என்ற கொள்கையில் நம்பிக்கையுடைய இவர், **எங்கும் முதல், எதிலும் முதல்** என்பதுபோல, பல அரிய காரியங்களை நிறைவேற்றி வருகிறார்.

- சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவை நடத்திய ஓடுகளப் போட்டிகளில் வெற்றி வீராராகத் திகழ்ந்திருக்கிறார்.

- தான் பெற்ற வெற்றியும், புகழும் எல்லோரும் பெற வேண்டும் என்பதற்காக **'விளையாட்டு இலக்கியத் துறை'** என்ற புதிய துறையை உருவாக்கி இருக்கிறார்.

- முதன் முதலாக விளையாட்டுத் துறை இலக்கிய நூலை 1964ம் ஆண்டில் எழுதிமுடித்த இவர், இதுவரை இருநூறு நூல்களைப் படைத்திருக்கிறார்.

- இதற்காக, தான் வகித்து வந்த எல்லாப் பதவிகளையும் விட்டு விட்டு, முழுநேர எழுத்தாளராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

திருக்குறள்
புதிய உரை

அறத்துப்பால்
(ஒழுக்கம் பற்றி கூறுகிற உடலியல் நூல்)

தேசிய விருது பெற்ற பேராசிரியர்
பல்கலைப் பேரறிஞர்
டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI
முன்னாள் ஆய்வுத்துறை தலைவர்,
பேராசிரியர். ஒய்.எம்.சி.ஏ., உடற்கல்விக் கல்லூரி,
நந்தனம், சென்னை - 600 035

ராஜ்மோகன் பதிப்பகம்
'லில்லி பவனம்'
8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 4342232

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர் : **திருக்குறள் புதிய உரை**

மொழி : தமிழ்

பொருள் : **திருக்குறள் ஆய்வு உரை நூல்**

ஆசிரியர் : **டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா**

பதிப்பு : முதல் பதிப்பு - நவம்பர் 2000

நூலின் அளவு : டெம்மி

அச்சு : 11 புள்ளி

தாள் : மேப்லித்தோ 18.6 Kg.

பக்கங்கள் : 592

நூல்கட்டுமானம் : ஸ்டிப் பைண்டிங்

விலை : ரூ. 180-00

உரிமை : ஆசிரியருக்கு

வெளியிட்டோர் : ராஜ்மோகன் பதிப்பகம்
8, காவலர் குடியிருப்பு சாலை
தி.நகர், சென்னை - 600 017.

அச்சிட்டோர் : கிரேஸ் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 017.
தொலைபேசி: 4332696

எனது பார்வையில் திருக்குறள்

திருக்குறள் என்பது மறை நூல், வாழ்க்கை நூல், உலகப் பொதுமறை என்றெல்லாம் உயர்த்திப் புகழ்வார்கள். என்பார்வையில் 'திருக்குறள்' என்பது உடலியலைப் போற்றும் வாழ்வியல் நூல் என்பதாகும்.

1. அறத்துப்பால்

அறம் என்றால் ஒழுக்கம். ஒழுக்கத்தை உண்மையாக நேசித்து ஒழுகுபவன் அறன். அவன் தன்னை ஒத்த ஒழுக்கமான ஒரு பெண்ணுடன் நடத்துகிற வாழ்க்கை இல்லறம். அதை விரும்பாமல் விலகி நின்றால் துறவறம். இவ்வாறு ஒழுக்கத்தோடு வாழ்வோருக்கு எப்படி எல்லாம் வழி வகைகள் இருக்கின்றன என்று, வகுத்தும், தொகுத்தும் தெளிவாகச் சொல்லப்பட்ட கருத்துக்களே அறத்துப்பாலில் இடம் பெற்றிருக்கின்றன.

2. பொருட்பால்

உடல் என்றால் பொருள். பொருள் என்றால் உடல், என்றும் பொருள் உண்டு. உடலை ஊர், நாடு, தேசம் என்றெல்லாம் கூறுவார்கள். உடல் உள்ளே உலவுகிற, உலாவருகிற காற்றாகிய ஆத்மா என்னும் உயிரை, உடலுக்கு நாயகன். உன்னத தலைவன், கோட்டையின் அரசன் என்றெல்லாம் சொல்வார்கள்.

உடலையும், உயிரையும் ஒருசேரக் காப்பாற்றுகிற, உக்திகளை, சக்திகளை, மரபுகளை, மறை வழிகளை, முறைகளை, போராடும் துறைகளை, வெற்றிபெறும் வினைகளை, வீரமாற்றும் கணைகளை, பேரெழுச்சி பொங்கச் சொல்கின்ற கருத்துக்களே பொருட்பாலில் இடம் பெற்றிருக்கின்றன.

3. காமத்துப்பால்

வெளிப்பகையை வெல்லுகிற வழி வகைகளை விளக்கமாக விவரித்த வள்ளுவர், உட்பகையில் ஒன்றான காமத்தை, இயற்கையாக ஏற்படுகின்ற புலன் உணர்வை, புணர்ச்சி இன்பத்தை, அதற்கு அடிமை ஆகாமல், தனது ஆளுமை குறையாமல், எப்படித் துய்க்க வேண்டும்? தொடர வேண்டும் என்று இப்பாலில் கூறி விவரித்துள்ளார்.

வீரியமும், அதற்குள்ளே மனதை மயக்கி, மடக்கிப்போடும் மந்திர மோகமுமான காமத்தை, ஒழுக்க முள்ளவர்கள் எவ்வாறு சுகமாக அனுபவிக்க முடியும் என்ற சூத்திரத்தை சொல்லும் சாத்திரமாகக் காமத்துப்பால் அமைந்து இருக்கிறது.

இத்தகைய எனது பார்வையுடன்தான் இந்தப் புதிய உரை எழுதப்பட்டு இருக்கிறது.

உரை எழுதியிருக்கும் முறை

★ தலைப்பில் குறளைக் கொடுத்திருக்கிறோம்

★ அதைத் தொடர்ந்து அந்தக் குறளுக்குரிய சொற்களின் **பொருள் விளக்கம்** தந்திருக்கிறோம்.

★ **சொல் விளக்கம்** என்ற பகுதியைத் தந்து, ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்களில், பொருத்தமான புதுப்பொருளைத் தெரிந்து எடுத்து, புதிய உரையைத் தெளிவாக்கியிருக்கிறோம்.

★ பாரினில் புகழ்பெற்ற பரிமேலழகர் உரையை, **முற்கால உரை** என்று படிப்பவர்களின், பார்வைக்கும், பரிசீலனைக்கும் கொடுத்திருக்கிறோம்.

★ அடுத்ததாகத், **தற்கால உரை** என்ற தலைப்பில், இருபதாம் நூற்றாண்டில், முற்கால உரையைவிட வித்தியாசமாக விளக்கம் தர வேண்டுமென்று விரும்பியவர்களின் தேர்ச்சி பெற்ற உரை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக், கற்பவர்களின் கருத்துக்கு இதம் சேர்த்திருக்கிறோம்.

★ மூன்றாவதாகப், **புதிய உரை** என்று எனக்குள் ஏற்பட்ட, எண்ண எழுச்சியின் வெளிப்பாட்டைச்சுருக்கமான உரையாகச் சொல்லி இருக்கிறேன்.

★ புதிய உரையைத் தொடர்ந்து புதிய உரை எழுந்ததற்கான சூழல்; சொல்லிய புதிய உரைக்கு, தெள்ளிய விளக்கம், இலக்கியத்தேடல்கள், அந்தக் குறிப்புகள் கொடுக்கின்ற உறுதிப்பாடுகள், குறிப்பிட்ட குறளை எவ்வாறு மேன்மைப் படுத்துகிறது என்பதாக **விளக்கம் பகுதி** அமைந்திருக்கிறது.

★ வாசகர்கள் எந்த விதக் குழப்பமுமின்றி, புதிய உரையை சுவைத்துப் படித்து ரசித்து மகிழ இத்தகைய பாகுபாட்டு முறை பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.

தமிழ்மாமணி - திருக்குறள் ஞாயிறு
அருண்மொழிச் செல்வர்
முனைவர் பா. வளன் அரசு
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை 627 002.

புதுவை இல்லம்
1அ. நெல்லை நாயனார் தெரு
பாளையங்கோட்டை - 627002.
☎: 0462 - 579967.

விளையாட்டுத் துறை அறிஞரின் வித்தக விளக்கம்!

உடற்கல்வி அறிஞர் நவராஜ் செல்லையா அவர்களின் திருக்குறள் உரை விளக்கம் புதிய பார்வையுடன் வெளிவந்துள்ளது. ''விளையாட்டுக் களஞ்சியம்'' இதழ் வாயிலாகத் தொடர்ந்து மாதந்தோறும் புத்துரை வழங்கி வருகிறார். முற்கால உரை என்ற பெயரில் பரிமேலழகர் உரையும்; தற்கால உரையாகத் தாம் தேர்ந்து எடுத்த உரையும் தந்து; வித்தகப் புலமை நலம் விரியும் வண்ணம், தம் எண்ணக் கோவையை எழுத்தாக்கி, விழுமிய திருக்குறளுக்குப் பெருமை தருவதற்கு முனைந்துள்ளார்.

திருவள்ளுவர் அருளிய திருக்குறளுக்கு மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை பதின்மர் பதின் மூன்றாம் நூற்றாண்டில் உரை வரைந்துள்ளனர். கடந்த ஏழு நூற்றாண்டுகளில் ஏறத்தாழ எழுபதின்மர் புதிய உரைகளைத் தீட்டியுள்ளனர். முனைவர் நவராஜ் செல்லையா அவர்கள் முன்னோர் உரைகள் பற்றிக் கூறும்போது, ''அவர்கள் உரையெல்லாம் அறிவார்ந்த உரைகள்; அனுபவக் குவியல்கள்; ஆன்ற தமிழ்ச் சுரங்கங்கள்; பெரிதும் போற்றப்படும் புதையல்கள்; ஆழமான கருத்தூற்றுக்கள்'' என்று போற்றி மகிழ்கிறார்; தம் உரைபற்றித் தெரிவிக்கும் பேராசிரியர், ''அவர்கள் தோண்டிய மணற்கேணியின் ஆழத்தில், இன்னும் கொஞ்சம் ஆழமாகத் தோண்ட ஆசைப் பட்டிருக்கிறேன்'' என்று எடுத்துரைக்கிறார்.

முப்பது ஆண்டுகளில் இரு நூறு நூல்கள் எழுதிக் குவித்துள்ள உடற்கல்வி அறிஞர் நவராஜ் செல்லையா அவர்கள், ''வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்'' பற்றியும், ''வள்ளுவர் வணங்கிய கடவுள்'' குறித்தும் ஆராய்ந்து இரு நூல்களை வழங்கியுள்ளார். திருக்குறளை ஆயிரத்துக்கு மேற்பட்ட முறை படிக்கவும் ஆன்ற பொருள் அறியத் துடிக்கவும் செய்த பேராசிரியர், செல்லையா

பாமரரும் புரிந்து கொள்வதற்காகப் பழகு தமிழில் விளக்கம் எழுதியுள்ளார்.; தம் உரையுள் குணம் நாடவும் குற்றம் காணவும் வேண்டுகிறார்.

''கற்றதன் பயன் நிகழ்காலத்தில் சந்தித்து வாழ்தல்; எதிர்காலத்தில் சிந்தித்து வாழ்தல்; இறந்த காலத்திதை வந்தித்து வாழ்தல்'' (ப.18) என்று கூறுகிறார்!

அதிகாரம் தோறும் முதலில் விரிவான விளக்கம் வழங்குகிறார். ''வாழ்க்கைத் துணை நலத்தைத் தொடர்ந்து வைத்திருக்கும் அதிகாரம் மக்கட் பேறு. அறத்தில் சிறந்தவன் அறன்; அறத்தில் சிறந்தவள் அறனி. அறனும் அறனியும் இணைந்து நடத்துகிற இல்வாழ்க்கையின். ஈடில்லாப் பரிசு குழந்தைச் செல்வம்''. (ப.97)

அதிகாரங்களை இயைபு படுத்திக் கூறுவது இவ்வுரையின் சிறப்பாகும். ''உடலால் காட்டுகின்ற அன்பு கலைந்து விடும், உள்ளத்தால் மீட்டுகின்ற அன்பு சலித்துவிடும். உயிரோட்டமாக இருக்கின்ற அன்பே நிலைத்து நிற்கும்'' என்று அன்புடைமை அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கினார். அன்பு யாரிடம் எப்படிக் காட்ட வேண்டும்? குடும்பத்தாரிடம் காட்டுகின்ற அன்பு பாசம். சுற்றத்தாரிடம் காட்டுகின்ற அன்பு பரிவு. புதியவர்களிடம் காட்டுகின்ற அன்பு மனித நேயமாகும். இத்தகைய இனிய மனித நேயமானது இல்வாழ்வோர்க்கு என்றும் தேவை என்பதால் தான், அன்புடைமைக்கு அடுத்ததாக விருந்தோம்பலை வள்ளுவர் வைத்திருக்கிறார்.'' (ப.122), பரிமேலழகர் போன்று விளக்கம் தர முயல்வது குறிப்பிடத்தக்கதாகும், பாராட்டுக்குரியதாகும்.

ஒழுக்கம் பண்பாற்றலைத் தருகிறது என விளம்பும்போது, ''ஒழுக்கம் தான் வழிகாட்டி; வாழ்க்கைக்கு முனைப்பூட்டி; சிறப்புக்குச் செயல்காட்டி'' என்று தெரிவித்து, ஒழுக்கம் ஒருவரை உயர்த்துவதைச் சுட்டிக் காட்டுகிறார் (ப.185).

''நலக்குரியார்'' என்ற சொல்லுக்கு விரிவுரை தருவது வியப்பூட்டுகிறது. ''பிற பெண்ணை நயக்கும்போதே, அக அழகு, முக அழகு, நினைவழகு, செயல் அழகு, புகழ் அழகு எல்லாமே பாழாகிப் போகிறது'' (ப.204)

திருவள்ளுவர் பயன்படுத்தாத ஓரெழுத்து ஒள. எதுகை கருதி ஒளவியம் அவ்வியம் என வருகிறது. அக்குறளுக்குப் பேராசிரியர் நவராஜ் தரும் விளக்கம் பாராட்டத் தக்கது. ''பொறாமை கொண்டவன் பெருக்கமும் நேர்மையாளன் இறக்கமும் நீடித்து

நிலைப்பதல்ல; . நீர்க்குமிழி போல மறைந்தொழியும் என்று மனத்துக்கு ஊக்கம் தரவே இந்தக் குறளைத் தந்திருக்கிறார் வள்ளுவர்'' (ப.230).

சான்றோர் பேசும் முறையினைத் திருவள்ளுவர் வாயிலாகத் தெரிவிக்கிறார். ''பிறருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த மட்டும் பேச்சு உதவவில்லை; தன்னை வளப்படுத்தவும் நிலைப்படுத்திக் கொள்ளவும் வழிகாட்டுகிறது என்பதால், நல்லவை பேசாவிட்டாலும் பரவாயில்லை. அல்லவை பேசாமல் இருந்தால், அதுவே அருமையான வாழ்வை அளிக்கும்'' (ப.274) என்று வள்ளுவ உள்ளத்தைத் தெள்ளிதின் உணர்த்துகிறார். பேசும் சொற்களை ஆறுவகைப் படுத்துகிறார்: 1. பயனற்ற சொல், 2. பலரும் அறியும் பெருஞ்சொல், 3. இடக்கரடக்கல், 4. நலிந்த சொல், 5. கொஞ்சு மொழியாம் மிழற்றல், 6. இழி மக்கள் பேச்சு (ப. 275). சொற்களின் தரமும் திறமும் அறிந்து பெரியோர் தெளிவுறப்பேசுவர்.

ஈகை பற்றி எடுத்தியம்பும்போது, ''ஒரு சமுதாயத்திலே வாழ்கிற மக்களை மூன்று நிலைகளாகப் பார்க்கலாம்'' என்பர், தொல்காப்பியர் மொழியினைப் பயன்படுத்தி விளக்கம் தருகிறார். ''தனக்குத் தாழ்வாக உள்ளவர்களிடம் ஒன்றைக் கேட்கிறபோது, **கொடு** என்று அதிகாரம் செய்வது ஒரு நிலை, தனக்குச் சமமாக் உள்ளவர்களிடம் ஒன்றைக் கேட்கிறபோது **தா** என்று இயல்பான முறையில் கேட்பது ஒரு நிலை. தனக்கு மேலாக உள்ளவர்களிடம் ஒன்றைக் கேட்கிறபோது **ஈ** என்று சொல்லில் குழைவையும் நெளிவையும் காட்டிக் கேட்பது மூன்றாம் நிலை'' (ப.320)

கள்ளாமை என்பதற்குப் பிறர் பொருளைக் கவரக் கருதாமை என்பது பொருள். கள்ள ஆசாரம் கொண்டது தான் கள்ளமெய் என்று கூறி, வேசிக் கள்ளர், ஆசாரக் கள்ளர், கும்பிடு கள்ளர், அழுகள்ளர், மாசாலக் கள்ளர் என்று பட்டியலிட்டுக் காட்டும் பேராசிரியர், உடம்பால் களவு செய்யாத மெய் துறவியருக்குப் பெரிதும் தேவை என்பர். கள்ளாமை பேராசிரியர் பார்வையில் கள்ளா மெய் ஆகிறது!

அறத்துப் பாலின் முப்பத்தெட்டு அதிகாரங்களுக்கும் புதுமை விரவிய நோக்கும் மதுகைப் போக்கும் கொண்டவராகப் பேராசிரியர் நவராஜ் செல்லையா, எல்லோருக்கும் எளிதில் விளங்கும் வகையில் உரை வரைந்துள்ளார். நூலாசிரியரின் மதி நுட்பமும் செயல் திறமும் மனத் திட்பமும் வியக்கத்தக்கவை.

பாளையங்கோட்டை **பா. வளன் அரசு .**

அறத்துப்பால்

(அதிகார வரிசை)

பெயர்	பக்கம்	பெயர்	பக்கம்
1. கடவுள் வாழ்த்து	13	20. பயன் இல சொல்லாமை	261
2. வான் சிறப்பு	31	21. தீவினை அச்சம்	280
3. நீத்தார் பெருமை	44	22. ஒப்புரவு அறிதல்	300
4. அறன் வலியுறுத்தல்	59	23. ஈகை	320
5. இல்வாழ்க்கை	73	24. புகழ்	340
6. வாழ்க்கைத் துணைநலம்	85	25. அருள் உடைமை	362
7. மக்கட்பேறு	97	26. புலால் மறுத்தல்	383
8. அன்புடமை	110	27. தவம்	404
9. விருந்தோம்பல்	122	28. கூடா ஒழுக்கம்	424
10. இனியவை கூறல்	133	29. கள்ளாமை	444
11. செய்ந்நன்றி அறிதல்	144	30. வாய்மை	464
12. நடுவு நிலைமை	156	31. வெகுளாமை	477
13. அடக்கம் உடைமை	168	32. இன்னா செய்யாமை	491
14. ஒழுக்கம் உடைமை	181	33. கொல்லாமை	505
15. பிறன் இல் விழையாமை	194	34. நிலையாமை	518
16. பொறை உடைமை	207	35. துறவு	532
17. அழுக்காறாமை	219	36. மெய் உணர்தல்	546
18. வெஃகாமை	232	37. அவா அறுத்தல்	559
19. புறங் கூறாமை	246	38. ஊழ்	572

உரை எழுதியதன் நோக்கம்!

தமிழில் தெளிந்த தகைமைசால் அறிஞர்கள், திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்தே, தெளிவுரை என்றும் தேர்ந்த உரை என்றும் எழுதிக் கொண்டே வருகின்றார்கள்.

எண்ணுந்தோறும் புதிய எண்ணங்கள், எழுதுந்தோறும் புதிய உரைகள் என்று பிறந்து கொண்டே இருக்கின்றன.

திருக்குறளை வாழ்வியல் நூல் என்பார்கள். உலகியல் நூல் என்பார்கள். உயிரியல் நூல், பொருளியல் நூல் என்பார்கள். மத இயல் நூல் என்றும், தாங்கள் சேர்ந்திருக்கும் இடத்திற்கேற்ப, வாழ்கின்ற வாழ்க்கை முறைக்கேற்ப, சுற்றுச் சூழலுக்கேற்ப, தங்கள் பக்கம் திருக்குறளைச் சேர்த்துக் கொண்டார்கள்; இழுத்துக் கொண்டார்கள் உரையாசிரியர்கள்.

உலக வாழ்க்கைக்கு உடல்தான் ஆதாரம் - அடிப்படை. அறம், பொருள், இன்பம் என்பதெல்லாம் **உடல் நலம், மன வளம், ஆன்ம பலம்** போன்றவற்றின் அடிப்படையில் தான் சிறப்புறத் தொடர்கிறது, படர்கிறது என்பது, எல்லோருமே ஏற்றுக் கொண்டிருக்கிற உண்மையாகும்.

ஒழுக்கம் தவறிச் செய்யும் செயல்களுக்கு ஏற்ப தண்டனை உண்டு என்பதனை, வலியுறுத்தும் வகையில் தான், வள்ளுவர் தமது குறள்பாக்களை வடிவமைத்துத் தந்திருப்பதை, நாம் குறள் முழுவதும் காணலாம்.

நல்ல உடலில் நல்ல மனம் இருக்கும். நல்ல உடல் தான் நல்ல வாழ்க்கையை உருவாக்கும். நல்லொழுக்கத்தை நிலை நாட்டும். வழக்கு ஏதும் வந்து விடாம்ல் பாதுகாக்கும்.

எனவேதான், வள்ளுவரின் மறையான திருக்குறளில் மறைந்து நிறைந்து கிடக்கும் **உடலியல் சார்ந்த வாழ்வு நெறியின் நுண்மை நிறைந்த பல கருத்துக்களை வெளிப்படுத்தும் வேட்கையுடன்** நானும் ஒரு புதிய உரையை எழுத முன் வந்திருக்கிறேன்.

'பிற உரையாசிரியர்கள் உரையெல்லாம் பிழைகளா? பொருத்தமில்லாதனவா?' என்றெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. நானும் இங்கு அதுபற்றி வாதம் செய்ய வரவில்லை; முயலவில்லை. அப்படி நினைப்பதே அவமானமாகும்.

அவர்கள் உரையெல்லாம் அறிவார்ந்த உரைகள்; அனுபவக்குவியல்கள்; ஆன்ற தமிழ்ச் சுரங்கங்கள்; பெரிதும் போற்றப்படும் புதையல்கள்; ஆழமான கருத்தூற்றுக்கள்.

இங்கு எனது உரை எப்படி அமைகிறது என்றால், **அவர்கள் தோண்டிய மணற் கேணியின் ஆழத்தில், இன்னும் கொஞ்சம் ஆழமாகத் தோண்ட ஆசைப்பட்டிருக்கிறேன்.** அவ்வளவுதான்; இது ஒரு துணிவான முயற்சிதான்.

இந்த முயற்சிக்காக, ஏற்கனவே தோண்டியிருக்கும் மணற்கேணியின் கரையை நான் இடிக்கவில்லை. ஏற்படுத்திய கட்டுக்கோப்பை நான் உடைக்கவில்லை. மணல் சரிவை ஏற்படுத்தி மூடும் வேலையையும் செய்யவில்லை.

ஏற்கனவே இருப்பதிலிருந்து இன்னும் கொஞ்சம் ஆழம்; கொஞ்சம் ஆய்வு; அவ்வளவுதான். அதற்காகக் குறள்களிலிருந்து ஓர் எழுத்தைக் கூட்டவும் இல்லை. சிதைக்கவும் இல்லை. சீர் செய்யவும் இல்லை. மாற்றவும் இல்லை. மறைக்கவும் இல்லை.

நான் தெரிந்து, தெளிந்து, புரிந்து, அறிந்து உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான். இந்தப் புதிய உரையை எழுதியுள்ளேன்.

என்னால் இயன்றது என்கிறபோதே, எனது பலவீனமும் இதில் அடங்குகிறது. அதனால், குறைகள் நேரலாம். குறுகுறுப் பையும் உண்டாக்கலாம்.

என் கருத்துக்கு எதிர்க்கருத்து நிச்சயம் உங்களுக்கு ஏற்படும். அதற்காகக் கோபப்படாமல் என்னிடம் எடுத்துக் கூறலாம். கலந்து பேசலாம். இணக்கமான ஒரு நடுநிலைக் கருத்துக்குள் நாம் இணையலாம். **இந்தப் பக்குவமான மனத்துடன் என் உரையைப் படிக்க வேண்டுகிறேன்.**

அகத்தாலும் புறத்தாலும் பெறுகிற உவகையே மனிதர்க்கு முக்கியம் என்பதை வலியுறுத்தும் வள்ளுவப் பெருமான், கருத்துக்குள் நாம் இணையலாம்.

இந்தப் பக்குவமான மனத்தோடு என் உரையைப் படிக்க வேண்டி, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு, தெளிவான ஒரு புதிய உரையைப் படைத்து மகிழ்கிறேன்.

‘ விளையாட்டுத்துறை நூல்கள் எழுதிக் கொண்டிருந்த உங்களுக்கு, இப்படி ஒரு விருப்பம் எப்படி எழுந்தது? ’ என்று

என்னைக் கேட்டவர்கள் நிறைய பேர்கள். வேண்டாத வேலைதானே என்று கிண்டலடித்தவர்களும் உண்டு. இதையே திரும்பத் திரும்ப இன்னும் கேட்பவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

விளையாட்டு என்றால் ஓடி ஆட வேண்டியது. பந்தை உதைப்பது, அடிப்பது, அதற்கான விதிமுறைகள் என்றுதான் பலரது கருத்தாக, இன்னும் இருந்து வருகிறது.

அந்த அடிப்படைத் தவறான கருத்துகளை மாற்றுவதற்காக, விளையாட்டு நூல்களையெல்லாம் விழுமிய தமிழ்த்துறை இலக்கியமாக எழுத வேண்டும் என்று விரும்பினேன். அந்த இலட்சிய வேட்கையால், வெறியால் ஏராளமான தமிழ் நூல் களையெல்லாம் படிக்கத் தொடங்கினேன்.

அதுபோலவே, விளையாட்டுகள் மற்றும் அதன் தொடர்பான **புவியியல், உயிரியல், இயற்கையியல், வேதியல், உளவியல், வானவியல், தத்துவ இயல், வாழ்க்கைஇயல்** போன்றவற்றில் எழுதப்பட்ட பல ஆயிரக்கணக்கான நூல்களையும் படித்தறியும் முனைப்பில், கடந்த முப்பதாண்டு காலமாகத் தொடர்ந்து படித்துக்கொண்டே 200 நூல்களுக்கும் மேலாக, விளையாட்டுத்துறை தமிழ் இலக்கிய நூல்களை எழுதியுள்ளேன்.

''வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்'' ''வள்ளுவர் வணங்கிய கடவுள்'' என்னும் இரண்டு நூல்களை எழுதும்போது, அதற்காகத் திருக்குறளை நான் ஆயிரம் தடவையாவது படித்திருப்பேன். ஆன்ற பொருள் அறியத் துடித்திருப்பேன்.

இவ்வாறு ஆய்வு நோக்கத்தோடு படிக்கப் படிக்க, எனக்குள்ளே புதிது புதிதாகப் பல புதிய கருத்துக்கள் புலப்படத் தொடங்கின.

தோன்றிய கருத்துக்களை, எனக்குத் தெரிந்த தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள், வாசக அன்பர்கள் பலரிடம் பகிர்ந்து கொண்டபோது , **'விளக்கம் புதிதாக இருக்கிறதே! குறள் முழுவதற்கும் உங்களால் இப்படிப் பொருள் கூற முடியுமா?'** என்று அவர்கள் அனைவரும் வியப்புடன் கேட்ட வினாவுக்கு விடையாகத்தான், தெளிவான தொரு புதிய பொருள் உரையை எழுத முயற்சித்திருக்கிறேன்.

எனக்குஎவ்வளவு தகுதி என்று பார்ப்பதைவிட, எனது உரைக்கு எவ்வளவு தகுதி என்று ஆய்வது சிறப்புடைத்ததாகும்.

திரும்பத் திரும்பத் திருக்குறளைப் படித்துப் பார்த்ததன் விளைவே, இந்தத் திருக்குறள் உரையை எழுத நேர்ந்தது. இந்த

இலக்கிய முயற்சியில் பண்டிதர்கள் எழுதும் தூய தமிழ் போல் என் நடை இருக்காது. பாமரர்களும் புரிந்து கொள்ள வேண்டும்-பின்பற்ற வேண்டும் என்பதற்காகப், பழகிய தமிழில் எழுதியிருக்கிறேன்.

வேற்று மொழிச் சொற்கள், எழுதுகிறபோது என்னை அறியாமல் வந்து விழுந்திருக்கும். அதனால் படிப்பவர்களுக்கு எளிதாகப் புரியவைக்க முடியும் என்பதும் ஒரு நம்பிக்கை. அதற்கான தூய தமிழ்ச் சொற்களும் எனக்குத் தெரியாத சூழ்நிலையும் இருக்கலாம்.

ஆகவே, உரையெழுதும் வரிசையில் வரும் இளையவனான என்னிடம், குணம் நாடவேண்டும். குற்றமும் காண வேண்டும். அதில் சிறப்பானதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் என் அன்பான விளக்கத்துடன், அறிவார்ந்த வணக்கத்துடன் உரையைத் தொடங்குகின்றேன்.

அன்புடன்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

1. கடவுள் வாழ்த்து - அதிகார விளக்கம்

மனம் மெய் முதலியவற்றால் மாண்பு மிகு ஒழுக்கங்களை மனிதர்கள் பின்பற்றி, மகத்தான வாழ்க்கையை வாழவேண்டும் என்று வள்ளுவர் பெரிதும் விரும்பினார்.

அந்த இலக்கின் வெளிப்பாடாக, மனிதர்களைக் கடவுளிடம் ஆற்றுப்படுத்துகிற வகையில், முதல் அதிகாரத்தைப் படைத்திருக்கிறார் வள்ளுவர்.

கடவுள் என்பது கற்பனையா? படைப்பா? புதிரின் புறப்பாடா? என்று பேசிப்பேசி, எல்லோரும் போராடிப் புலம்பித் தீர்த்து ஓய்ந்து போன பழைய செய்தியாகும்.

கட + உள் என்னும் இரு சொற்களின் கூட்டு **கடவுள்.** உள்ளதையும், உள்ளத்தையும், உலகத்தையும் கடந்தவர்கள் தான் கடவுளாக மாறி, நமது துதிக்கும் தொழுகைக்கும் பிரார்த்தனைக்கும் உரியப் பெரும் பொருளாய் வீற்றிருக்கின்றனர்.

புத்தர், ஏசுபிரான், மகாவீரர், முகமது நபி போன்ற மகான்கள் எல்லாம், மனிதராய்ப் பிறந்து, மனிதர்களிடையே வாழ்ந்து வளர்ந்து, தங்களது மனித நேயத்தால் சிறந்து, மக்கள் மனத்திலே உயர்ந்து, மகிழ்ச்சியைத் தருபவர்களாக அமர்ந்து இன்று கடவுளர்களாக மாறி நம்மிடையே கொலு வீற்றிருக்கின்றனர்.

கண்ணுக்குத் தெரியாததுதான் கடவுள் என்றில்லாமல், கண்ணுக்குத் தெரிந்தவர்களே கடவுள்களாக மாறி இருப்பது, வள்ளுவர் வகுத்த கடவுள் வாழ்த்துக்கு வழிகாட்டுதல்களாக அமைந்திருக்கின்றன.

கடவுள் என்னும் சொல்லுக்கு, தெய்வம் என்பதோடு **குரு, முனிவன், உள்வழிக்கடந்தோன், முக்குற்றம் கடிந்தோன், ஐம்புலத்தடங்கான்** என்றெல்லாம் பொருள்கள் இருக்கின்றன.

தெய்வத்தன்மை பெற்று பூமியில் வாழ்கிற மக்கள் யாவரும், புனிதம் பெற்றுப் புகழ் பெருமையுடன் விளங்க வேண்டும் என்பதற்காக, மக்களிடையே விளங்குகின்ற புனிதர்களைக் குருவாக ஏற்று உய்ந்திட வேண்டும் என்பதற்காகவே, கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தைப் படைத்திருக்கிறார்.

கடவுளாக வாழ்கிற குருவானவர்கள், கைம்மாறு கருதாது, மனித குலத்தைக் காத்து, வழிகாட்டி வழி நடத்துகின்றனர். மனிதர்கள் எல்லாம் புனிதர்களாக மாறி, கடவுளர்களாகிட வேண்டும் என்னும் வேட்கையிலேயே வள்ளுவர் பெருமான் கடவுள் வாழ்த்து என்று தந்திருக்கிறார்.

கடவுள் சக்தியை வளர்த்துக் கொள்வதும், நிலைநிறுத்த முயல்வதும், மனிதனாகப் பிறந்தவர் ஒவ்வொருவரின் கடமையாகும் என்னும் கருத்தை, முதல் அதிகாரத்தில் முத்தாய்ப்பாக வள்ளுவர் வைத்திருக்கிறார்.

இந்தக் கருத்தோடு இனிவரும் குறள்களுக்கான விளக்கம் தொடர்கிறது. துறவும், அறவும், இறவும், அப்படித்தான் அமைந்திருக்கின்றன.

உலகப்பற்றுக்களை, பாசங்களை, வேட்கைகளை உடலாலும் உள்ளத்தாலும் துறப்பவர்கள் துறவி என்று அழைக்கப்படுகின்றனர்.

துற + உ = உள்ளும் புறமும் துறந்து விடுகின்ற முதல் நிலை அறிவோடு துறப்பவர் துற + வி = துறவி.

துறந்தாலும் மீண்டும் திரும்பி வருகின்ற உறுதியற்ற நிலை ஏற்படாமல், அறவே அறுத்து எறிவது அறவி என்ற இரண்டாம் நிலை. **அற** = **உ** = அறவு.

உள்ளும் புறமும் ஆசையை அறுத்து எறிபவர் அறவி.

அறுத்து எறிவது மட்டுமல்ல. இனிமேல் அவை உள்ளத்துள் எழாமல் இற்றுப் போகிற இறுதிநிலை. இறுநிலை=இறுதிநிலை, உறுதிநிலை, உயர்ந்தநிலை, உன்னதநிலை, அதுவே இறைநிலை. இந்த நிலைதான் இறைவன் என்று ஏற்றிப் போற்றப்படும் பெருநிலை. அப்படிப்பட்ட அற்புதமான பிறப்பெடுத்த மனிதரே கடவுள் ஆகிறார். ஆகவே அவர்களை நாம் வாழ்த்தி வணங்குவோம். என்று நம்மை வள்ளுவர் ஆற்றுப்படுத்துகிறார்- மனிதக்கடவுளிடம்.

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

பொருள் விளக்கம்:

ஆதி பகவன் = தொடக்கத்தில் சூரியனிடமிருந்து
முதற்றே உலகு = முதலாவதாக தோன்றிய உலகமும், உயிர்களும், உலகிலே மேன்மை பெற்ற மக்கள் இனமும்,
அகர முதல எழுத்தெல்லாம் = அவர்களால் தோன்றிய அகர எழுத்தும் அதன் வழியாகத் தோன்றிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, இலக்கண, இலக்கியம், மறை, சுருதி, வேதம் போன்ற கல்வி முறை அனைத்தும் உண்டாயின.

சொல் விளக்கம்:

ஆதி = தொடக்கம், முதன்மை, சூரியன், எழுத்து, கல்வி
பகவன் = பிரிப்பவன், சூரியன், கடவுள்

முற்கால உரை:

எழுத்துக்கள் எல்லாம், அகரமாகிய முதலை உடையன. அதைப்போல் உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடையது.

தற்கால உரை:

எழுத்துகளில் எல்லாம் அகரம் எப்படி முதன்மையாக அமைந்து உள்ளதோ, அதைப்போல், உலகத்திற்கு அறிவாற்றல் மிக்க ஆன்றோர்கள் முதன்மையாக அமைந்திருக்கிறார்கள்.

புதிய உரை:

ஒளி மிகுந்த சூரியன் தோன்றிய பிறகு உலகு தோன்றியது. மக்கள் தோன்றினர். அவர்கள் வாயிலாக அகர முதல் எழுத்துக்கள் தோன்றி வளர்ந்தன. வாழ்க்கை பெற்றன. உலகிற்கு வாழ்க்கையை வழங்கின. ஆகவே, ''ஆதம்'' என்கிற பகவனே அனைத்துக்கும் காரணம் ஆகும்.

விளக்கம்:

பிரிப்பதனால் சூரியன் பகவன் ஆனான். ஆதியிலே தோன்றிய பகவனால் இருளும் ஒளியும் பிரிந்தது. காற்றும் உயிர்க்காற்று மலக்காற்று என்று பிரிந்தது.

தாவரமும் மனிதஉயிரும் வளர்ந்தன. கரியமிலக்காற்றை தாவரங்கள் சுவாசித்து உயிர்க்காற்றை வெளியிட மனிதர்கள் உயிர்க்காற்றைச் சுவாசித்து கரியமில வாயுவை வெளியில் விட, மனித இனமும், தாவர இனமும் ஒரு சேர ஒன்றுக்கொன்று உதவி தழைத்துச் செழித்தன.

இயற்கை அனுபவ அறிவால், மனிதன் வாய் திறப்பதால் தோன்றிய 'அ' வரி வடிவம் பெற்று அகரமாகியது. ஒலிவடிவம் பெற்று உயிராகியது.

மக்களாகிய உலகில் ஆண் பெண் அலி என்று மூன்று வகை இருப்பது போல, எழுத்திலும் ஆண் பெண் அலி எழுத்துகள் பிறப்பெடுத்தன.

உயிரெழுத்து ஆண் எழுத்து என்றும், உயிர்மெய் எழுத்து பெண் எழுத்து என்றும், மெய்யெழுத்து அலி எழுத்து என்றும் பெயர்பெற்றன.

மூவகை மக்களால் பயன்படுத்தப் பட்ட மூவகை எழுத்துக்கள் சேர்ந்து சொல்லாயின, பொருள் ஆயின, யாப்பு ஆயின, இலக்கியம் இலக்கணம் என்றாகி, மறை, வேதம், சுருதி என்று எல்லாமே மக்களுக்கு வழிகாட்டும் வான ஒளியாயின, வழிகாட்டும் ஒலியாயின. இவ்வாறு (பகவு+அன்) பகவன் முதற்றே மனித குலத்தின் வாழ்க்கையும் அகர முதலாகிய சொற்குலத்தின் புனித வாழ்க்கையும் எல்லாம் ஆகிப் பல்கிப் பெருகின.

ஆதி=ஆகுதல் என்றும், முதலாவது என்றும் பொருள்.

பகவன்=சூரியன், கடவுள் என்றும் பொருள்

ஆதம் = ஒளி என்று பொருள்.

எல்லாம்=சான்றோர்களாகிய உலகு பொருள் பொதிந்த சொற்கள் எல்லாம் ஆயின.

தெளிவு-உலகம் வாழ உதவுகின்ற உயர்ந்த பாங்கால், பகவனான சூரியனை முதல் குறள் வாழ்த்தி, நன்றி பெருக்குடன் தொடங்கி இருக்கிறது.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

பொருள் விளக்கம்:

கற்றதனால் ஆய பயனென் = உடல் பற்றிய மெய் அறிவு செல்வத்தால் என்ன பயன் உண்டு?
வாலறிவன்=பேரறிவுடையவரது
நற்றாள்=நல்ல ஞானத்தை
தொழாஅர் எனின் = மதித்து வணங்கி ஏற்றுக் கொள்ளாராயின்.

சொல் விளக்கம்:

வாலறிவன் = பேரறிவு உடையவன் ; **நற்றாள்** = நல்ல ஞானம்

முற்கால உரை:

எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி அறிவினாலாய பயன் யாது? மெய்யுணர் வினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்.

தற்கால உரை:

ஒருவன் தான் மேன்மை ஆவதற்குக் காரணமாக, கல்வி ஆற்றலில் சிறந்தோரின் அறிவுரைப்படி நடப்பதே அவன் கற்ற கல்வியால் எதிர்பார்க்கப்படும் பயன் ஆகும்.

புதிய உரை:

உடல்பற்றிய மெய்யறிவு உடையவர்களின் ஞானத்தை மதித்துப் பணிந்து, வணங்கி ஏற்றுக் கொள்ளும்போதுதான், கல்வி கற்றுப் பெற்றதின் அறிவினால் பயன் ஏற்படும்.

விளக்கம்:

பிறப்பு முதல் மனத்துக்குள் மலர்ந்த பெரும் சக்தி என நம்பிக்கையில் நிறைந்து நின்று உலா வருகிற கடவுளை மன அமைதிக்காக வணங்கலாம். அதுதோன்றாத் துணையாகும்.

இங்கே பேரறிவாளனாக விளங்கும் குருவான தலைவர் வழிகாட்டி, வளமாக வாழ்விக்கிற சக்தி வாய்த்தவராக இருக்கிறார். அவர் தோன்றிக் காணப்படுகிற துணையாவார்.

கண் முன்னே காணப்படுகிற கடவுள் போன்றவரைத் தெரிந்து, தெளிவதுதான் கல்விக்கு அழகு; கற்பவர்க்கும் பெருமை.

மிகவும் தெளிவான மெய்ஞ்ஞானம் மிகுந்த குருவானவர் யார்? அவரால் நமக்கு எப்படி நன்மை வரும்? எவ்வளவு வரும்? அதனால் தன் வாழ்வு எத்துணை அளவு மேம்படும் என்று தெளிந்து கொள்ள வேண்டும். அப்படித் தெளியாத குழப்ப அறிவைக் கொண்டிருக்கிற கற்றவரால் பயனில்லை. கற்ற தனாலும் பயன் இல்லை.

அறிவின் பிரிவு தெளிவு. தெளிவின் தோர்ச்சி ஞானம். விஞ்சிய ஞானம் விஞ்ஞானம். மெய்யுணர்வு மிக்க ஞானம் மெய்ஞ்ஞானம். மெய்ஞானத்தின் மேன்மையாளரை அணுகி, அவர் பேரறிவினை ஒளிமிகு ஞானத்தைத் தொழுது ஏற்றி ஏத்தி, இணங்கி, வணங்கித் துதிக்க வேண்டும். சுகிக்க வேண்டும். கல்லாதாரும் கடவுளைத் தொழுகிறார். கடவுளைத் தொழக் கல்வி தேவையில்லை. பக்தியே போதும். பக்தி அன்பின் வெளிப்பாடு. கல்வி அறிவின் திறப்பாடு. (வி=அறிவு)

ஆக, கற்றவர் அறிவது அவர் கற்றுத் துறை போகிய பேரறிவின் ஞானத்தை - ஒளிமிகு ஞானத்தைத் தொழுது பின்பற்ற வேண்டும். அத்தகைய அறிவாற்றல் மிக்க குருவானவரைக் கொள்வதே கல்வியின் பயன்; கற்றவரின் திறன் என்கிறார் வள்ளுவர்.

தாள் என்பது முயற்சி. ஞானம் என்றும் அர்த்தம். அடி என்பது ஞானம் தான். (அளவிலா அறிவுடையோரை அடிகள் என்றுபோற்றுவது தமிழர் மரபு. அன்று இளங்கோ; இன்று மறைமலை அடிகள் போன்றோர்)

தொழா அர் எனில் என்பது - அறிவுடை குருவைத் தேர்ந்து கொளல். (441) அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்.

கற்றதன் பயன் நிகழ்காலத்தில் சந்தித்து வாழ்தல். எதிர்காலத்தில் சிந்தித்து வாழ்தல். இறந்த காலத்தில் வந்தித்து வாழ்தல்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

பொருள் விளக்கம்:

மலர்மிசை=மலர்ச்சியும் எழுச்சியும் களிப்பும் உயர்ச்சியும் மிகு உணர்வுடன்.
ஏகினான்=வாழ்ந்து வருகிற(வாழ்ந்து காட்டுகிற)
மாண் அடி=மாட்சிமை மிக்க குருவானவரின் ஞானத்தைக் கற்றிட
சேர்ந்தார் = இடைவிடாது அவரையே நினைத்து, அவரிடம் தன்னை

ஆட்படுத்திச் சரணடைந்தவர்.
நிலமிசை = மக்கள் மத்தியிலே
நீடுவாழ்வார் = நெடுங்காலம் நிறைந்து வாழ்வார்.

சொல் விளக்கம்:

மலர் = மலர்ச்சி, எழுச்சி, களிப்பு; **நிலம்** = நிலத்தில் உள்ளோர்

முற்கால உரை:

மேலோரின், சான்றோரின் மாட்சிமை பெற்றோரின் அடிகளைச் சேர்தல் என்பது எல்லா உலக மக்களுக்கும் சிறப்பாகும்.

தற்கால உரை:

மக்கள், மனமாகிய மலர் மீது பொருந்தியிருந்து வாழக்கூடிய சான்றோர்களின் அறிவுரையைப் பின்பற்றி வாழ்பவர்கள் உலகத்தின்கண் நிலைபெற்று இன்புற்று நீடூழி வாழ்வார்கள்.

புதிய உரை:

எழுச்சி மிகு வளர்ச்சி நிறைந்த களிப்பான வாழ்வு வாழ்ந்து வருகிற புனிதரது ஞானத்தைப் பின்பற்றி வாழ முயல்கிற ஒருவர், வாழ்கிற காலத்து, மக்களிடையே பேரும் புகழும் பெற்று பேரின்ப வாழ்வு வாழ்வர்.

விளக்கம்:

மலர் என்பது சிற்றின்பம் சேராத பேரின்பத்தில் மகிழ்ந்து பெறுகிற மலர்ச்சி, எழுச்சி, களிப்பு. அவ்வாறு வாழ்ந்து வருகிற குருவானவர் நடமாடும் நல்லுலக மாகத் திகழ்கிறார். அவரிடம் சரணடைந்து சகல கலைகளையும் ஆன்ம நிலைகளையும் கற்றுத் தெளிந்தோர், அதில் தேர்ந்தோர், தாம் வாழும் காலத்தில் வரையிலாப் பெயரும் புகழும் பெற்று, வாழ்ந்து வருவார். அழியாத அமரநிலை அவருக்குக் கிடைத்து விடுகிறது.

இந்த மூன்றாவது குறள் தேர்ந்து தெளிந்து கொண்ட குருவின் ஞானத்தைப் பெறுகிறபோது ஏற்படுகிற பேருவகை நிலையினை, பிறப்பின் பயனைக் குறித்துக் காட்டுகிறது.

ஒருவரது வாழ்வும் தாழ்வும் அவர் சேர்கிற இடத்தைப் பொறுத்தே அமைகிறது. அது போலவே ஒவ்வொரு மனிதரும் தான் பெற்றிருக்கிற மனித வாழ்வைப் புனித வாழ்வாக உயர்த்த வேண்டும் என்னும் உணர்வுடனே வாழ வேண்டும் என்று வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

இப்பொழுதெல்லாம் இறைவனடி சேர்ந்தார் என்றால் இறந்தவர்களையே குறிக்கின்றார்கள். இறந்த பிறகு என்ன வாழ்க்கை என்று யாருக்கும் தெரிய வில்லை. இருக்கும் போதே சிறக்க வாழ்ந்திட வேண்டும் என்கிற நிதர்சனக் கொள்கையை நிலைப்படுத்திக் காட்டுகிறார் வள்ளுவர்.

எழுச்சி மிக்க, மலர்ச்சி நிறைந்த களிப்பான வாழ்வு வாழ்ந்து வருகிற புனிதரது பெரும் ஞானத்தைப் பின்பற்றி வாழ முயல்கிற ஒருவர், வாழ்கிற காலத்தே வாழும் நிலவுலகுக் குள்ளேயே பேரும், புகழும்பெற்றுப் பேரின்ப வாழ்வு வாழ்வார். சிறந்த குருவானவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பிறகு, அவர் வழி வாழ்கிறபோது, பெறுகிற பயன்களை மூன்றாவது குறளில் வள்ளுவர் விளக்கிக்காட்டுகிறார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

பொருள் விளக்கம்:

வேண்டுதல் = தாங்கள் விரும்புகிற எல்லாவற்றையும்
வேண்டாமை = உடலால் வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்குவது.
இலான் அடி சேர்ந்தார்க்கு= விருப்பு, வெறுப்பு அனைத்தும் கடந்த மேலானவரின் ஞானத்தைச் சேர்ந்தவர்க்கு, கலந்தவர்க்கு
யாண்டும் = எப்போதும், ஒரு போதும்
இடும்பை இல = இன்னல்களே இல்லையாகும்.

சொல் விளக்கம்:

இலான் = விரும்பு, வெறுப்புகள் கடந்த மேலோன்.

முற்கால உரை:

விருப்பு, வெறுப்பு இல்லாதவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்க்கு எக்காலத்திலும் பிறவி என்கிற துன்பங்கள் சேரா.

தற்கால உரை:

விருப்பு, வெறுப்பு இல்லாதவன் வழியில் நடப்பவர்க்கு எக்காலத்தும் எவ்விடத்தும் துன்பம் இல்லை.

புதிய உரை:

தன் உடலுக்கும் மனத்துக்கும் தேவை என்று ஆசைப்பட எதையும் வேண்டாமென்று விலக்கி விடுகிற மேலானவரின்

ஞானத்துடன் கலந்தவர்க்கு எப்போதும் இன்னல்களே இல்லை யாகும்.

விளக்கம்:

வேண்டுதல் என்ற சொல் மிகவும் பொருள் பொதிந்ததாகும். எல்லாம் தனக்கு வேண்டும். எதுவும் வேண்டும் என்று அவாவுகிற குணம் கொண்டவன்தான் மனிதன்.

சிக்கெனப் பற்றிச் சிந்தையைக் குழப்பி செயல்களில் தடுமாறிச் செய்து சீர்குலைக்கின்ற கொடுமை ஆசைக்கு உண்டு. இந்த ஆசையை அடக்குமின் என்றனர். அறுமின் என்றனர். படுமின் என்றனர் - பெரியோர்கள் எல்லாம். ஆகவேதான் விரும்பி வேண்டுகிற ஆசையையும் வேண்டாதவன் என்றார் வள்ளுவர்.

ஆசையை அறுத்து, பாசத்தை வெறுத்து மலத்தை விலக்கி மனத்தை ஒரு நிலைப்படுத்தி மேல்நிலையில் வாழ்கிற மாண்புமிகு குருவின் ஞான வாழ்க்கையுடன் கலந்து கொண்டவர்க்கு இடும்பை இல வென்றார். எப்படிப்பட்ட இடும்பை? அந்தச் சொல்லுக்குள் அடங்கிக் கிடக்கும் பொருள் குவியல்களைப் பாருங்கள். மனிதரை வதைக்கின்ற அத்தனைத் துன்பங்களையும் குறித்துக் காட்டுகிற சொல்லாக இடும்பை என்னும் சொல்லைப் பெய்திருக்கிறார் வள்ளுவர்.

இடும்பை: அச்சம், ஆபத்து, தரித்திரம், தவறு, துன்பம், பொல்லாங்கு, நோய், பயம், வறுமை.

இத்தனை இன்னல்களும் இருந்தால் ஒருவர் வாழும் வாழ்க்கை எப்படி இருக்கும்? அத்தனையையும் அறுத்தெறியும் ஆற்றல், அழித்துவிடும். ஆண்மை, ஆன்ம குருவின் அழியா ஞானத்தில் கிடைக்கிறது. அதனைப் பெற்று ஆனந்த வாழ்வு வாழ்க என்று அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

நிலைத்த பேரும் நீடு புகழும் கிடைக்கும் என்று மூன்றாவது குறளில் கூறப்பட்டது. இவை அகப்பேறுகள் ஆகும்.

இந்தக் குறளில் உடல்பெறும் பேற்றினைக் குறித்துக் காட்டி, உடலை உருவழிக்கும் உட்பகைகளை அழிக்கும் ஆற்றலைப் பெறுங்கள் என்றால், அதற்கு ஆசையை அடக்கி, அறுத்து ஆள்கிற ஆற்றலாளன் அடியில் சேர்க என்னும் பயன்படு பாதையைப் பாசமான வழிகளைக் காட்டுகிறார் வள்ளுவர்.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

பொருள் விளக்கம்:

இறைவன் = உலக ஆசைகளை மனத்திலிருந்து இற்றுப்போக வெற்றி கண்ட குருவானவரின்

பொருள் சேர் = உண்மையும் சக்தியும் சேர்க்கின்ற

புகழ் புரிந்தார் = அருஞ்செயலின் மேன்மை ஒளியில் ஒன்றிப் போய்;

மாட்டு = இணைந்து கொள்கிறபோது

இருள்சேர் = மயக்கத்தையும் கலக்கத்தையும் சேர்க்கிற

இருவினையும் = அகவினைகளும், புறவினைகளும் ஆகிய இருபால் வினைகளும்.

சேரா = வந்து சேர மாட்டா (விலகி ஓடிவிடும்)

சொல் விளக்கம்:

இறைவன் = எல்லா ஆசைகளையும் அழித்த குரு

பொருள் சேர் புகழ் = அருஞ்செயல், வாகை, மேன்மை, ஒளி மேம்பாடு என்று அர்த்தம்.

முற்கால உரை:

மயக்கத்தையும், கலக்கத்தையும் தருகின்ற இருவினைகளையும் கடந்த இறைவனின் திருவடிகளை விரும்புபவர்களிடத்து, நல் வினை, தீய வினை என்னும் இரு வினைகளும் அடையா.

தற்கால உரை:

இறைவனின் நல் இயல்புகளைத் தன் இடத்துக் கொண்டவனின், வாழ்வில், நல் வினைகளும், தீய வினைகளும் சேரமாட்டா.

புதிய உரை:

உலக ஆசைகளை வெற்றி கொண்ட குரு ஆனவரின் அறிவுரைகளை ஏற்று, அவற்றைத் தன்னகத்தே இணைத்துக் கொள்கிறபோது மயக்கத்தையும், கலக்கத்தையும் தருகிற இருவினைகளும் அவரிடம் வந்து சேராமல் விலகி ஓடி விடும்.

விளக்கம்:

இருவினை = அகவினை என்பது மனத்திலே ஏற்படுகின்ற காமம், குரோதம், மாச்சரியம் ஆகிய மும்மலம். புறவினை என்பது ஐம்புலன்களினால் ஏற்படுகிற செயல்கள்.

வினை = செய்த் ஒரு செயலானது, தொடர்ந்து ஏதாவது ஒரு பயனைக் கொடுத்து வருவது. நல்ல பயனைத் தருவது நல்வினை. தீய பயனைத் தருவது தீவினை.

வாழ்வுக்குத் தோணியாக, உயர்வுக்கு ஏணியாக அமைந்திருப்பது உடல்தானே. அதனை வாழ்விப்பதும், வீழ்விப்பதும் இருவினைகள்தாமே. இருவினைகளை கட்டுப்படுத்தினால், நமக்கு உடல் தரும் பயன்கள் ஏராளம்.

எதையும் வேண்டும் என்று விரும்புகிற ஆசையை வெற்றி கண்ட இறைத் தன்மையாளரின் அருஞ்செயல்களைப் பின்பற்றி, பொருள் பொதிந்த அவரது ஞானத்தின் அடியொற்றி வாழ்கிறபோது, ஐம்புலன்களையும் அடக்கலாம். ஆவியாகத் திரிந்து பாவியாகச் செய்யும் மனத்தின் கொடும் பண்புகளையும் குலைக்கலாம். வெற்றியில் திளைக்கலாம்.

அலைக்கழிக்காத அக இன்பமும், நோயணுகாப் புற இன்பமும் மட்டும் போதாது. அவற்றை விளைவிக்கின்ற இரு வினைகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிற புகழைப் (அருஞ்செயலை) பெறுங்கள் என்று இந்த ஐந்தாவது குறளில் வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

6. பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடு வாழ்வார்.

பொருள் விளக்கம்:

ஐந்து பொறி வாயில் அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார் என்று குறளைப் பிரித்திருக்கிறோம்.

ஐந்து பொறி = ஐம்புலன்களாகிய தீப்பொறி சக்தியை

வாயில் = உண்டாகிற வாசலிலேயே

அவித்தான் = மீண்டும் பொறி எழுந்து விடாதவாறு அணைத்து விட்டான்

பொய்தீர் = போலித்தனமும் ஏமாற்றுத் தனமும் இல்லாத

ஒழுக்க நெறி நின்றார் = மீண்டும் ஐம்புலன்களின் அனல் பொறிகள் எழாதவாறு அவித்து விட்டு, தொடர்ந்து நிலையாக அதே தன்மையில் ஒரே நிலையில் வாழ் வார்.

நீடு வாழ்வார்= செழித்து மேம்பாடு பெற்றுப் பெருகி வாழ்வார்.

சொல் விளக்கம்:

ஐந்துபொறி = ஐம்புலன்களின் தீப்பொறி சக்தி

பொய்தீர் = போலி, ஏமாற்றுத்தனம் இல்லாத

முற்கால உரை:

மெய், வாய், கண், மூக்குச் , செவி யென்னும் பொறிகள் வழியாக ஐந்துவாயிலையும் அறுத்தானது; மெய்யான ஒழுக்க நெறியின் கண் வழுவாது நின்றார். பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

தற்கால உரை:

பொறிவாயில் ஐந்தும் ஒழித்தவனது, பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் - குற்றமற்ற நெறியின் கண் (நிலையாக) நின்றவர், நீடு வாழ்வார்.

புதிய உரை:

எழும்பிய பொறியின் வாயிலை அணைத்து என்பதைவிட பொறி எழும்பாமலேயே அவற்றின் வாசலை அவித்து, பிறருக் காகப் போலியாக வாழாமல் தனக்காகவே ஒழுக்கம் சான்ற வழியிலே வாழ்கின்றவர், பெருகிடும் செழிப்பில் மேம்பாடுகள் நிலைத்திட வாழ்வார்.

விளக்கம்:

வாயில் அவித்தான் என்பதில்தான் குருவின் பெருமை கனகம்ணிக் குவியலாகக் கருதப் படுகிறது. கூறப்படுகிறது.

அவித்தல் என்றால், மீண்டும் தீயே இல்லாதவாறு செய்து விடுவதாகும். அவித்தல் = அணைத்தல், அழித்தல், நீக்குதல் என்று அர்த்தம். ஐம்புலன்களாகிய செவி, மெய், கண், வாய், மூக்கு இவற்றினால் உண்டாகும் தன்மைகள்.

ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் இவ்வைந்தும் கவர்ச்சியால் எழுச்சி பெற்றுக் கட்டுக்கடங்காத ஆசைகளைக் கரை கடக்க விட்டு நிறை தகுதியை அழித்துப் பொசுக்கும் அபாயங்களாகும்.

நீடு - என்பதை நீண்ட காலம் என்பதை விட செழித்தல், பெருகுதல், மேம்படுதல் என்றுள்ள பொருள்களுடன் பொருத்த வேண்டும்.

நின்றார் என்பது நிலையாகத் தடுமாற்றம் இல்லாது.

இந்த 6 வது குறள் மூலமாக, குருவிடமிருந்து பெறுகிற திருவினைகள் மூலமாகப் பெறுகிற புறப்பயனை விளக்குகிறார் வள்ளுவர். குருவழி சென்றவர் திருவழி நின்றவர் குலம் தழைக்கும், பெயர் நிலைக்கும் என்பதை இங்கே குறித்துக் காட்டுகிறார்.

7. தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

பொருள் விளக்கம்:

தனக்கு உவமை இல்லாதான் = இணையாக எடுத்துக் கூறயாருமே இல்லை என்னும் நிலைக்கு உயர்ந்த ஞான குருவிற்கும் மேலான மோன குருவின்.

தாள் சேர்ந்தார்க்கு = ஞானத்தை ஏற்றுப் பின்பற்றி ஒழுகி வாழ்பவர்க்கு

அல்லால் = மயக்கத்தையும், நச்சுத் தன்மையும் ஆன

மனக்கவலை = மனத் துன்ப நோயை

மாற்றல் = தீர்த்து விடுவது

அரிது = சிறப்பான செயலாகும்.

சொல் விளக்கம்:

உவமை இல்லாதான் = ஞான குருவிற்கு மேலான மோன குரு

தாள் சேர்ந்தார் = ஞானத்தை ஏற்றார்; **அல்லால்** = மயக்கம் நச்சுத்தன்மை; **அரிது** = சிறப்பான செயல்

முற்கால உரை:

ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கல்லது மனத்தின்கண் நிகழும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

தற்கால உரை:

இவனுக்கு இவனே உவமை எனத்தக்க இயல்புடையவனின் வழியைப் பின்பற்றாதவர், தமக்கு உண்டாகும் மனக்கவலையை மாற்றிக்கொள்ள முடியாது.

புதிய உரை:

இணையாக எடுத்துக் கூற யாருமே இல்லை என்னும் நிலைக்கு உயர்ந்த ஞான குருவிற்கு மேலான மோன குருவின் ஞானத்தை ஏற்றுப் பின்பற்றி ஒழுகி வாழ்பவருக்கு, மயக்கமும் நச்சுத்தன்மையும் ஆன மனநோயைத் தீர்த்து விடுவது சிறப்பான செயலாகும்.

விளக்கம்:

சேர்ந்தார் என்பது சேர்ந்து விடுதல். ஒத்துப் போவதை ஓர்ந்து விடுதல் என்றும், ஒட்டிப் போவதை சார்ந்து விடுதல் என்றும் ஒன்றிப் போவதைச் சேர்த்து விடுதல் என்றும் கூறலாம்.

இங்கே குருவின் ஞான வழியில் இரண்டறக் கலந்து விடுதல் என்ற பொருள் கிடைக்கிறது.

அல்லால் என்பது அல் + ஆல் என்று பிரிகிறது. அல் என்றால் இருள் என்றும், மயக்கம் என்றும் பொருள். ஆல் என்றால் நஞ்சு, வெள்ளம், அதிசயம் என்று பொருள். கவலை என்பது க+வலை என்று பிரிகிறது. வலை என்றால் வளைத்துப் போடுதலாகும். க என்றால் காற்று, நெருப்பு, நீர், வியாதி, எமன், காமன் என்று பல பொருள்.

மனத்திலே இயற்கையும் செயற்கையுமான துன்பங்கள், நோய் போலப் பற்றிக் கொண்டும் தொற்றிக் கொண்டும் படர்கின்றன. தொடர்கின்றன. இன்ப வாழ்வை இடர்கின்றன.

இப்படிப்பட்ட நோய்களை மாற்றல் என்றால் தீர்த்தல் முடியும். அதைக் குறிக்கத்தான் அரிது என்றார் வள்ளுவர்.

அரிது என்றால் அருமையானது. அருமை என்றால் பெருமை, சிறப்பு, மேன்மை என்று அர்த்தம்.

ஆக, மோன குருவின் ஞானவழியில் சென்று சேர்ந்தார்க்கு இருளும் மயக்கமும் அதிசயமான நச்சுத்தன்மையும் கொண்ட மனத்துன்பங்களைத் தீர்த்து சிறப்புப் பெற முடியும். மேன்மை பெற முடியும் என்னும் கருத்தையே இங்கே வள்ளுவர் தெளிவாக்குகிறார்.

இந்த 7 வது குறளில் மோன குருவின் வழி காட்டுதல் இருக்கும் போது, மாறாத புயலாக வீசும் மனக் கவலையையும் மாற்றி விட முடியும் என்பதை வலியுறுத்துகிறார். இது அகத் துன்பம் புறத் துன்பம் இரண்டுக்கும் விடிவுகள் உண்டு என்பதனைச் சிறப்பாக விளக்குகிறது.

8. அற ஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் பிறஆழி நீந்தல் அரிது.

பொருள் விளக்கம்:

அற = தெளிவுடனும் செவ்வையுடனும் முற்ற முழுதுமாகத் தகுதி, ஞானம், தவம், ஒழுக்கம் அனைத்துக்கும்

ஆழி அந்தணன் = கட்டளையிடுகிற வல்லமை பெற்ற கருணையாளன், தண்ணளியாளனாகிய குருவின்

தாள் சேர்ந்தார்க்கு = ஞானத்தை நிரம்பப் பெற்ற அவரது பெருமை வழியைப் பின்பற்றுவோர்க்கு

அல்லால் = மயக்கமும், அச்சமும், அதிசயமும், நச்சுத் தன்மையும் உடைய

பிற ஆழி = துன்பக் கடலாக விளங்கும் துயர்களை எல்லாம்

நீந்தல் = வென்று கடத்தல் என்பது

அரிது = சிறப்பாக முடியும் செயலாகும்.

சொல் விளக்கம்:

அற = தெளிவு, ஒவ்வாமை, தகுதி, ஞானம், தவம், ஒழுக்கம்.

ஆழி = கட்டளை இடுகிற:

தாள் = ஞானம் நிரம்பப் பெற்ற அவரது பெருமை;

அரிது = சிறப்பாக முடியும் செயல்.

முற்கால உரை:

அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கு அல்லது, அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது.

தற்கால உரை:

அறக்கடலாக விளங்கும், செந்தண்மையை உடைய, அறிவாற்றலில் சிறந்த சான்றோரைப் பின்பற்றி அவரோடு பொருந்தி நிற்பவர்களுக்கு மட்டுமே அல்லாமல், மற்றவர்களுக்கு எல்லாம், மற்ற துன்பக் கடல்களை நீந்திக் கரை சேர்வது என்பது அரிதான ஒரு செயலாகும்.

புதிய உரை:

தெளிவுடனும், ஒவ்வாமையுடனும் முற்ற முழுவதுமாகத் தகுதி, ஞானம், தவம், ஒழுக்கம் அனைத்துக்கும், கட்டளை இடுகிற வல்லமைபெற்ற கருணையாளனாகிய குருவின் ஞானத்தை நிரம்பப் பெற்ற அவரது பெருமை வழியைப் பின்பற்று வோர்க்கு , மயக்கம் , அச்சம், அதிசயம், நச்சுத்தன்மை உடைய துன்பக்கடலை வென்று கடத்தல் சிறப்பான செயலாகும்.

விளக்கம்:

அற என்பதை அற்றுப் போக என்றும் கூறலாம். தகுதி, ஞானம், தவம் ஒழுக்கத்தைக் குறிக்கும். அற என்பதற்கு உடலைக் கெடுக்கின்ற தீய செயல்களை மனத்தை மயக்கும் மாய்மாலக் காரியங்களை எல்லாம் எனவும் கூறலாம். உடலைக் காக்கும் உன்னத நெறியாளன் அறிவாளன். சான்றாளன், செந்தண்மையாளன் என்று வியப்புறச் சொல்கிறார். 7 வது குறளில் உள்ள அல்லால் என்ற சொல்லின் தன்மையை இந்தக் குறளுக்கும் பொருந்துகிறது.

பிற ஆழி என்பது பெருகிவரும் சுற்றுப்புறக் கொடுமைகள் உடலின் உட்புற வேதனைகள் சோதனைகள் எல்லாம் ஆழியாக வந்து அல்லல் படுத்துமே!

அந்த அச்சம் தரத்தக்க ஆழ்கடலான ஆழிகளை, நீந்தல், துடைத்தல், வெல்லுதல் எளிது. சிறப்புறச் செய்தல் வல்லது.

7வது குறளில் துன்ப நோய்களைத் தீர்க்க முடியும் என்றும் 8வது குறளில் துன்ப நோய்களின் தொடர்ச்சியைக்கூறி ஆழியாக அலைபாய்வதைக் குறித்து அவற்றை நீந்த முடியும் என்றும் நம்பிக்கையை ஊட்டுகிறார். குருவின் வழிகாட்டுதல் கொடுப்பது - நம்பிக்கை, துணிவு, வலிமை, நெஞ்சுரம். எல்லாவற்றையும் சுட்டிக் காட்டிச் சுகத்தன்மையைக் கூறுகிறார் வள்ளுவர்.

9. கோள் இல் பொறியில் குணம் இலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை

பொருள் விளக்கம்:

கோள் இல் = வலிமையில்லாத
பொறி = ஐம்புலன்களால்
இன்குணம் இலவே = இனிய நலம் எதுவும் ஏற்பட்டு விடாது.
எண்குணத்தான் = அதுபோலவே எட்டுவிதப் பண்பாட்டு ஒழுக்கங்களை உடைய குருவின்
தாளை = ஞானமுறைகளை
வணங்கா = வழிபட்டு பின்பற்றி ஒழுகாதவர்க்கு
தலை = எந்தப் பெருமையும் ஏற்படாது

சொல் விளக்கம்:

கோள் = கோட்பாடு, வலிமை; **தாளை** = ஞானமுறைகளை
தலை = எந்தப் பெருமையும் ஏற்படாது.

முற்கால உரை:

தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கை இல்லாத பொறிகள் போலப் - பயன்படுதலை உடையவல்ல எண்வகைப் பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள்.

தற்கால உரை:

இயக்கம் இல்லா பொறிகளால் பயனில்லை, அதுபோல், எண்ணிப் போற்றும் நற்குணங்களை எல்லாம், ஒருங்கே கொண்டவனை வணங்காத தலையாலும் பயனில்லை.

புதிய உரை:

உரிமை இல்லாத ஐம்புலன்களால் இனிய நலன்கள் ஏற்பட்டுவிடா. அதுபோல எட்டுவிதப் பண்பாடு ஒழுக்க முடைய குருவின் ஞான முறைகளைப் பின்பற்றி ஒழுகாதவர்க்கு எந்தப் பெருமையும் வாரா.

விளக்கம்:

கோள்: கோட்பாடு, கொள்கை, வலிமை என்று பல பொருட்கள்.

இன்குணம் என்றால் இனிய குணம் என்று பொருள். குணம் என்றால் தன்மை, ஒழுக்கம், தகுதி, திறன், இயல்பு, எண்குணம் என்பது எட்டு விதமான நலப் பண்புகள். 1 தனிமை 2.முனிவில்லாமை 3. இடனறிந்து ஒழுகுதல் 4. பொழுதறிதல் 5.உறுவது தெரிதல் 6. இறுவது அஞ்சாமை 7. ஈட்டல் 8. பகுத்தல்.

ஒரு மனிதனுக்குத் தேவையான உயர்ந்த குணநலன்கள் மேற்கூறிய எட்டும் இருக்க வேண்டும்.

இவற்றைச் சாதாரணமாகக் கடை பிடிப்பவர் மனிதர். சிறப்பானவர் புனிதர். செம்மையானவர் தான் மோன குருவானவர்.

இப்படிப்பட்ட இதய குருவை வணங்காத தலையானது வாழாத நிலை தானே!

வணங்குதல் என்ற சொல்லுக்குக் காணல், கைகூப்பல், தெண்டனிடுதல், தொழுதல், பணிதல், பரவுதல், பார்த்தல், போற்றுதல், வந்தித்தல், வழிபடல் என்று பல பொருள்கள் உண்டு.

தலை என்றால் தலைமை, பெருமை முதல் நிலை அதிகாரம் ஆக எண் குணங்கள்!

எல்லாம் பெற்றிருக்கும் மோன குருவினைப் பார்த்தும் பரவசப்பட்டும் உணர்ந்தும், ஒழுகியும் வந்தித்தும் வழிபட்டும் கொள்ளாத (தலை) அறிவு பயனில்லையே! அது எப்படி என்றால், உலகைக் காட்டுகிற உயர்ந்த ஆற்றல் மிக்க பொறிகள் வலிமையற்றுப் போனால், வாழ்வே சூனியமாகிவிடுவது போல்.

ஐம்பொறிகளை வலிமையுடையதாக வளர்க்க வேண்டும். அதேசமயத்தில் அவற்றை வைத்துக் கட்டியாள வேண்டும். இப்படித் தருகிற ஞானவானின் இயல்பு களில் ஒழுகாதவர்க்குத் தலைமை நிலை வராது. பெருமை சூழாது. முதல் நிலை அமையாது என்கிற குறிப்பைத்தான் இந்த 9வது குறளில் வள்ளுவர் வகுத்துக் கூறுகிறார்.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பொருள் விளக்கம்:

பிற = மற்றை (அற்பமல்லாத)

வி = அறிவானது

பெருங்கடல் = பெரிய கடல்போல் பெருகிவிடும்போது (அதனை

வெற்றிகரமாகக் கடக்க)

இறைவனடி = மோன குருவின் ஞானம் என்னும்

தார் = பெரும்படையைத் துணையாகக் கொண்டவர்.

நீந்துவர் = நீந்திக் கடந்து வெற்றி பெறுவர்.

சேரா = அறிவிழந்து மதிமயங்குவர்

நீந்தார் = நீந்திக் கரை சேர மாட்டார்.

சொல் விளக்கம்:

வி = அறிவு; **இறைவன்** = மோன குருவின் ஞானம்

தார் = பெரும்படை

முற்கால உரை:

இறைவன் என்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய், அதனுள் அழுந்துவர்.

தற்கால உரை:

இறைவனின் வழியைப் பின்பற்றிக் கொண்டவர் பேதைமை என்று சொல்லப்படும் பெரிய கடலை எளிதில் கடப்பர்; பிறர் கடவார்.

புதிய உரை:

அறிவு பெரிய கடலாய்ப் பெருகும் போது மோன குருவின் ஞானம் என்னும் பெரும் படையைத் துணையாகக் கொண்டவர் நீந்திக் கடந்து வெற்றி பெறுவர். அறிவிழந்து மதிமயங்குவார் அதனை நீந்திக் கரை சேரமாட்டார்.

விளக்கம்:

உடலுக்கும் உயிர்க்கும் உறுதுணையாக விளங்கும் நல்லறிவு நீங்கலாக உள்ள மற்றைய அறிவுகள் பெருங்கடலாய்ச் சூழ்ந்து பேராபத்தைப் பிறப்பிக்கிற பொழுது, அதிலிருந்து வெற்றிகரமாக வெளியேற, மோனகுருவின் ஞானப்படையைத் துணையாக கொண்டால் கடப்பர். மதிமயங்கி அறிவிழந்து நிற்பவர் துன்பக் கடலில் இருந்து கடந்து வெளியேற மாட்டார். துயரில் மூழ்கிப் போவார்.

பிற + வி = நலம் பயக்காத மற்றைய அறிவு

பெருங்கடல் = துயர்க்கடல் (துயரின் மிகுதி)

இறைவன் அடி = மோன குருவின் ஞானம்

தார் = மாலை என்றும், சேனை படை என்றும், உபாயம் ஒழுங்கு என்றும் பொருள் உண்டு.

சேரா = என்றால் மதி மயங்குதல், அறிவழிதல் என்று பொருள்.

2. வான் சிறப்பு

உலகம் பகவனால் உண்டாயிற்று. உண்டான உலகம் இரண்டாகப் பிரிந்துகொண்டது. கீழே மண்ணுலகம், மேலே விண்ணுலகம் என்று விரிந்து நின்றது.

இரண்டு உலகமும் பஞ்ச பூதங்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டதால் இயற்கை எனப் பெயர் பெற்றது.

பஞ்சம் என்றால் ஐந்து. நிலம், வான், நீர், காற்று, நெருப்பு என்னும் ஐந்தும் சேர்ந்ததால் உலகைப் பெருமைப் படுத்திப் பேசுகிறோம். நிலத்தின் வளமும், நீரின் ஓட்டமும், காற்றின் நிறைவும், நெருப்பின் வெப்பமும், வானின் தன்மையும் கொண்டே உடல் உருவாக்கப் பட்டிருப்பதால், உடலும், உலகமும் ஒன்றிணைந்தே இயங்குகின்றன; முழங்குகின்றன.

மண்ணுலகத்திற்கு மகிமை மக்கள் தொகுதி. அவர்களை வழி நடத்தும் மாபெரும் பெருமை ஞான குருமார்களின் பகுதி, அவர்களைக் கடவுளர்களாக மாற்ற வேண்டிய கடமையை இயற்கையே ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்த இனிய பணிகளைத்தான் வானுலகம் போற்றி ஏற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுக்கு உயிர்ப்பூட்டக் காற்று; உணர்வூட்ட வெப்பம்; உணர்ந்து கொள்ள ஓசை; உண்மையைப் புரிந்துகொள்ள ஞானம். இவற்றை எல்லாம் பஞ்ச பூதங்கள் மூலமாக, ஐம்புலன்களுக்கு வழங்கித் தலையாய பணிகளைத் தொடர்கின்றது.

வானுலகை வட்டமிட்டு வசமாக்கிக் கொண்டு வலம்வரும் காற்று. அப்படிப்பட்ட இரண்டு காற்றுகள் இணைகிறபோது நீராகிறது. காற்றும் கடலும் சேர்கிறபோது நெருப்பாகிறது. காற்றும் இயக்கமும் சேர்கிறபோது ஓசையாகிறது. இவ்வாறு வான்மண்டலம் முழுதும் மக்களை வாழ்விக்கிற மணி மண்டலமாக மாறி வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே தான் மக்களை வாழ்விக்கின்ற வான் பெருமையைப் பற்றி பகவனுக்கு அடுத்த தாகப் பெருமைப்பட வான் சிறப்பு என்று அதிகாரத்தை வைத்திருக்கின்ற வள்ளுவரின் ஞானமே ஞானம்!

11. வானின்று உலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என்றுணரற் பாற்று

பொருள்விளக்கம்:

வான் = பெருமைமிகு, நிலைபெற்ற மழையும் கொண்ட
உலகம் = ஆகாயமானது உலக உயிர்களுக்கு
நின்று = எப்பொழுதும்
வழங்கி = ஈந்து
வருதலால் = தொடர்ந்து தந்து கொண்டிருப்பதால்
அமிழ்தம்தான் = உள்ளும் புறமும் மெய்ப்பித்து வரும் உவகையே என்று
உணரற் பாற்று = தெளிவாக ஏற்றுப் பயன் பெறுக.

சொல் விளக்கம்:

வான் = பெருமைமிகு நிலைபெற்ற
அமிழ்தம் = உள்ளும் புறமும் மெய்ப்பித்து வரும் உவகை.

முற்கால உரை:

மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான் அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தம் என்று உணரும் பான்மையை உடையது.

தற்கால உரை:

மழைபொழிந்து உலகிற்கு வேண்டும் நலங்களை வழங்கி வருதலால், அம்மழையே உலகிற்கு அமிழ்தம் என்று உணர்தற்கு உரியது.

புதிய உரை:

பெருமை, நிலைபேறு, மழை கொண்ட ஆகாயம் உலக உயிர்கட்கு அவற்றை எப்போதும் தொடர்ந்து தருவதால், உள்ளும் புறமும் மெய்ப்பித்து வரும் உவகையே என்று தெளிவுடன் ஏற்றுப் பயன் பெறுக.

விளக்கம்:

எதிர்பாராமல் பெய்கிற தூறலும், சாரலும் உலகை வந்து அடைகின்றன. மழையை வரவேற்றாலும், அதை மனதார ஏற்பதில்லை. பயன் பெற்று விடுவதில்லை.

மழையானது உலகுக்கு உணவாகிறபோது, உண்டாக்குகிற அகமகிழ்ச்சி. உணவை உண்டாக்கி, உடலை நன்றாக்குகிற போது

பெறுகிற புறமகிழ்ச்சி இரண்டும்தான் ஒருவற்குச் சாகும்வரை இன்பம் தருகிறது.

அமிழ்தம் என்னும் சொல்லுக்கு அமுதம் என்பது பொருள். அ+முதம் எனப்பிரித்து, அ என்பதை அகச்சுட்டாம் முதம் என்பதற்கு மகிழ்ச்சி எனப் பொருள். உள்ளும் புறமும் மகிழ்ச்சியான சூழ்நிலையே அமுத நிலையாம்.

அதனால்தான் சாகும் வரை சாகா மருந்தாக மகிழ்வு தரும் அமிழ்தம் என்று உணர் என்றார்.

உவகையானவர்கள் உலகில் நெடுநாள் வரை நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதை வள்ளுவர் முதல் குறளிலேயே முத்தாய்ப்பாகச் சுட்டுகிறார்.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.

பொருள் விளக்கம்:

துப்பார்க்கு = உண்பார்க்கு
துப்பாய = உணவு ஆகி
துப்பு ஆக்கி = உடலை வலிமைப் படுத்துகிறது.
துப்பார்க்கு = அனுபவிக்கும் அறிவுள்ளார்க்கு
துப்பாய = பொலிவு வலிமையுடன் தூய்மையான உடலையும் உண்டாக்குகிறது.
தூவும் மழை = தூய்மையாகப் பெய்கிற மழை.

சொல் விளக்கம்:

துப்பார் = உண்பவர்,
துப்பு = அறிவு, அனுபவம், உணவு, தூய்மை, நன்மை, பொலிவு, வலிவு; **துப்புஆக்கி** = என்பதே துப்பாக்கி ஆயிற்று,
தூ = தூ என்றால் தூய்மை; **உம்** = ஒரு சிறப்புப் பொருள்.

முற்கால உரை:

உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அவற்றை உண்கின்றார்க்குத் தானும் உணவாவது மழையாகும்.

தற்கால உரை:

உண்பவர்க்கு வேண்டிய உணவுப் பொருளை உண்டாக்கி உண்பவர்க்குக் குடிநீர் என்னும் உணவாகி இருப்பதும் மழையேயாம்.

புதிய உரை:

தூவுகிற மழையானது தூய்மையாக இருப்பதால் அகமகிழ்வையும் வெளியுடலைத் தூய்மைப் படுத்துகிறபோது புறமகிழ்வையும் வழங்கி மகிழ்விக்கிறது.

விளக்கம்:

முதல் குறளில் அமுதம் என்று கூறிய சொல்லுக்கு இரண்டாவது குறளில் தெளிவு உண்டாக்கி இருக்கிறார்.

உடலுக்கு வடிவும், அமைப்பும், வாழ்வும் தருகிற மழை தொடர்ந்து வலிவும், பொலிவும், வனப்பும், எடுப்பும் வழங்குவதாக வான் மழையின் சிறப்பை மேலும் வள்ளுவர் வடித்துத் தருகிறார்.

13. விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து உள்நின்று உடற்றும் பசி

பொருள் விளக்கம்:

விண் = விண் கொடையான மழை
நின்று பொய்ப்பின் = எப்போதும் பெய்யாது தவறினால்
விரிநீர் = விரிந்த கடல்பரப்பு.
வியன் உலகம் = பெருமை மிக்க நிலவுலகம், அதில் வாழும் உயிரினங்கள்.
உள்நின்று = உள்ளங்களிலுள்ள மனவெழுச்சியிலும்
பசி = வறுமை
உடற்றும் = வருத்தி சிதறடித்து அழிக்கும்.

சொல் விளக்கம்:

நின்று = எப்போதும்; **விரிநீர்** = விரிந்து பரந்த கடல்
வியன் = பெருமையும் வேறுபாடுகளும்
உலகம் = உலகமும், உலக மக்களும்
உள் = உள்ளம், மனவெழுச்சி, உள்ளிடம்
உடற்றும் = அழிக்கும் சிதறடிக்கும், வருத்தும்
பசி = வறுமை, உணவு வேட்கை, தீ.

முற்கால உரை:

மழை வேண்டும் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின், கடலால் சூழப்பட்ட அகன்ற உலகத்தில், பசி நிலைபெற்று உயிர்களை வருத்தும்.

தற்கால உரை:

வேண்டிய காலத்தில் மழைபெய்யத் தவறிவிடுமானால் பரந்த கடல் சூழ்ந்த உலகிலுள்ள உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

புதிய உரை:

விண் வழங்கும் கொடையான மழை, எப்போதும் போல இயல்பாக வழங்காமல் போனால், கடல் வற்றும்; ககனத்து உயிர்கள் துன்புறும் ; அழியும்.

விளக்கம்:

உலக வறுமையை விரட்ட மாண்பான மழை பொழிகிறது. உடல், உள்ள வறுமையை விரட்டும் படையாக மழை வருகிறது.

14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

பொருள் விளக்கம்:

ஏரின் = எழுச்சியும், தோற்றப் பொலிவும்
உழவர் = படைவீரர் மற்றும் உலகமக்களிடம்
உழாஅர் = முயற்சியும் தொழிலும் நடைபெறாது.
புயலென்னும் = நீர்க்கடலானது
வாரிவளம் = தன்மிகுதித் தன்மையும்
கால் குன்றி = காற்றின் இயக்கமும் குறைந்து போகிறது.

சொல் விளக்கம்:

ஏர் = அழகு, தோற்றம், பொலிவு, எழுச்சி, நன்மை, வளர்ச்சி, உழவுக் கிசைந்த தளவாடம்.
உழவர் = வீரர், படைவீரர்
உழ = முயல, வேலை செய்ய, தொழில்நடத்த.
புயல் = நீர், கடல்; **வாரி** = மிகுதி, விளைவு:
கால் = வலிமை, உயிர்க்காற்று.

. முற்கால உரை:

மழை என்னும் வருவாய் தன் பலன் குன்றின், உழவர் ஏரான் உழுதலைச் செய்யார்.

தற்கால உரை:

மழை என்னும் சிறந்த வருமானம் குறைந்து போகுமானால் உழவர்தம் ஏரைப் பூட்டி உழவுத் தொழில் செய்யவும் மாட்டார்.

புதிய உரை:

நீர்க்கடல் தன் மிகுதித் தன்மை, காற்றின் இயக்கம் இவை குறைந்து போகிறபோது, படைவீரர்களாகிய வீரமக்களிடம் எழுச்சியும், தோற்றப் பொலிவும் வளர்ச்சி மிக்க வாழ்வுக்கான முயற்சியும் தொழிலும் நடைபெறாது.

விளக்கம்:

மழைவளம் குறையின், கடல் வளம் குறையும்; கடல் வளம் குறைய காற்றின் இயக்கம் தடைபெறும்.

பயனற்ற காற்றால் வாழ்கிற மக்களின், படைவீரர்களின் செய்தொழிலில் எழுச்சி, வளர்ச்சி, தோற்றப்பொலிவு எல்லாமே தடைபடுகின்றன.

மழை வளம் மட்டுமன்று, காற்று வளமும் குறைவதால், மக்களின் பழக்க வழக்கங்கள் எல்லாமே பாழ்பட்டுப் போகின்றன.

வான் வளம் பற்றிக் கூறிவரும் வள்ளுவர், இங்கே, அந்த வானுக்கும் வளம் தரும் கடல் வளம் பற்றிக் கூறியுள்ள பாங்கு வியந்து பாராட்டிற்குரியது.

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை

பொருள் விளக்கம்:

கெடுப்பதூஉம் = உடல் வறுமை, உள்ள வறுமை போன்றவற்றை அழித்த

கெட்டார்க்கு = இவ்வாறு வறுமை நிலையில் இருந்து விடுபடமுடியாமல் நிலையழிந்து கெட்டவர்க்கும்.

சார்வாய் = புகலிடமாய், பெருந்துணையாய்

எடுப்பதூஉம் = துயரங்களைத் துரத்த உபாயத்தை மேற்கொள்ளவும், அரியதைச் செய்யவும்

மற்று அங்கே = இன்னும் பல ஆக்க விளைவுகளைச் செய்துயர்ந்திட

எல்லாம் மழை = மழை எல்லாமாக இருந்து உதவுகிறது.

சொல் விளக்கம்:

கெடுப்பதூஉம் = கெடுத்தல், அழித்தல், முறியடித்தல்

கெட்டார் = கேடுகளை அழிக்க முடியாமல் கெட்டவர்.

சார்பு = புகலிடம், துணை, ஆசைப் பெருக்கம்.

எடுப்பதூஉம் = தந்திரத்தை மேற்கொள்ளல், அரியதைச் செய்ய முயலுதல்.

முற்கால உரை:

பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும் அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து கொடுப்பதும் மழையாகும்.

தற்கால உரை:

பெய்யாமல் கேடு செய்யவும் மழையால் முடியும், அவ்வாறு தன்னால் கெட்டுப் போவதற்குத் துணையாக நின்று பெய்து, நன்மை செய்யவும் மழையால் முடியும்.

புதிய உரை:

உடல், உளவறுமைகளை அழித்தவர்கள் மேலும் உயரவும், இவற்றிலிருந்து அழிக்கமுடியாதவர்கள் முயன்று முன்னேறவும், மழை பெருந்துணையாய் எல்லாமாக இருந்து உதவுகிறது.

விளக்கம்:

மக்கள் வாழ்வு நிலையில் மேம்பட வறுமையை அழிக்கவும், வளத்தைக் கொடுக்கவும் மழை உதவுகிறது என்பதை வள்ளுவர் படிப்படியாகப் பரிணாமப் படுத்திக் காட்டுகிறார்.

16. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே பசும்புல் தலைகாண் பரிது

பொருள் விளக்கம்:

விசும்பின் = வானத்தின்
துளிவீழின் = மழையின் துளியானது வீழ்வது
அல்லால் = இல்லாமல் போனால்
மற்றுஆங்கே = மண்ணுலகின் மக்களிடையே
பசு(ம்) = உயிரின்
புல் = மருவுகிற புணர்ச்சியும், உருவாக்குகிற செயல்களும்.
தலைகாண்பது = செழிப்பில்லாமல், காப்பாற்றப்படாமல்
அரிது = நடைபெறுவது அரிதாகிப் போய்விடும்.

சொல் விளக்கம்:

பசு = உயிர், ஆன், சீவனுடையது, சீவான்மா
புல் = புணர்ச்சி; **புல்குதல்** = மருவுதல், புணர்தல், அணைதல்
தலை = சிறப்பு, முதல், விரிவு
தலைகாணுதல் = பரிபாலித்தல் களிகூறுதல், செழிக்கச் செய்தல்.

முற்கால உரை:

மேகத்தின் துளிவீழில் காண்பதல்லது, அப்பொழுதே பசும்புல்லின் தலையையும் கண்டல் அரிது.

தற்கால உரை:

வானிலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், அத்துளிவீழாத இடத்தில் பசும்புல் முளைத்தலையும் பார்க்க முடியாது.

புதிய உரை:

மழைத்துளி வீழாமல் போனால், மண்ணுலக மக்கள் மருவுகிற புணர்ச்சியும், உருவாக்குகிற செயல்களும் செழிப்பில்லாமல் அரிதாகிப்போய்விடும்.

விளக்கம்:

மழையில்லாமல் மண்ணுலக மக்களும் வறுமையில் வதிவார்கள், அழிவார்கள் என்று முதல் ஐந்து குறள்களிலும் விளக்கி வந்த வள்ளுவர் இந்த ஆறாவது குறளில் முத்தாய்ப்பாக ஒரு கருத்தை முன் வைக்கிறார்.

வயிற்றின் வறுமை வாழ்வின் கொடுமையாகும். அதனால் மன எழுச்சியிலும் வெறுமை ஏற்படுத்தி விடுகிறது. அதனால் உடலின் உயிர்ப் புணர்ச்சிகூடத் தலைகாட்டாமல் போகிறது.

பசும்புல் தலைகாண்பரிது என்பதில்தான் இங்கே பொருள் மாறுகிறது. பசும்புல் முளைக்காது என்பது இயற்கைவிதி. ஆனால் வள்ளுவரோ மிகக் கூர்மையான கருத்துள்ள பசு + புல் என்னும் இரண்டு சொற்களையும் இணைத்து ஒரு புதிய புரட்சியை உண்டு பண்ணி இருக்கிறார். உலகுக்குப் பெருமைஉயிர்கள். மக்கள் பெருக்கத்திற்கு வழிகாட்டுவது உடல் வளமும் கூட்டமும். அந்த இன்றியமையாச் செயல்கூட அற்றுப்போகும் என்னும் வாழ்க்கை இரகசியத்தை மிக எளிதாக வள்ளுவர் விளக்கி இருக்கிறார்.

17. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி தான்நல்கா தாகி விடின்

பொருள் விளக்கம்:

நெடுங்கடலும் = கரையற்ற கடலும்

தன்னீர்மை = தனக்குப் பெருமைமிகு உறுதிப்படுகிற செயல்களைச் செய்யாமல்

குன்றும் = குறைந்து போகும்.
தடிந்தெழிலி = மின்னலுடன் பொழிகிற மேகம்
தான் நல்காது = தான்பொழியாது
ஆகிவிடின் = நிலை அடைகிறபோது.

சொல் விளக்கம்:

நீர்மை = ஒப்புரவு, குணம், உறுதி; **தடிந்து** = மின்னி
நெடுங்கடல் = கரையற்ற கடல்

முற்கால பொருள்:

அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும், மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கண் பெய்யாது வருமாயின்.

தற்கால உரை:

கடலில் முகந்த நீரை முகில் மழையாக மீண்டும் வழங்காது ஏன்றால், பெரிய கடலில் கிடைக்கும் வளங்கள் எல்லாம் குறைந்து போகும்.

புதிய உரை:

மின்னலுடன் பொழிகிற மேகம் தான்பொழியாத போது, கரையற்ற கடலும் தனக்குரிய பெருமைமிகு செயல்களை எல்லாம் உறுதிப்படச் செய்யாமல் குறைந்து போகும்.

விளக்கம்:

கரையற்ற கடலுக்குரிய பெருமை அதிலுள்ள முத்து, பவளம், உப்பு, சங்கு போன்ற செல்வங்களே. மேலும் அதிலுள்ள எண்ணற்ற உயிரினங்களும் ஆகும்.

கடல்நீர் உயிர்வாழ உதவும். ஆனால், பிறப்புக்கு உதவாது. உயிரினங்கள் உற்பத்தியாக, முத்து, பவளம் உண்டாக மழைத்துளிதான் மூல காரணம்.

மின்னி மேகம் மழை பொழியாத போது கடலின் இயல்பான பெருமை குறைந்து போகிறது என்பதைக் குறிக்கிற வள்ளுவரின் குறிப்பு சிறப்பானது.

6 வது பாடலில் மண்ணுலக மக்கள் பிறப்புக்கு மழை உதவுவதைப் பசும்புல் என்று குறித்துக் காட்டினார். இந்த 7 வது பாடலில் நீர்வாழ் உயிரினங்கள் பிறப்புக்கும் கடல்படு திரவியங்களின் உற்பத்திக்கும் மழையே காரணம் என்று குறித்துக் காட்டுகிறார்.

சூரியன் எப்படி உலக வாழ்க்கைக்கு உதவுகின்றதோ அதுபோலவே மழையும் உதவுகின்றது என்பதால்தான் இந்த அதிகாரத்திற்கு வான்சிறப்பு என்று மகுடம் சூட்டி இருக்கிறார்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

பொருள் விளக்கம்:

வானம் வறக்குமேல் = வானம் பொழியாது வற்றி விட்டால்
ஈண்டு = இந்த மண்ணுலகின்
சிறப்பு = செல்வம், இன்பம், மிகுதி மேன்மை போல எல்லாமே
பூ = பூமியில்; சனை = நன்மைகளும்
வான் ஓர்க்கும் = உயர்ந்த நினைவும் ஆய்வும் செவிச்செல்வமும்
கூட; செல்லாது = எதுவும் நடைபெறாமல் நலிந்து விடும்.

சொல் விளக்கம்:

சிறப்பு = அருமை, அகங்காரம், உயர்ச்சி, அழகு, மிகுதி, மேன்மை; **ஒடு** = ஒடுக்குதல், ஒடுங்குதல்; **பூ** = பூமி, பிறப்பு
சன் = நன்மையைக் காட்டுதல்; **ஐ** = உயர்ந்த தலைமை
வான் = உயர்ச்சி; **ஓர்தல்** = ஆராய்தல், நினைத்தல், கூர்ந்து கேட்டல்.

முற்கால உரை:

மழைபெய்யாதாயின் தேவர்களுக்கும் இவ்வுலகில் மக்களாற் செய்யப்படும் விழாவும் பூசையும் நடவாது.

தற்கால உரை:

மழை பெய்யாமல் போகுமானால், புகழ் நிலையர்களுக்கு இங்கு நடத்தப்படும் சிறப்பு விழாக்களோடு நாள்வழிபாடுகளும் நடைபெறமாட்டா.

புதிய உரை:

வான் பொழியாது வற்றிவிட்டால் இந்த மண்ணுலகில், செல்வம், மிகுதி, இன்பம், மேன்மை போலே எல்லாமே சுருங்கி விடும். பூமியில் நன்மைகளும், உயர்ந்த நினைவும், ஆய்வும், செவிச் செல்வமும் கூட நடைபெறாமல் நலிந்துவிடும்.

விளக்கம்:

வானம் வற்றிவிடுகிறபோது பூமியில் வறுமை தொற்றிக்கொள்கிறது. வறட்சி காரணமாகப் பூமியில் செல்வம் சுருங்குகிறது. இன்பம் ஒடுங்குகிறது. மிகுதி குறைகிறது. மேன்மை மறைகிறது. அழகு அழிகிறது. பூமியில் நன்மைகள் நடமாட

முடியாமல் போகின்றன. உலகமக்களின் ஆய்வறிவும் கூர் அறிவும் குன்றிப் போகின்றன. ஒட்டு மொத்தமாக இந்த உலகம் படுகின்ற பாடுகளை வள்ளுவர் இந்த எட்டாவது குறளில் எடுத்துரைக்கின்றார்.

19. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்

பொருள் விளக்கம்:

தானம் = மக்கள் வாழ்மிடம், அரசன் வாழும் கோவில், சக்தி உயிர்நிலை; தவம் = காடு, தீ, வெப்பம், போன்ற
இரண்டு = இருபெரும் வீடும் காடுகளும்
தங்கா = பயன்தராமல் போகிற
வியனுலகம் = வேறுபாடும் பெருமையும் நிறைந்த உலகமானது சிறப்புடையது; வானம் = வானம் தருகிற மழையானது.
வழங்காது எனின் = பொழியாமல் போகிறபோது.

சொல் விளக்கம்:

தங்கா = தடைபடாது; **வியன்** = பெருமை, வேறுபாடு
வியனுலகம் = தேவருலகம்;**தவம்** = காடு, தீ, வெப்பம், புண்ணியம், கற்பு, வாகை, விரதம், நோன்பு; **தானம்** = உறைவிடம் , பதவி, சக்தி, உயிர்நிலை, இருப்பிடம், கோயில்

முற்கால உரை:

அகன்ற உலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் மழை பெய்யாதாகின் உளவாகா.

தற்கால உரை:

இப்பெரிய உலகத்தில் மழைபெய்யாது என்றால் கொடை, தவம் என்னும் இரண்டும் அவற்றைச் செய்வார் இல்லாமல் நீங்கும்.

புதிய உரை:

வானம் தருகிற மழையானது இல்லாமல் போகிற போது, தானம், தவம் ஆகிய இருபெரும் வீடுகளும், காடுகளும் செழித்துப் பயன்படாமல் வேறுபாடு அடைந்து பெருமை குன்றவே உலகமானது சிறப்பிழக்கிறது.

விளக்கம்:

மழைவளம் குறைகிறபோது, மக்கள் உறையும் உறைவிடம், மன்னர் வாழ்கிற கோவில் வாழ்க்கையின் பெருமைக்குரிய சக்தி மற்றும் உயிர்நிலையாக விளங்குகிற ஒழுக்கமும், காடு மற்றும்

அதுதருகிற ஐவகை திரவியம் (அரங்கு, இறால், தேன், மயிற்பீலி, காவி) மற்றும் வெற்றி தருகிற விரதமும் வேதனை தீர்க்கும் நோன்பும் குறைந்து போகிறது (இதுகாட்டுவளம்)

வள்ளுவர் 7 வது குறளில் மண்ணுலக மக்கள் பெருக்கக் குறையும் 8 வது குறளில் நீருலக நிறையுற்பத்தி மறையும் என்று கூறியுள்ளார். 9 வது குறளில் மக்கள் குடி இருப்புகளும் மாயும், காடுவளமும் காயும் மழைவளம் இல்லாமற் போனால் என்று வான்சிறப்பைத் தேன்தமிழ்ச்சொற்களால் தீர்க்கமாக உரைக்கின்றார்.

தானமென்பது தக்கார்க்கு உவகையுடன் கொடுத்தலை. இந்தச் சொல்லுக்கு உறைவிடம் கோயில், சக்தி, பதவி உயிர்நிலை என்னும் சிறப்புப் பொருள்களும் உண்டு.

தவமென்றால் உண்டி சுருக்கல் முதலாயின என்பது பொதுவான பொருள். காடு, தீ, புண்ணியம், கற்புவகை என்னும் சிறப்புப் பொருள்களும் உண்டு.

20. நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வானின்றி அமையாது ஒழுக்கு.

பொருள் விளக்கம்:

யார்யார்க்கும் = உயிர்வாழ்கின்ற அனைவருக்கும்.
நீரின்றி = நீரான அமுதமின்றி
உலகு = உயர்ந்தோரின் நிலமாக விளங்கும் மக்களிடையே
வானின்று = வானத்திலிருந்து
ஒழுக்கு = நடத்தப்பட்டு தொடர்ந்து ஒழுகுகின்ற நீரல்லாமல்
அமையாது = எந்த நிறைவும் எந்தப் படைப்பும் ஏற்படாது.

சொல் விளக்கம்:

அமை = சம்பவித்தல், சேர்தல், படைத்தல், பொருந்துதல், நிறைத்தல்; **ஒழுக்கு** = நன்னடை, நடந்து, ஒழுகல்.
உலகு = உயர்ந்தோர், ஒழுக்கம், நிலம், பூமி, மக்கள்.
நீர் = அமுதம், அப்பு, ஒளி, தண்ணீர்.

முற்கால உரை:

எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரையின்றி உலகில் அமையாதாகின், அந்நீர் வானையின்றி இடையறாது ஒழுகும் ஒழுக்கும் அமையாது.

தற்கால உரை:

நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால் அம்மழை இல்லாமல், எத்தகைய உயர்ந்தவரிடத்தும் ஒழுங்கு இல்லாமல் போய்விடும்.

புதிய உரை:

உயிர்வாழும் அனைவருக்கும், உலாவரும் அனைத்திற்கும் நீர் அமுதமின்றி எந்தப்படைப்பும், எந்த நிறைவும் ஏற்படாது.

விளக்கம்:

உவகையும், உடலுக்குத் தூய்மையும் மனத்துக்கு வாய்மையும் தருகிற நீரால், உலகவாழ்வு உயர்வாக அமைகிறது. அந்த நீரும் வானின் வற்றாத கொடையாக வழங்கப்பட்டு வருகிறது.

நீரில்லாமல் எந்தவித படைப்பும் இல்லை. செயல்களில் எடுப்பும் இல்லை; மிடுக்கும் இல்லை. உயிர்களிடையே உடலை ஒழுங்குறக் காக்கும் நன்னடையும் அமைவதில்லை. ஆகவே, உலகின் வன்மைக்கும், நன்மைக்கும் உயிர்வாழ் மக்களின் உடல் திண்மைக்கும் விடாது ஒழுகுகிற செயலாண்மைக்கும் நீரே நிலைத்து ஒழுகுவதால்தான் இந்த அதிகாரத்தை வான்சிறப்பு என்று வானளாவப் புகழ்ந்திருக்கிறார்.

பத்தாவது குறளில் உலகுக்கு உவகையூட்டுகிற அமுதவாழ்வு வான்தவறாது ஒழுகிக் தருகின்ற நீரொழுக்கினால் நிலையாகிறது; நிறைவாகின்றது என்று வள்ளுவர் வான் சிறப்பின் தேன் சிறப்பைத் தெளிவாகத் திரட்டித் தந்திருக்கிறார்.

3. நீத்தார் பெருமை

இயற்கையின் இனிய கொடைகளை முதல் இரண்டு அதிகாரங்களில் பதமாகப் பாடிய வள்ளுவர், உலக மக்களை ஒழுக்க வாழ்க்கையில் நடத்திச் செல்லும் வல்லவர்களாகிய நல்லவர்களை நமக்கு அடையாளம் காட்டுவதற்காக, மூன்றாவது அதிகாரத்தை அமைத்திருக்கிறார்.

உடலை உருக்குலைக்கும் உணர்வுகளை, உந்துதல்களை, உயிரையும் பிழிந்து தெடுக்கும் ஆசைகளை எல்லாம் புறந்தள்ளித் துறந்து விடுபவரை நீத்தார் என்றனர். (நீத்தார் = முற்றும் துறந்தவர்).

அப்படிப்பட்ட ஆற்றல் மிகு அழிவு சக்திகளைத் தன்னிடம் அண்டவிடாது, ஞான மிகுதியால் எரியூட்டி நீற்றிடச் செய்யும் நெஞ்சுரம் கொண்டவரை நீற்றார் என்றனர். (நீற்றார் = எரியிட்டு துறந்தவர்).

ஆதலால் இந்த மூன்றாம் அதிகாரத்தை நீற்றார் பெருமை என்றுதான் வள்ளுவர் தலைப்பிட்டிருக்க வேண்டும். பாட வேறுபாட்டாலும் பேச்சுப் பழக்கத்தாலும் நீத்தார் என்று வந்து விட்டது போலும்.

பெரிய உண்மை என்பதை - பெருமெய் என்று கூறியதை பெருமை என்றும் மாறியிருப்பதையும் காண்கவும்.

வாழ்க்கையில் நிலையாமை என்பது உண்மையானால் அதனை வெற்றி கொண்டு விளங்குவது பேருண்மையான பேராண்மை அல்லவா?

உடலைக் கெடுக்கும் குற்றங்களாகக் கருதப்படுபவை, நரை, திரை, மூப்பு, பிணி, சாவு, முதலிய ஆறும் மனத்தைக் கெடுக்கும் மாய்மாலப் பேய்களான காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறும் நித்தம் நடத்தும் வாழ்க்கையிலே யார் நீக்கி வாழ்கிறாரோ, அவரே நீத்தார். இயற்கையை வெல்லுகிற இனிய கடவுளர்களை இங்கே நமக்கு வள்ளுவர் தரிசனமாகக் காட்டுகிறார்.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு.

பொருள் விளக்கம்:

பனுவல் = கல்விப் புலமை, மிக்க ஆய்வுகளால் ஆக்கப்பட்ட நூல்களின்

துணிவு = தெளிவான நோக்கமும் முடிந்த கொள்கையும் குறிக்கோளுமான

விழுப்பத்து வேண்டும் = நன்மையும் மேன்மையும் தருகின்ற வழிமுறை களின்படி.

ஒழுக்கத்து = நீரோட்டம் போல் ஒழுகுகின்ற ஒழுக்க வாழ்வை வாழ்பவரே

நீத்தார் பெருமை = முற்றுந் துறந்த மாமனிதர் என்ற பெருமையைப் பெறுகிறார்

சொல் விளக்கம்:

பனுவல் = நூல், புலமை, கல்வி, ஆராய்ச்சி,
துணிவு = தெளிவு, நோக்கம், முடிவு, கொள்கை, குறிக்கோள்
விழுப்பம் = ஆசை, சிறப்பு, நன்மை, மேன்மை
ஒழுக்கம் = நீரோட்டம் போல, தடையின்றி தொடர்ந்து நடைபெறும். அறச் செயல்கள்.

முற்கால உரை:

தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமியது என விரும்பும் நூல்களது துணிவு.

தற்கால உரை:

ஒழுக்கத்தின் நிலைபெற்றுத் துறந்தவர் பெருமையே பெருமைக்குரியன பலவற்றுள்ளும் சிறந்தது என்பது, உயர்ந்த நூல்களின் முடிபாகும்.

புதிய உரை:

கல்விப்புலமை மிக்க ஆய்வுகளால் ஆக்கப்பட்ட நூல்களின் தெளிவான நோக்கமும் நன்மையும் மேன்மையும் தருகிற நீரோட்டம்போல் ஒழுகுகிற ஒழுக்க வாழ்வும் வாழ்பவரே முற்றுந் துறந்த மாமனிதர் என்னும் பெருமையைப் பெறுகிறார்.

விளக்கம்:

பனுவல் துணிவு விழுப்பத்து வேண்டும். ஒழுக்கத்து நீத்தார் பெருமை என்று குறளைப் பிரித்துப் பார்க்கிறோம்.

நூல்கள் யாவும் நுண்ணிய மதியாளர் பண்ணிய பண்பாடுகளின் தொகுப்பு. அவை மக்களுக்கு அறிவையும் செறிவையும் ஆழ்ந்த உறவையும் வழிசெல்லும் நெறியையும் வற்புறுத்தும், வழிநடத்தும், தவறுகளுக்குத் தடை விதிக்கும், தான் என்ற செருக்குக்கு விடை கொடுக்கும்.

ஆகவே, நூல்கள் காட்டிய நெறியில் ஒழுக்கத்தில் விழுப்பமாய், செழிப்பாய் வாழ்ந்து நிற்பவர் முற்றுந்துறந்த ஆசைகளை எரித்த ஆற்றலாளர் ஆகிறார். அதுவே அவரது பெருமைக்கு ஆணிவேராய், அணிகலனாய் விளங்குகின்றது.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

பொருள் விளக்கம்:

துறந்தார் = (உடலளவில்) உலகப் பற்றைத் துறந்தவர்

பெருமை = வல்லமையின் தகைமையை

துணைக் கூறின் = ஒப்புமை கூறி அறிய வேண்டுமானால்

வையத்து = இந்த உலகத்து ஆசைகளை உடலாலும் மனத்தாலும்

இறந்தாரை = வென்று வாழ்ந்து காட்டுகிறவரை

எண்ணிக் கொண்டு = கருத்தில் கொண்டு

அற்று = சான்றாக அறிந்து கொள்ளவேண்டும்

சொல் விளக்கம்:

பெருமை = வல்லமை, சீர்மை, மிகுதி ; **துணை** = அளவு, ஒப்பு

முற்கால உரை:

இருவகைப்பட்ட பற்றையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணால் கூறியறியலுறின், அளவு படாமையான், இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை எண்ணி இத்துணையர் என அறியலுற்றாற் போலும்.

தற்கால உரை:

துறந்தார் பெருமைக்கு அளவில்லை. அதனை அளவிட்டுக் கூறுவதாயின் 'இவ்வுலகில் இப்பொழுது வரை இறந்து போனவர்

எத்தனைபேர்' என எண்ணத் தொடங்கி, முடியாமல் கைவிடுவது போன்றது.

புதிய உரை:

உலகப் பற்றைத் துறந்தவர் பெருவல்லமையின் தன்மையை ஒப்புமை கூறி அறிய, இவ்வுலகத்து ஆசைகளைத் துறந்து - வென்று வாழ்பவரைக் கருத்தில் கொண்டு, சான்றாக அறிய வேண்டும்.

விளக்கம்:

உலகாசைகளைத் துறந்தவரின் பெருமையின் (தகுதியை) அளவைத் தெரிந்து கொள்ள, உலகத்தில் பிறந்து இறந்தாரது எண்ணிக்கையை எண்ணி அறிந்து கொள் என்பது, துறந்தாரின் பெருமையை அவமதிப்பது போலாகும்.

ஒன்றைப் புகழ்ந்து உயர்வாகப் பேசிட, ஒப்புமை காட்டும் பொருள், அதை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதுதான் வாழ்க்கையின் மரபாகும்.

துறந்தார்க்கு இறந்தாரைப் பொருத்துவது தகைமையல்ல. இறந்தார் என்பது வையத்து ஆசைகளின் ஆற்றலை இறந்து, வாழ்பவர்.

சித்தர்கள் பெருமையைக் கூறும் போது, செத்தார் போல் சீவிக்கும் சித்தர்கள் என்று புகழ்கிறது இலக்கியம். இங்கே உடலால் துறந்தவர்களின் பெருமையை உடல் உள்ளம் உணர்வுகளால் துறந்து இறந்தவர்களாக இருப்பவர்களுடன் ஒப்பிட்டுப் பெருமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

துறத்தல் என்பது முதல் நிலை. இறத்தல் (இறு) என்பது இறுதிநிலை. இறுதி நிலையைப் பார்க்கும் போது முதல் நிலையின் தகுதி புரிந்து விடும் அல்லவா!

ஆகவேதான், இறுதி நிலைக்குரிய தகுதி என்ன என்பதை மூன்றாவது குறளில் விளக்கி அருள்கிறார் வள்ளுவர்.

23. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு

பொருள் விளக்கம்:

இருமை = இரு மெய்யான உள்ளும் புறமும்

வகைதெரிந்து = அவற்றின் தரமும் தந்திரமும் மிகுந்த கூறுபாடுகளையும் முற்றும் அறிந்து

ஈண்டு = (காலம் தாழ்த்தாது) விரைவாக அறம்
பூண்டார் = (வாழ்க்கையின் செம்மைக்கு)
ஒழுக்க நல்வினைகளையெல்லாம் ஞான நோன்புகளாகக்
காப்புணியாக்கிக் கொண்டவரின்
பெருமை = ஆற்றல் மிகு அறச் செயல்களால்
உலகு பிறங்கிற்று = உலகின்தரம் உயர்ந்து, ஒளிர்ந்து பெருகிக்
கொண்டது.

சொல் விளக்கம் :

இருமை = மெய்யின் இருதன்மை. உள்ளும் புறமும்
வகை = தரம், வழிவகை, ஏது, கூறுபாடு
ஈண்டு= இவ்விடம், விரைவு, சீக்கிரம்
அறம் = ஞானம், நோன்பு, ஒழுக்கம், நல்வினை
பூண் = (உலக்கைக்கு காப்புபோல) அணிதல்
பிறங்கிற்று = பெருகிற்று, ஒளிர்ந்தது, உயர்ந்தது.

முற்கால உரை:

பிறப்பு வீடு என்னும் இரண்டனது துன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே உலகின்கண் உயர்ந்தது.

தற்கால உரை:

இருவேறு இயல்புடைய இவ்வுலகியல் தெரிந்து, பற்றறுத்தல் என்னும் அறத்தைக் கொண்டவர் பெருமை, உலகில் விளங்கும் எப்பெருமையினும் பெருமை உடையதாகும்.

புதிய உரை:

இருமெய்யான உள்புறம் ஆகியவற்றின் தரமும் தந்திரமும் மிகுந்த கூறுபாடுகளையும் முற்றும் அறிந்து விரைவாக, ஒழுக்க நல்வினைகளை ஞானநோன்புகளாகக் கொண்டவரின் ஆற்றல்மிகு செயல்களால், உலகின்தரம் உயர்ந்து, ஒளிர்ந்து பெருகிக் கொண்டது.

விளக்கம்:

இருமையை இம்மையும் மறுமையும் என்று குறிப்பிடுகிறார்கள். இருமையை இருமெய் என்றும், அதையே உள்ளும் புறமும் என்றும் உணர்ந்து, அவற்றின் வெறித்தன விளைவுகளின் வேகத்தைப் புரிந்து, தாமதிக்காமல் விரைந்து, அறத்தைக் காப்பாக ஏற்று, துறந்ததால் அவர்களாலே தான் இந்த

உலகுக்குத் தரமும், தண்மைமிகு ஒளியும், தகுதிசான்ற திறமும் பெருகி வருகிறது.

உள்ளும் புறமும் என்பது மனத்தின் பல மாய்மாலங்கள். புறத்தின் ஐம்புலக் கூறுபாடுகள். இவற்றை வெல்ல வேண்டும் என்பதற்காக விரைந்து துறப்பதும் அதிலே நிறைந்து நிற்பதும் தான் நீத்தாரின் பெருமை என்கிறார் வள்ளுவர். இப்பண்பு தான் நீத்தாரை உலகோர் முன் நிலை நிறுத்திக் காட்டுகிறது.

24. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான் வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து

பொருள் விளக்கம்:

உரன் என்னும் = உடல் வலிமையும் திண்மையும்
தோட்டியான் = தீயவைகளை அகற்றித் தூய்மைப்படுத்துகிற
ஓர்வித்து = ஒப்பற்ற ஞானமாகத் திகழ்வதால்
ஓர் ஐந்தும் = உடல் சிறப்புப் புலன்கள் ஐந்தையும்
காப்பான் = புலன் இழுக்கங்களிலிருந்து காப்பாற்றி
வரன் என்னும் = மேன்மை பயக்கக் கூடிய
வைப்பில் = காப்பிடமாகக் காத்து நிற்கிறது
வித்து = அறிவூட்டுகிறது

சொல் விளக்கம் :

உரன் = அறிவு, பலம், திண்மை, வலிமை
தோட்டி = சுத்தம் செய்பவன், தீயவை அகற்றுபவன்
வைப்பு = காப்பிடம்; **வித்து** = அறிதல். வித்திலிருந்து தான் வேதம் என்னும் சொல் பிறந்திருக்கிறது.

முற்கால உரை:

திண்மை என்னும் தோட்டியால் பொறிகளாகிய யானைகள் ஐந்தினையும் தத்தம் புலன்மேல் செல்லாமல் காப்பான் எல்லா உலகத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஒரு வித்தாம்.

தற்கால உரை:

அறிவு என்னும் துறட்டினால் பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் அடக்கிக் காப்பவன், ஆக்கம் என்னும் களஞ்சியத்தை நிரப்பும் ஒப்பற்ற நல்ல மணிகளைத்தரும் பொறுக்குமணி ஆவன்.

புதிய உரை:

உடல் வலிமையும், திண்மையும், தீயவைகளை அகற்றுவது நீத்தார்க்கு ஒப்பற்ற ஞானமாகத் திகழ்வதால், சிறப்புப் புலன்கள் ஐந்தையும் புலன் இழுக்கங்களிலிருந்து காப்பாற்றி மேன்மை பயக்கக் கூடிய காப்பிடமாக நிற்கிறது; அறிவூட்டுகிறது.

விளக்கம்:

உடல் வலிமையால் மன வலிமை மிகுதியாகிறது. அதனால் உடலும் மனமும் ஐம்புலன்களின் ஆங்காரச் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது. நெறிப்படுத்துகிறது. அதனால் கட்டுப்பாட்டுடன் விளங்குகிற துறந்தாரின் மேன்மைகளை வைத்துக்காக்கும் சிறப்பிடமாகவும் செயலாற்றுகிறது.

துறவும் நோன்பும் புலன்களை அடக்குவதாலும், ஒடுக்குவதாலும் சீர்மைப்படுத்தி நீர்மைப்படுத்துவதாலும் தான் நடக்கும். அத்தகைய துறவு நிலைக்குத் தேக வலிமை தான் காரணம். அதனைப் பெறுகிற ஆற்றலாளரே, நீற்றார் பெருமையில் நிலைத்து நிற்கிறார்.

பலமற்றவன் மன நலத்திலும் வளமற்றுப் போவதால், மேன்மை பெற முடியாது என்பதை வள்ளுவர் இங்கே வலிறுத்திக் காட்டுகிறார்.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி

பொருள் விளக்கம்:

ஆற்றல் = உடல் பலத்தாலும் மனத் திண்மையாலும்
ஐந்தவித்தான் = ஐம்புலன்களின் அடங்காத்தனத்தை அவித்தவன்
இந்திரனே = (இந்திரத்தைக் கட்டுப் படுத்திவென்றதால்) அவன் இந்திரன் என்று அழைக்கப்படுகிறான்.
அகல் விசும்பு உள்ளார் = பூமியில் அகன்றும் உயர்ந்தும் உள்ள
கோமான் = பெருமையிற் சிறந்த தலைவனாக
சாலும் = மேன்மை பொருந்தியதால்
கரி = அவன் எல்லோருக்கும் (விருந்தினராக) சான்றாக ஆகிவிடுகிறான்.

சொல் விளக்கம்:

அகல் = அகன்ற, விரிவடைகிற; **அகலிடம்** = பூமி
கோமான் = தலைவன் பெருமையிற் சிறந்தோன்

இந்திரன் = இந்திரியத்தை வென்றவன் ; **சாலும்** = மேன்மை பொருந்துகிற; **கரி** = விருந்தினன், சான்றாகிறவன்

முற்கால உரை:

புலன்களிற் செல்லுகின்ற அவர்கள் ஐந்தினையும், அடக்கினானது வலிக்கு அகன்ற வானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று.

தற்கால உரை:

ஐம்புலன்களையும் அடக்கிய நீத்தார் திறத்திற்கு எண்ணற்ற புகழுடம்பாளர்க்கு ஒருபெருந்தலைவனாகக் கூறப்படும் ஐந்திரனே சிறந்த சான்றாவான்.

புதிய உரை:

உடல் பலத்தாலும் மனத்திண்மையாலும் ஐம்புலன்களின் அடங்காத் தன்மையை அவித்தவன் இந்திரன் என்று அழைக்கப்படுவான். பூமியில் அகன்றும் உயர்ந்தும் உள்ள பெருமையிற் சிறந்த தலைவனாக மேன்மை பொருந்தியதால், அவன் எல்லோருக்கும் சான்றாகிறான்.

விளக்கம்:

விந்து விட்டவன் நொந்து கெட்டவன் என்பது முதுமொழி. இந்திரம் இழப்பு என்பது இந்திரியங்களான ஐம்புலன்களின் தூண்டுதல் என்பது வெளிப்படை. மூன்று ஆசைகளிலும் பெண்ணாசை முதலில் நிற்பது. ஆகவே, உந்துதல் சக்தி நிறைந்த இந்திரியத்தைக் கட்டுப்படுத்தி வென்றதனால் இந்திரன் என்று சிறப்புப் பெறுகிறான்.

(உ-ம்) வீரம் மிக்கவன் வீரன். தீரம் நிறைந்தவன் தீரன், விவேகம் உள்ளவன் விவேகன். அதுபோல்தான் இதுவும்.

புலனடக்கத்தால் பூமியிலும் விரிந்து உயர்ந்த வான்பரப்பிலும் கூட அவன் விருந்தினருக்குரிய வரவேற்பைப் பெறுகின்ற கோமகனாகத் திகழ்கிறான்.

4 ஆம் குறளில் உடல் வலிமையால் விளைந்த மனவலிமையால், புலன்களைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறார்.

அதனால் மக்கள் மத்தியிலே விருந்தினனாக (புதியவராக) பூமிக்கும் வானுக்கும் புகழ் பெற்ற தலைவனாக விளங்குகிறான் என்று துறத்தலின் உயர்நிலையைக் காட்டி, அதற்கு உடல் வலிமையே உயிர்நிலையாக விளங்குகிறது என்பதையும் அருமையாகக் குறித்துக் காட்டுகிறார்.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்

பொருள் விளக்கம்:

செயற்கு அரிய = புலன்களை அடக்குகின்ற ஆற்றலால் கிடைக்கிற அரிய அற்புதங்களை

செய்வார் = எல்லாம் செய்து மக்களுக்குப்பயன் அளிப்பவர்.

பெரியர் = எல்லோர்க்கும் பேராளாகிறார்.

செயற்கரிய = அரியதான புலனடக்கம் என்பதை

செய்கலாதார் = அடக்க முடியாமல், முயலாமல் அதில் வீழ்ந்து அழிப்பவர், அழிபவர்.

சிறியவர் = மிகவும் கீழ்த்தரமானவராகி விடுகிறார்.

சொல் விளக்கம்:

செயற்கரிய = புலன்களை அடக்குகிற

பெரியர் = எல்லோர்க்கும் பேராளர்

முற்கால உரை:

ஒத்தபிறப்பினராகிய மக்களுள், செய்தற்கு எளியவற்றைச் செய்யாது, அரியவற்றைச் செய்வார் பெரியர். அவ்வெளிய வற்றைச் செய்து, அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்.

தற்கால உரை:

பிறரால் செய்வதற்குரிய நல்ல செயல்களைச் செய்பவரே பெரியவர். அவ்வாறு செய்தற்கரிய செயல்களைச் செய்யாதவர் சிறியவர்.

புதிய உரை:

புலன்களை அடக்குகின்ற ஆற்றலால் கிடைக்கும் அற்புதங்களைச் செய்து பலனளிப்பவர், எல்லோர்க்கும் பேராளர். புலனடக்கம் இல்லாதவர் கீழ்த்தரமானவர்.

விளக்கம்:

உடலின் சிறப்புப் புலன்கள் கட்டுப்பாட்டின் காரணமாக ஒரு வழிப்படுத்தும்போது உண்டாகிற உடலின் சக்தி, உலகத்தையே பிரமிக்க வைக்கின்ற பெருமை தரவல்லதாகும். அதுவே, எண்வகை சித்திகள் என்று போற்றப்படுகின்றது. சத்துகளையும் சித்துகளையும், சித்திகளையும் கொண்டு, மனித குலம் காப்பவர்கள் மாமனிதர்கள். புலன்களால் சிதைந்து புதைந்து போனவர்கள், புன்மையராகப் பூமியின் புண்களாக ஆகி விடுகின்றனர்.

இந்த 6 வது குறளில் புலனடக்கத்தால் பெறுகிற அரிய சித்திகளை அற்புதமாக வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

27. சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

பொருள் விளக்கம்:

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் = நாவின் சுவை, விழியின் ஒளி, உடலின் தொடு உணர்வு, செவியின் ஓசை, நாசியின் மணம்
என்ற ஐந்தின் = என்கிற ஐந்து புலன்களின்
வகைதெரிவான் = செயல்படுசக்தியின் சீர்மையை ஆழமாய் புரிந்து கொண்டவன்; கண்ணே = உடம்பே
உலகு = இந்த உலகில் பெருமையை வழங்குகிறது

சொல் விளக்கம்

கண் = உடம்பு, சரீரம், அகக்கண், புறக்கண்
வகை = ஏது, கூறுபாடு, தரம்

முற்கால உரை:

சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும், ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம்.

தற்கால உரை:

சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் ஐந்தின் விரிவுகளைத் தெரிந்த நீத்தாரிடத்தேதான் உலகியக்கம் அடங்கியுள்ளது.

புதிய உரை:

சுவை, ஒளி, உணர்வு, ஓசை, மணம் என்னும் ஐந்து புலன்களின் செயல்படுசக்தியை ஆழமாய் அறிந்து கொண்டவனின் உடம்பே இந்த உலகிற்குப் பெருமையளிக்கிறது.

விளக்கம்:

ஐம்புலன்களின் ஆற்றலும் ஆதிக்கமும் அனைவரும் அறிவர். அவற்றை அடக்கிக் காக்கும் ஆண்மை உள்ளவரே துறக்க முடியும். துறத்தலுக்கு உடல் வலிமையும், மன வலிமையும், வேண்டும் என்று வள்ளுவரே 4 வது குறளில் குறித்துள்ளார். ஐம்புலன்களின் ஆதிக்கம் அகத்திலும் புறத்திலும் இருப்பதால், ஐம்புல சக்திகளின் சூட்சமத்தை உணர்ந்து. உடலால் காத்து, உலகில் உள்ள

வரவேண்டும். அதனால்தான் தெரிவான் கண்ணே உலகு என்றார். அதாவது தெரிந்தவனது உடம்பு தான், உலகமாகிவிடுகிறது என்பது வள்ளுவர் உள்ளம்.

ஐம்புலன்களின் ஏதுவை, கூறுபாட்டை, காரண காரியப் பண்புகளைத் தெரிந்து காப்பவனது தேகம், உலக வாழ்வியலை உயர்வுற நடத்த உதவுகிறது.

இப்பாடலால் ஐம்புலன்களின் நுண்மையின் உண்மையைப் புரிந்தவரது தேகத்தின் சிறப்பு, தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்

பொருள் விளக்கம்:

நிறைமொழி = சக்தி வாய்ந்த பயன் தவறாத வாக்கின் மூலம்
மாந்தர் = வழங்குகின்ற மேன்மையாளர்களின்
பெருமை = வல்லமை மிகுந்த சீர்மையானது
நிலத்து = பூவுலகில் வாழும் மக்களுக்கு
மறைமொழி = (நல்ல உடல், நல்ல மனம், நல்ல வாழ்வு) ஞானம்
. நிறைந்த சொற்கள் மூலமாக
காட்டி விடும் = உயர்வாழ்வில் வழிப்படுத்தி விடும்.

சொல் விளக்கம்:

நிறை = அழிவின்மை, அறிவு, வலிமை
நிறைமொழி = சக்தி வாய்ந்த சொல், பயன் தவறாத வாக்கு
மறை = வேதம், அறிவு, ஞானம்
மறைமொழி = நல்ல வாழ்க்கைக்குரிய நலமான மந்திரம், மந்திரம் என்பது நல்லதையே திரும்பத் திரும்ப நினைக்கும் தந்திரம்.

முற்கால உரை:

நிறைந்த மொழியினை உடைய துறந்தாரது பெருமையை நிலவுலகின் கண் அவராணைக்குச் சொல்லிய மந்திரங்களே கண் கூடாகக் காட்டும்.

தற்கால உரை:

சொல்லியது சொல்லியவாறே நிறைவேறும் சொற்களைச் சொல்லும் நீத்தார் பெருமையை, இவ்வுலகைக் கட்டிக்காக்கும் அவர்தம் பாதுகாப்பு மொழிகளே காண்பித்துவிடும்.

புதிய உரை:

சக்தி வாய்ந்த பயன்தவறாத வாக்குடையவரின் வல்லமை, பூவுலக மக்களுக்கு ஞானம் நிறைந்த சொற்களாகி, உயர்வழியில் அவர்களைச் செலுத்தும்.

விளக்கம்:

உரம் வாய்ந்த உடல். அறம் தோய்ந்த மனம். தரம் சார்ந்த வாழ்வு. திறம் தேர்ந்த செயல்முறைகள் கொண்ட மேலோரான மாந்தராகிய நீற்றார் இந்த வையத்து மக்களுக்கு வாழும் மறையான வல்லமை மிக்க தேகத்தை வளர்த்துக் கொள்ளவும், உறுதி வாய்ந்த உள்ளத்தை நிறைத்துக் கொள்ளவும் உயர்நிலை வாழ்வு வாழ்ந்து மேம்படவும் கூடிய ஞான வழியில் வழிப்படுத்தி விடுவர்.

விடும் என்பது சேர்க்கும் என்பது போலவே, நல்லதைக் காட்டி, நலமல்லாதன வற்றை நீக்கிவிடும் என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

இந்தக் குறளில் உட்டல் வலிமையும் மனவலிமையும் பெற்றவரது சொல் வலிமையின் மேன்மையைச் சொல்லிக் காட்டுகிறார்.

29. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது

பொருள் விளக்கம்:

குணம் என்னும் = ஒழுக்கப் பண்புகளையே கொள்கையாகக் கொண்டு
குன்றேறி நின்றார் = குறைகளைக் கடந்துஉயர்ந்தவர் (மலையளவு உயர்ந்தார் என்பது ஒரு உரை)
வெகுளி = மனம் மாறுபட்டு வருகின்ற கோபத்தை
கணமேயும் = தன்னிடம் சிறுநொடி கூட
காத்தல் அரிது = வைத்திருக்க மாட்டார்

சொல் விளக்கம்:

குணம் = கொள்கை, ஒழுக்கத்தன்மை
குன்று = மலை என்றும் சொல்லலாம். குறை என்றும் கூறலாம்
ஏறி நின்றார் = கடந்து நின்றார்

முற்கால உரை:

துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது வெகுளி, தானுள்ளளவு கணம் ஆயினும், வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது.

தற்கால உரை:

உயர் குணம் என்னும் மலையின் மேல் ஏறிநின்ற நீத்தார் சீற்றத்தை, அதற்கு ஆளானவர் ஒருநொடிப் பொழுது அளவுகூடத் தாங்கமுடியாது.

புதிய உரை:

ஒழுக்கத்தை உயர்வாகக் கொண்டு உயர்ந்தவர், மாறுபட்டுவரும் கோபத்தை ஒருநொடி கூட வைத்திரார்.

விளக்கம்:

ஒழுக்கத்தில் மலையளவு உயர்ந்த துறவர், தன்னிடம் உள்ள குறைகள் அனைத்தையும் கடந்து உயர்ந்திருப்பதால், (மனித இயல்பான) கோபத்தை எப்போதும் படவே மாட்டார். அப்படி அவரை மீறி வந்தாலும் சிறு கணம் கூடத் தங்க விடமாட்டார். விரட்டி விடுவார். அவரால் கோபப்பட முடியாது. ஏனென்றால் அவர் குணக்குன்றல்லவா!

கோபம் என்பது தனக்குள்ளே இருக்கும் விருப்பாலும் வெறுப்பாலும் வெளிப்படுகிற உணர்ச்சி செயல். நீத்தாராகிய நிறை குணத்தார் விருப்பு வெறுப்பைக் கடந்தவர். நடுநிலையைத் தொடர்ந்தவரல்லவா?

30. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்

பொருள் விளக்கம்:

மற்று எவ்வுயிர்க்கும் = மனிதர்கள் மட்டு மல்லாது உலகில் வாழ்கிற எல்லா உயிரினங்களுக்கும்
செந்தண்மை = (துன்பம் தராத) இன்பத்துடன், மகிழ்ச்சி தருகிற மேன்மை செயல்களில்
பூண்டு ஒழுகலான் = இணக்கமாகி செயல்படுவதால்
அறவோர் என்போர் = நீத்தாராகிய நிறை குணத்தார்
அந்தணர் = அழகிய தீபமாக ஒளிர்கிறார்

சொல் விளக்கம்:

அம் = அழகு, நீர்; **தணல்** = நெருப்பு, நிழலிடம்
தண்மை = குளிர்ச்சி, இன்பம், எளிமை; **செம்** = செம்மை;
செம்மல் = பெருமையிற் சிறந்தோன்; தலைவன்

முற்கால உரை:

எல்லா உயிரின்கண் மேலும் செவ்விய தன்மையைப் பூண்டு ஒழுகலான் அந்தணர் என்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர்.

தற்கால உரை:

எல்லா உயிர்களிடத்தும் அருள் கொள நடத்தலால், அந்தணர் என்பவர் நீத்தாரேயாவர்.

புதிய உரை:

மனிதர் மட்டுமின்றி உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும், மகிழ்வுதரும் மேன்மை செயல்களில் இணைவதால், நீத்தார் அழகிய தீபமாக ஒளிர்கிறார்.

விளக்கம்:

தணலாக இருப்பவர் தணர் என்று அழைக்கப்படுகிறார். அம் என்றால் அழகிய என்றும், நீர் என்றும் பொருள். அழகிய நெருப்புக்குத் தீபம் என்று பெயர். வணக்கத்திற்குரிய நெருப்பான தீபம் போல வளத்திற்குரிய நீர் போல. அதாவது வெப்பமும் குளிரும் உள்ள நிழலிடமாக விளங்குவதால் அவர் அறவோர் என்பதற்கும் மேலாக அந்தணர் என்று புகழப்படுகிறார்.

மற்றெல்லா உயிரினங்களையும் மனித இனமாகப் பாவித்துச் சேவிக்கிற இணக்கமனம், செயல், நேர்மை, வாழ்க்கை, ஒழுக்கம், செப்பம், மேன்மை ஆகிய குணங்களால் தாம் அவர் அந்தணர் என்று அழைக்கப்படுகிறார்.

4. அறன் வலியுறுத்தல்

அதிகார விளக்கம்:

நீத்தார் பெருமை எனும் அதிகாரத்திற்கு அடுத்ததாக வைக்கப்பட்டிருக்கிறது அறன் சிறப்பு.

அறத்தின் சிறப்பு என்று கூறாமல், அறன் சிறப்பு என்பதால், அறத்தைச் சிறப்பாகப் பின்பற்றுகிற ஒருவரை பெருமைப்படுத்தும் முகமாக அவரை அறன் என்றே அழகு பெயரிட்டு அழைக்கிறார்.

அறன் என்பதற்கும் நீத்தார் என்பதற்கும் உள்ள வேறு பாட்டையும் வள்ளுவர் மிகத்துல்லியமாக விளக்கிக் காட்டுகிறார்.

நீத்தார் என்பவர் தனியராக வாழ்கிற தனித்தன்மை உள்ளவர். உலகுடன் வாழ்ந்தாலும் ஒன்றி விடாத பற்றற்ற நிலையில் வாழ்கிறவர்.

அறன் என்பவர் துணையோடு உறவாடி, இல்லறத்தில் ஈடுபட்டும், இல்லறம் காக்கப் பாடுபட்டும் வாழ்கிற இல்லறன்.

நீத்தார் துறவறன் என்றால், இணையற்ற இல்லற வாழ்வில் ஈடுபடுபவன் **இல்லறன்** ஆகிறான்.

அந்த இல்லறன் நல்லறன் ஆக வாழ்வது எப்படி என்ற அற்புத வழிகளைத்தான் அருமையாகப் பாடியிருக்கிறார் வள்ளுவர்.

நீத்தார் போல வாழ்வது எல்லோராலும் முடியாது. அதனால் அவர் காட்டுகிற அறவழியில் சென்று அறனாக வாழலாம் அல்லவா?

இங்கே வள்ளுவர் காட்டுகிற அறவழி என்பது, வாழ்வுக்குரிய தேவைகளை எல்லாம் தேடிக் கொள்ளுங்கள். ஆனால், தேவைகளுக்குள்ளேயே சங்கமமாகி சாய்ந்து விடாதீர்கள். தேய்ந்து போகாதீர்கள் என்பதுதான்.

பற்றில்லாத மனம் கொள்ளுங்கள். பற்றற்ற நிலை தொடர்ந்து வரும். ஆகவே அறம் காக்கும் அறனாக வாழுங்கள் என்று வழி காட்டிவிடுகிறார் வள்ளுவர். வலியுறுத்தி இங்கே நெறிப்படுத்துகிறார்.

31. சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தின் ஊங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு

பொருள் விளக்கம்:

அறத்தின் = இல்லற வாழ்வில் வேண்டியனவற்றில் அதிகம் பற்றில்லாது

ஊங்கு = உரிய அறவழியில் மிகுதியான மேம்பாடுடைய தன்மையில்; ஆக்கம் = வாழ்க்கையை வாழ்கிறவனாகிய அறன்

எவனோ = எவனாக இருந்தாலும்.

உயிர்க்கு = அவன் உயிர்க்கும் (உடலுக்கும்)

சிறப்பு ஈனும் = மேன்மையை மிகுதியாக வழங்கி

செல்வமும் ஈனும் = உடலுக்குச் செழிப்பையும் அழகையும், நுகர்ச்சியில் வாழ்க்கை இன்பத்தையும் கொடுக்கும்

சொல் விளக்கம்:

செல்வம் = செழிப்பு, அழகு, நுகர்ச்சி வாழ்க்கை, இன்பம்

சிறப்பு = உயர்ச்சி, தலைமை, மதிப்பு, மிகுதி (இன்பத்தின் மேன்மை மிகுதி); **ஊங்கு** = உயர்ச்சி, மிகுதி, மேம்பாடு

ஆக்கம் = பெருக்கம், எழுச்சி, செல்வம்.

முற்கால உரை:

வீடுபேற்றையும் தரும்; துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும்; ஆதலால், உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

தற்கால உரை:

சிறந்த புகழைத் தருவதும், நிறைந்த பொருளைத் தருவதும் அறமேயாகும். ஆதலால் இந்த அறத்தைக்காட்டிலும் உயிர்க்கு நலம் செய்வது வேறொன்றுமில்லை.

புதிய உரை:

இல்வாழ்வில் அதிகம் பற்றில்லாது அறவழியில் மிகுதியான மேம்பாடுடையவர், உயிர்க்கும் உடலுக்கும் மேன்மையும் அழகும் பெற்று இன்ப வாழ்வில் இணைந்து வாழ்வர்.

விளக்கம்:

வாழ்வின் தேவைகளுக்காகப், பற்றுமிகாமல் பற்றில்லாப் பாங்கான அறவழியில் மேம்பாடு கொண்டு வாழ்கிறவன் எவனாக இருந்தாலும், அவனது உயிர்க்கு மேன்மை மிகுதியாகக் கிடைக்கும். (அதாவது வாழ்நாள் பெருகும்) உடலுக்கு செழிப்பும் அழகும் ஐம்புல நுகர்ச்சியில் நுண்மையும் இன்பமும் கிடைக்கும்.

நல்ல வாழ்வானது நல்ல உடலையும் நல்ல நோயற்ற வாழ்வையும் தந்து, நோயற்ற செல்வத்தையும், நிறைவுற்ற செழிப்பான வாழ்க்கையையும் வழங்குகிறது. அதுவே அறன் பெருகிற சிறப்பாக அமைந்து விடுகிறது.

செல்வம் (பணம்) வந்து விடுவதால் மட்டும் ஒருவர் வாழ்வில் செழிப்பு வந்து சேர்ந்து விடுவதில்லை. நோயற்ற உடலும் வாழ்வும்தான் நிறைவான செல்வமாகும்.

32. அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்குஇல்லை கேடு

பொருள் விளக்கம்:

மறத்தின் ஊங்கு = அறம் நீங்கிய தீயவற்றின் மிகுதியால்
ஆக்கம் இல்லை = வருகிற (செல்வத்தால், எழுச்சியால்) சிறப்பு எதுவும் இல்லை.
அதனை = அதிகரிக்கின்ற
அறத்தின் ஊங்கு = அறச் செயல்களின் மிகுதியால்
கேடு இல்லை = கெடுதல் எதுவும் நேர்வதுமில்லை

சொல் விளக்கம்:

அதனை = அதிகமாக; **ஊங்கு** = உயர்ச்சி, மிகுதி, மேம்பாடு, மிகவும்; **கேடு** = அழிவு, வறுமை, மரணம், சிதைவு, இழிவு

முற்கால உரை:

ஒருவனுக்கு அறம் செய்தலின் மேம்பட்ட ஆக்கமும் இல்லை; அதனை மயக்கத்தான் மறத்தலின் மேம்பட்ட கேடும் இல்லை.

தற்கால உரை:

அறம்செய்தலினும் ஒருவனுக்கு நன்மையாவது எதுவும் இல்லை. அதுபோல், அவ்வறத்தை மறத்தலினும்கேடாவது எதுவும் இல்லை.

புதிய உரை:

அறம் நீங்கிய தீய செயலால், சிறப்பில்லை; அதிகரிக்கின்ற அறச்செயல்களால் நன்மை அதிகமாவதால் கெடுதி எதுவும் இல்லை.

விளக்கம்:

மறம் செய்வதால் வாழ்வுக்கு வளமும் வராது, நலமும் தராது. அதுபோலவே அறம் செய்வதால் வாழ்வுக்கு எந்தக் கேடும் வராது. பாடும் நேராது.

வள்ளுவர் இந்தக் கருத்தை நேரடியாகச் சொல்லாமல் மறை மொழியாக நிறை வழியில் நவின்றிருக்கிறார். அறம் செய்வதால், அறவழி நடப்பதால் உடலுக்குக் கேடு இல்லை. வாழ்வுக்குப் பாடு இல்லை. அதனால் அதற்கு ஈடு இல்லை.

மறம் செய்வதால் ஆக்கம் வரும். ஏக்கம் தீரும். வாழ்வு உயர்ச்சி கொள்வது போலத் தோன்றும். ஆனால் அவை எல்லாம் வந்தாலும் அது ஆக்கம் அல்ல. உடலால் கேடு அடைவர். உணர்வால் பீடு அழிவர். வாழ்க்கையிலும் வீடு பெற மாட்டார்.

2வது குறளில் அறன் எதையும் எதிர்பாராமல் அறவழியில் வாழ்வை நடத்த வேண்டும். அந்த வேட்கையுடன் செயல்களைச் செலுத்த வேண்டும். உடலை வலுப்படுத்தி வாழ வேண்டும் என்று கூறுகிறார்.

33. ஒல்லும் வகையான் அறவினை ஒவாதே செல்லும்வாய் எல்லாம் செயல்

பொருள் விளக்கம்:

ஒல்லும் = (உடலும் உள்ளமும்) பொருந்துகிற, உடன்படுகிற
வகையால் = (காரண காரியம் உணர்ந்த) வழி வகையால்
அறவினை = அறக்காரியங்களை ஆற்றுக
செல்லும் வாய் எல்லாம் = உள்ளம் அலைக்கழிக்கிற வழியில் எல்லாம்;
செயல் = செய்கின்ற செயல்களில் ஈடுபட
ஒவாதே = இசையாதே (வருந்தாதே)

சொல் விளக்கம்:

ஒல்லு = பொருந்துதல், இணங்குதல், உடன்படுதல், நிறைவேற்றுதல்; **ஒவுதல்** = இசைதல், வருந்துதல்.

முற்கால உரை:

தத்தமக்கு இயலுந் தரத்தான் அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்தும் இடத்தானெல்லாம் செய்க.

தற்கால உரை:

பொருந்தும் வகையால் அறச் செயல்களை இடைவிடாமல் முடியும் இடங்களிலெல்லாம் செய்தல் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

புதிய உரை:

உடல் உள்ளம் பொருந்தும், வழிவகையால் அறம் செய்க. உள்ளம் அலைக்கழியும் வழிகளில் செல்லாதே.

விளக்கம்:

உள்ளத்தால் ஒத்து, உடலால் ஒட்டி, உள்ளத்தால் ஒன்றிப் போய் நல்வினைகளைச் செயக. ஐம்புல ஆதிக்கத்தால் அலைகிற உள்ளம் செல்லுகிற வழியில் செயல்பட இசைந்து விடாதே.

அதனால் உடல் நலக்கேட்டையும் வாழ்வின் மகிழ்யையும் இழந்து வருந்தாதே என்று அறனுக்கு அறிவுரை பகர்கிறார் வள்ளுவர்.

பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்வது இயற்கை. கள்ளத்தை நோக்கி உள்ளம் சாய்வது மனித இயற்கை. ஆகவேதான், உள்ளம் வழி போவதற்கு முன், காரண காரிய வகைகளை ஆராய்ந்து நல வாழ்வுக்குப் பொருந்துகிற நல்வினையையாற்று என்று வலியுறுத்துவது வள்ளுவர் மாண்பு.

செய்த காரியம் சிறிது நேரம் இருந்து, பலனைத் தந்து போவதற்குச் செயல் என்று பெயர். செய்த காரியம் அன்றிலிருந்து தொடர்ந்து ஏதாவது ஒரு பயனைத் தந்து கொண்டே தொடரும். அதற்கு வினை என்று பெயர். அதனால்தான் வினையானது நல்வினை தீவினை என்று பிரிந்தது. தீமையே தொடர்ந்தால் அதை ஊழ்வினை என்றும் பாழ்வினை என்றும் நொந்து கொள்ளவும் வைத்து விடுகிறது. நல்ல முடிவையே நல்கி வருவது நல்வினையாகிறது.

34. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற

பொருள் விளக்கம்:

மனத்து = உள்ளத்தாலும்; கண் = உடம்பாலும்

மாசிலன் ஆதல் = கறைபடாமல் (குற்றம் இழைக்காமல்) வாழ வேண்டும்

அனைத்தறன் = (அப்படி வாழாதவர்க்கு) அவர் ஆற்றும் அறச் செயல்கள் கூட

ஆகுல = மாறுபாடுற்று துன்பம் விளைவிக்கின்ற
பிறநீர = பின்னாள் முழுவதும் வருந்தும் குணமுடையவனவாக மாற்றிவிடும்.

சொல் விளக்கம்:

ஆகுலம் = துன்பம், **மாறுபாடு** = ஆரவாரம்;
நீர = குணத்தை உடையன; **பிற** = பின்பு.

முற்கால உரை:

அவ்வாற்றின் அறஞ்செய்வான் தன்மனத்தின் கண் குற்ற முடையவன் அல்லனாக! அவ்வளவே அறமாவது! அஃதொழிந்த சொல்லும், வேடமும் அறமெனப்படா! ஆரவார நீர்மைய!

தற்கால உரை:

மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆகுதலே எல்லா அறங்களுக்கும் மூலமாகும். மற்றவை ஆரவாரப் பகட்டுகளேயாம்.

புதிய உரை:

உள்ளத்தாலும் உடலாலும் குறைபாடின்றி வாழ்க. இன்றேல், அவர் ஆற்றும் அறச்செயல்கூடத் துன்பம் விளைவிக்கும் குணமிலியாக அவனை மாற்றிவிடும்.

விளக்கம்:

உள்ளம்தான், உலகியலில் அவாவி, உணர்ச்சி வசப்பட்டு உடலை ஆட்டுவிக்கிறது. ஆகவே, உடல் மாசும் மன மாசும் சேர்ந்து விடாமல் 'அறன்' பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மாசு (கறை) பட்டு விட்டால் செய்கிற அறச்செயல்கள் கூட, பின்னாளில் பெருந்துன்பம் விளைத்து விடும் என்று எச்சரிக்கிறார் வள்ளுவர்.

ஆகுல என்பது ஆரவாரம் என்னும் பொருளுடன், மாறுபாடு துன்பம் என்று சிறந்த பொருளையும் கொண்டிருக்கிறது

நீர என்றால் குணமுடையது; பிற என்றால் மற்றவை என்றும் பிறகு என்றும் பொருள் உண்டு.

இந்தக் குறளில், மனம் பொருந்துகிற வினைகள் செய்தாலும் அந்த மனத்திலே மாசுபடாமல் பார்த்துக் கொள்வது அறனின் தலையாய கடமை என்று வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

நல்ல உடல் - நல்ல மனம் - நல்ல வாழ்வு என்னும் நலமான கொள்கையைத்தான் வள்ளுவர் இந்தக் குறளில் வலியுறுத்துகிறார்.

35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்

பொருள் விளக்கம்:

அழுக்காறு = அழுக்காகிய ஆறு
அவா = ஆசைப் பெருக்கம்
வெகுளி = வெகுண்டெழும் வீராவேசம்
இன்னாச்சொல் = இனிமையற்ற கொடுமையான சொல்
நான்கும் = (உடலும் மனமும் ஏற்படுத்துகிற) இந்த நான்கையும்
இழுக்கா = (தவிர்த்து) என்றும் மறக்காமல்
இயன்றது = ஒழுக்கத்துடன் தொடர்கிற செயல்களே
அறம் = நல்வினை என்று அழைக்கப்படுகிறது

சொல் விளக்கம்:

அழுக்கு = கவலை; **அவா** = ஆசைப் பெருக்கம்
இழுக்காமை = மறவாமை

முற்கால உரை:

பிறராக்கம் பொறாமையும், புலன்கண்மேற் செல்கின்ற அவாவும், அது ஏதுவாகப் பிறப்பால் வரும் வெகுளியும், அதுபற்றிவரும் கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையும் கடிந்து, இடையறாது நடப்பது - அறமாவது.

தற்கால உரை:

பொறாமை, ஆசை, சீற்றம், கடும்சொல் என்னும் தீய தன்மைகள் நான்கையும் விட்டு நீங்கி நடப்பதே அறமாகும்.

புதிய உரை:

அழுக்காகிய ஆறு, ஆசையாகிய பெருக்கம், வெகுண்டெழுதல், இனிமையற்றசொல் இந்நான்கையும் தவிர்த்து ஒழுக்கத்துடனே செய்கின்ற செய்கையே நல்வினையாகும்.

விளக்கம்:

மனத்தின் மாசு என்ன? என்னும் முன் குறளுக்கு, விளக்கமாக இந்தக் குறள் அமைந்திருக்கிறது. மனத்திலே குறையாகத் தோன்றி கறையாக வளர்ந்து, களங்கமாகத் தென்பட்டு, ஆறு போல ஓடுகிற அழுக்கைத்தான் அழுக்காறு என்றார்.

அழுக்குபட்ட மனம் அவாவுகிற பேய்த்தனம் ஆகிறது. அவாவியது கிடைக்காதபோது வெகுண்டு வீறுகொள்கிறது.

வீறுகொண்ட மனத்திலிருந்து விழுகின்ற சொற்களும் இனிமை இழந்து, இன்னாதவையாக மாறுகின்றன. இன்னாதவையாக மாறுகின்றன என்று மனத்துக்கண் மாசு என்ற வார்த்தைக்குரிய விளக்கமாக விரித்திருக்கிறார் வள்ளுவர்.

மனத்தில் ஏற்படும் அழுக்கும், அவாவும்தன்மையும் மன்த்தின்குணம். வெகுளியும் இன்னாச்சொல்லும் உடம்பின்குணம் என்று தெள்ளத்தெளிவாக வள்ளுவர் காட்டியிருக்கிறார்.

36. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது பொன்றுங்கால் பொன்றாத் துணை

பொருள் விளக்கம்:

அன்று அறிவாம் = (தேவைப்படுகிற) அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்பதே

என்னாது = நிதம் நடத்துகிற உடல்காக்கும் நற் செயல்களை அறிவில்லாமல் பொருட்படுத்தாமல் இருப்பதைத் தவிர்த்து.

அறம் செய்க = நலம் வளர்க்கும் செயல்களைச் செய்க

மற்றது = அப்படித் தொடர்ந்து செய்கிறபோது

பொன்றுங்கால் = உடல்நலம் (மனம்) குறைகிறபோது

பொன்ற = அழியா ; துணை = உதவி செய்து காக்கும்

சொல் விளக்கம்:

பொன்றல் = குறைதல், அழிதல், சாதல்

பொன்றாத = குறையாத, அழியாத, சாகாத

என்னாது = அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாது ஆலோசனையில்லாது எதையும் பொருட்படுத்தாமை.

முற்கால உரை:

யாம் இப்பொழுது இளையமாகலின் இறக்குஞான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடொறுஞ் செய்க. அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர்போங் காலத்து அதற்கு அழிவில்லாத துணையாகும்.

தற்கால உரை:

பின்னே செய்யலாம் என்று காலம் கழிக்காமல், உடனே அறம் செய்தல் வேண்டும். ஏனெனில், அவ்வறமே இறக்கும் பொழுதும் துறவாத் துணையாக நிற்கும்.

புதிய உரை:

அப்போது பார்த்துக் கொள்ளலாம் என அறிவில்லாமல் இருப்பதைத் தவிர்த்து நலம் வளர் செயல்களை நாளும் செய்க! அப்படிச் செய்தால், உடல் நலம் குறையும் போதும் உதவும்.

விளக்கம் :

உடலில் சத்தும், உள்ளத்தில் வித்தும், உடல் மனத்தில் சொத்துமாக வளர்க்கும் நலப் பணிகளை, அறச் செயல்களை இன்றே செய்க. நாளை என்பதைத் தவிர்க்க. மதியின்றி ஒழுகற்க. அத்தகைய நினைவுடன் நிதமும் அறநலச் செயல்களை, ஆற்றுகிறபோது, உடல் எழுச்சியுடன் மனம் புத்துணர்ச்சியுடன் வாழும். சத்து குறைகிறபோதும் அவை முத்தாய்ப்பாக உதவும். சத்து அழிவதைத்தான் செத்து அழிவது என்கின்றனர்.

இந்தக் குறளில், மன மாசுகளை உடல் ஆசுகளை அண்டவிடாமல் முயற்சிக்கிற அறனுக்கு, உடல் இளைத்து வளம் குறையும் நேரத்திலும், நிறைவாக இருந்து வாழ்விக்கும் என்னும் உண்மையை உணர்த்துகிறார்.

இன்றே செய்க. நன்றே செய்க. உடல் நலப் பணி காக்கும் உணர்வான ஒன்றே செய்க. இது வள்ளுவர் காட்டும் (Positive Thinking) முனைப்பு முயற்சி முறை வாழ்வியலாகும்.

37. அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

பொருள் விளக்கம்:

சிவிகை = இந்த வையத்தை
பொறுத்தானொடு = பொறுமை பூண்டு
ஊர்ந்தான் = நடத்தமேற்படுகிற (தலைவனுக்கு அல்லது அரசனுக்கு)
வேண்டா இடை = வேண்டாத இடையீடுகளும் துன்பங்களும் ஏற்படுவது போலவே
அறத்தாறு இது என் = அறத்தின் வழியும் இப்படித்தான் அமையும்

சொல் விளக்கம்:

சிவிகை = பல்லக்கு என்பதற்குப் பதிலாக வையம் என்றும், பொறுத்தான் என்பதற்கு பொறுமையுடையவன் என்றும், ஊர்ந்தான் என்பதற்கு நடத்துகிறவன் என்றும், இடை என்றால் துன்பம் என்றும் புதிய பொருள் கூறியிருக்கிறோம்.

சிவிகை = பல்லக்கு, வையம்
பொறுத்தான் = பொறுமை, தோன்றல்
ஊர்தல் = நடத்துதல் மேம்படுதல்
இடை = இடையீடு, துன்பம், காரணம்

முற்கால உரை:

அறத்தின் பயன் அதுவென்று யாம் ஆகம அளவை யான் உணர்தல் வேண்டா. சிவிகையைக்காவுவானோடு செலுத்து வானிடைக் காட்சியளவை தன்னாலே உணரப்படும்.

தற்கால உரை:

ப்ல்லக்கைச் சுமந்து செல்பவனுக்கும், அதன்மேல் அமர்ந்து செல்பவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடு, அறத்தின் பயன் என எண்ணவேண்டா. (அது பொருள் செல்வத்தால் ஏற்பட்டதாகும்)

புதிய உரை:

இவ்வுலகைப் பொறுமையுடன் நடத்துகிற தலைவனுக்கு இடையூறுகளும், துயரங்களும் ஏற்படுவது போலவே, அறம் செய்பவனுக்கும் உண்டாகும். ஆயினும் அறம் செய்க.

விளக்கம்:

வையத்துக்குத் தலைமை ஏற்று வழி நடத்த, பொறுமையும் திறமையும் கொண்டு முயற்சிக்கிற ஒருவனுக்கு, வேண்டாத இடையூறுகளும் துன்பங்களும் ஏற்படும். அதற்காக அவன் தன் முயற்சியில் தளர்ந்து போவதில்லை.

அதுபோலவே, அறவினைகளில் தொடர்ந்து வாழ்கிறபோது, வேண்டாத பல இடையீடுகள், தடைகள் வந்துசேரும். அவற்றைப் பொறுமையோடும் திறமையோடும் தாங்கிக் கொண்டு தளர்வில்லாமல் அறங்களைத் தொடர்ந்தாற்ற வேண்டும். அறங்கள்தாம் ஒழுக்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்தக் குறளில் உடல், மனம் இவற்றை வென்று அறவினையை மேற்கொள்ளும் அறனுக்கு, சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலும் இருந்து தடை வரும் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார். வையத்தைக் காத்து வழி நடத்துபவர் போல, தன் மெய்யகத்தைக் காத்து மேம்பட வேண்டும். இதுவே புகழுக்கான வழியாகும்.

38. வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழிஅடைக்கும் கல்

பொருள் விளக்கம்

நன்றாற்றின் = நலச் செயல்களான அறம் ஆற்றினால்

வீழ் = விழுதுபோல; நாள் = இளமையானது

படாம் = போர்வை போல; மெய் = உடலில் பூத்திருக்கும்

அஃதொருவன் = அவ்வாறு தினம் அறமாற்றுகிற அறனின்

வாழ்நாள் = வாழ்வின் ஆயுளானது; வாழ்வை

வழி அடைக்கும் = (வாழ்கிற காலத்தைப்) பாதுகாக்கும்

கல் = கல்வியாகவும் விளங்கும்

சொல் விளக்கம்:

வீழ்நாள் என்பது = விழுது; நாள் என்பது இளமை, புதுமை, ஆயுள்.

படாம் + மெய் = என்பது படாமை ஆயிற்று. அதாவது மெய்யின் போர்வை ஆயிற்று.

வாழ்நாள் =என்பது வாழ்வின் ஆயுள் காலம் என்று கொள்ளலாம்.

அடைக்கும் = என்பது காக்கும் என்றும்; கல் என்பது கல்வி என்றும் பயிலுகிற பயிற்சி என்றும் அர்த்தம்.

நல்லதைப் = பெறுகிற உடலில் இளமையும், புதுமையும் ஆயுள் பெருக்கமும் நிறைந்து வரும் என்று இந்தக் குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

நாள் = ஆயுள், புதுமை, இளமை; **படாம்** = திரைச்சீலை

அடை = காட்டிச் செய்; பண்பு **கல்** = கல்வி, பயிலுதல்.

முற்கால உரை:

செய்யாது கழியும் நாள் உளவாகாமல், ஒருவன் அறத்தைச் செய்யுமாயின் அச்செயல் அவன் யாக்கையோடு கூடும் நாள் வரும் வழியை வாராமல் அடைக்கும் கல்லாம்.

தற்கால உரை:

வீணாகக் கழியும் நாள் ஆகாமல், ஒருவன் நல்ல அறச்செயல்களைச் செய்தால் அது அவன் வாழ்நாளில் வரும் (பயனற்ற) வழிகளை அடைக்கும் தடைக்கல் ஆகும்.

புதிய உரை:

நலச் செயல்களாற்றினால், விழுதுபோல இளமை வேரூன்றிப் போர்வைபோல போர்த்திருக்கும். அவ்வாறு அறம் ஆற்றும் அறனின் ஆயுள் தன்னைப் பாதுகாக்கும் கல்வியாக அது விளங்கும்.

விளக்கம்:

நல்லனவற்றைச் செய்து வருகிறபொழுது, மெய்யில் இளமை, புதுமையான போர்வையாகப் பூத்திருப்பதுடன், அந்த அறனின் வாழ்வாயுளும் அதன் வழியும் திடத்தால் காக்கப்பெறும். அதுவே வாழ்வியல் கல்வியாகவும் விளங்கும்.

39. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல

பொருள் விளக்கம்:

அறத்தான் = காக்கும் நற் செயல்களினால்
வருவதே = பெறப்படுவது தான்
இன்பம் = சுகமாகிய அகமகிழ்ச்சியும் நுகர்வுணர்ச்சியுமாகும்.
மற்றெல்லாம் = (உடல் கெடுக்கும்) மற்ற செயல்கள் எல்லாம்
புறத்த புகழும் இல = (புறம்பானவை) தருகிற வெற்றி, துதி மேம்பாடுகள் எல்லாம் பயனில்லாதவையாகும்.

சொல் விளக்கம்:

இன்பம் = அகமகிழ்ச்சி, சுகம் (உணர்வு)
புறத்த = புறம்பான; புகழ் = துதி, வாகை, மேம்பாடு

முறகால உரை:

இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமுடையது. அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம், இன்பமாயினும் துன்பத்தினிடத்த. அதுவுமேயன்றிப் புகழும் உடையவல்ல.

தற்கால உரை:

அறவழியால் வரும் இன்பமே இன்பம். மற்ற வழியால் வருவன துன்பம். மேலும் புகழும் இல்லாதனவுமாம்.

புதிய உரை:

நற்செயல்களால் பெறப்படுவதே சுகம். மற்ற செயல்கள் எல்லாம் பயனற்றவை.

விளக்கம்:

சுகம் என்பது அகத்திற்கும் புறத்திற்கும் பொருந்தும். நலிவுற்ற உடலில் பொலிவான இன்பம் பிறப்பதில்லை. அலை மோதுகிற மனத்தில் களி பொருந்திய களிப்பும் கிடைப்பதில்லை. உடலைக்

கெடுக்கும் காரியங்களால் இன்பம் கிடைப்பது போல் தோன்றும். அது விரைவில் அழிவதோடு உடலையும் அழித்து விடும். மனமும் பிறகு பழித்து விடும்.

இந்தக் குறளில் அறன் பெற வேண்டிய இன்பம் நல்வினைகளால்தான், தீவினைகளால் அல்ல. தீயவை மயக்கும். மருட்டும். மயக்கத்தையே மகிழ்ச்சி என்றும், புகழ்ச்சி என்றும் சூடேற்றும். ஆனால் அந்தச் சூடே அந்த மனிதனைச் சுவடு தெரியாமல் அழித்து விடும் என்கிறார் வள்ளுவர்.

40. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும் பழி

பொருள் விளக்கம்:

ஒருவற்கு = உலகில் வாழும் ஒரு மனிதர்க்கு

செயல் = ஒழுக்கமான காரியங்களில்

பாலது = பற்று வைத்து

ஓரும் = ஆராய்ந்தறிந்து தெளிந்து நடக்கும்போது

அறனே = அறத்தில் சிறந்தவர் என்று (அறன்) புகழ் பெறுவர்.

உயர் = உயிர் வாழ்வதற்காக மற்ற துன்பங்களிலிருந்து தப்பிக்க

பாலது = ஆசைப்படுகிற

ஓரும் = (தீயதான) அறிவைச் சிந்தித்தால்

பழி = வாழ்வில் குற்றமும் இகழ்ச்சியும் பொல்லாங்கும் நேர்ந்து விடும்.

சொல் விளக்கம்:

உயல் = உயிர் வாழ்தல்; **உய்தல்** = தப்பித்தல்

ஓர்தல் = ஆராய்ந்தறிதல் தெளிதல்

செயல் = ஒழுக்கம் காரியம்

பாலது = பற்று, பழி, குற்றம், பொல்லாங்கு, இகழ்ச்சி.

முற்கால உரை:

ஒருவற்குச் செய்தற் பான்மையது நல் வினையே; ஒழிதற் பான்மையது தீவினையே.

தற்கால உரை:

ஒருவன் செய்யத்தக்கவை அறச் செயல்களே. அவ்வாறே அவன் செய்யாமல் விடத்தக்கவை பழிச்செயல்களே.

புதிய உரை:

உலகில் வாழும் மனிதர் ஒழுக்கமான காரியங்களில் பற்று வைத்து நடக்க வேண்டும். அதுவே புகழ்தரும். உயிர் வாழ்விற்காக மற்ற துன்பங்களிலிருந்து தப்பிக்க விரும்புபவர், குற்றம், இகழ்ச்சி, பொல்லாங்கில் அகப்படுவர்.

விளக்கம்:

அறன் சிறப்பு பற்றிய அதிகாரத்தில் இது பத்தாவது பாடல். ஒழுக்கத்தில் பற்று வைத்து தெளிந்த அறிவுடன் சிறந்து வாழ்பவர் அறன் என்று பெருமைப்பட அழைக்கப்படுகிறார். அதனால் தான் அறனே என்று ஏகாரமிட்டு புகழ்ந்து அழைக்கிறார் வள்ளுவர்.

உயிர் வாழ்வதற்காக அறச் செயல்களிலிருந்து தவறி, மறங்கள் செய்து, அவற்றிலிருந்து விடுபட தனது மதியை பயன்படுத்தினால், கிடைப்பது கேடும் அவமானமும்தான்.

ஆக, அறன் என்பது எந்தச் சூழ்நிலையிலும் உடல்காக்கும் நல்லற காரியங்களிலிருந்து நழுவி விடக்கூடாது என்று நயம்பட விளக்குகிறார்.

2. இல்லறவியல்

திருக்குறளுக்கு முகவுரையாக அமைந்தது பாயிரவியல். எனப்பட்டது. நாம் இங்கே வாழ்தியல் எனக் கூறியுள்ளோம். அந்த நான்கு அதிகாரங்களில், தனது குறள் பாக்களில் தொகுத்துக் கூற வருகிற கொள்கைகளுக்கு, முன்விளக்கமாக, வழிகாட்டுதல்களாக, 40 குறள்களை வள்ளுவர் கொடுத்துள்ளார்.

முதல் அதிகாரத்தில் உலகுக்கு ஒளியாக உயிர் தந்த பகவன். மக்களுக்கு ஒளியாக வழியாக வாழ்வளிக்கின்ற மோன குரு பற்றி கூறப்பட்டிருந்தது.

இரண்டாம் அதிகாரத்தில். மக்களின் அகமும் புறமும் செழிக்க, உயிர்களின் பிறப்புக்கு உயிர் நாடியாக உதவுகின்ற மாமழை பற்றிக் குறிக்கப்பட்டிருந்தது.

மூன்றாம் அதிகாரத்தில், உலக இச்சைகளைத் துறந்து நீற்றாராகவும் நீத்தாராகவும் தனித்து வாழ்கின்ற மாண்புமிகு **துறவியர்** பற்றிப் புகழப்பட்டிருந்தது.

நான்காம் அதிகாரத்தில்: மக்களோடு கலந்து வாழ்கிறபோதும் அறநெறி காத்து, தனது உடல்நலம், மன வளம், பலம் குன்றாமல் கடமையாற்றுகிற அறன் பற்றியும் விளக்கப் பட்டிருந்தது.

ஒரு மனிதரின் முதல் நிலை **அறன்.**
இரண்டாம் நிலை **நீத்தார்.**
மூன்றாம் நிலை **மோனகுரு.**

இம் மூவரும், வாழ்கிற மக்கள் இனத்துக்கு வழிகாட்டி களாவர். முதலாவதாக, இல்லற மாந்தரின் இனிய வாழ்க்கை முறைகளை வாழ்க்கை நெறிகளை வகுத்துத் தொகுத்துத் தந்திருக்கிறார்.

முதலில் **இல்லறவியல்.**
தொடர்ந்து வருவது **துறவறவியல்.**
மூன்றாவது **ஊழியல்.**

இதம் தரும், வீடு என்பதே இல்லாகிறது. அது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் நடமாடுகிற இதம். மூன்றும் இடம் தருகிற சுகம். சுகத்தின் மறுபெயர் தான் வீடு.

வாகையுடன், ஒழுக்கமாகிய கையுடன் வாழ்வது வாழ்க்கை. அப்படிப்பட்ட இல் வாழ்க்கையை ஐந்தாம் அதிகாரமாக அற்புதமாக வைத்துள்ளார் வள்ளுவர்.

5. இல்வாழ்க்கை

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை

பொருள் விளக்கம்:

இயல்புடைய = ஒழுக்கமும் நற்குணமும் பலமும் தரக்கூடிய
மூவர்க்கும் = உடல், மனம், ஆத்மா (உயிர்) ஆகிய மூன்றுக்கும்.
நல்லாற்றின் = நல்ல வழிகளில்
நின்ற துணை = நிலை பெற்ற துணையாக்கி
இல்வாழ்வான் = வீட்டில் வாழ்கிற அறன் ஆனவன்
என்பான் = (எண்ணி) நிலைபெற வாழ்கிறான்

சொல் விளக்கம்:

இயல்பு = ஒழுக்கம் நற்பண்பு; மூவர்: உடல், மனம், ஆத்மா;
இயல்பு = ஒழுக்கம், பலம், நற்குணம்.

முற்கால உரை:

பிரமச்சாரி, வானப்ரஸ்தன், சந்நியாசி இம் மூவர்க்கும் இல்லறத்தில் வாழ்வான் துணையாவான்.

தற்கால உரை:

பெற்றோர்கள், மனைவி, பெற்றெடுத்த மக்கள் இம் மூவருக்கும் இல்லறத்தில் வாழ்வான் துணையாயிருப்பான்.

புதிய உரை:

உடல், மனம், ஆத்மா (உயிர்) இம் மூன்றையும் நல்லொழுக்கால் காத்துச் செயல்படும்போதுதான் அறன் இல்வாழ்வான் என்ற சிறப்பைப் பெறுகிறான்.

விளக்கம்:

இல்வாழ்வான் என்கிற மனிதன், அறனாக ஆக வேண்டும். நலத்தோடும் வளத்தோடும், பலத்தோடும் இருந்தால்தான் வாழ்கிறவன் என்று அர்த்தம். நலிவுற்று, பொலிவற்று நோய் பெற்று வாழ்கிறவன் **வாழ்கிறவன்** அல்லன். **வதிகிறவன், அழிகிறவன்.** அதனால் தான் வாழ்வான் என்றார். அதாவது முக்காலத்திலும் வாழ்வான் என்றார்.

அப்படிப்பட்ட வாழ்வுக்கு அடித்தளமாக இருப்பது அவனது உடல். மனம், ஆத்மா இம்மூன்றும் ஒழுக்கத்தில் ஒழுகி வந்தால்.

அவன் வாழ்கிறவன். இல்லையேல் அவன் உயிர் இருந்தும் தாழ்கிறான்; வீழ்கிறான்.

இந்த மூன்றும் நல்ல வழிகளில் செலுத்தும் துணையாக இருக்கும்போது தான் இல்வாழ்வான் என்பவன் எல்லோருக்கும். தெரிகிறான்.

இனிது செயல்படும் இந்த மூவர்க்கும் அறன் நல்ல துணையாகிறான். அறனுக்கு அந்த மூன்றும் அரிய துணையாகிறது என்பது வள்ளுவர் கருத்து.

மூவர் என்ற பெருமை கருதி மூன்று என்பதை முதல் குறளில் அறன் வளத்தோடு இருக்க வேண்டிய முறை காட்டப்பட்டது.

மூவர்க்கும் எனும் இடத்தில்தான் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றார்கள்.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை

பொருள் விளக்கம்:

துறந்தார்க்கும் = உலக வாழ்வைத் துறந்து உலகுக்கு வழிகாட்டுவார்க்கும்

துவ்வாதவர்க்கும் = உலகில் இருந்தும் ஐம்புல நுகர்ச்சியில் வலிவற்று பலமிழந்தார்க்கும்

இறந்தார்க்கும் = வாழ்வில் இனி தேற முடியாது என்னும் அளவில் வீழ்ச்சி அடைந்தவர்க்கும்.

இல்வாழ்வான் என்பான் = வீட்டிலே வளமுடன் வாழ்கிற அறன்

துணை = உற்ற துணையாக இருந்து காக்கிறான்.

சொல் விளக்கம்:

துவ்வ = ஐம்பொறியால் நுகர, அனுபவிக்க

இறந்தவர் = அழிந்தவர், வாழ்க்கையில் வீழ்ந்தவர்.

முற்கால உரை:

ஆதாரமானவராலே விடப்பட்டோர்க்கும். வறுமைப் பட்டவர்க்கும், இறந்தவர்க்குப் பிதிருக்கடன் முதலியன செய்து நற்கதி அடைவித்தலாலும் இல் வாழ்வான் துணையென்றார்.

தற்கால உரை:

துறவியர்க்கும் வறியவருக்கும் முதியோருக்கும் இல்வாழ்வை நடத்துகிறவன் துணையாவான்.

புதிய உரை:

ஐம்பொறி அடக்கத்தால் உயர்ந்தவர்கள், ஐம்பொறி ஆட்சியால் வறுமையாளர்கள், ஐம்பொறியால் அழிந்தவர்கள் அனைவரையும் துணையாக இருந்து காக்கும் ஆற்றலாளன் இல்வாழ்வான் ஆகிறான்.

விளக்கம்:

இந்தக் குறளில் தம்முடன் வாழ்கிற மக்களுக்கு உதவ வேண்டுமானால், அவன் தகுதி உள்ளவனாக இருந்தால் தான் இயலும் என்ற உடல்நலப் பெருமை சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஐம்பொறி அடக்கத்தால் உயர்ந்தவர்கள் துறவிகள்.
ஐம்பொறி ஆட்சியால் அவலமானவர்கள் துவ்வார்கள்.
ஐம்பொறி வீழ்ச்சியால் நோயால் அழிந்தவர்கள்; நலிந்தவர்கள்.
இம்மூவரையும் காக்கிறபோதுதான் சமுதாய வாழ்வு சக்திதரும் வாழ்வாகும். அவர்களில் ஒரு சாரார் பட்டாலும், சமுதாய வாழ்வு சீர்கேடாகி விடுகிறது.

இந்தச் சீர்கேட்டினைச் சிதைத்து, சீரான வாழ்க்கைக்குத் துணையாக வாழ்ந்து உதவி, உயர்வு பெற வேண்டும். அதுவே இல் வாழ்வானின் தகுதி,சிறப்பு என்கிறார் வள்ளுவர்.

துவ்வாதவர்: பசி, வறுமையுற்றவர் என்ற பொருள் இருந்தாலும் இங்கே ஐம்பொறியின் திண்மையிழந்தவர் என்றும், இறந்தார் என்பது வீழ்ச்சி அடைந்தவர் என்றாலும் வருந்தி வாழ்கிறவர் என்றும் இங்கே பொருள் கொண்டிருக்கிறேன்.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தா றோம்பல் தலை

பொருள் விளக்கம்:

ஐம்புலத்தார் = (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) ஐவகை நிலத்தில் வாழ்பவர்கள்.
ஆறு = பயன் பெறுமாறு அறம் செய்து (இளைப்பாற்றி)
ஓம்பல் = (அவர்களை) பாதுகாப்பது
தலை = தன்னுடைய கடமை என்று
ஆங்கு = (அறனை) தன்னை அண்டியவரை;
விருந்து ஒக்கல் = சுற்றத்தாராகக் கருதி விருந்தளித்துக் காப்பவர்
தென்புலத்து = தென்னாட்டின்
தெய்வம் = வணக்கத்திற்குரிய தலைவனானவர் ஆவார்.

சொல்விளக்கம்:

ஆறு = அறம், உந்தி, பயன், இளைப்பாறு; **ஓம்பல்** = சுற்றம்
புலம் = நிலம்; **விருந்து** = புதுமை, சுற்றம்

முற்கால உரை:

விதிரர், விருந்து, சுற்றம், ஐம்புலத்தார் தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அற்மாம்.

தற்கால உரை:

தெளிந்த அறிவினர், வாழ்வாங்கு வாழ்பவர், விருந்தினர், சுற்றத்தினர் இவர்களைப் பேணும் தான் என்னும் ஐந்திடத்தாரையும் பேணல் இல்வாழ்வான் சிறந்த கடமையாம்.

புதிய உரை:

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் நிலத்தில் வாழ்கிற ஐம்புலத்தார், பயன் பெறுமாறு அறம் செய்து, அவர்களைப் பாதுகாப்பது தன்கடமை என்று விருந்தளித்துக் காப்பவர் தென்னாட்டின் வணக்கத்திற்குரியவர்.

விளக்கம்:

தெரிந்தவர்க்கு உதவுவது மனிதப் பண்பு.. தெரியாதவர்க்கும் தேவை கருதி உதவுவது தெய்வப் பண்பு.

இங்கே ஐம்புலத்தார் என்று, சுற்று வட்டாரத்தில் உள்ள ஐவகை நில மக்களையும் காட்டி, அவர்கள் நாடி வருகிறபோது பயன்பெறுமாறும், பயன் பெற்று இளைப்பாறி மகிழவும், அதனிலும் அவர்கள் சுற்றம் போலச் சூழ இருந்து காக்கவும் கூடிய அறன், தென்புலத்திற்கே பெருமை சேர்க்கக் கூடிய மேலான மகன் ஆவதால் தெய்வம் என்றார்.

எதிர்பாராமல் செய்கிற உதவிக்கு ஈடு சொல்ல எதுவுமே இல்லை. முகம் தெரியாத மக்களுக்கு அகத்தில் இருத்தி, சுகத்தைக் கொடுத்துக் காக்கின்ற பண்பு கடவுள் பண்பு. அது இல் வாழ்க்கையில் உள்ளோரின் இனிய கடமை என இந்தக் குறளில் விளக்குகிறார்.

44. பழிஅஞ்சி பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பொருள் விளக்கம்:

பழி அஞ்சி = குற்றம் ஏற்படும் என்று பயந்து
பாத்து = ஐம்புல இன்பங்களின்
ஊண் = அனுபவங்களை
உடைத்தாயின் = நடைமுறைகளில் வெளிப்படுத்துகிற போது
வழி எஞ்சல் = ஒழுக்கம் குறையாது காத்து வந்தால்
எஞ்ஞான்றும் = எப்பொழுதும்
வாழ்க்கைஇல் = வாழ்க்கையானது இன்ப வீடாக விளங்கும்.

சொல் விளக்கம்:

பாத்து = ஐம்புல இன்பம், கஞ்சி, சோறு
ஊண் = அனுபவம், உணவு
பழி = இகழ்ச்சி, பொல்லாங்கு, குற்றம்
எஞ்சல் = குறைதல். **இல்** = வீடு

முற்கால உரை:

பொருள்செய்யுங்கால் பாவத்தை அஞ்சி ஈட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத்தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன் வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தல் இல்லை.

தற்கால உரை:

ஒருவன் இல்வாழ்க்கைப் பழிகளுக்கு அஞ்சிப் பகுத்துண்டலைக் கடமையாகக் கொண்டால், அவ்வாழ்வு வாழ்பவனின் வழிகளில், எப்பொழுதும் குறை உண்டாதல் இல்லை.

புதிய உரை:

குற்றங்களுக்குப் பயந்து ஐம்புல இன்பங்களை நடைமுறையில் குறையாது காத்துவந்தால், எப்போதும் வாழ்க்கை இன்ப வீடாக விளங்கும்.

விளக்கம்:

ஐம்புலன்களால்தாம் அனைத்து நல்லதும் கெட்டதும் நிகழும். ஐம்புலன்களைப் பழி அஞ்சிப் பாதுகாத்து. அவற்றிலிருந்து பெறும்

இன்ப அனுபவங்களிலும் ஒழுக்கத்தைக் காக்கிறபோது, வாழ்கிற வீடு சொர்க்கமாகும். கிடைக்கிற வாழ்க்கையும் சுகமாகும்.

பாத்தூண் என்றால் பங்கிட்டு உண்ணுதல் என்பது ஒரு பொருள்.

பாத்து = ஐம்புல இன்பம்; ஊண் = அனுபவம் என்பதும் ஒரு பொருள். வழி என்பதற்கு ஒழுக்கம் என்றும் கூறலாம்.

மூன்றாவது குறளில் தெய்வ நிலையைப் பெற முடிகிற அறனாகிய இல்வாழ்வான் பிறர்க்கு உதவுதல் மட்டும் போதாது. தன்னுடைய வாழ்க்கையையும் தகுதி உடையவனாக அமைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

பழிகாரன் தருகிற எதையும் பண்புள்ளவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்னும் தமிழ் நெறியின் தத்துவம் இங்கே அழகாக விளக்கப்பட்டிருக்கிறது.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

பொருள் விளக்கம்:

அன்பும் = ஆர்வத்தால் காட்டுகிற கருணையும்
அறனும் = கருணையால் செய்கிற நல்வினையும்
உடைத்தாயின் = அறனாகிய இல்வாழ்வான் எல்லோரிடமும் வெளிப்படுத்துகிறபோது
அது = அப்படிப்பட்ட அரிய நிலையே
இல்வாழ்க்கை = இல்லிலிருந்து வாழ்கிற வாழ்க்கையின்
பண்பும் = பாடறிந்து ஒழுகும் செயல் நன்மைக்கு
பயனும் = ஓர் அர்த்தமாகிறது.

சொல் விளக்கம்:

பண்பு = பாடறிந்து ஒழுகும் நற்குணத்தால் நிகழும் செயல் நன்மை
பயன் = அதன் விளைவால் நிகழ்கிற வேள்வியாகிறது

முற்கால உரை:

மனையாளிடத்து இன்பும் பிறர்க்கு பகுத்துண்ணலாகிய அறனும் குணமும் பிரயோசனமுமாம்.

தற்கால உரை:

ஒருவரது இல்வாழ்க்கையில் காட்டப்படும் அன்பு அதன் பண்பாகும். செய்யப்படும் அறம் அதன் பயனாகும்.

புதிய உரை:

ஆர்வமான கருணையும், கருணை நிகழ்த்தும் நற்செயலும் ஆகிய இரண்டுமே அறனின் செயல் நன்மைக்கு ஓர் அர்த்தமாகிறது.

விளக்கம்:

அன்பு ஆர்வத்தால் எழுவது. அறம் கருணையால் விளைவது. இந்த இரு பண்புகளும் ஒருவரிடம் பாடறிந்து வழங்கப்படுகிற போது, அதுவே உயர்ந்த வாழ்வின் உதாரணமாகி விடுகிறது. அதுவே இல்வாழ்க்கையின் இலட்சியத்திற்கு ஓர் அர்த்தமாக விளங்குகிறது.

46. அறந்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது எவன்

பொருள் விளக்கம்:

அறத்து ஆற்றின் = வருபவர்களது மனத்தைக் குளிரச் செய்தும்
புறத்து ஆற்றின் = வருபவரது துயர்களை உடலால் தீர்த்தும்
இல்வாழ்க்கை = குடும்ப வாழ்க்கையை
ஆற்றின் = நடத்தி வருகிறபோது
போஒய் = தவறுதலாக வேறு எதுவும்
பெறுவது எவன் = கிடைப்பது எப்படி?

சொல் விளக்கம்:

ஆற்றுதல் = துயர் தீர்த்தல், குளிரச் செய்தல்
புறம் = உடம்பு; **ஓய்** = தவறுதல்; **பெறுவது** = கிடைப்பது

முற்கால உரை:

ஒருவன் இல்வாழ்க்கையைத் தரும வழியாக நடத்து வானாகில், துறவறத்திற்போய் பெறும் பயன் என்ன என்பதாம். என்பதாம்.

தற்கால உரை:

ஒருவன்தன் இல்வாழ்வை அறவழியில் நடத்து வானேயானால், அந்த இல்வாழ்வு அல்லாத பிற வழிகளில் போய் அவன் அடையத் தக்கது உண்டோ? (எதுவுமில்லை)

புதிய உரை:

வருவோர் மனங்குளிர, உடலால் துயர்தீர்த்துக், குடும்ப வாழ்வை நடத்தும்போது தவறுகள் எதுவும் நடவா.

விளக்கம்:

மனத்தாலும் உடலாலும் விருந்தினர்கள் மற்றும் தம்மைச்சுற்றி உள்ளோர் துயர்தீர்த்து வாழும் வாழ்க்கையில் தவறுகளே நடக்காது. எப்பொழுதும் தண்மையும் சீலமும் தொடரும்.

விருந்தூட்டித் துயர் தீர்க்க. மனம் குளிரச் செய்ய, மனதும் உடலும் பொருந்த வேண்டும் என்று இந்தக் குறளில் வலியுறுத்துகின்றார். அதனால்தான் அறத்தாற்றின், புறத்தாற்றின் என்று அற்புதமாக இரண்டு சொற்களைப் பெய்திருக்கிறார்.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை

பொருள் விளக்கம்:

இயல்பினான் = ஒழுக்க நெறிகளுடன்
இல்வாழ்க்கை = வீட்டு வாழ்க்கையை வாழ்பவன்
என்பான் = என்று பெருமையைப் பெறுகிறவன்
வாழ்பவன் = சிறப்புற வாழ்ந்து காட்டுகிறவன் ஆவான்
முயல்வாருள் = மற்றபடி தகுதி, பகுதி, செல்வம், கொண்டு சமுதாயத்தில் உயர்ந்துள்ள மற்றவர்களை விட
எல்லாம் = எல்லா நிலையிலும்
தலை = பெருமை மிகுந்த தலைமை இடத்தை வகிக்கிறான்.

சொல் விளக்கம்:

இயல்பு = ஒழுக்கம், நற்குணம், பலம்; **முயல்வாருள்** = பதவி அதிகாரம் பெற்றவர்கள், பெற முயல்பவர்கள்

முற்கால உரை:

அறவியல் போடு இல்லறத்தில் வாழ்பவன், தவஞ் செய்வார்க்கெல்லாம் தலையாவான்.

தற்கால உரை:

இயல்பான அறமுறையில் இல்வாழ்க்கை வாழ்பவன், தம்மை மேம்படுத்த முயலும் முயற்சியாளர் அனைவரையும் விட, முதன்மையானவன் ஆவான்.

புதிய உரை:

ஒழுக்க நெறிகளுடன் வாழ்பவன் பெருமையுடையவன். தகுதி, பகுதி, செல்வம் கொண்டு உயர்ந்துள்ள மற்றவர்களை விடத் தலைமையானவன்.

விளக்கம்:

ஒழுக்க நெறிகளுடன் வீட்டில் வாழ்க்கை நடத்துபவன், சிறப்புற வாழ்ந்து காட்டுவதால், தகுதி, பதவி, செல்வத்தால் சமுதாயத்தில் உயர்ந்துள்ள மற்றவர்களை விட, பெருமை மிகுந்த தலைமை இடத்தை வகிக்கிறான்.

தகுதி ஒன்றால் மட்டுமே தலைமைப் பேறு பெறுகிறான்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து

பொருள் விளக்கம்:

ஆற்றின் = மற்ற மக்களின் மனங்குளிர துயர்துடைத்து
ஒழுக்கி = எந்த நேரத்தும் அந்த நெறியினின்றும் தவறாது
அறன் இழுக்கா = நலப் பணிகளிலிருந்து வழுவாமல்
இல்வாழ்க்கை = வாழ்கிற, வீட்டில் வாழ்பவர் வாழ்க்கையானது
நோற்பாரின் = உலக மக்களிலிருந்து விலகி துறவுப் பணியாற்றுகிற நீத்தார் பெறுகிற
நோன்மை = (செயல்) வலிமையை
உடைத்து = தோற்கடித்து விடுகிற ஆற்றல் பெற்ற தாகும். (அல்லது) நோற்பார் பெறுகிற வலிமையைவிட பலமடங்கு உண்டாக்கித் தருகிற ஆற்றல் பெற்றதாகும்.

சொல் விளக்கம்:

உடைத்து = தோற்கடித்து

முற்கால உரை:

தவத்தோரை தவவழியில் நடத்தி, தானும் இல்லறத்தினின்று தவறாத வாழ்க்கை தவம் செய்வோர் நிலையினும் பெருமை உடையது என்பதாம்.

தற்கால உரை:

பிறரை நல்வழியில் நடக்கச் செய்து, தானும் நல்வழியில் தவறாமல் நடப்பவன் இல்வாழ்க்கை, கடுந்தவம் செய்பவர் தவத்தினும் வலிமை உடையதாகும்.

புதிய உரை:

மற்றவர் மனங்குளிர துயர்துடைத்து அறநெறிதவறாது, நலப்பணி செய்து வாழ்கிறவன் வாழ்க்கை நீத்தார் வலிமையையும் தோற்கடிப்பதாம்.

விளக்கம்:

மற்றவர்கள் மனங்குளிரத் துயர் துடைத்துக் காக்கும் ஒழுக்க நெறியில் தவறாது வாழ்கிற இல்வாழ்வான் வாழ்வானது, உலகை விட்டு விலகி நோற்கிற நோற்பார் பெறுகிற வலிமையைவிட, பல மடங்கு ஆற்றல் பெற்றதாகும்.

இந்தக் குறளில் உடல் தகுதி பெறுதல் மட்டும் உயர்வன்று. உதவித் துயர் தீர்த்தல் உண்மையான வாழ்க்கை நெறி என்று கூறுவதால்தான் வள்ளுவம் ஒரு சிறந்த வாழ்வியல் நூலாக விளங்குகிறது.

49. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

பொருள் விளக்கம்:

அறன் என = நலப் பணிகளில் எல்லார்க்கும் உதவுகிற
பட்டதே = அனுபவம் பெறுவதே
இல்வாழ்க்கை = இல் வாழ்கிறவன் பெறும் பேறாகும்
அஃதும் = அப்படிச் செய்யும் அறப்பணிகளும்
பிறன் = மனம் வேறுபட்ட பகைவனும்
பழிப்பது = குறைகண்டு குற்றம் சொல்லாதவாறு
இல்ஆயின் = அந்த இல்லம் இருந்து விட்டால்
நன்று = அதுவே சுகம் பொழிகிற சொர்க்க பூமியாகிறது.

சொல் விளக்கம்:

நன்று = சுகம், சொர்க்கம், நம்மை, பெருமை, வாழ்வு
பட்டது = அனுபவிப்பது
பிறன் = மனம் மாறுபட்டவன், பகைவன்

முற்கால உரை:

அறனென்று சொல்லப்பட்டது இல்வாழ்க்கையாகும். துறவறமும் பிறன் பழிக்கப்படுவது இல்லாதிருந்தால் நல்லது.

தற்கால உரை:

அறம் என்று சொல்லப்பட்டது இல்வாழ்வே. அவ்வாழ்வு புகழுக்கு உரியதே எனினும். பிறர் பழித்தற்கும் இடம் இல்லாது அமைந்தால், மேலும் நல்ல புகழுக்குரியதாகும்.

புதிய உரை:

நலப்பணிகளில் அனுபவம் பெறுவதே இல்வாழ்வான் பேறு அப்பணிகளும் பகைவனும் குறைகாணாதவாறிருந்தால் சுவர்க்கமாகிறது.

விளக்கம்:

நலப்பணிகளில் எல்லார்க்கும் உதவுகிற அனுபவம் பெறுவதே இல்வாழ்வான் பேறாகும். அதிலும். பகைவர்களும் குறை காண முடியாதவாறு இல்வாழ்வு அமைந்து விட்டால், அதுவே சுகம் பொழிகிற சொர்க்க பூமியாகிறது.

பகைவரும் பாராட்டும்படி பயன்தரும் அறக் காரியங்களைப் புரிய வேண்டும் என்று வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

பட்டது என்றால் அனுபவம் பெறுவது என்று பொருள் தருகிறது. அதுபோலவே பிறன் என்றால் மற்றவர் என்பதை விட, பகைவர் என்னும் பொருளே இங்கு பொருந்துகிறது. நன்று என்றால் நல்லது என்பதை விட, சுகம் சொர்க்கம் நன்மை, வாழ்வு என்றெல்லாம் நல்ல பொருள்கள் இருப்பதால் இக்குறள் அறன் செய்கிற அறம் இன்னும் ஆற்றல் மிகுந்த திறமாக அமைய வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறது.

50. வையத்துன் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

பொருள் விளக்கம்:

வையத்து = இந்த நில உலகத்தில்; உள் = மன எழுச்சி என்கிற வாழ்வு செல்வநிலையை; ஆங்குவாழ்பவன் = அவ்வாறு பெறுகிற அறன் ஆனவன்; வான் = மிக மோலோங்கிய பெருமையில்; உறையும் = வசிக்கின்ற தெய்வத்துள் = தெய்வத்தன்மை நிறைந்த; வைக்கப்படும். மகாமனிதராக வாழ்த்தப்படுவார்

சொல் விளக்கம்:

உள் = மன எழுச்சி; **வாழ்வு** = செல்வம்; **உறைதல்** = வசித்தல்
தெய்வத்தன்மை (காக்கும் குணம்)
படு = கெட்டிக்காரன், நிபுணன்.

முற்கால உரை:

இல்லறத்து வழுவாது வாழ்பவன். தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப்படுகிறான். பின்னே தேவனாய்ப் பிறந்து அவ்வறப் பயனை அனுபவித்தல், நிச்சயமாயிருக்கையால், தெய்வத்துள் வைக்கப்படும்.

தற்கால உரை:

உலகில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவன் மேம்பட்ட புகழுலகில் நிலைபெறும் தெய்வங்களுள் ஒரு தெய்வமாக மதிக்கப்படுவான்.

புதிய உரை:

நில உலகில் மன எழுச்சி என்னும் செல்வ நிலையைப் பெறுகிற அறன் மிக மேலோங்கிய தெய்வ நிலையில் வைக்கப்படுவான்.

விளக்கம்:

இந்த நில உலகத்தில், மன எழுச்சி என்கிற செல்வ நிலை பெற்றுவாழ்கிற அறன் ஆனவன், மிக மேலோங்கிய பெருமையில் வசிக்கின்ற, காக்கும் குணம் வாய்ந்த தெய்வத்தன்மை நிறைந்த மகா மனிதனாக வாழ்த்தப்படுவான்.

இந்தக் குறளில் அறன் என்னும் அற மனிதன் தனது ஆன்ற பணிகளால் மகா மனிதனாகப் புகழ் பெறுகிறான் என்னும் முத்தாய்ப்பான கருத்தைப் பொறித்துக் காட்டுகிறார்.

6. வாழ்க்கைத் துணைநலம்

வாகையுடன் வெற்றிகரமாக வாழ்வதற்கு உதவும் ஒழுக்கம். (வாழ் + வாகை + கை) உயிராகப் போற்றப்படுகிறது. ஒழுக்கத்தின் உயர்நிலையில் உயிராக உலா வருகிறவனே அறன் என்று பெருமைப்படப் பேசப்படுகிறான்.

அறனை, அறநெறியில் வாழ்ந்திட அறனுக்கு, இல்வாழ்வு எத்தனை சுகமான இடம் என்று சுட்டிக்காட்டி, சுடர்முகமாகப் பல குணங்களை முன் அதிகாரத்தில் பத்துப் பாடல்களில் குறித்திருந்தார் வள்ளுவர்.

அந்த அதிகாரத்தைத் தொடர்ந்து வருகிறது வாழ்க்கைத் துணைநலம்.

துணை என்றால் மனைவி என்பதுடன், கணவன் என்றும் ஒரு பொருள் இருக்கிறது.

துணை என்றால் உதவி புரிவோன் என்பதும் ஒரு பொருள். இங்கே அறனுக்கு உதவி புரிய வருகிற ஒரு பெண்ணின் நலம் என்ன என்று பாடுகிறார் வள்ளுவர்.

வள்ளுவர் இங்கே இதனை **நலம்** என்றார்.

நலம் என்றால் மேம்பாடு உடையவன் என்றும் ஒருபொருள் உண்டு.

ஒரு துணைவியானவள், அறனின் துணையாக, அவனுக்கு உதவி புரிய வருவதற்கு முன்பாக எத்தனை எத்தனை மேம்பாடுகளையும் மேன்மையான குணங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார் இங்கே.

இல்லாள்: 1. எந்த உரிமையும் இல்லாதவள். 2. இல்ஆள்=சுகம் தருகிற ஒரு ஆள். 3. இல்லத்தைக் காப்பாற்ற ஒரு வேலையாள். 4. இல்லத்தை ஆள்பவள்.

வள்ளுவர் 4 வது நிலையான பெண்ணைத்தான் இங்கே காட்டுகிறார்.

இது பெண் குலத்தின் மேல் கொண்டிருந்த வள்ளுவரின் பேரன்பையும் பெருமதிப்பையும் காட்டுகின்றது.

பேண்: காப்பவள் என்பதுதான் பெண் என்று ஆயிற்று

ஆண்: ஆள்பவன் அதாவது செயல் மறவன் என்பது.

51. மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

பொருள் விளக்கம்:

மனை = வீட்டிற்கு (அங்கு வந்து வாழ்வதற்கு)
தக்க = தகுந்தாற்போல், தான் பயன்படத் தக்கவாறு உதவி வாழ
மாண்புடையள் = மன அழகு மிக்கவளாக (சுயநலமற்றவளாக)
ஆகி = தன்னை நிறைபடுத்திக் கொண்டு
தற்கொண்டான் = தன்னை (துணை) ஏற்றுக் கொள்கிறவன்
வளம் = வலிமை, அழகு, செல்வம், தகுதிக்கு ஏற்ப
தக்காள் = தன்னைத் தகுந்தவளாக உயர்த்திக் கொண்டு
வாழ்க்கை = வெற்றிகரமாக வாழும் பாங்கில்
துணை = உதவி செய்பவளாக விளங்க வேண்டும்.

சொல் விளக்கம்:

கண் = உடம்பு, ஆக்கம் (ஆன்மா)
மாட்சி = அழகு, பெருமை, வளம்

முற்கால உரை:

இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கையோடு தன் கணவன் வரவுக்குத் தக்க செலவு செய்பவள், இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்.

தற்கால உரை:

கணவனின் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்து வாழ்க்கையை நடத்துபவளே, நல்ல வாழ்க்கைத்துணைவி ஆவாள்.

புதிய உரை:

ஆற்றல் மிகு அறனுக்கு ஏற்றாற் போல, மன அழகு மிக்கவளாக, உடல் வலிமை, உடலழகு மிக்கவளாகத், தன்னைத் தகுதியுடையவளாக உயர்த்திக் கொண்டு, அவனின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு உதவி செய்பவளாகவும் அவள் விளங்க வேண்டும்.

விளக்கம்:

அனைவரும் போற்றுகிற மனிதன் அறன். அவனுக்கு உதவி செய்யும் நல் துணையாக வாழ வருகிற ஒரு பெண் அந்தக் குடும்பத்தில் வாழ்கிற சிறப்பிற்கு மனத்தால் (தன்னை மாற்றிக்கொண்டு) தயாரான மாண்புடன் வரவேண்டும். அதன்பிறகு

தன்னைக் கொள்கிற அறனின் (உடல்) வளமை, அழகு, செல்வம் இவற்றிற்கு ஏற்ப தகுதியுடையவளாகவும் தன்னை தயார் செய்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சிறந்த வாழ்க்கைத்துணை நலமாக வாழ முடியும்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனை மாட்சித்துஆயினும் இல்

பொருள் விளக்கம்:

மனைமாட்சி = வீட்டிற்குப் பெருமை, அழகு சேர்க்க
இல்லாள் = இல்லத்தை ஆள்கிற வாய்ப்பு பெறுகிற ஒரு பெண்
கண் இல்லாயின் = (வலிமையான) உடல் இல்லாது இருந்தால்.
எனை மாட்சித்து ஆயினும் = அவள் எவ்வளவு அழகும் பெருமையும் பெற்றிருந்தாலும்
வாழ்க்கை இல் = வாழ்க்கையில் எதுவுமே இல்லாது போய்விடும்

சொல் விளக்கம்:

மனைமாட்சி = வீட்டிற்குப் பெருமை சேர்க்க
கண் இல்லாயின் = வலிய உடல் இல்லாதிருந்தால்

முற்கால உரை:

இல்லறத்திற்குரிய குணம், மனையாளிடத்தில் இல்லையேல், அவ்வில் வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைய தாயினும் பயனில்லை.

தற்கால உரை:

நல்லொழுக்கம் உடைய மனைவியைப் பெறாதவனின் குடும்பம், பிற வகையில் எவ்வளவு பெருமை உடையதாக இருந்தாலும் பிறர் மதிக்க மாட்டார்கள்.

புதிய உரை:

வீட்டிற்கு அழகும் பெருமையும் சேர்க்க வருகிற பெண், உடல் வலிமை இல்லாது போனால், அவள் எவ்வளவு அழகும் பெருமையும் பெற்றிருந்தாலும் வாழ்க்கையில் எதுவுமே இல்லாமல் வீணாகிப் போகிறது.

விளக்கம்:

பெண்ணுக்கு அழகு, அறிவு, குடிப்பெருமை, செல்வவளம் எல்லாம் இருந்தும், உடல்வளம் தேகநலம் இல்லாமல் போனால் அவளது துணையும் வீணாகிறது. வாழ்க்கையும் அழிந்துபோகிறது. அதனால்தான் வாழ்க்கை இல் என்றார்.

பெண் என்பவள் காப்பாற்றுகிறவள். உழுவலன்புடன் உதவுபவள். செல்வக்குடிமகளாகவும் விளங்குபவள். இத்தனை இருந்தும் அவளது உடல் நலம் வளமில்லாமல் போனால் என்ன பயன்? யாருக்கு என்ன உதவி செய்ய முடியும்?

முதல் குறளில் மனத்தால் ஒன்றி, உடலால் உதவுபவள் இல்லாள் என்றார். கண், உடம்பு, அகக்கண், புறக்கண். ஆகவே, அவள் அகத்திலும் புறத்திலும் வலிமை வாய்ந்தவளாக விளங்க வேண்டும் என்கிறார். அதுதானே துணைநலம்; இணைபலம்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவன் மாணாக் கடை

பொருள் விளக்கம்:

மாண்பு = வளமும் பெருமையும் மிக்க
இல்லதென் = (உடல்மன) வலிமை இல்லாதவள் என்று
இல்லவள் ஆனால் = துணை வருகிறவள் ஆகிவிட்டால்
இல்லவள் = (துணையானவள்) வறுமைப் பெண்ணாக
மாணா = பகைவரும் வந்து சேருகிற
கடை = வாயிலாக வீட்டை மாற்றி விடுவாள்
உள்ளதென் = பின் இல்லில் உள்ளது என்ன?

சொல் விளக்கம்:

கண் இல்லாயின் = உடல் இல்லாமல் இருந்தால்;
வாழ்க்கை இல் = வாழ்க்கையில் எதுவுமே இல்லாமல் போய்விடும்.

முற்கால உரை:

மனையாள் நற்குண நற்செய்கை உடையவளாகில் அவ்வில் வாழ்க்கை எல்லாம் உள்ளதாகும்.

தற்கால உரை:

நல்ல மனைவி வாய்க்கப் பெறாதவனுக்கு என்ன வசதி இருந்தும் இல்லாதவனாகவே கருதப்படுவான்.

புதிய உரை:

வளமும் பெருமையும் மிக்க மன, உடல்வலிமை இல்லாதவள் துணையாக ஆகிவிட்டால், அவள் வறுமைப் பெண்ணாகி விடுவதுடன் பகைவரும் வந்து பாழாக்குகிற வாசலாக வீட்டையே மாற்றி விடுவாள்.

விளக்கம்:

இல்லாளின் தலையான மாண்பு வலிமையும் அழகும். அந்த மாண்பு இல்லாது போனால், உடல் வலிமையின்மையால், இல்லத்தின் பெருமையைப் பேணிக் காக்க முடியாமல் போகிறாள். அது பகைவரும் வந்து பாழாக்க நிற்கிற தாழ்ந்த வாயிலாக, அந்த இல்லம் ஆகிவிடுகிறது.

இல்லத்தை ஆள்பவள் தான் இல்லாள். ஆள்வதற்குச் சக்தியும் ஞானமும் வேண்டும். அந்த மாட்சிமை இல்லாமல் இருக்கிற இல்லவள் வாசல், உள்ளவர்கள் மறைந்துபோக, பகைவர்கள் முற்றுகையிடும் கீழ்மை இடமாக மாறிவிடுகிறது. ஆக்குவதும் பெண்; அழிப்பதும் பெண்தானே.

54. பெண்ணின் பெருத்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்

பொருள் விளக்கம்:

கற்பு என்னும் = (இல்லற ஒழுக்கம் காக்கும்) ஒருமையுடைமை என்கிற

திண்மை = வலிமையை

உண்டாகப்பெறின் = மிகுதியாகப் பெற்றிருக்கும்போது

பெண்ணின் = ஒரு பெண்ணுக்குரிய

பெருந்தக்க = பெற்றிருக்கும் பேறுகளில்

யாவுள = இதைவிடச் சிறந்தவை எதுவுமே இல்லை

சொல் விளக்கம்:

கற்பு = ஒருமையுடைமை

உண்டாகப் பெறின் = மிகுதியாகப் பெற்றால்

முற்கால உரை:

ஒருவர் பெறும் பேறுகளுக்குள் கற்புடைய மனைவியைப் பார்க்கிலும் எவை இருக்கின்றன?

தற்கால உரை:

கற்பு என்னும் மன உறுதியைக் கொண்ட மனைவியை விட, ஒருவனுக்கு மேம்பட்ட பொருள்கள் வேறு எவையும் இல்லை.

புதிய உரை:

கற்பைக் காக்கும் மன ஒருமையும் உடல் சக்தித் திண்மையும் மதில்போல அமையப் பெற்ற பெண்ணுக்கு அவள் பெற்றிருக்கும் பேறுகளுள் அதுவே பெரும் சிறப்பாக விளங்குகிறது.

விளக்கம்:

இல்லறப் பணிகளை எடுத்துச் செய்ய, தொடுத்து உயர்ந்திட, கற்பு மட்டும் போதாது. கற்பைக் காக்கும் மனஒருமையும். உடல் சக்தியை வளர்க்கும் திண்மையும் மதில்போல (கற்பு) அமையப் பெற்ற பெண்ணுக்கு அதுவே பெரும் சிறப்பு என்று வள்ளுவர்; பெண்ணின் வலிமையான உடலுக்கு முக்கியத்துவமாகக் குறித்துக் காட்டுகிறார்.

கற்பு என்றால் '' நாயகனையே தெய்வமாகக் கொண்டு அவன் சொல் வழுவாது நடக்கும் மகளிர் நிலை'' என்று தான் பொருள் கூறுகின்றார்கள். அதற்கு மதில் என்றும், தியானம் என்றும், கல்வி என்றும் பொருள்கள் உண்டு.

வலிமையான உடலைக் காக்கும் கல்வியாக, தியானமாக, மதில் அரணாக, ஒருமைப்பாடு விளங்குவதால், அதுதான் பெறற்கரிய பேறுகளுள் பெறும் பேறு என்கிறார். வலிமையான உடலில், வளமான ஒழுக்கம் வாழ்வது இயல்புதானே.

55. தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை

பொருள் விளக்கம்:

தெய்வம் தொழா = தன்னுடலாகிய தெய்வத்தைத் தொழுகிற
அள் = கூர்மையான அறிவு நுட்பம்
கொழுநன் = தனது துணைநலமான கணவனுடன்
தொழு = இல்வாழ்க்கையை மேம்படுத்த
எழுவாள் = முயற்சியை உண்டாக்கி எழச் செய்பவள்
பெய்யென = சொரிதல் வேண்டும் என்று விரும்புகிற போதே
மழை = அமுதமானது (பேரின்பமானது)
பெய்யும் = மிகுதியாகப் பெய்து மகிழ்விக்கும்

சொல் விளக்கம்:

தொழு = இல்வாழ்க்கை = குடும்பம் ; **மழை** = மிகுதி, குளிர்ச்சி
அமுதம் (ஆவி) மகிழ்ச்சி அமுதம் = மழை
பெய்தல் = செறித்தல், சொரிதல்; **அள்** = கூர்மை, வன்மை,
எழுவாள் = எழச்செய்வாள்; முயற்சி உண்டாக்குதல்.

முற்கால உரை:

பிற தெய்வத்தை வணங்காது கணவனைத் தொழுதெழுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

தற்கால உரை:

கணவனுக்கேற்ற இல்வாழ்க்கைத் துணைவியாக இருந்து அவன் எதிர்பார்ப்புக்கு ஒத்தபடி நடப்பவளே சிறந்த மனைவியாவாள்.

புதிய உரை:

தன் உடலாகிய தெய்வத்தைத் தொழுகிற கூர்மையான அறிவுடன், தன் கணவன் மேற்கொள்கிற முயற்சியை மேம்படுத்த உதவுபவள் - பேரின்பமானது வேண்டும் என்று சொல்கிறபோதே மிகுதியாகப் பெற்று மகிழ்விக்க இல்லறம் இன்பமயமாகும்.

விளக்கம்:

தேகம் என்பதே தெய்வம் குடியிருக்கும் சுகம் என்றே குறிக்கிறது. தன் உடலுக்குள் வாழ்கிற சக்தியாகிய தெய்வத்தை வணங்கி, வளர்த்துவரும் நுண்மையான ஞானம் கொண்டவளாக விளங்குகிறாள். கணவனது முயற்சியை மென்மேலும் வலுப்படுத்தி, இல்வாழ்வை மேம்படச் செய்பவள் முன், (அமுதம்) அகத்திலும் புறத்திலும் உவகை, மழைபோல பெய்து மகிழ்விக்கும்.

இல்லத்திற்கு வேண்டுவது உவகைதானே! வான் மழைபோல, வற்றாத இன்பம் வீட்டில் வாழ்விக்கும் பெருமை அந்தப் பெண்ணின் மதிநுட்பத்தால்தான் விளைகிறது. 54 வது குறளில், உடல் திண்மையால் (கற்பால்) பெறும் பேறு பிறக்கிறது என்றார். 55வது குறளில் திண்மையான தேகத்தில் தோன்றுகிற கூர்மை அறிவால், பேரின்பம் பிறக்கிறது என்று பாடுகிறார் வள்ளுவர்.

56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்

பொருள் விளக்கம்:

தற்காத்து = தன்னை உடல் திண்மையாலும் மன நுண்மையாலும் வளர்த்துக் காத்து

தற்கொண்டான் பேணி = தனக்கு உரியவனான அறனையும் உடல் வலிமையாலும் மனவலிமையாலும் வாழும் முறைகளில் காத்து

தகை சான்ற = அருள், அன்பு, மேன்மையைக் காக்கும்

சொல் காத்து = தான் பேசுகின்ற வார்த்தைகளில் உறுதியையும் ஒழுக்கத்தையும் காத்து

சோர்விலாள் = இவற்றில் நிலை குலையாமல் தினம் வாழ்கிறவளே

பெண் = அறனுக்கு ஏற்ற பெண்ணாவாள்

சொல் விளக்கம்:

தற்கொண்டான் = தனக்குரியவனான அறன்

தண்சான்ற = அருள், அன்பு, மேன்மையைக்காக்கும்.

முற்கால உரை :

கற்பையும் கணவனையும் நற்குண நற்செய்கைகளையும் காப்பாற்றுபவளே மனையாள் என்பதாம்.

தற்கால உரை:

கற்பினில் சிறந்து நின்று, தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தன் புகழையும் காத்து வருபவளே போற்றத்தக்க மனைவியாவாள்.

புதிய உரை:

இல்லம் காக்கும் ஏற்றமிகு பெண்ணுக்குரிய மூன்று குணங்கள் திண்மையான உடல், நுண்மையான மனம், உண்மையான சொற்கள். இவற்றால் தன்னையும் காத்து, தனக்குரியவரையும் காப்பாற்றுபவளே பெண் ஆவாள்.

விளக்கம்:

54ஆ ம் குறளில் உடல் திண்மை. 55 ஆம் குறளில் மன நுண்மை 56 ஆம் குறளில் சொல் உண்மை. நல்ல உடல் - நல்ல மனம் இதில் நல்ல மொழிகளும் நல்ல வாழ்வும் தோன்றும் என்னும் உலக உண்மையை, வள்ளுவர் மிகச் சாதுரியமாக விளக்கியிருக்கிறார்.

வலிமையான உடலில் தான் வலிமையான மனமும் வளமான சொற்களும் பிறக்கும். பெருமையைச் சேர்க்கும்.

57. சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை

பொருள் விளக்கம்:

சிறை = கட்டுப்பாடும், மதில்காவல் போன்றவையும்

காக்கும் காப்பு = கட்டுக்காவலுடன் காக்கின்ற காவல்

எவன் செய்யும் = எதுவுமே செய்து காத்துவிட முடியாது

மகளிர் = அறனின் மனைவியாகின்ற பெண்ணின்

நிறை = உடல்வலிமை, மனவலிமை, சொல் வலிமை ஆகிய மூன்றும் அழிவின்றி நிறைந்திருக்கும் வலிமையில்
காக்கும் காப்பே = தன்னைக் காத்துக் கொள்கின்ற காவலே
தலை = பெருமை மிகுந்ததாய் (தலையகமாக) விளங்குகிறது.

சொல் விளக்கம்:

நிறை = உடல் வலிமை, மனம், சொல் வலிமைகள்

முற்கால உரை:

பெண்கள் கற்பால் தங்களைக் காத்துக் கொள்ளுதலே தலைமையான காவல் என்பதாம்.

தற்கால உரை:

மகளிரின் கற்பைச் சிறைக்காவல் மூலம் காக்கும் காவல்முறை ஒரு பயனையும் தராது. அவர்கள் தம் மன உறுதியால் தான் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும்.

புதிய உரை:

ஒரு பெண்ணின் அழகு அவளுக்குக் காப்பல்ல. அவளை அடிமைப்படுத்துகிற ஆணும், மதில் சுவர் தடுப்பும் காப்பல்ல. அவள் உடல் வன்மை. மன உறுதி, நல்லொழுக்கம் போன்ற சொற்களின் நிறைவுதான் நிலையான காப்பாகவும் தலையான காப்பாகவும் விளங்கும்.

விளக்கம்:

54, 55, 56 ஆகிய குறள்களில் தனித்தனியாக ஒரு பெண்ணின் உடல்வளம், மனவளம், சொல்வளம் ஆகிய, மூன்றுமே நிறைவான அரண், வலிவான மதில், என்று வள்ளுவர் குறியிட்டுக் காட்டுகிறார்.

ஒருபெண்ணின் பிற அழகு, பிற பொலிவு எல்லாம் உதவாது. இந்த மூன்று நிறைகளே முன்னின்று காக்கும். உயர்த்தும், தற்கட்டுப்பாடு என்பது, வளமான நல்லுடலில் தான் தழைத்தோங்கி நிற்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

58. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு புத்தேளிர் வாழும் உலகு

பொருள் விளக்கம்:

பெண்டிர் = முப்பெரும் தகுதிகளும் பெற்ற பெண்களை
பெற்றான் = துணைநலம் தேடுகிற ஆணும்
பெறின் = பெறுகிறபோது
பெருஞ்சிறப்பு பெறுவர் = பெருமை மிகுந்த புகழினை அடைவர்
வாழும் உலகு = அவர்கள் வாழ்கிற சமுதாய உலகும்.
புத்தேளிர் = புதுமையானதாக மிளிரும்.

சொல் விளக்கம்:

பெருஞ்சிறப்பு = பெருமை மிகுந்த புகழ்

வாழும் உலகு = அவர்கள் வாழும் சமுதாய உலகு

புத்தேளிர் = புதுமையானதாக மிளிரும்

முற்கால உரை:

தன் கணவரை வணங்கும் பெண்களைத் தேவர்கள் தொழுவார் என்பதாம்.

தற்கால உரை:

கணவனைப் போற்றி, உரிய கடமையை முறைப்படிச் செய்தால், பெண்கள், வான்புகழ் கொண்டோர் பெயர் நிலவிடும். புகழ் உலகின் பட்டியலில் உயர்ந்த இடச்சிறப்பினைப் பெறுவர்.

புதிய உரை:

பெண்ணின் பெருந்தகுதியான மூன்று குணம். நல்ல உடல். நல்ல மனம், நல்ல மொழி. அவரைத் துணை நலமாகப் பெறுகிற ஆணும், பெருஞ்சிறப்புகளையும் மக்கள் மத்தியிலே சிறந்த தகுதிகளையும் பெற்று மகிழ்வர். அவர்கள் வாழ்கிற உலகில் தினமும் புதுமைப் பொலிவு நிறைந்து விளங்க, அவர்களும் புதுமையாளர்களாகவே பூரிப்புடன் வாழ்க்கை நடத்துவர்.

விளக்கம்:

உடல், மன, ஆன்ம நிலையில் உயர்தகுதிகள் கொண்ட பெண்ணைத் துணையாக ஏற்ற அறனுக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும், புகழ், பூரிப்பு, புத்துணர்ச்சியும் பொங்கிப் பெருகி பெருமை சேர்க்கும்.

59. புகழ்புரிந்த இல்இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை

பொருள் விளக்கம்:

புகழ்புரிந்த = அருஞ்செயல் செய்து வெற்றி வாகை சூடுகிற
இல் இல்லோர்க்கு = இல்லறம் அமையாத இல்வாழ்வார்க்கு
இகழ்வார்முன் = அவர்களது செயல்பற்றி இகழ்ந்துரைப் பவர்முன்
ஏறுபோல் = கம்பீரமாக தலை நிமிர்ந்து நடக்கும்
பீடுநடை இல்லை = பெருமையும் இல்லை; வலிமையும் இல்லை

சொல் விளக்கம்:

புகழ் புரிந்த = அருஞ்செயல் செய்து வாகை சூடுகிற
இல் இலோர்க்கு = இல்லறம் அமையாத இல்வாழ்வார்க்கு.

முற்கால உரை:

கற்பாகிய கீர்த்தியையுடைய மனையாள் இல்லாதவர்க்குப் பகைவர்முன் சிங்கம் போன்ற நடையில்லை என்பதாம்.

தற்கால உரை:

கற்பின் மூலம் புகழைக் காக்க விரும்பும் மனைவியைப் பெறாதவர்க்குத் தம்மைப் பழித்துப் பேசும் பகைவர்முன். காளையாகிய ஏறு போல நடக்கும் பெருமிதமான நடை இருக்க இடமில்லை.

புதிய உரை:

அரும் செயல் செய்து வெல்லும் இல்லறம் அமையாதோர்க்கு இகழ்ந்துரைப்பவர்முன், நிமிர்ந்து நடக்கும் நடை இல்லை.

விளக்கம்:

உறவினர்முன் புகழப்படுவதைவிட, புறம்பாளராகிய பகைவரால் புகழப்படுவதே பெருமை என்பது வள்ளுவர் நெஞ்சம். அருஞ்செயல் செய்து வெற்றிவாழ்வு வாழ்பவர்களே தனது பகைவராலும் புகழப்படுவார்கள். அருஞ்செயலுக்கும் வெற்றிக்கும் அற்புத ஆற்றலுக்கும் அடிப்படையாக அமைவது வலிமை சார்ந்த உடல் அல்லவா!

இதுவரை துணைநலமாக வருகிற பெண்ணுக்குரிய தகுதிகளைக் கூறிவந்த வள்ளுவர் அந்தத் துணைநலத்தை ஏற்கும் அறனும் வலிமையோடு வாழ்கிறபோதுதான் புகழ்புரியும் வாழ்வு அமையும். இல்வாழ்க்கையும் அமையும்.

அப்படி இல்லையென்றால் பீடற்ற வாழ்க்கை. ஒழுக்கமற்ற நடைமுறை அமைந்து யாவரும் இகழ்கிற நிலைமைக்கு ஆளாகி விடுவர்.

60. மண்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு

பொருள் விளக்கம்:

மனைமாட்சி = இல்லறத்தின் மேன்மை, சிறப்பு

மண்கலம் என்ப = மண்கலம் போன்றது

மற்றதன் = அதற்கு அடுத்தது; நன்கலம் = நல்ல பயன்படு பாத்திரம்போல; நன்மக்கட் பேறு = நல்ல குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுக்கும் பெருமையாகும்.

சொல் விளக்கம்:

மண்கலம் = மண்கலம் போன்றது

நன்கலம் = நன்குப் பயன்படும் பாத்திரம்.

முற்கால உரை:

மனையாளது நற்குண நற்செய்கைகள் ஒருவனுக்கு நன்மை என்றும், நற்புதல்வரைப் பெறுதல் அந்நன்மைக்கு ஆபரணம் என்றும் சொல்லுவார் என்பதாம்.

தற்கால உரை:

இல்வாழ்க்கைக்கு மண்கலம் மனைவியின் நல்லொழுக்க மேயாகும் என்று பெரியோர் கூறுவர். அதற்கு நல்ல அணிகலன் நல்ல மக்களைப் பெறுதலேயாகும் என்றும் கூறுவர்.

புதிய உரை:

இல்லறத்தின் மேன்மை மண்கலம் போன்றது. அதற்கு அடுத்து நல்ல மக்களைப் பெற்றெடுக்கும் பெருமை நன்கலம் ஆவது.

விளக்கம்:

ஓர் இல்லத்தின் மாண்பு, இல்வாழ்க்கையின் சிறப்பு குடும்ப கௌரவமாகும். அந்தக் குலப்பெருமை மண்கலம் போன்றது. மண்கலம் தவறி விழாமலும், உடையாமலும் இருக்கிறவரை மண்கலம் சிறப்புடையது. உடைந்தால் ஓடுதானே. அதற்காக மண்கலத்திற்கு இல்லறப் பெருமையை ஒப்பிட்டுக் காட்டினார்.

நன்கலம் என்பது நல்ல அமைப்புடன், திடத்துடன், அழகுடன் இருப்பதாகும். பழுதுபட்ட பாத்திரம், பயன்படாதது மட்டுமல்ல. பழிக்கப்படும். வீசியெறியப்படும்.

அதுபோலவே, குறையில்லாமல் பிறந்த மக்கள், குலத்தின் பெருமைக்கு உரியோர் என்பது மரபு.

தாயும் தந்தையும் நலத்தோடு வாழ்கிறபோது, குழந்தைகளும் வலிமையோடும் பொலிவோடும் பிறக்கும். இந்த 9 குறளுக்கும் முத்தாய்ப்பாக, இல்லறத்தின் இன்பத்தையும் அதன் அருள் கொடையான மக்கள் செல்வத்தையும் வள்ளுவர் குறித்திருக்கிறார்.

7. மக்கட் பேறு

வாழ்க்கைத் துணை நலத்தைத் தொடர்ந்து வைத்திருக்கும் அதிகாரம் மக்கட்பேறு. அறத்தில் சிறந்தவன் அறன். அறத்தில் சிறந்தவள் அறனி. அறனும் அறனியும் இணைந்து நடத்துகிற இல்வாழ்க்கையின் ஈடில்லாப் பரிசு குழந்தைச் செல்வம்.

உடல் வளத்தைக் காட்டுவதில் அறிவியல் கண்டுபிடிப்பு Genes என்கிற உயிரணு மரபணு, வலுப்பெற்றிருந்தால் தான் உருவாகும் குழந்தையும், உடல்திறம், மனவளம் மிகுந்ததாகப் பிறக்கும்.

நோயுற்ற பெற்றோருக்கு, நலிந்த தாய் தந்தையர்க்கு உருவாகும் குழந்தைகள், ஊனமுற்றதாகப் பிறக்கும். இது இன்றைய விஞ்ஞானத்தின் விந்தையான விளக்கம்.

திருதராஷ்டிரன் கண் இழந்து பிறந்தது, பாண்டுவின் சோகைத்தனம். விதுரனின் திடமற்ற மனம் எல்லாம் பிறப்பின் குறை. பெற்றோரின் முறையற்ற கூடல் என்பதன் வெளிப்பாடு.

அதனால்தான் முதலில் அறன் பற்றிய தகுதி, அதற்கடுத்தது அறனின் துணை நலத்திற்குரிய தகுதி, இந்த இரண்டு தகுதிகளும் இணைகிறபோது மிகுதியான வளம் பெற்ற குழந்தை பிறக்கிறது என்னும் உயர்ந்த கருத்தைக் கூறி, தீயவை தீண்டாத தேகம் கொண்டவராக ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் வள்ளுவர்.

ஒழுக்கம் - அது இழுக்கினால் வழக்கு. வழக்குக்கு கிடைப்பது தண்டனை என்று வள்ளுவர் தம் குறளில் விளக்குகிறார்.

நல்லொழுக்கம் உள்ள பெற்றோருக்குக் கிடைப்பது நன்மக்கட் பேறு. துன்மார்க்கம் செய்வோர்க்குக் கிடைப்பது துன்பக்கூறு.

பேறு என்பது பெருமை. ஒரு அறனுக்குப் பிறக்கும் குழந்தை அவனது பரம்பரையின் வளர்ச்சி மட்டுமன்று அவன் புகழ், பெருமை, நடத்தை போன்ற எழுச்சியைக் காக்கும் பேறாக இருப்பதைக் குறிக்கவே வள்ளுவர் மக்கட் பேறு என்றார்.

61. பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவறிந்த மக்கள்பேறு அல்ல பிற

பொருள் விளக்கம்:

பெறும் அவற்றுள் = இல்லற வாழ்க்கையில்
பெறும் அத்தனை அனுபவப்பட்ட பயன்களிலும்
யாம் அறிவது = நாம் அறிந்த மிகுந்த பயனானது
அறிவறிந்த = ஐம்பொறி உணர்வு மிக்க
மக்கட்பேறு = குழந்தைகளைப் பெறுவது தவிர
அல்ல பிற இல்லை = வேறெதுவும் இல்லை.

சொல் விளக்கம்:

அறிவறிந்த = பொறியுணர்வு மிக்க, உரன்
பேறு = நுகர்ச்சி.

முற்கால உரை:

ஒருவன் பெறும்பேறுகளுக்குள் அறிய வேண்டியவைகளை அறிந்த மக்கட்பேற்றை மதிக்க வேண்டும் என்பதாம்.

தற்கால உரை:

ஒருவன் பெறக்கூடிய பேறுகளில் அறிவுடைய நல்ல குழந்தைகளைப் பெறுவதைவிட, சிறந்த பேறு வேறு எதுவும் இருக்க முடியாது.

புதிய உரை:

இல்லற வாழ்வில் ஐம்பொறி உணர்வு மிக்க குழந்தைகளைப் பெறுவதைத் தவிர, சிறந்த பேறு வேறெதுவும் இல்லை.

விளக்கம்:

குழந்தைகள் பெறுவது என்பது கல்வியில்லா கலவியின் இயற்கையே. வல்லமையுள்ள குடும்ப வாழ்வுக்கு வலிமையான மக்கள் செல்வம் போல் வெறெதுவும் இல்லை. எப்படிப்பட்ட குழந்தைகள் பெற வேண்டும் என்பதற்கு **அறிவறிந்த** என்கிறார் வள்ளுவர்.

ஐம்பொறி நுகர்ச்சி நிறையப் பெற்ற குழந்தை என்பது கூன், குருடு, செவிடு, ஊமை, பீடு இன்றி பிறப்பது என்பதாகும்.

ஊனமுற்ற குழந்தைகள் உள்ள இல்லம் உடலாலும் உணர்வாலும் மகிழ்வற்றுக் கிடப்பது கண்கூடு. அதனால்தான்

இல்லறத்தின் ஈடற்ற பேறு, ஊனமற்ற நன்மக்கட் பேறு என்று வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார்.

அதற்குப் பெற்றோரின் தகுதி என்ன என்பதை அடுத்த குறளில் மிகத் தெளிவாகப் பாடியிருக்கிறார்.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்

பொருள் விளக்கம்:

பழிபிறங்கா = மாசும் குற்றமும் சேராத
பண்புடை = அறம் சார்ந்த செயல்களில் வாழுகிற
மக்கள் = இல்வாழ்வில் ஈடுபட்டிருக்கிற அறமாந்தர்கள்
பெறின் = குழந்தைகளைப் பெறுகிறபோது
எழுபிறப்பும் = அவர்களின் பரம்பரையில் ஏழுதலை முறையிலும்
தீயவை = (தேகத்தைத் தாக்கும்) தீயவிளைவுகள்
தீண்டா = அணுகவே அணுகாது

சொல் விளக்கம்:

பழி = மாசு, குற்றம்; **பண்பு** = அறம் சார்ந்த செயல்கள்
எழுபிறப்பு = ஏழு தலைமுறைகள்

முற்கால உரை:

பழிக்கப்படாத நற்புதல்வரைப் பெறுவானாயின், எழுபிறப்பிலும் துன்பங்கள் அணுகா என்பதாம்.

தற்கால உரை:

நல்ல பண்புள்ள மக்களைப் பெற்றெடுத்த குடும்பம் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் துன்பம் அடையாமல் பிறருடைய மதிப்பைப் பெறும்.

புதிய உரை:

மாசும் குற்றமும் சேராத அறம் சார்ந்த செயலீடுபாடுகள் உடையவர்கள் குழந்தைகள் பெற்றால், அவர்கள் பரம்பரையில் தீயவிளைவுகள் உண்டாகா.

விளக்கம்:

ஒருவர் தீச்செயல்களில் ஈடுபடுகிறபோது அவரது குணாதிசயங்களை அவரது மரபணுக்கள் (Genes) உயிராக ஏந்திக் கொண்டு அவை தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றன.

அதன் ஆக்கமும் தாக்கமும் ஏழு பிறவிகள் கொள்கிற தலைமுறையுடன் தொடர்கின்றன என்பது அறவியலார் கூறும் உண்மைகள்.

அதனால் 'உடம்புக்கு மாசு நேராமல் செயல்நன்மை குறையாமல் மக்கள் வாழ வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

குடும்பத் தலைமைப் பொறுப்பேற்று குழந்தைகள் பெறும் வாய்ப்புள்ள மக்கள், உடலைத் தூய்மையாகக் காத்தல் வேண்டும். நோயாளி மக்கள் குழந்தை பெற்றுக் கொள்வது சமுதாயக் கொடுமை மட்டுமன்று. கடுமையான தண்டனைக்கும் உரியதாகும். ஏனென்றால், அந்தப் பரம்பரை பல நூறாண்டுகள் தொடர்வதுதான் காரணம்.

இங்கே தீண்டா என்றார். தீண்டல் என்பது நச்சுயிர்கள் தொடுவதைக் குறிக்கும். அதனால்தான் தீயவை என்பது விஷம் உடம்பில் ஏறுவது போல என்றார் வள்ளுவர்.

63. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள் தம்தம் வினையான் வரும்

பொருள் விளக்கம்:

தம் மக்கள் = தம்முடைய முயற்சியால் பெற்ற குழந்தைகளை
தம்பொருள் = தம்முடைய உடல்போன்று அவர்கள் இருக்கிறார்கள்.
என்ப = என்றே அறிவுடையோர் கூறுகின்றார்கள்
அவர்பொருள் = அதனால் அவரது பிள்ளைகளுக்குரிய உடலும், உடல் சக்தியும்; தம்தம் = தாம் செய்து கொண்டிருக்கிற
வினையான் = அறம் சார்ந்த நல்வினைகளால்தான்
வரும் = அமையும்.

சொல் விளக்கம்:

தம்பொருள் = தம் உடல் போன்று
அவர் பொருள் = பிள்ளைகளுக்குரிய உடல், உடல் சக்தி.

முற்கால உரை:

பிள்ளை தேடிய பொருள் பிதாவிற்கு வருகையால் புதல்வரைத் தம் பொருளென்று சொல்லுவர் என்பதாம்.

தற்கால உரை:

பெற்றோருக்கு அவர்கள் பெற்றெடுக்கும் நல்ல மக்களே பெருஞ் செல்வமாகும்.

புதிய உரை:

தம்முயற்சியால் பெற்ற பிள்ளைகள் தமக்கு உடல் போன்ற வர்கள். ஆகையால் அவரது பிள்ளைகளுக்குரிய உடலும், உடல் சக்தியும் அவர்கள் செய்கின்ற நல்வினையால் அமையும்.

விளக்கம்:

பெற்றோரின் பொறுப்பை, மேலும் மேலும் அவர்மேல் சுமத்துகிறார் வள்ளுவர். பெற்றோர்களின் தேகவலிமை மனவலிமை ஒழுக்க நிலைமை போலவே குழந்தைகளுக்கும் அமையும். விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்காது.

அதுபோலவே, தம் குழந்தை என்னும் பெருமை கொண்டாடுவோர் அக் குழந்தை தன் தேகத்தின் நகல் என்பதைப் பெற்றவர் ஒத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் செய்கிற செயல் தொடர்ந்து பலனை அளித்தால் அதற்கு வினை என்று பெயர். உடலுக்கு நலம் பயக்கும் வினை நல்வினை; உடலை அழிக்கும் வினை தீவினை.

ஒரு குழந்தையின் தோற்றத்தைப் பார்க்கிறபோதே அது பெற்றோரின் பண்பைப் பறைசாற்றும் பாங்கை வெளிக்காட்டும்.

அதனால்தான் தம் பொருள் தம் மக்கள் தம்தம் வினை என்று சொற்களைப் போட்டு, பெற்றோரின் ஒழுக்கத்தைப் பெரிது படுத்திப் பாடியிருக்கிறார்.

64. அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்

பொருள் விளக்கம்:

தம் மக்கள் = (ஐம்பொறியும் அழகுற அமையப் பெற்ற) தம் குழந்தைகள்

சிறுகை = செய்கிற சிறுசிறு செயல்கள் (கை என்றால் செயல்)

கூழ் அளாவிய = தம் உடல்மேல் சேர்ந்து பற்றுகிறபோது தடவிக் கலக்கிறபோது

ஆற்ற = உண்டாகின்ற இன்பம்

அமிழ்தினும் இனிதே = உடலினும் உயிரினும் இனிக்கின்ற உவகையைவிட மேலும் சுவையூட்டும்.

சொல் விளக்கம்:

சிறுகை = சிறு சிறுசெயல்கள்; **கூழ் அளாவிய** = தம் உடல்மேல் சேர்ந்து பற்றுகிறபோது; **ஆற்ற** = உண்டாகும் இன்பம்
அமிழ்தினும் = உடலினும், உயிரினும் இனிக்கின்ற உவகையை விட மேலானது

முறகால உரை:

தம்மக்கள் சிறுகையளாவிய சோறானது அமிர்தத்தினும் மிகுஇனியது என்பதாம்.

தற்கால உரை:

குழந்தைகளின் கை பட்ட கூழ் பெற்றோர்க்கு அமிழ்தைக் காட்டிலும் இனிமையானதாகவே தோன்றும்.

புதிய உரை:

தம் குழந்தைகள் செய்கிற சிறுசிறு செயல்கள் இன்பமானவை. தம் உடல்மேல் சேர்ந்து பற்றுகிறபோது, உண்டாகும் இன்பம் அவற்றினும் மேலானவை.

விளக்கம்:

கூழ் என்றால் உணவு என்றும், பொன் போன்ற உடல், பெரின் போன்ற பொருள் (உடல்) என்றும், பொருள் உண்டு. கை என்றால் செயல் என்றும் அளாவுதல் என்றால் தடவுதல் கலத்தல் சேர்ந்து பற்றுதல் என்றும் பொருள்.

தம் மக்கள் செய்கிற சிறுசிறு காரியங்கள் எல்லாம் பெற்றோரின் மேனியுடன் கலக்கிறபோது பேரின்பம் பெய்கிறது.

உணவில் கை வைத்து துழாவிய ஒரு செயல் மட்டும் இன்பம் என்று சொல்லாமல், குழந்தைகளின் சிறுசிறு செயல்கள் எல்லாமே பெற்றோரை அகமும் புறமும் பெறுகிற உவகையை மேலும் பெருக்கி பேரானந்தம் பெற வைக்கின்றன.

நல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் பெறக்கூடிய பேரின்பத்தை வள்ளுவர் இங்கே குழந்தைச் செயல்களுடன் வடிவமைத்துக் காட்டியிருக்கின்றார்.

65. மக்கள் மெய்தீண்டல் உடற்குஇன்பம் மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

பொருள் விளக்கம்:

மக்கள் = (ஐம்பொறி உணர்வுகள் நிறையப்பெற்ற) தம் குழந்தைகள்
மெய்தீண்டல் = தம் பெற்றோரை வந்து கட்டித் தழுவுகிறபோது
உடற்கின்பம் = பெற்றோர் பேரின்பம் பெறுகின்றார்கள்
மற்றவர் = மேலும் தம் குழந்தைகள்
சொல்கேட்டல் = (பேசும் சக்தி வந்திருப்பது பார்த்து) இசைக்கின்ற எழுத்துக்களின் ஓசையால் பேசுகிறபோது
செவிக்கு இன்பம் = இன்னும் செவிக்கு இன்பம் மேலோங்குகிறது.

சொல் விளக்கம்:

மக்கள் = தம் குழந்தைகள்
சொல் கேட்டல் = பேசும் சக்தியைக் கேட்கும் போது.

முற்கால உரை:

மக்கள் உடலைத் தொடுதல் உடற்கின்பம். அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பம் என்பதாம்.

தற்கால உரை:

பெற்றோர்க்குக் குழந்தைகளை அணைத்தலால் உடற்கு இன்பம் ஏற்படும். அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்பதால் செவிக்கு இன்பம் ஏற்படும்.

புதிய உரை:

குழந்தைகள் தம் பெற்றோரைக் கட்டித்தழுவுகின்றபோது பெற்றோர்க்குப் பேரின்பம் உண்டாகிறது. அவர்கள் பேசும் மொழிகளைக் கேட்கும்போது இன்னும் இன்பம் மேலோங்குகிறது.

விளக்கம்:

குழந்தைகள் நடப்பதும், ஓடிவருவதும், கட்டிப் பிடிப்பதும், ஒலியெழுப்பிப் பேசுவதும், கேட்பதும் எல்லாம் ஐம்புலன்களின் செம்மையால்தான். இந்த இனிய செயல்களை யெல்லாம் வள்ளுவர் இங்கே கோடிட்டுக் காட்டுகிறார்.

பேசாத குழந்தைக்குக் காது கேட்காது, கைகால்கள் இருந்தும் அதை இனிதாக இயக்காது. அதுபோலவே கண்ணில்லாத குழந்தை என்றால் சிறுசிறு காரியம் எதுவுமே நடக்காது.

ஐம்புலன்களும் உணர்வில் உயர்நிலையில் இருப்பதால் தான், பெற்றோர்களின் இன்பம் பெருக்கெடுத்துக் கொள்கிறது. பெற்றோர்களைக் கண்டும் அவர் பேசக் கேட்டும் கொடுப்பதைச் சுவைத்தும் ரசித்தும் செய்கிற கோலாகலக்காட்சிகள்தாம் குழந்தை இன்பத்தைக் கோடியாய்ப் பெருக்கிக் காட்டுகிறது.

அதனால்தான் மெய்தீண்டல் என்றார். உண்மையான தொடர்பு உன்னதமான உறவு என்றார். நலமான குழந்தைகளே வளமான வாழ்வுக்கு ஆதாரம்.

66. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்

பொருள் விளக்கம்:

தம் = (இயற்கையின்) கொடையான
மக்கள் = குழந்தைகளின்
மழலைச் சொல் = இளமை நிரம்பாத மெல்லிசைச் சொற்களை
கேளா = கேட்காத
தவர் = உலகைத் துறந்த முனிவரும், உறவைத் துறந்த பகைவரும், குழந்தையற்ற உற்றோரும் தாம்
குழல் இனிது = குழலோசை இனிது
யாழ் இனிது என்ப = யாழ் இசை இனியது என்று கூறுவார்கள்

சொல் விளக்கம்:

கேளா + தவர் என்பதை கேளாதவர் என்று இணைத்துக் கேட்காதவர்கள் என்று பொருள் தந்திருக்கின்றார்கள்.

தவர் என்றால் முனிவர், பகைவர், உற்றோர் என்று பல பொருட்கள் உண்டு.

தம் என்பது தமது என்றும், கொடை என்றும் பொருள் உண்டு.

மழலை என்பது முற்றாத இளஞ்சொல். இசையால் பொழியும் எழுத்தோசையாகும்.

முற்கால உரை:

தம் மக்கள் அறிவுடைமையானது தம்மை விட உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இனிதாயிருக்கும் என்பதாம்.

தற்கால உரை:

புல்லாங்குழலின் ஓசையை விட, யாழின் இசையை விட, குழந்தைகளின் மழலைச்சொற்கள் பெற்றோர்க்கு மிக்க இன்பத்தைப் பயக்கும்.

புதிய உரை:

இயற்கைக் கொடையான குழந்தைகளின் இளமை நிரம்பாத மெல்லிசைச் சொற்களைக் கேளா முனிவர், பகைவர், குழந்தையற்றோர்தாம் குழலும், யாழும் இனிது என்பர்.

விளக்கம்:

முற்றும் துறந்த முனிவர், பற்றற்றுப் போனதால், இளைய இசையோசைச் சொற்கள் அவர்கள் செவிகளில் ஏறாது. மனத்துக்குள் பதியாது. அன்பைத் துறந்த பகைவர்க்கோ மழலை அமுதத்தை ஏற்க மனதும் இடம் தராது. உற்றவர்க்கோ அன்பு குறைந்த புழுக்கத்தால் ஒத்துக்கொள்ள இயலாது.

அதனால்தான், பேசும் மழலையின் குரலை இரசிக்காது. இசைத்து எழுப்பும் குழலையும் யாழையும் இனிதென்பார்கள். ஆனால் பெருமைக்குரிய பெற்றோர்க்கோ அதுவே சாவா மருந்து. மூவா விருந்து.

67. தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்

பொருள் விளக்கம்:

தந்தை = தகப்பன் ஆனவன்

மகற்கு = தன் வழித் தோன்றலுக்கு

ஆற்றும் நன்றி = வழிகாட்டுகிற வாழ்வு சுகமானது

அவையத்து = திரண்டிருக்கும் பொதுமக்கள் மற்றும் கற்றறிந்தோர் அவையின்; முந்தி = முன்னதாக

செயல் = ஒழுக்கத்தோடும் வலிமையோடும்

இருப்ப = நிலையாக வாழ்ந்திருக்கக் கற்றுத்தரல் வேண்டும்.

சொல் விளக்கம்:

நன்று + இ = அகம், வாழ்வு, பெருமை

இருப்ப = நிலையாக இருக்கச் செய்தல்; **செயல்** = ஒழுக்கம், வலிமை ; **அவையம்** = திறன், அறிவாளர் கூட்டம்

முற்கால உரை:

பிதா பிள்ளைக்குச் செய்யும் உதவியானது சபையில் கல்வியில் வல்லவனென முற்பட்டு இருக்கச் செயல் என்பதாம்.

தற்கால உரை:

தந்தை தன் மகனுக்குச் செய்யக்கூடிய நல்லுதவியானது. அவனைக் கற்றறிந்தோர் அவையில் யாவர்க்கும் முன்னிலையில் தலைவனாக வீற்றிருக்கும்படிச் செய்ய அவனைக் கல்வியில் வல்லவனாக ஆக்குதலே ஆகும்.

புதிய உரை:

தகப்பன் தன் மகனுக்கு வழிகாட்டும் வாழ்வு, பொதுமக்கள் கற்றறிந்தோர் முன்னர் ஒழுக்கத்துடனும் வலிமையுடனுன் வாழச் செய்வதாகும்.

விளக்கம்:

தந்தையின் கடமையானது, தன் வழித்தோன்றலுக்கு, மக்கள் முன்னே இருக்கும்போது, உடலால் வலிமையும், மனத்தால் தேர்ந்த அறிவும், செயலால் ஒழுக்கசீலனாகவும் விளங்கி, முன்னிலையில் இருப்பது போல வாழச் செய்திட வேண்டும்.

68. தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

பொருள் விளக்கம்:

தம்மின் = இனிமையாகத் தம்மை
தம் மக்கள் = தற்காத்துக் கொள்கின்ற பிள்ளைகளின்
அறிவுடமை = உண்மையறிவும் புலன் தெளிவுமானது
மாநிலத்து = மேன்மை மிக்க இந்த மண்ணின்
மன்னுயிர்க்கு எல்லாம் = வாழ்கின்ற உயிரினங்களுக்கெல்லாம்
இனிது = இனிமை பயப்பதாகும்

சொல் விளக்கம்:

அறிவுடைமை = உண்மை, அறிவுடையனாகுதல்
அறிவு = பொறி, புலன் அறிய வேண்டியவை
தம் = தற்காத்தல், பங்கிட்டுக் கொள்வது

முற்கால உரை:

தம் மக்கள் அறிவுடமையானது தம்மைவிட உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இனிதாயிருக்கும் என்பதாம்.

தற்கால உரை:

தம்மைவிடத் தம்முடைய மக்கள் அறிவு உடையவராய் இருத்தல் பெற்றோர்க்கும், பிறர்க்கும் இன்பம் தருவதாகும்.

புதிய உரை:

தம்மைத் தற்காத்துக் கொள்கிற பிள்ளைகளின் உண்மையறிவும், புலன்தெளிவும், மேன்மைமிக்க இந்த மண்ணின் உயிர்களுக்கு எல்லாம் இனியது.

விளக்கம்:

தந்தையின் வழிகாட்டுதலால் ஒழுக்கத்திலும், அறிவிலும், வலிமையிலும், சிறந்து விளங்குகிற மக்கள், தம்மைத் தற்காத்துக் கொண்டு வாழ்வதுடன், தன்னுடைய உண்மையை வலிமையை, அறிவுத் தெளிவை, புலனாற்றலை, மாநில மக்களுடன் பங்கிட்டுக் கொள்வது, எல்லார்க்குமே இனிய வாழ்வைத் தந்து வாழ்விக்கிற சிறப்பாகும்.

தம், தம் என்று இரண்டு முறை வந்திருக்கிறது. தம் என்றால், தற்காத்துக்கொள்வது. பங்கிட்டுக் கொள்வது என்ற இரு பொருட்களைத் தருமாறு பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

அறிவுடைமை என்பது உண்மை. அறிவுடையனாதல் **அறிவு** என்பதற்கு அறிய வேண்டியவை என்றும் பொறிபுலன் போன்ற பொருள்களும் உண்டு.

ஒவ்வொரு மகனும் பெற்றோர்க்குப் புகழ்தரும் செயல் செய்வதுபோல, சுற்றியிருக்கும் மன்னுயிர்க்கும் சுகம் தரும் வாழ்வினைத் தருதல் வேண்டும். பயனுள்ள பெருவாழ்வு வாழவேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

69. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்

பொருள் விளக்கம்:

தன் மகனை = (தன்) ஆன்மாவாக விளங்குகிற தன் மகனை
சான்றோன் = அறிவு, வலிமை, போன்ற ஒழுக்கங்களின் சாட்சியாகச் சிறந்தோன்; எனக்கேட்ட = என்று அறிய வருகிற
தாய் = பெற்றவள்
ஈன்றபொழுதினும் = பிறப்பித்த வேளையைக் காட்டிலும்
பெரிதுவக்கும் = பெரிதும் மகிழ்வாள்

சொல் விளக்கம்:

சான்று = சாட்சி, உதாரணம், ஒழுக்கங்களிற் சிறந்தவன்

தாய் = முதல், முதன்மை

முற்கால உரை:

தன் மகனைக் கல்வியில் வல்லவன் எனக் கேட்ட தாயானவள் பெற்ற காலத்திலும் பெருமகிழ்ச்சி அடைவாள் என்பதாம்.

தற்கால உரை:

தம் மகன் அறிவுடையோன் என்று அறிவுடையார் சொல்லக் கேட்கும் தாய் பெரிதும் மகிழச்சி அடைவாள்.

புதிய உரை:

ஆன்மாவாக விளங்கும் தன்மகனை அறிவு ஒழுக்கங்களின் சாட்சியாக சிறந்தவன் என அறியும் தாய் பெற்றெடுத்த வேளையினும் பெரிது மகிழ்வாள்.

விளக்கம்:

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தாய், இது இயற்கை, அவனை ஆன்றோர்களும் சகல ஒழுக்கங்களிலும் சிறந்தவன் என்று புகழும் அளவுக்கு வளர்த்து விட்டோம் உயர்த்தி விட்டோம் என்று களிப்பில் அவள் மகிழ்கிறாள்.

வளர்த்த பெருமைக்குள் அவளது மனம் பெரிதும் உவக்கிறது. பெற்றெடுத்தவள் இன்பம் பெறுவதில் புண்ணியம் இல்லை. அது கண்ணியமும் இல்லை. மற்ற மக்களுக்குப் பயன்படுகிற முறையில் பண்பாளனாக, மக்களுக்குள் ஒரு சான்றாக, சான்றாளனாக வளர்த்திருக்கிற பெருமைதான் பெற்றொரின் திறமை. அந்தக் கைகூடிய பலனுக்கு ஈடான இன்பம் எதுவுமில்லை.

தாய் என்பவள் உலக உறவுக்கு முதலானவள். முதன்மையானவள். அவள் மகனால் பெறுகிற இன்பம்தான் இன்பத்திற்குள்ளே சிறந்த இன்பமாக இருக்கும் என்று வள்ளுவர் இங்கே காட்டுகிறார்.

70. மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்

பொருள் விளக்கம்:

மகன் = அறக் குடும்பத்தின் வழித்தோன்றலாகிய

தந்தைக்கு = தன்னை உலகுக்குத் தந்தவனாகிய தந்தைக்கு

ஆற்றும் உதவி = ஏற்ற மகனாக இருக்கும் தகுதியால்

இவன் தந்தை = இவனைப் பெற்றெடுத்தவன்
என்கொல் நோற்றான் = எவ்வளவு வருத்தப்பட்டு இவன் இல்லற விரதம் காத்து வளர்த்தான்
என்னும் சொல் = என்று புகழப்படுகிறதிலே அமைந்திருக்கிறது

சொல் விளக்கம்:

ஆற்றல் = தவம் செய்தல்; **கொல்** = வருத்தம்
தவம் = இல்லறம்; **உதவி** = தகுதியாயிருத்தல்

முற்கால உரை:

பிள்ளை பிதாவுக்குச் செய்யும் உதவியானது இவன் பிதா இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தானோ என்று பிறர் சொல்லுஞ் சொல்லை உண்டாக்கல் என்பதாம்.

தற்கால உரை:

மகன் தந்தைக்குச் செய்யக்கூடிய கைம்மாறாவது, இவன் தந்தை இவனை மகனாய்ப் பெற்று வளர்க்க எப்படிப்பட்ட பெருமுயற்சி செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லேயாகும்.

புதிய உரை:

அறக்குடும்பத் தோன்றலாகிய தன்னைத்தந்த தந்தைக்கு ஏற்ற மகனாக இருக்கும் தகுதியால், இவனைப் பெற்றெடுத்தவன் என்ன தவம் செய்தான் என்று புகழப்படுதலில் அமைந்திருக்கிறது.

விளக்கம்:

தந்தை காத்த இல்லற விரதத்திற்குத் தகுதியாக இவன் இருக்கிறான் என்பதே பெற்றோர்கள் காத்த புண்ணியத்திற்குப் பெருமை. எல்லா தகுதிகளும் குறையாமல் காத்து வாழ்வதே மகனுக்குப் பெருமை. அவர்களைப் பார்த்து வையம் போற்றும். அகிலத்தார் போற்றுவர். அறமும் போற்றிக் காக்கும். இல்லற அறங்களில் ஈடிலாத் தரத்தில் வாழும் தாய் தந்தையர்க்கு மகன் செய்கிற உதவியானது பெற்றோர்கள் போற்றும் அற வாழ்வில் இருந்து பிறழாமல் வாழ்வதுதான்.

8. அன்புடைமை

இல்லற வாழ்வில் இனிய சுகம் அமைய வேண்டும். அந்த இனிய சுகமும் புனித நினைவில் தான் புத்தெழுச்சி பெறும். புனித நினைவுகள் பூத்துக் குலுங்கும் பொன்னான மனமும், கண்ணான உடலும், இல்லறத்தாருக்கு இன்றியமையாததாகும்.

உலக வாழ்க்கையை உயர்வாக வ்ாழ, உள்ளத்தில் பற்று வேண்டும். அவா வேண்டும். ஆசை வேண்டும். ஆர்வம் வேண்டும். மனித நேயம் வேண்டும்.

பற்று, பாசம், நேசம், நேயம், தயை, கருணை, ஆர்வம் என்னும் அத்தனைச் சொற்களுக்கும் ஒரே சொல்லாக உருவாகி வந்ததுதான் அன்பு என்பதாகும்.

பிறந்த உயிர்கள் அனைத்திலும் சிறந்த உணர்வாகத் திகழ்வது அன்புதான். அந்தப் பெருமைமிகு அன்பானது, தன்னை மட்டுமே நயந்து விடாது. தன்னை அண்டியவர்களுக்கும் சுரந்து, அதோடு நிற்காமல் அனைத்து உயிர்களும் அருந்துவது போல அமையவேண்டும் என்பதே மக்கள் கொள்கையாகும்.

தான் கருதிய பொருள்கள் மேல் தோன்றின பற்றுள்ளம் எனும் அன்புதான், பாசப் பரணிபாடும். வாழும் தரணியை ஆளும். மனித நேயத்தைச் சூடும்.

அதனால்தான் தன் குடும்பம் தவிர, தன் சுற்றம் தவிர, மனித இனம் அனைத்திற்கும் உதவுகிற மாபெரும் கருணையான அன்புடைமை எனும் அதிகாரத்தை, புதல்வரைப் பெறுதல் என்பதற்கு அடுத்ததாக வைத்திருக்கிறார் வள்ளுவர்.

பெறுதல் என்பது புதல்வர்களை மட்டுமல்ல. புனிதமான அன்பையும் தான் என்று குறித்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

அன்புடைமை என்னும் சொல்லிலேயே அன்பு உடை, மெய் ஆகிய சொற்கள் கலந்துள்ளன. உடலானது அன்பை உடுத்தி இருக்கிறது என்னும் உண்மையைத்தான் மெய் உடை அன்பு என்று கூறி, அன்புடைமை என்னும் தலைப்பை வைத்திருக்கிறார்.

71. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்

பொருள் விளக்கம்:

அன்பிற்கும் = பிறரிடத்து காட்டுகிற அன்பினுக்கும்
அடைக்கும் தாழ் = தடுத்து மாற்றுகிற தடுப்பானான தாழ்ப்பாள்
உண்டோ = இருக்கிறதோ? (ஆமாம். இருக்கிறது. எப்படி?)
பூசல் தரும் = போராடச் செய்கின்ற
புன்கணீர் = துன்பம், வறுமை தருகிற நோயுடைய உடல் கொண்ட
ஆர்வலர் = மனிதருக்கு (முடியாது)

சொல் விளக்கம்:

புன்கண் = தரித்திரம், துன்பம், நோய், அச்சம், பொலிவழிவு
பூசல் = பொருதல், மலைதல்; **ஆர்வலர்** = அன்புடையர்

முற்கால உரை:

அன்பு கொள்ளப்பட்டவரது துன்பங்கண்ட போதே அன்புடையவர் கண்ணீரே, உள்ளிருந்த அன்பைக் காட்டும் என்பதாம்.

தற்கால உரை:

ஒருவர் கொண்டுள்ள அன்பினைப் பிறர் அறியாமல் மறைத்து வைக்கும் மறைவு இல்லை. அன்பு செலுத்தத் தக்கவரைக் கண்ட அளவில் அவர் கண்ணில் துளிக்கும் கண்ணீரே அதை வெளிப்படுத்திவிடும்.

புதிய உரை:

துன்பம், வறுமை தரும் நோயுடைய மனிதருக்குப் பிறரிடத்துக் காட்டுகிற அன்பினுக்கு தடுத்து நிறுத்தும் தாழ்ப்பாள் உண்டோ? தடுக்கிற தாழ்ப்பாள் உண்டு.

விளக்கம்:

வாழ்க்கையில் துன்பம் வறுமை அச்சம் தரக்கூடிய நோய் கொண்ட நோயாளி ஒருவரால், யாரிடமும் அன்பு காட்ட முடியாது. நொந்து வாழும் நோயாளியால் எந்த மனிதரிடத்தும் அன்பு செய்யவே முடியாது. ஆகவேதான், அன்பிற்கும் அடைக்கும் தாழ் இருக்கிறதா என்று கேள்வியை எழுப்பி, இருக்கிறது என்னும் எதார்த்த நடைமுறை வாழ்க்கையைக் காட்டுகிறார்.

ஆர்வலர் என்பவர் தாம் விரும்புகிற பொருள்கள்மேல் பற்றுள்ளம் கொள்பவர். பற்றுள்ளம் இருந்தாலும் துன்புறுத்துகிற நோய் கொண்டவர்களால் அத்தகைய அன்பு உள்ளத்தைச் செலுத்தவே முடியாது.

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

பொருள் விளக்கம்:

அன்பிலார் = பிறரிடம் அன்பு செய்யாதவர்கள்
எல்லாம் = இந்த உலகத்தையே
தமக்கு உரியர் = தம்முடையது என்று நிரப்பிக் கொள்ள முயன்று தமுக்கடிப்பர்
அன்புடையார் = உள்ளத்தால் அன்பு செலுத்துபவர்கள்
என்பு = தனது உடல் (உள்ளம் உயிர்)
எல்லாம் பிறர்க்கு = தம்மைச் சார்ந்த மனித குலத்திற்கு
உரியர் = உரிமையாக்குவார்கள்

சொல் விளக்கம்:

எல்லாம் = அகிலம்; **தமக்கு** = தமுக்கு, நிரப்புதல்
என்பு = உடல்; **உரியர்** = உரிமையாக்குவார்.

முற்கால உரை:

அன்பிலார் எல்லாப் பொருளையுந் தமக்கே உரிமையாக்குவர். அன்புடையவர் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க உரியராவர் என்பதாம்.

தற்கால உரை:

அன்புடையவர்கள் தம் உயிர், உடல், உடைமை ஆகியவற்றைப் பிறர்க்குக் கொடுத்து உதவுவார்கள். ஆனால் அன்பில்லாதவர்கள் எதையும் பிறர்க்குக் கொடுத்து உதவமாட்டார்கள்.

புதிய உரை:

பிறரிடம் அன்பு செய்ய இயலாத தன்னலம் நிறைந்தவர்கள் உலகமே தனது என்று தமுக்கடித்து தற்பெருமையுடன் வாழ்வார்கள். அன்பு பாராட்டுபவரோ தமது உடலாலும் அன்பு காட்டி, உதவுகிற செயல்பாடுகளுடன் தம்மை உரிமையாக்குவர்.

விளக்கம்:

தமக்குரியர் என்பது தம்முடையதென்று நிரப்பிக்கொண்டு தமுக்கடிப்பர் என்பதாம்.

எல்லாரும் என்பும் உரியர் என்று எழுதியிருக்க, பரிமேலழகர் உரையில் உரியர் என்பதற்கு பதிலாக ஞரியர் என்று இருக்கிறது. ஞரலுதல் என்றால் முழங்குதல் என்று பொருள்.

73. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

பொருள் விளக்கம்:

என்போடு = உடம்போடு; இயைந்த = ஒன்றிப் போய்
தொடர்பு = ஒழுங்கான உறவு கொண்டு
ஆருயிர்க்கு = பொருந்தியிருக்கிற அரிய உயிர்க்கு
வழக்கென்ப = வழக்கப்படி (பிறரிடத்து)
அன்போடு = அன்பு பாராட்டுகிறபோது
இயைந்ததென்ப = புகழ் கிடைக்கிறது.

சொல் விளக்கம்:

இயை = புகழ், ஒழுங்கு, இணங்குதல்
தொடர்பு = தொடர்ச்சி , உறவு; **வழக்கு** = வழக்கம், நியாயம்

முற்கால உரை:

மக்களுயிருக்கு உடலோடு உண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்தவந்த பயன் என்பர் என்பதாம்.

தற்கால உரை:

கட்புலனுக்குத் தெரியாத உயிருக்கும் கட்புலனுக்குத் தெரிந்த உடம்புக்கும் எப்படிப்பட்ட தொடர்போ அப்படிப்பட்ட தொடர்பு வாழ்க்கையில் அன்புக்கும் செயலுக்கும் இடையே இருக்க வேண்டும்.

புதிய உரை:

உடம்புடன் ஒன்றிப்போய் ஒழுங்கான உறவு கொண்டிருக்கும் உயிர்கட்குப் பிறரிடத்து அன்புகாட்டுகிற போது புகழ்கிடைக்கிறது.

விளக்கம்:

உடம்போடு ஒன்றி உறவு கொண்டிருக்கிற அரிய உயிர்க்கும் அன்பு பாராட்டுகிறபோது புகழாகிய பெருமை கிடைக்கிறது.

முதல் குறளில் உள்ளத்தால் அன்பு கொள்ளச் சொன்னார். 2வது குறளில் உடம்பால் அன்பு பாராட்டச் சொன்னார். 3 வது குறளில் உயிரால் அன்பு பாராட்டும்போது புகழ் கிடைக்கிறது; பெருமை சிறக்கிறது; வாழ்வும் செழிக்கிறது என்கிறார்.

இல்வாழ்வானுக்கு இயல்புடைய மூவர் என்று உடல் மனம் உயிர் என்று கூரிய வள்ளுவர் இந்த மூன்றாலும் அன்பு செய்ய வேண்டும் என்று கூறிக் காட்டுகிறார்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்புஎனும் நாடாச் சிறப்பு

பொருள் விளக்கம்:

ஆர்வம் = பிறரிடத்துக் கொள்கிற கருணை உள்ளத்தை
உடைமை = அந்த பண்பான உரிமையை, செல்வத்தை,
அன்புஈனும் = அன்பானது உண்டாக்கித் தருகிறது
அது = அத்தகைய அன்புப் பண்பின் பெருக்கமானது
நண்பு = உள்ளும் புறமும் பொருந்துகிற உறவை
சிறப்பு =மேன்மையான இன்பம் தரும் உயர்ச்சியை
நாடா என்னும் = இணைத்துக்கட்டுகிற அணியாகவும் விளங்குகிறது.

சொல் விளக்கம்:

ஆர்வம் = தயை, கருணை, கொள்கிற பற்றுள்ளம்
உடைமை = உரிமை, செல்வம்; **நாடா** = கட்டுதற்கு உதவும் அணிவகை; **சிறப்பு** = மேன்மை, இன்பம், உயர்ச்சி
நண்பு = நட்பு, உறவு, சுற்றம்

முற்கால உரை:

அன்பானது ஆசையைத் தரும். அது சிநேகத்தையும் தரும்.

தற்கால உரை:

பிறரிடம் காட்டும் அன்பு, நாளடைவில் நட்பாக மலரும் தன்மை உடையது.

புதிய உரை:

அன்பு பிறரிடம் கருணை உள்ளத்தை உண்டாக்குகிறது. அதன் பெருக்கம் உள்ளும் புறமும் பொருந்துகிற உறவு, இன்பந்தரும் உணர்ச்சியை இணைத்துக்கட்டும் அணியாகிறது.

விளக்கம்:

பிறரிடத்துக் கருணை மனத்தை உண்டாக்குகிற அன்பானது, அவர்களிடத்தில் உள்ளும் புறமும் பொருந்துகிற உறவையும், சுகமான சுற்றுப் புறத்தை உருவாக்குகிற சுற்றத்தையும் ஏற்படுத்துகிற நாடாவாகாவும், கட்டுகிற அணியாகவும் உதவுகிறது.

நான்காவது குறளில் உடல் மனம் உயிர் கொண்டு காட்டுகிற அன்பால், உயர்ந்த உறவும், சுகம் தரும் சுற்றமும், மேன்மை தரும் வாழ்வும் அமைகிறது என்று அன்பின் மேன்மையை விளக்கிக் காட்டுகிறார்.

நாடா என்பதற்கு அளவிறந்த என்றும் மிக்க என்றும் பொருள் கூறியதை, நான் இணைக்கும் அணி நாடா என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

75. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு

பொருள் விளக்கம்:

அன்புற்று = அன்பு செய்கிற ஆர்வலருக்கு
அமர்ந்த = அமைதி கொள்ளுதல் என்பது
வழக்கென்ப = வழக்கமான வழிப்பயணமாகிறது
வையகத்து = இந்நிலவுலகில்
இன்புற்றார் = இன்பமடைந்து வாழ்கிறவர்களைவிட
எய்தும் சிறப்பு = பெறுகிற இன்பம் மேலும் மேன்மை உடையதாக விளங்குகிறது

சொல் விளக்கம்:

அமர்ந்த = பொருந்திய, அமைதியாதல்
வழக்கு = வழக்கம், வழிப்பயன், செயல்பயன்

முற்கால உரை:

விண்ணுலகில் அடையும் பேரின்பத்தை, மண்ணுலகில் இல்வாழ்க்கையில் பொருந்தியவன் பின்பயனென்பர் என்பதாம்.

தற்கால உரை:

தம்குடும்பத்தாரிடத்திலும், பிறரிடத்திலும், அன்பு உடையவர் வாழ்க்கையில் இன்பத்தையும் பெருஞ் சிறப்பையும் பெறுவார்கள்.

புதிய உரை:

அன்பு செய்பவர்க்கு அமைதி கொள்ளுதல் வழக்கமாகிறது. இவ்வுலகில் இன்பம் அடைவதைவிட மேலான இன்பத்தை மேலும் கொடுக்கிறது.

விளக்கம்:

அன்பு செய்கிற ஆர்வலர்க்கு அமைதியான மனமே வழிப்பயணம் ஆகி விடுவதால், அவர் மற்றவர்கள் பெறுகிற இன்பத்தைவிட, மேன்மையான இன்பத்தையும் உயர்வையும் பெறுகின்றார்.

உடல், மனம், உயிர் ஒன்றியதன் பயனால் பாராட்டப்படுகிற அன்பானது, அமைதியை வழங்குவதால், அந்த அமைதியே அவர் பெறுகிற வாழ்வுப் பயனாக அமைந்து விடுகிறது. ஒருவருக்குக் கிடைக்கிற புகழ், பொருள், சுற்றம், நட்பு இவற்றை விட மனத்துக்கு அமைதி கிடைக்கிறது என்னும் மகத்துவத்தை அன்பு தருகிறது என்பதாக 5 வது குறளில் கூறுகின்றார்.

76. அறத்திற்கு அன்புசார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை

பொருள் விளக்கம்:

அறத்திற்கு = உடல் காக்கும் ஒழுக்கம், ஞானம், நோன்பு போன்ற நல்வினைகளுக்கு மேலும் நிறைவூட்ட

அன்பு சார்பு என்ப = அன்புதான் உதவி, துணை புரிகிறது

வறியார் = வெறுமை கொண்ட உடலும் குறைவான மனமும் கொண்டவர்களது

மறத்திற்கும் = உடல் நலிவு உண்டாக்கும் சினம், பாவம், பிணக்கு, வம்பு போன்ற தீச்செயல்களைத் தடுக்க

அஃதே துணை = அதே அன்புதான் தீர்வு காண்கிறது.

முற்கால உரை:

சிலர் அறியாதவர் அன்பு துணையாவது அறத்திற்கே என்பார். மறத்தை நீக்குவதற்கும் அவ்வன்பே துணையாம் என்பதாம்.

தற்கால உரை:

அன்பானது நன்மையை உருவாக்கவும், தீமையைப் போக்கவும், உறுதுணையாக இருக்கும்.

புதிய உரை:

அதாவது உடல் காக்கும் குணங்களான அன்புதான் ஒழுக்கத்தை, ஞானத்தை, வைராக்கியம் மிக்க நோன்பினை, வளர்த்து மேலும் மெருகூட்டுகிறது. உடல் அழிக்கும் குணங்களான சினம், பாவம், பிணக்கு, வம்பு போன்ற தீம்புகளைத் தீய்த்து தகுதியாளராக மாற்றவும் அன்புதான் உதவுகிறது; உற்றுழி துணை வருகிறது.

விளக்கம்:

அன்பு அமைதியை மட்டும் வளர்த்து உதவவில்லை. இனிய வாழ்வுக்கு அவசியமான ஒழுக்கத்தை, நல்லறிவை, நல்ல செயல்களை வளர்த்துக் கொள்ள உற்சாகப் ஊட்டுகிறது. அதே

சமயத்தில் அன்பானது உடல் அழிக்கும் தீய குணங்களையும் குறைக்க வைத்து, தகுதியும் தரமும் வாய்ந்த தேகத்தை வளர்த்து, வாழ்க்கையின் துணையாக, உதவியாக, புகலிடமாகவும் இருந்து காத்து உதவுகிறது.

குறை போக்கவும் நிறை சேர்க்கவும் அன்பு உதவுகிறது என்பதாக 6 வது குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

77. என்பில் அதனை வெயில்போலக் காயுமே அன்பில் அதனை அறம்.

பொருள் விளக்கம்:

என்பு = நல்ல வலிமையுள்ள உடம்பு
இல் அதனை = இல்லாதபோது
வெயில்போல = சூரிய ஒளியும்
காயுமே = மிகுதியாக வருத்தும்
அறம் = அறமான ஒழுக்க நிலை இருந்தாலும்
அன்பு இல்லதனை = அன்பு இல்லாத ஒருவரை வேதனைப்படுத்தும்

சொல் விளக்கம்:

என்பு = எலும்பு, உடல். எலும்பு என்றால் அங்கம். **அங்கம்** என்றால் மனம், சீவன் என்னும் பொருள்கள் பல. **என்பு இல்** என்றதால், நல்ல உடல், வலிமையான மனம், செழிப்பான சீவன் இல்லாத போது - அதாவது பஞ்ச பூதம் உலவுகிற பஞ்சேந்திரிய உடலான்னது வெயிலாலும் வருந்தி வாடும்; கேடுறும். அதுபோலவே, அன்பு என்பது பண்பான வாழ்வு முறை. ஒருவருக்கு அன்பு இல்லாதபோது அவரது ஒழுக்கமும், அறிவும் நற் செயல்களும் உதவாமல் வருத்தி வாழ்வையே வீணடித்து விடும்.

முற்கால உரை:

என்பில்லாத புழுக்களைச் சூரியன் சுடுதல்போல, அன்பில்லா உயிர்களை அறக்கடவுள் சுடும்.

தற்கால உரை:

எலும்பு இல்லாத புழுவை வெயில் எப்படி வாட்டி வருத்துமோ அப்படியே அன்பு இல்லாதவர்களை அறநெறியானது வாட்டி வருத்தும்.

புதிய உரை:

நல்ல வலிமையுள்ள உடம்பு இல்லாதபோது, சூரிய ஒளியும் மிகுதியாக வருத்தும். அதுபோல ஒழுக்கநிலை இருந்தாலும் அன்பில்லாத ஒருவர் வேதனைப்படுவர்.

விளக்கம்:

இயற்கையின் ஆற்றலை எதிர்க்கவும், இதமாக ஏற்றுக் கொள்ளவும் கூடிய சக்தி, வலிமையான உடலுக்கு மட்டுமே உண்டு. ஆகவேதான், அன்றாடம் உதவுகிற ஆதவன் கூட, அவன் தரும் ஒளியை, வெப்பத்தை, அனுபவிக்க முடியாமல் அல்லல்பட நேரிடுகிறது. வலிமையில்லாத உடம்பால் என்று 7 வது குறளில் அன்புக்கும் நல்ல ஒழுக்கத்திற்கும் உடலும், மனமும், சீவனும் வேண்டும் என்று மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறார். எலும்பில்லாத புழு என்னும் உரைக்குப் பதிலாக வலிமையற்ற உடல் என்று இங்கே பொருள் கண்டிருக்கிறோம்.

78. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல்மரம் தளிர்த்து அற்று.

பொருள் விளக்கம்:

அன்பகத்தில்லா = நல்ல இதயம் இல்லாத (உடலும்)
உயிர் வாழ்க்கை= அதில் வாழ்கிற உயிரும் அதனோடு வாழ்கிற வாழ்க்கையும்; வன்பாற்கண் = வளமே இல்லாத கடும்பாலை நிலத்தில்; வற்றல் மரம் = பசுமையிழந்த மரமானது
தளிர்த்து = மீண்டும் துளிர்விட்டு வளர்வது இன்றி
அற்று = அழிவது போல அழிந்து போய்விடும்

சொல் விளக்கம்:

அன்பகத்தில்லா = நல்ல இதயம் இல்லா உயிர்வாழ்க்கை
அற்று = அழிவதுபோல அழியும்.

முற்கால உரை:

அன்பில்லாத உயிர்வாழ்க்கையானது வன்னிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போலும் என்பதாம்.

தற்கால உரை:

அன்பைத் தன்னிடத்துக் கொள்ளாதவர் வாழ்வை வலிய பாறையின் மேல் பட்டமரம் தளிர்த்தது என்று கூறுவது போன்றது.

புதிய உரை:

நல்ல இதயம் இல்லாத உடலில் உலா வருகிற உயிர் கொண்ட வாழ்க்கை, பாறையின் மேல் பட்டமரம் தளிர்க்க முனைந்த அவல நிலைக்கு ஆளாகி அழிந்துவிடும்.

விளக்கம்:

உடலுக்கு உயிர் போல வாழ்க்கைக்கு அன்பு. வேருக்கு மண்போல மரத்திற்கு நீர் போல வாழ்க்கைக்கு அன்பு. அன்பானது மலர்ச்சி பெற்ற உடலிலும் எழுச்சி பெற்று புத்துணர்ச்சி பெறும்.

அன்பு இல்லாது இருப்பது இதயமில்லாத உடல். உயிர் இல்லாத உடல். இதற்கு என்ன பெயர்?

மர வளர்ச்சிக்கு மண்ணும் நீரும் முக்கியம். வாழ்க்கை எழுச்சிக்குப் பண்பான இதயமும் பலமான உயிரும் முக்கியம். அங்கே மரம் விளைந்து பயன் தருவது போல, இங்கே அன்பு வளர்ந்து இனிய வாழ்வைத் தரும்.

அன்பின் வளர்ச்சிக்கு நல்ல இதயமும் உயிரும் வேண்டும் என்று இந்த எட்டாவது குறளில் வலியுறுத்துகிறார்.

79. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு

பொருள் விளக்கம்:

அகத்துறுப்பு = உள் உறுப்பாகிய சீவன் என்கிற ஆன்மாவிலே
அன்பிலவர்க்கு = அன்பெனும் குணம் அமையாத போது
யாக்கை = சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் உடலில் உள்ள
புறத்துறுப்பு எல்லாம் = வெளிப்புறமாய் அமைந்திருக்கும் பஞ்சேந்திரியங்களால்
எவன் செய்யும் = என்ன செய்ய முடியும்?

சொல் விளக்கம்:

அகத்துறுப்பு = உள் அவயவம்; மனத்திற்கு உறுப்பு போல்வதாகிய குணம். **அகம்**= சீவன், ஆன்மா, மனம்.

முற்கால உரை:

உள்ளன்பு இல்லாதவர்க்கு பிறவுறுப்புகளிருந்தும் பயனில்லை.

தற்கால உரை:

உடம்பின் உள்உறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு உடம்பின் வெளி உறுப்புகளெல்லாம் இருந்தும் அவற்றால் என்ன நன்மை ஏற்படும்? ஒன்றும் ஏற்படாது.

புதிய உரை:

உடலால் மனத்தால் உண்டாகிற அன்பு இருந்தாலும் சீவனாகிய ஆன்மாவிலிருந்து எழுகிற அன்பில் தான் சீவத்துவம் உண்டு. புறத்துறுப்புக்கள் எல்லாம் ஏவலுக்குரியவைகளே. அதனால், அவற்றையெல்லாம் கட்டியுள்ள யாக்கையால், எந்தப் பயனும் ஏற்படாது.

விளக்கம்:

உலக நடைமுறைக்காக செயல்படுவது உடல். செய்யத் தூண்டுவது மனம். உடல் மனம் இரண்டையும் ஆற்றுப்படுத்துவது ஆற்றுமா (ஆத்மா). அவற்றைப் பயனுடையதாக ஆக்குவதும் ஆன்மா (ஆன் = பார்த்துக் கொள்வது). ஆகவே ஆத்மாவிலிருந்து தோன்றுகிற அன்புதான் அனைவருக்கும் உதவும். அதுவே அனைவர்க்கும் கருவியாக உதவும்.

உள் அன்புதான் எல்லாம் செய்யும். பிற அன்பு போலியாகி விடும் என்கிற குறிப்பைத்தான் இந்த 9 வது குறளில் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

80. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு

பொருள் விளக்கம்:

அன்பின் வழியது = அன்பின் இடமானது (நெறியானது)
உயிர்நிலை = உயிர்க்காற்றாகிய சீவனில் உள்ளது
அஃதில்லார்க்கு = பிராணனில் பிறப்பெடுக்காத அன்பு
என்புதோல் போர்த்த உடம்பு = தோலால் மூடப்போர்த்த உடம்பு
பட்ட சரீரமாகவே இருக்கும். அதாவது சவமாகவே இருக்கும்.

சொல் விளக்கம்:

வழி = இடம், நெறி; **உயிர்நிலை** = ஆன்மா, ஆத்மா

முற்கால உரை:

அன்போடு பொருந்திய உடலே உயிருள்ள உடலாகும். அவ்வன்பு இல்லாவுடலே உயிரற்ற வுடலாகும்.

தற்கால உரை:

அன்புடையவர்களே உயிருடையவர்களாகக் கருதப்படுவர். அன்பு இல்லாதவர்கள் இறந்த பிணம் போன்றே எண்ணப்படுவார்கள்.

புதிய உரை:

அன்பின் இடம் உயிாக்காற்றாகிய சீவனில் உள்ளது. மெய்யன்பு பிராணனில் பிறப்பெடுக்காத அன்பு தோலால் போர்த்தப் பெற்ற சவமாகவே இயங்கும்.

விளக்கம்:

ஆகவே, அன்பு கொள்ள வலிமையான உடல் வேண்டும். வளமான மனம் வேண்டும். வயப்படுத்தி வழிப்படுத்துகிற ஆத்மா வேண்டும்.

வாயால் சொல்லுகிற அன்பு, விழியால் காட்டுகிற அன்பு. உறுப்புகளால் வெளிப்படுத்துகிற அன்பு எல்லா வற்றையும் விட, உயிராய் இருப்பதும் உயிராய் மதிப்பதும்தான் உயர்நிலையான மனித குணம்.

மனத்தில் மட்டும் அன்பு இருந்தால் அது அன்புடைமை அன்று. உடல் முழுதும் வியாபித்திருக்கிற உயிர்போல, உயிர்நிலையாகக் கொள்வதே தேவகுணம் என்று தெரிவிக்கிறார் வள்ளுவர்.

9. விருந்தோம்பல்

உடலால் காட்டுகின்ற அன்பு கலைந்து விடும். உள்ளத்தால் மீட்டுகின்ற அன்பு சலித்து விடும். உயிரோட்டமாக இருக்கின்ற அன்பே நிலைத்து நிற்கும் என்று அன்புடைமை அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கினார்.

அன்பு யாரிடம் எப்படிக் காட்ட வேண்டும்? குடும்பத்தாரிடம் காட்டுகின்ற அன்பு - பாசம். சுற்றத்தாரிடம் காட்டுகின்ற அன்பு-பரிவு. புதியவர்களிடம் காட்டுகின்ற அன்பு-மனித நேயமாகும்.

இத்தகைய இனிய மனித நேயமானது இல்வாழ்வோர்க்கு என்றும் தேவை என்பதால்தான், அன்புடைமைக்கு அடுத்ததாக விருந்தோம்பலை .வள்ளுவர் வைத்திருக்கிறார்.

விருந்து என்பதற்குச் சுற்றும் விருந்தினர் என்பதுபோல, **புதுமை** என்று ஒரு பொருள் உண்டு. ஓம்பல் என்றால் பாதுகாத்தல், வளர்த்தல் என்றும் பொருள்கள் உண்டு.

வருகிற சுற்றத்தாரிடம் புதியவர்களிடம் காட்டுகின்ற மனித நேயத்தில் புதிய சிந்தனைகள் போலப் புத்துணர்ச்சி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் விருந்தோம்பல் என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

புதியவராகிய விருந்தினரைப் பார்த்தவுடன் விருந்தேற்கிற இல்லறத்தான் இதயத்திலே சிந்தனைகள் புதியனவாகவும், செயல்கள் இனியனவாகவும், சுரந்து சுகந்தர வேண்டும் என்பது வள்ளுவரின் வேட்கை.

வயிற்றுக்குச் சோறிடுவது மட்டும் விருந்தன்று. மனத்துக்கும் சோறிடுவது போல இதமான பதமான புதுமைகளை வழங்குவது இல்வாழ்வார்க்கு நல்வாழ்வு தரும் என்று விருந்தோம்பலில் விருந்து படைத்திருக்கிறார் வள்ளுவர்.

81. இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு

பொருள் விளக்கம்:

விருந்தோம்பி = புதியவரைக் காத்து, புதுமையை வளர்த்து

வேள் ஆண்மை = சிந்திக்கும் அழகாலும், ஆற்றலாலும், மன முயற்சியாலும்; செய்தல் = அரிய செயலாற்றி

பொருட்டு = மேம்பட்டவராகி

இருந்து ஓம்பி = (சாட்சியாக) மக்களுக்கு சான்றாகத் திகழ்வது

இல்வாழ்வதெல்லாம் = வீட்டிலே வாழ்கின்ற அறனுக்குரிய அற்புத குணங்களாகும்.

சொல் விளக்கம்:

இருந்து = சாட்சி; **ஓம்பு** = பாதுகாத்தல், வளர்த்தல்

விருந்து = புதுமை, விருந்தினர், சுற்றத்தார்

வேள் = மன்மதன் (சிந்திக்கும் அழகாளன்)

ஆண்மை = மனமுயற்சி, வெற்றி, திடன்

செய்தல் = அரிய செயல்; **பொருட்டு** = மேம்பட்டது.

முற்கால உரை:

இல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் விருந்தினரைக் காப்பாற்றும் பொருட்டு என்பதாம்.

தற்கால உரை:

இல்லின் கண் வாழ்வது விருந்தினரைப் பேணுதற்கே.

புதிய உரை:

சிந்திக்கும் அழகாலும் ஆற்றலாலும், புதியவர்களைக் காக்கும் பொறுப்பாலும் சிறப்பாலும், புதுமையுடன் அரிய செயலாற்றி மனமுயற்சியால் வெற்றியாளராக உயர்ந்து மற்றவர்களுக்கும் சான்றாக இல் வாழ்வான் வாழ வேண்டும்.

விளக்கம்:

முதற்பாடலில் விருந்தோம்புகிறவர் அழகும் அறிவாற்றலும் மிக்கவராய் உயர்ந்து, மற்றவர்களிடம் இவர் ஒரு சான்றாளராக விளங்குவார் என்பதைக் குறித்துக் காட்டுகிறார்.

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

பொருள் விளக்கம்:

விருந்து = தன்னை நாடி வந்திருக்கும் புதியவர்
புறத்ததா = புறத்தே இருக்கும்போது
வேண்டல் = விரும்பிய; சாவா = அழியாத
மருந்தெனினும் = அமுதமாயினும் (அமுதம் = உவகை)
வேண்டல் = தானே சுவைத்துக் கொண்டிருப்பது
பாற்றன்று = மாறுபாடான முறையாகும்

சொல் விளக்கம்:

மருந்து = அமுதம், உயிர்காக்கும் பொருள்.
அ + முதம் = அமுதம், **அ** = அகச்சுட்டு, புறச்சுட்டு;
முதம் = உவகை, மகிழ்ச்சி; **வேண்டல்** = விரும்புதல்
உண்டல் = சுவைத்தல்; **பாற்று** = நீக்கல்; **அன்று** = மாறுபாடு

முற்கால உரை:

வந்த விருந்தினரைப் புறம் வைத்துத் தேவாமிர்தமாயினும் உண்ணப்படாது என்பதாம்.

தற்கால உரை:

விருந்தினரை வீட்டின் வெளியே வைத்து விட்டுத் தாம் வீட்டினுள் உண்டல் விரும்பத்தக்கதன்று.

புதிய உரை:

தம்மிடம் வந்த புதிய விருந்தினருடன் தாம் பெற்றுச் சுவைக்கின்ற அழியாத மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது (வெறும் உணவிடுவது) முறை அற்றதாகும்.

விளக்கம்:

உணவு உடலுக்கு மகிழ்ச்சி. மனதுக்கும் உயிருக்கும் முழுமையான விருந்தோம்பல் என்பது, புதிய விருந்தினரைப் பெரிதும் போற்றிக் காப்பதும், கௌரவப்படுத்துவதுமாகும்.

உணவை வழங்குவது மட்டும் விருந்தல்ல. தமது மகிழ்ச்சியான உணவையும் உணர்வையும் பகிர்ந்து கொள்வதே முறையாகும்.

இரண்டாவது பாடலில் அவரைச் சிறந்த சான்றாளராக்கும் குணப்பண்பைக் குறித்துக்காட்டுகிறார்.

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று.

பொருள் விளக்கம்:

வரு = தாம் எதிர்பார்த்து அல்லது பார்க்காத நேரத்திலும் வருகிற
விருந்து = புதியவருக்கு; வைகலும் = தங்குமிடம் தந்து
ஓம்புவான் = பாதுகாப்பளித்துக் காப்பாற்றுபவன்
வாழ்க்கை = வாழ்க்கையானது; இன்று = இந்த நாளிலிருந்தே
பாழ்படுதல் = அழிவுறாமல்; பரு = சுவர்க்க சுகத்தைத்
தந்து = தந்துவிடும்.

சொல் விளக்கம்:

வைகல் = தங்குதல்; **வரு** = எதிர்பார்க்கிற
பருவந்து = வருந்துதல், இங்கே நான் அந்தச் சொல்லைப் பிரித்திருக்கிறேன்; **பரு** = சுவர்க்கம் (பருமை = பெருமை)
பாழ்படுதல் = அழிவுறுதல்; **இன்று** = இந்தநாள்

முற்கால உரை:

தினந்தோறும் விருந்தோம்புபவனுக்கு, அதனாலே பொருள் குறையாமல் மேலும் மேலும் வளரும் என்பதாம்.

தற்கால உரை:

விருந்தினரைப் பேணுவான் வறுமையுறுதல் இல்லை.

புதிய உரை:

உணவளிப்பதுடன், உணர்வினைப் பகிர்ந்து கொள்வதுடன், விருந்தினர்க்குத் தங்குமிடமும் தந்து பாதுகாக்கின்றவரது வாழ்க்கையில், அழிவுகள் எதுவும் நேராமல் ஆனந்தமயமான வாழ்வே நிறைந்து வரும்.

விளக்கம்:

பருவந்து என்பதற்கு வறுமை என்றும், வருந்துதல் என்றும், பொருள் காண்பார்கள். நான் பரு + வந்து என்று பிரித்தேன். பரு என்றால் கடல் (மிகுதி) என்றும் வளர்தல் என்றும், சுவர்க்கம் என்றும் பொருள்கள் உண்டு. சொர்க்கம் என்பது உடலாலும் மனத்தாலும் உயிராலும் பெறுகிற சுகங்களின் தொகுப்பாகும். ஆகவே, வாழ்வில் அழியாது வளருகின்ற சுகத்திற்கு அளவே இல்லை என்கிற குறிப்பைத் தருகிறார் வள்ளுவர்.

மூன்றாவது குறளில் விருந்தோம்புபவன் வாழ்க்கை மகிழ்ச்சியில் திளைக்கும் என்று காட்டுகிறார்.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்

பொருள் விளக்கம்:

முகன் அமர்ந்து = முகத்தால் பொருந்தி
நல்விருந்து = விருந்தினர்க்கு அதிகமான நன்மைகள் செய்து
ஓம்புவான் = காப்பவன்; இல் = இடத்தில் (மனத்தில்)
(செய் + ஆள்) செய்யாள் = செயல் ஆற்றலும்
அழகும் உடைய வெற்றியாளராக்கி (ஆடவராக)
அகனமர்ந்து = மனம் மகிழ்ச்சியுடன்; உறையும் = தங்கி வாழவைக்கும்

சொல் விளக்கம்:

நல் = நன்மை, அதிகமான; **இல்** = இடம், வீடு.
செய் = செயல்; **ஆள்** = ஆடவர், வெற்றியாளர்
செய்யாள் = அழகு; **உறையும்** = தங்கும்

முற்கால உரை:

விருந்தினரைக் காப்பவன் வீட்டில் இலக்குமி வாசம் பண்ணுவாள்.

தற்கால உரை:

முகம் மலர்ச்சியுடன் விருந்தினரைப் போற்றுபவன் வீட்டில் எப்பொழுதும் செல்வம் கொழிக்கவே செய்யும்.

புதிய உரை:

விருந்தினர்க்கு விருப்பத்துடன் அதிக நன்மைகளைச் செய்கிறவன் மனத்தில் ஆற்றலும் அழகும் வெற்றியும் விளைந்து மனம் மகிழ்ச்சி பெற வாழ்ந்திடும்.

விளக்கம்:

செய்யாள் என்பதற்கு இலக்குமி என்பார்கள். இலக்குமி என்றால் அழகு என்றும் கூறலாம். இங்கே செய் + ஆள் என்று பிரித்திருக்கிறேன். செய் என்பதற்குச் செயல் = ஆள் என்பதற்கு அரசாள்கிற ஆடவர் என்று அர்த்தம். ஆடவர் என்றால் வெற்றியாளர். அரசாளுதல் என்பது அனைவரையும் ஆளுகிற ஆண்மை உடையவர்.

ஆகவே, இந்த நான்காம் குறளில் நல்விருந்து படைப்பவன் நானிலம் ஆளுகிற ஆற்றலாளனாக உயர முடியும் என்கிறார் வள்ளுவர்.

85. வித்துமிடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.

பொருள் விளக்கம்:

விருந்தோம்பி = வந்திருக்கும் விருந்தினரை

மிச்சில் = அவர் வறுமையை (அஞ்ஞானத்தை)

மிசைவான் = உணர்ந்து புரிந்து கொண்டு உதவுபவனுடைய

புலம் = ஆற்றல் மிக்க ஐம்புலன்களிலும்

வித்து = அறிவும். மிடல் = வலிமையும்

வேண்டும்கொல் = தடையின்றி விரும்பி வளரும்.

சொல் விளக்கம்:

வித்து = அறிவு; **மிடல்** = வலிமை

மிச்சில் = வறுமை, தரித்திரம்; அஞ்ஞானம் **மிசை** =உணர்தல்

புலம் = ஐம்புலன்; **கொல்** = குறுக்குத்தாழ் (தடைகள்)

முற்கால உரை:

விருந்தினரைக் காப்பவர் விளைநிலம் தானே விளையும்.

தற்கால உரை:

விருந்தினரை உண்பித்து மிஞ்சிய உணவைத்தான் உண்பவனது நிலத்தில் விதை விதைக்க வேலியே வேண்டுவதில்லை.

புதிய உரை:

வந்திருக்கும் விருந்தினருக்கு உணவூட்டி குறிப்பால் அவர் வறுமையை அறிந்து உதவுபவன் ஐம்புலன்களிலும், ஆற்றல் பெறுகிற அறிவும், வலிமையும் தடையின்றிப் பெருகும்.

விளக்கம்:

எல்லா உரையாசிரியர்களுமே வித்து என்பதற்கு விதை என்றும் மிடல் என்பதற்குப் பதிலாக இடல் என்றும், மிகச் சில என்பதற்கு, மிஞ்சிய என்றும் மிசைதல் என்பதற்கு உண்ணுதல் என்றும் புலம் என்பதற்கு, நிலம் என்றும் பொருள் கொண்டிருக்கின்றார்கள். எனது உரை இங்கே மாறுபட்டிருக்கிறது.

முகத்தால் மலர்ந்தும், அகத்தால் தெளிந்தும் விருந்தூட்டுவதுடன் அவரது தேவைக்கும் உதவ வேண்டும். அதுவே, விருந்தோம்பலின் வேள்விச்சிறப்பாகும். அஞ்ஞானத்தை நீக்குவதும் வறுமையைப் போக்குவதும், வயிறார உண்பிப்பதும் விருந்தளிப்புக்கு மகுடமாய் அமையும். அது அறனின் புலமெய்க்குப் புத்துணர்ச்சி அளிக்கும் என்று இந்தப் பாடலில் விளக்குகிறார்.

86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு

பொருள் விளக்கம்:

செல்விருந்து = மேகம்போல் வந்து தங்கிச் செல்லுகின்ற விருந்தினரை; ஓம்பி = காத்து

வருவிருந்து = மேலும் விருந்தினர்களின் வரவிற்காக

பார்த்திருப்பான் = விசாரித்து எதிர்பார்த்து மதித்து உதவுபவன்

வானம் = மழைபோல் குளிர்ச்சி பொருந்திய

தவர்க்கும் = (ஐம்புலன்களை வென்ற) பற்றற் றோருக்கும்.

நல்விருந்து = நன்மைகளைச் செய்து விருந்தாகத் திகழ்வான்.

சொல் விளக்கம்:

செல் = மேகம் செல்கின்ற; **வானம்** = குளிர்ச்சி, மழை, ஆகாயம்

பார்த்தல் = வணங்குதல், மதித்தல், விரும்புதல், விசாரித்தல்

நல்விருந்து = நன்மைகள் அதிகமாகச் செய்யும் புதுமையாளனாக

விருந்து = புதுமை, சுற்றம், விருந்தினர்

தவர் = முனிவர், பற்றற்றார், அறிஞர்கள்

முற்கால உரை:

வந்த விருந்தாளிகளைக்காப்பாற்றி, வரும் விருந்தாளிகளுக்காக எதிர்பார்ப்பவன் தேவர்களுக்கு விருந்தாளியாகிறான்.

தற்கால உரை:

எப்பொழுதும் விருந்தோம்புபவனுடைய புகழ் அவன் மறைந்த பிறகு கூட நிலைத்து நிற்கும்.

புதிய உரை:

மேகம்போல் வந்து உண்டு மகிழ்ந்து செல்கின்ற விருந்தினருக்குப் பிறகு, மீண்டும் விருந்தினரை எதிர்பார்த்து அவர்களை மதித்து வணங்கி குறை விசாரித்துக் காப்பவன். ஐம்புலன் வென்றாருக்குக் கிடைத்தற்கரிய விருந்தினனாக ஆகிறான்.

விளக்கம்:

செல் என்றால் செல்கின்ற என்பதை விட, மேகம் என்ற பொருள் சிறப்புக்குரியது. கடல் தேடி வந்து நீர் முகந்து செல்கிற மேகம்போல், விருந்தளிப்போனிடம் அறிந்து வந்து அருந்தி மகிழ்பவரைத்தான் வள்ளுவர் செல்விருந்து என்றார். வானம் என்றால் மழை என்றும், மழை என்றால் குளிர்ச்சி என்றும், பொருள் இருப்பதால், தவராகிய அறிஞர்கள், பற்றற்றார்கள், ஐம்புலன் வென்றவர்கள் அனைவருக்கும் நன்மை செய்கின்றவனாகவும் அறன் விளங்குகிறான் என்று விருந்தோம்புவோன் சிறப்பை மேலும் விரிவாக்கிக் கூறுகிறார்.

87. இனைத்துணைத்து என்பது ஒன்றுஇல்லை விருந்தின் துணைத் துணை வேள்விப் பயன்

பொருள் விளக்கம்:

துணை = உதவியை; இனைத்து = எவ்வளவு என்று ஒப்புவமை காட்டுவது என்பதைக் குறிப்பிட முடியாது.
விருந்தின் = உதவிக்காக வந்திருப்பவரின்
துணை = உதவிக்கு; துணை = உதவிபுரிபவரது
வேள்வி = ஈகைத்தன்மையான கொடைப் பண்பு, மற்றும்
பயன் = செல்வத்தைப் பொறுத்தே அமைகிறது.

சொல் விளக்கம்:

இணை = எல்லை, ஒப்பு; **துணை** = உதவி, உதவிபுரிவோன்
வேள்வி = ஈகை **பயன்** = செல்வம்

முற்கால உரை:

விருந்தினரைக் காக்கும் உதவி இவ்வளவு என்பது ஒன்றுமில்லை. விருந்தினர்க்குத் தகுதி அளவேயாம்.

தற்கால உரை:

விருந்தினர் எந்த அளவுக்கு விருந்தை உவந்து ஏற்கிறார்களோ அந்த அளவுதான் விருந்தினரின் தகுதி அமையும்.

புதிய உரை:

உதவி புரிபவரது செல்வத்தின் அளவைப் பொறுத்தே ஈகையின் அளவும் எவ்வளவு என்று அமையும். இவ்வளவு தான் உதவ முடியும் என்னும் அளவு இல்லை. அது விருந்தேற்பவர் மனநிலை, பண நிலை, ஏற்பவரின் தேவை நிலை பற்றியே முழுவதுமாக அமையும்.

விளக்கம்:

5 வது குறளில் விருந்தினரின் வறுமை பற்றியும், அறிந்து கொண்டு விருந்தூட்டி உதவ வேண்டும் என்றார், இதை உணர வேண்டும் என்றார். 6 வது பாடலில் மதித்து விசாரித்து உதவ வேண்டும் என்றார். 7வது குறளில் வந்தவர் தேவைக்கும், தருபவர் ஈகை மனத்துக்கும், செல்வ வளத்திற்கும் உள்ள அளவைக் கூற முடியாது அமைந்திருக்கும். ஆகவே, உதவி புரிபவர் உள்ளமும் செல்வமும்தான் நிர்ணயிக்கும் என்ற எதார்த்த நிலைக்குரிய சூழ்நிலையை உணர்த்துகிறார்.

88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி வேள்வித் தலைப்படா தார்.

பொருள் விளக்கம்:

விருந்தோம்பி = விருந்தினரைக் கவனித்துக் காக்கும்
வேள்வி = ஈகையையும் வணக்கத்தையும் உடைய செயலை
தலைப்படாதார் = பெருமைப்பட்டு, அந்த ஒழுங்குடன் வாழ்கிறவர்.
பரிந்து = ஏற்றுக் கொண்ட தம் பணியைத் துணிந்து
ஓம்பி = வளர்த்துக் கொண்டு; பற்று = தமது அன்பான இசைவை
அற்றேம் = அப்படியே கொண்டு, பாதுகாப்பார்

சொல் விளக்கம்:

பரிந்து = ஏற்றுக் கொண்டு; **ஓம்பி** = வளர்த்து
பற்று = ஆசை, அன்பு, இசைவு; **அற்றேல்** = அப்படியானால்
தலைப்படல் = பெருமைப்படுதல்;
தார் = ஒழுங்கு ; **வேள்வி** = ஈகை

முற்கால உரை:

விருந்தாளிகளைக் காப்பாற்றாதார் பொருளைக் காப்பாற்றி இழந்தோம் என்பார்கள்.

தற்கால உரை:

விருந்தோம்பலைச் செய்து மகிழாதவர்கள், பயனில்லாமல் செல்வத்தை வைத்திருந்து அதனை இழக்கும்போதுதான் வருந்துவார்கள்.

புதிய உரை:

விருந்தோம்பலில், வந்தவரை வணங்கி, ஈகைப் பண்புடன் தந்து வாழ்கிறவர், தாம் ஏற்றுக் கொண்டு தொடங்கிய பணியில் சிறந்த இசைவுடன் ஈடுபட்டு அப்படியே பாதுகாத்து வருவர்.

விளக்கம்:

விருந்தோம்பலை ஒருநாள் செய்வது சிறப்பன்று; ஏற்றுக் கொண்ட பணியைத் தொடர்வதும் தொடர்வதில் துணிவதும், அதை இதயத்தால் இசைவதும், அப்படியே ஏற்றுக் கொள்வதும்தான் விருந்தோம்பலுக்குப் பெருமை சேர்க்கும். அத்தகைய அரிய பண்பாட்டை வளர்த்துக் கொள்வதே சிறந்த அறனின் சீர்மையாகும் என்று எட்டாவது குறளில் விருந்து படைப்பவருக்குரிய விரிந்த மனத்தையும் பரந்துபட்ட பாங்கையும் குறித்துக் காட்டுகிறார்.

89. உடமைஉள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை மடவார்கண் உண்டு.

பொருள் விளக்கம்:

ஓம்பா = பாதுகாத்து அன்பு வளர்க்க; உடமை = உரிய செல்வமும்
உள் = உள்ள மன எழுச்சியும்
இன்மை = இல்லாதபோதும் (வறுமையுற்ற போதும்)
விருந்தோம்பல் = விருந்தினரை ஓம்புகின்ற
மடமை = (மடம் + ஐ) உயர்ந்த கோயிலாக
கண் = பெருமையான அகநோக்கும் புற நோக்கும் கொண்ட
மடவார் உண்டு = இல்லத்துப் பெண்களும் உண்டு.

சொல் விளக்கம்:

உடமை = உரிமை செல்வம்; **உள்** = மன எழுச்சி
இன்மை = இல்லாமை; **மடம் + ஐ = மடமை** = கோயில், வாசம்
ஐ = உயர்ந்த; **கண்** = பெருமை, அகநோக்கு, புறநோக்கு
மடவார் = பெண்

முற்கால உரை:

செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை உபசரியாமை. அது அறிவில்லாரிடத்துண்டு.

தற்கால உரை:

விருந்தினரை வரவேற்றுப் போற்றாதவன் மிகுந்த செல்வம் உடையவனாக இருந்தாலும், அவன் வறியவன் என்றே கருதப்படுவான்.

புதிய உரை:

விரும்தோம்ப உதவும் செல்வமும் இன்றி வறுமைப்பட்டு, அதனால் மன எழுச்சி குறைந்து போனாலும், விருந்தோம்பும் கோயிலாக அவர்களது இல்லத்து பெண்கள் இருந்து உபசரிப்பார்கள்.

விளக்கம்:

இல்லறத்தில் ஆண் பெண் இருவரும் உண்டு. விருந்தோம்பலில் இருவருக்கும் சம பங்குண்டு. விருந்தோம்பல் செய்ய இயலாத வண்ணம் வறுமை ஏற்பட்டாலும் கூட, அறனுக்கு உற்றுழி உதவும் அவரது பெண்கள் உயர்ந்த கோயிலாக விளங்குவர். சிறந்த ஓம்புதலையும் செய்வர்.

90. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து

பொருள் விளக்கம்:

அனிச்சம் = விருப்பமின்மையும்
முகம் திரிந்து = அதனால் முக மாறுபாட்டுடனும்
மோப்ப = (விருந்து படைப்பவர்) சுவாசிக்கிற போதும்
நோக்க = பார்க்கிறபோதும்; குழையும் = நெருங்கி உறவாடுகிற
விருந்து = விருந்தினர்கள்
குழையும் = வாடிப்போவர்

சொல் விளக்கம்:

அனிச்சம் = விருப்பமின்மை, ஒரு நீர்ப்பூ
மோப்பம் = முகர்தல் (பூரகம், இரேசகம் போன்ற) சுவாசித்தல்
குழையும் = நெருங்கி உறவாடும், வாடும், மனம் இளகும்.

முற்கால உரை:

அனிச்சப்பூ மோந்த விடத்து வாடும். விருந்து முகம் மாறுபட்டு பார்க்க வாடும்.

தற்கால உரை:

மிக மெல்லிதாகிய அனிச்சப்பூ முகர்ந்து பார்த்தவுடன் வாடிவிடும். ஒருவர் முகமலர்ச்சி வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் முகம் வாடிப்போய்விடும்.

புதிய உரை:

விருப்பமின்மையால் விடுகிற மூச்சுக் காற்றால் அகம் மாறியதால் முகம் மாறிய விழி நோக்கும், நெருங்கி உறவாட வந்த விருந்தை வாட்டிவிடும்.

விளக்கம்:

மனம் மலர்ச்சியாக இருக்கிறபோது இருக்கும் சுவாசம் மணக்கும். வெறுப்பு கொண்ட மனத்தின் மூச்சில் அனல் பறக்கும். முகம் என்பது அகத்தின் வெளிப்பாடு. விழி என்பது முகத்தின் ஒளிப்பேடு. ஆகவே, விருந்தினரைப் பேசித்தான் புண்படுத்த முடியும் என்பதல்ல. சுவாசக் காற்றும், சுழிக்கும் விழியும் போதும். ஆகவே, உடலியல் நிலையைக் காட்டி உளவியல் இயல்பைக் காட்டி, விருந்தோம்பலின் நுண்மையை வன்மையை மிகத் துல்லியமாக பத்தாவது குறளில் வெளிக்காட்டுகிறார் வள்ளுவர்.

10. இனியவை கூறல்

தெரிந்த சுற்றத்தாருக்கு, தெரியாத புதியவர்களுக்குத் தெம்பூட்டுகிற உணவு படைக்கும் விருந்தோம்பலில், அவர்களது உணர்வுகளையும் மகிழ்விக்கும் முறைகள் பற்றி வள்ளுவர் நுண்மையாகக் கூறினார்.

அவ்வாறு முயல்கிற உணர்வுகளை மகிழ்விக்கும் புற விருந்து முறைக்குத்தான் இனியவை கூறல் என்று கூறி இந்த அதிகாரத்தை அடுத்ததாகத் தந்துள்ளார்.

மனதிலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனிய சொற்களைச் சொல்லுதல் என்று, இனியவை கூறலுக்குப் பலர் பொருள் கூறுவார்கள்.

உள்ளத்தின் கண்ணே உவகையை வெளிப்படுத்துவனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல் என்றும், சிலர் பொருள் கூறுவார்கள்.

இனியவை கூறல் எனும் அதிகாரம் எழுந்தமைக்குரிய காரணத்தை வள்ளுவர், தனது அதிகாரச் சொற்களாலேயே அற்புதமாக விளக்கியிருக்கிறார்.

இனியவன் என்பவன், தானும் மகிழ்ச்சி யுடையவனாக இருக்கிறான். பிறரையும் மகிழ்விப்பவனாக இருக்கிறான். அப்படிப்பட்ட பண்புகள் உடைய அறன் கூறும் சொற்கள் எப்படியெல்லாம் இருக்கும், இருக்க வேண்டும் என்பனவற்றை நினைவுபடுத்தவே, நினைவுக்குள் உட்படுத்தவே இனியவை கூறல் எனும் அதிகாரத்தை விருந்தோம்பலின் பின் வைத்துள்ளார்.

தன் மகிழ்ச்சியைப் பிறரிடம் கூறி மகிழ்விக்கும் சொல்லைவிட, தான் கூறுகிற சொல், மற்றவர்க்கு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும் என்பதுதான், இனிய சொல்லின் இலக்கணம் என்று தொடங்குகிறார் வள்ளுவர்.

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

பொருள் விளக்கம்:

கண்டார் வாய் = (தம்மிடம்) சம்பந்தமில்லாதவரிடம்
ஆல் = இரக்கம்; ஈரம் = அறிவான அன்பு; அளைஇ = கலந்து
படிறிலவாம் = களவு, பொய், கொடுமை இல்லாத
செம்பொருள் = செம்மை நிறைந்த ஒழுக்கம் சார்ந்த (உண்மைநிறைந்த)
சொல் இன்சொல் = சொல்லே, இனிய சொல்லாகும்.

சொல் விளக்கம்:

ஆல் = இரக்கம், ஈரம், அறிவு, அன்பு, அழகு, பண்பு
கண்டார் = சம்பந்தமில்லாதவர். **வாய்** = இடம்

முற்கால உரை:

அறத்தின் வழியை அறிந்தவர் வாய்ச் சொற்களே, இனிய சொற்களாகும்.

தற்கால உரை:

பிறரிடம் வஞ்சனை ஏதும் கொள்ளாமல், உள்ளன்போடு உண்மையாகப் பேசுவதே இன்சொல்லாகும்.

புதிய உரை:

சம்பந்தமே இல்லாத புதியவர்களிடமும் இரக்கத்துடன். அறிவான அன்புடன், பொய் கலவாத உண்மையான, ஒழுக்கம் நிறைந்து பேசும் சொல்லே இனிய சொல்லாகும்.

விளக்கம்:

குடும்பத்தாரிடமும், கூடப்பழகும் சுற்றத்தாரிடமும் கூறுகிற சொற்கள், இனிய சொற்களுக்கான இலக்கணம் இல்லை. முன்பின் தெரியாதவரிடத்து, தனக்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாதவரிடத்துப் பேசுகிற தயவான சொல்லும், அறிவுசான்ற அன்பான பண்பான சொல்லும், மெய்யான மனத்துடன் பேசும் மாறுபாடற்ற சொல்லும் இனிய சொல்லாக இலக்கியம் படைக்கிறது என்று முதல் குறளில் இனியசொல் பற்றிய இயல்பை விளக்கியிருக்கிறார்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்

பொருள் விளக்கம்:

அகன் அமர்ந்து = மனத்தால் விரும்பி (எதிரில் உள்ளவரை)
நன்றே முகனமர்ந்து = நன்றாக முகத்தால் பொருந்தி (முகமலர்ச்சியடைந்து)
ஆகப்பெறின் = முழுவதுமாக அந்தப் பேற்றைப் பெறுகிறபோது (தருகிறபோது) இன்ஈதல் = இனிமை படைக்கின்ற சொற்களைப் பேசும்போது
இன்சொலன்=இன்பம் தரும் சொற்களைச் சொல்கிற வனாகிறன்.

சொல் விளக்கம்:

அமர்ந்து = விரும்பி, பொருந்தி; **இன்** = இனிய
ஈதல் = படைத்தல், கொடுத்தல்; **ஆக** = முழுவதும்

முற்கால உரை:

முகனமர்ந்து இனிய சொற்களைச் சொல்லுவானாகில் அகனமர்ந்து கொடுத்தலினும் நல்லது.

தற்கால உரை:

கொடையைப் பெறுவதைக் காட்டிலும் இன்சொல்லைக் கேட்பதே ஒருவனுக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கும்.

புதிய உரை:

தொடர்பில்லாத புதியவரை மனத்தால் விரும்பி, நன்கு முகத்திலே அன்புபொருந்தி, முழுவதுமாக மாறுகிறபோதே இனியசொற்களைப் படைத்துச் சொல்கின்ற இன்சொலன் ஆகிறான்.

விளக்கம்:

இனிய சொற்களைப் பேச, முதலில் மனத்தால் ஒன்றிப் போக வேண்டும். அகத்தை முகந்து காட்டுகிற முகம் தெளிந்து, பொருந்துகின்ற குணத்தைப் பெறும். அதன் மூலமாகப் பேசுகிற சொல்லிலும் பண்பான பரிவான இன்சொல் பிறக்கும்.

இன்சொலன் ஆவதற்கு மனமும் முகமும் உடலும் முழுதும் பொருந்த வேண்டும் என்று இன்சொல் பிறக்கும் இடங்களை இரண்டாவது குறளில் வள்ளுவர் காட்டுகிறார்.

93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம் இன்சொல் இனதே அறம்.

பொருள் விளக்கம்:

முகத்தான் அமர்ந்து = (காணும் புதியவர்களை) விரும்பிக் காணுகிற முகப்பொலிவுடன்

இனிது நோக்கி = அன்பாக மனம் செலுத்தி

இனதே = (நீங்கள்) எங்கள் உறவினர் என்று

இன்சொல் = இனிய சொற்களைச் சொல்கின்ற

அகத்தான் ஆம் = இல்வாழ்வார்க்கு

அறம் = சம்மந்தப் படுத்துகின்ற சொல்லே ஞானமாகும். (ஒழுக்கம் சார்ந்த நல்வினையுமாகும்)

சொல் விளக்கம்:

அமர்ந்து = விரும்பி; **நோக்கி** = மனம் செலுத்தி

இனதே = உறவின்முறை; **ஆம்** = சம்மதம்

தெரிவிக்கும் சொல்; **அகத்தான்** = இல்வாழ்வான்

அறம் = ஞானம், ஒழுக்கம், நல்வினை

முற்கால உரை:

தருமமானது இன்சொல்லின் இடத்தே என்பதாம்

தற்கால உரை:

ஒருவரை முகம் கொடுத்து இனிமையாகப் பார்த்து உள்ளத்தோடு ஒன்றிப் பொருந்திய இனிய சொற்களைக் கூறும் தன்மையே அறமாகும்.

புதிய உரை:

வந்தாரை, விரும்பிக் காணும் முகத்துடன், மனமகிழ்ச்சியை விழியால் வெளிப்படுத்தி, நீங்கள் எங்கள் உறவினர் என்று சம்மந்தப்படுத்துகிற இனியசொற்களைப் பேசுவது இல்வாழ் வாரின் ஞானமிகு ஒழுக்கப் பண்பாகும்.

விளக்கம்:

முகபாவத்தாலும், விழிநோக்காலும் நீங்கள் வேறல்லர் உங்களுக்கு நாங்கள் உறவினர்தாம் என்பதை வெளிப்படுத் துவதுடன், சம்மந்தப்படுத்தும் பேச்சானது, ஞானத்தின் வெளிப்பாடே. அறமான ஞானம் இனிய சொல்லுக்கு ஆகாரம் என்னும் குறிப்பை 3 வது குறளில் கூறுகின்றார்.

94. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு

பொருள் விளக்கம்:

யார் மாட்டும் = எவராக இருந்தபோதும்
இன்புறூஉம் = உள்ளத்திற்கும் ஐம்பொறிகளுக்கும் இனிமை பயப்பது போன்ற
இன்சொல் = இனிய சொல் சொல்கிறபோது
துவ்வாமை = கேட்பாரது வெறுமை உணர்வும், வறுமை நிலையும்
துன்புறூம் = வருத்தப்பட்டு வெளியேறும்
அவர்க்கு = அந்த இனிய சூழ்நிலை அமையப்பெற்ற வர்க்கு
இல்லாகும் = வீடு பெற்றது போன்ற அனுபவம் ஏற்படும்.

சொல் விளக்கம்:

துவ்வாமை = அனுபவம், வறுமை, தரித்திரம்; **துன்பு** = துன்பம்
உறு = மிகுதி; **இல்** = வீடு; மோட்சம்; சுவர்க்கம் இன்பம்

முற்கால உரை:

இன்சொல் உடையார் வறுமை உறுதல் இல்லை. துன்பம் அடைவதில்லை.

தற்கால உரை:

எவரிடத்தும் இன்பம் பயக்கும் இனிய சொற்களைச் சொல்லுபவருக்குத், துன்பத்தைத் தரும் வறுமை இல்லாமற் போகும்.

புதிய உரை:

எவராக இருந்தபோதும் அவரை மதித்து இனிய சொற்களைச் சொல்லுகிறபோது, அவர்க்கு இன்பமே நிறையும். அதனால் அவரை வருத்துகின்ற வறுமையும் வெறுமையும் துன்பம் அடையும். சொர்க்கத்தில் இருப்பது போன்ற மகிழ்வும் உண்டாகும்.

விளக்கம்:

இனிய சொற்களைச் சொல்லுபவருக்குத் துன்பம் வராது. வறுமை அண்டாது என்பதைவிட, அவர் பேசிவரும் இனிய சொற்களால் வந்தவரது துன்பம் அழியும் மனம் சுகம் பெறும் சொர்க்க நிலையான இன்பம் மிகுதியாகும் என்பதுதான் சிறந்த பயனாக இருக்கும். ஆகவே, 4 வது குறளில் இன்சொல்லின் ஏற்றமிகு பயனை வள்ளுவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணிஅல்ல மற்றுப் பிற

பொருள் விளக்கம்:

பணிவு = (பணி + உ) உள்ளும் புறமும் கொண்டாற்றுகிற
உடையன் = பண்பு உடையவன்
இன்சொலன் = இனிய சொற்களை உடையவன்
ஆதல் = என்று காட்சி தருகின்ற அழகே
ஒருவற்கு = இல்லறம் நடத்துகிற ஓர் அறனுக்கு
அணி = பெருமை தருவதாகும். (அழகானது)
மற்றுப் பிற அல்ல = மற்ற எந்த அழகும்
ஒழுக்கமும் பெருமை தருவது அல்ல. (பெருமைதராது).

சொல் விளக்கம்:

பணி = ஈகை, தொண்டு; **உ** = அகமும் புறமும்; **ஆதல்** = தரிசனம், மிகுதியாதல்; **அணி** = பெருமை, அழகு, ஒழுங்கு;

முற்கால உரை:

இன்சொல் உடமையும் பணிவுடமையும் ஒருவற்கு நல்ல அணிகளாகும்.

தற்கால உரை:

இன்சொல்லே ஒருவனுக்குச் சிறந்த அணிகலனாக விளங்குவதாகும்.

புதிய உரை:

உள்ளும் புறமும் மகிழத் தொண்டாற்றுகிற பண்பும், இனிய சொல் பேசுகிற அன்பும் கொண்டு, காட்சி தருகிற அறனுக்கு அவையே பெருமை சேர்க்கும். வேறு எதுவும் அதற்கு ஈடில்லை.

விளக்கம்:

பணிவுடமை என்பது தாழ்ந்து போய் வணங்குவது இல்லை. பெறுபவர் அகமும், புறமும் மகிழ ஈவதும் பணிபுரிவதும், அப்படியே பெரும்பாலும் வருவோர்க்குத் தரிசனம் தருகிற அழகானவன், ஒழுங்கு மிகுதியானவன். அந்த அழகும், அன்பும் தான் அறனுக்குப் பெருமை. மற்ற செல்வங்கள் எல்லாம் பெருமை தருவன அல்ல.

5வது குறளில் இன்சொல்லின் வல்லமை எவ்வளவு என்பதை மேன்மைப் படுத்திக் காட்டுகிறார் வள்ளுவர்.

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்

பொருள் விளக்கம்:

அறம் நாடி = ஒழுக்கமான ஞானத்தை ஆராய்ந்து
இனிய சொலின் = இனிமையாகப் பேசினால்
அல் = தீவினை (செய்கிற) அல்லது மயங்கித்திரிகிற
அவை = மக்கள் கூட்டம்; தேய = குறைய
நல்அவை = மேன்மைமிகு உயர்ந்தோர் தொகை.
பெருகும் = மிகுதியாகும்.

சொல் விளக்கம்:

அல் = மயக்கம், தீவினை; **அவை** = கூட்டம், உயர்ந்தோர் சபை
அறம் = ஒழுக்கம், ஞானம்; **நாடி** = ஆராய்ந்து;

முற்கால உரை:

ஒருவன் இன்சொற் சொல்லுவானாகில் பாவம் குறைந்து புண்ணியம் வளரும்.

தற்கால உரை:

ஒருவன் இனிய சொற்களைச் சொல்லும்போது அவனுடைய தீமைகள் அகலவும், நன்மைகள் பெருகவும் வழி ஏற்படும்.

புதிய உரை:

அறனானவன் ஒழுக்கம் சார்ந்த ஞானத்தை ஆராய்ந்து இனிமையாகப் பேசுகிறபோது, தீ வினை செய்கிற கூட்டம் குறைந்து மேன்மைமிகு உயர்ந்தோர் சபையாகப் பெருகி வளரும்.

விளக்கம்:

அல்லவை நல்லவை என்னும் இடத்தில் என் பொருள் மாறுபடுகிறது. அறிவில்லாமையால் மயக்கத்திலும் நலம்போக்கும் நீசச் செயல்களிலும் உழல்வோர், ஒழுக்கம் பற்றிய உயர்ந்த ஞானத்தை இனிமையான சொற்கள் மூலமாய்க் கேட்கிறபோது, அவர்கள் மோச வாழ்வு மாறுகிறது. மனம் தேறுகிறது. உயர்ந்தோராக வாழ்கிற வாய்ப்பும் பெருகுகிறது. இனியசொல் குணத்தையும் மாற்றும். மக்கள் மனத்தையும் மாற்றும் வல்லமை உடையது என்று 6ம் குறளில் கூறுகிறார்.

97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல்

பொருள் விளக்கம்:

நயன்ஈன்று = மகிழ்ச்சியை உண்டாக்கி
நன்றி பயக்கும் = ஒழுக்கத்தைப் பிறப்பிக்கின்ற
பயன்ஈன்று = வாழ்க்கையை வழங்குகிற
பண்பு = பாடறிந்து ஒழுகிடும் செயல் நன்மையின்
தலைப்பிரியா = பெருமை பிறழாமல் இருப்பதே
சொல் = இனிய சொல்லாகும்.

சொல் விளக்கம்:

நயன் = இன்பம், மகிழ்ச்சி, நன்மை; **ஈன்று** = உண்டாக்குதல்
நன்றி = அறம், ஒழுக்கம், ஞானம், உதவி; **பயன்** = செல்வம், வாழ்க்கை; **செயல்** = நன்மை, நற்குணம்
தலை = பெருமை; **பிரியா** = விலகாத, நீங்காத

முற்கால உரை:

இனிய சொற்களானவை நீதியையும் தருமத்தையும் தரும்.

தற்கால உரை:

இனிய சொற்கள் ஒருவருக்கு எப்பொழுதும் நன்மையையும் பயக்கும். இன்பத்தையும் தரும்.

புதிய உரை:

இனிய சொல்லின் இலக்கணமாவது மகிழ்ச்சியை உண்டாக்கி, ஒழுக்கத்தைப் பிறப்பிக்கிற வாழ்க்கையை வழங்குகிற செயல் நன்மையை, தொடர்ந்து பெருமை குன்றாமல் வழங்குவதாகும்.

விளக்கம்:

இனியசொல் என்பது கேட்பவரை மகிழ்விப்பது மட்டுமல்ல. அவரது தீவினைகளைத் தீய்த்து விடவும், மேன்மை நிலையை எய்தி விடவும் உதவுகிறது என்று 6 வது குறளில் கூறிய வள்ளுவர், 7 வது குறளில் அந்த இனியசொல் ஒழுக்கமான வாழ்க்கையையே உண்டாக்கும் வல்லமை பெற்றிருக்கிறது என்று இலக்கணம் வகுத்துக் காட்டுகிறார். இனிய சொல்லுக்குரிய ஈடற்ற ஆற்றலை இக்குறள் வெளிப்படுத்துகிறது.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்

பொருள் விளக்கம்:

இன்சொல் = இனிய சொல்லானது
சிறுமையுள் = துன்பம் தருகிற நோய், வறுமை, வியாதி போன்றவற்றையும்
நீங்கிய மறுமெய்யும் = குற்றம் மாசு போன்றவை நீங்கிய உடலையும்
இம்மையும் = அதனால் இந்த உலகில் பெறுகிற எல்லா இன்பத்தையும்; தரும் = தருகிறது

சொல் விளக்கம்:

மறு = குற்றம், **மாசு** = மெய் உடல்
சிறுமை = துன்பம், நோய், வறுமை, வியாதி
இம்மை = இகபோகம், இந்த உலகம், இப்பிறப்பு

முற்கால உரை:

இன் சொற்களானவை இருபிறப்பிலும் இன்பத்தைத் தரும்.

தற்கால உரை:

இனிய சொற்கள் இப்போதும் சரி, பின்னர் எப்போதும் சரி இன்பம் பயக்கும்.

புதிய உரை:

இனிய சொல்லானது, துன்பம் தருகிற நோய், வறுமை போன்ற மாசுகள் நீங்கிய உடலைத் தந்து, அதனால் இந்த உலகத்தில் கிடைக்கிற எல்லா இன்பங்களையும் தருகின்றது.

விளக்கம்:

மனம் மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுகிறபோது இயல்பாகவே உடலும் நன்கு செழிப்படைகிறது. செழித்த உடலுக்குள் நலமும் பலமும் வளமும் கொழிக்கும். அதனால் வாழ்வும் எல்லாவித இன்பங்களையும் பெற்று பேரின்பம் கொள்கிறது.

எட்டாவது குறளில் இன்சொல் தரும் இனிய பயன்கள் வாழ்வை எப்படியெல்லாம் உயர்த்தி வழிகாட்டுகிறது என்று கூறுகிறார் வள்ளுவர்.

99. இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்கு வது

பொருள் விளக்கம்:

இன்சொல் = (தான் பேசியதும் பிறர் பேசியதுமான) இனிய சொல்;

இனிதீன்றல் = இன்பம் பயக்கிறது

காண்பான் = என்னும் காட்சியைக் காண்கிற அறிவானவன், அறிபவன் (ஆன்மாவைப் பெறுபவன்)

வன்சொல் = பொல்லாங்கைத் தருகிற சொல்லை; எவன் = எப்படி

கொலோ = பிதற்றி (அலட்டிக் கொண்டு) தொந்தரவு தந்திட

வழங்குவது = பேசிட முடியும்?

சொல் விளக்கம்:

காண்பான் = ஞாதிரு. ஞாதிரு என்றால் ஞானவான், அறிபவன், ஆன்மா என்று அர்த்தம்; **எவன்** = எப்படி; **சொல்** = வருத்தம்; **கொல்** = வருத்தம், அலட்டுதல் (அலட்டுதல் என்றால் பிதற்றுதல், தொந்தரவு செய்தல்)

வன்சொல் = பொல்லாங்கு தரும் சொல்

முற்கால உரை:

இன்சொல் இன்பந் தருதலைக் காண்பவன் வன்சொல் சொல்லுவதென்ன?

தற்கால உரை:

பிறர் கூறும் இனிய சொற்களைக் கேட்ட பிறகு அவன் பிறரிடம் இன்சொல்லையே பயன்படுத்த வேண்டும்.

புதிய உரை:

பேசுகிற இனிய சொல் இன்பம் பயப்பதைக் காட்சியாகக் காண்கிற அறிபவன் (ஆன்மாவை வளர்த்துக் கொள்கிறவன்). பொல்லாங்கு தருகிற சொல்லை எப்படி பேசி பிதற்றிட முடியும்?

விளக்கம்:

இன்பம் பயக்கிற சொற்களைக் காட்சி பூர்வமாக அறிகிறவன் ஞானவான் ஆகிறான். ஞானவான் என்பவன் நல்ஒழுக்கம் வாய்ந்தவன். உடலையும் மனத்தையும் காக்கிற ஆற்றல் ஆன்மாவுக்கு உண்டு. அதனால், காண்பான் என்ற சொல்லை வள்ளுவர் இங்கே பயன்படுத்துகிறார். ஆத்மபூர்வமாக இனிய சொற்களை நேசிக்கிறவன் எப்பொழுதும் வன்சொல்லை வழங்க மாட்டான் என்கிறார் வள்ளுவர். உடலாலும் மனதாலும் மட்டுமல்ல, இன்சொல்லை ஆத்மாவாலும் வழங்க வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கம்.

100. இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

பொருள் விளக்கம்:

இனிய = பிறரை மகிழ்விக்கும் மனமும் சொல்லும்
உளவு = தம்மிடம் இருக்கும் இரகசியத்தை
ஆக = முழுவதும் அறிந்திருக்க
இன்னாத கூறல் = பிறரைத் துன்புறுத்தும்படி பேசுதல்
கனியிருப்ப = மனம் களிக்கின்ற தித்திப்புப் பழம் இருக்க
காய் = விதையை (துவர்ப்புச்சுவையை)
கவர்ந்து = கொள்ளையடிப்பது; அற்று = போன்றதாகும்

சொல் விளக்கம்:

இனிய =மகிழ்விக்கிற; **உளவு** = இரகசியம்
ஆக = அவ்வாறாக; **இன்னாத** = துன்பம் செய்கிற; **கனி** = தித்திப்பு;
காய் = விதை, பழுக்காத கனி

முற்கால உரை:

இன்சொல் இருக்க வன்சொற் சொல்லுதல் கனியிருக்கக் காயைத் தின்றாற்போலும் என்பதாம்.

தற்கால உரை:

இனிய சொற்கள் இருக்க இன்னாத சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்க காய்களைப் பறித்தல் போலாகும்.

புதிய உரை:

பிறரை மகிழ்விக்கும் இரகசியம் முழுவதும் அறிந்திருந்தும், பிறரைத் துன்புறுத்தும்படி பேசுகிற சொல்லானது, மனம் களிக்கப் பேசுகிற பழத்தை விட்டு விட்டுத் துவர்க்கின்ற விதையைக் கொள்ளையடிக்கும் செயலுக்கு ஒப்பாகும்.

விளக்கம்:

தெரிந்ததை, உகந்ததை, முடிந்ததை செய்யாமல், எதிர்மாறாகச் செய்தல், எந்தவிதத்திலும் சிறப்பு தராது. கொடுப்பதைத் தராமல் கொள்ளையடித்து மகிழும் கொடூரக் குணத்திற்கு ஒப்பாகும் என்று முத்தாய்ப்பாக முடிக்கிறார்-வள்ளுவர்.

11. செய்ந்நன்றி அறிதல்

இல்லறத்தில் வாழ்கிறவர்கள் மட்டுமல்ல. எல்லோருக்கும் இயல்பாக இருக்க வேண்டியது இனிய சொற்கள்தாம் என்பதற்காக, பத்தாம் அதிகாரத்தில் இனியவைகூறல் என்றார்.

இனியவை கூறல் என்பது சொல்லால் சுகமளிக்கும் பண்பாகும். சொற்கள் மட்டுமே வாழ்க்கையாகா அல்லவா?

செயலும் சேர்ந்ததுதானே வாழ்க்கை. செயலாலும் மற்றவர்களின் சிந்தை குளிரச் செய்ய வேண்டும். சுகமான வாழ்வு பெற வைக்கவேண்டும் என்ற சீர்மையைக் குறிக்கவே **செய்ந்நன்றி அறிதல்** என்று அதன்பின் கூறுகிறார்.

செய் என்றால் **செய்கை** என்றும், செய்கை என்றால் **ஒழுக்கம் பண்படுத்தல் உடன்பாடு** என்றும் பொருள் உண்டு.

நன்றி என்றால் **நன்மை, உதவி, ஒழுக்கம்** என்ற பொருள்கள் உண்டு. அறம் சார்ந்த உதவி என்றும் கொள்ளலாம்.

அறிதல் என்றால் உணர்தல், தெரிதல், பயிலுதல், தெளிதல் என்று பல பொருட்கள் உண்டு.

பிறர் நமக்குச் செய்த நன்மையாயினும், பிறர்க்கு நாம் செய்கிற நன்மையாயினும் ஏற்றுக் கொள்ளுகிற முறைகள் மூன்று விதமாய் அமைந்துள்ளன.

ஐம்புலன்களால் நன்மையை உணர்தல், செம்புலனாம் சிந்தையால் நன்மையின் மேன்மையைத் தெரிதல். உணர்ந்து தெரிந்த உண்மையை உரமூட்டும் ஆன்மாவால் தெளிதல் என்பதாகும்.

ஆகவே, ஒருவர் செய்கிற உதவியை ஒருவர்க்குச் செய்கிற உதவியை அறிந்து வாழ்கிற செயல் வாழ்க்கை முறையைச் சொல் வாழ்க்கை முறைக்குப் பிறகு வைத்து நல்வாழ்க்கை வாழ வழி காட்டுகிறார் வள்ளுவர் பெருந்தகை.

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது

பொருள் விளக்கம்:

செய்யாமல் = போராட்டம் (மனதால் உடலால்) இல்லாமல்
செய்த = மனப்பூர்வமாக, உடல் ஆர்வமாகப் புரிந்த
உதவிக்கு = ஒழுக்கம் சார்ந்த அறிவான உதவியானது
வை + அகமும் = நுண்மையான மனதையும் (மனம்)
வான் அகமும் = செம்மாந்த மனத்தையும் (ஆன்மா)
ஆற்றல் = வெற்றி கொள்கிற; அரிது = சிறப்பு பெற்றதாகும்
செம்மாந்த மனத்துக்கு மேல் சிறப்பு பெற்றது சீரான உதவியாகும்.

சொல் விளக்கம்:

மல் = போர்புரிதல், **உதவி** = அறிவான நன்மை
வை = நுண்மையான, கூர்மையான; **வான்** = உயர்ந்த மேன்மையான; **ஆற்றல்** = வலிமை, ஞானம், அதிகம், வெற்றி
அரிது = அருமையானது, எளிதாய் கிடைக்காதது.

முற்கால உரை:

ஒருவன் பிறருக்கு உதவி வேண்டாது செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண் உலகத்தையும் தந்தாலும் ஒத்தல் அரிது.

தற்கால உரை:

தமது உதவியை முன் பெறாதவர் தமக்குச் செய்த உதவி ஒப்பற்றது.

புதிய உரை:

செய்யலாமா வேண்டாமா என்று போராட்டம் இல்லாமல், ஒருவருக்குச் செய்கிற ஒழுக்கம் சார்ந்த உதவியானது, நுண்மையான மேன்மையான மனம் பெற்றிருக்கும் சிறப்பையும் வெற்றி கொள்ளும் வலிமை பெற்றதாகும்.

விளக்கம்:

உடல், உள்ளம், ஆன்மாவால் ஒன்றிச் செய்கிற உதவிதான் ஒப்பற்றது. இம்மூன்றும் ஒன்று சேர்ந்து செய்கிற உதவிக்கு ஈடு எதுவும் இல்லை என்று உடன்பாடான உதவியின் முதன்மை நிலையை முதல் குறளில் குறித்திருக்கிறார்.

102. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள் விளக்கம்:

காலத்தின் = தேவைப்படுகிற சரியான சமயத்தில்
ஆல்செய்த = இரக்கப்பட்டு அதிசயமாய்ப் புரிந்த
நன்றி = நன்மை சான்ற உதவியானது
சிறிதெனினும் = அளவில் சிறியதாக அமைந்தாலும்
ஞாலத்தின் = உயர்ந்தோரின்
மாண = மாண்புமிகு பெருமைகளை விட
பெரிது = பேரளவு உடையதாகும்.

சொல் விளக்கம்:

காலம் = தக்க சமயம், **ஆல்** = அதிசயம், இரக்கம்
ஞாலம் = உயர்ந்தோர், உலகம்; **மானம்** = மாட்சிமை, மாண்பு

முற்கால உரை:

ஒருவன் காலத்திற் செய்த உதவி சிறிதாயினும் அது உலகினும் பெரிது என்பதாம்.

தற்கால உரை:

பருவமல்லாத காலத்தில் உதவி செய்யாத உலகத்தைவிட, காலமல்லாத காலத்திலும் உதவி செய்கிறவன் தான் பெருமையில் மிக்கவனாவான்.

புதிய உரை:

தேவைப்படுகிற சரியான சமயத்தில் செய்யப்படுகிற இரக்கம் மிகுந்த அதிசயிக்கத்தக்க உதவியானது, சிறியது என்றாலும், அது உயர்ந்தோரின் உள்ளத்தை விடப் பெருமைகளைவிட, பெருமை மிக்கதாகும்.

விளக்கம்:

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு, உயர்ந்தோராலத்தான் உலகம் நிலைத்திருக்கிறது. உயர்ந்தோரின் உள்ளம்தான் உலகைவிடப் பெரியதாகும். உண்மையில் அரியதாகும். அந்த உள்ளத்திற்கும் மேலான பெருமையை விட, தருணத்தில் செய்கிற சிறு உதவி பெருமை படைத்து விடுகிறது என்பதை இரண்டாவது குறளில் தெளிவுபடுத்துகிறார் திருவள்ளுவர்.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது

பொருள் விளக்கம்:

பயன் = புகழ் உரையை
தூக்கா ர்செய்த = சிந்திக்காதவராய் செய்கிற (உதவியை மட்டுமே எண்ணி); உதவி = ஒழுக்கம் சார்ந்த உதவியால் (பெறுகிற)
நயன்தூக்கின் = மகிழ்ச்சியை ஆய்ந்து பார்த்தால்
நன்மை = (தருகிற) அகமும் சமாதானமும்
கடலின் பெரிது=மிகுதியிலும் அளவிலாப் பெருமையுடையதாகும்.

சொல் விளக்கம்:

பயன் = சொல்லுரை, புகழுரை; **தூக்கார்** = சிந்திக்காதவர்
நயன் = இன்பம், மகிழ்ச்சி, நன்மை.
நன்மை = சுகம், சமாதானம்; **கடல்** = மிகுதி

முற்கால உரை:

பின்வரும் பலனை யெண்ணாது, செய்த உதவியின் தன்மை கடலினும் பெரிது என்பதாம்.

தற்கால உரை:

தனக்கு எதிர்காலத்தில் பயன் கிடைக்கும் என்று ஆராயாமல், பிறர்க்குச் செய்த உதவியை ஆராய்ந்து பார்த்தால், அதனால் ஏற்படும் நன்மை கடலை விடப் பெரியதாக இருக்கும்.

புதிய உரை:

செய்கிற உதவியால் கிடைக்கிற புகழுரையை எதிர்பார்க்காமல் ஒருவர் மனப்பூர்வமாகச் செய்கிற உதவியின் மகிழ்ச்சியைப் பார்த்தால், அது தருகிற சுகமும் சமாதானமும் மிகுதியோ மிகுதியாகும்.

விளக்கம்:

கடல் என்றால் ஓர் அளவு உண்டு. எல்லை உண்டு. அதனால்தான் அளவுள்ள கடலைக் கூறாமல், அளவற்ற மிகுதி என்ற சொல்லாக இங்கே அர்த்தம் கொண்டிருக்கிறோம்.

ஒருவர் பெறுகிற சுகத்திற்கும் மன அமைதிக்கும் அளவுண்டோ! நன்றி செய்கிறவர் நன்றியறியப் பெறுகிறவர் பெறுகிற இன்பத்தைச் சுகத்தைச் சமாதானத்தை 3 ஆம் குறளில் விளக்குகிறார் வள்ளுவர்.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்

பொருள் விளக்கம்:

தினைத்துணை = மிகச் சிறிய அளவு
நன்றி செயினும் = இன்பம் தரத்தக்க உதவி செய்தாலும்
பயன் = அந்த உதவியின் மதிப்பை
தெரிவார் = மனமறிய தெரிந்து கொண்டவர்.
பனைத் துணையாக = மிகப் பெரிய உதவியாக
கொள்வார் = (பற்றி) வளர்த்துக் கொள்வர்

சொல் விளக்கம்

தினை = மிகச் சிறிய; **துணை** = அளவு
பனை = மிகப் பெரிய; **கொள்** = மனத்திலே கொள்ளுதல்
தெரிவார் = மனமறிதல், விளக்கமறிதல்

முற்கால உரை:

தினையளவு நன்றி செய்தாலும் பனையளவு நன்றியாகக் கொள்வர் பெரியோர் என்பதாம்.

தந்கால உரை:

உதவியின் பயனை நன்று அறிந்தவர்கள் சிறிய உதவியாக இருந்தாலும் அதனைப் பெரியதொரு உதவியாகக் கொள்வார்கள்.

புதிய உரை:

இன்பம் அளிக்கக்கூடிய சிறிய உதவியையும் மிகப் பெரியதாக மனத்திற்குள் வைத்து, அதை மேலும் வளர்த்துப் பயன் பெறுவார்கள், மனமறிய தெரிந்து கொண்ட பயனாளர்கள்.

விளக்கம்:

உதவியைத் தினை அளவு என்றும் பனை அளவு என்றும் குறிப்பிட்ட கருத்தை அனைவரும் ஏற்றிருக்கின்றனர். உதவியை ஐம்புலனால் ஏற்றுக் கொள்ளுதல் **முதல் நிலை.** அதனை மனத்தில் நினைத்தல் **இரண்டாம் நிலை.** அதை மறக்காது மனதிலே ஏற்று நிலையாய் வைத்து நெறியாய் வளர்த்துக் கொள்வது **மூன்றாம் நிலை.**

அதனால்தான் கொள்வார் என்றார். கொள்வார் என்றால் **கற்பார்** என்றும் அர்த்தம். தெரிவார் என்றால் மனமறிய விளக்கம் ஆதல், அதாவது உதவியை ஏற்று அதைப் புரிந்து கற்று, தெரிந்து, வளர்த்து மகிழும் பயனாளர் என்பதை 4 வது குறளில் விளக்குகின்றார்.

105. உதவி வரைத்துஅன்று உதவி உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து

பொருள் விளக்கம்:

உதவி = துணை, கொடை அல்லது ஒத்தாசை போன்று செய்கிற
உதவி வரைத்து = உதவியின் அளவு
அன்று = அந்த நேரத்தில் (தேவையான சமயத்தில்)
செயல்பட்டார் = செயல்புரிந்து செய்தவரின்
சால்பின் வரைத்து = பண்பான சான்றாண்மையை பொறுத்தே
உதவி = உதவியாக அமையும்

சொல் விளக்கம்:

உதவி = துணை, கொடை, ஒத்தாசை; **வரைத்து** = அளவு, மலை
அன்று = அந்நாள்; **சால்பு** = பண்பு, சான்றாண்மை

முற்கால உரை:

உதவிக்கு அளவில்லை. உதவி செய்யப் பெற்றுக் கொண்டவர் தகுதியளவே அளவாம்.

தற்கால உரை:

ஒருவன் செய்த உதவி அந்த உதவியின் அளவைப் பொறுத்து அல்ல. அந்த உதவியைப் பெற்றவரின் பண்பின் அளவைப் பொறுத்தே அமையும்.

புதிய உரை:

செய்த உதவியின் அளவானது, தேவைப்படுகிறவருக்கு அந்த நேரம் செய்பவரின்பண்பு ஒழுக்கம் சான்ற ஒத்தாசையைப் பொறுத்தே அளவிடப்படும்.

விளக்கம்:

உதவியதற்காகவே ஓர் உதவியின் அளவு மதிப் பிடப்படுவதில்லை. தேவையை அறிந்து உதவுகிறவரின் பண்பான உதவி ஒழுக்கமான உதவியாகத், தேவையானவர்க்குத் தேவைப்படுகிற சமய சந்தர்ப்பம் இவற்றை வைத்தே, உதவியின் அளவு உணரப்படுகிறது.

இந்தக் குறளில் 3 முறை உதவி என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். அன்று உதவி, செயல்பட்டார் உதவி, விரைந்து உதவி என்று மூன்று பகுதியாகப் பிரித்து உதவியின் தன்மையை நுண்மையாக விளக்குகிறார்.

அந்த நேரத்திற்கான உதவி, உதவியைச் செய்கிறவரின் உதவி. இந்த இரண்டும்தான் உதவியின் அளவை மிகுதியை வெளிப்படுத்திக் காட்டும் என்பதால் உதவிடும் நேரம் காலம் நெஞ்சம் கண்டு, உதவியை அறிக என்று கூறிச் செல்கிறார் வள்ளுவர்.

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு

பொருள் விளக்கம்:

மாசற்றார் (மா + சற்றார்) = மேன்மையான நற்குணாளர்களுக்கும் உள்ள

கேண்மை = (கேள் + மை) குற்றத்தை செவிமடுத்து

மறவற்க = நிலையாக (அதனை) நீக்கிவிடு

துன்பத்துள் = துயரம் நேர்கிற பொழுது

துப்பு ஆயார் = உதவுவதனால் தனக்கு நன்மை கிடைக்குமா என்று எதிர்பார்க்காமல் உதவுபவர்; நட்பு = தொடர்பை

துறவற்க = (என்றும்) துறந்து விடாதே

சொல் விளக்கம்:

மா = அறிவு, பெருமை, மேன்மை; **சற்** = நல்ல, சன்

கேள் = செவி கொடு, கீழ்ப்படி, புத்திகேள்; **மை** = குற்றம்

துப்பு = நன்மை; **ஆயார்**= ஆராய்பவர்; **நட்பு** = தொடர்பு, உறவு

முற்கால உரை:

குற்றமற்றவர் சிநேகத்தை மறவாதிருக்கக் கடவன். துன்ப காலத்து உதவினவர் சிநேகத்தை விடாதிருக்கக் கடவன்.

தற்கால உரை:

குற்றமற்றவரின் நட்பையும், காலத்தே உதவி செய்தவர்களையும் எந்த ஒரு காலத்திலும் மறக்கக் கூடாது.

புதிய உரை:

உதவுகிற பண்பாளரின் குறைகளை மறந்து விடு. மற்றவர் அவர் துன்பத்தில் நமக்கு என்ன கிடைக்கும் என்று ஆராயாமல் உதவுகிறவரின் தொடர்பை துறக்காமலும் நன்றி அறிதல் வேண்டும்.

விளக்கம்:

உதவுகிறவர்களின் தரம் பற்றி 5வது குறளில் கூறிய வள்ளுவர், 6 வது குறளில் மேன்மையானவர் என்பதாக மாசற்றார் என்கிறார்.

உதவுவதில் சொல்லால், பொருளால், செயலால் என்று பலவகை இருப்பதால், சொல்லால் உதவி பெறுபவர் குற்றம் தீர்க்கக் கூறுகிறபோது மறக்காமல் கேட்டு நடக்கவே மறவற்க என்றார்.

உதவுபவர்களில் பலர் தமக்கு ஆதாயம் தேடுவார்கள் என்பதைக் குறித்துக் காட்டி ஆதாயம் தேடாதார் உதவி துறக்காதே என்பதற்காகத்தான் துப்பு ஆயார் என்றார். துறத்தல் என்பது மனத்தாலும் செயலாலும் நீக்கி விடுதல் என்பதால் துறவற்க என்றார். சொல்கேட்க உள்ளம். வாழ்வு காண உறவு என்ற நல்வழியை வள்ளுவர் கூறுகிறார்.

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு

பொருள் விளக்கம்:

எழுமை = (வாழ்க்கையில்) உயர்ச்சி பெற
எழு = மனக்கிளர்ச்சியுடன் (இரும்பொத்த உறுதியுடன்)
பிறப்பும் = தொடங்குகிற (ஒவ்வொரு முயற்சிக்கும்)
தம்கண் = தன்னிடத்தில் உண்டாகிய
விழுமம் துடைத்தவர் (சிக்கலை) துன்பத்தை நீக்கியவரின்
நட்பு = உறவுத் தொடர்பை
உள்ளுவர் = நினைத்து மேலும் (உற்சாகம் பெறுவர்)

சொல் விளக்கம்:

எழுமை = உயர்ச்சி; **எழு** = எஃகு, மனம், கிளர்
பிறப்பு = தொடக்கம்; **விழுமம்** = துன்பம்
துடைத்தவர் = நீக்கியவர்

முற்கால உரை:

துன்பத்தை நீக்கினவர் சிநேகத்தை எழு பிறப்பிலும் நினைப்பார் பெரியோர்.

தற்கால உரை:

தமக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கினவர்களின் நட்பை உயர்ந்தோர்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மறக்காமல் போற்றி வாழ்வார்கள்.

புதிய உரை:

வாழ்க்கையில் வளர்ச்சி பெற இரும்பொத்த மனக் கிளர்ச்சியுடன் முயல்பவர்கள், ஒவ்வொரு முறையும் தனது துன்பம் நீக்கி உதவியவரை நினைத்து, எழுச்சி பெறுவார்கள்.

விளக்கம்:

எழுமை என்பதற்கு எழு பிறப்பு என்றார்கள். 'எழு' விற்குப் பின் பிறப்பு என்ற சொல் அடுத்து வந்தவுடன் அவர்கள் எண்ணத்திற்கு அது உதவியிருக்கிறது.

இங்கே நான் **எழுமை** என்ற சொல்லுக்கு வாழ்வில் உயர்வு பெறுதல் என்றும், **எழு** என்பது கிளர்ச்சி மனது. பிறப்பு என்பது ஆரம்பம் என்று விளக்கம் தந்துள்ளேன். எழுச்சியுடன் கிளர்ச்சியுடன் உயர்வு பெற முயற்சிக்கிறபோது. ஏற்படுகிற இடையூறுகளிலிருந்து வெற்றி பெற, தமது துன்பம் துடைத்து உதவியவர்களை நினைத்து நினைத்து, மனதில் உற்சாகத்தை விதைத்து விதைத்து வெற்றி பெறுவார்கள் அறிவாளர்கள். உதவிய உயர்ந்தோர்களை நினைக்கிற போது மனத்துக்குத் தெளிவும் உறுதியும் உற்சாகமும் பெருகும் என்று 7 வது குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று

பொருள் விளக்கம்:

நன்றி = (நன்று + இ) வாழ்வில் அன்பு பெற்றதை
மறப்பது = மனதிலிருந்து விட்டு விடுவது
நன்று அன்று = நன்மையை அளிக்காது
நன்று = அன்பினால் பெற்ற இனிய சுகத்தை
அல்லது = அழித்து விடுகிற தீவினைகளை
அன்றே மறப்பது = அப்பொழுதே நினைவில் இருந்து அகற்றிவிடுவது
நன்று = நல்ல வாழ்வையும் நல்லஇன்பத்தையும் அளிக்கும்

சொல் விளக்கம்.

நன்று = சுகம், இன்பம், வாழ்வு
இ = அன்பு, ஆச்சரியம்; **அல்லது** = தீவினை

முற்கால உரை:

பிறர் செய்த நன்றியை மறப்பது தருமம் அல்ல. அவரது தீமையை மறப்பது தருமம்.

தற்கால உரை:

பிறர் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

புதிய உரை:

பிறரது அன்பால் பெற்ற இன்பத்தை வாழ்வில் மறப்பது நல்லதல்ல. ஆனால், அந்தச் சுகத்தை அழிக்கக்கூடிய தீவினைகள் எதையும் இதயத்திலிருந்து அப்பொழுதே அகற்றி விடுவது நல்லது.

விளக்கம்:

மனம் உடல் இயல்பான சூழ்நிலையில். நல்லதை நினைத்துக் கொண்டு இருக்கிறபொழுது சுவாசம் இயற்கையாக இதமாக இருக்கும். நல்லது அல்லாதவற்றை நினைக்கிற பொழுது சுவாசம் தடைபட்டு பிறகு ஒழுங்கு கொள்கிறது. ஒரு நொடியில் ஏற்படுகிற சுவாசத் தடுமாற்றத்தால், இரத்த ஓட்டம் தடுமாற, அதனால் உடல் முழுதும் ஏற்படுகிற தடைபட்ட குருதி ஓட்டம், அதனால் ஏற்படுகிற உட்புற விளைவுகள் உடலை நோகடித்து விடுகிறது.

அதனால், நல்ல அன்பு செயல்களை வாழ்க்கை முழுவதும் வைத்துக்கொள். துன்ப நிகழ்ச்சிகளை உடனே துரத்திவிடு என்று உடலியல் பண்புகளை இந்தக் குறளில் விளக்குகிறார்.

தீமை செய்பவர்கள், செய்ய நினைப்பவர்கள் முகம், இருளாகிவிடுவது இப்படிச் சுவாசம் கெடுவதால் தான் என்று உடலியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த ஒன்று நன்றுள்ளக் கெடும்

பொருள் விளக்கம்:

கொன்று அன்ன = மனச்சிதைவு, உடல் இழப்பு போன்று
இன்னா = கீழ்மையான துன்பங்கள் நேர்கிறபோது
அவர் = பண்பாளராகியவர்களின்
செய்த = பேராண்மை மிக்க உதவும் செயலானது
ஒன்றுள்ள = உண்மையாகப் பொருந்தும்படி அமைந்து
செயினும் = வென்று
கெடும் = கெடுத்து அழித்துவிடும்.

சொல் விளக்கம்:

கொன்று = சிதைத்து; **இன்னா** = கீழ்மையான துன்பம் தருகிற
உள்ள = உண்மையான; **ஒன்று** = பொருந்துகிற
செய்த = பேராண்மை, மிக்க செயல் என்ற சொற்களை வள்ளுவர் மிக அருமையாக இங்கே கையாண்டு, விருப்பி நன்மை செய்வோரின் உண்மையான பேராண்மையை 9 வது குறளில் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

முற்கால உரை:

நன்மை செய்தவர் கொன்றாற் போலும் தீமை செய்யினும், நன்மை ஒன்றை நினைக்கத் தீமையெல்லாம் கெடும்.

தற்கால உரை:

தனக்கு உதவியவர் பின்பு கொலைக்கு ஒத்த தீமையைச் செய்தாலும், அந்த உதவியை நினைத்துப் பார்த்தால், அத்தீமையின் துன்பம் நீங்கிவிடும்.

புதிய உரை:

மனச்சிதைவு போன்ற துன்பங்கள் பிறரால் நேர்கிற போதும், பண்பாளர்களின் பேராண்மை மிக்க உதவும் செயல் உண்மையாகப் பொருந்தி அவருக்கு நேர்ந்த கெடுதிகளை அழித்து விடும்.

விளக்கம்:

உண்மையான உதவும் பண்பாளர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும் துன்புறுவோர்க்கு உதவும், துயர்துடைக்கும்; சுகம் படைக்கும். கொன்று போடும் செயலைவிட ஒருவருக்கு மனச்சிதைவை உண்டாக்குவது மாபெரும் பாவம் ஆகும். அப்படிப்பட்ட கொடுமையையும் அன்பானவர்கள் செய்கைகள் அழித்து விடும் ஆற்றல் மிக்கவையாகும்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு

பொருள் விளக்கம்:

எந்நன்றி = எந்த ஒழுக்கத்தை; கொன்றார்க்கும் = அழித்தவர்க்கும்
உய்வுண்டு = வாழ்வு உண்டு
செய்நன்றி = மனம் உடல் சார்ந்த அகப்புற பண்பாட்டு ஒழுக்கத்தை; கொன்ற = சிதைத்து விடுகிற; மகற்கு = மக்களுக்கு
உய்வில்லை= (வாழ்வு, பிழைப்பு, ஈடேற்றம்)எதுவுமே இல்லை.

சொல்விளக்கம்:

நன்றி = ஒழுக்கம், நன்மை; **கொன்றார்** = சிதைத்தார், அழித்தார்
உய்வு = வாழ்வு, பிழைப்பு, ஈடேற்றம்
செய்கை = பண்படுத்துதல்.

முற்கால உரை:

எவ்வகை தருமங்களை அழித்தவர்களுக்கும் ஈடேற்றும் வழி உண்டாம். செய்நன்றியைக் கெடுத்தவர்களுக்கு ஈடேறும் வழியேயில்லை.

தற்கால உரை:

செய்ந்நன்றி மறந்து வாழ்பவனுக்கு எப்பொழுதும் நல்வாழ்வு இருக்காது.

புதிய உரை:

வாழ்க்கையில் எந்த ஒழுக்கத்தை அழித்தார்க்கும் வாழ்வு கிடைக்கும். ஆனால், உடல் மற்றும் அகப்புற பண்பாட்டு ஒழுக்கத்தைச் சிதைத்தவர்களுக்கு ஈடேற்றமும் இல்லை. வாழ்வும் இல்லை. பிழைப்பும் இல்லை.

விளக்கம்:

ஒழுக்கம் என்பது தினமும் விடாது செயல்பட்டு வருகிற செயல்கள். அவை உடலுக்கு நன்மைகள் செய்தால் அவை **நல்வினை.** கெடுத்தால் அவை **தீவினை.** தீவினைகளால் தேகம் தீய்ந்து போகும். மனம் மாய்ந்து போகும். அதனால் வள்ளுவர் பத்தாவது குறளில், செய்ந்நன்றி என்றார். செய்கை ஒழுக்கம். அது பண்பட்ட ஒழுக்கம். பண்பட்ட ஒழுக்கம் மண்பட்டால் வாழ்வே பழுதுபட்டு விடும். இழுக்காகிவிடும்.

அதனால் தான் இந்த அதிகாரத்தைச் செய்ந்நன்றி அறிதல் என்றார். செயல் ஒழுக்கங்கள் மக்களிடையே பல்கிப் பெருக வேண்டும் என்னும் பேரவாவில் பல கருத்துக்களைப் பசுமரத்தாணி போல இந்த அதிகாரத்தில் பதிய வைத்திருக்கிறார்.

12. நடுவுநிலைமை

நடு +உ + நிலை + மெய் என்ற நான்கு சொற்களால் ஆன இந்தச் சொல், நான்கு வகையாக விளங்கும் இந்த உலக மக்களுக்கு, இருக்க வேண்டிய இயல்பான ஒழுக்கத்தைப் போதிக்கும் நீதிச்சொல்லாகப் பரிணமித்திருக்கிறது.

நடு என்றால் சமன், கடவுள் வானத்தின் உச்சி என்றும்; உ என்றால் அகத்தையும் புறத்தையும் சுட்டுவது என்றும்; நிலை என்றால் உலகம், உறுதி, திண்மை, நீதி, வாய்மை என்றும் பொருள் இருப்பதால், நாம் இப்போது ஒரு நல்ல பொருளைப் புரிந்து கொள்ளலாம்.

உற்றார், நண்பர், அயலார், பகைவர் எனும் பிரிவுக்குட்பட்ட மக்களிடையே வாழும் மனிதனாகிய ஓர் அறன் அவர்களிடத்தில், அதாவது ஒரு சாராரிடையே ஒன்றிப் போய் விடாமல், கூட்டத்தைக் கண்டு பயந்து அவர்களுடன் கலந்துபோய் விடாமல், உறுதியாகத், திண்மையாகக், கடவுள் போல வானத்தின் உச்சியிலே நிற்பது போல நின்று, பழகிட வேண்டும். வாழ்ந்திட வேண்டும். செயல்பட வேண்டும்.

உள்ளும் புறமும், அதாவது ஐம்புலனால் அறிகிற அறிவிலும், சிந்திக்கிற சிந்தையால் பெறுகிற தெரிவிலும், அறிவையும், தெரிவையும் ஆற்றுப்படுத்துகிற ஆன்மாவின் தெளிவிலும் நீதி பார்க்க வேண்டும். நியாயம் காக்க வேண்டும். நேர்மை சேர்க்க வேண்டும்.

அப்படி வாழ்கிற ஆற்றலை, இன்சொல்லும் செய்ந்நன்றி அறியும் குணமும் கொண்டால்தான், முடியும் என்பதால்தான், செய்ந்நன்றி அறிதலுக்குப் பிறகு, நடுவுநிலைமை எனும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்துள்ளார்.

111. தகுதி எனஒன்று நன்றே பகுதியாற் பாற்பட்டு ஒழுகப் பெறின்

பொருள் விளக்கம்:

பகுதி = மக்களிடத்தில் வேறுபாடு ஏற்பட்டு பிரிவு எழுகிறபோது
பாற்பட்டார் = (முற்றும் துறந்த) துறவியரைப் போல
ஒழுகப் பெறின் = முறைமையுடன் அங்கு பொருந்தி வாழ்வதே சிறந்ததாகும்.
தகுதி என = அறிவும் நேர்மையும் வல்லமையும் உடைய மேன்மையானது
ஒன்று நன்றே = அதுவே ஒப்பற்ற மதிப்பிற்குரிய ஒழுக்கம் ஆகும்.

சொல் விளக்கம்:

தகுதி = அறிவு, ஒழுக்கம், வல்லமை, மேன்மை, ஏற்றது.
நன்றே = சுகம், இன்பம், நன்மை, அறம்
ஒன்று = ஒப்பற்ற மதிப்பிற்குரிய; **பாற்பட்டார்** = துறவியர்
பகுதி = பிரிவு, வேறுபாடு

முற்கால உரை:

நடுநிலைமை என்று சொல்லும் அறமே நல்லது என்பதாம்.

தற்கால உரை:

பிறர்க்குச் செய்ய வேண்டிய கடமையினை நடுவாக நின்று செய்யின், அந் நடுவுநிலைமை ஓர் அறமாம்.

புதிய உரை:

மக்களிடம் ஏற்படுகிற பிரிவிலும் வேறுபாடு காலத்திலும் அங்கே துறந்த துறவியர் போல நேர்மை காத்து ஒழுகுவதுதான் மதிப்பிப்பிற்குரிய ஒழுக்கம் சார்ந்த அறமாகும். அறம் என்பது ஒழுக்கமாகும்.

விளக்கம்:

மக்கள் கூட்டம் என்றால் மாறுபாடு வரும். வேறுபாடு வரும். பிரிவு எழும். பேதங்கள் கூடும். அது போன்ற சமயத்தில். அறிவோடும் வல்லமையோடும் நேர்மையோடும் அணுகி ஒழுக்கத்தைக் காக்கும் அறனாக வாழ வேண்டும். அந்தத் தகுதியானது, மன ஒழுக்கம். உடல் ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் இவற்றால்தான் அமையும் என்பதால், அறனாகிய மனிதன் முற்றும் துறக்கும் திறனாளனாகத் திகழ வேண்டும் என்று முதல் குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து

பொருள் விளக்கம்:

செப்பம் உடையவன் = நடுநிலை உள்ள நேர்மையாளனின்
ஆக்கம் = எழுச்சி மிக்க வாழ்வும் (வாழ்வாகிய செல்வமும்)
சிதைவின்றி = எந்தவிதமான குறைவும் சீர்கேடும் இன்றி
எச்சத்திற்கு = அவனாற்றும் உண்மையான காரியத்திற்கு
ஏமாப்பு உடைத்து = வலிமையான காவலாக இருந்து மிகக் களிப்பை உண்டாக்கும்

சொல் விளக்கம்:

ஆக்கம் = வாழ்வு, எழுச்சி, செல்வம்; **செப்பம்** = நேர்மை
எச்சம் = உண்மை, காரியம், மகன்;
ஏமாப்பு = காவல், களிப்பு, வலியான

முற்கால உரை:

நடுவுநிலைமையுடையவன் செல்வமானது அவன் சந்ததிக்கு உறுதியுடைத்து என்பதாம்.

தற்கால உரை:

நடுவுநிலைமை உடையவனது செல்வமானது, அழியாது அவனுக்கும் அவன் தலைமுறையினருக்கும் பயன்படுவதாக இருக்கும்.

புதிய உரை:

நடுநிலையாளரின் எழுச்சி மிக்க நேர்மையான வாழ்வு, எந்தவிதக் குறைவுமின்றி அவரின் உண்மையான காரியங்களுக்கு வலிமையாக இருந்து மிகக்களிப்பை உண்டாக்கிக் காத்து நிற்கும்.

விளக்கம்:

மனம் நடுவுநிலைக்கு வந்த பிறகு, ஒருவரது சொல்லும் செயலும் நேர்மையும் தூய்மையும் பெறுகிறது. அது வாய்மையும் தூய்மையும் வல்லமையை வழங்கிட உணர்ச்சிகள் எல்லாம் பேரெழுச்சி கொள்ள, வாழ்வெல்லாம் அதன் வழியெல்லாம் களிப்பும் துள்ள, செழிப்படைகிறது. அந்தச் செழிப்பே அவர் வாழ்வின் சிறப்பாகி, காலம் எல்லாம் துணைதந்து காக்கிறது என்று நடுவுநிலைமை கொள்கிறவர் பெறுகிற பாதுகாப்பான வாழ்வை 2வது குறளில் கூறுகிறார்.

113. நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை அன்றே ஒழிய விடல்

பொருள் விளக்கம்:

நன்றே தரினும் = சொர்க்கம் போன்ற இன்ப வாழ்வைத் தந்தாலும்
நடுவிகந்தாம் = நடுவு நிலை பிறழ்ந்து பெறுகிற
ஆக்கத்தை = எழுச்சியும் செல்வமும் மிகுந்த வாழ்வை
ஒழியவிடல் = தருகிற நினைவை அப்பொழுதே அழித்து விட வேண்டும்.

சொல் விளக்கம்:

நன்று = சுகம், நன்மை, வாழ்வு, இன்பம், சொர்க்கம்
இகந்து = விதியைக் கடத்தல், பிறழுதல்
ஒழி = முடித்து விடுதல், அழித்தல்

முற்கால உரை:

நடுவு நிலைமை இல்லாது வரும் செல்வம் நன்மையைத் தரினும் அப்பொழுதே விடக்கடவன்.

தற்கால உரை:

நடுவு நிலைமை தவறிவரும் செல்வத்தைக் கொள்ளற்க.

புதிய உரை:

நடுவுநிலைமை விட்டுப் பிறழ்கிறபோது சொர்க்கம் போன்ற பேரின்ப வாழ்வு கிடைக்கப் பெறுமானால், அப்படிப்பட்ட வாழ்வைத் தரக்கூடிய நினைவை, அப்பொழுதே மனத்திலிருந்து அகற்றி விட வேண்டும்.

விளக்கம்:

ஆக்கம் என்பதற்குச் செல்வம் என்றே எல்லா உரையாசிரியர்களும் பொருள் கொண்டிருக்கின்றனர். நான் **வாழ்வு** என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

செல்வமா வாழ்வா என்கிறபோது, வாழ்வுதான் முதன்மையானது. செம்மையான வாழ்வுக்குத்தான் மகிமையே தவிர, செல்வத்திற்கு அல்ல. எவருக்கும் செல்வம் கிடைக்கும். ஆனால், செல்வம் உள்ளவர்களுக்கு எல்லாம், நல்ல வாழ்வு கிடைக்காது. ஆகவேதான், பேரின்பம் தரும் வாழ்வு பரிசாகக் கிடைக்கும் என்றாலும், நடுநிலை மாறுகிற நினைவை உடனே அழித்துத் தூர்த்துவிட வேண்டும். செயலுக்கு நினைவுதான் முதல் என்பதால், வள்ளுவர் 3 ஆம் குறளில் நடுநிலை உணர்வைக் கடுமையாகப் பின்பற்றுமாறு கூறுகிறார்.

114. தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்.

பொருள் விளக்கம்:

தக்கார் = நடுவுநிலையில் நடக்கும் அறிஞர்
தகவிலர் = நடுவுநிலை பிறழ்ந்த ஒழுக்கம் இல்லாதவர் (இழிஞர்)
என்பது = என்று அறிவிக்கும் சிறப்பானது
அவரவர் எச்சத்தால் = அவரவருடைய உண்மையாலும் (சொல்லாலும்) நோக்கம் உள்ள செய்யத்தக்கக் காரியத்தாலும்
காணப்படும் = அறியப்படும்.

சொல் விளக்கம்:

தக்கார் = அறிஞர்
தகவிலார் = நடுநிலை தவறிய ஒழுக்கம் இல்லாதவர் (இழிந்தவர்)
எச்சம் = உண்மை, காரியம், செய்யத்தக்கது, சரீரம், மகன்

முற்கால உரை:

நடுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது சந்ததியாற் காணப்படும்.

தற்கால உரை:

ஒருவர் தகுதி உடையவர் என்பதை அவரது புகழாலும் தகுதியில்லார் என்பதை அவரது இகழாலும் அறிக.

புதிய உரை:

நடுவு நிலை காக்கும் அறிஞர், நடுவுநிலை தவறிய ஒழுக்கம் இல்லாதவர் என்பதை அவரது (அன்றாட) சொல், செயல், வாழ்க்கை மூலமாகவே மற்றவர்களால் அறியப்படும்.

விளக்கம்:

எச்சம் என்பதற்குச் சந்ததி என்றும், எஞ்சி நிற்பது என்றும் பொருள் கொண்டிருக்கின்றனர். இங்கே நான் **எச்சம்** என்பதற்கு உண்மை, காரியம் என்று இருக்கும் பொருளைப் பின்பற்றி யிருக்கிறேன். **உண்மை** என்பது நினைவும் சொல்லும் காரியம் என்பது செயலும் முயற்சியும். அவைதாம் ஒருவரைத் தக்கவர் தகாதவர் என்று பிரித்துக் காட்டும். ஒருவரது புகழை வைத்து அவர் நடுநிலையாளர் என்றோ, பெற்ற குழந்தைகளை வைத்தோ கணக்கிடுவது கடினமாகும். காந்தியின் குழந்தைகளை வைத்து காந்தியின் பெருமையைக் கூறிவிட முடியாது என்பது போல.

ஆகவே, ஒருவரது பெருமைக்கும் புகழுக்கும் அவரது சொல்லும் செயலுமே சாட்சியாக மாட்சியாக விளங்குகிறது.

4 வது குறளில் நடுநிலைப் பண்பை சொல் மூலமும் செயல் மூலமும் செய்து காட்டி, மேன்மை பெற வேண்டும் என்று கூறுகிறார்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து கோடாமை சான்றோர்க்கு அணி

பொருள் விளக்கம்:

கேடும் = வறுமை, இழுக்கு அல்லது மரணமோ பெருக்கமும் பெரும்பேறான, வளர்ச்சி தரும், திரண்ட செல்வமோ

இல்லல்ல = (நடுநிலையுடன் நடக்கும்போது எது வேண்டு மானாலும் நடக்கும்). கிடைக்கும்

நெஞ்சத்து = (ஆதலால்) நினைவில் (கூட)

கோடாமை = ஒருதலையாக ஒரு பக்கத்தில் நில்லாமை (சாய்ந்து விடாது)

சான்றோர்க்கு அணி = நடுநிலை சான்றோர்க்கு பெருமை யளிப்பதாகும்.

சொல் விளக்கம்:

கேடு = வறுமை, இழுக்கு, மரணம், குறைவு

பெருக்கம் = வளர்ச்சி, பெரும்பேறு, திரண்ட தனம்

இல்லல் = நடத்தல், நடக்கை.

கோடாமை = ஒருதலைக்கண் நில்லாமை

முற்கால உரை:

பெரியோர்க்கு நடுவு நிலைமையே அழகாம்.

தற்கால உரை:

வறுமையும் வளமையும் மாறி மாறி வரும் இயல்புடையது. ஆதலால், அவை பற்றி நடுவு நிலைமை தவறுதல் ஆகாது.

புதிய உரை:

நடுவுநிலை வகிக்கிறபோது கேடு வரலாம். இழுக்கு சேரலாம். மரணமும் நேரலாம். செல்வமும் கிடைக்கலாம். என்றாலும் நடுவு நிலையாளர் தம்நினைவில் கூட ஒரு பக்கமாக சேர்ந்திடக்கூடாது. அதுவே அவருக்குப் பெருமை சேர்க்கும்.

விளக்கம்:

இரண்டாகப் பிரிந்த மக்கள் பிரிவுகளுக்குள்ளே, நடுவுநிலைமையில் இருக்கிறபோது, எது வேண்டுமானாலும்

ஏற்படலாம். உடல் வெறுமை, பண வறுமை பெயருக்கு இழுக்கு, உயிருக்கு இழப்பு இப்படியெல்லாம் உண்டாவது இயல்புதான்.

ஒருசாராரைச் சாரும்போது பெரும் பயன்கள் கிடைக்கலாம். செல்வத்தைக் குவிக்கலாம் பேரும்புகழும் தரும் பதவிகளில் திளைக்கலாம். எல்லாவற்றிற்கும் ஏராளமான வாய்ப்புகள் உண்டு.

என்றாலும், ஒரு தலையாக ஒரு புறமாகப் போகாமல், சாராமல் இருப்பது மக்களில் சான்றாக விளங்கும் சான்றோர்க்கு அதுவே பெருமை, வலிமை, மேன்மை என்று 5 வது குறளில் நடுவுநிலையால் ஏற்படுகின்ற பலாபலன்களைப் பக்குவமாக வள்ளுவர் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

116. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம் நடுவொரீஇ அல்ல செயின்

பொருள் விளக்கம்:

தன் நெஞ்ச = தன் நெஞ்சத்தினிடையிலே
நடுவு ஓரீஇ = நடுவு நிலை நீங்கி
அல்ல செயின் = அதற்கு எதிரானவற்றில் ஈடுபட்டால்
கெடுவல்யான் = நான் எல்லாவித அழிவுக்கும் ஆளாவேன்
என்பது அறிக = என்பதனை அறியக் கடவன்

சொல் விளக்கம்:

கேடு = பொருளழிதல் = வினையழிதல், உருவழிதல், நிலை கெடுதல்; **ஓரீஇ** = நீங்கி

முற்கால உரை:

தன் மனம் நடுவுநிலை நீங்கின் கெடுவன் என்று அறியக் கடவன்.

தற்கால உரை:

நடுவுநிலைமையினின்று தவற நினைத்தால் கேட்டிற்கு அறிகுறியாகும்.

புதிய உரை:

நெஞ்சத்து நினைவில் கூட, நடுவு நிலைக்கு மாறுபட்டு நடந்து கொண்டால், எல்லாவித அழிவுகளுக்கும் ஆளாகிவிடுவேன் என்பதை நடுவு நிலையாளர் நினைந்து, நடுத்தன்மையுடன் ஒழுக வேண்டும்.

விளக்கம்:

ஒருவர் அழிவுக்குச் செயல் காரணமாக இருக்கலாம். ஆனால், அந்த மாறுபட்ட நினைவே, ஒருவரை தாழ்த்திவிடும், வீழ்த்தி, பாழ்படுத்தி விடும் என்கிறார் வள்ளுவர்.

நல்ல நினைவுகள் வாழ்வைக் கொடுக்கும். தீய நினைவுகள் வாழ்வைக் கெடுக்கும்.

நல்ல உடல் - நல்ல மனம் - நல்ல வாழ்வு என்பது தான் உயர்ந்தோர் வாழ்க்கைமுறை.

நடுவுநிலைமை என்கிற செந்தண்மையைச் சீரழிக்கிற ஒரு சிறு நினைவு. தீப்பொறியாக மாறி, தீப்புயலாக எரிக்கும் ஆற்றல் கொண்டதால், அந்த நினைவு வந்தோரின் உடல் வடிவு அழியும். எழில் உருவு அழியும். அவர் குணம் கழியும். பொருள் அழியும். தொடரும் வினை அழியும்.

ஆகவே, சிந்தை கெடாமல் வாழ வேண்டும். செயல்களை ஆற்ற வேண்டும். மனம்தான் உடலைக் காக்கிறது. உடல்தான் மனத்தைக் காக்கிறது. ஆகவே, மனம் மாறுகிறபோது உடல்நிலையும். உயிர் நிலையும். வாழ்வு நிலையும் மாறி அழிந்து போகிறது என்ற உளவியல் கருத்தை, வள்ளுவர் தனது 6 வது குறளில் ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுகின்றார்.

நினைப்பு பிழைப்பைக் கெடுக்கும் என்னும் பழமொழியை, இங்கேயும் எண்ணிப் பார்ப்போமாக! மாறிய நடுவுநிலை ஒழுக்கத்திற்கு வருகிற தீமையை இக்குறளில் வள்ளுவர் தெளிவு படுத்துகிறார்.

117. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

பொருள் விளக்கம்:

நடுவாக = நடுவுநிலைமை எனும் உச்சநிலையான
நன்றிக்கண் = ஒழுக்கத்தின்பாற் உறுதி கொண்டு
தங்கியான் = அதன்படியே ஒழுகும் சான்றாளன்
தாழ்வு = பெறுகிற அவமானம், தாழ்ச்சி, வறுமை போன்ற வற்றை
உலகம் = உயர்ந்தோராகிய சான்றோர்கள் எல்லாம்.
கெடுவாக வையாது = அவரது இழப்பை பெரிதாக எண்ண மாட்டார்கள். மாறாக வாழ்த்திப் பெருமை சேர்ப்பார்கள்.

சொல் விளக்கம்:

தாழ்வு = அவமானம், தாழ்ச்சி, வறுமை
நன்றி = அறம், ஒழுக்கம்; **நடு** = நடுவுநிலைமை

முற்கால உரை:

நடுநிலைமையினின்றவன் வறுமையைப், பெரியோர் தாழ்வாக நினையார் என்பதாம்.

தற்கால உரை:

நடுநிலையாளன் தாழ்வு விரைவில் நீங்கிவிடும் என்பதால், அதனைக் கேடாக உலகத்தார் எண்ண மாட்டார்கள்.

புதிய உரை:

நடுவுநிலை காக்கும் பொருட்டு ஒருவர் பெறுகிற அவமானத்தையும், தாழ்ச்சியையும், வறுமையையும், நன்மக்கள் போற்றுவார்களே ஒழிய, தாழ்வாகத் தூற்ற மாட்டார்கள்.

விளக்கம்:

நடுவுநிலைமையில் நிற்கும்போது. கெடுவும் வரும். கேண்மையும் வரும். மேன்மையும் தரும் என்றாலும், மக்களுக்குச் செய்கிற பணிக்கு மாற்றாகக் கிடைப்பது தூற்றலும், பொருள் இழப்பும், மனச்சலிப்பும் தான்.

இந்தச் சூழ்நிலை நன்றாக வேண்டும். வென்றாக வேண்டும் என்பதால், எதையும் ஏற்றுக் கொள்ளும் இதயம் உள்ளவர்கள், உலகம் பழிப்பதையும் உளமார ஏற்றுக் கொள்வார்கள். அப்படி ஏற்றுக் கொள்கிற ஒழுக்கம்தான். விழுப்பம் ஆகும். ஆகவே, வருகிறதை உறுதியாக ஏற்றுக் கொள்வது நடுவுநிலைமைக்குப் புகழே தவிர, இகழ் அல்ல என்பதை 7வது குறளில் கூறுகிறார்.

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

பொருள் விளக்கம்:

சமன்செய்து = (பிரிவுக்குள்ளானவர்களை) சமமாகப் பாவித்து
சீர்தூக்கும் = ஒழுங்கு செய்தும், தண்டித்தும் வாழ்வு தருகிற
கோல்போல = அரசன் கோலாகிய செங்கோலின் அரசாட்சி போல
அமைந்து = செய்து முடித்து
ஒருபால் = அவரவர்க்குரிய உரிமையையும் கடமையையும் மதித்து

கோடாமை = நடுவுநிலை தவறாமையாகிற பண்பானது
சான்றோர்க்கு = உலகம் நிலைபெறும் வண்ணம் வாழும்
அறிவொழுக்கம் பெற்ற பெரியோர்களுக்கு
அணி = பெருமை தரக்கூடியதாகும்.

சொல் விளக்கம்:

சொல் = செங்கோல், அரசாட்சி, தராசு
சமன் = சமம், ஒப்பு, காலன்;
சீர்தூக்கும் = ஒழுங்கு செய்தல், தண்டித்தல், வாழ்வு தருதல்
அமைந்து = செய்து முடித்து; **கோடாமை** = நடுநிலை தவறாமை
அணி = பெருமை, அழகு; **ஒருபால்** = கடமை, உரிமை, பக்கம்

முற்கால உரை:

ஒரு பக்கமும் சாயாமையே பெரியோர்க்கு அழகு.

தற்கால உரை:

துலாக்கோல் போல் சமமாக நின்று ஏதொன்றிலும் தீர்ப்பு வழங்குவதுதான் சான்றோர்க்கு அழகான பண்பாகும்.

புதிய உரை:

எல்லோரையும் சமமாகப் பாவித்து அவரவர் உரிமையை கடமையை மதித்து ஒழுங்கு செய்தும் தண்டித்தும் வாழ்வு தருகிற அரச நெறிபோல நிலைநிறுத்தி செயல்படுவதானது, சான்றோர்களுக்குப் பெருமை தரக்கூடியதாகும்.

விளக்கம்:

சமமாகப் பாவிப்பது - அரசநெறி. சமன் என்பதற்கு காலன் என்று ஒரு பொருள். அரசன் முதல் ஆண்டி வரை அனைவருக்கும் ஒரே நீதியுடன் உயிர் பறிக்கும் செயல் கொண்டவன். அதுபோல மலர்தலை உலகத்துக்கு உயிராகப் போற்றப்படும் மன்னன் நீதிமுறைபோல், நடுநிலைமை காக்கிறவர்களும் இருக்க வேண்டும். கோயிலில் வாழும் இறைபோல நிறைகாக்கும் மன்னன் போல, குறைவிலாத வகையில் செயல்பட வேண்டும் என்று நடுவு நிலைமையாளரின் உயரிய நிலையை 8 ஆம் குறளில் கூறுகிறார்.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டம் இன்மை பெறின்

பொருள் விளக்கம்:

ஒருதலையா=ஒருபக்கமாக
உட்கோட்டம் - மனத்துக்குள்ளே பொதிந்தவை அறிக்கூறு

போன்றவை; இன்மைபெறின் = இல்லாமல் நடுநிலையுடன்
சொற்கோட்டம் = கட்டளையிடுகிற
இல்லது = ஒரு மந்திரி போல
செப்பம் = செவ்விய வழியில் நடுநீதியை செய்திட வேண்டும்

சொல் விளக்கம்:

இல்லது = மந்திரி, பஞ்சபூதம், மாதா
கோட்டம் = பொறாமை, அழுக்காறு, கோயில், நடுநிலை
செப்பம் = செவ்விய வழி, நடுநீதி, தகுதி, செப்பனிடல்
சொல் = கட்டளை, உறுதிமொழி

முற்கால உரை:

மனக்கோணலும், சொற்கோணலும் இல்லாமையே நடுவுநிலையாம்.

தற்கால உரை:

நினைப்பும் சொல்லும் ஒத்து நேர்மையாக ஒழுகுதல் வேண்டும்.

புதிய உரை:

நடுநிலையாளர், தன் மனத்திலே ஒருவித அழுக்காறு பொறாமை எதுவும் கொள்ளாது, மதிநுட்பம் வாய்ந்த மந்திரியைப் போல, உறுதியாக நடுநிலையுடன் கட்டளையிட்டு நீதி வழங்க வேண்டும்.

விளக்கம்:

8 வது குறளில் கோல் என்பதற்குச் செங்கோல், அரச நெறி முறையான சமன் என்றும், மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்பதற்கேற்ப, அரசாட்சி நெறி முறைக்கு அமைச்சரின் ஆன்ற அறிவு வேண்டும் என்பதால், இல்லது செப்பம் என்றார். மந்திரிக்குரிய தகுதி மதி நுட்பம். ஆகவேதான் சொல் கோட்டம் என்பது உறுதியான கட்டளை என்று உணர்கிறோம். அரசன் கோலுக்கு ஆன்ற அறிவாளர் அமைச்சர் ஆவதால், அமைச்சரின் மதி நுட்பமும் செப்பமும் போன்றதை நடுவுநிலைமைக்குக் கைக்கொள்ள வேண்டும். மன உறுதியைக் கறையிலாச் சொல் கட்டளை என்று 9ஆம் குறளில் கூறியிருக்கிறார்.

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற் செயின்

பொருள் விளக்கம்:

வாணி = சொல்லும்
கம் = அறிவும் செயலும் இவற்றுடன் நடுவுநிலையை
செய்வார்க்கு = செய்யும் முறையுடன் செய்பவர்கள்
வாணிகம் பேணி = தனி அறிவாற்றல் மிகுந்த செயலைக் காத்து
பிறவும் = அவர்களுக்கான (இந்தப்) பிறவியும்
தமபோற் செயின் = தம்முடைய பிறவிபோல சிறந்ததுதான் என்றே நிறைவாக எண்ணிச் செயல்பட வேண்டும்.

சொல் விளக்கம்:

(வாணிகம்) வாணி = சொல்; **கம்** = அறிவு, செயல்
பிறவு = பிறவி; **தம** = நிரம்ப, தம்முடைய

முற்கால உரை:

பிறர் பொருளையும் தம் பொருளைப்போல் வியாபாரம் செய்தல் நல்ல வியாபாரம் என்பதாம்.

தற்கால உரை:

வாணிகம் செய்வார் தம் பொருளுக்கு என்ன பெற விரும்புவாரோ அவற்றைப் பிறர் பொருளுக்கும் கொடுத்தல் வேண்டும்.

புதிய உரை:

நடுவு நிலைமையாளர் தான் கட்டளையிட்டுக் கூறுகிற அறிவான சொல்லால் பிறரது பிறவியும் தம் பிறவிபோல் மிக உயர்ந்தது என்று எண்ணியே செயல்படுதல் வேண்டும்.

விளக்கம்:

வாணிகம் என்றால் எல்லோரும் வியாபாரம் என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். பிறவும் என்றால். பிறர் பொருள் என்றனர். நான் பிறவு என்றால் பிறவி, வாணி என்றால் சொல்லும் கட்டளை, கம் என்றால் அறிவு, செயல் என்றும் பொருள் கொண்டிருக்கிறேன்.

பிறர் பொருளைத் தம் பொருள் போலப் பார்ப்பது என்பதை விடப் பிறர் வாழ்கின்ற இந்தப் பிறவி என்னும் பேற்றை மதித்து, தம் பிறவி போலவே மற்றவரது வாழ்க்கைப் பிறப்பையும் மதித்து அறிவாற்றலுடன் செயல்பட வேண்டும் என்று வள்ளுவர் நடுவுநிலைமையாளர் மற்றவர் வாழ்க்கையை ஒரு வரம் என்று பாவித்து நீதி வழங்க வேண்டும் என்று பத்தாவது குறளில் முத்தாய்ப்பாகக் கூறுகிறார்.

13. அடக்கம் உடைமை

ஐம்புலன்களால் பெறுகின்ற அறிவிலும், விரிகின்ற அறிவின் தெரிவிலும் தெரிகின்ற அறிவின் தெளிவிலும் தேர்ந்து நிற்கிறபோதுதான். யாரையும் சார்ந்திடாமல் நடுவுநிலைமை எனும் நற்பணியைச், செப்பமுறச் செய்ய முடியும்.

இப்படிச் செய்வதற்கு, திட்பமான மனத்திண்மையும், நுட்பமான செயல்வன்மையும் வேண்டும் என்று விழைகிறார் வள்ளுவர். அதனால்தான், நடுவுநிலைமை அதிகாரத்தைத் தொடர்ந்து, மனத்துக்குரிய அடக்கப் பண்பைக் கூறுகிற **அடக்கம் உடைமை** என்ற அதிகாரத்தை வைத்திருக்கின்றார்.

அடக்கம் எனும் சொல்லுக்கு இச்சை அடக்கம், ஐம்புலன் அடக்கம், உயிர் ஒடுங்கி இருத்தல் என்று மனக்கட்டுப்பாட்டை விளக்குகின்ற அர்த்தமே கிடைக்கிறது.

பள்ளத்தை நோக்கியே வெள்ளம் பாயும். அதுபோலவே, கள்ளத்தை நோக்கியே உள்ளம் தோயும் என்பது தேவவாக்கு.

மனதுற்றவன் மனிதன். சிந்திக்கின்ற தாகமும் வேகமும் யூகமும் நிறைந்தவன். குழி முயலாகத் துள்ளிக் குதிக்கிற அவனது நினைவுகள், சீறுகின்ற புலியாகத் தாண்டிக் குதித்து, வீறு கொண்ட புயலாகச் சுழன்றடிக்கும் எண்ணங்கள் எல்லாம் இயற்கையல்ல. அவை மனித மனத்துடன் பிறந்த மாய்மாலக் காரியங்களாகும்.

அப்படிப்பட்ட பொய்த்தோற்ற மாயமானை அடக்கி ஒடுக்கி, ஆட்டிப் படைக்கும் ஆற்றல் இருக்கும்போதுதான் நடுவு நிலைமைக்குள் நேர்மை வரும். தூய்மை கிடைக்கும் வாய்மைக்குள்ளும் ·வலிமை பிறக்கும்.

அப்படிப் பெறுகின்ற அடக்கப் பண்பு கிடைத்து விட்டால், அதன் பெருமை எப்படியெல்லாம் ஒளிரும், மிளிரும் என்கிற கருத்துக்களையே அடக்கம் உடைமை அதிகாரத்தில் அளித்திருக்கிறார் வள்ளுவர்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.

பொருள் விளக்கம்:

அடக்கம் = நினைவு ஒழுக்கமாகிய அடக்கம்
அமரர் உள் = பகைவரிடத்தும்
உய்க்கும் = பெருமையுடன் வாழ வைக்கும்
அடங்காமெய் = (அடக்கமாகிய ஒழுக்கத்திற்கு) அடங்காத மெய்யும்,
அதைச் சார்ந்த வாய்மையும் (வாழ்கிற வாழ்க்கையில்)
ஆரிருள் = (ஆர் + இருள்) பூமியில் துன்பத்தில்
உய்த்து விடும் = ஆழ்த்தி அனுபவிக்கச் செய்துவிடும்.

சொல் விளக்கம்:

அமரர் = பகைவர், தேவர்; **தேவர் என்றால்** = சான்றோர், அரசர், துறவியர்; **உய்க்கும்** = அனுபவித்தல், செலுத்துதல்
ஆர் = பூமி; **இருள்** = மயக்கம், துன்பம், ஒளிமங்கி

முற்கால உரை:

அடக்கம் ஒருவனைத் தேவர் உலகத்திலும். அடங்காமை நரகத்திலும் செலுத்தி விடும்.

தற்கால உரை:

ஒருவருக்கு அடக்கம் எப்பொழுதும் அருளையும், அடங்காமை துன்பத்தையும் தரும்.

புதிய உரை:

அடக்கமானது பகைவர்கள் இடையேயும் பெருமை தரும். சான்றோர்களிடையேயும் வீற்றிருக்க வைக்கும். அடக்க மில்லாத மெய்யும் சொல்லும் பூமியிலே பெருந்துன்பத்தையே தந்து வாழ்வை ஒளியற்றதாக்கி விடும்.

விளக்கம்:

மன ஒழுக்கத்தைத்தான் உயிர் ஒடுங்கி இருத்தல் என்கிறார்கள். அடக்கவும் காணுகிற ஆன்றோர்கள் போற்ற, பழிக்கவும் அழிக்கவும் துடிக்கின்ற பகைவர்களும் ஏற்று உவந்தேத்தி வாழ்த்துகிற சூழலை உண்டாக்கி விடுகிறது. பெருகி வரும் துன்பம்தான் நரகம் நிறைந்த இருள் (ஆர் இருள்) மூடிய நோய் வாழ்க்கைதான் பேரிடி தரும் நரகம். ஆகவே, அடக்கத்தால் பெறுகிற மேன்மையையும் நோய்மையையும் வள்ளுவர் முதல் குறளில் கூறியிருக்கிறார்.

122. காக்கப் பொருளா அடக்கத்தை ஆக்கம் அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு

பொருள் விளக்கம்:

அடக்கத்தை = மன ஒழுக்கமாகிய அடக்கத்தை

பொருளாக = உடல்போல (உடலாகவே)

காக்க = காக்க வேண்டும்

அதனின் = அப்படி உடலைக் காக்கிறபோது

ஊங்கு இல்லை = அதைவிட உயர்ச்சியும் மேம்பட்டதும் எதுவும் இல்லை.

உயிர்க்கு ஆக்கம் = அதுவே சீவனாகிய காற்றாகிய உயிருக்கு எழுச்சியையும் வாழ்வையும் உண்டு பண்ணும்.

சொல் விளக்கம்:

உயிர் = சீவன், காற்று, ஆன்மா; **ஊங்கு** = உயர்ச்சி, மேம்பாடு, மிகுதி; **ஆக்கம்** = எழுச்சி, விருத்தி, வாழ்வு, பெருக்கம்

முற்கால உரை:

மக்களுயிர்க்கு அடக்கத்தினும் சிறந்த செல்வமில்லை.

தற்கால உரை:

அடக்கத்தைச் சிறந்த பொருளாக எண்ணிக் காக்கவேண்டும். அடக்கத்தைவிட, மேலான ஆக்கம் தரும் செல்வம் எதுவும் இல்லை.

புதிய உரை:

உடல்தான் உலகின் முதல் பொருள். வாழ்வுக்கு ஆதாரம் உடலைக்காத்தால்தான் உயிர் வாழும். ஆன்மா மேம்பட்டிருக்கும் மன ஒழுக்கமாகிய அடக்கத்தை, உடலை வளமாகக் காப்பது போலக் காத்திருந்தால்தான். அதனுள் வாழ்கிற சீவன் எழுச்சி பெற்ற எல்லாச் சக்திகளையும் அளிக்கும்.

விளக்கம்:

உயிருக்கு எழுச்சி - உடலுக்கு வளர்ச்சி, இவை இரண்டும்தான் அடக்கத்தை வளர்த்துக் காக்கும் ஆற்றல் மிகு சக்தியாகும். அதனால்தான் உயிருக்கு ஆக்கம் எதுவும் இல்லை. அதற்கு ஒரே வழி உடலைப் பேணுங்கள். வலிமையான உடலில் வலிமையான மனம். ஆகவே, மன அடக்கத்திற்கு உடலைப் பொறுப்பாகக் காக்கவும் என்று 2 வது குறளில் வலியுறுத்துகிறார்.

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்

பொருள் விளக்கம்:

செறிவறிந்து = எந்த உறவிலும் எல்லை கடவா நிலையை அறிந்து
அறிவறிந்து = அதனை ஐம்பொறி உணர்வால் தெளிந்து
அடங்கப் பெறின் = செய்யத் தக்கதைச் செய்கிறபோது
சீர்மை பயக்கும் = நன்னடை வளர்ந்து, சிறப்பைக் கொடுக்கும்.

சொல் விளக்கம்:

அறிவு = ஐம்புலன் உணர்வு
செறிவு = உறவு, எல்லை கடவாத நிலை, கூறியது மறுக்காமை
சீர்மை = நன்னடை, நல்லொழுக்கம், புகழ், சிறப்பு

முற்கால உரை:

ஒருவன் அடங்கி நடப்பானாகில், அவ்வடக்கமே மேன்மையைத் தரும்.

தற்கால உரை:

அடக்கமாக வாழ்தலே அறிவுடைமை என்று அடங்கி நடப்பானேயானால் உலகத்தார் அவனை மேலாக மதிப்பார்கள்.

புதிய உரை:

உலகத்திலுள்ள உறவுகளின் எல்லை அறிந்து, அவற்றை உணர்ந்து, செய்யத் தக்கதைச் செய்கிறபோது, நல்லொழுக்கம் பெருகும்; புகழாகிய சிறப்பும் மிகுதி பெறும்.

விளக்கம்:

அடக்கம் என்பது என்ன? உலக உயிர்களிடையே வாழ்கிற போது, அவற்றின் எல்லையை அறிந்து, அதற்கேற்றபடி செய்து ஒழுகுகிற சிறப்பான செயல். அதுவே அடக்கம் ஆகும். அருமையும் ஆகும்.

எல்லை கடவாமை என்பது, கூறுவதில் அருளாண்மை, அதை என்றுமே மறுக்காத மறக்காத பேராண்மை. ஐம்புலன்களின் உயர்வுகளை வளர்த்திருக்கும் செயல் ஆண்மை. இதுதான் அடக்கத்தின் குணநலன்களாகும்.

ஐம்புலன்களின் உணர்வுதான் அறிவாக (Sense) விரிகிறது. புலன்களில் ஒன்று போனாலும் அறிவின் கூறுகள் குறையும். ஐம்புலன்களின் உணர்வைத்தான் ஆங்கிலத்தில் Common Sense

என்றனர். பூரண அறிவுக்கு வலிய உடல். வலிய மனம் வேண்டும். அந்த முழு உடலில்தான் முழுமையான அடக்கம் வளரும் என்று 3ஆம் குறளில் வள்ளுவர் விளக்குகிறார்.

124. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது

பொருள் விளக்கம்:

நிலை = உலக ஒழுக்கம் (தொழில் ஒழுக்கம்)
இல் = இல்லற ஒழுக்கம்
திரியாது = (இவற்றில் என்றும்) மாறுபடாது
அடங்கியான் = ஒழுகும் ஒழுக்கசீலனின்
தோற்றம் = வலிமையும் வார்த்தையும்
மலையினும் = உவமையில்லாத வீரத்தை விட
மாணப்பெரிது = மிகவும் மாட்சிமை மிக்கதாகும்.

சொல் விளக்கம்:

உலகம் = தொழில்; **இல்** = இல்லற ஒழுக்கம்
தோற்றம் = வலிமை, வார்த்தை, சொல்; **மாணம்** = மாட்சி;
மலை = குன்று, உவமை, வீரம்

முற்கால உரை:

அடக்கம் உடையவன் உயர்ச்சி மலையினும் மிகப் பெரியது.

தற்கால உரை:

அசைகின்ற மனிதன் ஒழுக்க நிலையில் மாறுபடாது இருப்பானேயானால், அவனது தோற்றப் பொலிவு அசையாத மலையின் தோற்றத்தை விடப் பெரியதாகும்.

புதிய உரை:

செய்தொழில் ஒழுக்கம், இல்லற ஒழுக்கம் இவற்றில் மாறுபடாமல் வாழும் அடக்கியானின் (உடல்) வலிமையும், சொல்லும், உவமையல்லாத வீரத்தை விட, உயர்ச்சியுடையதாக இருக்கும்.

விளக்கம்:

மனிதன் இல்லறத்தை மிகவும் நேசிப்பவன். செய்கிற பணியில் யோசிப்பவன். இந்த இரண்டிலும் ஒருவன் ஒழுக்கத்தைப்

பூசிப்பவனாக இருந்தால், அவன் வாழ்வு வலிமை பெற்றுக் கொள்கின்றது. அவனது வார்த்தைகளும் வாய்ச் சொல்லும் தெளிவும், பொலிவும் பெற்றுக் கொள்கின்றன. அவனது எழிலான தோற்றமும், முடிவான சொல் முழக்கமும், மற்றவர்கள் இடையே மிகப் பெரும் சிறப்பையும் புகழையும் பெற்றுத் தருகின்றன.

மாறாத இல்லற ஒழுக்கம், மாறாத வாழ்வுக்குரிய செயல் ஒழுக்கம் இரண்டிலும் அடங்கியவன், நிலையாகவும் மலையாகவும் இருப்பது பெரும் வீரம். அந்த வீரத்திற்கு உவமையே இல்லை. உவமை இல்லா வீரத்தைத் தந்து, உலகோரிடை உயர்ந்த பாசத்தை வளர்க்கும் பாங்கு பற்றி வள்ளுவர் 4 ஆவது குறளில் அடக்கத்தின் மேன்மையையும் அடக்கியவன் ஆண்மையையும் அழகுபடக் கூறியிருக்கிறார்.

125. எல்லார்க்கு நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து

பொருள் விளக்கம்:

எல்லார்க்கு = தேவர் போன்றவர்களாகிய அரசர்
நன்றாம் = அடங்கிய ஒழுக்கம் சுகத்தைத் தரும்
பணிதல் = அப்படிப்பட்ட எளிமையான இரங்கும் ஒழுக்கம்
அவருள்ளும் = மற்ற மக்களிடத்தும் காட்டுகிற போது
செல்வர்க்கே = அடக்கமுடைய அறனுக்கு
செல்வம் தகைத்து = இன்ப வாழ்க்கையில் ஏராளமான நன்மைகளைக் கொடுக்கும்.

சொல் விளக்கம்:

எல்லார் = தேவர், அரவர், துறவியவர், புலவர், மேலோர்
பணிதல் = இரங்குதல், எளிமையாதல் ; **உள்** = மன எழுச்சி
தகைத்து = தன்மை, அழகு, ஆற்றல்
செல்வம் = அழகு, இன்பம், வாழ்க்கை

முற்கால உரை:

அடக்கம் பொதுவாக எல்லாருக்கும் நலம் பயக்கும். அது செல்வரிடத்தில் இருக்குமானால், கூடுதலாக தனியொரு செல்வமாக அமைந்து விடும்.

தற்கால உரை:

பணிவு என்னும் உயர் தன்மை பொதுவாக அனைவருக்குமே நன்மையாம். அவ்வனைவருள்ளும் செல்வர்களுக்கு அமையும் பணிவோ, மேலுமொரு செல்வமுடைய சிறப்பினது.

புதிய உரை:

சமுதாயத்தில் மேலோர்களிடம் காட்டுகிற பணிதலை, மற்ற பொது மக்களிடமும் காட்டி பணிகிற அடக்கம் உவமையே இல்லாத வீரம் ஆகும். அந்த வீரமே இன்ப வாழ்க்கையையும் ஏராளமான நன்மைகளையும் அளித்துவிடும்.

விளக்கம்:

பணிதல் என்பது எளிமையும் இரக்கமும் ஆகும். தன்னை விட உயர்ந்தவர்களிடத்தில் செய்கிற பணிதலில், பக்தியும் இருக்கும். பயமும் இருக்கும். அதில் பண்பாடும் மிகுந்து இருக்கும். ஆனால், தம்மைப்போல, அல்லது தம்மை விட கீழ் நிலையில் இருப்பவர்களிடமும் அதே பணிதலைக் காட்டுவது என்பது பேராண்மை. இவ்வாறு நடக்க இயலாததைச் செய்கிற போது அதுவே வீரத்தின் சிகரம் ஆகி விடுகிறது. அந்த வீரமும் தீரமும் அவருக்கு ஆற்றலையும் அற்புத மன எழுச்சியையும் வளர்த்து விடுகின்றன. அப்படிப்பட்ட செழிப்பும். பெருக்கமும் சுகங்களையும் நன்மைகளையும் ஏராளமாகத் தந்து விடுகின்றன. தன்னைப் போல் மற்றவரையும் மதிப்பதே அடக்கத்தின் தத்துவம் என்று 5 வது குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து

பொருள் விளக்கம்:

ஒருமெய்போல் = வெற்றியைப் பெறத்தக்க உடல் போல
ஐந்தடக்கல் = ஐம்பொறிகளை அடக்குவதற்கு ஒப்ப
உன்மெய்யும் = எழுச்சிமிக்க மனமும் (உட்பகையை)
ஆற்றின் = கட்டுப்படுத்தி விட்டால்
எழுமெய்யும் = அவரைத் தொடரும் ஏழு பரம்பரைக்கும்.
ஏமாப்புடைத்து = பாதுகாப்பான வாழ்வைக் கொடுத்து விடும்.

சொல் விளக்கம்:

ஒரு = ஆடு, வெற்றி, **மெய்** = உடல் (ஒருமெய் =ஒருமை)
உள்மெய் = மனம். **ஐந்தடக்கல்** = ஐம்புலன்களை அடக்குதல்

முற்கால உரை:

ஒருவனைப் பொறியடக்க வல்லவனாகில் ஏழு பிறப்பிற்கும் உறுதி உடைத்து என்பதாம்.

தற்கால உரை:

ஐம்பொறிகளின் அடக்க உணர்வே ஒருவனுக்கு என்றென்றும் எல்லா நிலைகளிலும் துன்பம் அணுகாமல் இருப்பதற்குக் காரணமாய் அமையும்.

புதிய உரை:

ஐம்புலன்களை அடக்கும் ஆற்றலில் உடலுக்கு வெற்றி கிடைப்பதுபோல, உள்மெய்யாகிய மனத்தின் உட்பகையை அடக்கி விட்டால் அவருக்கு மட்டுமல்ல, அவரது ஏழு பரம்பரைக்கும் பாதுகாப்பாக அது அமையும்.

விளக்கம்:

ஒருவனின் ஒழுக்க வாழ்வுதான், அவன் குடும்பத்தை, பரம்பரையைப் பிரதிபலிக்கும். இழிந்த வாழ்வு வாழ்ந்து அழிந்து போன உடல் கொண்டவனுக்கு, உண்டாகும் பரம்பரையும் அழிந்தேதான் தோன்றி அவதிப்பட்டு மறையும்.

உடலின் வெளிப்பகை ஐந்து. கண், காது, மூக்கு, நாக்கு, மெய். மனத்தின் உட்பகை ஆறு. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம். ஐந்தடக்கல் ஆற்றின் அதுதான் வெற்றிகரமான உடல் என்பதையே ஒருமெய் (ஒருமை) என்றார். வெற்றிகரமான உடலில் உள்ள மனமும் அதன் உட்பகையை வெல்ல வேண்டும். வென்றால்தான் அன்றைய வாழ்வும் அவரைத் தொடரும். பரம்பரையின் வாழ்வும் நோய்களின்றி நோவுகளின்றி வாழும். ஏழு + மெய் = எழுமை. ஏழு மெய்கள் என்பது ஏழு பிறப்பின் தொடர்ச்சி ஆகும்.

ஆக, தனக்காக மட்டும் வாழாமல் தனது சந்ததிக்காகவும் அடக்கத்துடன் வாழ வேண்டும் என்று விஞ்ஞான பூர்வமான கருத்தை 6 ஆம் குறளில் வள்ளுவர் குறித்துக் காட்டி யிருக்கிறார்.

127. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

பொருள் விளக்கம்:

யாகாவார் ஆயினும் = எந்த உறுப்பை அடக்கிக் காக்க இயலாவிட்டாலும்

நாகாக்க = நாச்சுவையை அடக்கிக் க்காத்தாக வேண்டும்.

காவாக்கால் = அப்படி காக்காவிட்டால்

சொல் இழுக்கப்பட்டு = பேசும்போது சொற்கள் பிழைபட வெளிவரும் அவல நிலையால்

சோகாப்பர் = உறங்கித் துன்பப்படுவர் (எப்படி)

சொல் விளக்கம்:

நாகாக்க = நாச்சுவையை அடக்கிக் காப்பாற்றுக

சோகாப்பர் = உறங்கித் துன்புறுவர்

முற்கால உரை:

எதைக் காக்காவிட்டாலும், நாவைக் காக்கவேண்டும்.

தற்கால உரை:

ஒருவருக்கு நாவடக்கம் இல்லாவிடில் சொற்குற்றத்தில் அகப்பட்டு அவர் வருந்த வேண்டி வரும்.

புதிய உரை:

சுவை காட்டி சோகத்தில் ஆழ்த்தும் நாவைக் கட்டுப்படுத்தா விட்டால், நோய்களுக்கு ஆளாகி, வாய் கெட்டு, வார்த்தைகெட்டு, உடலால் வதங்கி, சொல்லால் குழறி, துன்பத்திற்கு ஆளாக நேரிடும்.

விளக்கம்:

நா என்பது ஐம்புலன்களில் ஒன்று சுவையறியும் புலன் அது. நாக்கின் இயற்கைப்பணி அறுசுவைகளை அறிந்து, சுவைத்து மகிழ்வது. அதன் பிறகுதான் பேச்சு வருகிறது. பேச முடியாத மக்களும் உலகத்தில் உண்டு. ஆனால், சுவைக்க இயலாத மக்கள் இருந்ததில்லை. இருப்பதும் இல்லை. ஆகவே, நாவின் முதல் பணியான சுவைக்கும் சக்திதான் மனிதரை நோகடிக்கிறது. நோய்களை உண்டாக்கிச் சாகடிக்கிறது. நோய்கள் ஏற்படுவது உடலின் எதிர்ப்புச் சக்தி குறைவதால்தான், பெருகும் நோய்களுக்குக் காரணம். சுவைக்கு அடிமையாகி பேராசையால் பெருந்தீனி தின்று நா முதலில் வாயைக் கெடுக்கிறது. பிறகு வயிற்றைக் கெடுக்கிறது. பிறகு வலிமையைக் குறைக்கிறது. உண்ணும் உணவு மிகுதியாததால் பல் பாதிக்கப்படுகிறது. அந்தப் பல் போனால் சொல் போகும் என்பது பழமொழி.

பல் இழந்த பொக்கை வாயில் பேச்சு வரும்போது குளறிப் பேசுகிற பேச்சின் அர்த்தமே மாறிப் போய் குற்றம் உண்டாகி, கேட்போரைக் கோபமடையச் செய்கிறது. அதனால்தான் சொல் இழுக்குப் பட்டு என்றார். அதனால் மனவாட்டம், உடல் ஆட்டம் இப்படிப் பல துன்பங்களுக்கு ஆளாக்கிவிடும்.

அடக்கமான வாழ்வுக்கு நா அடக்கம்தான் முக்கியம். வயிற்றைக் குறைத்தால் வாழ்வு சிறக்கும். சுவை ஆசையைக் குறைத்தால் சுகம் வளரும். ஆகவே, நாவடக்கக் கற்றுக்கொள் என்று ஐந்தடக்கல் என்று கூறி, அறிவே! தலையாய பகையான நாவைக் கட்டுப்படுத்து என்று 7வது குறளில் கூறுகிறார்.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நன்றாகாது ஆகி விடும்.

பொருள் விளக்கம்:

தீச்சொல் = சேர்ந்தாரைக் கொல்லுகின்ற தீ போன்ற சொல்.
ஒன்றானும் = ஒன்றாக சொல்தான் ஆனாலும்
பொருட் பயன் உண்டாயின் = அதனால் உடலுக்கு பலன் கிடைத்திருக்கலாம். (அது)
நன்றாகாது = அவரின் மனதுக்கு சுகமோ நன்மையோ தராமல்
ஆகிவிடும் = மாற்றிவிடும்.

சொல்விளக்கம்:

தீ = சேர்ந்தாரைக் கொல்லி, **பொருள்** = உடல்.
நன்றாகாது = சுகம், நன்மை தராது.

முற்கால உரை:

கொடுஞ்சொல் ஒன்று உண்டாயின் அவனுக்கு நன்மை உண்டாகாது.

தற்கால உரை:

நல்ல சொற்களிடையே ஒரு தீய சொல்லைக் கலந்து பேசினாலும் பேச்சில் உள்ள பிற நன்மைகளும் தீயவையாகக் கருதப்படும்.

புதிய உரை:

சுட்டெரிக்கும் கொடுஞ்சொல் ஒன்று பேசுகிறபோது, உடலுக்குப் பலர் பெறக்கூடிய பலன் கிடைக்கலாம். ஆனால், மனத்துக்கு நன்மையும் சுகமும் தரக்கூடிய எதுவும் ஆகிவராமல் போய்விடும்.

விளக்கம்:

ஏழாவது குறளில் நாவின் முதல் பணியான சுவை ரசத்தால் ஏற்படும் தீமைகளை விளக்கினார். எட்டாவது குறளில் நாவின் இரண்டாவது பணியான சொல்லால் ஏற்படும் தீமை பற்றிக்

கூறுகிறார். நல்ல சொற்களைப் பேசத்தான் நா இருக்கிறது. எவ்வளவு இனிய சொற்களைப் பேசினாலும், இதில் இருந்து மாறவே கூடாது. மாறிக்கொண்டு ஒரு சொல், தீய சொல்லாகப் பேசிவிட்டால், பேசிய பின் பெருமை போகும். சுகம் போகும். நன்மையும் நாசமாகும். அதுபோலவே, கேட்பவர்களின் மனமும் செவியும் கலக்கமடையும். அதனால்தான் தீய சொல் என்று கூறாமல் தீச் சொல் என்றார். தான் இருக்கும் இடத்தை மட்டுமன்றி, சேர்ந்துள்ள இடத்தையும் தீயானது அழிக்கும். அதுபோல நாவானது தானும் கெட்டுத் தம்மைச் சுற்றியுள்ள மற்ற புலன்களையும் கெடுத்துவிடும். ஆகவேதான், நாக்குக்காக இரண்டு குறள்களை அடுத்தடுத்துத் தந்துள்ளார்.

ஐம்பொறிகளிலே ஆழமான வீரியம் உள்ள பொறி நாப்பொறி, அதுவே தீப்பொறி என்று நாவின் சக்தியைக் கூறி அதை அடக்குபவரே ஆற்றலாளர் என்று கூறுகிறார்.

129. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு

தீயினால் சுட்ட புண் ஆறும், உள் ஆறாதே, வடு நாவின் சுட்டஆல் என்று இந்தக் குறளைப் பகுத்திருக்கிறேன்.

பொருள் விளக்கம்:

தீயினால் சுட்டபுண் ஆறும் = தீயினால் சுட்டபுண் ஒருநாள் ஆறிவிடும்; வடு = வாளாக, வண்டாகத் தாக்குகிற

நா = தீச்சுவாலை குணம் கொண்ட நாக்கானது

சுட்ட ஆல் = சுட்டு ஏற்படுத்திய நஞ்சானது

ஆறாதே = வாழ்நாள் முழுவதும் தணியாமல் மாறாமல் வதைத்துக் கொண்டேயிருக்கும்

சொல் விளக்கம்:

வடு = வாள், வண்டு, வண்டாகத் தாக்குகிற

நா = தீச்சுவாலை, குணம் கொண்ட நாக்கு

சுட்டஆல் = சுட்டு ஏற்படுத்திய நஞ்சானது

ஆறாதே = வாழ்நாள் முழுவதும் மாறாமல் தணியாமல் வதைத்துக் கொண்டேயிருக்கும்.

முற்கால உரை:

தீயினால் சுட்டபுண், மெய்க்கண் கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே ஆறும். வெவ்வுரையால் சுட்ட வடு எஞ்ஞான்றும் ஆறாது.

தற்கால உரை:

தீயினால் சுட்ட புண்ணினால் ஏற்பட்ட துன்பம் மனத்தை விட்டு நீங்கிவிடும். கடுஞ்சொல்லால் ஏற்பட்ட மனப்புண் ஒரு போதும் நீங்காது.

புதிய உரை:

இயற்கைத் தீ சுட்ட புண் ஆறிவிடும். செயற்கைத் தீச்சுவாலையான நாக்கு சுட்ட நஞ்சு, உடலை விட்டு என்றுமே நீங்காது மாறாமல் நிலைத்துப் போய்விடும்.

விளக்கம்:

தீக்காயத்தை மருந்து ஆற்றும், பிறகு காலமே அந்தக் காயத்தை ஆற்றும். ஆனால், வடு என்பது தழும்பு மட்டுமன்று. வாள், வண்டு, குற்றம் என்னும் பொருளை உடையது. வடு சுட்டது என்பது. உடலில் வாளாகப் பாய்ந்து. மனத்தை வண்டாகக் குடைந்து, தடித்து, தழும்பேறிய நாக்கு. அது தீச்சுவாலை போல தீய்க்கும் தன்மையால், கொடிய நஞ்சாக உள்ளே புகுந்து நாடி நரம்புகளில் ஏறி அமர்ந்து, மின்னலாகத் தாக்கி சின்னா பின்னப்படுத்தி விடுகிறது.

7,8 குறள்களில் நாவின் இயல்பான சுவைக் கொடுமை, சொல் கொடுமை பற்றிப் புறத்தன்மையைக் கூறிய வள்ளுவர், 9ம் குறளில் அகம் படுகிற கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

சொல் என்பது கொல் என்பதற்குச் சமம். சொல்லை ஆலாக மாற்றாமல் பாலாக உதவு என்பதே வள்ளுவரின் உள்ளமாகும்.

130. கதம்காத்து கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

பொருள் விளக்கம்:

கதம் காத்து = வெளிப்புறப் பாதிப்புகளினால் ஏற்படும் கோபத்தையும் தன்னுடைய வலிமையையும் அடக்கி

கற்று உழைத்து = அதனால் பெற்ற அனுபவங்களைக் கற்று

ஆற்றின் = வருந்தி ஈட்டிக் கொண்டு

செவ்வி = ஏற்ற சமயம் அறிந்து

அறம்பார்க்கும் = ஒழுக்கத்தைக் காக்கும் அறனே

அடங்கல் ஆற்றுவான் = அடக்கத்தைக் கடைப்பிடிப்பவன் ஆவான்.

சொல் விளக்கம்:

கதம் = கோபம், வலிமை; **செவ்வி** = ஏற்ற சமயம்

அறம் = ஒழுக்கம்; **உழைத்து** = வருந்தி ஈட்டுதல்

முற்கால உரை:

கற்றடங்க வல்லவனாயிருப்பவன் சமயத்தைத் தருமக் கடவுள் பார்க்கும்.

தற்கால உரை:

சினம் இல்லாமல் அடக்கத்தோடு ஆற்றல் பெற்று விளங்குபவரை, அறமானது தழுவி நிற்கும்.

புதிய உரை:

சுற்றுப்புற சூழ்நிலைகள் ஏற்படுத்தும் கோபத்தை அடக்கி, அதனால் ஏற்படும் அனுபவங்களைக் கற்று, கால நேரம் அறிந்து ஒழுக்கம் காக்கும் அறனே - அடக்கத்திற்குப் பெருமை சேர்க்கிறான்.

விளக்கம்:

சுற்றுப்புறச் சூழ்நிலைகள்தான் ஒருவனைச் சுற்றிப் பாடாய்ப்படுத்துகின்றன. கேடனாகவும் மாற்றுகின்றன. எதிர்மறையாக காரியங்கள் நடப்பதுதான் இயற்கைக்குரிய இனிய தர்மம் ஆகும். எதிர்மறை நிகழ்ச்சிகளைக் கண்டு கோபப்படுவதும் கொந்தளிப்பதும் மனிதனுக்கு உரிய மாறாத குணமாகும். எந்த நிலையிலும் ஏற்படுகிற கோபத்தைத் தவிர்த்து, தன் வலிமையை அடக்கி, ஏற்படுகிற நிகழ்ச்சிகளில் இருந்து பாடங்களைக் கற்று, அதன்வழி ஒழுக்கம் காத்து, காலம் நேரம் பாராமல் அடக்கத்துடன் வாழ்கிற ஆற்றலே பேராற்றல் ஆகும். மனப் பகையான கோபத்தையும், உடல் பகையான வலிமையையும் வென்று வாழ்வதே அடக்கமுடைமையின் அளவரிய பெருமை என்று இந்த அதிகாரத்தை முற்றுப்படுத்துகிறார் வள்ளுவர் பெருமான் அவர்கள். தெய்வம் என்றார்.

14. ஒழுக்கமுடைமை

உட்பகை, வெளிப்பகை இரண்டும் தான் மனிதனை பாடாய்ப்படுத்தும் வலிமை கொண்டவையாகும். உட்பகை எல்லாம் மனித மனத்தில் ஏற்படும் திடீர் மருட்சியால், நெகிழ்ச்சியால், எழுச்சியால் உண்டாகின்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறையும், அடக்கினால் அதுதான் அடக்கம் உடைமை.

வெளிப்பகையாக விளங்கும் ஐம்புலன்களும், வெறித்தனத்தை, வேட்கைத் தனத்தை, விடலைத்தனத்தை வெளிப்படுத்தும் வேகம் உடையன. அந்த ஐம்பொறி ஆற்றலை அடக்கி வாழ்வதுதான் ஒழுக்கம்உடைமை ஆகிறது.

அடக்கம் என்பது மனத்தையும், ஒழுக்கம் என்பது உடலையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் வாரியங்களாகும்.

தன்னையறிந்தவன் தலைவன் ஆகிறான். தானே தனக்குத் தலைவனும், நட்டானும் என்பதை விளக்குவதுதான் அடக்கமும் ஒழுக்கமும். ஆன்றோர்கள் உருவாக்கியவை எல்லாம் - மக்கள் நல்வாழ்வுக்காகவே, அவர்கள் விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கினவற்றைத் தவிர்த்தலும் தான் ஒழுக்கத்தின் பண்பாடு ஆகும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகி, மேன்மைத் தன்மையில் நடப்பதைத்தான் ஒழுக்கம் என உரைக்கப்பட்டது.

ஒழுகுதல் என்றால், தொடர்ந்து செய்து கொண்டே வருதல், அதை நெடுமையாதல் என்பர். நீட்டித்தல், தொடங்கிய நாள் முதல் தொடர்ந்து நடத்துதல் . அந்த அளவின்மை கருதியே, அருமையும் பெருமையும் கருதியே, ஒழுக்கம் என்றனர்.

மன அடக்கத்திற்குப் பிறகு செயல் ஒழுக்கம் வருகிறது என்பதற்காகவே அடக்கம் உடைமைக்குப் பிறகு ஒழுக்கம் உடைமை எனும் இந்த அதிகாரத்தை வள்ளுவர் வைத்திருக்கிறார்.

வெளிப்பகையானது புலிப்பகையைவிட பொல்லாதது என்பதையே வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்

பொருள் விளக்கம்:

ஒழுக்கம் = உடல் காக்கும் நல்ல பழக்க வழக்கங்கள்
விழுப்பம் = மேன்மையும் நன்மையும் (மிகுதியாகப்) பெற
தரலான் = ஆசையைத் தூண்டுதலால்
ஒழுக்கம் = அந்தப் பேரெழுச்சியை
உயிரினும் = உயிர்காக்கும் சுவாச ஒருமையால்
ஓம்பப்படும் = வளர்க்க அவ்வனம் மேம்படும்.

சொல் விளக்கம்:

ஒழுக்கம் = நன்னடத்தை, விருத்தி, விதித்த கடமை வழுவாது
விழுப்பம் = ஆசை, நன்மை, மேன்மை, சிறப்பு
ஓம்புதல் = மனத்தை ஒருப்படுத்துதல்
உயிர் = மூச்சு, சுவாசம், காற்று.

முற்கால உரை:

ஒழுக்கம் சிறப்பைத் தருதலான் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானது ஆகும்.

தற்கால உரை:

ஒழுக்கம் ஒருவருக்கு மேன்மை தருவதால் அந்த ஒழுக்கமே உயிரைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகப் போற்றிக் காக்காப்படும்.

புதிய உரை:

உடல் காக்கும் நல்ல பழக்கங்கள் தருகிற நன்மையைக் கண்டு, மேன்மை ஆசை வளர்வதால், அந்த எழுச்சியைச் சுவாசிப்பது போல் ஒருமனத்துடன் காப்பது தான் சிறந்த ஒழுக்கம் ஆகும்.

விளக்கம்:

ஒழுக்கமான செயல்கள், உடல் உறுப்புக்களால் உடலுக்காகச் செய்யப்படுகின்றன. உடல் நலம், பலம் பெறுகிறபோது அதன் மேல் விருப்பம் ஏற்படுவதும், அதிலே வேட்கை மிகுவதும் இயற்கையே. அந்த ஒழுக்க எழுச்சியை, எப்படித் தொடரவேண்டும் என்றால், மன ஒருமைப்பாட்டுடன். அதைத்தான் **ஓம்புதல்** என்றனர். எதைத் தொடரவேண்டும் என்றால், **சுவாசத்தை.** சுவாசத்தை ஒழுங்காகத் தொடர்ந்தால்தான் உயிர் நிலைக்கும். தெளிவான, திட்பமான, தீர்க்கமான சுவாசப் பயிற்சி வேண்டும். ஒழுக்கம் என்பது உயிரின் செயல். உடல் காக்கும் ஒழுக்கம், உயிர் காக்கும் முழக்கம் போல அமைய வேண்டும் என்று முத்தாய்ப்பாக முதல் குறளில் தொடங்குகிறார்.

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை

பொருள் விளக்கம்:

பரிந்து = ஏற்றுக் கொண்டதால், துணிந்து
ஓம்பிக் காக்க = மன ஒருமைப்பாட்டுடன் காக்க வேண்டியது
ஒழுக்கம் = நலமான செயல்களாகும்
தெரிந்து = மேலும் ஆராய்ந்தாலும்
ஓம்பித் தேரினும் = காப்புக்குரிய காரியங்களை அளந்தாலும்
அஃதே துணை = அதுவே (வாழ்வுக்கு) ஆதாரமாக அமைந்திருக்கிறது.

சொல் விளக்கம்:

பரிந்து = துணிந்து, ஏற்றுக் கொண்டு; **தெரிந்து** = ஆராய்ந்து, **தேரினும்** = அளந்தாலும் முகந்தாலும்; **துணை** = ஆதாரம், உதவி

முற்கால உரை:

ஒழுக்கத்தைக் காக்கின் அவ்வொழுக்கமே துணை என்பதாகும்.

தற்கால உரை:

ஒருவனுடைய நல்வாழ்வுக்கு ஒழுக்கமே ஏற்ற துணையாக இருக்கும்.

புதிய உரை:

ஒழுக்கத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, துணிச்சலுடனும் ஒருமை மனப்பாட்டுடனும் தொடர்வதே வாழ்வுக்கு ஆதாரமாக அமையும்.

விளக்கம்:

ஒருநாள் பழக்கமாக நல்ல செயல்கள் இருந்தால் அது ஒழுக்கமாகாது. தொடர்ந்து செய்தால்தான் பழக்கமாகி வழக்கமாகி உடலோடு ஒன்றிய இணக்கமாகி விடும். அப்படித் தொடர்வதற்கு முதலில் மனதால் ஏற்றுக் கொள்ள வேண்டும். துணிவின் கனியாக செயல்கள் வேண்டும்.

ஆக நாம் எத்தனை நூல்களை ஆராய்ந்தாலும் எத்தனை வேதங்களை முகந்தாலும், ஒழுக்கத்திற்குத் துணை - துணிவும் ஏற்றுக் கொள்ளும் கனிவும்தான்.

உடலால் ஒழுக்கம் ஓம்பப்பட - விடவே முடியாத சுவாசம் போல நினைவும் செயலும் வேண்டும் என்று முதல் குறளிலும், அப்படிச் செய்வதை ஏற்றுக் கொண்டது போல மன ஒருமையுடன் தொடரும் துணிவு வேண்டும் என்றும், 2வது குறளிலும் ஒழுக்கத்தைப் பின் பற்ற வேண்டின் வேண்டிய உறுதிக் குணங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார்.

133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்

பொருள் விளக்கம்:

ஒழுக்கம் உடைமை = நல்ல பழக்கமான ஒழுக்கம் உள்ளவரால்
குடிமை = (தான்) பிறந்த குடியையே உயரச் செய்ய முடியும்.
இழுக்கம் = (அந்த ஒழுக்கத்தைப் பின்பற்றும் முறைகளில்) குறையும் தளர்வும் பின்வாங்குதலும் நேர்ந்தால்
இழிந்த = மிகவும் கீழ்மையான
பிறப்பாய்விடும் = அச்சத்தைத் தந்து செயல்களில் மீளாத மயக்கத்தை உண்டு பண்ணும்.

சொல் விளக்கம்:

குடிமை = பிறந்த குடியை உயரச் செய்யும் தன்மை
இழுக்கம் = குறை, தளர்வு, பின்வாங்குதல், விலகுதல்
இழிந்த = கீழ்மையான,
பிறப்பு = அச்சம், தொடக்கம், மயக்கம்.

முற்கால உரை:

தத்தம் வருணத்திற்கு ஏற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம். அவ்வொழுக்கத்தில் தவறுதல். அவ்வருணத்தில் மிகவும் தாழ்ந்த வருணமாகிவிடும்.

தற்கால உரை:

நல்லொழுக்கம் தீயொழுக்கம் ஆகியவற்றைக் கொண்டே மக்களின் உயர்வு தாழ்வு குடிப்பிறப்பு நிலைகள் மதிப்பிடப்படும்.

புதிய உரை:

ஒருவரது ஒழுக்கத்தால்தான் அவர் பிறந்த குடிப் பெருமை பெறுகிறது. அவர் அந்த ஒழுக்கத்தில் தவறி விலகிப் பின்வாங்கி வாழ்கிறபோது, அவரது வாழ்வே இருண்டு மயக்கத்திற்கு உள்ளாகிவிடும்.

விளக்கம்:

பிறப்பும் குலமும் எவர் கையிலும் இல்லை. அதன் சிறப்புக்கும் பெருமைக்கும் ஒருவர் ஒழுக்கமும் உழைப்புமே உறுதுணையாகிவிடும். ஆகவே, புகழ் பெற்ற குடியில் பிறந்து அதன் பெருமையைக் காப்பது பெருஞ்சிறப்பு அல்ல. அது சாதாரணம்தான். சிறப்பு இல்லாத ஒரு குடியில் பிறந்து, தன்

ஒழுக்கத்தால் உயரச் செய்வதுதான் உயர்ந்தோரின் பண்பாகும். அந்தப் பண்பாற்றலைத்தான் ஒழுக்கம் தருகிறது. அப்படிப்பட்ட ஒழுக்கத்தில் ஒருவர் தவறுகிறபோது விலகிப் பின் வாங்குகிறபோது, அவரது வாழ்வு கீழ்மை அடைகிறது. இருள் அடைகிறது. செயல் மயக்கம் தொடர்கிறது. ஆகவே, ஒழுக்கம்தான் வழிகாட்டி. வாழ்க்கைக்கு முனைப்பூட்டி, சிறப்புக்குச் செயல்காட்டி என்று மூன்றாம் குறளில் ஒழுக்கம் ஒருவரை எப்படி உயர்த்துகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

134. மறப்பினும் ஒத்துக் கொளல்ஆகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

பொருள் விளக்கம்:

பார்பான் = ஆய்ந்தறிந்தோராகிய உயர்ந்தோர்
ஓதம் = உரிய இயற்கையான விதி இயல்களை
மறப்பினும் = மதியாமல் விட்டு விட்டாலும்
கொளல் ஆகும் = அதை (உடலும் மனமும்) ஏற்றுக் கொள்ளும்.
ஒழுக்கம் குன்ற = (ஆனால்) ஒழுக்கமானது குறையக்குறைய
பிறப்பு கெடும் = அவரது தோற்றம் சீரழிந்து போகும்.

சொல் விளக்கம்:

மறப்பினும் = விட்டுவிடுதல், மதியாமை
ஓத்து = வேதம், இயல், விதி, ஒழுக்கம்
பார்ப்பான் = உயர்ந்தோர்; **பிறப்பு** = தோற்றம்

முற்கால உரை:

கற்ற வேதத்தினை மறந்தானாயினும், அவ்வருணம் கெடாமையாற் பின்னும் ஓதிக்கொள்ளலாம். அந்தணனது உயர்ந்த வருணம் தன் ஒழுக்கம் குன்றக் கெடும்.

தற்கால உரை:

ஒருவன் தான் கற்றதை மறந்து விடுவானேல், அதனை மீண்டும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் கெடுமானால், அதை மீண்டும் தேடிக் கொள்ள முடியாது.

புதிய உரை:

இயற்கை விதிகளை அசட்டை செய்து விலக்கினாலும், மீண்டும் அவற்றை ஏற்று வாழ்வில் தேறலாம். ஆனால், உடல் ஒழுக்கம் குன்றி விட்டால் அவனது உடல் தோற்றமே கெட்டுப்

போகும். மீண்டும் அவனால் உடல் தோற்றத்தை முன்போல பெறவே முடியாது.

விளக்கம்:

இயற்கை அறிவு, கற்ற அறிவு முதலியவற்றை மதிக்காமல் மறந்து விடலாம். அதனால் ஏந்தப் பாதிப்பும் இல்லை. உடல் செயல்களில் ஒழுக்கம் குறைகிறபோது உடலின் அளவு, அழகு, அமைப்பு, தோற்றம் எல்லாமே மாறி விடும். பார்ப்பான் என்றால், உடலைப் பார்ப்பவன், ஒழுக்கத்தைச் சேர்ப்பவன் தீயதைத் தீர்ப்பவன். ஆகவே, அவனது உடல் கட்டான அமைப்பு இழுக்க, காட்சிக்கு கவர்ச்சிகரமானவனாக இருப்பதை இழுக்க ஒழுக்கமின்மை காரணம் ஆகிறது என்பதால் ஏற்படுகிற தீமையின் தரிசனத்தைத் துல்லியமாகக் காட்டுகிறார்.

ஒழுக்கம் உடலைக் காக்கும். உடலுக்கு அழகு சேர்க்கும். நோய்கள் வராமல் தீர்க்கும். அத்துடன் அனைவரும் விரும்பிப் பார்த்துப் போற்றுகிற வளமான உடல் தோற்றத்தை வழங்கும் என்று கூறுகின்றார்.

135. அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றில்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு

பொருள் விளக்கம்:

அழுக்காறு உடையான் = மனத்து அழுக்காகிய பொறமை உடையவன்; கண் = உடலிலே

ஆக்கம் போன்றில்லை = விருத்தி பெருக்கம் போன்று எழுச்சி எதுவும் ஏற்படுவதில்லை.

ஒழுக்கம் இலான் = ஒழுக்கம் இல்லாதவன்; கண் = உடம்பிலே

உயர்வு = மேன்மை, சிறப்புமில்லை வலிமையுமில்லை,

சொல் விளக்கம்:

அழுக்காறு = மனத்து அழுக்கு, பொறாமை.

கண் = உடம்பு, அறிவு, நோக்கம்; **ஆக்கம்** = விருத்தி, எழுச்சி, பெருக்கம்; **உயர்வு** = மேன்மை, சிறப்பு

முற்கால உரை:

அழுக்காறு உடையான் மாட்டு, ஆக்கம் நிலைபெறாது. அதுபோல. ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் சிறப்பு நிலை பெறாது.

தற்கால உரை:

பொறாமை உள்ளவனிடத்தில் செல்வம் நிலைபெறாது. அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் சிறப்பு நிலைபெறாது.

புதிய உரை:

பொறாமை எனும் மனத்தழுக்கு நிறைந்தவன் உடம்பில் எழுச்சியும் விருத்தியும் ஏற்படாதது போல உடல் ஒழுக்கம் இல்லாதவன் உடம்பில் மேன்மையோ சிறப்போ ஏற்படாது. ஏனெனில் வலிமை குறைந்து போகிறது.

விளக்கம்:

உடம்புக்குள்ளே மூன்று விதத் தீ இருக்கின்றது. உதிரத் தீ. விந்துத் தீ, சினத் தீ. இந்த மூன்று தீயினை மூட்டுகின்ற ஆற்றல் பொறாமைத் தீக்கு உண்டு.

அப்படிப்பட்ட அழுக்குள்ள மனிதனது உடம்பு உருகி, கருகிப் போவதால், இந்த உடலில் விருத்தியும் இல்லை. பெருக்கமும் இல்லை. எழுச்சியும் இல்லை. அதுபோலவே ஒழுக்கம் இல்லாதவன் உடம்பில் வீறு குறைய நோய்கள் பெருக வேதனைகள் நிறைய, வாழ்வே திசை மாறி விசை மாறிப் போவதால், இந்த உடம்பிலும் மேன்மை, சிறப்பு, எதுவுமே எழாது என்கிறார் வள்ளுவர்.

ஒழுக்கமே உடலுக்கு இணக்கமாக இருக்க வேண்டும் என்று உடல் கெடுக்கும் இழுக்கத்திற்கு ஆளாகாதீர் எ ன்று 5 வது குறளில் எச்சரிக்கிறார்.

உயர்வுக்கும் உடல் மன சுகத்திற்கும் ஒழுக்கத்தின் துணை இன்றியமையாதது என்றும் வலியுறுத்துகின்றார்.

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து

பொருள் விளக்கம்:

இழுக்கத்தின் = உடல் காக்கும் சீரிய காரியங்களிலிருந்து தவறி, தவறுதல் செய்கிறபோது

ஏதம் படுபாக்கறிந்து = உண்டாகின்ற மிகுதியான கேடுகளையும் துன்பங்களையும் உணர்ந்து

உரவோர் = உடல் வலிமை உடையவர்கள்

ஒழுக்கத்தின் ஒல்கார் = ஒழுக்கத்திலிருந்து தவறவே மாட்டார்கள்

சொல் விளக்கம்:

இழுக்கம் = தவறுதல், பின்வாங்குதல்; **ஏதம்** = கேடு, துன்பம்
படுபாக்கு = மிகுதியான; **அறிந்து** = உணர்ந்து

முற்கால உரை:

பெரியோர் இழுக்கத்தால் இழிகுலமாதலை அறிந்து ஒழுக்கத்தில் குறையார்.

தற்கால உரை:

ஒழுக்கம் கெட்டால் இழிவு உண்டாகும் என்பதை அறிந்து, அறிவுடையோர் ஒழுக்கம் தவறமாட்டார்கள்.

புதிய உரை:

உடல்நலம் அழிக்கும் தீச்செயல்களால் உண்டாகும் கேட்டினை உணர்ந்து, உடல் வலிமை உடையோர், ஒழுக்கத்தின் செயல்பாட்டிலிருந்து விலகி பின்வாங்கமாட்டார்கள்.

விளக்கம்:

உரவோர் என்பவர் வலியவர், உடல் வலிமை உடையவர். வலிமையான உடலில் தான் வலிமையான மனம் வாழும். உடலுக்கு வலிமை சேர்வது ஒரு நாளில் வராது. தொடர்ந்து ஊக்கத்தோடு, உண்மையோடு உடலைக் காப்பாற்றும் முயற்சியிலும், பயிற்சியிலும்தான் வரும். உடல் வளமாகும்போது, நலமும் சுகமும் நிழலாகத் தொடரும் அந்த நிலையை உணர்ந்திருக்கும் உரவோர், ஒழுக்கத்திற்கு உரவோராகத்தான் இருப்பார். அவருக்கு இழுக்கமானது. நலத்திற்கு வழுக்கலாகும். அந்த வழுக்கல், வாழ்க்கைக்குத் துன்பத்தை மட்டுமல்ல, மிகுதியான கேட்டினையும் அளிக்கும் என்பதைக் குறிக்க படுபாக்கு என்றார். படுபாக்கு என்றால் மிகுதியான விளைச்சல். இங்கே துன்ப விளைச்சல் தட்டுப்பாடான வலிய உடல், கட்டுப்பாடான மனதைக் கொடுக்கும் அந்த சூழ்நிலையில் ஒழுக்க சீலர்கள் ஒல்கார் என்ற உடல் செயல் கட்டுப்பாட்டின் உச்ச நிலையை 6ம் குறளில் தெளிவாக்குகிறார்.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி

பொருள் விளக்கம்:

ஒழுக்கத்தின் = உடலுக்கு நாம் தரும் காரியங்களால் மேன்மை எய்துவர். இளமை என்னும் பயனை அனுபவிப்பார்.

இழுக்கத்தின் = உடல் நலமழிக்கும் காரியங்களைச் செய்பவர்
எய்தா = எதுவுமே நன்றாகி விடாமல்
பழி எய்துவர் = ஒன்றுக்கும் உதவாதவன் என்ற கீழ்மையை அடைவர்

சொல் விளக்கம்:

மேன்மை = ஏற்றம், இளமை; **எய்து** = பயன் அனுபவி
எய்த = நன்றாக ; **பழி** = ஒன்று உதவாதவன், இகழ்ச்சி, நிந்தை

முற்கால உரை:

ஒழுக்கத்தானே எல்லோரும் மேம்பாட்டை எய்துவர். அதனின்றும் இழுக்குதலானே, எய்தற்குரித்தல்லாத பழியை எய்துவர்.

தற்கால உரை:

ஒருவருக்கு நல்லொழுக்கம் என்பது எப்பொழுதும் மேம்பாட்டையே தரும். தீய ஒழுக்கம் எப்பொழுதும் கீழ்மையையே பயக்கும்.

புதிய உரை:

ஒழுக்கமானது உடலுக்கு இளமையைத் தரும். இழுக்கமானது ஒன்றுக்கும் உதவாதவன் என்ற கீழான வாழ்வையே அளித்து விடும்.

விளக்கம்:

உடலைக் காப்பது ஒழுக்கம். ஒழுக்கத்தில் நடப்பது நலச் செயல்கள். உடலை அழிப்பது இழுக்கம். இங்கே இரண்டு குறிப்புக்களை வள்ளுவர் காட்டுகிறார். ஒழுக்கமான செயல்களால் உடலுக்கு வலிமை மட்டுமல்ல, இளமையும் சேர்கிறது. (இள+மெய்) இழுக்கத்தினாலே நோய்களுக்கு ஆளாகி, நொந்து நிந்தை அடைந்து ஒன்றுக்கும் உதவாதவனாகி விடுகிறான். அதனையே பழி என்கிறார். பழிபாவம் செயல்களுக்கே பாவம் என்று பெயர். பாவிகள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் போவதற்கு என்ன காரணம்? உடலால் அழிந்தால் உயிரால் அழிவர். திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார் என்கிறார் திருமூலர்.

நோய்மை வந்தாலே தூய்மை இல்லை.வாய்மை இல்லை. இப்படி இருந்தால் அவன் வாழ்ந்து என்ன பயன்? அதனால் எய்தாப் பழி என்றார். இளமை காக்க ஒழுக்கம் தேவை என்பதை 7 வது குறளில் வள்ளுவர் உள்ளம் களிப்புற வலியிறுத் திருயிருக்கிறார்.

138. நன்றிக்கு வித்ததாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

பொருள் விளக்கம்:

நல்லொழுக்கம் = உடலுக்கு ஆகின்ற ஒழுங்கான காரியங்கள்
நன்றிக்கு வித்தாகும் = நல்வினைக்கும் (மனசமாதானத்திற்கும் விதை போன்றதாகும்)
தீயொழுக்கம் = உடலைப் பாதிக்கும் காரியங்கள் எல்லாம்
இடும்பை = உடலுக்கு நோய், வளமில்லாத வறுமை போன்றவற்றை
என்றும் தரும் = எப்பொழுதும் தந்து கொண்டே இருக்கும்.

சொல் விளக்கம்:

வித்து = அறிவு, விதை
நன்றி = அறம், நன்மை, நல்வினை, சமாதானம்
இடும்பை = அச்சம், ஆபத்து, நோய், வறுமை

முற்கால உரை:

நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும். தீய ஒழுக்கம் துன்பத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்.

தற்கால உரை:

ஒருவருக்கு நல்லொழுக்கம் இன்பத்தையும் தீயொழுக்கம் துன்பத்தையும் தரும்

புதிய உரை:

நல்லொழுக்கமானது மனச் சமாதானத்தை விளைவிக்கும். தீயொழுக்கமோ தினம் தினம் அச்சம் ஆபத்து வறுமை போன்றவற்றைக் கொடுத்து வாழ்வையே அழித்து விடும்.

விளக்கம்:

நல்லொழுக்கம் நல்ல உடலை வளர்த்துக் காப்பதால் உடலில் நலமும் பலமும் வளமும் தினம் சேர, அதனால் மன அமைதியும் சமாதானமும் கிடைக்கிறது. உடலும் மனமும் ஒருசேர பயன் பெறுவதால் வாழ்வே சிறப்பும் பெருமையும் அடைகிறது.

தீய ஒழுக்கமானது உடலைப் பாதிப்பதால் உள்ளுறுப்புக்கள் சேதம் அடைவதால், நலிவும் செயலிழப்பும் அடைய, உடலோ நோய்களைப் பெற, உடலுறுப்புக்களோ துன்பம்பெற, மனமோ அச்சம் கொள்ள, வாழ்க்கையோ வறுமையில் வதங்கி என்றும் ஆபத்து ஏற்படும் என்கிற அச்ச உணர்விலே வாழ நேர்கிறது.

அதனால், என்றும் இடும்பை தரும் என்றார். நல்வினைகள் என்ற விதைகள் நல்வாழ்வு என்கிற விளைச்சலைத் தருவதால்தான், வித்தாகும் என்றார். நன்றியை அறம் நன்மை என்றாலும் அது உடல் மனத்தின் பிரியங்களிலிருந்து காக்கும் உள்ளொளியாம் அமைதியையே தருகிறது என்று 8ம் குறளில் கூறுகிறார்.

139. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்

பொருள் விளக்கம்:

தீயவழுக்கியும் = தீய செயல்களில் தவறுதலாக உட்பட்டாலும்
ஒழுக்கம் உடையவர்க்கு = ஒழுக்கத்தை உயிராகக் காப்பவர்க்கு
வாயாற் சொலல் = (தவறிய) உண்மையை சொல்லுதல்
ஒல்லாவே = உடன்பாடானதாகவே இருக்கும்

சொல் விளக்கம்:

ஒல்லுதல் = இணங்குதல், உடன்படுதல்,
வாய் = உண்மை, வழி; **வழுக்குதல்** = தவறுதல், மறத்தல்

முற்கால உரை:

மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லும் தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு முடியா.

தற்கால உரை:

நல்லொழுக்கம் உடையவர்கள் ஒருநாளும் மறந்தும் தீயவற்றைப் பேசமாட்டார்கள்.

புதிய உரை:

ஒழுக்கம் உடையவர்கள் தவறிப் போய்த் தீயசெயல் புரிய நேரிட்டாலும் ஒத்துக் கொள்வாரேயன்றி உண்மை சொல்வதில் இருந்தும் விலகிட மாட்டார்கள்.

விளக்கம்:

ஒழுக்கம் உடையவர்களும் மனிதர்கள் தாமே. மனிதன் என்றாலே தவறுகள் செய்வது இயல்புதான். (Man is err) என்று கூறுவது போல ஒழுக்கசாலிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தவறிழைக்கக் கூடும். தவறுகளைப் பிறர்க்குத் தெரியாமல் மறைப்பதே குற்றம் என்பதால், தான் செய்த தவற்றை பிறரறிய உண்மையைச் சொல்வதற்கு அவர்கள் அச்சப்பட மாட்டார்கள் வெட்கப்பட மாட்டார்கள். செய்த தவறைத் திருத்திக்

கொண்பவன்தான் மனிதரில் மேலான புனிதன் என்பதால், அந்த உண்மை கூறும் நெஞ்சுரம் கொண்டவரே உரவோர் என்று 6 வது குறளில் பாடியதை இந்தக் குறளிலும் வற்புறுத்திக் கூறுகின்றார். பொய் சொல்லாதது பேராண்மை, செய்த தவறைத் திருத்திக் கொள்வது சீராண்மை, உண்மையை ஒத்துக் கொள்வதுதான் உலகிலேயே நேராண்மை என்ற குறிப்பை இந்தக் குறளில் கூறுகிறார்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்

பொருள் விளக்கம்:

உலகத்தோடு = ஆகாயம், பூமி, காற்று, நீர், வெப்பம் ஆகிய இயற்கைத் தன்மையோடு

ஒட்ட ஒழுகல் = மனதாலும் உடலாலும் சேர்ந்து வாழ்வதே ஒழுக்கமாகும்

அறிவிலாதார் = அப்படி வாழத் தெரியாதவர் எல்லாம் மூடராவார்

பலகற்றும் = மேலும் பல படிப்பறிவு பட்டறிவு பெற்றிருந்தாலும்

கல்லார் = இயற்கையோடு வாழத் தெரியாதவர்.

சொல் விளக்கம்:

கல்லார் = கீழ்மக்கள், மூலர், கற்றலைச் செய்யாதார்,

அறிவிலார் = மூடர்; **உலகம்** = பூலோகம், ஆகாயம், இயற்கை

முற்கால உரை:

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் பல நூல்களையும் கற்றாராயினும் அறிவில்லாதார்.

தற்கால உரை:

கூடிவாழும் மக்களுக்கேற்ப நடந்து கொள்ளத் தெரியாதவர்கள், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் உலக நடைமுறையைக் கல்லாதவரே ஆவார்கள்.

புதிய உரை:

இயற்கையுடன் ஒருங்கிணைந்து ஒன்றி வாழத் தெரியாதவர்கள் எவ்வளவு கற்றிருந்தாலும் அவர்கள் அறிவில்லாத கீழ் மக்களே ஆவார்கள்.

விளக்கம்:

ஒன்றை மனத்தால் ஏற்றுக் கொள்வது ஒத்துப் போவதாகும். ஒன்றுடன் உடலால் ஒத்துப் போவது ஒட்டிப் போவதாகும்.

மனத்தாலும் உடலாலும் ஒத்தும், ஒட்டியும் போவது ஒன்றிப் போவதாகும்.

ஒன்பது பாடல்களிலும் இயற்கையோடு உலக மக்களோடு ஒத்துப் போவதைக் கூறி வந்த வள்ளுவர், பத்தாவது பாடலில் உடலாலும் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால், ஒழுக்கமுடன் வாழ முடியும் என்கிறார்.

மற்ற மக்கள் வாழ்க்கை முறைகள் ஒன்றுக்கொன்று சேராது முரண்படுவதால் தான் உலகுடன் என்று சொல்லாமல் உலகத்துடன் அதாவது இயற்கையுடன் வாழ்ந்து ஒழுகச் சொல்கிறார்.

காற்று தீ, நீர், பூமி, ஆகாயம், இவற்றை ஒட்டி பயன் படுத்தி வாழ்பவர்கள் மேன்மக்கள், வாழத் தெரியாதவர்கள் மூடர்கள், அறிவிலிகள்.

கீழ்மக்கள் என்று இயற்கை ஒழுக்கம் பார்த்து மனிதரின் செயல் ஒழுக்கம் இருக்க வேண்டும் என்பதை வெள்ளிடை மலையாகக் காட்டுகிறார்.

15. பிறனில் விழையாமை

பிறனில் + விழையா + மெய் என்று இந்த அதிகாரத்திற்குரிய தலைப்பைப் பிரித்திருக்கிறோம்.

அடுத்தவர் வீட்டைப் பற்றிய, வீட்டிற்குரிய எதையும் விரும்பாத திண்மை என்று இதற்குப் பொருள்.

பிறனில் என்றால் பிறர் மனைவி என்றே அனைவரும் ஆணித்தரமாகப் பொருள் கொண்டு, அழுத்தந்திருத்தமாக விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

இல் என்றால் **குடி** என்றும், **மனைவி** என்றும், **வீடு** என்றும், **இல்லறம்** என்றும் பொருள். **வீடு** என்றால் **விடுதல், முடிவு,** என்று அர்த்தம்.

விழையா என்றால் ஆசைப்படாத, மெய் என்றால் திண்மை என்றும் ஒரு பொருள் உண்டு.

ஒரு வீடு என்றால், ஒருவனின் மனைவி மட்டும்தான் இருப்பாளா? அந்த வீட்டின் மனை, உள்ளே இருக்கும் பொருள்கள், பொன், வெள்ளி நகைகள், பணம் எல்லாமே இருக்குமே! அதையெல்லாம் பெண்ணுக்குப் பிறகு கூறவே ஒதுக்கி விட்டார்கள் போலும்.

13 ம் அதிகாரத்தில் மனத்தின் அடக்கம் பற்றியும். 14 ம் அதிகாரத்தில் உடலின் ஒழுக்கம் பற்றியும் பேசிய வள்ளுவர் 15ம் அதிகாரத்தில் மனமும் உடலும் ஆசையால்தான் கெடுகின்றன. ஆசை என்பது அடுத்தவர்க்குரிய உடைமைகளில்தான் பாய்ந்து செல்கிறது; ஆக அடுத்தவர்க்குரிய எந்தப் பொருளிலும் உடமையிலும் ஆசைப்படாத திண்மை வேண்டும்.

அந்தத் திண்மை எங்கிருந்து எப்படி கிடைக்கும்? திண்மையான உடலில், திண்மையான மனம். ஆசையை அழித்துப்போடும் திண்மை, அதனால்தான் அறன் என்பவன் பிறன் கொண்டிருக்கும் பொருட்களில் பேதமையுடன் விரும்பக் கூடாது என்று இந்த அதிகாரத்தைப் பிறனில் விழையாமை என்று உள்ளர்த்தத்துடன் வைத்துளார்.

141. பிறர்பொருளான் பெட்டொழுகும் பேதமை ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண் இல்

பொருள் விளக்கம்:

பிறன் பொருளான் = பிறர் உடைமைகளை அபகரித்து ஆண்டு கொள்ள

பெட்டு ஒழுகும் = பொய் பேசி நடந்து கொள்ளுகிற

பேதமை = அறிவில்லாத்தனமானது,

அறம் பொருள் = ஒழுக்கமும், நல்உடம்பும்

கண்டார்கண் இல் = உள்ளவர்களிடத்தில் இருக்காது

சொல் விளக்கம்:

பெட்டு = பொய்; **அறம்** = ஒழுக்கம்,

பொருள் = உடம்பு; **பேதமை** = அறிவின்மை

முற்கால உரை:

பிறனுக்குப் பொருளாந் தன்மையை உடையாளைக் காதலித்து ஒழுகுகின்ற அறியாமை, ஞாலத்தின்கண் அற நூலையும் பொருள் நூலையும் அறிந்தார் மாட்டில்லை.

தற்கால உரை:

பிறன் மனையாளைக் காதலித்தல் களவும் பாவமுமாம்.

புதிய உரை:

பிறரது உடைமைகளைப் பறிப்பதற்காக, பொய் பேசி ஒழுகும் தன்மை, நல்லுடலும் நல்லொழுக்கமும் கொண்டவர் களிடத்தில் இருக்காது.

விளக்கம்:

பிறர் பொருளுக்குப் பேயாய் அலைபவர்கள் பலர். நெஞ்சில் வஞ்சகம், நேர்மையின்மை, பொய், புனைசுருட்டு, இப்படி, அவரது மனம் கீழ்மையடையக் காரணம் ஒழுக்கமின்மை. அந்த ஒழுக்கம் கெட்டதால் உடல் கெட்டு, நலம் கெட்டு, அதன் காரணமாகவே நினைவும் மனமும் கெட்டு குறுக்கு வழியில் நடக்க முயல்கிறது.

நல்ல ஒழுக்கமும் நல்ல உடலும் இருக்கும்பொழுது, உழைத்து வாழவேண்டும் என்ற வேட்கையே எழும் என்பதைக் குறிக்கவே, பிறர் பொருளை நினைப்பதே பேதமை என்று முதல் குறளில் சுட்டிக்காட்டுகிறார்.

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரில் பேதையார் இல்

பொருள் விளக்கம்:

அறன்கடை = மனம் மற்றும் உடல் ஒழுக்கத்தில்
கடைநின்றார் = தாழ்ந்த அற்பமானவர்கள்
உள்எல்லாம் = நினைவு எல்லாம்
பிறன் கடை நின்றார் இல் = மனம் வேறுபட்டவன் மனம்போன போக்கில் போய்
பேதையாரில் = அறிவற்றவர்களாகவே ஆகிவிடுகிறார்கள்.

சொல் விளக்கம்:

அறன் = ஒழுக்கமானவன்; **கடை** = தாழ்ந்த, அற்பமான
உள் = நினைவு; **பிறன்** = மனம் வேறுபட்டவன்; **இல்** = இடம்.

முற்கால உரை:

காமம் காரணமாக, பாவத்தின்கண் நின்றார் எல்லாருள்ளும், பிறனில்லாளைக் காதலித்து, அவன் வாயிற்கண் சென்று நின்றார் போல பேதையாரில்லை.

தற்கால உரை:

பிறன் மனையாளைக் காதலிப்பவர். மற்றைய பாவங்களைச் செய்பவரினும் பெருமடையர்.

புதிய உரை:

ஒழுக்கத்திலே தாழ்ந்து போனவர் எல்லாம், மனம் மாறிய பகைவன் வீட்டில் போய் நிற்கிற அறிவில்லாத அற்ப மனிதர்களாக ஆகிவிடுகின்றார்கள்.

விளக்கம்:

ஒழுக்கத்திலே தாழ்ந்து போகிற ஒருவன், வேறு எங்கு போக முடியும்? பகைவனாக இருந்தாலும், மனம் வேறுபட்டவனாக இருந்தாலும், அவனிடம் போய்ச் சேருகிற, அறிவில்லாத வனாகத்தானே இருக்கமுடியும்!

காக்கை உகக்கும் வேப்பம் பழம் என்பதுபோல; கழுவிளை நயக்கும் கழுகினைப்போல, ஒழுக்கமில்லாதவராகிய பகைவரிடத்துத் தானே போகச் செய்யும் நல்லோரிடம் செல்லும் வாய்ப்பையே தாழ்ந்த மனம் தராது என்பதால், ஒழுக்கத்தில் தாழ்ந்தவர் நினைவுகள், தன் வீட்டு மேன்மையை நினைக்காது, பிறர் வீட்டை நாடுகிற பேதமையைத் தான் தரும். அறனல்லாத பிறன் வாழ்வின் மேன்மையை எட்ட முடியாது என்று இரண்டாவது குறளில் கோடிட்டுக் காட்டுகிறார்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில் தீமை புரிந்துஒழுகு வார்

பொருள் விளக்கம்:

மன்ற = தோற்றத்தில்,
தெளிந்தார் = மெய்யுணர்ந்தவராக இருந்தும்
இல் தீமை புரிந்தவர் = மற்றவர் இடத்திலே தீமை செய்து
ஒழுகுவார் = நடந்து கொள்கிறபோது
வேறல்லர் = அவர் வெற்றி கொள்கிறவராக அவர் இல்லை
(ஏனென்றால்)
விளிந்தார் = அவர் செத்தவர்க்குச் சமமேயாவார்

சொல் விளக்கம்:

விளிந்தார் = இறந்தவர்; **வேறல்** = வெற்றி; **தீமை** = கெடு
மன்ற = தோற்றம் (காட்சி); **தெளிந்தார்** = மெய்யுணர்ந்தார்

முற்கால உரை:

தம்மை ஐயுறாதார் இல்லாள் கண்ணே பாவம் செய்தலை விரும்பி ஒழுகுவார். உயிருடையரேனும், அவர் இறத்தாரே ஆவார்.

தற்கால உரை:

தெளிந்தாருடைய இல்லானிடத்துத் தீமை புரிபவர், செத்தாராவார்.

புதிய உரை:

தோற்றத்திலும் காட்சியிலும் மெய் உணர்ந்தார் போல இருப்பினும், நம்பியவர்க்குக் கேடு செய்பவர் வெற்றி பெற்றவர்கள் இல்லை. அவர்கள் செத்தாருக்குச் சமமானவர்கள் ஆவார்கள்.

விளக்கம்:

நம்பினார்க்குத் துரோகம் செய்வது பெரும் பாவமாகும். தாம் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும், தோற்றத்தில் கம்பீரமும், காட்சியில் கவர்ச்சியும், உள்ளவர்களாக இருந்தாலும், தம்மை நம்பியவர்களுக்குத் தீமை செய்யும் விழைவு இருக்கிறதே, அது ஒருவரது உள்ளுணர்வைக் கொன்று விட்டுத்தான் வெளியாகிறது. ஆகவே, மனச்சான்றைக் கொன்றவர் மனிதரில்லை, அவர் நடமாடும் சவம் செத்தார்க்குச் சமம் என்று பண்பில்லாமல், நம்பியவர்க்கு மோசம் செய்யும் மனிதர்களை (பீடைகளை) குத்திக் காட்டுகிறார் வள்ளுவர், தீமை என்றது இங்கு விழைவு மட்டுமல்ல, களவும், இழவும் தான்.

144. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்

பொருள் விளக்கம்:

எனைத்துணையும் = எவ்வளவு நட்பினனாக
ஆயினும் = இருந்தாலும்
என் ஆம் = என்னவாகும்?
தினைத்துணையும் = மிகச் சிறுமை மனம் கொண்டு
தேரான் = கீழ்மகன் போல
பிறனில் = பிறன் வீட்டிற்குள்ளே
புகல் = தானியக் குதிர் கவரச் செல்லுதல்

சொல் விளக்கம்:

துணை = நட்பினன்; **தினை** = சிறுமை,
தேரான் = கல்லாதான், கீழ்மகன்; **புகல்** = தானியக்குதிர், உடம்பு

முற்கால உரை:

எத்துணைப் பெருமையுடையாராயினும், காமமயக்கத்தால் தினையளவும் தம்பிழையை ஓராது, பிறனுடைய இல்லின் கட்புகுதல், அவரது சிறப்பை அழிக்கும்.

தற்கால உரை:

பிறன் மனையாள்பாற் செல்பவன், தனது பெருமையை எல்லாம் இழப்பான்.

புதிய உரை:

பிறன் இல்லத்தில் புகுந்து தானியம் திருட முயற்சிப்பவன், எத்துணை அளவு நட்பினனாக இருந்தாலும் அவன் கல்லாத கீழ்மகனாகவே இழிந்துரைக்கப்படுவான்.

விளக்கம்:

பிறர் இல்லம் என்றதும் பெண்ணை நாடித்தான் போவார்கள் என்பது பொதுவானதுதான். அதற்கும் மேலே உயிர் வாழ உண்டி வேண்டுமல்லவா? பண்டம் மாற்றுக் காலத்தில் எழுதப்பட்ட குறள். அந்நாளைய பழக்க வழக்கத்தையே சுட்டுவதாக அமைந்திருக்கிறது. தானியம் வைத்திருக்கும் குதிர் என்பதற்கு புகல் என்றொரு சொல் உண்டு. புகுதல், தானியக் குதிர் என்ற இரு பொருளில் வள்ளுவர் கூறுகிறார். நட்புக்குரியவன் வீட்டில் தானியம் திருடுவதற்காக நுழைவது கீழ்மகன் செயல் என்று

'தேரான்' என்று சொல்கிறார். பிறனில் புகல் என்பதும் பொருள் திருடப்போவது என்பதாலே உயிர் வாழ உணவு தானியங்களை விழைவது, மிகச் சிறுமை என்கிறார். நான்காம் குறளில் பிறனில் விழையும் பொருட்களில் முதலாவதாக உணவுப் பொருளையே குறிக்கிறார்.

145. எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி

பொருள் விளக்கம்:

எளியது என = மிகவும் சுலபம் என்று
இல் இறப்பு = வீட்டில் உள்ள உயர்ந்த பொருளை
ஆன் எய்தும் = அவ்விடம் அடைந்து விடுதல்
எஞ்ஞான்றும் = எந்தக் (வாழ்கின்ற) காலத்திலும்
விளியாது = மறைந்து அழியாது
நிற்கும்பழி = அந்த அவதூறு நின்று தொடரும்
இறப்பு = உயர்ந்த பொருள், மிகுதி, சாவு

சொல் விளக்கம்:

ஆன் = அவ்விடம்; **பழி** = அவதூறு, நிந்தை, இகழ்ச்சி
விளியாது = மறையாது.

முற்கால உரை:

எய்துதல் எனது என்று பிறனில்லின்கண் இறப்பான் மாய்தலின்றி, எஞ்ஞான்றும் நிலை நிற்கும் குடிப்பழியினை எய்தும்.

தற்கால உரை:

பிறன் மனையாள்பாற் செல்பவன் அழியாத பழியை அடைவான்.

புதிய உரை:

பிறனில்லில் உள்ள உயர்ந்த பொருளை கவர்வது எளிது என்று, செய்யும் களவானது அவன் வாழ்நாள் முழுவதும் பழியாகித் தொடரும். பரம்பரைக்கும் அவதூறை உண்டாக்கும்.

விளக்கம்:

பிறன்வீட்டில், தானியம் மட்டுமல்ல, பெண்டிர் மட்டுமல்ல, அவர்கள் விரும்பிப் போற்றிக் காக்கிற உயர்ந்த பொருள்களும்

உண்டு. அதை அடைய ஆசைப்படுகிறவன், பொருளைக் கவர விரும்பியவன் இறப்பான் என்கிறார். பொருளை வவ்வ விரும்பும்பொழுதே அவன் மனதாலும், உடலாலும் மேற்கொள்கிற ஒழுக்கத்தில் இறந்து போகிறான்.

இறப்பான் = இறப்பவன். இறப்பு என்றால் உயர்ந்த பொருள், மிகுதியானது என்பதால் இவனை இறப்பான் என்கிறார்.

முன்னர் தவறு செய்தபோது செத்தாருக்குச் சமமானவன் என்றார். இங்கே பொருளைக் களவாடுதல் எளிது என்று எய்துகிறபோதே, இறந்தவனாகிறான்.

அந்தப்பழி, பரம்பரைப் பழியாகிறது. அழியாது நிற்கும். சுட்டெரிக்கும் என்று 5வது குறளில் அருமையாக விளக்குகிறார்.

146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்

பொருள் விளக்கம்:

இல்லிறப்பான் = பிறர் பொருளை அபகரிப்பவன்
கண் = அகத்திலும் புறத்திலும்
பகை = உட்பகையும், வெளிப்பகையும்
பாவம் = தீச்செயலும்
அச்சம் = கலக்கமும் கவலைகளும் (ஆகிய)
பழிநான்கும் = அவதூறுகளாகிய நான்கும்
இகவாவாம் = எல்லையில்லாது பெருகிக் கொண்டே போகும்.

சொல் விளக்கம்:

கண் = அகக்கண், புறக்கண்; **இக** = எல்லை கடந்த

முற்கால உரை:

பிறனில்லான்கண் நெறி கடந்து செல்வானிடத்து, பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் ஆகிய இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

தற்கால உரை:

பிறன் மனைவியின் பாற் செல்பவனை விட்டு, பகை, பாவம், அச்சம், பழி எனும் நான்கும் நீங்கா.

புதிய உரை:

பிறர் வீட்டுப் பொருளை இச்சித்துக் கவர முயல்பவன் மனத்திலும் உடலிலும், எல்லாத் தீச் செயலும் வளர்ந்து அதனால் பெறுகிற கலக்கங்களும் கவலைகளும் அளவின்றிப் பெருகி நிங்காமல் நிலைத்து விடும்.

விளக்கம்:

மனிதனை விட்டு என்றும் பிரியாத பகை உட்பகையும், புறப்பகையும். உட்பகை என்பது மனதில் வருவது. அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம். உடலில் உள்ள பகை பேறு, இழவு, நரை, திரை, மூப்பு, சாக்காடு. பிறர்பொருளைப் பெறுகிற பேராசை பிறந்தவுடனே, உட்பகை உக்கிரமமாக எரிய, வெளிப்பகையும் வேகம் கொள்ள, அந்த ஆசைப்பட்டவன் வாழ்வில் எல்லாப் பகையும் பொல்லா தீச் செயல்களும் அவற்றால் பிறக்கும் பயங்களும், பழிகளும் பெருகிக் கொண்டே வந்து, அவன் அழியும் வரை நீங்காமல் நின்று விடுகின்றன என்கிறார். பிறர் பொருளுக்கு இறப்பான், அவன் அன்றாடம் இறப்பான் என்று பிறனில் விழையும் தவறுக்குக் கிடைக்காத தண்டனைகளையெல்லாம் வள்ளுவர் வகுத்துக் காட்டியிருக்கிறார்.

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலான் பெண்மை நயவா தவன்.

பொருள் விளக்கம்:

பிறனியலான் = அயலான் ஒழுக்கத்திற்குத் துணையிருக்கும்
பெண்மை = பெண்ணின் தன்மையை; நயவா = இச்சிக்காத
தவன் = தவத்தன்மையுடைய ஆண்மகனே
அறன் இயலான் = ஒழுக்கம் காக்கும் அறனாக விளங்கி
இல்வாழ்வான் என்பான் = இல்லறம் காக்கும் பெருமைக்குரியவன்
என்று புகழப்படுகிறான்.

சொல் விளக்கம்:

நயவா = விரும்பாத; **தவன்** = தவத்தன்மை உடையவன், நாயகன்
இயலான் = ஒழுக்கம் உள்ளவன்; **அறன்** = இல்லறவான்

முற்கால உரை:

அறனாகிய இயல்போடு கூடி இல்வாழ்வான் என்பவன் பிறர்க்குரிய உடமை பூண்ட பெண் தன்மையை விரும்பாதவன்.

தற்கால உரை:

பிறன் மனையாளைக் காதலியாதவன், அறநெறியில் இல்வாழ்க்கையை நடாத்துபவன்.

புதிய உரை:

அயலான் ஒழுக்க நெறிக்குத் துணை நிற்கும் பெண்மையை விரும்பாத தவத்தன்மையன் தான், இல்லற நெறி காக்கும் அறன் என்று பெருமைப்படுத்தப்படுகிறான்.

விளக்கம்:

ஆளும் தன்மையை ஆண்மை என்றனர். பேணிக்காக்கும் தன்மையைப் பெண்மை என்றனர். இயல்பான ஒழுக்கம் காக்கிற அயலானவன் துணையானவளை, இச்சிக்கின்ற எண்ணமே இல்லாதவன் தான் உயர்ந்த நாயகன். அவனே தவ வலிமை கொண்ட கற்பு நாயகன். அவனே தவன் ஆகிறான். அவனே இல்லற நெறி காக்கும் ஒழுக்க சீலன். அவனே வீட்டு நெறி வளர்க்கும் வேதத் தன்மை மிக்கவன். அதனால்தான் இல்வாழ்வான் என்பான் என்றார் வள்ளுவர். பிறன் பெண்மை நயப்பது பெருந் தீங்கு. நயவாதிருப்பது நற்பண்பு. அதுவே உலகம் காக்கும் உயர் பண்பு என்று 7 வது குறளில் பிறனில் விழையாமையின் பெருமையை விளக்குகிறார்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன்அன்றோ ஆன்ற ஒழுக்கு

பொருள் விளக்கம்:

சான்றோர்க்கு = அறிவு ஒழுக்கங்களால் சிறந்தவர்க்கு
பிறன்மனை = மற்றவரது வீட்டைப் பற்றிய
நோக்காத = மனம் செலுத்தாமல் வாழ்கிற
பேராண்மை = அரிய செயலார்ந்த வீரமானதும்
ஆன்ற ஒழுக்கு = மாட்சிமை மிக்கபடி ஒழுகுதலும்
அறனன்றோ = அறம் காக்கும் பெரியவனாக ஆக்குகிறது.

சொல் விளக்கம்:

நோக்காது = மனம் செலுத்தாத; **பேராண்மை** = அரிய சொல்
ஆன்ற = மாட்சிமைமிக்க; **ஒழுக்கு** = நன்னடை

முற்கால உரை:

பிறன் மனைவியை இச்சியாமை பெரியோருக்குத் தருமம் ஆகும்.

தற்கால உரை:

பிறன் மனையாளைக் காதலியாமை, அறமும் ஒழுக்கமும் ஆகும்.

புதிய உரை:

பிறரது இல்லம் பற்றிய உள்ளத்தில் சிந்தனையேயில்லாது வாழ்வது, அறிவொழுக்கங்களில் சிறந்தவருக்கு மேலும் மாட்சிமையை அளித்து அறனாக வாழ வைக்கிறது.

விளக்கம்:

பிறர் மனையைக் கண்ணால் கண்டால் மனம் மாறுவது, அதை மாற்ற முயல்வது, தடுப்பது என்பது இயல்பான செயல்பாடுகளாகும். மற்றவர் மனை பற்றி, மனத்தாலும் எண்ணாமல், அதில் அக்கறை செலுத்தாமல் வாழ்வது யாராலும் முடியாது என்பதால்தான், இவ்வரிய செயலைப் பேராண்மை என்றார். இத்தகைய பேராண்மையே அறிவொழுக்கம் உள்ளவர்க்கு மேலும் மதிப்பையும் மகிமையையும் அளித்து பெருமையை வழங்குகின்றது. அதனால் அறம் காக்கும் இல்லறத்தான் அறனாகிறான். அதாவது தருமம், நீதி காக்கும் தவத்தன் ஆகிறான். ஆகவே, பிறர் வீட்டுப் பெண்ணை மட்டுமல்ல. பொருள் மற்றும் உயர்ந்தவைகள் எல்லாவற்றையுமே மறந்தும் நினையாது அறம் காக்கிற பேராண்மை ஒருவரை உயர்த்திக் காக்கிறது என்று 8 ஆம் குறளில் கூறுகிறார்.

149. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற் பிறர்க்குரியாள் தோள்தோயா தார்

பொருள் விளக்கம்:

நலக்குரியார் யாரெனின் = மன அழகும் குண அழகும் உடலழகும் படைத்தவர் யாரென்றால்

நாமநீர் வைப்பில் = கடல் சூழ்ந்த இந்தப் பூவுலகில்

பிறர்க்குரியாள் = பிறருக்கு உடமையும் உரிமையுமானமாது.

தோள் தோயாதார் = தோள்களைத் தழுவாதவரேயாவார்.

சொல் விளக்கம்:

நலக்குரியார் = மன அழகு, குண அழகு, உடல் அழகு

பிறர்குரியார் = பிறருடைய உடமையும், உரிமையும்.

முற்கால உரை:

பிறன் மனையாளைச் சேராதவர்களே நன்மைக்கு உரியவர்களாவார்.

தற்கால உரை:

பிறன் மனையாளைக் காதலியாதவர் எல்லா நன்மைகளையும் பெறுதற்கு உரியர்.

புதிய உரை:

பிறருக்குரிய பெண்ணைக் கலந்திட முயலாதவர், எல்லாவிதமான உயர்நல அழகுகளை எல்லாம் சிறப்புறப் பெற்று இன்பங்களுடன் வாழ்வர்.

விளக்கம்:

பெண்களால் மனநலம் மட்டுமல்ல, உடல் நலமும் கெடும். பெண்ணை நாடுதல் என்பது பெரும் பழிக்கு மட்டுமன்று, பேரச்சத்திற்கும், பெரும் துன்பத்திற்கும் இட்டுச் செல்லும் புதைகுழி வழியாகும். அதுவும் பிறரது உரிமைப் பெண்களை எண்ணி விட்டாலோ எண்ணும் போது பயம், இணையும்போது பயம், இணைந்த பின் பயம் என்று எல்லாப் பயங்களுக்கும் வயப்பட்டு, மனம் புண்பட்டு, உடல் புண்பட்டு வாழ்க்கையும் மண்பட்டுப் போகிறது. அதனால்தான் பிற பெண்ணை நயக்கும்போதே, அக அழகு, முக அழகு, நினைவழகு, செயல் அழகு, புகழ் அழகு எல்லாமே பாழாகிப் போகிறது என்பதைக் குறிக்கவே நலக்குரியார் என்றார்.

உட்பகையிலே முதல் பகை தான் காமம். காமத்தின் வழிதான் குரோதம், மோகம், மதம், மாச்சரியமம் வருகிறது என்பதால், முதல் பகையை அழித்தாலே முற்றிலும் அழகு பெற்று வாழ முடியும் என்பதை 9 வது குறளில் கூறுகிறார்.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று

பொருள் விளக்கம்:

அறன் வரையான் = ஒழுக்கத்தைக் காக்காதவன்
அல்ல செயினும் = பிற தீவினைகளைச் செய்தாலும்
பிறன் வரையான் = பிறரது மனையாளின்
பெண்மை நயவாமை = புணர்வை விரும்பாது இருப்பது
நன்று = அதுவே அவர்க்கு நன்மை தருவதாகும்.

சொல் விளக்கம்:

வரை = மலை, விவாகம்

முற்கால உரை:

ஒருவன் அறம் செய்யாது பாவமே செய்யினும், பிறன் மனைவியை விரும்பாமையே நன்மை என்பதாகும்.

தற்கால உரை:

ஒருவன் அறத்தைச் செய்யாது மறத்தையே செய்யினும் பிறன் மனையாளைக் காதலியாதிருத்தல் நன்மை.

புதிய உரை:

ஒழுக்கத்தைக் காக்காதவன் பல தீவினைகளைச் செய்தாலும் தகும். ஆனால் பிறன் மனைவியை நயந்து செய்யும் செயலானது நன்மை தராது. நாசத்தையே நல்கும்.

விளக்கம்:

பகையை வளர்க்கும் பாவத்தை வளர்க்கும் பயத்தை வளர்க்கும் பழியையும் வளர்க்கும் கொடிய காரியம் பெண்களை விரும்புவது. அதிலும் பிறர்க்குரிய மணமான பெண்ணை விரும்புவது. இது ஆரம்பத்தில் ஆனந்தம் அளிப்பதைப் போல் இருந்தாலும் அந்த நினைவு எழுந்த நேரந் தொட்டே துன்பங்களே தொடரும், இடரும், படரும். ஆகவேதான் எல்லாப் பாவங்களுக்கும் சிகரமாக இருப்பது பெண் பாவம். அதனால்தான் பெண்ணைச் சேர்வது மலையளவு பாவம் என்பதைக் குறிக்க வள்ளுவர் இங்கு அறன் வரையான் பிறன் வரையான் என்ற இடங்களில் வரை வரை என்று சொற்களைப் பெய்திருக்கிறார். மலையளவு பாவம், மலையளவு மாட்சிமை மிக்க பெண்மை, மலையளவு அமைதி, மலையளவு நன்மை என்று கூறிய வள்ளுவர் மன அமைதியும், வாழ்வில் மிகுதியும் பெற பிறனுக்குரிய உடமைகளை நினைக்காதீர் என்று அழகுபட ஆணித்தரமாகக் கூறுகிறார்.

16. பொறையுடைமை

பொறை + உடை + மெய் என்று பிரித்துப் பார்க்கிறேன். பொறை என்றால் பொறுமை. பொறுமை என்றால் சகிப்புத் தன்மை. பொறுதி என்றும் கூறுவார்கள். பொறுதிக்கு, தணிவு, மன்னிப்பு என்றும் பொருள் உண்டு.

அவாவுதல் என்பது மனதுக்குப் பிடித்தது. அதை தூண்டி விடுவதற்கும் சீண்டி விடுவதற்கும் ஐம்பொறிகளுக்குப் பெரும் ஆசை உண்டு. ஆக, தன்னிடம் இருப்பதை மறந்து விட்டு, இகழ்ந்து விட்டு, பிறர் வைத்திருக்கும் பொருளுக்கும் பிறவுக்கும் பேயாய்ப் பறப்பதுதான் மனித மனத்தின் மாயம்.

இந்தப் பேராசையால் பெருக்கெடுத்து ஓடுகின்ற துன்பங்கள், துயரங்கள், சங்கடங்கள் சமர்புரியும் சந்தர்ப்பங்கள், பகைகள், பாய்ச்சல்கள், பரிதாப விளைவுகள் எல்லாம் ஏராளம்; ஏராளம்.

மனமோ எல்லாவற்றிற்காவும் ஏங்கிக் கொள்ளும். எதுவாக இருந்தாலும் வாங்கிக் கொள்ளும். ஏற்றபடி நிகழாவிட்டால் (பின்) வாங்கிக் கொல்லும். தூங்கியும் கொல்லும்.

உடலோ அப்படியில்லை. எதையும் தாங்கிக் கொள்ளும். இறுதிவரை விரும்பாத முயற்சியில் ஓங்கி நிற்கும்.

இப்படித் தாங்குகின்ற பொறையை, சகிப்புத் தன்மையை, தணிந்து போகும் மகிமையை, மன்னித்து ஒதுங்கும் பாங்கை மெய் உடையாக அணிந்திருப்பதால், இதைப் **பொறை உடை மெய்** என்று வள்ளுவர் போற்றினார் போலும்.

பிறரது இல்லத்தைப் பற்றியும் உள்ளத்தைப் பற்றியும், செல்வம் பொருள் பற்றியும் துடிக்கும் தன்மையைத் தணிக்கவே பிறனில் விழையாமை என்று விளக்கிய பிறகு அதற்குரிய உடல் பக்குவத்தையும் மனப்பக்குவத்தையும் வளர்ப்பது அவசியம் என்பதற்காகவே பொறை உடைமை அதிகாரத்தை அதற்கு அடுத்ததாக வள்ளுவர் வைத்திருக்கிறார்.

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பொருள் விளக்கம்:

அகழ்வாரை = தொடர்ந்து தன்னைத் தோண்டிக் கொண்டிருப்பவரை
தாங்கும் = விழுந்து விடாமல் ஆதாரமாக விளங்கும்
நிலம்போல = பூமியைப் போல
இகழ்வார் = தொடர்ந்து தம்மை விடாமல் இகழ்கின்ற பகைவரையும்.
பொறுத்தல் = நோன்மை தவம்போல பொறுத்து மன்னிக்கிறவர்
தலை = சிறந்தவராக, உயர்ந்தோராக ஆகிறார்.

சொல் விளக்கம்:

தாங்கு = ஆதாரம், சகித்தல், ஆதரித்தல், விளங்கும்
நிலம் = பூமி; **இகழ்** = நிந்தி; **இகழுநர்** = பகைவரை
பொறுத்தல் = நோன்மை, தவம், மன்னித்தல்
தலை = உயர்ந்தோன், சிறந்து; **வார்தல்** = ஒழுகுதல், நீளுதல்

முற்கால உரை:

தன்னை அகழ்வாரை விழாமற் தாங்கும் நிலம் போலத் தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம்.

தற்கால உரை:

சுமையாகித் தோண்டுவாரையும் தாங்கும் நிலம்போல, இகழ்வாரையும் பொறுத்துக் காத்தல் சிறப்பு.

புதிய உரை:

தொடர்ந்து தன்னைத் தோண்டித் தொலைப்பவர்க்கும் ஆதாரமாக இருந்து, ஆதரிக்கும் பூமியைப் போல, தன்னைத் தொடர்ந்து இகழ்கிற பகைவரையும் மன்னிப்பதை தவமாகச் செய்பவர், உயர்ந்தோர் ஆகிறார்.

விளக்கம்:

ஒருமுறை தோண்டுவது, சிறிதளவு தோண்டுவது. இதற்கெல்லாம் ஏற்றல் பொறுத்தல்தான். அது பொறை உடைமை ஆகாது. பொறு + ஐ = பொறுமை. பொறுத்தலில் உயர்நிலை பொறை. பொறுத்தலில் முதல் நிலை பொறுமை.

தொடர்ந்து தோண்டி பள்ளமாகவும் படுகுழியாகவும் ஆக்கியவரை அதில் விழாமல், சகித்துக் கொண்டு, ஆதாரமாக இருந்து ஆதரித்து, கௌரவிப்பது நிலத்தின் பொறை. தொடர்ந்து தன்னைத் தாக்கியபடி, அவமானப்படுத்தி, இழிவு செய்கிற பகை மனத்தவரையும், நோன்பு நோற்பதுபோல தவம் காத்தல்போல, அவரை மன்னிக்கிற மாண்புடைமைதான் தலை என்றார். தலை = தலைவன், உயர்ந்தோன் என்றார். தவ மகனாக சிறப்பதால்தான், அவர் இகழ்பவரை விடப் புகழ் மிக்கப் புண்ணியராக விளங்குகிறார் என்கிறார் வள்ளுவர்.

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை மறத்தல் அதனினும் நன்று

பொருள் விளக்கம்:

பொறுத்தல் = பிறர் தீங்கினை மன்னித்தல்
இறப்பினை என்றும் = எப்பொழுதும் தொந்தரவை அதிகப்படுத்தும்
அதனை = அந்தத் தீங்கினை
மறத்தல் = மனத்திலிருந்து நீக்கி விடுதல்
அதனினும் = மன்னிப்பதைவிட
நன்று = வாழ்வைச் சிறக்கச் செய்யும்; சுகத்தைக் கொடுக்கும்.

சொல் விளக்கம்:

இற = அதிகரித்தல்; **பினை** = தொந்தரவு படுத்துதல்; **அதனை** = மிகுதி;
மறத்தல் = அசட்டை பண்ணுதல், விட்டு விடுதல்
நன்று = சுகம்; சொர்க்கம், வாழ்வுச் சிறப்பு

முற்கால உரை:

பிறர் குற்றத்தைப் பொறுத்தலினும் அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பொறையினும் நன்று.

தற்கால உரை:

பிறர் செய்த தீமையை எப்பொழுதும் பொறுக்க வேண்டும். அதைவிட மறத்தல், அனைவருக்கும் நன்மை.

புதிய உரை:

பிறரது தீங்கினைப் பொறுக்கிறபோது மேலும் அந்தத் தொந்தரவு அதிகப்பட்டுக் கொண்டே வரும் என்பதால், தீங்கை மன்னிப்பதை விட, மனத்திலிருந்து விட்டு விடுவதே சுகத்தை அளிக்கும்.

விளக்கம்:

ஒருவர் தீமை செய்கிறார் என்றால், அவர் தெரிந்தே தான் செய்கிறார். தெரிந்து செய்யும் குற்றத்தை மன்னித்து விடுகிறபோது அந்த வடு மாறிவிடாது. அது எப்பொழுதும் உள் மனத்திலே தொந்தரவை அதிகப்படுத்தி விடுகிற ஆற்றலுடனே இருக்கும்.

அந்தத் தீமையை அசட்டை பண்ணுவதன் மூலமாக மனத்திலிருந்து, நினைவுகளில் இருந்து விட்டு விடுவதும் விரட்டி விடுவதும், மனத்தில் இருந்தே கிள்ளி எறிந்து விடுவதும், உயர்ந்த பண்பாற்றல் மட்டுமல்ல அது உயர்ந்த சுகத்தை அளிக்கும். ஒப்பற்ற சொர்க்க வாழ்வைப் படைக்கும். வாழ்வில் எல்லாம் எல்லாச் சிறப்பினையும் கொடுக்கும் என்று பொறையின் பெருங்கொடையை இரண்டாவது குறளில் கூறுகின்றார்.

153. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை

பொருள் விளக்கம்:

இன்மையுள் வன்மை = வறுமையிலும் வலிமையானது.
விருந்தொரால் = புதியவர்களுக்கு ஈகுதல்தான்
வன்மையுள் வன்மை = பலம் உள்ள மெய்யிலும்
வலிமையானது (பொறுமை காக்கும்)
மடவார்பொறை = மகளிர், பூமியை விட பொறை காக்கும் பண்பே சிறந்ததாகும்.

சொல் விளக்கம்:

இன்மை = இல்லாமை, வறுமை, இல்லா மெய், பலமின்மை;
வன்மை = வலிமை; **விருந்து** = புதுமை, புதியவர் **ஓரால்** = ஈகுகை
மடவார் = மகளிர், அறியாமை; **பொறை** = பூமி; பொறுமை

முற்கால உரை:

வறுமையுள் வறுமையாவது விருந்தினரை நீக்குதலாகும்.
வல்லமையுள் வல்லமையாவது அறியாது தீங்கு செய்தவரைப் பொறுத்தலாகும்.

தற்கால உரை:

விருந்தினரை விரட்டுவதே வறுமை. அதுபோல் வன்மையுள் வன்மை கீழோர் துயர் பொறுத்தல் ஆகும்.

புதிய உரை:

வறுமையிலும் வரும் புதியவர்களுக்கு வழங்குவது வல்லமையாகும். பலம் இல்லாத மெய்யிலும், பிறரது தீங்கைப் பொறுத்துக் கொள்ளுதல், மகளிர், மற்றும் பூமியை விட வல்லமையாளராகப் புகழப்படும்.

விளக்கம்:

வறுமைக் காலத்தில் வந்த விருந்தினரை விரட்டுதல் யாவர்க்கும் இயல்பு. எல்லோர்க்கும் எளிது. சாதாரண மாந்தர்கள் இப்படித்தான் செய்வார்கள். அதே சமயத்தில், வறுமையிலும் வழங்கி வாழ்விக்கும் பண்பாற்றல் வல்லமையாளர்க்கே முடியும். அதுதான் பெருமைக்குரிய குணம்.

அதுபோல, இல்லாமை என்பது இல்லா + மெய் என்று ஆகிறது. உடலிலே சக்தி இல்லாதபோதும் உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஆற்றலால், மனோசக்தி நிறைந்தவராய், மற்றவர்கள் இழைக்கும் தீங்கினை மன்னிப்பதும் மறப்பதும் வல்லமையாளர்களிலும் வல்லமையாளரானவராலேயே இயலும்.

அப்படிப்பட்ட இல்லா மெய்யை, பொல்லாமெய்யை, வென்று, பொறைகாக்கும் பண்பே பெறுதற்கரிய நற்பண்பு என்று வள்ளுவர் 3 வது குறளில் கூறுகிறார். முதல் குறளில் மன்னிப்பு 2ஆம் குறளில் மறப்பு 3ஆவது குறளில் முடியாதபோதும் செயல்படும் சிறப்பு.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும்.

பொருள் விளக்கம்:

நிறை உடை மெய் = மன உறுதியும் ஒருமைப்பாடும் உடைய உடலானது

நீங்காமை வேண்டின் = (இரண்டும்) எப்போதும் பிரியாமல் இருக்க வேண்டின்

பொறையுடைமை = (மன்னித்தும். மறந்தும் முயன்று செய்கிற) பெருமை மிக்க பொறை உடைமையை

போற்றி = துதித்துக் காத்து

ஒழுகப்படும் = வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சொல் விளக்கம்:

நிறை = கற்பு, மன ஒருமை, மன உறுதி, மன அடக்கம், நூறுபலம்
நீங்காமை = பிரியாமை; **போற்றி** = துதித்து காத்து
ஒழுக = வளர்த்துக் கொள்ளுதல்

முற்கால உரை:

ஒருவன் சால்புடைமை தன் கணின்று நீங்காமை வேண்டின் பொறை உடைமையைக் தன்கண் அழியாமற் காத்து ஒழுகப்படும்.

தற்கால உரை:

நிறைகுடம் பெருமை நீங்காதிருக்கப் பொறுமையை நடத்தையாகக் கொள்ள வேண்டும்.

புதிய உரை:

மன ஒருமைப்பாடும் உறுதியும் அதனைக் காக்கும் உடலும் எப்போதும் பிரியாது இருக்க விரும்பினால், பெருமையுடைய பொறை உடைமையை துதித்துக் காத்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

நிறை என்றால் சால்பு என்றும் சான்றாண்மை என்றும் கூறுவர். இங்கே நான் கற்பு என்கிற கலங்காத உறுதி, இழந்து போகாத மன அடக்கம் என்று பொருள் கொண்டிருக்கிறேன். இதையே உலக வழக்கில் நூறு பலம் என்பார்கள். நூறு பலம் கொண்ட உடலும் வீறுமிக்க மனமும் பிரியாமல் இணைந்து, முனைந்து, மகிழ்ந்து செயல்படுகிற போதுதான் பேராச்சரியம் மிக்க பொறை குணம் பெருகி வளரும். அதனால்தான் பொறை உடைமெய்யை, மதித்து, காத்து, வளர்த்துக் கொள்ள முடியும் என்று மெய்யின் உடலுக்கு முக்கியத்துவம் தருகிறார் வள்ளுவர். நூறு பலம் மிக்க உடலில், நூறு பலம் மிக்க மனம் வாழும் என்பதை 4 ஆவது குறளில் நிறைவாக விளக்குகிறார் வள்ளுவர்.

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

பொருள் விளக்கம்:

ஒறுத்தாரை = தீங்கிழைத்தவரை, தண்டித்து அழித்தவரை
ஒன்றாக = தீங்கிழைத்தவருக்கு இணையாகவே

வைப்பர் = வைத்துப் பேசுவர்
பொறுத்தாரை = பொறைப் பண்பால் காத்தவரை
வைஆரே = எஃகு, வைரம் போன்று
பொன்போற் = உடலைப்போல
பொதிந்து = மிகுதியாகக் காக்கப்படுவார்

சொல் விளக்கம்:

ஒறுத்தார் = அழித்தவர், தண்டித்தவர்
வை = கூர்மை, வைரம், எஃகு, அறிவு, மேன்மை
பொன் = உடல், திரவியம், திரவியம் என்கிற இயற்கை.

முற்கால உரை:

பிறர் தீங்கிற்காக அவரை ஒறுத்தாரை, அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார். அவரைப் பொறுத்தாரை இடைவிடாது பொன்போல் மனத்துள் கொள்வர்.

தற்கால உரை:

அறியாமல் செய்த தவற்றைப் பொறுத்துக் கொள்ளாமல், தண்டித்தவர்களை உலகத்தார் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். ஆனால், *பொறுத்துக் கொண்டவர்களைப் பொன்னைப் போற்றுவது போல, மனத்தில் வைத்துப் போற்றுவார்கள்.

புதிய உரை:

தீங்கிழைத்தவர்களையும் தண்டிப்பவர்களையும் (ஒன்றாகவே) ஓரினமாகவே வைப்பார்கள். ஆனால் பொறையாளர்களை வைரம் பாய்ந்த உடலாளராகவும், அறிவாளராகவும் போற்றிக் காப்பார்கள்.

விளக்கம்:

அறியாமல் செய்தாலும் அறிந்து செய்தாலும் தீமை தீமைதான். அப்படிப்பட்ட தீங்காளருக்கு எதிராகத் தண்டிப்பவர்கள் தீங்காளருக்குச் சமமான ஓரினம், ஒரே தன்மையானவர் என்றே ஒப்பிட்டுப் புறத்தில் வைப்பார்கள் உயர்ந்தவர்கள்.

ஆனால், பொறையால் வெல்கிற ஒருவரை அறிவாளர், ஆண்மையாளர், ஆற்றலாளர், வல்லமையாளர் என்று போற்றுவார்கள். **வை** என்பது கூர்மை. கூர்மை என்பதற்கு எஃகு, வைரம் என்று பொருள். பொன் என்றால் உடம்பு என்று பொருள். வைரம் பாய்ந்த உடம்பாக வசீகரம் வாய்ந்த பண்பான மனதாக

உயர்ந்தோர்கள் பொறுத்தருள்வார் செயலைப் போற்றி மகிழ்வார்கள். நெஞ்சில் வைத்துக் காப்பார்கள் என்று வள்ளுவர் உரம் வாய்ந்த, தரம் வாய்ந்த உடல் வளம் பற்றி 5வது குறளில் கூறுகிறார்.

156. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்

பொருள் விளக்கம்:

ஒறுத்தார்க்கு = தண்டித்து அழித்தவர்க்கு
இன்பம் = ஏற்படுகின்ற சுகமானது
ஒருநாளை = ஒரு புதுமையாக இருக்கலாம்
பொறுத்தார்க்கு = மன்னித்து மனமார மறந்தார்க்கு
பொன்றும் = குறைவில்லாத
துணையும் புகழ் = ஆற்றலும் ஏற்றமும் கொடுக்கும்

சொல் விளக்கம்:

நாள் = புதுமை, இளமை; **பொன்றுதல்** = குறைதல்
துணை = ஆற்றல்; **புகழ்** = ஏற்றம் மேம்பாடு

முற்கால உரை:

பிறர் குற்றம் கண்டு தண்டித்தவர்க்கு ஒருநாளை இன்பம். பொறுத்தவர்க்கு உலகம் அழியும் அளவும் புகழ் உண்டாம்.

தற்கால உரை:

தண்டிப்போர்க்கு அந்நொடியே இழிந்த இன்பம். பொறுத்தார்க்கோ உலகம் உள்ள வரையில் புகழ் உண்டாம்.

புதிய உரை:

தண்டிப்பவருக்கு ஏற்படுகிற சுகமும் மகிழ்ச்சியும் ஒரு புதுமையாக மட்டுமே தெரியும். ஆனால் மனமாரப் பொறுப்பவருக்கு ஆற்றலும் மேம்பாடும் பெருகி வளரும்.

விளக்கம்:

பிறரைத் தண்டிக்கும்போது ஏற்படுகிற சுகமும் அழித்தொழிப்பதைக் காணும்போது பெறுகிற எழுச்சியும், புதுமையாகத்தான் தோன்றும். அந்தப் புதிய சூழ்நிலையில் ஆழ்ந்து போனால், அமிழ்ந்து போய்விட நேரிடும். அது போன்ற இழிந்த எழுச்சி, பிறகு மன உளைச்சலை உண்டாக்கி விடும். ஆனால் பொறுத்துக் கொள்கிறபோது உடலுக்குள் உண்டாகிற

படபடப்பு, பதைபதைப்பு (Stress, strain, Tension) உடல் களைப்பு எல்லாமே குறைந்து விடுகிறது. உடலுக்குப் புதுமையான புத்தெழுச்சியும், மனத்துக்கு, மேம்பாடு மிக்க புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது. மன உலைவை மாற்றுகிற ஆற்றல், மன்னிக்கும் மனதுக்கு மறக்கும் மனதுக்கு அதிகம் உண்டு.

ஆகவேதான், துணையும் புகழ் என்றார், அதாவது ஆக்கப் பொருளாகிய 'உம்' என்பதை வைத்துத் துணை புகழ் என்று இரண்டும் பெருகி வரும் என்று 6ஆம் குறளில் கூறுகின்றார்.

157. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று

பொருள் விளக்கம்:

திறன் அல்லது = காரணம் அல்லது கூறுபாடு இன்றி
அல்பிறர் செய்யினும் = பிறர் தீவினை செய்தாலும்
நோநொந்து = அதனால் வேதனையும் பலவீனப்பட்டாலும்
அறன் = ஒழுக்கம் உலாவருகிற அகத்தை உடைய அறனானவன்
அல்ல செய்யாமை = அவர்க்கு எதிராக தீவினை செய்யாமையானது
நன்று = (அதுவே) நல்வினையாகும் சுகமாகும்.

சொல் விளக்கம்:

திறன் = காரணம், கூறுபாடு, வழி; **நோ** = பலவீனம், வேதனை, சிதைவு; **நொந்து** = தூண்டு; **அல்லது** = தீவினை
அல் = மயக்கம்; **அறன்** = அகம், ஒழுக்கம், நன்று
அறன் = ஒழுக்கமானவன்

முற்கால உரை:

பிறர் செய்யத்தகாத கொடியவைகளைச் செய்தாலும் தான் வருந்தி அறமல்லாதவைகளைச் செய்யாமை நன்றாகும்.

தற்கால உரை:

கீழான தீமையைப் பிறர் செய்தாலும் மனம் மறந்து, முறையற்றுத் தண்டிக்காமை நன்மை தரும்.

புதிய உரை:

காரணமின்றி, அறியாமை மயக்கத்தால் பிறர் தீவினை செய்ய, அதனால் வேதனைப்பட்டு மனச்சிதைவு ஏற்பட்டாலும் கூட ஒழுக்கவானாகிய அறன், அதற்கான எதிர் வினையைச் செய்யமாட்டார்.

விளக்கம்:

தீவினைகளை அறியாமல் செய்யலாம். மதி மயக்கத்தால் பொறாமையால், காரணமறியாமலும் கூடச்செய்யலாம். அத்தகைய செயல்கள் ஒருவருக்கு மனப்பாதிப்பை ஏற்படுத்தும். உடலில் பலவீனத்தை ஏற்படுத்தும். உடலிலும் மனதிலும் வேதனைகளை விளைவிக்கும். இப்படிப் பல தொந்தரவுகளைத் தூண்டுகிற தீவினையால், மனம் மாறுபடவும் கூறுபடவும் வேறுபடவும் கூடிய சூழ்நிலையும் அமைந்து விடும். அப்பொழுதும், ஆத்திரம் பிறக்கிற நேரத்தும் அமைதியைக் காத்து அறனல்லாததை செய்யாதவன்தான் அறன் ஆகிறான். ஒழுக்கத்திற்கு உயிர் தருபவன்தான் அறன். ஆகவே 7 வது குறளில் அறனின் பண்பே அல்வினை தவிர்ப்பதுதான் என்னும் கொள்கையைக் கூறி வழிப்படுத்துகிறார் வள்ளுவர்.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தன் தகுதியான் வென்று விடல்.

பொருள் விளக்கம்:

மிகுதியான் = இறுமாப்புடன் கீழ்மைத் தன்மையான கொடுமையால்
மிக்கவை = அழிக்கின்ற செயல்களை
செய்தாரை = செய்கின்றவர்களை
தாந்தன் = ஐம்புலன்களையும் வென்ற மன அடக்கமுள்ள
தகுதியான் = தனது நடுவுநிலையான ஒழுக்கத்தால்
வென்றுவிடல் = வென்றுவிட வேண்டும்.

சொல் விளக்கம்:

மிகுதி = கடுமை, கீழ்மை, இறுமாப்பு
மிக்கவை = அழித்தல், எச்சில்படுத்துதல்
தாந்தன் = ஐம்புலன்களையும் வென்றவன், தாந்தி
தகுதி = நல்லொழுக்கம், நடுவுநிலைமை, ஏற்ற வல்லமை

முற்கால உரை:

மனச்செருக்கால் பிறர் தீமை செய்தாலும், அவர்க்கு நன்மை செய்து பொறுமையால் வெல்ல வேண்டும்.

தற்கால உரை:

ஆணவத்தார் தந்த துன்பத்தை, மனித நேயத் தகுதியால் வென்று அதையும் மறந்து விடுக.

புதிய உரை:

இறுமாப்பும் கீழ்மதியும் கொடுந்துணிவும் கொண்டு துன்பம் தருபவருக்கும், மன அடக்கம் தரும் ஒழுக்கப் பண்புடன் நல்லவை செய்து அவரை வென்றிட வேண்டும்.

விளக்கம்:

மிகுதியான் என்றது எல்லாவற்றிலும் அதிகமான குணங்களைக் கொண்டவன். இங்கு இறுமாப்பாகிய மனச்செருக்கு கிறங்கிய கீழ்புத்தி. அதிலும் கடுமையும் கொடுமையும் நிறைந்ததும் அவன் செய்கிற அல்லல், துன்பம் எல்லாம் மிகுதியாகத்தானே இருக்கும். அப்படிப்பட்ட நிலையை, ஐம்புலன்களையும் வென்று, மன அடக்கம் மிகுந்து தவத்தின் போதும் ஏற்படுகிற துன்பங்களைச் சகித்து வெற்றி பெறுகிற தன்மை போல, இந்தத் தீவினையாளரையும் வென்று மேன்மைகள் எய்திட வேண்டும் என்று 8 வது குறளில் விளக்குகிறார்.

தீவினையை எதிர்கொள்வது தவம் செய்வதுபோல. அதில் விளைகின்ற துன்பமும் சங்கடமும் தவத்திற்கிடையே தோன்றும் துயர்களைப்போல, தவமகன் போல அதனை வென்றிட வேண்டும் என்ற ஒரு தகுதி நிலையை இங்கே குறித்துக் காட்டுகிறார்.

(சிலர் தாம்தாம் என்றும், சிலர் தாந்தம் என்றும் எழுதுகின்றனர். தாந்தன் என்றே நான் பொருள் கொண்டிருக்கிறேன்.)

159. துறந்தாரிற் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

பொருள் விளக்கம்:

இறந்தார் வாய் = ஒழுக்கத்தில் இழிந்தவர் இடத்துப் பிறக்கிற
இன்னாச் சொல் = கீழ்மை மிகுந்த சாபத்தையும் கட்டளையையும்.
நோற்கிற்பவர் = சகித்துக் கொள்கிற சக்தி மிகுந்தவர்
துறந்தாரிற் = நிலம், புலம் துறந்தவர்களை விட
தூய்மை உடையர் = தூய (மெய்யில்) திண்மையாளராவார்

சொல் விளக்கம்:

சொல் = சாபம், கட்டளை
இன்னா = கீழ்மையான தீமை; **நோற்க** = சகிக்க

முற்கால உரை:

தீய வழியில் நடப்பவரது கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர், துறவிகள் போல பரிசுத்த குணம் உடையவர்.

தற்கால உரை:

துன்பம் தரும் முறையற்ற கடும் சொல்லைப் பொறுப்பவர், துறவியை விடச் சிறந்தவராம்.

புதிய உரை:

இழிந்தவர் இடுகிற கட்டளையையும் சாபத்தையும் சகித்துக் கொள்கிற சக்தியாளர்கள், சகலத்தையும் துறந்தவர்களை விட மனத்திண்மையாளர்கள் ஆகிறார்கள்.

விளக்கம்:

திண்மையான உடலில் தான் வன்மையான மனம் இருக்கும். இழிந்தவர்கள் பேசுகிற பேச்சு எல்லாமே ஆணையிடுவது போலவும், கட்டளை பிறப்பிப்பது போலவும், சபிப்பது போலவும்தான் இருக்கும். அதனால்தான், அதனை இன்னா + சொல் என்றார்.இழிந்தவர்கள் எங்கும் இருப்பார்கள் என்பதைக் குறிக்கவே, **பவர்** என்ற சொல்லையும் இங்கே பயன்படுத்தியிருக்கிறார். பவர் என்றால் எங்கும் இருத்தல் என்பதாம்.

நிலம், புலம், நலம் துறப்பதற்கு நெஞ்சிலே உறுதி வேண்டும். உடலிலே வலிவு வேண்டும். அதனால்தான், **நோற்க** என்றார். நோற்க என்றால் சகித்துக் கொள்ள தவ குணங்கள் மிக்கவை என்று நோற்கிற் என்றார். தூய்மை என்பது தூய் + மெய் ஆயிற்று. தூயதான உடல், தூயதான மனம்; தூய தான செயல். ஆகவேதான் ஒன்பதாம் குறளில் சகித்துக் கொள்கிற மனம், சோதனையை ஏற்கிற தேகம், சக்தி நிறைந்த வாழ்க்கை என்று குறிக்க தூய்மை, நோற்க என்ற சுவையான சொற்களை வள்ளுவர் பெய்திருக்கிறார்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரிற் பின்

பொருள் விளக்கம்:

உண் ஆது = அவாவுடன் அனுபவித்து

நோற்பார் = (தீச் செயல்களை) சகித்துக் கொள்கிற

பிறர்சொல்லும் = அயலார் இகழ்ந்துரைக்கிற

இன்னாச்சொல் = கீழ்த்தரமான சாபச் சொற்களை,

நோற்பார் = சகித்துக் கொள்கிற

பெரியர் = உயர்ந்த பண்பு உடையவர் மட்டுமல்ல

இல்பின் = அவரது குடிப்பெருமையையும் (மிகுதியாகக்) காட்டும்

சொல் விளக்கம்:

உண் = அனுபவித்தல்; **ஆது** = அவா; **பின்** = பெருமை
இற்பின் = குடிப்பெருமை; **நோற்க** = சகித்துக் கொள்ளுதல்.

முற்கால உரை:

பிறர் கொடுஞ்சொற்களைப் பொறுப்பவர்க்கு, தவத்தர் பின்னாவர் என்பதாம்.

தற்கால உரை:

தீய சொல் தாங்கும் மனித நேயத்தர், பசி தாங்கித் தவம் செய்வாரை விட உயர்ந்தவர் ஆவார்.

புதிய உரை:

பிறர் கூறும் இகழ் மொழிகளை, சபிக்கும் சொற்களைப் பொறுத்துக் கொள்பவரின் செயல் உயர்ந்த பண்பால் மட்டுமல்ல, அவரது குடிப் பெருமையும் உயர்ந்து விளங்கும்.

விளக்கம்:

பொறைப் பண்பு ஒருவரின் தனிப்பட்ட பண்பாக இருக்கலாம். அது குடிப் பெருமையின் கோலத்தாலும் தொடர்ந்து வருகிற சீலமாகும். அந்த சீலம்தான் மன அடக்கமாக, நடுவு நிலைமையை நிலை நிறுத்தும் நல்லொழுக்கமாக, வல்லமை சேர்ந்த வழித்தடமாக தொடர்கிறது. இகழ்வைச் சகிக்க, அனுபவிக்க, ஆற்றல் கொள்கிற மனம்தான் அவரை உயர்ந்தோராக ஆக்குகிறது. அந்த உயர்வுதான் குடிப் பெருமையின் வெளிப்பாடாக, வல்லமையுள்ள விழுதாக வளர்ந்து வருகிறது. **பின்** என்றால் பெருமை. **இல்** என்றால் குடிமை. நோற்பாரின் குடிப் பெருமை, குலப் பெருமையே, பொறை உடைமையின் பிறப்பிடமாக, சிறப்பிடமாக மிளிர்கிறது என்பதை அறனின் பிறப்பிடத்தை சுட்டிக்காட்டி இகழ்ச்சியிலும் சுகம் காணும் தெளிந்த மனத்தை, அதன் சக்தியை அற்புதமாகக் கூறி முடிக்கிறார்.

17. அழுக்காறாமை

அழுக்கு + ஆறா + மெய் என்று அழுக்காறாமை எனும் சொல்லைப் பிரித்துப் பார்க்கிறோம்.

அழுக்கு என்றால் உடல் மாசு, மன மாசு, களங்கம் என்றெல்லாம் அர்த்தங்கள் உண்டு. **ஆறா** என்றால் நீங்காத, மாறாத, தீராத என்று பல பொருள்கள் உண்டு. **மெய்** என்றால் உடல்.

உடலிலும் மனதிலும் எப்போதும் மாசு நீங்காமல் இருக்கும். மாசுபடுகிற மனதில், எல்லாவிதமான எரிச்சலும், நோலாமையும் நோணாமையும் நிறைந்தே கிடக்கும். சிற்றின்ப ஆசை சீறிப்பாயும், விரோதம் சுரந்து பெருகும், செருக்கு புயலாய் கிளம்பும், பொறாமை, அற்பத்தனமான ஆசைகளும், பேராசைகளும் குடிகொண்டிருந்தாலும், அந்த உடலானது ஆலயம்தான். மனமானது கோயில்தான்.

தண்ணீரில் படர்ந்திருக்கும் பாசியைப் புறம் தள்ளினாலும், தள்ளப்பட்ட வேகத்திலே திரும்பி வருவதைப் போலவே, அகற்ற அகற்ற அகலாது; நீக்க நீக்க நீங்காது, ஆற்ற ஆற்ற ஆறாது வருபவைதாம் பொறாமையும் மற்றும் புரையோடிய எண்ணங்களும்.

மண்ணில் கலங்கிய நீர்போலவே மனிதர்கள் இருக்கிறார்கள். ஒருவர் மனம் கெடுகிறபோது, அவரின் செயல்பாடுகள் அடுத்தவரையும் அன்பில்லாமல் தாக்குகிறது. அதைப் பண்போடு பொறுத்துக் கொள்ளும் பேராண்மையையே, பொறையுடைமை என்று போற்றினார் வள்ளுவர்.

அதற்கு அடுத்த அதிகாரத்தில், மற்றவர் மனக்கோட்டத்தை மனஓட்டத்தைப் புரிந்து கொண்டு, மன்னித்து மறந்து பொறை காட்டுவது போல, தன் மனத்தையும் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

அழுக்கே வழியாக (ஆறாக) உள்ள மனம். அழித்தாலும் தழைத்துப் பிழைக்கின்ற மாசுகள். இவற்றைத் தடுப்பதும், தவிர்ப்பதும், குறைப்பதும்; பண்பாற்றல்களை நிறைப்பதும், வளர்ப்பதும் ஓர் அறனின் கடமை, பெருமை என்பதைக் குறிக்கவே பொறையுடை மெய்க்குப் பின் அழுக்காறு உடை மெய்யினை அடையாளம் காட்ட இந்த அதிகாரத்தை வைத்துள்ளார்.

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு

பொருள் விளக்கம்:

ஒரு-வன் = ஒரு வலிமையுள்ள
தன் = ஆன்மாவான (தன்)
நெஞ்சத்து = மனதிற்குள்ளே
அழுக்காறு இலாத = மனக்கோட்டம் இல்லாத
இயல்பு = தகுதி, ஒழுக்கம் போன்றவற்றை
ஒழுக்க ஆறாக = அறம் சார்ந்த நல்வழியில்.
கொள்க = எப்பொழுதும் கொண்டிருக்க வேண்டும்.

சொல் விளக்கம்:

வன் = வலிமை; **தன்** = ஆன்மா; **ஆறு** = நல்வழி, **அறம்** = உபாயம்
இயல்பு = தகுதி, பலம், ஒழுக்கம்

முற்கால உரை:

ஒருவன் தன் நெஞ்சத்தின்கண் அழுக்காறு எனும் குற்றமில்லாத இயல்பினையே தனக்கோதிய ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

தற்கால உரை:

நெஞ்சம் பொறாமை இல்லாதிருப்பதை, வாழ்க்கை ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும்.

புதிய உரை:

வலிமையுள்ள ஆன்மாவிற்குள் விளங்கும் மனத்திலே, மனமாசுகள் இல்லாமல் வாழ்கிற தகுதியையும், பலத்தையும் ஒழுக்கத்தின் வழியாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

உலகத்தை அளக்கலாம். ஆனால் உள்ளத்தை அளக்க முடியாது. மகேசனைக் கூடப் புரிந்து கொள்ளலாம். ஆனால், மனத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் மனத்தைக் குறிப்பிட வந்த வள்ளுவர், வலிமையான நெஞ்சம் என்றார். வலிமையான நெஞ்சம் வலிமையான ஆன்மா வழியே நடத்தப்படுகிறது.

எதற்கும் அடங்காத, எதிலும் அடங்காத மனம். அவை ஐம்புலன்களால் அலைக்கழிக்கப்படுகின்றன. அதனால்தான் மனத்தில் அழுக்கு, பிசுக்கு, கசடு போன்ற மாசுகள் புகுந்து,

வாழ்க்கை வழியை மாற்றி விடக்கூடாது என்பதற்காக, அழுக்காறு என்கிற பொறாமையை அழிக்கும் இயல்பாகிய ஒழுக்கத்தைப் பலமுடன் கொள்ள வேண்டும் என்றார். பலமான மனத்தை எதிர்க்கவும் மாற்றவும் பலமான ஒழுக்கமே வேண்டும். அதுவே அழுக்கு நீங்காத மெய்யையும், மெய்யால் வாழும் மனத்தையும் மனத்தை வழி நடத்துகிற ஆன்மாவையும் நெறிப்படுத்தும், சரிப்படுத்தும்.

ஒழுக்கமே பலம். ஒழுக்கமே உபாயம். ஒழுக்கமே நல்ல ஊக்கம் என்று முதல் குறளில் பொறாமையை நீக்க சக்தி மிக்க ஒழுக்கம் வேண்டும் என்று கூறுகிறார்.

162. விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்

பொருள் விளக்கம்:

யார் மாட்டும் = எல்லோரிடத்தும் (நண்பர் பகைவர் என்ற பாகுபாடு இல்லாமல்)
அழுக்காற்றின் = பொறாமை கொள்கிற
அன்மை பெறின் = தீமையான குணத்தைப் பெற்றிருந்தால்
அஃதொப்பது = அதைப்போன்ற
விழுப்பு ஏற்றின் = ஒழுக்கமின்மையானது
இல்லை = எதுவுமே இல்லையாகும்.

சொல் விளக்கம்:

விழுப்பு = அழுக்கு, நல்லொழுக்கமின்மை, உலக நடைக்கு மாறு;
அன்மை = தீமை; **ஏற்றின்** = ஏற்றுக் கொண்டால்

முற்கால உரை:

ஒருவன் யாவரிடத்தும் பொறாமை இல்லாமையைப் பெறுவானாகில், அதைவிட வேறு பேறில்லை.

தற்கால உரை:

எவர் மீதும் பொறாமை கொள்ளாமையை விட பெறவேண்டிய சிறப்பு வேறில்லை.

புதிய உரை:

எல்லோரிடத்திலுமே பொறாமை உடையவராக இருக்கும் தீமையான பண்பைக் கொண்டிருந்தால், அதை விட ஒழுக்கமின்மை (இந்த உலகில்) வேறெதுவுமே இல்லை.

விளக்கம்:

விழுபேறு என்று தான் எல்லோருமே பொருள் கண்டிருக்கின்றனர். இங்கே நான் விழுப்பு என்றும், விழுப்பு என்றால் உலக நடைக்கு மாறானது, ஒழுக்கமின்மை (அநாசாரம்) என்றும் பொருளைக் கொண்டிருக்கிறேன். அன்மை என்றால் வேறாதல் என்ற பொருள் கூறியிருக்கின்றார்கள். அன்மை என்றால் தீமை என்றும் ஒரு பொருள் உண்டு. எல்லோரிடத்திலும், அவர் நண்பர் அல்லது பகைவர் அல்லது புதியவராகவும் இருக்கலாம். என்கிற வித்தியாசம் இல்லாமல், பொறாமை கொள்கிற பண்பைக் கொண்டிருந்தால், அதை விட ஒழுக்கமற்ற செயல், உலக வழக்கத்திற்கும் மாறான நடத்தை, அழுக்கான வழக்கம் வேறு எதுவுமே இல்லை என்று பொறாமையின் கேடு பற்றித் தெளிவாக வள்ளுவர் விளக்குகிறார். 2 வது குறளில் பொறாமையின் பொல்லாங்கு பற்றிய குற்றம் பற்றிக் கூறுகிறார்.

163. அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம் பேணாது அழுக்கறுப் பான்

பொருள் விளக்கம்:

அறன் ஆக்கம் = ஒழுக்கமான வாழ்க்கையை
வேண்டாதான் என்பான் = விரும்பாதவனே
பிறனாக்கம் = பிறரது எழுச்சியால் பெறும் வாழ்க்கையை
பேணாது = போற்றாது
அழுக்கறுப்பான் = பொறாமைப்படுபவனாக விளங்குகிறான்

சொல் விளக்கம்:

அறன் = ஒழுக்கம், ஆசாரம்; **ஆக்கம்** = வாழ்வு, எழுச்சி, விருத்தி
போணாமை = போற்றாமை; **பேணார்** = பகைவர்

முற்கால உரை:

மறுமைக்குத் தருமமும், இம்மைக்குச் செல்வமும் வேண்டாதவன், பிறன் செல்வங்கண்டு பொறாமை கொள்வான்.

தற்கால உரை:

பிறர் முன்னேற்றத்தை வளர்க்காமல் கெடுப்பவர் அறம் தரும் முன்னேற்றத்தை இழப்பர்.

புதிய உரை:

(எழுச்சிதரும்) ஒழுக்கமான வாழ்க்கையை விரும்பாதவனே பிறன் விருத்திமிகு வாழ்க்கையைப் போற்றாமல் பொறாமை கொள்கிறான்.

விளக்கம்:

பிறரது வளமான வாழ்க்கையை விரும்பாதபோது, அவருக்கு அவர் பகைவராகி விடுகிறார். பகை கொள்கிற மனத்தில் அன்பு இருக்காது. செயலில் ஒழுக்கமும் இருக்காது. தர்மத்தின் வழக்கமும் இருக்காது. பிறரை சிந்தனை செய்தே, சிந்தை நொந்து போகிறவர் வாழ்க்கையும் நைந்து போகிறது. நலிந்து போகிறது. களங்கப்பட்ட மனதுடன் வாழும் வாழ்க்கை விளங்காது. வளர்ச்சி பெறுகிற எழுச்சியும் பெருத்து நிறைகிற விருத்தியும் பொறாமை கொள்கிறவர் வாழ்வில் பொசுங்கிப் போகிறது. ஆகவேதான், பொறாமையின் உண்மை நிலையை முதல் இரண்டு குறள்களில் கோடிட்டுக் காட்டிய வள்ளுவர், மூன்றாம் குறளில் மற்றவர் வாழ்க்கையைக் கண்டு பகை உணர்வு கொள்கிறபோதே தன் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் தடையாகி விடுகிறான். தானே தனக்குப் பகைவன். தன்னைச் சிறுவனாகச் செய்பவனும் தானேதான் என்பது போல, தன்னைத் தாழ்த்திக் கொள்கிற, வீழ்த்திக் கொள்கிற பகைவனாக்கி விடுகிறது பொறாமை குணம் என்பதால்தான் அழுக்கு அறுப்பான் என்ற ஆணித்தரமான சொல்லை இங்கே பெய்திருக்கிறார்.

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து

பொருள் விளக்கம்:

இழுக்காற்றின் = கீழ்மை நிறைந்த கேடுதரும் பொறாமையால் ஏற்படும்;

ஏதம் படுபாக்கு = கொடிய வல்லமை கொண்ட

அல்லவை = தீமைகளை

அறிந்து = அறிந்து கொண்டதால்

அழுக்காற்றின் = தான் கொண்ட மனக் கோட்டத்திற்கு (பொறாமைக்கு)

செய்யார் = (நல்லவர்கள்) பகைவர்காளாகி விடுகிறார்கள்

சொல் விளக்கம்:

அல்லவை = தீயவை, தீமை; **ஏதம்** = கேடு, குற்றம், துன்பம்
படு = கொடுமை; **பாகு** = வலிமை; **செய்யார்** = பகைவர்

முற்கால உரை:

பெரியோர் பொறாமையால் பாவங்களைச் செய்யார்.

தற்கால உரை:

பொறாமை காரணமாகத் துன்பம் ஏற்படுவதை அறிந்த அறிவுடையார், அறமல்லாத தீய செயல்களைச் செய்ய மாட்டார்.

புதிய உரை:

கீழ்மையான பொறாமையால் ஏற்படும் கொடிய தீமைகளை அறிந்து கொண்ட பெரியோர்கள், பொறாமைக்கே பகைவர்களாக மாறி விடுகின்றார்கள்.

விளக்கம்:

ஒருவர் பொறாமையால் பாவங்களைச் செய்யாமல் இருப்பது என்பது ஒரு வகை. பாவங்களின் கொடுமையை அறிந்து பாவங்களைச் செய்யாமல் இருப்பது இன்னொருவகை. கொடிய பாவங்களின் தீமைகளைக் கண்டு, அவற்றை உண்டாக்குகிற பொறாமைக்கு எதிரிகளாகி, அதிலே பகைமை பூண்டு, புறந்தள்ளி, வெறுத்து ஒதுக்குவது என்பது ஒரு வகை. பொறாமைக்கு பகைவர்களாகி விடுவதற்கு, நெஞ்சத் துணிவும், நேர்மையின் மீது மேலோங்கிய பற்றும் வேகமும் வேண்டும்.

கொடுமையும் வலிமையும் கீழ்மையும் கேடும் கொண்டது பொறாமை. அதை விட்டு நீங்குவது என்பது, நெஞ்சார்ந்த பண்பாடுகளால் தாம் முடியும் என்பதையே, நான்காவது குறளில், பெரியோரின் பண்பு தீமைக்குப் புறம்பே இருப்பதாகும் என்று வள்ளுவர் விளக்குகிறார்.

165. அழுக்காறு உடையார்க்கு அது சாலும் ஒன்னார் வழுக்கியும் கேடீன் பது

பொருள் விளக்கம் :

அழுக்காறு = பொறாமையான மனக் கோட்டம்
உடையார்க்கு = உடையவர்க்கு
அது சாலும் = அது மிகுதியாகிக் கொண்டு போகும்.
வழுக்கியும் = அந்தப் பொறாமை (உணர்வை) அவர் மறந்திருந்தாலும்;

ஒன்னார் = பகைவரைப் போல
கேடு = (அவரை) தீமையால்
ஈன் + பது + இவ்வுலகில் பின்னே நின்று அழித்துவிடும்.

சொல் விளக்கம்:

வழுக்கு = மறதி; **சாலுதல்** = நிறைதல், மிகுதியாதல்
ஒன்னார் =பகைவர்; **ஈன்** = இவ்வுலகம், இவ்விடம்
பதுக்கம் = பின் நிற்கும்.

முற்கால உரை:

பொறாமை பகைவரை யொழிந்தும் கேடு பயப்பதால், அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா. அதுதானே அமையும்.

தற்கால உரை:

பகைவர் தவறினாலும் துன்பம் தருவது பொறாமை. எனவே, பொறாமையை அழிக்க அதுவே போதும்.

புதிய உரை:

பொறாமை உடையோர்க்கு, அது குறையாமல் மிகுதியாகிக் கொண்டே தான் போகும். அந்தப் பொறாமையை அவர் மறந்திருந்தாலும் கூட, பகைவரைப் போல பின்னிருந்து, அவருக்குக் கேடு விளைவித்து அழித்து விடும்.

விளக்கம்:

பொறாமை என்பது மனத்துக்குள் விதைக்காமலே முளைத்த விஷச் செடி போன்றது. அது எவ்வித ஊட்டமும் இன்றி, வளர்ந்து கொண்டேதான் போகும். அழிப்பாரிலாமல் செழிப்புடன் வளரும் நச்சுச் செடி போல, பொறாமையும் வளர்ந்து கொண்டே வரும். அந்தப் பொறாமையை அவர் மறந்தாலும் பதுங்கியிருந்து பாய்ந்து அழிக்கிற பகைவரைப் போல, அந்தப் பொறாமை, அவருடனேயேயிருந்து அழித்து விடும் ஆற்றல் கொண்டது. நினைத்திருந்தாலும் துன்பம் தரும். மறந்திருந்தாலும் தொடர்ந்து துன்பம் தரும் ஆற்றல் கொண்டது பொறாமை என்பதை துல்லியமாக விளக்குகிறார் வள்ளுவர் இந்த 5 ஆம் குறளில்.

166. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

பொருள் விளக்கம்:

கொடுப்பது = ஒருவர் பிறருக்கு மனமுவந்து அளிப்பதை
அழுக்கு = கவலையுடன்
அறுப்பான் = ஆட்சேபித்து தடை செய்பவனது
சுற்றம் = அவனை நம்பி வாழ்கிற குடும்பம்
உண்பதூம் உடுப்பதூம் = உண்ணவும் உடுக்கவும்
இன்றி = எதுவும் கிடைக்காமல்
கெடும் = அழிந்து போகும்.

சொல் விளக்கம்:

அழுக்கம் = கவலை; **அறுப்பான்** = ஆட்சேபித்தல், தடைசெய்தல்; **சுற்றம்** = குடும்பம்

மூற்கால உரை:

பிறர்க்குக் கொடுப்பதன் கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம் உடுக்கப்படுவதும், உண்ணப்படுவதும் இன்றிக் கெடும்.

தற்கால உரை:

பிறர்க்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பவர், உணவு உடையின்றி, சுற்றத்தோடும் அழிவர்.

புதிய உரை:

ஒருவர் பிறர்க்கு அளிப்பதைக் கவலைப்பட்டு, தடுத்து, தடையைச் செய்கிறவரது குடும்பம், உடுப்பதும் உண்பதுமின்றி, தாமே அழிந்து விடும்.

விளக்கம்:

பொறாமை மனத்தில் ஆட்கொண்டபோதே, பொறாமைக்காரன் அழித்து போகிறான் என்பதை முதல் ஐந்து குறளிலேயே விளக்கிய வள்ளுவர், அவரது குடும்பமும் யாரும் அழிப்பாரின்றி, அந்தப் பாவத்தாலே பட்டுப் போகும் என்று நுண்மையாக விளக்குகின்றார்.

பொறாமை என்பது தீ போல, தீயின் குணமாவது, தான் இருக்கும் இடத்தை முதலில் அழித்து, பிறகு சுற்றுப் புறத்தையெல்லாம் சுட்டுப் பொசுக்கி விடும். அதுபோல, பொறாமைத் **தீ** உரியவனை முதலில், சுலபமாக எரித்துப் பொசுக்கி விடுகிறது. அத்துடன் அவரைச்சுற்றி வாழ்கிற குடும்பத்தையும், அழித்து விடுகிறது.

வாழ்க்கையின் மானம் காக்கும் உடையும், மகிழ்கிற மனத்துக்கும், திருப்திக்கும் உதவுகிற உணவும் கிடைக்காமல் போய், உறவைக் காப்பாற்றுகிறவனே நிலை குலைகிறபோது, காப்பாற்றப்படும் சுற்றத்தின் கதி! ஆகவே, தன்னைக் காக்கவும் தன்னை நம்பியுள்ளவர்களைக் காக்கவும் பொறாமை வேண்டாம் என்று 6வது குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

167. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்

பொருள் விளக்கம்:

அவ்வித்து = அறிவு நிறைந்த அறிஞனாக இருந்தாலும்
அழுக்காறு உடையானை = பொறாமை கொண்டவனை
செய்யவள் = செம்மையுடைய அவனது நிலையில் (வாழ்வில்)
தவ் = தன்னியல் பிறழ்ந்து சுருங்கிப் போகின்ற
வையை = கூரிய (அதாவது) மிகுந்த அழிவு நிலையை
காட்டிவிடும் = கொடுத்து விடும்.

சொல் விளக்கம்:

அவ் = அறிவு; **வித்து** = அறிஞன்
செய்யவள் = செம்மையுடைய செழுமை நிலை
தவ் = தன்னிலை பிறழ்ந்து சுருங்குதல்; **வையை** = மிகுதிநிலை

முற்கால உரை:

பொறாமை உடையவனை, திருமகள் பொறாமைப்பட்டு, தன் தமக்கையைக் காட்டி நீங்குவாள்.

தற்கால உரை:

பொறாமை உடையவனை, செல்வத்தின் உருவகமாக கற்பனையாகக் கூறப்படும் திருமகள் கண்டு பொறாமைப்பட்டு, மூத்தமகளுக்கு அடையாளம் காட்டி விட்டு, அவனை விட்டு நீங்கி விடுவாள்.

புதிய உரை:

அறிவு நிறைந்த அறிஞனாக இருந்தாலும், பொறாமை கொண்டவனாக இருந்தால், அவனது செம்மை நிலையிலிருந்து சுருங்கி, அழிவு நிலையை அடையச் செய்து விடும்.

விளக்கம்:

அவ்வித்து என்பது பொறாமைப்பட்டு என்னும் பொருள் இருப்பது போல, அவ்வித்து என்றால் அறிவு நிறைந்த அறிஞன்

என்று நான் பொருள் கண்டிருக்கிறேன். அறிஞனே பொறாமைப் படுகிறபோது, அவனது அறிவு அழிந்து போக, அவனது வாழ்வு நிலை செம்மையிழந்து, சீரிழந்து, சருங்கிப் போக, அழிவு நிலைக்கு ஆளாக நேரிடுகிறது.

அறிஞனையே அழுக்காறு அழிக்கிற ஆற்றல் கொண்டிருக்கும் போது, சாதாரண மனிதர்களை அது சாய்த்தே விடுமல்லவா! பொறாமையானது அறிவை மட்டுமல்ல, அமைதியை மட்டுமல்ல, வாழ்வின் அனைத்து மகிழ்ச்சிகளையும் சுருங்கச் செய்து, கொய்து, அழித்து விடும் என்று 7 வது குறளில் கூறுகிறார்.

168. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

பொருள் விளக்கம்:

அழுக்காறு என = பொறாமை எனப்படும்
ஒரு பாவி = (தீய சக்தியானது) தீவினையானது
திருச் செற்று = சிறப்பு மிகு அழகையெல்லாம் அழித்து
தீயுழி = நெடுங்காலம் அந்தக் கொடுமையை அனுபவிக்க
உய்த்துவிடும் = அமிழ்த்தி விடும்

சொல் விளக்கம்:

பாவி = தீவினையானது; **திரு** = அழகு, சிறப்பு, தெய்வத் தன்மை, செல்வம்; **செற்று** = அழித்து; **தீ** = கொடுமை
ஊழி = நெடுங்காலம், உறைகாலம்; **உய்த்தல்**; அனுபவித்தல், அமிழ்த்தல்.

முற்கால உரை:

பொறாமை என்னும் பாவி, தன்னைச் சேர்ந்தவன் செல்வத்தைக் கெடுத்து, அவனை நரகத்தில் தள்ளுவான்.

தற்கால உரை:

பொறாமை ஒருவனுடைய செல்வத்தையும் அழித்து அவனையும் தீயவழியில் கொண்டு போய் விடும்.

புதிய உரை:

பொறாமை எனப்படும் தீவினையானது, அதைச் செய்பவனது அழகையெல்லாம் அழித்து, அவன் வாழும் காலம் வரை அனுபவிக்க வைத்து வருத்திவிடும்.

விளக்கம்:

பொறாமை என்பது ஒரு தீவினை. தீயானது தானும் எரிந்து, தான் இருக்கும் இடத்தையும், சார்ந்த பொருளையும் எரிக்க வல்லது. அது போலவே, பொறாமை கொண்டவனது மனத்தில் பற்றிய தீயானது, அவனது அக அழகையும், முக அழகையும் எரித்துக் கருக்கிவிடுகிறது. அழகு குறையக் குறைய ஆற்றல் குறைகிறது. சிறப்பு மறைகிறது. பெருமை குலைகிறது. பேரறிவு மாய்கிறது. வாழ்வே தேய்கிறது.

அப்படியே அன்றிலிருந்து அவன் வாழும் காலம் வரையிலும் குறைபட்டவனாக, கறைபட்டவனாக, நிறை கெட்டவனாக, நெஞ்சில் அமைதி விட்டவனாக, நேர்மையில் பட்டவனாக அவதிப்படுகிறான். அனுதினமும் கெடுகிறான். எனவேதான் பொறாமையைப் பாவி என்றார். தீவினை என்றார். தீயகமான தேகம் தானாக நரகமாகி விடுகிறது என்று 8வது குறளில் வள்ளுவர் பொறாமையின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்.

பொருள் விளக்கம் :

அவ்விய = மனக்கோட்டம் உடைய
நெஞ்சத்தான் = செருக்கு உள்ளவன்
ஆக்கமும் = பெருக்கம் மிகுந்த வாழ்வையும்
செவ்வியான் = நேர்மையும் நடுநிலைமையும் உடையவனது
கேடும் = அழிவும், சிதைவையும்
நினைக்க = சிந்தித்துப் பார்க்கிறபோது
படும் = கடுமையாகவே உணரப்படும்

சொல் விளக்கம்:

ஆக்கம் = பெருக்கம்; **வாழ்வு** = எழுச்சி, அதிகாரம், செல்வம்
அவ்விய = மனக்கோட்டம் உடைய
செவ்வியான் = நேர்மையும், நடுநிலைமையும் உடையவன்
கேடு = அழிவு, சிதைவு, அழிவு இன்மை; **பகு** = கொடுமை.

முற்கால உரை:

பொறாமை உடையவன் செல்வமும் பொறாமை அற்றவன் வறுமையும் பழைய வினை எனப்படும்.

தற்கால உரை:

பொறாமை உடையவன் இடத்திலுள்ள செல்வமும், பொறாமை இல்லாதவனிடம் உள்ள செல்வமும் அறிய ஒழுங்குபடும்.

புதிய உரை:

மனக்கோட்டமும், செருக்கும் உள்ளவன் பெற்றிருக்கிற அதிகாரமும் செல்வம் மிகுந்த வாழ்வும், நடுநிலைமை நேர்மையாளன் ஒருவனது அறிவும் பெறுகிற சிதைவும் இவற்றை எண்ணுகிறபோது அது மிகவும் கொடுமையானதாகவே தெரியும்.

விளக்கம்:

அவ்விய, செவ்விய என்று இரண்டு சொற்களை இந்தக் குறளில் காண்கிறோம். மனத்தைப் பிடித்து ஆட்டுவது பொறாமை. மனதிற்கு மகுடம் சூட்டுவது நேர்மை. பொறாமைக்குக் கிடைப்பது கொடுமையான தண்டனை. நேர்மைக்குக் கிடைப்பது வாழ்வுக்கு வளமையும் வலிமையும். ஆனால் இந்தக் குறளில் எதுகடுமை, கொடுமை என்று வள்ளுவர் குறிக்கிறார்.

பொறாமை கொண்டவன் ஆக்கம் பெறுவதும், நேர்மை கொண்டவன் ஆக்கம் இழப்பதும், நேர்மை கொண்டவன் அழிவு பெறுவதும் இயற்கைக்குப் புறம்பானது தானே! இயற்கைக்குப் புறம்பானதும் இவ்வுலகில் நடக்கும். அதற்காக நாம் மயங்கி, குழம்பி மாறிப் போய்விடக் கூடாது. மன உறுதியுடன் வருவதை எதிர் நோக்க வேண்டும்.

பொறாமை கொண்டவன் பெருக்கமும் நேர்மையாளன் இறக்கமும் நீடித்து நிலைப்பதல்ல. நீர்க்குமிழி போல மறைந்தொழியும் என்று மனத்துக்கு ஊக்கம் தரவே இந்தக் குறளைத் தந்திருக்கிறார் வள்ளுவர்.

170. அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்

பொருள் விளக்கம்:

அழுக்கற்று = மனத்தில் மாசும் களங்கமும் கொண்டு
அகன்றாரும் = பரிபூரணமாக வாழ்ந்தவரும் இல்லை
பெருக்கத்தின் = மனம் மாசு கொண்டு பெற்ற வளர்ச்சியுடன்
தீர்ந்தாரும் = தைரியமானவர்களாக வாழ்ந்தவர்களும்
இல்லை = உலகில் எங்குமே இல்லை என்பதே உண்மை

அஃதிலார் இல் = அப்படிப்பட்ட செயல் உடையவர்களும்
இல் = இல்லை என்றும் சொல்வதற்கில்லை.

சொல் விளக்கம்:

அழுக்கற்று = மனம் மாசு, களங்கம், அழுக்கு நீங்கி, பொறாமை **அகன்றார்** = பரிபூரணமாக; **பெருக்கம்** = வளர்ச்சி, செல்வம், பேறு; **தீர்ந்தார்** = தைரியமானவர், துறந்தவர்; **இல்** = இல்லை

முற்கால உரை:

அழுக்காற்றைச் செய்து பெரியாராயினாரும் இல்லை. அச்செயல் இலாதார் பெருக்கத்தின் நீங்கினாருமில்லை.

தற்கால உரை:

பொறாமையால் வளம் பெருகப் பெற்றாரும் இல்லை. பொறாமை படாமையால் வளம் சுருங்கி வறுமை அடைந்தாரும் இல்லை.

புதிய உரை:

மனம் மாசுபட்ட களங்கத்துடன் பரிபூரண வாழ்வு பெற்றவரும் இல்லை. மனம் மாசின் மூலம் வளர்ச்சி பெற்றவர்கள், தைரியமாக வாழ்ந்ததும் இல்லை. அப்படிப்பட்டவர்கள் உலகில் இல்லை என்றே கூறலாம்.

விளக்கம்:

குற்றம் செய்பவன் மனிதன். அவனது மனம் அழுக்குகளால் நிரம்பப் பெறுகிறது. அந்த அழுக்குகளுள் தலையாயது பொறாமை. அது மனத்துக்கு மாசு மட்டுமல்ல. களங்கத்தைக் கொடுத்து மனக் கோட்டத்தையும் விளைவித்து, உடலைக் கெடுத்து, மனத்தைச் சிதைத்து வாழ்வை அழித்து விடுகிறது. அதனால்தான் அழுக்காறு உள்ளவர்கள் தாம் மனிதர்கள். அவர்கள் தமது அறிவாற்றல் மூலம் அவற்றை ஒதுக்கித் தள்ளி உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும். உயர்ந்த வாழ்வு என்பது பணம், பதவி, வீடு, மனை, அதிகாரம் என்பதில் அல்ல.

மனம் உயர்ந்தால், நிமிர்ந்தால், மாண்புகள் நிறையும். மகிழ்ச்சிகள் குவியும். ஆகவே அழுக்காறு கொண்டு உயர்ந்தவர்கள் இல்லை. அழுக்காறு இல்லாமல் அழிந்தவர்கள் இல்லை என்று கூறி. அழுக்காறு கொண்ட மனம் பரிபூரண நிம்மதியுடன் இருக்காது.. தைரியமாகவும் செயல்படாது. அச்சத்துடன் எச்ச வாழ்க்கையே வாழ முடியும் என்ற முத்தாய்ப்புடன் இந்த அதிகாரத்தை முடிக்கிறார் வள்ளுவர்.

18. வெஃகாமை

(விருப்பமற்ற வெறுப்புடைமை என்றே கூறலாம்)

மனதில் உள்ள மாசுக்களில், மலங்களில் அழுக்காறு என்பது மோசமான உணர்வாகும். அழுக்காற்றின் தீமைகளை அளவிடற்கரிய துன்பங்கள் தரும் தீர்வுகளை எல்லாம் விளக்கிய வள்ளுவர், அதற்கு அடுத்த அத்தியாயமாக வெஃகாமை என்று வைத்திருக்கிறார்.

வெஃகு என்றால் அவாவு என்று பொருள். வெஃகல் என்றால் அதிக ஆசை என்பர். அதீத ஆசை என்றும் சொல்வர். அதீதம் என்றால் எட்டாதது, எல்லை கடந்தது என்று அர்த்தம்.

அதை அவா என்றும் கூறுவர். அவா என்பதற்கு ஆசைப் பெருக்கம் என்று கூறினாலும், ஆங்கிலத்தில் அதை Lust என்று பொருள் கொள்கின்றனர். Lust என்பதற்கு இச்சை, இழி காமம், அடங்கா சிற்றின்ப அவா, தகா சிற்றின்ப வேட்கை என்று விரித்துரைக்கின்றனர்.

இங்கே வெஃகாமை என்னும் சொல்லுக்கு எல்லா உரையாசிரியர்களுமே பிறர் பொருளை வெளவக் கருதாமை என்றே உரை எழுதியிருக்கின்றனர்.

வெளவுதல் என்றால் பிறர் பொருளைத் திட்டமிட்டுப்பறி, கையாடு, சூறையாடு என்பதாகும்.

ஆனால் வெஃகாமை என்ற சொல்லுக்கு வெறுப்பு விருப்பின்மை அருவருப்புறு என்றெல்லாம் அர்த்தங்கள் இருக்கின்றன.

பிறர் பொருளை முதலில் நினைத்து, அதில் மனத்தைப் பதித்து, ஆசையை வளர்த்துவிட்டு பிறகு கவர நினைக்காமை என்று கூறுவதை விட பிறர் பொருளின்மேல் வெறுப்பு கொள்ளுதல் விருப்பின்மை என்று சொல்கிறபோது, அப்படிச் செய்கிறவர்மேல் முதலில் மரியாதை ஏற்படுகிறது.

அழுக்காறாமையை அகற்றி விடுகிற மனது. இயல்பாகவே பிறரது உடமை எதுவாக இருந்தாலும் வெறுத்து ஒதுக்குகிற விருப்பமின்மையை ஏற்படுத்திக் கொள்ளும் என்பதால் வெறுப்பு என்றே நாம் சொல்லி விடலாம்.

பொருள், புலம், சிற்றின்பம், வெறி என்று வள்ளுவர் பெய்திருக்கும் சொற்களால் விருப்பமின்மையுடன் வாழ்கிற மனதைக் கொள்ள வேண்டும் என்பதற்காக அழுக்காறுக்குப் பின் வைக்கப்பட்டிருக்கிறது.

171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றி குற்றமும் ஆங்கே தரும்.

பொருள் விளக்கம்:

நடுவுஇன்றி = ஒழுக்கமின்றி மனக்கோட்டத்துடன்
நன்பொருள் = பிறருக்கு நன்மை தரும் பொருளை
வெஃகின் = அதிக ஆசைப்பட்டு பறிக்க நினைத்தால்
குடிபொன்றி = உடல் அழிந்து
ஆங்கே குற்றமும் = அங்கே ஊனத்தையும் (உடல் குறையையும்)
தரும் = உண்டாக்கி விடும்.

சொல் விளக்கம்:

நடுவு = செம்மை, ஒழுக்கம், மனக்கோட்டமின்மை
குடி = உடல், குடும்பம், **பொன்றி** = அழிதல், கெடுதல்
தரும் = உண்டாக்கும், கொண்டுவரும்.

முற்கால உரை:

பிறர்க்குரிய அவரது நன்பொருளை வெஃகுமாயின், அது அவன் குடியைக் கெடச் செய்து பல குற்றங்களையும் அவனுக்கு அப்பொழுதே கொடுக்கும்.

தற்கால உரை:

நடுவுநிலை இல்லாமல் பிறரது நல்வழிப் பொருளை ஒருவன் விரும்பினால், அது அவன் கு டியைக் கெடுத்து அழிவையும் அப்போதே தரும்.

புதிய உரை:

மனக் கோட்டத்தால் அதிக ஆசைப்பட்டு பிற பொருளைப் பறிக்க நினைத்தால் உடல் குன்றி ஊனம் உண்டாக, அவன் பல துன்பங்களை அடைய நேரிடும்.

விளக்கம்:

மனத்தளவில் ஒருவன் குற்றம் நினைக்க, அது அவனது உடல் நலத்தைப் பாதித்து விடும். உடல்நலம் குன்றக் குன்ற, அவனது உடலில் குறைகள் மிகுதியாகி, ஊனத்தையும் ஈனத்தையும் உண்டாக்கி விடும்.

மனம் போல வாழ்வு என்பது, நல்ல சிந்தனை உடலுக்கு நலம், பலம், வளம் தரும். தீய சிந்தனைகள் மனச்சோர்வை உண்டு பண்ணி நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தி, புலன்களின் ஆற்றலை அழித்து, பல குறைகளைக் கொண்டு வந்து விடும். ஒழுக்கக் கேட்டினை மனம் உடல் என்று பிரிப்பதால், இரண்டு கேடுகளும்

உடலைக் கூடாக்கும். பாடுபடுத்தும். குற்றத்தின் சுற்றங்களான கேடுகள் பலவற்றைக் கூட்டி வந்து சேர்க்கும் என்று முதல் குறளில் வெஃகாமையின் வேகத்தை விவரித்துக் காட்டியிருக்கிறார்.

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் நடுவன்மை நாணு பவர்

பொருள் விளக்கம்:

படுபயன் = கொடுமைமிகு இழிவான செல்வத்தை
வெஃகி = அடைவதற்காக
செய்யார் = நேர்மையுடையவரான
நடுவன்மை = நீதி குணம் கொண்டவர்
நாணு = தன் அடக்கத்தால்
பழிபடுவ = பாவம் செய்கிற இழி மகன் போல
பவர் = பாவியாக மாட்டார்

சொல் விளக்கம்:

படு = கொடுமை, இழிவான; **பயன்** = செல்வம்; **பழி** = பாவம்
படுவ = இழிமகன், **படுவி** = இழிமகள்; **செய்யார்** = பகைவர்
செய்யர் = நேர்மையாளர்; **பவர்** = பாவி
நடுவன்மை = நீதி குணம்

முற்கால உரை:

நடுவுநிலைமை அன்மையை அஞ்சுபவர் பிறர் பொருளை வெளவினால் தமக்கு வரும் பயனை விரும்பி படுஞ் செயல்களைச் செய்யார்.

தற்கால உரை:

நடுவுநிலைமை தவறுவதற்கு அஞ்சி வெட்கப்படுபவர், தமக்கு உண்டாகும் பயனை விரும்பிப் பழி வந்தடையும் செயல்களைச் செய்ய மாட்டார்.

புதிய உரை:

கொடுமை தரும் இழிவான செல்வத்தை அடைவதற்காக, நேர்மையும் நீதி குணம் கொண்டவர்கள், தம் அடக்கத்தால் இழிமகன் போல காரியங்களைப் புரியமாட்டார்.

விளக்கம்:

செல்வம் என்பது கொடுமை புரியச் சொல்வது. இழிவாக நடந்து கொள்ள வைப்பது. நேர்மையை மாற்றி விடுவது. அடக்கத்தை விரட்டி ஆலாய் பறக்க வைப்பது. பழிபாவத்திற்கு அஞ்சாத இழிமகனாய் ஆக்கி விடுவது.

இப்படிப்பட்ட இன்னா செயல்களுக்கு ஆளாக்கி ஒருவரை மாற்றி விடுகிற மயக்கம் தரும் போதைக் குணங்களைப் பொருள்கள் உண்டாக்கி விடுவதால், அதை **படுபயன்** என்றார். அதைச் செய்பவரைப் **பழிபடுவ** என்றார். படுவி என்றால் இழிமகள். படுவ என்றால் இழிமகன். பவர் என்றால் பாவி.

ஆக வாழ்க்கையில் தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விடுகின்ற அவாவினை வெறுப்புற்று ஒதுக்குங்கள் என்று வெஃகுதலின் விளைவை 2வது குறளில் விரிவு படுத்திக் காட்டுகின்றார்.

173. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே மற்றின்பம் வேண்டு பவர்

பொருள் விளக்கம்:

மற்றின்பம் = தொடர்ந்து வருகிற பேரானந்தத்தை
வேண்டுபவர் = விரும்புகிறவர்
சிற்றின்பம் வெஃகி = காம இன்பத்திற்குப் பெரிதும் வெறிகொண்டு
அறனல்ல செய்யாரே = ஒழுக்க செயல்களில் பிறழ்ந்து செயல்பட மாட்டாகள்

சொல் விளக்கம்:

சிற்றி = சிறியதான, **சிற்றின்பம்** = புலன் இன்பம், காம இன்பம், **மற்றின்பம்** = பேரின்பம், பேரானந்தம் ; **அறன்** = ஒழுக்கம்.

முற்கால உரை:

அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தினைக் காதலிப்பவர், பிறர்பால் வெளவிய பொருளால் பெறுகிற நிலையற்ற இன்பத்தை விரும்பி, அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார்.

தற்கால உரை:

நிலையான இன்பத்தை விரும்பியிருப்பவர் சிற்றளவாக உண்டாகும் இன்பத்தை விரும்பி அறமல்லாச் செயல்களைச் செய்யமாட்டார்.

புதிய உரை:

கடுந்துன்பங்களைக் கொடுக்கும் காம இன்பத்தை அவாவி கீழானவற்றைச் செய்ய மாட்டார்கள் ஒழுக்கத்துடன் வாழ்கின்றவர்கள்.

விளக்கம்:

ஒழுக்கம் என்பது உடல் ஒழுக்கம் மன ஒழுக்கம் ஆகும். சிற்றின்பம் என்பது புலன்களின் புடைப்பால் பிறக்கிற சிறு சிறு இன்பங்கள். அதனை தகாத இச்சை, அடங்காத வேட்கை, இழிகாமம் என்றே நல்லோர்கள் எண்ணுகிறார்கள். காமம் கண்ணை மறைக்கும். கருத்தை அழிக்கும். நீதி நியாயத்தை நெறிக்கும். தன் நிலைமையை மறைக்கும். ஆகவேதான், அதனைச் சிற்றி இன்பம் என்றனர்.

மற்றைய இன்பம் என்பது பேரின்பம். பேரானந்தம். உடலில் நோய் மற்றும் குறை இல்லாதபோது பெறும் சந்தோஷம். மனத்தில் குறை கவலை இல்லாதபோது பெறும் மகிழ்ச்சி. உடலுக்கும் மனத்துக்கும் உதவுகிற ஆத்மாவின் ஆனந்தம். அதுவே பேரான்ந்தம். இது தீமை செய்யாத, தீமையை நினைக்காத தூயவர்களுக்கே கிடைக்கின்ற பெருவாழ்வு.

அப்படிப்பட்ட பெருவாழ்வைத் தொடர்ந்து, நிலைத்து வரும் ஆனந்தத்தை விரும்புபவர் ஒழுக்கத்திலிருந்து மாறமாட்டார். ஒழுக்க விதிகளை மீற மாட்டார். ஒழுக்கத்திற்கு மாறாக காரியம் செய்ய மாட்டார். ஒழுக்கமான வாழ்வே பேரின்பத்தை வழங்கும் என்று 3வது குறளில் கூறுகிறார் வள்ளுவர்.

174. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்

பொருள் விளக்கம்:

புலம்வென்ற = தமது ஐம்புலன்களையும் வென்ற
புன்மையில் = அற்பமோ, சிறுமைத் தனமோ எதுவும் இல்லாத
காட்சியவர் = அறிஞரானவர்
இலம் என்று = தமக்கு பேரின்பமானது கிடைக்கவில்லையே எனபதற்காக
வெஃகுதல் செய்யார் = எல்லை கடந்த எந்த ஆசையையும் மேற்கொள்ள மாட்டார்.

சொல் விளக்கம்:

புன்மை = அற்பம், சிறுமை, குற்றம்; **காட்சியவர்** = அறிஞர்
இலம் = வீடு, மோட்சம்

முற்கால உரை:

ஐம்புலன்களையும் வென்றவர். தாம் வறியோமென்று பிறர் பொருளை விரும்பார்.

தற்கால உரை:

ஐம்புலன்களையும் வெற்றி கொண்ட குற்றமற்றவர் தாம் வறியர் என்று பிறர் பொருளைக் கவர விரும்பார்.

புதிய உரை:

இந்திரியம் முதலிய ஐம்புலன்களை வென்ற அறிஞரும், தமக்கு வீட்டுப் பேறாகிய பேரின்பப் பேறு கிடைக்க வில்லையே என்று எல்லை கடந்த ஆசையால் இழிவான முயற்சி எதையும் மேற்கொள்ள மாட்டார்.

விளக்கம்:

சிற்றின்பம் என்பது இல்லறத்தார்க்கு இன்றியமையாதது தான். அந்த இன்பத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் உடலால் அழிந்து உள்ளத்தால் நைந்து, உணர்வால் நலிந்து, வாழ்வில் தொலைந்து போவது காலங்காலமாய் நடந்து வருவதுதான். சிற்றின்ப நெருப்புக்குப் புலன்கள் தாம் பேருதவி புரிந்து, புரட்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தி விடுகின்றன.

கண், காது, மூக்கு, வாய், மெய் என்ற ஐம்புலன்களும் புற உறுப்புக்களே. உள்ளே இருக்கும் மனத்தை அடக்கவும் வேண்டுமே! அதனால்தான் புலம் வென்ற குற்றமில்லா அறிஞர் என்று கூறி, அவரால் விருப்பம் என்பதை அடக்க முடியுமோ என்று கேட்கிறார். இலம் என்பது இல்லாமை. அதாவது பொருள் இல்லாமை என்பது. அதுபோல் ஆசை இல்லாமையும் இருக்க வேண்டும். இங்கே வீடு என்று ஓர் அர்த்தம். அதாவது மோட்சம். பேரின்ப நிலை. புலன்களை வென்றாலும் பூரிக்க வைக்கும் பேரின்பம் கிட்டவில்லையே என்ற ஆதங்கம் இருக்குமல்லவா? அந்த ஆசை ஏற்படக்கூடாது. அப்படி ஏற்படுகிறபோது, அறிஞரானவர் வெஃகுகின்ற வேலையில் ஆட்பட்டு விடக்கூடாது என்று 4வது குறளில் எச்சரிக்கிறார்.

175. அஃகிஅகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

பொருள் விளக்கம்:

அஃகி அகன்ற = நுண்மையும் அளவு கடந்தும் உள்ள
அறிவென்னாம் = அறிவானது எதற்கு?
யார் மாட்டும் = எவராக இருந்தாலும்
வெஃகி = அவரிடம் உள்ளதற்கு ஆசைப்பட்டு
வெறிய செயின் = பித்தரைப்போல் சினந்து தீமை செய்பவர்

சொல் விளக்கம்:

அஃகிய அறிவு = நுண்மதி; **வெறிய** = பித்தனைப் போல
செயிர் = சினம்

முற்கால உரை:

யாவரிடத்தும் பொருளை இச்சித்துத் தீமை செய்தால், மிகுந்த அறிவின் பயன் என்ன?

தற்கால உரை:

எவரிடத்தும் பழிக்கும் வெறிச் செயலை ஒருவர் செய்வாராயின், அவர்தம் நுணுகி விரிந்த அறிவால் என்ன பயன்?

புதிய உரை:

நுண்மதி கொண்ட பேரறிவாளரும், பிறருக்குரியனவற்றை விரும்புகிறபோது பித்தர்போல வெறிச் செயலில் ஈடுபடுவார் அப்போது அவர் பெற்ற அறிவு என்னாகும். எப்படி உதவும்?

விளக்கம்:

அவா அதிகமாகும்போது அறிவு முதலில் குறைந்து கொண்டே வந்து, பிறகு மறைந்து போகும். தீய நினைவுகள் தீயாய் வளர்ந்து தூயனவற்றையெல்லாம் எரித்து விடும். தீமையைத் தடுப்பதற்காகவே அறிவு இருக்கிறது.

விரிகிற அறிவு, எரிகிற ஆசைக்கு சாமரம் வீசினால் நிலைமை மேலும் மோசமாகி விடாதா? அதனால்தான் அநியாய ஆசையை அடக்கித்தடுக்காத அறிவு எதற்கு? அந்த அறிவால் பயன்தான் என்ன?

புறத்துறவு என்பது புலத் துறவு. அகத்துறவு என்பது மனத் துறவு. அதுதான் ஆசைத் துறவு. எத்தனைதான் அறிவு நிறைந்திருந்தாலும் ஆசையென்று வந்து விட்டால், மோசமான நினைவுகளே முந்திக் கொண்டு மனத்தை மூடிவிடும். ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள் ஆசை விட விட ஆனந்தமாமே என்றார்.

அதனால்தான் வெஃகாமை என்றார். விருப்பப் படாமையை வெறுப்பு என்றார். பிறருடமை விரும்பாத பேராண்மை என்று மனத்தை அடக்கும் மகிமையை 5 வது குறளில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

176. அருள்வெஂகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஂகி பொல்லாத சூழக் கெடும்

பொருள் விளக்கம்:

அருள்வெஂகி = கருணையுடன் நல்வினைகளை
ஆற்றின் நின்றான் = தொடர்ந்து செய்து வருகிற ஒருவரது
கண் = தேகமானது
பொருள் வெஂகி = பிறர் பொருளை ஒழுக்க மில்லாது பற்றிக் கொள்ள விரும்புகிற போது
பொல்லாத சூழக் = தீமை எல்லாம் ஏற்பட்டு
கெடும் = நாசமடையும்

சொல் விளக்கம்:

அருள் = கருணை, நல்வினை; **நின்றான்** = தொடர்ந்து நிற்பவன்
கண் = உடம்பு, சரீரம், அகக்கண், புறக்கண்
கெடும் = நாசமுறும். செயல்கெட்டு அழியும்.

முற்கால உரை:

அருளாகிய அறத்தை விரும்பி அதன் வழியிலே தங்கினவன் பொருளை விரும்பிக் குற்ற வழிகளை எண்ணக் கெடுவான்.

தற்கால உரை:

எவ்வுயிரிடத்தும் அருளை விரும்பி அறவழியில் நின்றவன், பிறர் பொருளை விரும்பித் தீய வழிகளை எண்ணினால் கெட்டுப்போவான்.

புதிய உரை:

கருணையுடன் பிறருக்கு நல்லுதவியைத் தொடர்ந்து செய்து வருகிற ஒருவன், பிறர் பொருளைக் கவர எண்ணும்போது அவனது உடல் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாகி செயல் கெட்டு நாசமடையும்.

விளக்கம்:

171 வது குறளில் அடுத்தவனது உடைமைக்கு அவாவுகிறவன் உடம்பு ஊனமடையும் என்றார். 176 வது குறளில் மீண்டும் அவாவின் கொடுமையை விளக்க, உடம்பு செயலழிந்து போகும், நாசமடையும், அழியும் என்று ஆணித்தரமாகவே கூறுகிறார்.

வெஂகுபவர் மனம் வேதனைக்குள்ளும் சோதனைக் குள்ளும் ஆட்படுத்த ஆட்படுத்த, உணவு உறக்கம் குறைய, உணர்வுகள் திணறிப்போக, அவரது இயல்பான செயல்பாடுகள் சீரழியும். உடலோ உருக்குலையும். உணர்ச்சிகள் அகத்தை அழிக்க முகமோ

பொலிவை இழக்க உடலோ வலிமையை இழக்க, வாழ்வோ வீறுகளையும் பேறுகளையும் இழக்க, உடல் அழியும். நாசமடையும். இதைவிட வேறு தண்டனை எதுவாக இருக்க முடியும்? உலகப் பேரின்ப வாழ்வுக்கு உடலே உதவுகிறது. உடல் அழிந்தால் உயர் வாழ்வும் கனவுதானே என்று 6 வது குறளில் அருமையாகப் பதிய வைக்கிறார்.

177. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின் மாண்டற் கரிதாம் பயன்

பொருள் விளக்கம்:

வேண்டற்க = விரும்பவே வேண்டாம்
வெஃகியாம் = பிறர் பொருளைக் கவர்ந்து வளர்க்கின்ற
ஆக்கம் = தேகம்
விளைவயின் = அந்தத் தேகத்திலே சம்பவிக்கின்ற கர்ப்பமும்
மாண்டற்கரிதாம் = மகிமைப்படுவதில்லை
பயன் = (அதனால் ஏற்படும் பயன்) பயமன்றி வேறில்லை

சொல் விளக்கம்:

ஆக்கம் = பொன், பொருள், பொன் என்றால் உடல்
விளை = விளைகின்ற, சம்பவிக்கின்ற
வயின் = வயிறு (வயிறு என்பதற்கு கர்ப்பப்பை)
பயன் = பயன், வினைப்பலன்

முற்கால உரை:

பிறர் பொருளை அனுபவிக்கும் பொழுது, அது பயன்படாமையால், அப்பொருளை விரும்பாது ஒழிக.

தற்கால உரை:

பிறர் பொருளைக் கவர்வதால் உண்டாகும் நலத்தை விரும்பாதொழிக. முடிவில், அதன் பயன் நன்மை இல்லாததாய் முடியும்.

புதிய உரை:

அடுத்தவர் உடமையைக் கவர்ந்து அனுபவிப்பதால், வளர்க்கப்படுகிற உடம்பில் உண்டாகும் கர்ப்பமும், மாட்சிமை இல்லாததால் மானமிழக்கும். முடிவில் விளைகின்ற பயன், பயமும் அச்சமும் கலந்த வாழ்வுதான்.

விளக்கம்:

பிறர் பொருளை வெளவுதல், பேராசையால்தான். பேராசைக்குக் காரணம் பிரியப்பட்ட வாழ்க்கையை அனுபவிக்கவே. அனுபவிப்பது என்பது உடலுக்குப் பிடித்த உணவு, உல்லாசஉடை, மாடமாளிகை. மரியாதைகளும், ஆனால் அத்தனையும் உடலுக்காகவே என்பதுதான் லட்சியம். அவ்வாறு அவர் பெறுகிற உல்லாச வாழ்க்கை, சல்லாப கேளிக்கை நடத்துகிற இல்லறம் இவற்றால் சம்பவிக்கும் கர்ப்பம், குழந்தையின் தோற்றம். அது பரம்பரையைப் பெருக்கிக் கொள்ள ஏற்படுவதாகும்.

அவ்வாறு உண்டாகின்ற கர்ப்பம் கூட சமுதாயத்தில் மதிக்கப்படாது போகும். மாட்சிமை அழியும். வரலாறு அந்த பரம்பரையைக் கேவலமாய் பேசும். இப்படிப் பெறுகிற வினைப்பயன், பயம் கலந்த யாக்கை. பரிதாபம் மிகுந்த வாழ்க்கை. பரிகாசத்திற்கு ஆளாகும் கீழ்மை. இப்படி வருவதெல்லாம், விளைவதெல்லாம் மரியாதையை மாய்த்து விடும். பரம்பரைப் புகழே பாழாகி விடும் என்று 7 வது குறளில் வெஃகலின் தண்டனையை விரிவாகக் கூறுகிறார் வள்ளுவர்.

178. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்

பொருள் விளக்கம்:

அஃகாமெய் = குறைவுபடாத நிறைவான உடலுடன் வாழ்கிற
செல்வத்திற்கு = வாழ்க்கைக்கு
யாதெனின் = எது காரணமாக அமையும் என்றால்
வெஃகாமை = பிறர் பொருளை இச்சிக்காத மெய்யும்
பிறன்கைபொருள் = பகைவனாக இருந்தாலும் அவனது ஒழுக்கமும்
ஒழுக்கம் சார்ந்த உடல் காக்கும் வாழ்க்கையை
வேண்டும் = விரும்பிப் பின்பற்றி வாழ வேண்டும்.

சொல் விளக்கம்:

செல்வம் = வாழ்க்கை, இன்பம்; **அஃகாமெய்** = நிறைவான உடல்
வெஃகாமெய் = இச்சைப்படாத உடம்பு; **பிறன்** = பகைவன்
கை = ஒழுக்கம்; **பொருள்** = உடல்

முற்கால உரை:

குறையாச் செல்வத்திற்குக் காரணம் பிறன் பொருளை விரும்பாமையாகும்.

தற்கால உரை:

ஒருவன் தான் கொண்டுள்ள செல்வம் குறையாது இருப்பதற்கு வழி யாது என்றால், பிறர் பொருளை விரும்பாது இருத்தலேயாம்.

புதிய உரை:

நிறைவான தேகத்துடனும், இன்பத்துடன் வாழ்கிற வாழ்க்கைக்குக் காரணம் பகைவனாக இருந்தாலும் அவன் வாழ்கிற ஒழுக்க வாழ்க்கையையும் காக்கிற தேகத்தின் முறைகளையும் பின்பற்றி வாழ விரும்புகிறபோதுதான்.

விளக்கம்:

பிறன் பொருளை விரும்பாத ஆண்மைக்கு உடல் வளம் வேண்டும். மன பலம் வேண்டும். இலட்சிய நோக்கு வேண்டும். ஒழுக்கத்தின் வாக்கு வேண்டும். அதனால்தான் வாழ்க்கை என்பதைச் செல்வம் என்றார். அதைக் குறையாத நோயணுகா நிறைவான மெய் என்பதால் அஃகாமை என்றார். அஃகாத உடம்பில் தான் வெஃகாத குணம் வளரும் என்றார்.

தான் நேசிப்பவர்களைப் பின்பற்றி வாழ்வது எல்லோருக்கும் எளிது. தான் விரும்பாத பிடித்தமில்லாத பிறனாகிய பகைவன் ஒருவன் வாழ்கிற வாழ்க்கை சிறந்ததாக இருந்தால் அந்த வாழ்க்கையையும் பின்பற்றி வாழ்வது நிறைவுக்கு மேலும் நிறைசேர்க்கும் என்கிறார். பகைவனை மன்னித்துவிடு என்பது ஒரு அறிவுரை. பகைவனை நேசி என்பது இன்னொரு அறிவுரை.

பகைவனும் பண்பான வாழ்க்கை வாழ்கிறான் என்கிறபோது, அதை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு வாழ்வது குறைவிலாத இன்பத்தைச் செல்வத்தைக் கொடுக்கும் என்று புதிய முறையை 8வது குறளில் கூறுகிறார்.

179. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.

பொருள் விளக்கம்:

அறன் அறிந்து = தனது தகுதி நிறைந்த ஒழுக்கத்தினால்
வெஃகா = பிறர் உடமைகளை பெற வெறுக்கிற
அறிவுடையார் = சிறந்த சான்றோரின்
திறன் அறிந்து = பெருமைமிகு வரலாற்றை அறிந்து
ஆங்கே திருசேரும் = அவரிடம் மேன்மைகள் எல்லாம் போய்ச்சேரும்

சொல் விளக்கம்:

அறன் = ஒழுக்கம், ஞானம், தகுதி; **அறிவுடையார்** = சான்றோர்
திறன் = வரலாறு, குணம், வழி
திரு = அழகு, செல்வம், மேன்மை, தெய்வத்தன்மை

முற்கால உரை:

பிறன் பொருளை இச்சிக்காத அறிவுடையாரை இலக்குமி சேருவாள்.

தற்கால உரை:

அறநெறி அறிந்து பிறர் உடமையை விரும்பாத அறிவாளரிடம் அவர் தகுதியை அறிந்து அவரிடத்தில் செல்வம் தேடிச் சேரும்

புதிய உரை:

தகுதி நிறைந்த ஒழுக்கத்தினால், பிறர் உடமைகைகளைக் கவர்வதை வெறுக்கின்ற சான்றோரின் வரலாற்றைத் தெரிந்து கொண்டு, அழகும் செல்வமும் மேன்மையும் அவரிடம் தானாகவே சென்றடையும்.

விளக்கம்:

பிறர் பொருளை, உடமைகளை இச்சிக்காத குணமும், ஞானமும், ஒழுக்கமான வாழ்க்கையையும் ஒருவர் பெற முடியாத பேறாகும். அப்படி வாழ்கிறவருக்கு ஒரு வரலாறே அமைந்து விடுகிறது. வரலாறு என்பது அவர் சென்ற நாட்களில் செய்து வந்த, காத்து வந்த ஒழுக்கமான வாழ்க்கை. இன்றைய நாட்களில் அவர் தொடர்ந்து பின்பற்றுகிற தூய பணிகள். அதற்காக அவர் கட்டிக் காக்கும் கட்டான தேகம். குறைகளற்ற மனம். இவ்வாறு வரலாறு படைக்கின்றன. வள்ளல் தன்மையில் வாழ்வாங்கு வாழ்கிற வாழ்க்கையில் எல்லாச் சிறப்புகளும் சென்று சேர்வதுதானே இயற்கை முறை. ஆமாம், அவரது உடலுக்கு அழுகு சேர்கிறது. இல்லறத்திற்கு செல்வம் சேர்கிறது. வாழ்க்கைக்கு மேன்மை சேர்கிறது. தினம் அவரது கடமைகளில் தெய்வத் தன்மை மிளிர்கிறது. திவ்யமான வாழ்க்கையை வெஃகா குணம் வழங்கிக் கௌரவிக்கிறது என்று 9 ஆம் குறளில் வள்ளுவர் பண்பாடிச் செல்கிறார்.

180. இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும் வேண்டாமை என்னும் செருக்கு

பொருள் விளக்கம்:

எண்ணாது = சிந்திக்காது (எதற்கும்) துணிந்து
வெஃகின் = பிறர் பொருளை அவாவி, கவர்ந்தால்
இறலீனும் = அது அவரை அழித்து, இறுதிக்கு உள்ளாக்கிவிடும்
வேண்டாமை = பிறர் பொருளைக் கண்டு வெறுக்கிற
என்னும் செருக்கு = களிப்பு மிக்க ஆண்மையானது
விறலீனும் = வீரம் மிக்க வெற்றியைக் கொடுக்கும்

சொல் விளக்கம்:

இறல் = அழிவு, இறுதி நரம்பு முறிதல், விசை இறுகுதல்
விறல் = வலிமை, பெருமை, வீரம், வெற்றி
வேண்டாமை = வெறுப்பு; **எண்ணாது** = துணிந்து யோசிக்காது
செருக்கு = ஆண்மை, களிப்பு

முற்கால உரை:

ஒருவன் பிறன் பொருளை இச்சிப்பதால் அழிவும் இச்சியாமையால் வெற்றியும் வரும்.

தற்கால உரை:

பின் வருவதை எண்ணாமல், பிறர் பொருளை விரும்பினால் அழிவும், அப் பொருளை விரும்பாமை எனும் பெருமிதம், வெற்றியையும் உண்டாக்கும்.

புதிய உரை:

எதற்கும் துணிந்து பிறர் பொருளைக் கவர்ந்தால் எண்ணற்ற நோய்கள் வந்து அழித்து விடும். பிறர் பொருளை விரும்பாமல் வெறுக்கும் ஆண்மையானது பெருமை மிகுந்த வெற்றியை அளித்து விடும்.

விளக்கம்:

பிறர் பொருளை அவாவுகிற அறிவிலி எதற்கும் துணிந்தவன். பின் விளைவுகளைப் பற்றியே யோசிக்காதவன். தீய நினைவுகளால் திடீரென தாக்கப் படுவன நரம்புகளும் தசைகளும்தான்.

அதனால்தான் தீமை செயலான திருட்டில் வாழ்பவனுக்கு நரம்புகள் தளர்ந்து முறிந்து போகும். விசையிழந்து தசைகள் இற்றுப்போய் வீழ்த்தும் என்று குறிக்கவே **இறல்** என்ற சொல்லைப் போட்டிருக்கிறார். பிறர் பொருளை வெறுப்பது என்கிற வெஃகாமையை செருக்கு என்றார். செருக்கு என்றால் கர்வம் அல்ல. அகங்காரம் அல்ல. ஆண்மை. குறைகளை விரட்டிய களிப்பு. நிறைவாழ்வு தருகிற பெருமிதம். அதனால்தான் விறல் என்றால் வெற்றி மட்டுமல்ல. அது தன்னை வென்ற வலிமை. புலன்களை புறம் தள்ளிய பெருமை. பலஹீனத்தை வென்ற வீரம். பிறப்பை பெருமைக்கு உள்ளாக்கிய வெற்றி. ஆகவே விரும்பாமை வேண்டாமை என்ற வெஃகாமையின் வெற்றியைச் கடைசிக் குறளில் பரணியாகப் பாடி முடிக்கிறார்.

19. புறங்கூறாமை

மாசு நிறைந்தது மனம். அந்த மாசுகள் ஆறு என்பர். காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம் என்பார்கள். இந்த அழுக்குகள் ஆறும் அதிகமாக ஆக, மனிதன் தன்னையே மறக்கிறான். தன் தகுதியை இழக்கிறான். அறிவிருந்தும் தவிக்கிறான்.

சித்திழந்து, பித்தனாக மாறுகிறான். அதைத்தான் 17 வது அதிகாரமாக **அழுக்காறாமை** என்று பாடி வைத்தார். அழுக்குப் பொறாமையால் புழுங்கிச் சாகிறபோது, அடுத்தவர்களுக்கு அல்லல்களை உண்டு பண்ண ஆயத்தமாகி விடுகிறான் அந்த ம்னிதன்.

பொறாமையில் எரிந்து கொண்டிருப்பவன், எதைப் பார்த்தாலும் எதிர்த்து விட வேண்டுமென்று அவாவி, மேலும் மேலும் தன்னை எரித்துக் கொள்கிறான். தனக்குள்ளே மரித்துக் கொள்கிறான்.

அழுக்காறாமையின் ஆவேசமாக, அடுத்தவர்களின் உடைமையை அபகரிக்க வேண்டும். அவதிக்குள்ளாக்க வேண்டும் என்னும் ஆசையின் ஆவேசம்தான், வெஃகுதலாக வெளிப்படுகிறது என்பதால் 18 வது அதிகாரமாக **வெஃகாமை** என்று வைத்துப் பாடினார்.

செயல் மூலமாக அதாவது திருட்டின் மூலமாக இருட்டான மனத்துக்கு இன்பம் பெற முயன்றும், எண்ணியதும், எதிர்மாறாகப் பண்ணியதும் புண்ணியமில்லையே என்று புழுங்கியதின் விளைவே மனிதனுக்கு ஆயுதமாக விளங்கும் நாக்கைப் பயன்படுத்திக் கொண்டனர்.

அந்த நாக்கின் நச்சுச் செயல்தான அவதூறு பரப்புவது. யாரோ தெரியாதவன் ஒருவன் மேல்யாரும் பகை கொண்டு விடுவதில்லை. நேற்றைய நண்பன் இன்றைய எதிரி. இன்றைய நண்பன் நாளைய பகை என்பது போல அவனைச் சுற்றியிருந்த நட்பே, உறவே, சுற்றமே இன்று புறமாகிவிட்டது. அவர்கள் நம்பிக்கையுடன் கூறியிருந்த ரகசியங்களை எல்லாம் வெளிப்படுத்தி அவமானப்படுத்தி மகிழலாம் என்ற மனித குணத்தின் மகா வெறியைக் காட்டத்தான் 19 ஆம் அதிகாரமாக புறங்கூறாமை என்று வைத்தார். உற்றவராயிருந்தவர்கள் உரைத்த இரகசியங்களை, பொறாமையால் வெளிப்படுத்துதல் பாவம் என்று இதில் கூறுகின்றார்.

181. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது

பொருள் விளக்கம்:

அறங்கூறான் = ஒழுக்கமாகவும் பேசமாட்டான்
அல்லசெயினும் = அல்லல் தரும் செயல்களையே செய்வான்
ஒருவன் = பொறாமைக்கும், கவரும் கொடுமைக்கும் ஆளான அந்த மனிதன்
புறங்கூறான் = பகைவனது இரகசியங்களை வெளிப்படுத்த மாட்டான்
என்றல் இனிது = என்பதே அவனுக்கும் நன்மை அனைவருக்கும் நன்மையாம்.

சொல் விளக்கம்:

இனிது = நன்மை, இன்பம்; **அறம்** = ஒழுக்கம்

முற்கால உரை:

அறனென்று சொல்லுவதும் செய்யாது பாவங்களை ஒருவன் செய்யுமாயின் பிறனைப் புறங்கூறான் என்று உலகத்தார் சொல்லப்படுவது நன்று.

தற்கால உரை:

ஒருவன் அறங்களைக் கூறாதவனாய் மறங்களைச் செய்யினும் புறங்கூறான் என்று சொல்லப்படுதல் இன்பம் பயக்கும்.

புதிய உரை:

ஒழுக்கமில்லாமல் பேசி, இழுக்கமான காரியங்களையே செய்பவனாக இருந்தாலும், பொறாமைக்கு ஆளாகிப் போனாலும், தன்னை நம்பிப் பகைவன் கூறிய இரகசியங்களை வெளிப்படுத்தவே மாட்டான். ஏனெனில், அது அவனுக்கு மட்டுமன்று; அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதால்.

விளக்கம்:

உலகத்திலேயே கொடுமையான பாவம் நம்பிக்கை மோசம்தான். நம்பிக்கை மோசம், உண்ணும் உணவில் நஞ்சிட்டு மாய்ப்பது போன்ற நட்போடு இருந்த காலத்தில் மனத்தில் உள்ளதையெல்லாம் மறைத்துக் கொள்ளாமல் பேசியது நம்பிக்கையால்தான்.

தன் வாழ்க்கைக்காக தீயவை பேசினாலும், தில்லுமுல்லுகள் செய்தாலும், அது அவனை மட்டுமே பாதிக்கும். ஆனால் தூற்றும் வேலையையே வீரம் என்று நினைத்து, சோரம் போகும் அவனது

செயல், அவளையே முதலில் இழிவு படுத்தி அழிவுக்கு ஆளாக்கிவிடும். பிறகுதான் மற்றவர்களைப் பாதிக்கும். வேதிக்கும்.

ஆற்றும் அல்லல் செயல்களில் தூற்றும் தொழிலே, தொல்லைகளை விளைவிக்கும் என்பதால், இனிதாக நன்மை பயப்பது, நம்பிக்கையுடன் கூறிய மறைகளை குறையாக்கித் தூற்றுதல் பாதகச் செயல் என்று இந்தக் குறளில் தெளிவாக்கிக் கூறுகிறார்.

182. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே புறனழீஇப் பொய்த்து நகை

பொருள் விளக்கம்:

புறம் + அழீ + இ = பழிச்சொல்லால் ஆச்சரியமான முறையில் அழித்திட

பொய்த்து = வஞ்சகமனமான வக்ரத்துடன்

நகை = விளையாட்டாகக் கருதிச் செய்கிற காரியமானது

அறனழீஇ = அறத்தை அழிக்கும் செயலைவிட (அநியாயமாக)

அல்லவை செய்தலின் = பாவச் செயல் செய்வதைவிட

தீதே = கொலைக்கும் மேலான கொடுமையாகும்.

சொல் விளக்கம்:

பொய் = வக்கிரம், வஞ்சகம்; **நகை** = விளையாட்டு

புறன் = பழிச்சொல், **இ** = ஆச்சரியம்; **தீது** = மரணம், கொடுமை, பாபச் செயல்

முற்கால உரை:

ஒருவரைக் காணாதவிடத்து இகழ்ந்து, கண்டவிடத்துப் புகழ்ந்து பேசுதல் பாவத்தைச் செய்தலினும் கொடியதாகும்.

தற்கால உரை:

புறத்தில் இழித்துக் கூறி, அவன் முன்னே பொய்த்து நகையாடல், அறங்களை அழித்து மறங்களைச் செய்தலினும் தீதே.

புதிய உரை:

பழிச் சொல்லால் தூற்றுவதை வஞ்சக நெஞ்சுடன் வியக்கத்தக்க முறையில் செய்வதானது, அநியாயமாக அறங்களை அழித்துச் செய்யும் பாவங்கள் மற்றும் கொலை செய்வதைவிட மேலான கொடுமையான பாவமாகும்.

விளக்கம்:

நாவால் தூற்றுவது, செயலால் நடிப்பது, சிரிப்பால் ஏமாற்றுவது, தந்திரத்தால் மாற்றுவது என்பது மனித இனத்திற்குக் கைவந்த கலையாகும். அறியாமல் செய்கிற சிறு பிழைபோல ஆச்சரியப்படும் வகையில் பெரிய பாவங்களைச் செய்வது மனிதர்க்கு மனிதர் மாறுபட்டுத்தான் இருக்கிறது. அதற்கு அடிப்படையானது வஞ்சக மனம் உண்டாக்குகிற வக்ரமான குணம்.

வஞ்சகமும் வக்ரமும் சேர்ந்து கொண்டு விளையாட்டாகக் கருதி, பிறர்மேல் பழி தூற்றுகிறபோது, அதனால் பாதிக்கப்படுகிறவர் மரணத்தால் துடிப்பது போன்ற வாழ்நிலை உருவாகிவிடுகிறது. இந்தச் சூழ்நிலையானது அறங்கள் அல்லாத செயல்களைவிட ஆழமாகக் காயப்படுத்தி விடுகின்றன. ம+ரணம்=காலத்தின் காயம். தூற்றலுக்கு ஆளாகிறவர்கள் நெஞ்சம். தீப்புண்ணைவிட, நாப்புண்ணால் நொறுங்கிப் போவதால் அதைக் கொடுமையான கொலை, பாதகச் செயல் என்று 2வது குறளில் புறங் கூறுவதின் பெருந்தீங்கை புலப்படுத்துகிறார்.

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும்.

பொருள் விளக்கம்:

புறங்கூறிப் = பிறரது இரகசியங்களை வெளிப்படுத்தி
பொய்த்து = வஞ்சகம் மிகுந்த வக்ரமான மனத்துடன்
உயிர் வாழ்தலிற் = அ (மிருகங்களைப் போல) உடல்காத்து சீவிப்பது
அறங்கூறும் = ஒழுக்கத்தைக் காக்கின்ற ; ஆக்கம் = சட்டமானது
சாதல் தரும் = செத்து ஒழிவதைத் தருகின்ற தண்டனையாக அமைகின்றது.

சொல் விளக்கம்:

புறம் = பிறரது இரகசியங்கள்; **அறம்** = ஒழுக்கம்; **ஆக்கம்** = சட்டம்

முற்கால உரை:

ஒருவன் பிறனை முன்புகழ்ந்தும் பின் இகழ்ந்தும் பேசி உயிர் வாழ்தலினும் இறத்தலே நலம்.

தற்கால உரை:

புறத்தே பழித்துக் கூறியும், அவன் முன்னே புகழ்ந்து கூறியும் உயிர் வாழ்தலினும் இறத்தல் அறநூல் சொல்லும் நன்மை தரும்.

புதிய உரை:

பிறது இரகசியங்களை வெளிப்படப் பேசி, நம்பிக்கை துரோகியாய், மிருகங்களைப் போல் வாழ்பவனுக்கு அறமானது சட்டமாக மாறி அவனுக்கு மரண தண்டனையே தந்து விடும்.

விளக்கம்:

உயிர் வாழ்தல் என்கிறார் வள்ளுவர். எப்படியாகிலும் உயிர் வாழ்வது மிருகங்களைப் போல, விருப்பம் போல சீவித்தல். எதையாவது உண்பது, எந்த நேரமென்றும் பார்க்காமல் எங்கேயும் கிடந்து உறங்கி, கீழ்த்தரமாக வாழும் மிருக வாழ்க்கையைக் குறித்துக் காட்டவே உயிர் வாழ்தல் என்றார்.

வஞ்சக மனம், அதனால் உண்டாகும் வக்ரமம் நிறைந்த குணம், அதனால் தீயாக சொற்களைப் பேசி, பிறரது வாழ்வைப் பந்தாட முயல்கிற ஒருவனுக்கு அறம் தருமமாக இல்லாமல் சட்டமாக மாறி, அவனது வாழ்க்கையையே அழித்து விடும் என்பதால்தான், அறங்கூறும் ஆக்கம் சாதல் தரும் என்றார். கொடிய செயலுக்கு வரும் தண்டனையும் கொடுமையாகவே அமையும் என்பதைத்தான் 3 வது குறளில் கூறுகின்றார்.

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க முன்னின்று பின்னோக்காச் சொல்

பொருள் விளக்கம்:

கண் நின்று = எப்பொழுதும் அறிவுள்ளவராக இருந்தாலும்
கண் அற = ஒருவரது பெருமையை அழிக்கும் வண்ணம்
சொல்லினும் = மறைகளைக் கூறினாலும்
முன்னின்று = பேசப்படுபவரது பழைமையை (நட்பை) உணர்ந்து
பின்நோக்கா = எதிர்வரும் காலத்தில் அவரைகாக்க முடியாதவாறு
சொல் சொல்லற்க = சாபமிடுவதுபோல இழிச் சொற்களைச் சொல்லக்கூடாது.

சொல் விளக்கம்:

கண் = அறிவு, பெருமை; **நின்று** = எப்பொழுதும்; **சொல்** = சாபம்
முன் = பழமை, முதல்; **நோக்கு** = காத்தல்

முற்கால உரை:

ஒருவரை முன் இகழினும், பின் இகாழதிருக்கக் கடவன்.

தற்கால உரை:

ஒருவன் கண்முன் நின்று, கண்ணோட்டம் நீங்க, அவனது குறைகளைக் கூறினும், முன் இல்லாமல் பின்னோக்காமைக்கு ஏதுவாகிய சொற்களைச் சொல்லற்க.

புதிய உரை:

ஒருவரது பெருமை அழிப்பது போல அவர் முந்தைய மறைகளைப் பேசினாலும், அவரைச் சபிப்பது போல, சாபச் சொற்களைப் பேசாமல் இருப்பது நல்லது.

விளக்கம்:

ஒருவரது குறைகளை, வெளியிட இயலாத மறைகளை, அறிவில்லாமல் பேசுகிறவர் பொல்லாதவர்தான். தான் முன்னே பழகி வந்த பழைமை நாட்களையும் மறந்து, அவர் எதிர்காலத்தில் பெரும் சோதனைகளை, வேதனைகளை அனுபவிப்பது போல, சாபமிடுவது போன்ற தீச்சொற்களைப் பேசக்கூடாது.

வஞ்சக நெஞ்சுக்குள்ளே நஞ்சு தான் நிறைந்திருக்கும். வெளியே வரும் சொற்களிலும் தீப்பிழம்புதான் எரிந்து கொண்டிருக்கும். பிறர் பெருமையை தான் சொல்லப் போகும் சொற்கள் எரிக்கும். அழிக்கும். எதிர்காலத்தையே ஒழிக்கும் என்று தெரிந்த பிறகும் தான் பழகியிருந்த அந்த நாட்களையும் மறந்து, சபித்துப் பேசுவது சண்டாள குணமாகும். அப்படிப்பட்ட பேச்சானது புறங்கூறும் புன்மை மதியினும், சபிப்பது போல மற்றவைகளை வெளிப்படுத்துவது பெருங் கொடிய சதியாகும் என்று 4 வது குறளில் புறம்பேசும் பண்பின் பொல்லாங்கை சாடுகிறார் வள்ளுவர்.

185. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும் புன்மையாற் காணப் படும்.

பொருள் விளக்கம்:

அறம் சொல்லும் = ஒழுக்கப் பண்பு பற்றி பேசுகிற
நெஞ்சத்தான் = நெஞ்சம் மட்டும் உடையவன்
அன்மை = பேச்சினாலே விளைகின்ற தீமையும் அல்லாமையும்
புறஞ்சொல்லும் = அவன் பிறரது மறைகளை பெரிதுபடுத்திப் பேசுகின்றபோதே
புன்மையால் = அற்பத்தனமாக அந்த இழிவான தன்மையின் கொடுமையானது
காணப்படும் = மற்றவர்களால் எளிதாகத் தெரிந்து கொள்ளப்படும்

சொல் விளக்கம்:

அன்மை = தீமை, அல்லாமை; **புண்மை** = அற்பம், குற்றம், இழிவு, ஈனம்; **படும்** = கொடுமை, பேரறிவு

முற்கால உரை:

தருமம் நன்றென்பவன் மனதிலே தருமம் இல்லாமையால், புறங்கூறுதலால் அவன் தன்மை அறியப்படும்.

தற்கால உரை:

ஒருவனின் புறங்கூறும் இழிந்த பண்பிலிருந்து அவன் அறச் சிந்தனை உடையவன் அல்லன் என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய உரை:

அறநெறி பேசுகிறவன் சிந்தையில் விளைகின்ற தீமைப் பண்புகள் எல்லாம், அவன் புறங்கூறிப் பேசுகிற இழிவான தன்மையால், கொடுமைகள் விளைவதை எல்லோராலும் எளிதாக அறியப்படும்.

விளக்கம்:

உடலின் புலன்கள் உணர்கின்றன. உற்ற உணர்வுகள் உள்ளுக்குள்ளே பரவி, அறிவாகின்றன. அறிவுச் செறிவுகள் அகத்தை பதமாக நிரப்பி விடுகின்றன. நிரம்பிய அகம், எப்படிப்பட்ட நினைவுகளில் நின்று துலங்குகிறது என்பது, ஒருவனது பேச்சால் மட்டும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. அவன் செய்கின்ற செயல்களில் அவனை அறியாமல் வெளிப்பட்டு, அவனது உண்மைத் தன்மையை, உலகுக்குக் காட்டி விடுகின்றன.

அன்மை என்றால் தீமை. சொல்லால் ஏற்படுகிற தீமைப் பயன்கள் புன்மை என்றால் இழிவு, ஈனம் அவனது செயலில் தெரிகின்ற இழிவும், ஈனமும், குற்றமும், அவனை அறியாமல் வெளிப்படுவதைத்தான் வள்ளுவர் புன்மையாற் காணப்படும் என்றார்.

186. பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும் திறன் தெரிந்து கூறப்படும்

பொருள் விளக்கம்:

பிறன்பழி = மற்றவர்மேல் குற்றம் சுமத்தி
கூறுவான் = பெரிதாகப் பேசுபவன்
தன்பழி = தன்மேலும் (தான் செய்த) குற்றம், தீவினை போன்றவை

உள்ளும் = உள்ளதை

திறன் தெரிந்து = மற்றவர்களும் அவனது பொல்லாத வரலாற்றை ஆராய்ந்து தெரிந்து கொண்டு

கூறப்படும் = பேசுவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சொல் விளக்கம்:

பழி = குற்றம், பொல்லாங்கு, அலர், இகழ், பழிதூற்றல்

திறன் = வரலாறு, காரணம், குணம், கூறுபாடு

தெரிந்து = ஆராய்ந்து

முற்கால உரை:

பிறன் ஒருவன் பழியை அவன் புறத்துக் கூறுபவன், தன் பழி பலவற்றுள்ளும் உளையும் திற முடையவற்றைத் தெரிந்து அவனாற் கூறப்படும்.

தற்கால உரை:

ஒருவன் பிறர் மீது வீண்பழி ஒன்றினைக் கூறினால், அவன் மீது பல பேரும் பழிகளை வெளிப்படையாகவே கூறுவார்கள்.

புதிய உரை:

மற்றவர் மேல் பெரிதாகப் பழி பேசி வருபவனுடைய வாழ்க்கையும் ஆராயப்பட்டு, அவனது வரலாறோடு கூடிய குற்றங்களை வெளிப்படுத்திவிடும் என்பதை உணர வேண்டும்.

விளக்கம்:

குற்றம் செய்பவன் தான் மனிதன். (Man is err) என்பது பழமொழி. தானே விரும்பிச் செய்தல்; தன்மேல் குற்றம் சுமத்தப்படுதல்; சந்தரப்பச் சூழ்நிலையால் தவறுகளைச் செய்து விடுதல், என்பது போல ஒவ்வொரு மனிதனும் தவறுகள் இழைப்பவனாகவே இருக்கிறான்.

ஒருவனை நோக்கி, தன் சுட்டு விரலை நீட்டி, அவனது குற்றங்களைச் சுட்டிக் காட்டுகிறபோது, மற்ற மூன்று விரல்களும் தன்னை நோக்கிக் குறித்துக் காட்டுகின்றன.

இதையே கண்ணாடிக் கூண்டிற்குள் இருந்து கொண்டு மற்றவர்கள் மேல் கல்லெறியக் கூடாது என்றும் சொல்வார்கள். வள்ளுவர் இங்கே மக்களை எச்சரிக்க விரும்புவதெல்லாம் தவறுகளைச் சுட்டிக் காட்டுவது சரியானாலும், பழி தூற்றாதே! பொல்லாங்கு கூறாதே! அலர் தூற்றாதே, இகழாதே என்பதாகவே, எச்சரிக்கிறார். புறங்கூறல் பொல்லாதது என்று அறிவுறுத்த வருகிறார். உன் கண்ணில் உள்ள உத்தரத்தை நீக்காமல், பிறர்

கண்ணில் உள்ள பீழையை விமர்சிக்காதே என்னும் உயர்ந்த கருத்தை 6 வது குறளில் கூறுகிறார்.

187. பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் நகச்சொல்லி நட்பாடல் தேற்றா தவர்.

பொருள் விளக்கம்:

நகச்சொல்லி = தனது உறவினரான ஒருவர் மகிழும்படி பேசி
நட்பாடல் = நெருங்கி நட்பாக இருப்பதை
தேற்றா = சகித்துக் கொள்ள முடியாத
தவர் =அவருக்கு வேண்டியவர்களே
பகச்சொல்லி = அவரிடமிருந்து மற்றவரது நட்பை பிரிந்து போகும்படி
கேளிர்ப் பிரிப்பர் = அவரது சுற்றத்தாரே பிரித்து விடுவர்

சொல் விளக்கம்:

பகச்சொல்லி = பிரிக்கும் படியான கருத்துக்களைக் கூறி
கேளிர் = உறவினர்; **நகச்சொல்லி** = மகிழும்படியாகப் பேசி
தவர் = தமர். மிகவும் வேண்டியவர்

முற்கால உரை:

மகிழும்படி சொல்லி, சிநேகம் செய்தலை அறியாதவர் புறங்கூறி உறவினரைப் பிரிப்பர்.

தற்கால உரை:

நண்பர்களோடு கொள்ளும் நட்புறவினால் ஏற்படும் நன்மைகளை அறியாதவர்கள் தாம், நண்பர்களைப் பற்றிப் புறங்கூறிப் பின்னர், அவர்களை விட்டுப் பிரிந்துபோய் விடுவார்கள்.

புதிய உரை:

ஒருவர் வாழ்க்கையில் உயர்கிறபோது, அதை மகிழ்ச்சியுடன் பாராட்டிப் பேச மனமில்லாது, பொறாமை கொண்ட காரணத்தால், அவரது உறவினர்களே பலவாறாகக் கூறி அவரையே பிரித்து விடுவார்கள். (ஒதுக்கி விடுவார்கள். ஒதுங்கியும் போவார்கள்)

விளக்கம்:

ஒருவர் மேல் பொல்லாப்புடன் புறங்கூறி மகிழ்பவர் ஒருவகை. பிறரது மனத்தைப் புண்படுத்தி, பேதலிக்கச் செய்து

மகிழ்பவர் மற்றொரு வகை. தங்களது நாவன்மையால் புறங்கூறுவதுடன் அவரைப் பிரித்தாளுகிற சூழ்ச்சி செய்பவர் இன்னொரு வகை.

ஒருவர் தன் வாழ்க்கையில் தனது முயற்சியால் முன்னேறுவதைப் பொறுக்காதவர் யாராக இருப்பார்கள்? அந்நியர்கள் அல்லர். அவர்களொடு ஒன்றி உறவாடுகிற உற்றார்கள் தான்.

அவரை மிகவும் இழிவுபடுத்தி கேளிர் பிரிப்பர் என்றார் வள்ளுவர். உற்றார்கள், சொந்தக்காரர்கள் தாம், அவரோடு கண்டதையும் பேசி, சண்டை போட்டுப் பிரித்து விடுவார்கள்.

பிறர் நன்றாக வாழ்வதைப் பொறுக்காதது மனித சாதி. ஆகவே, நகச் சொல்லி, புகழ்ந்து பேசி, பாராட்டிட முடியாதவரை தேற்றாதவர் என்றார். தேற்றா என்றால், மனத்தை சமாதானப்படுத்திக் கொள்ள முடியாதவர்கள். தவர் என்றால் மிகவும் வேண்டிய உறவினர்கள்.

ஆக, உறவினர்கள்தாம், அந்த உயர்பவரின் உறவை பிரித்துத் தனிமைப்படுத்துவர் என்பதாக **கேளிர்ப் பிரிப்பர்** என்று ஏழாவது குறளில் குற்றம் பார்க்கும் சுற்றத்தின் குணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் என்னைகொல் ஏதிலார் மாட்டு

பொருள் விளக்கம்:

துன்னியார் = அடுத்தவர்கள் அல்லது நண்பர்களின்
குற்றமும் = பழிபாவங்களையும் (பலரும் அறிய)
தூற்றும் = புறங்கூறித் தூற்றுகிற
மரபினார் = சுற்றத்தார்கள்
ஏதிலார் = தங்களது பகைவர்கள் பற்றி
என்னைகொல் = எப்படித் தூற்றுவார்கள்
மாட்டு = அவர்களை மாள்விக்கிற அளவுக்குச் செய்வார்கள்.

சொல் விளக்கம்:

துன்னியார் = நண்பர், அடுத்தவர்; **மரபினார்** = சுற்றத்தார்
ஏதிலார் = பகைவர், அன்னியர்; **மாட்டுதல்** = மாள்வித்தல்

முற்கால உரை:

தமது உறவினர் குற்றத்தையும் தூற்றுவோர், அயலார் குற்றத்தை எப்படித் தூற்றுவார்கள்?

தற்கால உரை:

நெருங்கிய நண்பர்கள் பற்றியே தூற்றித் திரியும் இயல்பினை உடையவர்கள். சிறிது கூடத் தொடர்பில்லாத பிறரைப் பற்றி மிகமிக இழிவாகப் புறங்கூறிப் பேச, ஒருபோதும் தயங்க மாட்டார்கள்.

புதிய உரை:

அடுத்தவர்களைப் பற்றி அநியாயமாகப் புறம் பேசுகிற சுற்றத்தார்கள், அவர்களது எதிரிகளைப் பற்றி இகழ்ந்து பேசியே அவர்களை மாள்விக்கும் அளவுக்கு புறம் பேசி இகழ்ந்து விடுவார்கள்.

விளக்கம்:

ஏழாவது குறளில், தமது சொந்தக்காரரின் பெருமையைத் தாங்கிக் கொள்ள முடியாத புறங்கூறிகள், அவர்களைப் பொல்லாதது பேசி பிரித்து விடுவார்கள் என்று கூறினார்.

எரிகின்ற தீக்கு எல்லாப் பொருளும் ஒன்று தான் என்பது போல, பொறாமை பிடித்து புறங்கூறுவார்க்கெல்லாம் தங்களுக்கு அடுத்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. தங்கள் எதிரிகளாகவே எண்ணிக் கொள்வார்கள்.

அவர்களுக்கு, எதிரிகளைப் பற்றி அலர் தூற்ற வேண்டும் என்றால், அவர்களுக்கு அதுவே பேரின்பமாகத் தானே இருக்கும்? கெடுப்பவர்களுக்கு அடுத்துள்ள அயலார்களானாலும், எதிர்த்து நிற்கிற பகைவர்கள் ஆனாலும் சரி, அனைவரும் ஒன்றுதான். புறம் பேசும் நாக்குக்கு நீக்கு போக்கு கிடையாது தானே!

தூற்றும் மரபினோர் என்றார் வள்ளுவர். எங்கேயோயிருந்து வருபவர்கள் அல்லர் புறங்கூறும் மக்கள். அவர்கள் சொந்தக்காரர்கள், சுற்றத்தார்கள் தாம் என்பதை இந்தக் குறளில் சுட்டிக் காட்டுகிறார். ஏதிலார் என்றால் அன்னியர் மட்டுமல்ல. அவர்களுக்கு ஆகாதவர்கள். ஆமாம், பகைவர்கள். பழி தூற்றாமல் விட்டு விடுவார்களா? புறங் கூறுபவர்களின் பொல்லாத குணத்தின் முழுமையை, இந்த எட்டாம் குறளில் சுட்டிக் காட்டுகின்றார் வள்ளுவர்.

189. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை

பொருள் விளக்கம்:

புறன் நோக்கி = ஒருவரைக் காணாத இடத்தில்
புன்சொல் உரைப்பான் = பழிச்சொல்லால் பழித்துரைப்பவன்
பொறை = (வாழ்க்கை) பாறைபோல் ஆகிவிடுகிறான்
அறன்நோக்கி = ஒழுக்கமாக பிறரை மதித்துப் பேசுகிற
ஆற்றும்கொல் = பண்பாட்டினைக் கொண்டு வாழ்கிறவனுக்கு
வையம் = தேர் (சிவிகை) வாழ்க்கையாக அமைந்து விடுகிறது.

சொல் விளக்கம்:

புறன் = காணாதபோது; **புன்சொல்** = பழித்துப் பேசுதல்
பொறை = பூமி, பாறை, மலை, சுமை
வையம் = பூமி, தேர், சிவிகை, வாகனம்
அறன் = ஒழுக்கமானவன்

முற்கால உரை:

பிறர் நீங்கின இடம் பார்த்து பழித்துரைப்பானது உடற்பாரத்தை நிலம், இக்கொடியது பொறுத்தலே எனக்கு அறமாவதெனக் கருதி பொறுக்கிறது போலும்.

தற்கால உரை:

பிறன் ஒருவன் நேரில் இல்லாததைத் தெரிந்து புறங்கூறுபவனுடைய உடற்சுமையைச் சுமத்தலே தனக்குரிய அறம் என்று தான் இவ்வுலகம் எண்ணி இயங்குகிறது போலும்.

புதிய உரை:

புறம்கூறி பழித்துரைப்போரது வாழ்க்கை எதற்கும் பயன் இல்லாத பாறை போலாகி விடுகிறது. அறம் காத்து வாழ்கிறவன் வாழ்க்கை, தேர்மேல் பவனி வருவது போன்ற பெருமையைத் தருகிறது என்பதுதான் வையத்தின் நிலையாகும்.

விளக்கம்:

அறன் (நெறிகளை) நோக்குகிறவனது வாழ்க்கையையும், புறன் நோக்குகிறவன் வாழ்க்கையையும் வள்ளுவர் வகுத்துப் பிரித்துக் காட்டுகிறார் இந்த ஒன்பதாம் குறளில்.

புறம் பேசுகிறவன் இதயம் பதமிழந்து, கல்லாகி, பாறையாகி விடுகிறது. பாறையில் எதுவும் விளையாது. பாறை எதற்கும் பயன்படாது. பாறையும் பூமிக்குரிய பொறையும் கொடைத்

தன்மையும் இல்லாது போவதால், பயன் தராத பொருளாகப் பழித்துப் பேசப்படுகிறது.

புறங்கூறுபவருடைய சிந்தனைகள் எல்லாம், பொருமலிலும், பொங்கும் தீம்பிழம்பின் வெம்மையிலும் பங்கப்பட்டுப் போவதால், சிந்திக்கின்ற சிந்தையும் மரத்துப் போகிறது. நல்லதை நினைக்கமறந்து விடுகிறது. அதனால் எந்த நேரத்திலும் தீப் பந்தம் போல எரியும் எண்ணங்களால், அவர்கள் எரிந்து போகின்றனர். கரிந்து போகின்றனர். கரைந்து சாகின்றனர்.

அதே சமயத்தில், அறங்கூறுகிற அறிவாளன் நோக்கிலே நேர்மையும், நாக்கிலே தூய்மையும், .வாய்மையும் தோய்ந்து தொடர்வதால் அவரது பண்பாற்றல், அடுத்தவர்களைக் கவர்கிறது. அவரது செயலாற்றல் மற்றவர்களை ஆனந்தப் படுத்துகிறது. அவரோடு தொடர்பு கொண்டிருப்பதே, அற்புதமான வாழ்வுக்குள் வாழ வைக்கும் என்று எண்ணுகிறபோது, அவரது வாழ்க்கை அணிகலன் பூட்டி அழகு செய்த தேர்போல, அதற்குள் அமர்ந்திருக்கும் தெய்வச்சிலை போல எண்ணப்படுகிறது.

ஆக, அறன் நோக்கும் ஆற்றல் கொண்டவர்கள், தேர்போல, தேரில் அமர்ந்து செல்லும் உயர்வைப் பெற்று வாழ்கிறார்கள். தேடிவரும் இப் பெருமையை அறியாமல் புறங்கூறுபவர்கள் பாழாகி விடுகிறார்களே என்று 9 ஆம் குறளில் வள்ளுவர் வருத்தப்பட்டு, திருத்தப் பார்க்கிறார்.

190. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

பொருள் விளக்கம்:

தம் குற்றம் = தான் செய்கிற தவறான செயல்கள்

ஏதிலார் குற்றம்போல் = மற்றவர்களாகிய அந்நியர்கள், பகைவர்கள் செய்கின்ற தவறுகளைப்போல

காண்கிற = அறிவுடன் ஆராய்ந்து நினைத்துப் பார்த்தால்

மன்னும் உயிர்க்கு = சேர்ந்து நிலை பெற்றிருக்கிற ஆத்மாவுக்கு

பின் தீதுண்டோ = இன்றும் என்றும் எப்போதும் துன்பமே வராது.

சொல் விளக்கம் :

ஏதிலார் = பகைவர், அன்னியர்; **காண்** = உண்மை அறிதல்
பின் = பிற்காலம், காரணம், பெருமை; **தீது** = துன்பம், மரணம்
உயிர்க்கு = ஆத்மாவுக்கு

முற்கால உரை:

ஏதிலாரைப் புறங்கூறுவார், அவர்தம் குற்றம் காணுமாறு போல, தம் குற்றத்தையும் காண வல்லாராயின் நிலை பேறுடைய அவர் உயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ?

தற்கால உரை:

பிறர் குற்றத்தைக் காண்பது போல், தம் குற்றத்தையும் எண்ணிப் பார்த்தாலே ஒருவருக்குப் புறங்கூறும் பழக்கம் ஏற்படாது.

புதிய உரை:

தாம் செய்கின்ற குற்றங்களைப் போல்தான், மற்றவர்களும் தவறுகள் செய்கிறார்கள் என்பதை, சூழ்நிலை அறிந்து உணருகிறபோது, அவருக்கு ஆத்ம வேதனையும், சோதனையும் ஏற்படுத்தும் துன்பம் எப்போதும் வருவதில்லை.

விளக்கம்:

எதிர்பாராமல் தவறிழைப்பது, ஒன்றை எதிர்பார்த்து குற்றம் இழைப்பது. குற்றத்தையே வாழ்க்கையாகக் கொண்டிருப்பது என்று பலவகைகள் உண்டு. குற்றத்தை அஷ்ட குற்றம் என்று கூறுவார்கள். அறியாமையால் செய்வது, உணர்ச்சி மிகுதியால் செய்வது, மோகத்தால் செய்வது, வயது கோளாறால் செய்வது, விளங்காதனத்தால் செய்வது. குலப்பண்பாடு என்று கூறிக்கொண்டு குற்றம் இழைப்பது. எதிர்பாராத சந்தர்ப்பங்களில் விபத்துக்களின் காரணமாகச் செய்யப் படுகின்றவை என்பது எட்டு குற்றங்கள் நிகழ்வதற்கான ஏதுகள்.

பிறர் குற்றத்தை, எப்படி நேர்ந்திருக்கும் என்று ஆராய்கிறபோது, அவருக்குள் ஏற்படுகின்ற ஆத்திரங்கள், அர்த்தமற்ற வீம்புகள் குறையக்கூடும்.

அந்தச் சூழ்நிலையில் தான் இருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? எப்படித் தவறிழைத்திருப்போம் என்று நினைத்துப் பார்க்கிறபோது, அவரது நெஞ்ச நினைவுகளின் நெருப்பின் வெப்பம் தணிந்தேதான் இருக்கும்.

அப்போது ஆத்திரப்பட்டு புறம் பேசுகிறபோது ஏற்படுகிற சுவாசத் தடுமாற்றம். அந்தத் தடுமாற்றத்தால் தடம் மாறும் இரத்த ஓட்டம், இரத்த ஓட்டக் குறைவால் ஏற்படும் உள்ளுறுப்புக்களின் செயல் மாற்றம். இப்படி உள்ளுயிராக விளங்குகிற ஆத்மாவிற்கு ஏற்படும் வேதனைகள் மிகுதி.

தவறான எண்ணம் தான் ஒருவரை உயிர்வாதனை ஏற்படுத்தித் தண்டிக்கும். ஆகவே, புறங்கூறுகிற புன்மை வாழ்க்கையை விலக்குவதால், பூரிப்பு மிகுந்த பொன்னான வாழ்வு அமைகிறது என்று வள்ளுவர் தனது 10 வது குறளில் முத்தாய்ப்பாகக் கூறி முடிக்கிறார்.

20. பயனில சொல்லாமை

புறங்கூறாமை என்றால் வீண் வார்த்தை; வெட்டிப் பேச்சு; விவகாரத்தை வளர்க்கும் இழிவான சொல்லுரை; அல்லவை உண்டாக்கும் அற்பத்தனம் என்கிற உண்மை எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், அந்தப் புறங்கூறும் பழக்கத்தைப் போக்கிவிட மக்களால் முடிவதில்லை; அவர்களும் முயற்சிப்பதில்லை. ஏனென்றால், சுவையான பண்டங்களைச் சாப்பிடுகிறபோது நாக்குக்கு உண்டாகும் சுகமும் மலர்ச்சியும், புறங்கூறும் போதும் வந்து விடுவதால்தான்.

புறங்கூறாமை பற்றி பேசிய வள்ளுவருக்குப், போதிய மன திருப்தி ஏற்பட வில்லை போலும். புறங்கூறுகிற பேச்சை புறந்தள்ளார்கள். அது வேண்டாத வீண் சொல் என்று வற்புறுத்தவே பயனில் சொல்லாமை எனும் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்து, மேலும் வன்மையாக வற்புறுத்திப் பாடுகிறார்.

பயனில் சொல் என்பதை இழிசொல் என்கிறார்கள் பழிச்சொல் என்கிறார்கள்.

நாவில் பிறக்கும் சொற்களுக்கு நான்கு முகங்கள் உண்டு. 1. குறளை, 2. பொய் மொழி, 3 கடுஞ்சொல், 4 பயனில்சொல். இந்த நான்குதான், மக்களது நாவை ஆட்டிப்படைக்கின்றன தூற்றிச் சுகிக்கின்றன.

1. குறளை: கொடுவாயிலிருந்து குதித்துவரும் கொடிய சொற்கள், கோபச் சொற்கள், பிறர் மனத்தைப் புண்படுத்தி துடிக்கச் செய்யும் பேய்த் தனமான பேச்சு.

2. பொய் மொழி: வீணான சொற்கள் வாழ்க்கையை வீணாக்கும். வழி நெடுக துண்பங்களை உண்டாக்கும். வேற்றுமைகளை ஏற்படுத்தும். பகைமைகளில் ஆட்படுத்தும். மனிதப் பிறவியையே மாசுபடுத்திவிடும். இப்படிப்பட்ட ஆற்றல்கள் பயனில் சொல்லுக்குப் பெரிதும் உண்டென்பதால் தான், ஒழுக்கமாக வாழ விரும்புவோர், பயனில் சொல்லமாட்டார்கள் என்று வள்ளுவர் நம்பினார்.

மன ஒழுக்கம், உடல் ஒழுக்கம் ஆகிய இரண்டுமே வாழ்க்கையின் கண்கள். ஒழுக்கம் கெடுகிறபோது, உடலும் மனமும் புண்களாகிப் போகின்றன.

அதனால் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் முழுவதும் ஒழுக்கத்தை உயிராகக் காத்து, உன்னதமாக வளர்க்கும் நோக்கத்துடனேதான் உருவாக்கப் பட்டிருக்கின்றன.

புறங்கூறும் பழக்கம் பழுது பட்டு ஒழிந்தால், பயனில் சொல்லுகின்ற தன்மையே அற்றுப்போகும் என்பதால்தான், புறங்கூறாமைக்குப் பிறகு, பயனில் சொல்லாமை வைக்கப்பட்டிருக்கிறது.

பேசுகிற நாக்காகிய **நா** என்ற சொல்லுக்கு **வார்த்தை அயலார், தீச்சுவாலை, பொலிவு** என்று பல பொருள்கள் உண்டு.

நா பேசுகிற வார்த்தையானது, எப்போதும் அயலாரைப் பற்றியே, அதுவும் தீச்சுவாலை எனும் வெம்மையை வெளிப்படுத்தும் வண்ணம் அனலைக் கக்குகிறது என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறது.

அவற்றை அகற்றிவிட்டு, நாவிற்குப் பொலிவும், வார்த்தைக்குத் தெளிவும், வாழ்க்கைக்கு வலிவும் வருகிற வண்ணம் சொற்கள் அமைய வேண்டும் என்ற குறிப்பை, வள்ளுவர் சொல்லாமல் குறித்துக் காட்டுகிறார்.

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

பொருள் விளக்கம்:

பல்லார் = அறிஞர் பலர் கூடியுள்ள சபையிலே
முனிய = கோபித்து வெறுக்கும்படி.
பயனில = எதற்கும் பயன்படாத வீணானவற்றை
சொல்வானை = பேசுகின்ற பெருமைக்காரனை
எல் + ஆரும் = சூரியன் மற்றும் பூமியும்
எள்ளப்படும் = இழிவுபடுத்த, அழிந்து போவான்

சொல் விளக்கம்:

பல்லார் = பலர்; அநேகர், சபை; **பயனில** = எதற்கும் பயன்படாத
வான் = பெருமை; **படும்** = அழிந்து போகும்
எல் = சூரியன்; **ஆர்** =பூமி

முற்கால உரை:

அறிவுடையார் பலரும் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான், எல்லோராலும் இகழப்படும்.

தற்கால உரை:

பயனில்லாத சொற்களைச் சொல்லிக் கொண்டே இருப்பவன் எல்லோராலும் எப்பொழுதும் நகையாடப் படுவான்.

புதிய உரை:

அறிஞர்கள் கூடியுள்ள சபையில், எதற்கும் பயன்படாத சொற்களைப் பேசுகின்றவன், அவர்களால் மட்டுமல்ல, வானகமும், வையகமும், இகழ்ந்துரைக்க, அழிந்து படுவான்.

விளக்கம்:

நாவிற்கு இன்பம் இனிப்புப் பண்டங்கள் சுவைப்பதில் மட்டும் இல்லை. பிறரைப் பற்றி புறம் பேசி, இழிவான சொற்களில் ஏசி, கண்டதைக் கதைத்துக் கொண்டிருப்பதிலும் சுகம் காண்கிறது. அது மனிதர்களுக்குரிய மாறாத குணம்.

தீயானது உறுப்புக்களைச் சுடும் என்பது உண்மைதான். ஆனால் தீய சொற்கள், தீ போல வெளிப்பட்டாலும் நாக்கைத் தீயப்பதில்லை. மாறாக, நாவிற்கு சுகமான உணர்வை நல்குகிறது.

இதனால்தான், பேசுகிறபோது, மனத்துக்கு இதம் வருவதுபோல, மற்றவர்களை வதம் செய்வது போல பேசுவது இயல்பாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட இழிவான வீணான

சொற்களை எந்த இடத்தில் பேசவேண்டும் என்பதற்கு இடம் இருக்கிறதல்லவா!

சாதாரணவர்களிடையே பேசுகிறபோது, அதை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஏனெனில் வீண் பொழுது போக்க, அப்படிப்பட்ட சொற்கள் உதவுகின்றன.

ஆனால் அதையே அறிஞர்கள் கூடியுள்ள சபையிலே பேசுகிறபோது, அவர்கள் மட்டும் ஆத்திரப்படுவதில்லை. மாறாக, இந்த வானகமும் வையகமும் எள்ளி நகைக்கிறது.

வானகம், வையகம் என்ற இரு சொற்களை, வள்ளுவர் பல குறட்பாக்களில் கூறியிருக்கின்றார். இங்கே சூரியன் (எல்) உலா வருகிற வானம்; பொறுமைக்குரிய பூமி என்னும் இரண்டும், பொறாது போய் பேசுபவனை அழியச் செய்துவிடும் என்று இங்கே கூறுகிறார்.

எல்லாரும் என்பதற்கு, பூமியில் வாழ்கிற அனைவரும் என்றும் பொருள் கொள்ளலாம். வார்த்தைகளை வைத்து விளையாடும் தமிழ்ச் சித்தர் வள்ளுவர் பல்லார், எல்லார் என்று பெய்திருக்கிற சொற்கள், எண்ணி எண்ணி இன்புறும் பான்மையில் அமைந்திருக்கிறது.

உலகமே வெறுக்கிற பயனற்ற சொற்கள், வாழ்வின் அழிவுக்கு வழி கோலும் என்பதாக வள்ளுவர் முதல் குறளில் கூறுகிறார்.

192. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

பொருள் விளக்கம்:

பல்லார் முன் = அறிஞர்கள் பலர் முன்னே
பயன் இல = பயமில்லாமல் அர்த்த மில்லாதவற்றை
சொல்லல் = புகழ்ந்து சொல்லுதல்
நயன் இல = நன்மையும் மகிழ்ச்சியும் தராதவற்றை
நட்டார்கண் = நண்பர்களிடத்தே
செய்தலின் = செய்வதைக் காட்டிலும்
தீது = மரண அவதிபோன்ற கொடுமையாம்.

சொல் விளக்கம்:

பயன் = பயம், அர்த்தம், பலன்; **சொல்லல்** = புகழ்தல், பேசுதல்
நயன் = நன்மை, இன்பம், மகிழ்ச்சி, உறவு, நீதி.
தீது = பாவம், கொடுமை, மரணம்; **நட்டார்** = நண்பர்

மூற்கால உரை:

பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர் முன்பே ஒருவன் சொல்லுதல், விருப்பமிலவாகிய செயல்களைத் தன் நட்டார் மாட்டுச் செய்தலினும் தீதே.

தற்கால உரை:

நண்பர்களுக்கு வெறுக்கத் தக்கன செய்பவன் எப்படி, இகழப்படுவானோ, அதை விடப் பலர் முன்னிலையில் பயனில்லாத சொற்களைக் கூறுகிறவன் மிகுவாக இகழப்படுவான்.

புதிய உரை:

பயமில்லாமல், அர்த்தமில்லாத கருத்துக்களை அறிஞர்கள் முன்பு புகழ்ந்து பேசுகிற ஒருவனது செயல், நண்பர்களுக்கு நச்சுக்காயம் ஏற்படுத்துகிற செயலைவிட, மிகவும் கொடுமையானதாகும்.

விளக்கம்:

அறிஞர்கள் குழுமியிருக்கும் சபையிலே, அவர்கள் முன்னே அர்த்தமற்ற கருத்துக்களைப் பேசுவதே குற்றம் என்கிறபோது, அதையே பயமில்லாமல் புகழ்ந்து பேசுவது மாபெரும் குற்றம்தானே, அதைத்தான் **சொல்லல்** என்ற சொல்லால், அழுத்தந் திருந்தமாகக் கூறுகிறார் வள்ளுவர்.

நண்பர்களிடத்தே தவறு செய்வது நல்லதன்று. அது நம்பிக்கைக்கு எதிரானது. அன்புக்கு மாறானது. பண்புக்கு கூரானது. நண்பர்களிடத்தில் செய்கிற குற்றம், நன்மைக்காகச் செய்யலாம். மகிழ்ச்சிக்காகவும் செய்யலாம். உறவைப்பற்றி ஆழமாக அறிந்து கொள்ளும் பொருட்டுகூடத் தவறு செய்யலாம்.

ஆனால், அதைவிடக் கடுமையானது, மடமையானது, கொடுமையானது, அறிவுடையோர் முன் அர்த்தமற்ற சொற்களைப் பேசுதல். அதுவும் தான் கூறவரும் கருத்தில் உள்ள குற்றங்களை மறைத்து, எவர் முன்னே இருக்கிறோம் என்கிற உள்ள நிலையை மறந்து உளறுகின்ற தன்மையை வள்ளுவர் தீது என்கிறார்.

தீது என்றால் ஒருவர் சாதாரண ஒரு தவறான தீமை என்று குறிக்கவில்லை. அவர் அந்தச் செயலைப் பாவம் என்று கருதுகிறார். நச்சுக் காயம் என்றும் கூறுகிறார்.

காயம் என்றால் பட்ட இடத்திலே வலிக்கும் காயமல்ல. இது பட்டகாயத்தின் வேகம், உடல் முழுவதும் பரவி, இரணமாக்கி, பெருங்காயத்தை ஏற்படுத்துகின்ற காயம். அதைத்தான் ம + ரணம் என்ற பொருள் வருமாறு பொறித்திருக்கிறார்.

ம என்றால் நஞ்சு, காலம். **ரணம்** என்றால் காயம். அறிவோர் முன் அநாகரிகமாக, பயனிலவற்றைப் பேசுகிற வீணன் ஏற்படுத்துகிற காயம், அந்தக் கால நேரத்தில் ஏற்படுத்தும் நஞ்சுக் காயம்.

ஆகவே, பயனில் சொல்வது, பயமற்ற தன்மை மட்டுமன்று அது மனத்திலே படுகாயம் ஏற்படுத்துகிற பாவச்செயல் என்று 2வது குறளில் கூறுகின்றார்.

193. நயன்இல என்பது சொல்லும் பயன்இல பாரித்து உரைக்கும் உரை

பொருள் விளக்கம்:

நயன்இல என்பது = நன்மையும் நீதியும் இல்லாதது என்பது
சொல்லும் பயன் இல = அர்த்தமற்ற சொற்களால், பயமின்றி வெறுமனே புகழ்ந்து பேசுவது எல்லாம்.
பாரித்து = குற்றம் மிகுதியுள்ள
உரைக்கும் = பாழான முழக்கமாகவே (அவர் பேச்சானது)
உரை = அந்த ஒலி வெளியாகும்

சொல் விளக்கம்:

பாரித்து = குற்றம் சார்த்து; பரப்பல், மிகுதியாதல்
உரை = ஒலி, மாற்றுரை, முழக்கம், பாழ்.

முற்கால உரை:

பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கும் உரைதானே, இவன் நீதியிலன் என்பதனை உரைக்கும்.

தற்கால உரை:

ஒருவன் பயனிலலாதவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் எந்த வகையிலும் பயனற்றவனே ஆவான் என்பதை உலகிற்குத் தெரிவித்து விடும்.

புதிய உரை:

நன்மையும் நீதியும் இல்லாததை, அர்த்தமின்றி, பயமில்லாமல், வெறுமனே புகழ்ந்து பேசுகிறபோது, அதுவே குற்றத்தை அதிகமாக்கும். அவன் கூறுகின்றவை எல்லாம், கருத்துக்களாக இல்லாமல், வெறும் கூச்சலாகவே வெளிப்படும்.

விளக்கம்:

பிறருடன் பேசுகிறபோது, பேச வேண்டியதை மட்டும் பேசுவது அறிவுடைமை ஆகும். அதுவும் அறிவாளிகளிடமும், பெரியவர்களிடமும் பேசுகிற போது, மமதையில்லாமலும்; வெற்றுப் பேச்சுப் பேசி, நேரத்தை வீணாக்காமலும், பண்புடன் பேசுவது, புத்திசாலித்தனமாகும்.

அதிகம் பேசினால் அதுவே துன்பம் என்பார்கள். அதிகம் என்பது அநாவசியம் என்பதையே குறிக்கிறது. பயனான பேச்சு என்பது, பண்புடைமையாகும்.

அன்பு, நீதி, இன்பம் பயப்பது போல் பேசுவதையே பயனுள்ள பேச்சு என்பதாகும். மற்றதெல்லாம் பயனிலவாகும். பயனற்ற மொழிகளைப் பேசுவோரை, **பயனிலி** என்றே குறிக்கின்றார்கள் அதையே, வீணானவன் என்று வெறுப்புடனும் கூறுகிறார்கள்.

தனது நேரத்தையும் பாழாக்கி, பிறரது நேரத்தையும் வீணாக்கி ப் பேசுகிறபோது, விரும்பத்தகாத சொற்களும் வேண்டத் தகாத கருத்துக்களுமே இடம் பெறும். பொய்யானவற்றை பேசுகிறவர்கள். தன்னைப் புகழ்ந்து தம்பட்டம் அடிப்பதுதான் இயல்பாக விளங்குவதால், அவர்கள் பேசுகிற சொற்கள் மொழியாக இல்லாமல் வெறும் ஆரவாரமாக, வறட்டுக் கூச்சலாகவே வெளிப்படுகிறது என்பதையே வள்ளுவர் உரைக்கும் உரை என்றார்.

பண்பற்ற பேச்சு, பாழான முழக்கம் சகிக்க முடியாத சத்தமாகவே ஒலிக்கிறது என்பதாக, மூன்றாம் குறளில் வள்ளுவர் பயனற்ற பேச்சின் பரிதாப நிலையை விளக்குகிறார்.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப் பண்பில்சொல் பல்லார் அகத்து

பொருள் விளக்கம்:

பல்லார் அகத்து = அறிவாளர்கள் மனம் (சீவன், உடல்) புண்படும் படியாக

பயன்சாரா = அர்த்தமற்ற

பண்பில் சொல் = பண்பற்ற சொற்களைப் பயமின்றி பேசுகிறவனுக்கு

நயன்சாரா = மகிழ்ச்சியான உறவை இழப்பது

நன்மையின் நீக்கும் = கிடைக்க வேண்டிய மன அமைதி, மேம்பாடு முதலியவற்றை அழித்துவிடும்.

சொல் விளக்கம்:

நயன் *= நன்மை, மகிழ்ச்சி, உறவு, நீதி*

சாரா *= ஒத்துப் போகாத* ***நன்மை*** *= நற்குணம், நன்மார்க்கம், அமைதி, சுகம், மேம்பாடு*

அகம் *= சரீரம், சீவன், ஆன்மா, மனம்.*

முற்கால உரை:

பயனோடு படாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுவானாயின் அவை அவர்மாட்டு, நீதியொடு படாவாய், அவனை நற் குணங்களின் நீக்கும்.

தற்கால உரை:

பயனோடு பொருந்தி வராத பண்பற்ற சொற்களைப் பலரிடத்தும் சொல்லுதல், அறத்தொடு பொருந்தி வராதவையாகி, அவனை நன்மையிலிருந்து நீங்கிப் போகவே செய்யும்.

புதிய உரை:

அறிவுள்ளோர் (சபையில்) மனத்தைப் புண்படுத்துகிற பயனற்ற சொற்களைப் பேசுகிறவன், தன் மன அமைதியை இழப்பதுடன் தன் வாழ்க்கையில் கிடைக்கிற மேம்பாடு, சுகம் போன்ற எல்லாவற்றையும் இழந்து அழிந்து போகிறான்.

விளக்கம்:

பல்லார் என்பது பலராகிய பொதுமக்கள் என்பதை விட, பலவற்றிலும் நுண்மைமதி பெற்றிருக்கும் அறிவாளர்களையே இந்தச் சொல் குறிக்கிறது. பண்புடையவர்கள் உடல் மென்மையானது. மனமோ திண்மையானது. ஆன்மாவோ அதிக ஆற்றல் மிக்கது. அப்படிப் பட்டவர்களின் உடல், மனம், ஆன்மாவை குறிக்கவே, அகத்து அதாவது ***அகம்*** என்று குறித்தார்.

அவர்கள் பங்கப்படுவதும், ஆதங்கப்படுவதும், வேதனைப் படுவதும், வெதும்பித் துடிப்பதும், வீறிட்டுக் கிளம்பும் பொல்லாத சாபமாகப் புறப்பட்டு விடும் என்பதைக் குறிக்கவே, நீக்கும் என்ற சொல்லைப் பெய்திருக்கிறார். நன்மையின் நீக்கும் என்ற இரு சொற்கள், அறவோர்களை அல்லல்படுத்தி, ஆற்றாமையை உண்டு பண்ணுகிற அவனது புன்மைச் சொல்லும் செயலும் செய்பவன் வாழ்க்கையைச் சீரழிக்கச் செய்கிறது.

பண்பிலாப் பயன் சாரா சொற்களைப் பேசுகிறவன், நற்குணம் இழப்பதால்தான் அப்படிப் பேசுகிறான். அந்தப் பேச்சால் அவனது நன்மார்க்கம், மாறிப் போகிறது. மனத்திலே அமைதி குலைகிறது. உடலிலே சுகம் குறைகிறது. ஆன்மாவும் அலைபாய்கிறது.

செழுமைமிக்க சீவனும் பலம் குன்றிப் போகிறது. இப்படியாக அவன் வாழ்க்கை அழிவை நோக்கிப் போகிறது. அதனால் தான், நன்மையின் நீக்கும் என்றார். இன்பம், மகிழ்ச்சி மட்டும் மாறிப் போகாமல், நல்ல நீதியும் கிடைக்காமல், நல்லோர்களின் உறவும் கிட்டாமல், நலிந்து அழிவான் என்று, நான்காவது குறளில், பயனிலாச் சொற்களைப் பேசுகிறவனைப் பழிக்கவும் செய்யவும், சொல்பவரைப் பழிவாங்கவும் செய்யும் என்கிற கருத்தை இக்குறளில் தெளிவிக்கிறார்.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.

பொருள் விளக்கம்:

நீர்மை உடையார் = உலக நடை தெரிந்தவரும், பிறர் மனம் புரிந்த பெருமை குணம் கொண்ட வரும்.

பயன் இல சொலின் = எதற்கும் பயன்படாத சொற்களைப் பேசுகிறபோது,

சீர்மெய் = சித்திரம் போல அழகும், தலைமையான தோற்றம் கொண்ட அவரது தேகம்.

சிறப்பொடு = அதன் அருமை மேன்மை நிலை (மாறி)

நீங்கும் = விலகி, சிதறுண்டு அழிந்து போகும்

சொல் விளக்கம்:

சீர்மை = ஒப்புரவு, குணம், அழகு; **ஒப்புரவு** = உலகநடை

சிறப்பு = அருமை, அழகு, மேன்மை, செல்வம், இன்பம், மதிப்பு.

சீர்மெய் = அழகு, சித்திரம், தலைமை வாழ்வு கொண்ட மெய்.

நீங்கும் = விலகும், ஒழியும், சிதறும், மாறும்.

முற்கால உரை:

பயனிலவாகிய சொற்களை இனிய நீர்மை உடையார் சொல்லுவாராயின், அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்கு மதிக்கற்பாடும் உடனே நீங்கும்.

தற்கால உரை:

பயனிலாச் சொற்களை உயர்ந்த பண்புடையவர் சொல்லுவார்களேயானால், அவர்களது பெருமையும் சிறப்பும், அவர்களை விட்டு விரைவில் நீங்கும்.

புதிய உரை:

உலக வாழ்க்கை ஒழுக்கம் பற்றி நன்கு தெரிந்தவர்கள், எதற்கும் பயன்படாத வீணான சொற்களைப் பேசுகிறபோது, அவர்களது அழகு தேகம் குலைந்து, தலைமை நிலை தாழ்ந்து, மேன்மையெலாம் விலகி, சிதறுண்டு ஒழிந்து போகிறது.

விளக்கம்:

நான்காவது குறளில், பயனில சொற்களைப் பேசுகிற போது பேசுகிறவரின் நற்குணம் மாறிப் போகிறது என்றும், அதனால் அவர் வாழ்வுக்குரிய நன்மார்க்கமும் திசைமாறிப் போகிறது என்றும் குறித்திருந்தார்.

மனம் மாசுபடுகிறபோது, உடலும் மாசுக்குள்ளாகி விடுகிறது. மனம் போல வாழ்வு என்பதால், மனம் திரிபடைய, அதனால், அவரது அகத்தில், அல்லவைகள் ஆக்ரமித்துக் கொள்கின்றன. அகத்தை முகந்து காட்டுகின்ற முகமோ, அழகு குன்ற ஆரம்பிக்கிறது.

அதைத்தான் சீர்மெய் (சீர்மை) என்றார். சித்திரம் போன்ற அழகான தேகம், பொலிவான முகம், கன்றிப்போய், களையிழந்து கவின் குன்றிப் போகிறது.

தெரியாமல் செய்வது தவறு. அதாவது தவறுதலாக நடந்து விடுவது. ஆமாம், நெறிவழுவி விடுகிற செயல்பாடு. ஆனால் தெரிந்து செய்வதோ குற்றம். மாபெரும் பாவம்.

அதனால்தான் ஒப்புரவு என்கிற உலக நடை தெரிந்தவர்கள், உயர்ந்த ஒழுக்கம் பற்றிப் புரிந்தவர்கள், உறுத்துகின்ற மனத்தையும் மீறி. வருத்தமுண்டாக்கும் பயனிலவாகிய சொற்களைப் பேசுகிறபோது, அவரது குணம் கெட்டுப் போகிறது.

குணம் கெட்ட பேர்களின் குலமும் கெட்டுப் போகிறது. புகழும் பட்டுப் போகிறது. பெருமை சேர்க்கும் அமைதியும் விட்டுப் போகிறது. இந்தக் குறிப்பைத்தான் 5 வது குறளில் தெரிவிக்கின்றார்.

நற்குணமும், நல்வாழ்வும் வீணான சொற்களால் விலகிப் போய், சிதறிப்போய், உருமாறிப்போய், ஒழிந்து போகிறது என்கிற முக்கிய விளைவுகளை வள்ளுவர் பட்டியலிட்டு காட்டுகிறார்.

196. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல் மக்கட் பதடி எனல்

பொருள் விளக்கம்:

பயனில் சொல் = எதற்கும் பயன்படாத சொற்களையே

பாராட்டுவானை = உரிமை என்று பாவித்து, பலகாலும் சொல்கிறவனை

ம்கன் எனல் = மனிதகுல வழித்தோன்றல் என்பதை விட

மக்கள் = மனிதர்களிலே

பதடி எனல் = அற்பமானவன் (என்பதே பொருத்தமானதாகும்)

சொல் விளக்கம்:

பாராட்டு = உரிமை பாவித்து பலகாலும் சொல்லுதல் ஆடம்பரமாகக் கொண்டாடுதல்

மகன் = மனிதகுல வழித் தோன்றல், செம்மல், தோற்றம், சந்ததி.

பதடி = பயனின்மை, பதர்; **பதர்** = அற்பம் அறிவீனன், உபயோக மற்றவன்

முற்கால உரை:

பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுவானை மகனென்று சொல்லற்க. மக்களுள் பதரென்று சொல்லுக.

தற்கால உரை:

பயனில்லாத சொற்களைப் பலபடச் சொல்பவனை, அறிவறிந்த மகன் என்று சொல்லல் ஆகாது. அவனை மக்களுள் பதர் என்று சொல்லுக.

புதிய உரை:

வீண்மொழிகள் பேசுவதையே தன் வாழ்க்கையின் உரிமை என்று பாவித்து பேசுகின்றவன், மனித குலத்தைச் சார்ந்தவன் அல்லன். அவன் அற்பமான கீழ்மகன் என்றே மதிக்கப் படுகிறான்.

விளக்கம்:

மனித உடல் எடுத்த எல்லோருமே மனிதர்கள் ஆவதில்லை. நல்ல சிந்தனையாலும், நல்ல சொற்களாலும், நல்ல பண்புகள் நிறைந்த செயல்களாலுமே, அவர்கள் மனிதர்களா, கினிதர்களா, புனிதர்களா என்று பிரிக்கப்படு கின்றார்கள்.

பண்புகளில் சிறந்தவரை மனிதன் என்றும்: பண்பில்லாது குறைந்தவரை கினிதன் (பீடைபிடித்தவன்) என்றும்; பண்புகளில் மிகுந்தவரை புனிதன் என்றும் அழைக்கின்றார்கள்.

இந்த ஆறாவது குறளில், மனிதர்க்கு வரப்பிரசாதமாக அமைந்து சொற்களே, மனிதர்களைத் தரம் பிரித்துக் காட்டவும் உதவுகின்றன. என்ற கருத்தையே, வள்ளுவர் மெலிதாகக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

பயனில்லாமல் பேசுவது தனது பிறப்புரிமை என்று, ஆடம்பரமாகக் கொண்டாடி, பலகாலும் பேசுகின்ற ஒருவன் இருந்தால், அவனை மனித வடிவாகப் பார்க்க வேண்டாம். மனிதகுலத் தோன்றல் என்று கூறவேண்டாம். மனித வம்சத்தின் சந்ததி என்று மதிக்க வேண்டாம். அவனை நீசன் என்றே நினைக்கலாம். அற்பன் என்று ஒதுக்கலாம். உபயோக மற்றவன், எதற்கும் இலாயக்கற்றவன் என்றே கூறலாம். இதை வலியுறுத்துகிற வண்ணம், இந்தக் குறளைப் படைத்திருக்கிறார்.

ஒருவன் பேசுகின்ற சொல் தான், அவனைப் பெரியவனாக உயர்த்துகிறது. அவனைச் சிறுவனாகவும் தாழ்த்துகிறது என்னும் சிந்தனையை, உலக நடையாகக் காட்டியிருக்கிறார்.

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

பொருள் விளக்கம்:

நயனில சொல்லினும் = பிறருக்கு நன்மையும் உதவியும் செய்யத்தக்க அருள் பொதிந்த நீதியற்ற வார்த்தைகளைப்

சொல்லுக = பேசினாலும் பரவாயில்லை

சான்றோர் = அவ்வாறு கூறாத மக்களுக்குள் ஒன்றாக விளங்குகிற மேன்மையாளர்

பயனில சொல்லாமை = அர்த்தமில்லாத பேச்சுக்களைப் பேசாமல் இருந்தால்.

நன்று = அதுவே அவருக்கு வாழ்வின் ஆக்கமாக அமையும்.

சொல் விளக்கம்:

நயன் = இன்பம், நன்மை, பலன், மகிழ்ச்சி, அருள், உறவு, நீதி.
பயன் = பயம், அர்த்தம், பலன்; **நன்று** = நன்மை, நல்வினை, பெருமை, உபகாரம், வாழ்வின் ஆக்கம்.

முற்கால உரை:

நீதியோடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும் அஃதமையும், அவர் பயனில வற்றைச் சொல்லாமை பெறின் அது நன்று.

தற்கால உரை:

சால்புடையவர், பிறர் விரும்பிக் கேட்க இயலாத சொற்களைச் சொல்வாராக. ஆனால், பயனில்லாத சொற்களைச் சொல்லாமையே நல்லது.

புதிய உரை:

பிறருக்கு நன்மையும் மகிழ்ச்சியும் தராத சொற்களைப் பேசினாலும் பரவாயில்லை. அதே சமயத்தில் பயனற்ற சொற்களால் பேசாமல் இருந்தால், அதுவே அவனுக்கு வாழ்வின் ஆக்கமாக அமையும்.

விளக்கம்:

நயனில சொல்லுக என்கிறார் வள்ளுவர். மனிதனது கருத்துக்களை வெளிப்படுத்த மட்டும் உதவுவது சொற்கள் அல்ல. அவர் அவ்வாறு வெளிப்படுத்துகிற சொற்கள், கேட்பவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டும். நன்மையைச் செய்யவேண்டும். அன்பை வெளிப்படுத்தி ஆறுதல் தரவேண்டும். மனித உறவை மேம்படுத்துகின்ற நேயத்தை உருவாக்க வேண்டும். நீதியையும் நியாயத்தையும் நிலைப் படுத்துவதாக அமையவேண்டும். இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளைக் கேட்போருக்குக் கிடைப்பது போல, கிளர்ச்சியூட்டும் சொற்களைச் சொல்லா விட்டாலும் பரவாயில்லை.

தான் பேசுகின்ற சொற்கள் தனக்கு உதவுவதாக அமைய வேண்டும். தன் வாழ்வின் ஆக்கத்தை அழிப்பதாக அமையக் கூடாது. வாழ்வின் பெருக்கத்தை, பெருமையை, பேரின்பத்தை, பிரகாசமான பிற்காலத்தை வேரோடு வீழ்த்துவதாக வெளிப்பட்டு விடக்கூடாது என்பதைத்தான், பயனில சொல்லாமை நன்று என்றார்.

நன்மை செய்கிற நல்வினையை, உதவுகிற உபகாரத்தைப். பீடுநிறைந்த பெருமையை, மேம்பாடு மிகுந்த வாழ்வு நிலையைக் குறிக்கவே நன்று என்ற சொல்லை இங்கே படைத்திருக்கிறார்.

அவர் பெருமை நிலைக்க, பயனில சொல்லாமையே நன்று என்பதால், மன அடக்கம் வேண்டும் என்பது போலவே, வாயடக்கமும் வேண்டும் என்னும் கருத்தை, வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

பிறருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த மட்டும் பேச்சு உதவவில்லை. தன்னை வளப் படுத்தவும், நிலைப்படுத்திக் கொள்ளவும் வழிகாட்டுகிறது என்பதால், நல்லவை பேசா விட்டாலும் பரவாயில்லை. அல்லவை பேசாமல் இருந்தால், அதுவே அருமையான வாழ்வை அளிக்கும் என்று ஏழாவது குறளில், எடுத்துக் காட்டுகிறார்.

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

பொருள் விளக்கம்:

அரும்பயன் = அரிதின் கிடைக்கின்ற புகழ், கல்வி, வலிமை, வெற்றி போன்றவற்றை.

ஆயும் = நுட்பமாய் நுணுகிப் பார்க்கும்

அறிவினார் = பொறி உயர்வு நிறைந்த ஞானம் உள்ளவர்

பெரும்பயன் இல்லாத = மிகுபேறு தருகின்ற மேன்மைமிகு வாழ்வை வழங்காத.

சொல் சொல்லார் = பொருளற்ற சொற்களைப் பேசவே மாட்டார்.

சொல் விளக்கம்:

அரும் = அரிய, எளிதில் கிடைக்காத; **பெரும்பயன்** = மிகுபேறு

பேறு = வாய்ப்பு, புகழ், கல்வி, வலிமை, வெற்றி, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

முற்கால உரை:

அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினை உடையார் மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார்.

தற்கால உரை:

அரிய பயன்களை ஆராயும் அறிவினர். கேட்பவர்க்குப் பெரும் பயன் அறியாத சொற்களை ஒருபோதும் சொல்லார்.

புதிய உரை:

வாழ்வின் பேறுகளை நுட்பமாய்ப் பார்க்கின்ற ஞானம் பெற்றவர், பிறருக்குச் சிறந்த வாழ்வை வழங்காத பொருளற்ற சொற்களை சொல்லவே மாட்டார்.

விளக்கம்:

வாயிலிருந்து வார்த்தெடுக்கப் படுகின்ற பொருள் மிகுந்த ஒலி தான் வார்த்தை என்று பெயர் பெறுகிறது. ஆகவே, அகத்தின் வழியாக விளங்கும் வாயானது, முகத்தின் முக்கிய உறுப்பாக இருந்து, பணியாற்றுகிறது.

பேசுகின்ற சொற்கள் பல பிரிவுகளை உடைத்தாயிருக்கின்றன என்று பேரறிஞர்கள், மிக நுட்பமாக ஆய்ந்து கூறியிருக் கின்றார்கள்.

1. பயனற்ற சொல்லின் பெயர் அனர்த்தம். அனர்த்தம் என்பது வட சொல். பொருளற்ற, தீங்குபயக்கும் தன்மை கொண்டது.

2. பலர் அறிகின்ற, சொல்லின் பெயர் பெருஞ்சொல்.

3. மறைவாகக் கருத்துக்களைத் தரும் சொல்லின் பெயர்: **இடக்கரடக்கல்** கூச்சத்துடன்.

4. நம்பாத மெல்லிய சொல்லின் பெயர் **உல்லாபம்**. அதற்கு நலிந்த சொல் என்று பொருள்.

5. கொஞ்சிப் பேசும் சொல்லின் பெயர், மழலை **மிழற்றல்**.

6. இழிவான மக்கள் சொல்லும் சொல்லின் பெயர். **அவப்பிரஞ்சம்.**

இப்படி, சொற்களின் தரமும் திறமும் அறிந்து ஞானவான், தான் சொல்கிற சொற்களைத், தனது பொறி உணர்வுகளைக் கட்டுப் படுத்தி, உணர்ச்சிவசப் படாமல், தெளிவாகவே பேசுவார்கள். இல்லையேல், அவரது வாய்மொழி, இழிந்தவர்கள் பேசுகிற பேச்சுக்கு ஈடாகி விடும்.

அதனால் தான் ஆயும் அறிவினார் என்றார். நுட்பமாய்ச் சிந்திக்கும் இந்திரனாளர். இந்திரியங்களான ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பெருந்திரனாளர். அவர் பிறருக்கும் தனக்கும் தேவைப் படுகிற புகழ், புகழைத்தரும் கல்வி, கல்வியைக் கற்க உதவும் தேக மன வலிமை, வலிமை தருகிற வெற்றி, வெற்றி வழங்குகிற துணிவு. துணிவுடன் வாழ்கிற வாழ்க்கை. அந்தத் தெளிவு தருகிற நோயில்லாத வாழ்வும்

நயமான சொல்லில் தான் பிறக்கிறது என்று சொல்லின் உண்மையான பெருமையை, நுண்மையான திண்மையை எட்டாவது குறளில் சுட்டிக் காட்டுகிறார் வள்ளுவர்.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த மாசறு காட்சி அவர்

பொருள் விளக்கம்:

பொருள் தீர்ந்த = உடல் நலிவுற்றிருக்கும் போதும்
மருள் தீர்ந்த = மனமாசுகளின் மயக்கத்திற்கு
பொச்சாந்தும் = மற்றவர் மேல் பொல்லாங்கு வருவதுபோல
மாசறு = குற்றம் சாராமல் நன்மை செய்யக்கூடிய
காட்சியவர் = அறிவும் அழகும் கொண்டு தோன்றுபவர்
சொல்லார் = பேசவே மாட்டார்

சொல் விளக்கம்:

பொருள் = பொன், உடல், உண்மை, குணம்
பொச்சாத்து = பொல்லாங்கு, மறதி
மருள = உனமத்தம், பைசாசம்
காட்சி= அறிவும் அழகும் கொண்ட தோற்றம்

முற்கால உரை:

மயக்கத்தில் நீங்கிய அறிவினை உடையவர், பயனின் நீங்கிய சொற்களை மறந்தும் சொல்லார்.

தற்கால உரை:

மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவுரை, பயனற்ற சொற்களை தம்மை மறந்தும் கூடச் சொல்ல மாட்டார்.

புதிய உரை:

மன மாசுகளுக்கு ஆட்படாத, பழிபாவம் சாராத பயனுள்ள நன்மைகளைச் செய்யும் பண்புறு தோற்றம் உள்ளவர், தனது உடல் வலிமை தீர்ந்த நலிந்த நேரத்தும், பிறர்மேல் பொல்லாங்கை ஏற்படுத்தும் மொழிகளைப் பேசமாட்டார்.

விளக்கம்:

பொருள் தீர்ந்த என்னும் பொருள் பொதிந்த சொல். பொருள் என்பதற்குப் பொன் என்றும். உடல் என்பதற்குப் பொருள், பொன் என்றும் அர்த்தங்கள் உண்டு.

உடல் என்பதற்கு ஆசையால் வருந்து என்றும், மாறுபாடு என்றும் பொருள் உண்டு. ஆகவே, பொருள் தீர்ந்த என்பதற்கு நல்ல உடலில் உள்ள வலிமை தீர்ந்த என்று பொருள் கொள்ளலாம்.

உடல் நலிவுற்றவர்களுக்கு அடிக்கடி கோபமும், எதிர்பாராமல் எதிர்படுவோரிடமெல்லாம் எரிச்சல் படுவதும் இயற்கையே. அப்படி ஆத்திரப்படுகிற போது, அடுத்தவருக்குப் பொல்லாங்கும் தீமையும், வருத்தமும் உண்டாவதுபோல, பேசுவதும், எப்போதும் நிகழும் நிகழ்ச்சியே.

மருள் தீர்ந்த என்பதற்கு மனதில் ஏற்படுகிற மாசுகளால் உண்டாகும் மயக்கத்திலிருந்து வெற்றி வெளிப்பட்டு விடுகிறவர், எப்போதும் பிறருக்கு நன்மையே செய்வார். தீங்கு செய்யார் என்ற உண்மை நிலையைக் குறிக்கவே, மருள் தீர்ந்த மாசறு என்ற சொற்களை, வள்ளுவர் வடித்திருக்கிறார்.

காட்சி என்கிற போது பல விதக் காட்சிகள் நிகழ்வதுண்டு. சந்தேகப்படுகிற **ஐயக்காட்சி,** நேரிலே தோன்றுகிற **வாயில் காட்சி** வேற்றுமையுடன் காணுகிற **விகற்பக் காட்சி:** சங்கிலித் தொடர் போல, விடாது தொடர்ந்து தோன்றுகிற **அந்துவயக் காட்சி** எதிர்மறையாகக் காணுகிற **வெதிரேகக் காட்சி;** ஒன்றை மற்றொன்றாகக் காணுகிற **திரிவுக் காட்சி.**

இப்படிப்பட்ட காட்சிகளுக்கு அப்பால் நின்று, அறிவும் அழகும் மிளிரக் காட்சி தரும், ஐம்புலன் வென்றவர்கள், தங்களது உடல் நலிந்திருக்கும் காலத்தும் பொல்லாத மொழிகளைப் பேச மாட்டார்கள் என்று, உடலியல் கருத்தை உன்னதமாக ஒன்பதாம் குறளில் விளக்கியிருக்கிறார்.

200. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனில்லாச் சொல்.

பொருள் விளக்கம்:

சொல்லில் = (கட்டளை, புத்திமொழி, மந்திரமொழி, உறுதி மொழி, வாய்மை மொழி எனும்) பல்வேறு சொற்களில்.

பயனுடைய = வாழ்க்கைக்கு செழிப்புத் தரக் கூடியவைற்றை மட்டுமே

சொல்லுக = உரைக்க வேண்டும்.

சொல்லில் = அப்படி பிறருக்கு (ஒதுகிற, பணிக்கிற, விதிக்கிற) உரைக்கிற சொற்களில்

பயனில்லாச் சொல் = உதவாத சொற்களையெல்லாம்

சொல்லற்க = (கட்டளை இடுவது போல) ஒதுக்கி விட வேண்டும்.

சொல் விளக்கம்:

சொல் = கட்டளை, புத்திமொழி, மந்திரம், உறுதிமொழி, வாய்மை

சொல்லுதல் = உரைத்தல், ஒதுதல், பணித்தல், விதித்தல்

முற்கால உரை:

சொற்களில் பயனுடைய சொற்களைச் சொல்லுக. சொற்களில் பயனில்லாத சொற்களை சொல்லாதொழிக.

தற்கால உரை:

ஒன்றைச் சொல்ல வேண்டுமிடத்துப் பயனுடைய சொல்லையே சொல்லுக. அவ்வாறு சொல்லுதலில், பயனிலாச் சொல்லைச் சொல்லாது விடுக.

புதிய உரை:

பிறரிடம் பேசும் போது, இடம் பொருள் ஏவல் அறிந்து, பொருந்துகிற முறையில் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும். கேட்பவர் வாழ்வுக்கு உதவாத சொற்களைப் பேசுவதைத் தவிர்த்து விடவேண்டும்.

விளக்கம்:

பேசுதல் என்பது கருத்துப் பரிமாற்றம் மட்டுமல்ல. கேட்பவர்கள் பயன்பெறுவது போல, பேசுவதுதான் மனிதர்க்கு அழகாகும். சிரித்துப் பேசுதல், நகைச் சுவை ததும்பப் பேசுதல், கூறியது கூறி வெறுப் பேற்றிப் பேசுதல், பரிந்து பேசுதல் என்று பேசுகின்ற முறையில் பல நிலைகள் உண்டு.

ஆனால் பயனுள்ள பேச்சு என்பது கேட்பவர் விரும்பிக் கேட்பது போல, எடுத்துச் சொல்லுதல், உறுதிபடச் சொல்லுதல், விரித்துச் சொல்லுதல், அறிவுரை சொல்லுதல்; வரவேற்றுப் பேசுதல், பிரசங்கம் செய்தல் என்றும் பல வகைப்படும்.

பேச்சானது கேட்பரின் மனத்தைப் பாதிக்கிறது. நினைவுகளில் வேரூன்றுகிறது. செயல்படத் தூண்டுகிறது. சிந்திப்பதில் சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. வாழ்வுக்கு வளமான பாதையைச் சீரமைத்துக் கொடுக்கிறது.

இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு, இதமாகவும், இனிமையாகவும், பதமாகவும் பண்போடும் பேசுகிற சொற்களே பயனுள்ள சொற்கள். அப்படிப் பேசுகின்றவரைத் தான் வள்ளுவர் சான்றோர் என்றார். மருள் தீர்ந்த மாசறு காட்சியாளர் என்றார். ஆயும் அறிவினார் என்றார். நேர்மையாளர் என்றார்.

உலக மக்கள் எல்லோரும் இத்தகைய பண்பாளர்களாக உருவாக வேண்டும் என்னும் உயர்ந்த இலட்சியக் கனவுடன் தான், பயனில சொல்லாமை என்னும் அதிகாரத்தைப் படைத்துத் தந்திருகிறார் வள்ளுவப் பெருமான் அவர்கள்.

21. தீவினை அச்சம்

மனிதருக்கு முதலில் தோன்றுவது எண்ணம். அடுத்து வெளிவருவது சொல். அதனைத் தொடர்வது செயல். புறங்கூறுகிற எண்ணம் புறப்பட, அது போர்ப் படைபோலப் பயனில சொல்லிவிட, அதன் விரிவாக விளைவதுதான் செயல்.

நடந்து முடிந்து, பின் நிகழ்ந்த சுவடு தெரியாமல் மறைந்து போவது செயல். நிகழ்ந்த செயல், தொடர்வதும், தொடர்ந்து ஒருவித பலனைத் தந்து கொண்டேயிருப்பதும்தான் வினை ஆகிறது. செயலின் முதிர்ந்த நிலைதான் வினை.

செய்கிற தன்மைக்கேற்ப, அந்த வினை இரண்டாகப்பிரிகிறது. தனக்கும் பிறருக்கும் நன்மை செய்கிற வினை நல்வினை என்றும்; தனக்கும் பிறருக்கும் தீமைகளை விளைவிக்கிற வினை தீவினை என்றும் அழைக்கப்படுகிறது.

நல்வினையோ, தீவினையோ, இரண்டில் எதுவாக இருந்தாலும், அது அழிந்து போகாமல், முதிர்ந்து போய், பழமை ஆனாலும், அதனைச் சார்ந்து வெளிப்படுகிற முடிவுக்கு ஊழ்வினை என்று பெயர்.

தீவினை பற்றி 21 ஆம் அதிகாரத்தில் கூறுகிற வள்ளுவர், ஒழுக்கம் பற்றிக் கூறுகிற அறத்துப்பாலின் கடைசி அதிகாரமாக 38ஆம் அதிகாரத்தை ஊழ் பற்றிய அதிகாரமாக வைத்து, விளக்குகிறார்.

தீ + வினை + அச்சம் என்று நாம் பிரித்துப் பார்க்கிறோம். தீ என்றால் நெருப்பு என்றும், தீமை என்றும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் தீ என்றால், அறிவு என்றும், தந்திர வழி என்றும், சேர்ந்தாரைக் கொல்லி என்றும் பல சுவையான பொருட்கள் உண்டு.

ஒருவர் செய்கிற 'ஆகாத' அழிவுச் செயல் எல்லோமே தீ செயல்தான். அந்தத் தீமை பயக்கும் தொடர் செயல் தான் தீவினை ஆகிறது. வேண்டாத விளைவுகள் நிகழத் தூண்டி விடுவது தீவினை.

தீவினை என்று சொல்லாமல், தீவினை அச்சம் என்று மேலும் ஒரு சொல்லைச் சேர்த்திருக்கிறார். தீவினை என்றாலே

சேர்ந்தாரைக் கொல்லி என்று சிறப்புப் பொருளே இருக்கும்போது, அச்சம் என்ற சொல்லையும் ஏன் வள்ளுவர் சேர்த்துச் சொன்னார்?

அச்சம் என்றால், பயன், கவலை, கலக்கம், துன்பம் என்று அர்த்தங்கள் உண்டு. ஆகவே தான் எல்லா உரையாசிரியர்களும், தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல் பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல் என்றே பொருள் கூறி வைத்திருக்கின்றனர்.

பொருள் பொருத்தமானது என்றாலும், மேலும் நாம் சிந்திக்கிறபோது, சிறப்பான பொருள் கிடைக்கிறபோது - மகிழ்ச்சிதானே.

அச்சம் என்ற சொல்லுக்கு அடுப்பு என்றொரு பொருளும் உண்டு. அடுப்பு என்றால் நெருப்பின் இருக்கை என்ற அர்த்தத்தைத் தருகிறது.

தீயென்றால் நெருப்பு என்றும், வினை என்றால் விளைவுகளைத் தொடர்ந்து தரும் காரியம் என்றும் பொருள் கிடைக்கிறபோது, அச்சம் என்ற சொல் இங்கே, நெருப்பு வினைகளின் இருக்கை என்ற சுவையான உணர்வு தோன்றுகிறதல்லவா!

தீயானது, கொண்டதையும் கொள்வதையும் மட்டுமல்ல, கண்டதையும் எரித்துத் தொலைத்து விடும். அதாவது தீயானது பட்டதை அழித்துத் தானும் அழியும்.

அந்தத் தீபோல, தீமையின் வீரியத்தைக்கூறி, மனமானது நெருப்பின் இருக்கையாக இருக்கக்கூடாது. உடலானது நெருப்பின் எரிப்பாக மாறிவிடக் கூடாது. ஆன்மாவானது வெப்பத்தின் விளை நிலமாக விளங்கக்கூடாது என்பதற்காக, வள்ளுவர் தீவினை அச்சம் என்றார்.

தீய காரியங்கள் நெருப்பின் இருப்பாக இருக்கின்றன. அவை செய்வாரையும், சேர்ந்தாரையும், விழுந்தாரையும் அழித்து விடுகின்றன. ஆகவே, பயனில பேசுவான் பட்டொழிந்து போவான் என்பது போலவே, தீ வினையன், தீய்ந்து போவான் என்று குறிக்கவே, பயனில சொல்லாமைக்குப்பின் வரும் அதிகாரமாக தீவினை அச்சத்தை வைத்துள்ளார்.

201. தீவினையார் அஞ்சார் விழுமியர் அஞ்சுவர் தீவினை என்னும் செருக்கு

பொருள் விளக்கம்:

தீவினை என்னும் = தீமை பயக்கும் நச்சுச் செயல்கள் என்பவை,
செருக்கு = அவைதான், தனது வாழ்வென்று எண்ணிக்களிக்கிற
தீவினையார் = சூழ்ச்சிமிக்க வஞ்சனையாளர்
அஞ்சார் = (தொடர்ந்து செய்ய, பயப்பட மாட்டார்)
விழுமியர் = தீவினை ஆற்றியதால் துன்பம் அடைந்தவரும், தீ செயலுக்கு அப்பாற்பட்ட சீர்மையாளராம்.
அஞ்சுவர் = சூழ்ச்சியாளர், வஞ்சனையாளர்.
விழுமம் = இடும்பை, துன்பம், சிறப்பு, சீர்மை.
செருக்கு = களிப்பு, இறுமாப்பு, ஆணவம், மனோராச்சியம், செல்வம், வாழ்க்கை.

சொல் விளக்கம்:

தீவினை = தீமைபயக்கும் நச்சுச் செயல்கள்
விழுமியார் = தீவினையால், துன்பமடைந்தவர், அப்பாற்பட்டவர்.

முற்கால உரை:

தீயனை என்று சொல்லப்படும் மயக்கத்தை, முன் செய்த தீவினை உடையவர் அஞ்சார் அஃதிலராகிய சீரியோர் அஞ்சுவார்.

தற்கால உரை:

தீய செயல் என்று சொல்லப்படும் இறுமாப்பை உடைய, அத்தீய செயல்கள், பழகிப் போன கொடியவர் அஞ்சமாட்டார். ஆனால் அருளொழுக்கம் உடைய சிறந்தோர் அஞ்சுவர்.

புதிய உரை:

தீமை பயக்கும் நச்சு செயல்களே, தமது வாழ்க்கை என்று எண்ணிக்களிக்கும் சூழ்ச்சிமிக்க வஞ்சனையாளர்கள், தீவினை செய்யப் பயப்படமாட்டார்கள். ஆனால் தீச் செயல் செய்வதன் காரணமாகத் துன்பப்பட்டவர்களும், தூய பண்பாளர்களும் தீவினையை செய்திட பயப்படுவார்கள்.

விளக்கம்:

தீமையினும் கொடியது தீ. தீயினும் கொடியது தீமை. இந்த இரண்டிலும் ஈடுபடுகின்ற ஒருவரை வினையார் என்கிறார் வள்ளுவர். தீய செயலை செய்வதற்கு முன் எண்ணுகிற எண்ணத்தில் அவர்கள் சூழ்ச்சி மிக்கவர்களாக மாறிவிடுகிறார்கள். எண்ணியதைச் செயல்படுத்துகிறபோது, அவர்கள் வஞ்சகர் களாகவே உருமாறி விடுகின்றார்கள்.

சூழ்ச்சியும் வஞ்சனையும் பிறரை வீழ்த்தவும், வெறுமையாக்கவுமே முற்படுவதால், கண்டதையும் எரிக்கிற தீயைப்போல, மனிதாபிமானமற்ற முண்டர்களாகவும் (முரண்டு செய்பவர்கள்) கேடு பயக்கும் குண்டர்களாகவும் (இழிந்தவர்கள்) ஆகிவிடுகிறார்கள்.

அறிவு சிதைந்து போவதால், பெருந்தன்மையின் மென்மையும் மறைந்து போக அவர்கள் மனத்திலே செருக்குப் படம் விரித்தாடுகிறது. அந்த ஆணவச் செருக்கோ, இணையாரும் இல்லை எனும் இறுமாப்பைப் பெற்றுத்தர, அதனால், அகக் களிப்பு ஆரவாரித்துக் கிளம்புகிறது.

அவரது மனம் முழுவதும், அகங்காரம் ஆட்சி செய்கிற தலமாகவே ஆகி விடுவதால், மேலும் மேலும் தீவினைகள் மேலே தீவிரப்பற்றும் கிளைத்தெழத் தொடங்கிவிடுகிறது.

அதனால்தான், வள்ளுவப் பெருந்தகை, வினையார் என்று பொருத்தமான சொல்லை இங்கே வைத்திருக்கிறார்.

வினையாரும் தீவினை செய்தபடி வெற்றிபெற முடியாது. அவர்கள் சிக்கிக் கொண்டு, சிக்கலில் தவித்து, துன்பம் அடைகிற போது, அவற்றைச் சிந்தித்துப் பார்க்கும் வினையார் விழுமியோராக மாறிவிடுகிறார். விழுமம் என்பது துன்பம். விழுமம் அடைந்தவர் மீண்டும் அந்தத் தீவினைக்குள் ஆட்படுவதற்கு அஞ்சி ஒதுங்குவார்.

பெரியோர்களோ தீவினையின் கொடுமையை உணர்ந்து கொண்டு, அவற்றைச் செய்ய அஞ்சி ஒதுங்குவார்கள். பட்டுத் தெளிகிற சாதாரண மனிதர்கள் படாமல் தெளிவு கொள்கிற பண்பாளர்கள், என மனித மனங்களையும், இனங்களின் இயல்புகளையும் முதல் குறளில், மிக நுண்மையாக வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

202. தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்

பொருள் விளக்கம்:

தீய + வை = தீங்குகள் செய்கிற கீழோரின் உலகம்
தீய பயத்தலால் = கேடுகளையே உண்டாக்கி விடுவதால்.
தீ + அவை = அந்தக் கீழோர்கள் கூறியுள்ள (சபை) கூட்டமானது
தீயினும் = தீயைக் காட்டிலும்.
அஞ்சப்படும் = அச்ச மூட்டுகிற அனல் களமாகிவிடும்.

சொல் விளக்கம்:

தீய = குற்றம், கேடு **வை** = கூர்மை, வையகம்
தீ = நகரம், **அவை** = கூட்டம்

முற்கால உரை:

தமக்கின்பம் பயத்தலைச் செய்யும் தீவினைகள், பின் அஃது ஒழித்துத் துன்பமே பயத்தலான், அத்தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும்.

தற்கால உரை:

தீய செயல்கள், பிறர்க்கும் தமக்கும் ஒருங்கே தீமையையே தருவதால், அத்தீய செயல்கள், தீயைப் பார்க்கிலும் அஞ்சத்தக்கன.

புதிய உரை:

தீங்குகள் செய்கிற கீழோரின் உலகம், கேடுகளையே உண்டாக்கி விடுவதால், அக்கீழோர்களின் கூட்டமே, எரிக்கும் தீயை விட, அச்ச மூட்டும் அனல் களமாகிவிடுகிறது.

விளக்கம்:

மக்கள் வாழ்கிற உலகத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். நல்லவர்கள் வாழ்கிற உலகம், தீயவர்கள் வாழ்கிற உலகம். இரண்டும் தனித்தனியே நிலவுகிற உலகமல்ல. இரண்டும் இரண்டறக் கலந்து, பின்னிப் பிணைந்து, ஒன்றாகத் தோன்றுகிற உலகம்.

பாலில் கலந்த தண்ணீர் வெண்மையாவது போல, நல்லோர் உலகத்தில் தீயோர் புகுந்து, கலந்து, கரைந்து கொள்கின்றனர். தீயோரின் கேடு பயக்கும் செயல்களால், அவர்கள் வெளிப்படும் போது தான், தீமை தெரிகின்றது. தீயாய்ச் சுடுகின்றது.

தீயவர் வாழ்கிற உலகம், தீமைகளையே செய்கின்றன. ஆகவே, அந்தத் தீயவர் கூட்டம், எங்கு இருந்தாலும், அது சுட்டெரிக்கும் இழி கூட்டமாகவே நடந்து கொள்கிறது. இந்தக் கருத்தை, மிகவும் நுட்பமாகத் தீயவை என்னும் சொற்களால் சாமர்த்தியமாகக் கூறியிருக்கிறார்.

தீயவை என்கிறபோது, தீயவர்களது உலகம். அடுத்த தீ அவை என்கிறபோது, அங்கு வாழ்கிற தீயவர் கூட்டம்.

தீயவர்களது உலகம், தயங்காமல் தீமைகளையே செய்யும் என்பதை, பயத்தல் என்கின்றார். பயத்தல் என்றால் படைத்தல் என்றும், பிறப்பித்தல் என்றும் பொருளாகும்.

பிறப்பிக்கும் வேலை இயல்பாகவும் நடக்கும். திட்டமிட்டும் நடக்கும். சூழ்ச்சிமிக்க வஞ்சகர்கள், பிறரது துன்பங்களில்தான் திருப்தி அடைகிறார்கள் என்பதைத்தான், தீய பயத்தலால் என்றார்.

ஆகவே, தீயவர் கூட்டத்தைப் பார்க்கிறபோது, நெஞ்சம் பதை பதைக்க அஞ்சுகின்றார்கள் மக்கள் என்பதையே, எரிகிற தீயின் பக்கம் யாருமே செல்ல மாட்டார்கள். அஞ்சி ஓடுவார்கள். தப்பித்து பிழைக்கவே ஓடுவார்கள் என்ற உலக நடையைக் குறிக்கவே, அஞ்சப்படும் என்றார்.

தீயின் கொடுமை காட்சிக்கு வெம்மை மட்டுமல்ல. எரித்துச் சாம்பலாக்கும் கடுமையும் உண்டு. அதுபோலவே தீயோராகிய இழிஞர்கள் காட்சிக்குக் கருமையும், செயலுக்கு அழிவுத் தன்மையும் உள்ளவர்கள் என்று வள்ளுவர் 2 வது குறளில் தீய உலகத்தையும், தீய கூட்டத்தையும் சுவையாக குறித்துக் காட்டியிருக்கிறார்.

203. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய செறுவார்க்கும் செய்யா விடல்.

பொருள் விளக்கம்:

செறுவார்க்கும் = கொலை முதலிய தீச்செயல்களைச் செய்கிற பகைவர்க்கும்
தீயவிடல் = தீமையான குற்றங்களை
செய்யா = செய்யாமல் விடுமாறு (அவர்களுக்குத்)
அறிவினுள் = தெளிவுண்டாகுமாறு போதிக்கின்ற ஞானமே
எல்லாம் தலை என்ப = எல்லா ஞானத்திற்கும் சிகரமாக அமைகிறது என்பார்கள் சான்றோர்கள்.

சொல் விளக்கம்:

அறிவு = போதனை, ஞானம், தெளிவு, அறிதல்.
செறுவார் = பகைவர், **செறுவு** = கொலை
விடல் = குற்றம், விடுதல், நீக்குதல் தாங்குதல்.

முற்கால உரை:

தம்மைச் செறுவார் மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதல், அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று நல்லோர் சொல்லுவர்.

தற்கால உரை:

தீமை செய்யத் துணிந்த பகைவர்க்கும், மாறி, அத்தீமையைச் செய்யாது விடுதல், அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று ஆய்ந்தோர் கூறுவர்.

புதிய உரை:

கொலை செய்யவும் தயங்காத பகைவராகிய தீயோர், தமது குற்றங்களைச் செய்யாமல் விட்டுவிட, அவர்க்குத் தெளிவுண்டாகுமாறு போதிக்கின்ற ஞானமே, எல்லா ஞானத்திற்கும் சிகரமாக அமையும்.

விளக்கம்:

தமக்குத் தீங்கு செய்வார்க்கும் தீமை செய்யாமல் விடுதல் என்பது பெரியோர்க்கு அழகு என்பார்கள். இன்னா செய்தவர்களுக்கும் இனியவே செய்யாத போது, என்ன பயத்ததோ சால்பு என்று பாடிய வள்ளுவர், இந்தக் குறளில், ஒரு படி மேலே போய், மனித மனத்தைப் புனிதத் தனமாக வளர்த்துக் கொள்கிற விதத்தில் பாடியுள்ளார்.

தீய வினையாளன், என்று ஓர் குறளில் கூறிய வள்ளுவர், மூன்றாவது குறளில், **செறுவார்** என்கிறார். செறுவு என்றால் கொலை என்று ஒரு பொருள். செறுவார் என்றால் கொலை புரியும் பகைவர். ஆகவே, எந்தக் கொடுஞ் செயலுக்கும் அஞ்சாத ஒருவர் மனித குலத்திற்கே பகைவர்தானே!

அந்தப் பகையாளியின் மனம் மாறி, செய்கிற குற்றங்களைச் செய்யாமல் விடச் செய்திட வேண்டும் என்று விரும்பிய வள்ளுவர், விடல் செய்யா என்றார். விடல் என்றால் குற்றம். குற்றமே செய்யாமல், அந்தப் பகைவராய்ப் போன இழிஞர்களை, மீட்டுக் கொண்டுவர முயற்சிக்கும் அறிவே, போதிக்கும் அறிவே, தெளிவுபடுத்தும் அறிவே, தலையாய ஞானம் என்கிறார்.

ஒருவன் பொறிகள் மூலம் உணர்வது எல்லாம் உணர்வு ஆகிறது. உணர்வுகள் மிகுதியாகி வரவர, உணர்வு அறிந்து கொள்கிற அறிவாகிறது. அறிவும் விரிய விரியத் தெளிவாகிறது.

அப்படிப் பட்ட தெளிவின் தெளிவுதான் ஞானம் ஆகிறது. அந்த ஞானமே மோனமாகவும் மாறுகிறது.

ஆகவே, அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாயது அதாவது மகுடமாகவும், சிகரமாகவும் விளங்குவது, குற்றவாளியைத் திருத்துகிற ஞானம். திருந்தச் செய்கிற வல்லமை மிகுந்த ஞானம் செறுவாரை, சீரழிந்த தீயோரை, செம்மைப்படுத்த, உண்மையாக உழைக்க வேண்டும் என்று நல்லோருக்கும், வல்லோருக்கும் உள்ளன்போடு, உயர் நெறி ஒன்றை, இந்த மூன்றாம் குறளில் கற்பித்திருக்கிறார்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

பொருள் விளக்கம்:

மறந்தும் = பிணக்கு, பகை, அல்லது எழுச்சி, மற்றும் அசட்டைத் தனத்தால்
பிறன் = மனம் வேறுபட்டவர்கள் அல்லது பகைவர்களுக்கு
கேடு சூழற்க = அழிவையும் இழிவையும் தருகிற கெடுதிகளை செய்யற்க.
சூழின் = அப்படிப் பிறருக்கு கேடுபயப்பது போல, சுற்றிவளைத்து செயல்பட்டால்.
அறம் = அவரது ஒழுக்கம், ஞானம் போன்றவையோடு
சூழ்ந்தவன் = அவனைச் சூழ்ந்த உறவோருக்கும்
கேடு சூழும் = சிதைவும் சேதம் போன்ற பொல்லாங்குகள் கூடும்

சொல் விளக்கம்:

சூழல் = பாவம், கொடுமை, அழிவு செய்ய ஒருவரைச் சுற்றி வளைத்தல்
கேடு = இழிவு, அழிவு, சிதைவு, சேதம், துரோகம்
அறம் = ஒழுக்கம், ஞானம், போன்றவையோடு
சூழ்ந்தவன் = அவனைச் சூழ்ந்த உறவோருக்கும்
கேடுசூழும் = சிதைவும் சேதம் போன்ற பொல்லாங்குகள் கூடும்

முற்கால உரை:

ஒருவன் பிறருக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணா தொழிக. எண்ணுவானாயின், தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும்.

தற்கால உரை:

ஒருவன் தன்னை மறந்தாயினும் பிறனுக்குக் கேடு செய்யக் கருதாமல் இருப்பானாக. அவன் கேடு செய்யக்கருதினால் கருதிய அவனுக்குக் கேடு செய்ய அறம் கருதும்.

புதிய உரை:

தனக்கு எதிராக உள்ள மனம் வேறுபட்ட பகைவருக்கு, அழிவும் இழிவும் ஏற்படுகிற கெடுதிகளைச் செய்யற்க. அப்படிச் செய்தால் செய்பவரின் ஒழுக்கம், இருதய ஞானம் அழிய, அவரைச் சார்ந்த வரவுகளும் பல இழிவுகளுக்கும் கேடுகளுக்கும் ஆளாக நேரிடும்.

விளக்கம்:

மறந்தும் என்னும் சொல்லுக்கு மறதி என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். மறந்தும் என்பதற்குப் பொல்லாங்கு, மறல், மறவி, என்ற பொருட்களும் உண்டு. மறல் என்றால் எழுச்சி, பிணக்கு; மறவி என்றால் ஈனம். ஆக, அசட்டையாக, பகை காரணமாக, பிணக்கு ஏற்பட்டதன் காரணமாக, மனம் வேறுபட்டதால், அவருக்குக் கெடுதல் நிகழ்த்த வேண்டும் என்று விரும்புவது மனித சுபாவம். அப்படிச் செய்வது ஈனம் என்கிறார்.

அவ்வாறு, பிறனுக்குக் கேடு செய்ய எண்ணுகிற போது, எண்ணுபவரின் ஒழுக்கத்திற்கு இழுக்கம் ஏற்படுகிறது. செயல்பட முனைகிறபோது அவரது ஞானம் ஊனமடைகிறது. ஈனம் அடைகிறது. அவர் நோற்ற ஒழுக்க நோன்பும், செய்த புண்ணியம் எல்லாமே மண்ணாகிப் போகிறது.

அது மட்டுமன்று; அவர் இழைத்த கேடுகளும், கொடுமைகளும் செய்தவரை மட்டும் பாதிக்காமல், அவரைச் சார்ந்தவர்களையும், உற்ற உறவுகளையும் சிதைத்து அழித்து விடுகிறது.

ஒருவரால் ஒரு குடும்பம் மட்டுமன்று, உறவும் கிளையும் உலைந்து குலைந்து போக வேண்டுமா? வேண்டாமே! அதனால்தான் மறந்தும் என்னும் வார்த்தையை வைத்தார்.

ஏதோ மறதி காரணமாக, ஒருவர் கேடு செய்ய முடியாது. ஏற்படுகிற பிணக்கு, மனமாறுபாடு, பகை, இழிந்த குணத்தின் எழுச்சி, சுற்றி வளைக்கும் சூழ்ச்சி போன்றவற்றால் தான் கேடுகளைச் செய்ய முடியும் என்று, மனதின் வேரூன்றிய வெறுப்புகளைக் குறிப்பிட்டு, அதனை நீக்கும் வழிவகையாக,

பிறனுக்குக் கேடு என்றால் உனக்கு மட்டுமல்ல, உன்னைச் சார்ந்தவர்களுக்குப் பின் விளைவுகளாகத் தீங்குகள் தொடரும் என்று, 4வது குறளில் வள்ளுவர் எச்சரித்திருக்கிறார்.

205. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின் இலனாகும் மற்றும் பெயர்த்து.

பொருள் விளக்கம்:

இலன் என்று = வேறு பக்கத்துணை, பின்புலம் இல்லையென்று
தீயவை செய்யற்க = ஒருவருக்குத் தீங்குகளைச் செய்ய வேண்டாம்.
செய்யின் = அவ்வாறு ஆணவத்துடன் தீங்கிழைத்தால்
இலனாகும் = அவரைப்போன்றே, செய்பவருக்கும் இல்லையென்ற இழி நிலைக்கு ஆளாக நேரிடும்.
மற்றும் = மேலும்
பெயர்த்து = அவரது நிலைபோலவே திரும்பவும் மோசமான விளைவுகள் ஏற்படவும் கூடும்.

சொல் விளக்கம்:

மற்று = பிறவும், மற்றொன்று
பெயர்த்து = வேறுபடுத்துதல், திருப்புதல், கிளம்புதல்

முற்கால உரை:

யான் வறியவன் என்று கருதி, அது தீர்தற் பொருட்டு, பிறருக்குத் தீவினைகளை ஒருவன் செய்யா தொழிக. செய்வானாயின் பெயர்த்தும் வறியனாம்.

தற்கால உரை:

யான் வறியவன் என்று கருதி, அதனை நீக்குதற்காகத் தீச்செயல்களைச் செய்யா திருப்பானாக. அவன் செய்யின், உள்ளதையும் இழந்து மேலும் வறியவன் ஆவான்.

புதிய உரை:

ஒருவனுக்கு எந்த ஆதரவும் துணையும் இல்லை என்று நினைத்து, கேடுகள் இழைக்கக் கூடாது. அப்படி தீச் செயல்களைச் செய்தால், தானும் பக்கதுணையை இழந்து படுவதோடு, இலனாகி, மேலும் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும்.

விளக்கம்:

இலன்என்று என்ற சொற்கள் தாம், இந்தக் குறளில், முதன்மை நிலை வகிக்கின்றன. தான் வறியவன் என்றும், பொருள் இல்லாதவன் என்றும், பல உரையாசிரியர்கள் பொருள் கண்டிருக்கின்றனர்.

நான் இலன் என்பதற்கு, ஏதும் துணையில்லாதவன், எந்தவித ஆதரவும் இல்லாதவன், உடல் வலிமையில்லாதவன், எதிர்த்து செயல்பட இயலாதவன் என்பதாகப் பொருள் கூறியிருக்கிறேன். வறியவன்தான் வம்படி காரியங்களுக்குப் போவான் என்பதைப் போலவே, வாழ்வின் வழக்கமும் இருக்கத்தான் இருக்கிறது.

இங்கே, இலன் என்று என்பது, அவனால் ஏதும் செய்ய இயலாது, எதிர்த்துச் செயல்பட முடியாது என்பதால், அவர்களிடம் போய் தீய செயல்களைச் செய்யாதீர்கள். அவன் ஒதுங்கிப் போவான் அல்லது ஓடிப்போவான் அல்லது ஒளிந்து கொள்வான்.

அப்படி அச்சப்பட்டு நிற்பவர்களிடம், உங்கள் ஆணவத்தைக் காட்டி, அக்ரமங்கள் செய்தால், உங்கள் பாவச் செயல்கள், உங்களைத் திருப்பித்தாக்குகிறபோது, உங்கள் நிலைமையும் இல்லாது போகும்.

அதாவது, உங்கள் பாவம், உங்களை விடாது, உங்கள் தீய செயல்களால், நீங்களும் தனிமைப்படுத்தப் படுவீர்கள். தாங்குகிற நட்பும் உறவும், தாமாகவே விலகிச் செல்லும். உங்கள் உள்ளத்தில் புகுந்த கள்ளம், உங்களைப் பாடாய்ப் படுத்தும். உடலை வருத்தும். பலஹீனப்படுத்தும். அத்தனைத் துன்பங்களிலும் ஆட்படுத்தும்.

அப்பொழுது உங்கள் நிலைமை **இலனாகும்.** ஆனால் பிறவும் உங்கள் நிலையைப் பரிகசிக்கும் பாழ்படுத்தும். வாழ்வு சுகங்களில் இருந்து வறுமைப்படுத்தும். சிறுமையில் ஆழ்த்தும். பெருமையைக் குலைக்கும். ஆகவே, தனியாட்களை சஞ்சலப்படுத்தாதீர்கள். உங்கள் ஆணவம், அகங்காரம், கர்வம், தற்போதம், தலைக்கனம் எல்லாமே உங்களைத் தரித்திரராக ஆக்கிவிடும் என்று 5 வது குறளில், வலிமை இலாதவரையும் வாழவிடுங்கள். வதைத்து வளம் காணாதீர்கள் என்று வள்ளுவர் எச்சரித்திருக்கிறார்.

206. தீப்பால தான்பிறன்கண் செய்யற்க நோய்ப்பால தன்னை அடல்வேண்டா தான்

பொருள் விளக்கம்:

நோய்ப்பால = தீராத நோய்கள் பல
தன்னை அடல் வேண்டாதான் = தன்னை ஆட்படுத்தி வெற்றி கொண்டு கொல்லப்படுவதை விரும்பாத ஒருவன்
தீப்பால = தீமையின் மேல் பற்று கொண்டு.
பிறன்கண் = மற்றவரது உடம்புக்கு
தான் செய்யற்க = எந்த விதமான கெடுதலையும் செய்யவே கூடாது.

சொல் விளக்கம்:

பாலது = பற்று, பகுதி; **கண்** = உடம்பு, சரீரம்
நோய் = துன்பம், வியாதி, குற்றம், தீராத நோய் (எவ்வம்)
அடல் = சொல்லுதல், வெற்றி

முற்கால உரை:

துன்பம் செய்யும் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை வேண்டாதவன்; தீமைக் கூற்றவாகிய வினைகளைத்தான் பிறர் மாட்டுச் செய்யாதொழிக.

தற்கால உரை:

துன்புறுத்தக் கூடிய குற்றங்கள் எல்லாம் தன்னை அழித்தலை விரும்பாதவன். பிறருக்குத் தீமையுண்டாக்கும் பழிச்செயல்களைச் செய்யா திருப்பானாக.

புதிய உரை:

தீராத நோய்கள் பல தோன்றி, தன்னைக் கொல்லக்கூடாது என்று விரும்புகிறவன், பிறரது உடலுக்குக் கெடுதலை உண்டாக்கிய தீய குற்றங்களையெல்லாம் செய்யவே கூடாது.

விளக்கம்:

தீப்பால எனும் சொல்லுக்குப் பரிமேலழகர் பாவங்கள் என்றார். தற்கால உரையாசிரியர்கள் பலரும் குற்றம் என்றனர். தீய செயல்கள் மீது பற்று கொண்டு, விரும்பி, வேட்கையின் காரணமாக விகாரப்பட்டுப்போன மனதுடன், செய்கிற செயல்கள் என்னும் கருத்தை இங்கே நான் எழுதியுள்ளேன்.

வெறுப்பின் உச்சக் கட்ட வெறியானது, பிறரைப்பழி வாங்கத் துடிக்கும். பகைப்பட்டவரின் மனத்தைத் துன்புறுத்துவதைவிட, பிறரது உடலுக்கு ஊறு நிகழ்த்துவதையே.

பேராண்மை என்று கருதி, பழிகளைச் செய்கிறார்கள் இழி மனத்தவர்கள்.

இப்படிப்பட்ட மனித மனத்தின் புன் மதியைத் தெரிந்த வள்ளுவர், **பிறன்கண்** என்றார். பிறன் என்றால், மாற்றான் என்றும், மனம் வேறுபட்டதால் பகைவன் ஆனவன் என்றும், **கண்** என்றால் உடம்பு, சரீரம் என்றும் அர்த்தங்கள் உண்டு.

ஆகவே, பகையாளனது உடம்புக்கு எந்தவிதமான தீங்கையும், பொல்லாங்கையும் செய்யவேண்டாம். அப்படிச் செய்தால், **நோய்ப்பால** என்ற சொல்லில், அதற்குரிய தண்டனையை வள்ளுவர் குறித்துக் காட்டுகின்றார்.

நோயின் கடுமையான நிலையை **எவ்வம்** என்ற சொல் குறிக்கிறது. எவ்வம் என்றால் தீராத நோய். வந்த பின் தொடர்ந்து வாழ்ந்து கொண்டு, உடலை வதைத்து, மனத்தைச் சிதைத்து, ஆத்மாவை அழித்து விடுகிற நோய்.

அப்படிப்பட்ட நோய்க்கு ஆளாகிப் போவீர்கள். அதனால் தான் பிறர் கண் நோக, துன்பம் இழைக்காமல், கண்ணும் கருத்துமாக, என்றும் அடக்கமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

தீவினை செயல்களின் தன்மையையும், அவைகள் எவ்வாறு பிரதிபலித்து கொடுமைகளைக் கொடுக்கிறது என்ற உண்மையையும் இந்த ஆறாவது குறளில் அற்புதமாக விளக்கிக் காட்டுகிறார்.

நலமாகத்தான் வாழ விரும்புகிற எவரும், பிறரையும் நலமாக வாழ விட வேண்டும். நல்லவைகளையே சூழ விடவேண்டும் என்னும் வாழ்வின் மேலாண்மைத் தத்துவத்தை விளக்குகிற குறளாக இது அமைந்திருக்கிறது.

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின் சென்று அடும்.

பொருள் விளக்கம்:

எனைப்பகை = எவ்வளவு பெரிய பகை கொண்டிருந்தாலும்
உற்றாரும் = பகைக்கு ஆளானவரும், அவர்தம் உறவோரும்
உய்வர் = தப்பித்துப் பிழைப்பர்.
வினைப்பகை = பொல்லாங்கு செய்ததால் வந்த பகையானது

வீயாது = அழிந்து போகாது (விட்டு விடாது)
பின்சென்று = பிற்காலத்திலும் தொடர்ந்து சென்று
அடும் = வருத்தி, வதைத்து அழித்து விடும்

சொல் விளக்கம்:

எவ்வளவு உற்றார் = சுற்றத்தார், நண்பர், உறவோர்
உய்வர் = தப்பிப்பர், ஈடேறுவர்; **பின்** = பிற்காலம்
அடும் = வருத்தம், அழிக்கும், கொல்லும்.

முற்கால உரை:

எத்துணைப் பெரிய பகையுடையாரும், அதனை ஒருவாற்றால் தப்புவர். அவ்வாறின்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும்.

தற்கால உரை:

எத்தகைய பகையை அடைந்தவரும் தப்புவர். தீய வினையாகிய பகை நீங்காது, அவனைப் பின்னே சென்று வருத்தும்.

புதிய உரை:

எவ்வளவு பெரிய பகையிலும், அவனும் அவனைச் சார்ந்த சுற்றத்தாரும் தப்பித்துப் பிழைப்பார். ஆனால், தீவினை செய்ததால் வந்த பகையானது, அழிந்து போகாமல், எந்தக் காலத்திலும் அவனைப் பின்தொடர்ந்து வருத்திக் கொல்லும்.

விளக்கம்:

மிகப்பெரிய பகை என்று மூன்றைக் கூறுவர். அந்த முப்பகை என்பது - தீய ஆவியாகிய பிசாசு, உலகம், உடல் (தசைகள்). உடலுக்குள்ளே ஆட்சி செய்கிற மனத்துக்குள்ள பகைகள் ஆறு. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

இவைபோல எத்தனைப் பகைக்குள் சிக்கிக் கொண்டாலும் சிக்கியவர் தப்பிப்பர். சிக்கியவரின் உறவும் நட்பும் தப்பித்தல் பிழைக்கும். இதைக் குறிக்கவே உற்றாரும் உய்வர் என்கிறார்.

நான்காவது குறளில் (204), சூழ்ந்த சுற்றமானது. தீவினையாளருடன் கெடும் என்று குறித்தவர், இந்தக் குறளில், வேறுபல பகைகளைக் காட்டி, அதனால் உரியவன் பாதிக்கப்படலாம். படாமலும் இருக்கலாம். ஆனால், வேறு பகைக்காக உறவுகள் ஒழியாது, தப்பித்து வாழ்வர்.

ஆனால், தொடர்ந்து பயனை அளித்துக் கொண்டே வருகிற வினை, அதிலும் தீமைகளையே தொடர்ந்து பிறப்பித்துக் கொண்டு முடிகிற தீவினை, அதன் பயன்கள், செய்தவனை விடாது. நீங்காது. சுற்றிச் சுற்றியே வரும். அந்த நிலையைத்தான், **வீயாது** என்னும் சொல்லில் பொறித்துக் காட்டுகிறார்.

வீ என்றால் சாவு என்று பொருள். அந்தத் தீவினையின் விளைவுகள் காலத்தால் சாகாது. செய்தவனை விட்டுப்போகாது. செய்த வினைக்குத் தண்டனை தராமலும் அது விடாது. வினைக்காரனை வருத்தும், உறுத்தும், வதைக்கும், நலிய வைக்கும், நாளெல்லாம் நிம்மதியை அழிக்கும். இப்படியாக அவனைக் கொல்லாமல் கொல்லும் என்பதைத்தான் **அடும்** என்றார்.

தீவினை செய்ய, சுற்றமும் நட்பும் சூழலாக இருந்திருக்கலாம். என்றாலும், அவர்கள் நேரடியாக ஈடுபடவில்லை என்பதாலோ என்னவோ, அவர்கள் பிழைத்துப் போவர், தப்பித்து மீள்வர் என்று கூறுகிற வள்ளுவர், தவறுக்குத் தண்டனை நிச்சயம். அதிலும் தீய குற்றத்திற்கு நிந்தனை நிறைந்த தண்டனைகள், உண்டு. இது உடலால் பெறுகிற அழிவு உறுப்புக்கள் பெறுகிற சிதைவு. வாழ்வுக்கு வருகிற இழிவு என்று 7 வது குறளில் தீவினைகள் திண்ணமாய்த் தரும் தண்டனையின் தீவிரத்தைக் காட்டியிருக்கிறார்.

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை வீயாது அடிஉறைந் தற்று

பொருள் விளக்கம்:

தீயவை செய்தார் = பிறருக்கு தீபோன்ற குற்றங்களைச் செய்பவர்
கெடுதல் = பதனழிந்து, சிதைந்து அழிந்து போவர் (என்பது)
நிழல்தன்னை = துன்பம் செய்தவரைப் புகலிடமாக வைத்து,
வீயாது = (அவரை விட்டு) நீங்காது
அடி = தாக்கிக் கொல்லும் வண்ணம்
உறைந்து அற்று = இறுக்கமாகி, இல்லாமல் ஆக்கிவிடும்.

சொல் விளக்கம்:

கெடுதல் = பதனழிதல், உருவழிதல், சிதைதல், வீதல்
நிழல் = புகலிடம், நீதி, துன்பம்; **வீயாது** = நீங்காது, அழியாது
அடி = தாக்கு, கொல்லு; **உறைந்து** = இறுகி; **அற்று** = இல்லாமல்

முற்கால உரை:

பிறர்க்குத் தீங்குகளைச் செய்தார் தாம் கெடுதல் எத்தன்மைத் தெனின், ஒருவன் நிழல் நெடிதாகப் போயும், அவன் தன்னை விடாதுவந்து அடியின் கண் தங்கிய தன்மைத்து.

தற்கால உரை:

தீய வினைகளைச் செய்தவர் அழிதல், ஒருவன் நிழல் அவனை விட்டு நீங்காது, அவன் அடிகளின் கீழ்த் தங்கினாற் போலும்

புதிய உரை:

பிறருக்குத் தீய வினைகளைச் செய்பவரையே, தங்குமிடமாகக் கொண்டு, (நீதியை நிலை நாட்ட) தீவினைகள் அவரை விட்டு நீங்காது தாக்கிக் கொல்ல, இறுக்கமாகி, உடலாலும் மனத்தாலும், அவரை இல்லாமல் ஆக்கிவிடுகின்றன.

விளக்கம்:

தீவினைகள் செய்பவர்கள், தைரியமாகவே செய்கிறார்கள். செய்த தீங்குகளையும், குற்றங்களையும், அவர்கள் மறந்தும் போகலாம். மறந்தது போலும் நடிக்கலாம்.

ஆனால், செய்யப்பட்ட தீவினைகளின் கடுமைகள், அவர்களை விட்டு நீங்காமல், அவர்களையே தங்குமிடமாக ஆக்கிக் கொள்கின்றன.

தீவினைகளுக்குத் தண்டனை தருகிற நிழலான நீதியானது, அவரது உடலையே புகலிடமாகக் கொண்டுவிடுகிறது.

அது முதற்கொண்டு, அவரது உடலை பதம் இழக்கச் செய்கிறது. பலம் அழித்துக் கொல்கிறது உடலின் உருவத்தையும் சிதைக்கிறது. வடிவமும் உருவமும் நாளுக்கு நாள் வற்றி, வனப்பிழந்து வளமிழந்து வன்கூடாக மாற்றிவிடுகிறது.

மலைப்பாம்பு தனது இரையின் மேல் மெதுவாகச் சுற்றி சுற்றி ஒட்டி, கடைசியாக இறுக்கி, உருக்குலைத்து உண்ணுவது போல, தீவினைகள் எனும் மலைப்பாம்பும், செய்தவரைச் சுற்றிச் சுற்றி, இறுதியாக இறுக்கி, அழிக்கிறது.

இதைத்தான் **வீயாது - அடி - உறைந்து - அற்று** என்னும் நான்கு சொற்களில் நயமாக உரைக்கின்றார்.

தீவினைக் கொடுமை நீங்கவில்லை. அது தாக்குகிறது. தாக்குதலின் உச்சக் கட்டம் இறுக்கி விடுவது, கடைசிக் கட்டம்-இல்லாமல் செய்து விடுவது.

இப்படித்தான் தீவினைகள், செய்த மனிதருக்கு எதிராக எழும்பி, நீதியை நிலை நிறுத்த, அவரைக் கடுமையாகத் தாக்கி, உடலையும் மனத்தையும் நிலைமாறச் செய்து, நிம்மதியை அழித்து, இறுதியில் கழித்து இல்லாமல் ஆக்கி விடுகிறது.

இந்த அற்புதமான தண்டனையைத் தமது 8 வது குறளில் வள்ளுவர் நயத்தோடு விளக்கி இருக்கிறார்.

209. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்

பொருள் விளக்கம்:

தன்னை காதலன் = தன்னைத் தலைவனாக (ஒருவன்)
ஆயின்தான் = உயர்த்திக் கொள்ள, (வேண்டும் என்பதை) தான்
ஆராய்ந்து பார்த்தால்
எனைத்தொன்றும் = எந்தவிதமான
தீவினைப்பால் = தீய செயல்களின் பக்கம்
துன்னற்க = நெருங்க விடவே கூடாது.

சொல் விளக்கம்:

காதலன் = தலைவன், அன்பன், சிநேகன், தோழன்
ஆயின் = ஆராய்ந்து பார்த்தால்; **துன்னற்க** = நெருங்க விடாமல்

முற்கால உரை:

தன்னைத்தான் காதல் செய்தலுடையனாயின், தீவினையாகிய பகுதி எத்துணையும் சிறியதொன்றாயினும், பிறர் மாட்டு செய்யாதொழிக.

தற்கால உரை:

தன்னைத்தான் காதலிப்பவனாயின் தீவினைப் பகுதிகளில், எவ்வளவு சிறியதான ஒன்றையும் நெருங்காதிருக்கக் கடவன்.

புதிய உரை:

தன்னைத் தலைவனாக, தானே உயர்த்திக் கொள்ள விரும்புகிற ஒருவன், தீமை பயக்கும் தீச் செயல்கள் தன்னை நெருங்கவிடாமல் (விழிப்போடு) இருக்க வேண்டும்.

விளக்கம்:

காதலன் என்னும் ஓர் அருமையான சொல்லை வள்ளுவர் இக்குறளில் வைத்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, இந்தச் சொல் எத்துணை சிறந்த பொருளைத் தந்து, எவ்வளவு சிறப்பான பெருமையைப் பெற்றிருந்தது என்பதற்கு இந்தச் சொல்லே சான்றாக விளங்குகிறது.

காதலன் என்றால் ஒரு பெண்ணை விரும்புகிறவன், விரும்பிக் கொண்டிருக்கிறவன் என்று இப்போதைய பொருளாக இருந்தாலும், இதன் நுண்மையான பொருள், நெஞ்சைத் தொடும் வண்ணம் அமைந்திருக்கிறது.

தலைவன், அன்பன், சிநேகிதன், தோழன் என்றெல்லாம் கூறும் போது, ஒரு பெண்ணுக்கு என்று கூறுவது இந்நாளைய பண்பாடாகிவிட்டது.

ஆனால், வள்ளுவர் சொல்ல வந்த நுண்மை - ஒருவன் தன் தேகத்திற்குத் தலைவனாக விளங்கவேண்டும். ஏன்? தேகத்தில் தானே திரிந்தலைந்து துன்புறுத்தும் ஐம்பொறிகள் இருக்கின்றன!

அவன் தேகத்திற்கு அன்பனாக விளங்கவேண்டும்! ஏன்? அப்போதுதான் தேகத்தை திறமையுள்ளதாகப் பேணிக் காக்க முடியும்.

தேகத்திற்கு ஏன் தோழனாக இருக்கவேண்டும்? தவறு செய்கிறபோது, தவறுசெய்ய முயல்கிற போது, தட்டிக்கேட்டு, தடுத்து, தடைசெய்து தவறுகள் தம்பக்கம் வராது எல்லை போட்டு, இடர் நேரா வண்ணம் காப்பவன் தோழன். அதனால்தான் தேகத்திற்குத் தோழனாக, அன்பனாக, தலைவனாக ஒருவன் இருக்க வேண்டுமென்றால், அவன் மிகவும் விழிப்போடு எச்சரிக்கையுடன் வாழ வேண்டும்.

தீமைகள் பக்கம் ஒருவன் செல்கிறான் என்றால், அவன் பலவீனப்பட்டு, பாவம் செய்ய முனைந்து முன்னேறுகிறவன். வள்ளுவரோ, தீமைகளை, தீய வினைகளை, தம்பக்கம் வர விடாமல் விரட்டியடிக்க வேண்டும், என்ற வைராக்ய வாழ்வை உடையவராக வாழ்பவனே தலைவனாக வரமுடியும் என்கிறார்.

தீமையின் பக்கம் நெருங்காமல் இருப்பதைவிட, தீமைகளைத் தன்பக்கம் நெருங்கவிடாமல் விரட்டியடிக்கின்ற

வல்லமை கொண்டவனே வாழ்வில் தலைமையாளராக வாழ முடியும்.

தீவினையை நெருங்க விடாதவன், பிறர்க்குத் தீவினை செய்ய மாட்டான் என்ற நிதர்சன உண்மையை வள்ளுவர் 9 வது குறளில் விளக்கியிருக்கிறார்.

210. அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்

பொருள் விளக்கம்:

மருங்கோடி=மனத்தாலும், மனம் வேறுபட்டவன் பக்கம் சென்று
தீவினை செய்யான் = தீவினைகளைச் செய்யாத செம்மை
யுடையவன்; எனின் = என்றால்
அருங்கேடன் = என்றும் அழிவில்லாதவன்
என்பது அறிக = என்று நாம் நிச்சயமாக உணரலாம்.

சொல் விளக்கம்:

மருங்கு = ஒழுங்கு, பக்கம்
அருங்கேடன் = அழிவில்லாதவன், கேடில்லாதவன்
கேடன் = அழிப்பவன்

முற்கால உரை:

ஒருவன் செந்நெறிக்கண் செல்லாது கொடு நெறிக்கண் சென்று பிறர் மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின் அவன் அரிதாகிய கேட்டையுடையன் என்பதறிக.

தற்கால உரை:

ஒருவன் அறநெறியை விட்டுப் பக்கத்தில் ஓடி, தீயவினைகளைச் செய்வான் என்றால், அவன் நீக்குதற்குரிய கேட்டை உடையவன் என்று அறிக.

புதிய உரை:

மனத்தாலும் மற்றவர்களுக்குத் தீவினை செய்யாத ஒருவன் வாழ்வில் அழியாதவன் என்றும் நிலைத்திருப்பான் என்பதை நாம் நிச்சயமாக உணரலாம்.

விளக்கம்:

தீவினை என்பது வஞ்சனையால் விளைகிற தீச் செயல்கள். வஞ்சனை என்பது மனத்தின் வக்கிரம், நினைவின் நஞ்சு, எண்ண வெளிப்பாட்டின் ஈனம்.

உடலால் ஒருவனுக்குத் தீங்கிழைப்பது இயற்கையானதே. ஒருவனுக்கு ஏற்பட்ட பகையும் வன்மம், நெஞ்சுக்குள்ளே புகைந்து, தணலாக எரிந்து தகிக்கிறபோது தான், தான்தோன்றித்தனமான தவறுகள் தலைதூக்கி எழுகின்றன.

ஆகவே வள்ளுவர் இங்கே புதிய வழி ஒன்றைப் படைத்துக் காட்டுகிறார். நெருங்கிச் சென்று, தீவினை செய்யான் எனின் என்று புதிய வியூகம் படைக்கிறார்.

மனத்தால் பகைவனிடம் நெருங்கி ஓடி, தீவினை செய்வதும் கூட பாவம் தான். பாழாக்குகிற தீமைதான் என்பதை வள்ளுவர் பக்குவமாக எடுத்துக் காட்டுகிறார்.

ஆகவேதான், மனத்தால் கூட பகைவனை நெருங்காதவன் எப்படித் தீவினை செய்வான்? அப்படி நினைவால்கூட தீவினை செய்யாதவன் எப்படி இருப்பான்?

தீவினை செய்பவன் கேடன். அதாவது கேடுகளைப் பயப்பவன். ஆனால் வள்ளுவர் கூறுகிற சொல் அருங்கேடன். அருங்கேடன் என்றால் அருமையான கேடன் என்பதல்ல அழிவில்லாதவன், கேடில்லாதவன் என்பதுதான் அர்த்தம்.

மனத்தால் கூட, சிறிதளவு தீமை செய்யாதவனை, மனிதர்கள் மத்தியிலே, அழிவில்லாத மனிதனாகப் புகழ் பெற்று, நிலை பெற்று விடுகிறான்.

அதனால்தான் தீவினை செய்யான் எனின் என்றார். உடலால் செய்வது மிக எளிது. மனத்தால் செய்வது மிகவும் எளிது. ஆனால், மனத்தாலும் தீங்கு நினையாதிருப்பது அரியகாரியம் ஆகும். 9 வது குறளில் தீவினைகளை நெருங்கவிடாத திண்மை வேண்டும் என்றார்.

பத்தாவது குறளில், தீவினைகளை நெருங்கவிடாமல் இருப்பதை, அவற்றை நினையாதிருப்பதே பெரும் வலிமை என்று, மருங்கோடி என்று கூறி, அருங்கேடன் என்பதாக, நமக்கு அறிமுகப்படுத்தி, மனித ஆற்றலால் தீவினையை வென்றுகாட்ட முடியும் என்னும் நம்பிக்கையை நிறைத்திருக்கிறார்.

22. ஒப்புரவறிதல்

வேறுபட்ட மனம், மாறுபட்ட செய்கை, கூறுபட்ட குறுக்கீடு, கோபப்பட்ட செயல்கள். இப்படித்தான் தீவினைகள் மக்கள் மனத்திலே இடம் பிடித்து, பதம் அழித்து, வதப்படுத்தி விடுகின்றன.

தீவினை என்பது அடுப்பு போன்றது என்பதைக் குறிக்கவே தீவினை அச்சம் என்ற அதிகாரத்தைப் பாடி, அதற்கு அடுத்ததாக ஒப்புரவறிதல் என்று தந்திருக்கிறார்.

ஒப்புரவறிதல் என்றால் உலக நடைக்கேற்றவாறு பிறருக்கு உபகாரம் செய்தல் என்று ஆய்வறிஞர்கள் பொருள் கூறுகின்றார்கள்.

உலக நடை என்றால், உலக வழக்கமும், உலக ஒழுக்கமும் என்று அர்த்தமாகிறது. அதைச் சிறப்பாக, உலகியல் என்றும் பெருமைபடக் கூறுவார்கள்.

உலகியல் என்றால் உலக நீதி. உலக நீதி என்றால் இயல்பான நீதி. இயல்பு என்றால் ஒழுக்கம், நற்குணம், நேர்மை. ஆகவே, உலக நீதி என்பதற்குச். சமுதாயத்தில் உருவாக்கப்பட்டு, சகலராலும் சம்மதத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சம்பிரதாய மாகப் பின்பற்றக் கூடிய செயல் பாடுகளும், கடமைகளும், நிர்ப்பந்தங்களும் தாம் என்றும் விளக்கம் கூறலாம்.

ஒ + புரவு என்று ஒப்புரவு என்ற சொல்லை இரண்டாகப் பிரிக்கிறோம். **ஒ** என்றால் நிகர், சமம், தகுதி, பொருந்த என்றும், **புரவு** என்றால் **கொடை** என்றும் பொருள் வருகிறது.

இயற்கையானது சமுதாயத்திற்கு வழங்கிய நல்ல கொடையே ஒப்புரவாகிறது. காட்டிலே மிருகங்களோடு மிருகமாக வாழ்ந்த மனிதர்களுக்கு ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்கள், ஒற்றுமையாக வாழ ஊக்குவித்தன. எல்லோரும் போர்ப்படை வீரர்கள் போல இருந்து, ஒருவருக்கொருவர் உதவி, உற்றார் உறவினர்களாக வாழவேண்டும் என்று உறுதி எடுத்தனர்.

சமு = போர்ப்படை; **தாயம்** = உறவு. ஆகவே, ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்த காலம் மாறி, எல்லோரும் சமம். சமமான உறவு வேண்டும் என்பதற்காக சம + தாயம் ஆனார்கள்.

காலம் செல்லச் செல்ல, சமுதாயத்தில் சச்சரவுகளும் குழப்பங்களும் கூடி வரவே, சமுதாயம், வீரிழந்தது. சமுதாயம் தன் கூரிழந்து, குமுதாயம் ஆயிற்று. மனக் குமுறல்களே மனிதர்களை ஆளத் தொடங்கியபோதுதான், தீவினைகள் போன்ற வேண்டாத வினைகள், பூகம்பமாகக் கிளம்பின.

அந்தக் காலக் கட்டத்தில்தான் போரும் பூசலும்; சண்டைகளும் சச்சரவுகளும்; கூடிவர, நல்வினைகள் மாறி, வல்வினைகளாகி, கடைசியில் சொல்வினைகளாக வடிவெடுத்தன.

இயற்கையளித்த கொடையானது அன்புமனம், ஆதரவு குணம், இவற்றோடு ஒப்புரவாகி, ஒப்புறவாக வாழுங்கள் என்று மக்களுக்கு விளக்கி, வழிகாட்டவே, இந்த அதிகாரத்தைத் தீவினை அச்சத்திற்குப் பிறகு வைத்திருக்கிறார்.

மக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்காக, மக்கள் மனங்களிலே வேற்றுமையை நீக்கிடும், ஆற்றல்களைக் காட்டி அமைதி வாழ்க்கையை வாழ்வதற்கு உதவுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு.

பொருள் விளக்கம்:

கைம்மாறு வேண்டா = ஒழுக்கமோ பகையோ என்று எதுவும் எதிர்பார்க்காமல்
கடப்பாடு = தன் தலையாய கடமையென்று
மாரிமாட்டு = பொழிகிற மழை பற்றி
உலகு என்னாற்றும் = உலகம் என்ன செய்கிறது?
கொல்லோ = வீண் வார்த்தைகளால் விமர்சித்துக் கொண்டிருக்கிறது.

சொல் விளக்கம்:

கை = ஒழுக்கம்; **மாறு** = பகை; **கடப்பாடு** = கடமை
கொல் = அலட்டு; வீண் வார்த்தைகளை மென் மேலும் கூறுதல்
மாரி = மேகம், அழிவு, நீர், சாவு, மழை

முற்கால உரை:

தமக்கு நீருதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன? ஆதலால் மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும். கைம்மாறு நோக்குவன அல்ல.

தற்கால உரை:

ஒப்புரவுகள் கைம்மாற்றை விரும்பா மழைக்கு உலகம் யாது கைம்மாற்றினைச் செய்யும்?

புதிய உரை:

எல்லாவற்றையும் சமமாக மதித்து, பெய்து உதவுகிற மழைபற்றி உலகினர் என்ன செய்கிறார்கள்? வீண் வார்த்தைகளைப் பேசித்தான் வரவேற்கின்றார்கள். அதற்காக மழையும் தன் கடமையை நிறுத்துவதில்லை.

விளக்கம்:

இயல் + கை தான் இயற்கை ஆகிறது. இயல் என்றாலும் ஒழுக்கம். கை என்றாலும் ஒழுக்கம். ஒழுக்கத்தைக் காக்கும் உன்னத இயக்கங்களே பஞ்ச பூதங்களாகும்.

பஞ்ச பூதங்களின் பாங்கும், பண்பாடும், தங்களது கடமைகளை விடாது தொடர்வதுதான். ஏற்றுக் கொள்பவர்கள் போற்றுகின்றார்களா? தூற்றுகின்றார்களா? வரவேற் கின்றார்களா?

வசைபாடுகின்றார்களா என்றெல்லாம் இயற்கை பார்ப்பதில்லை. தொடர்ந்து தன் தொழிலைச் செய்கின்றன.

மனிதர்கள் செய்வதைச் (செயல் + கை), செயற்கை என்பார்கள். செயல் ஒழுக்கம் செம்மையாக இருக்க வேண்டும் என்பதால்தான் செயற்கை என்றனர்.

மாரி மாட்டு என்று வள்ளுவர் இங்கே குறிப்பிடுகின்றார். மாரி என்றால் மழை, மழை என்றும் மேகம் என்றும் கூறலாம். மழையைப் பற்றி மக்கள் என்ன பேசுகிறார்கள்? மழை பெய்தும் கெடுக்கும். காய்ந்தும் கெடுக்கும். மழையைப்பற்றி வீண்வார்த்தை பேசுவார்கள் என்பதால் தான், மாரி என்ற சொல்லுக்கு நீர் என்றும், நோய் என்றும், சாவு என்றும் அர்த்தங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

மழையைப் பற்றிப் பேசினாலும் ஏசினாலும், மழை தன் தொழிலை விடுவதில்லை. அதுபோலவே, மனத்தால் உயர்ந்தவர்கள். மற்றவர்கள் தங்கள் உதவியை எதிர்பார்க்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி, கவலையே படாமல், தங்கள் கடமைகளைச் செய்து விடுகின்றனர்.

மாரியின் உதவிக்கு மக்கள் எதை ஈடாகச் செய்ய முடியும்? என்ன சொல்லிப் போற்ற முடியும்? வருவதை நல்ல மனத்துடன் வரவேற்கும் பக்குவம் மக்களுக்கு இல்லை. இலவசமாக வரும் எந்தப் பொருளையும் இதய பூர்வமாக ஏற்றுக் கொள்வதில்லை.

இந்தக் குணங்களைக் கொண்டிருக்கிற மக்களுடன் வாழ்கிற, பண்பாளர்கள், இயற்கை போல இருக்க வேண்டும். உதவ வேண்டும். எல்லோரையும் சமமாகப் பாவிக்க வேண்டும். சேவிக்க வேண்டும் என்று முதல் குறளில் ஏற்பவரைப் பற்றி எண்ணாமல், எந்த உதவிகளையும் செய்க என்று மக்களை வள்ளுவர் ஆற்றுப்படுத்துகிறார்.

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள் விளக்கம்:

தாளாற்றித் தந்து = முயற்சி செய்து வளர்த்து வலிமையுடைய
பொருள் எல்லாம் = உடல் முழுவதும்
தக்கார்க்கு = தகுதி உடைய நன்மக்களுக்கு

வேளாண்மை = உதவி செய்கிற
செய்தற் பொருட்டு = பேராண்மையை மேம்படுத்தும் பொருட்டேயாம்

சொல் விளக்கம்:

தாளாற்றி = முயற்சித்து; **ஆற்றுதல்** = வலிமை அடைதல்
பொருள் = பொன், உடல்; **தக்கார்** = தகுதி உடையவர், சிறந்தோர்
வேளாண்மை = கொடை, ஈகை, உதவி
செய்தல் = அரியசெயல், பேராண்மை
பொருட்டு = மேம்படுத்த, நிமித்தம்.

முற்கால உரை:

தகுதியுடையார்க்காயின் முயறலைச் செய்தீட்டிய பொருள் முழுவதும், ஒப்புரவு செய்தற் பயத்தவாம்.

தற்கால உரை:

முயற்சி செய்து தந்த பொருளெல்லாம், தகுதி உடையார்க்கு உதவி செய்தற் பொருட்டேயாகும்.

புதிய உரை:

மிகுந்த முயற்சியுடன் வளர்த்துக் கொண்ட வலிமையான உடலால், உதவி வேண்டிய தகுதியுள்ளவர்களுக்கு உதவுவதே மேம்பாடுமிக்க பேராண்மையாகும்.

விளக்கம்:

உடலுக்குப் பொருள் என்றும் பொன் என்றும் அர்த்தங்கள் உண்டு. உழைத்து, வருத்தி, திருத்தி செய்கிறபோதுதான், பொருளாகிய முதல், பல்கிப் பெருகி, வளம் சேர்க்கின்றது.

தீயில் வெந்தும், உருகியும், அடிபட்டும் பொடிபட்டும் கிடக்கின்ற பொன்தான், பிறர் வியக்கும் வகையிலும், மயக்கும் அழகிலும் ஆபரணங்களாகி வெளி வருகின்றன.

ஆகவே, உடலுக்கும், பொருளுக்கும், பொன்னுக்கும் உள்ள ஒற்றுமையான குணமானது, தேவைப்படு கிறவர்களுக்கும், விரும்பி ஏற்றுக் கொள்கின்றவர்களுக்கும் உதவி, மகிழ்ச்சியை வழங்குவதேயாகும்.

அதனால்தான், தாளாற்றித் தந்த பொருள் என்றார். பொருளில்லார்க்கு - அதாவது நல்ல உடல் வளம்

அமையாதவர்களுக்கு உதவுகிற எண்ணமே எழாது. தன் இயலாமையை நொந்து கொண்டிருக்கிற நெஞ்சம், பிறரை எண்ணுமோ? அரிய செயலைப் பண்ணுமோ?

நல்ல உடல் மூலம் நிறைவாக இருக்கிற நல்ல மனம் தக்காரைத் தேடவும் தகுதியுடையார்க்குரிய தேவைகளைப் புரிந்து கொள்ளவும், அவர் மகிழும் வண்ணம் தமது பேராண்மையால், உதவவும் முடியும் என்று வள்ளுவர், உடலை வைத்தே இந்த உலகமும் உதவியும் என்கிறார்.

வேளாண்மை செய்தல் என்பதில், வேளாண்மை தருகிற கொடை, ஈகிற இன்பம், உதவுகிற உபகாரம். எல்லாம் அரிய செயல். அதுவே பேராண்மை என்பதைக் குறிக்க செய்தல் என்கிறார். பொருட்டு என்றால் மேம்படுதல்.

பிறர்க்கு உதவி மேம்படச் செய்து, தனது ஒப்புரவால் தானும் மேம்படுவதையே செய்தற் பொருட்டு என்றார்.

மாரி போல உதவ மனம் வேண்டும் என்றால், பேராண்மை மிக்க உடல் வேண்டும். அதன் மூலம் அரிய செயல் நிகழ்த்த முடியும் என்று 2வது குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பொருள் விளக்கம்:

புத்தேள் = புதுமை நிறைந்த
உலகத்தும் = உயர்ந்த மக்களிடத்தும் கூட
ஒப்புரவின் = உலக முறைமையான சமமும் சமாதானமும்
நல்லபிற = மற்றும் ஒப்புரவினால் கிடைக்கும் நன்மைகளைப் போல; ஈண்டும் = நிறைய
பெறல் அரிதே = பெறுவது அரிதானதாகும்.

சொல் விளக்கம்:

புத்தேள் = புதுமை; **உலகம்** = உயர்ந்தோர், மக்கள், உலகு
ஈண்டும் = நிறைய; **நல்ல** = நன்மை

முற்கால உரை:

தேவருலகத்தும் இவ்வுலகத்தும், ஒப்புரவு போல நல்லன பிறசெயல்களைப் பெறுதலரிது.

தற்கால உரை:

ஒப்புரவு போன்ற மற்றை நல்ல செயல்களைத், தெய்வ உலகத்தும் இவ்வுலகத்தும் பெறல் அரிது.

புதிய உரை:

புதுமைகளை விரும்பும் உயர்ந்த மக்களிடத்தும் கிடைக்காத சமம், சமாதானம், ஒற்றுமை போன்ற நன்மைகள், ஒப்புரவு மூலம் நிறையவே கிடைக்கிறது.

விளக்கம்:

புத்தேள் என்றால் தெய்வம் என்று ஒரு பொருள். புதுமை என்றும் ஒரு பொருள். பரிமேலழகர், மற்றும் அவரைப் பின்பற்றி உரை எழுதிய உரையாசிரியர்கள் எல்லோரும், தேவருலகம், தெய்வ உலகம் என்று பொருள் கூறினர்.

டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், புகழ் உலகம், அதாவது வான் புகழ் கொண்டோரின் புகழ் உலகம் என்று பொருள் கூறுகிறார்.

புத்தேள் என்றால் புதுமை என்றும், உலகத்து என்றால் உயர்ந்தோர், மக்கள், சான்றோர், நிலம், பூமி என்றும் உள்ள பொருட்களைக் கொண்டு, புதுமை விரும்புகிற சான்றோர்கள், உயர்ந்த மக்கள் என்று பொருள் கண்டிருக்கிறேன்.

அறிவுள்ள நான்கு பேர் ஒன்று சேர்ந்தாலே, அங்கே குழப்பம், புகைச்சல், பகை, சச்சரவு தோன்றும் என்பார்கள். அனுபவமுள்ளவர்கள். அதனால்தான், வள்ளுவர் மிக சாமர்த்தியமாக, ஒப்புரவின் நன்மைகளாக விளங்குகிற, சமம், ஒற்றுமை, சமாதானம் உதவி போன்றவை புதுமை மனத்தாரிடம் நிறைய கிடைக்காது. ஒப்புரவில் ஒப்புதல் கொண்ட உள்ளத்தில்தான் நிறைய கிடைக்கும் என்கிறார்.

இரண்டாம் குறளில், ஒப்புரவான பிறர்க்குத் தேவை அறிந்து செய்கிற உதவியை, உடலால் நிறைவேற்ற வேண்டும். அரிய செயலாற்றுகின்ற ஆண்மை, வல்லமை உள்ள உடலில்தான் நிறைய வாழும் என்றவர், மூன்றாவது குறளில், மக்கள் உயர்ந்தோராக இருக்கலாம்; சான்றோராகத் திகழலாம்; ஒழுக்கத்தில் நிறைந்தோராக வாழலாம் என்கிறார்.

ஆனால், மனத்தளவில் இந்தக் குணங்களைக் கொண்டிருந்தால்தான் மகிமைகளைச் செய்ய முடியும். மற்றவர்களையும் சமமாக நடத்தி, ஒற்றுமையை வளர்த்து. சமாதானத்தை நிலை நிறுத்த முடியும் என்று, ஒப்புரவை மனத்தால் பெறுகிறபோதுதான், உயர்ந்த உலகைப் படைக்க முடியும் என்று உறுதிபடக் கூறுகிறார்.

214. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்.

பொருள் விளக்கம்:

ஒத்தது = (இயற்கைக் கேற்ப) தனது உடலுக்கு எது ஏற்றது என்பதை
அறிவான் = உணர்ந்து அறிந்து கொள்கிறவனே
உயிர் வாழ்வான் = உயிர்ப்புடன் வாழ்வான்
மற்றையன் = அப்படி வாழத் தெரியாதவன்
செத்தாருள் = (நடைப் பிணம்போல) இறந்தாருள் ஒருவராக
வைக்கப்படும் = கருதப்படுவார்

சொல் விளக்கம்:

ஒத்தது = உணர்ந்தறிந்து ஏற்றது; **உயிர்** = உயிர்ப்பு

முற்கால உரை:

உலக நடையினை அறிந்து செய்வான், உயிரோடு கூடி வாழ்வானாவான். அஃதறிந்து செய்யாதவன், உயிருடையவனே ஆயினும், செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும்.

தற்கால உரை:

நாட்டுக்கு ஒத்தச் செயலைச் செய்பவன், உயிரோடு கூடிவாழ்பவன் அச் செயலைச் செய்யாதான், இறந்தவருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

புதிய உரை:

இயற்கையோடு இயைந்து வாழத் தெரிந்தவன் உயிர்ப்பு சக்தியுடன் வாழ்கிறான். அஃதறியாமல் வாழ்கிறவன் சத்திழந்து நடைப்பிணமாய் வாழ்கிறவனாக மாறி, செத்தவனாகக் காட்சியளிக்கிறான்.

விளக்கம்:

உயிர் என்பது ஆன்மா. காற்று சீவனாக விளங்குகிறபோது அது சீவாத்மா அல்லது உயிர்க்காற்று என்று பெயர் பெறுகிறது.

உயிர்க்காற்று உடம்பில் நிறைய இருக்கும்போது, உடலுக்கு உயிர்ப்பு சக்தி அதிகமாகும். அப்போது அவன் செம்மாந்த நடை நடப்பான். சிலிர்ப்புடன் நிமிர்ந்து நிற்பான். நலிவும் அழிவும் தரும் நோய்கள் அணுகாத, நிறை வாழ்வு வாழ்வான். அதைத்தான் வள்ளுவரும் உயிர் வாழ்வான் என்று கூறுகிறார்.

உயிர்ப்பு சக்தி எங்கே உருவாகிறது? இயற்கையோடு இயைந்து வாழ்கிறபோதுதான், உடலிலே நீர், வெப்பம், காற்று முக்கிய பங்கு வகிப்பது போல, உலகிலே நீர், வெப்பம், காற்று மூன்றும்தான் ஆண்டு அரசாள்கின்றன. இயற்கையை, மனித உடலில் உள்ள ஐம்புலன்களும்தாம் உணர்ந்து தெரிவிக்கின்றன. இயற்கையை உணர்கின்றதற்கு உணர்வு என்று பெயர். அதை ஆங்கிலத்தில் Sense என்பார்கள்.

பார்த்தல், கேட்டல், ருசித்தல், சுவாசித்தல், உணர்தல் எனும் ஐந்து உணர்வுகளும் சரிவர செயல்படுகிறபோதுதான், அதை முற்றுணர்வு என்கின்றனர். அதைத்தான் ஆங்கிலத்தில் Common Sense என்பார்கள்.

ஐம்புலன்கள் உணர்கின்ற உணர்வுகளே, உடலால் அறியப்பட்டு, மூளையில் பதிகிறபோது, அறிவாகமாறுகிறது. ஆக, அறிவுக்கு உணர்வுகளே ஊற்றுக் கண்ணாக அமைகின்றன.

தன் தேகத்திற்கு எது ஒத்துக் கொள்கிறது? எதை ஏற்கமறுக்கிறது என்பதைத் தெரிந்து தெளிந்து கொள்கிற ஒருவன்தான் தேகநலம் பெற்று, வளம், பலம் பெற்று வாழ்கிறான் அப்படி அவன் புத்துணர்ச்சியோடு வாழ்வதைத் தான் உயிர்ப்பு சக்தி என்கிறோம்.

அப்படி இயற்கை நிலையை அறியாமல் தனது விருப்பப்படி வாழ்கிறவன், ஏற்றுக்கொள்ளாத உடல் நோய் வாய்ப்பட்டுப்போக, அதனால் நொந்து நலிந்து, நைந்து சத்திழந்து செத்தவனாகி விடுகிறான்.

உயிர்ப்பற்ற நிலையையே பிணம் என்கிறோம். ஆகவே அவன் நடைப்பிணம் என நடமாடுகிறான். அவனது வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை என்பதால்தான், அவனைச் செத்தாருள் ஒருவனாக வைக்கப்படுகிறான். ஆகவே, இயற்கையோடு ஒத்த வாழ்வு வாழ்கிறவனே, ஒப்புரவு குணம் மேலோங்க, **உடலாலும் மனத்தாலும், ஆத்மாவாலும்** உயர்ந்த வாழ்வு வாழ்கிறான் என்று தனது 4வது குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு.

பொருள் விளக்கம்:

ஊருணி = ஊரெல்லாம் உண்ணும் நீர்நிலையாகிய குளம்
நீர் நிறைந்தது அற்றே = நீர் நிரம்பிப் பெருகியிருப்பது போல,
உலகு அவாம்= சிறந்த மக்களும் விரும்பிப் போற்றுகிற
பேரறிவாளன் = உலக ஞானம் மிகுந்தவனின்
திரு = எழிலான உடலும் வாழ்க்கையும் அமைந்திருக்கிறது

சொல் விளக்கம்:

திரு = அழகு, எழில், செல்வம், வாழ்க்கை தெய்வத்தன்மை
ஊருணி = ஊரெல்லாம் உண்ணும் குளம்

முற்கால உரை:

உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவனது செல்வம், ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போலும்.

தற்கால உரை:

உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை ஆள்கின்றவன் செல்வத்தை அடைதல், ஊருணி நீர் நிறைந்தது போலும். (வ.உ.சி)

புதிய உரை:

உலக ஞானம் மிகுந்தவனின் (வலியதேகம், இனிமையான மனம்கொண்ட) தெய்வாம் சமான வாழ்க்கையானது, ஊரெல்லாம் உண்ணும் -குளத்து. நீர்போல் உதவுகிறது.

விளக்கம்:

பிறருக்கு உதவ விரும்புகிறவருக்கு நிறைய செல்வம் மட்டும் இருந்தால் போதாது. நீட்டிய கரங்களுக்கும், கேட்கிற குரலுக்கும், இரங்குகின்ற இதமான மனம் வேண்டும். பதமான குணம் வேண்டும்.

அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள், ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்கிறவர்களாகவே உலா வருவார்கள். உடலழகும், மன அழகும் தான் ஒருவரது வாழ்க்கையின் பூரணமாகப் பிரகாசிப்பதால்தான், வள்ளுவரும் **திரு** என்றார்.

அதையும் பேரறிவாளன் திரு என்றார். பேரறிவு + ஆளன் என்பவன், பெரும் ஞானம் உடையவன். உலக ஞானத்தில்

முதிர்ச்சி உடையவன். ஒப்புரவில் எழுச்சி உள்ளவன். பிறர் மகிழ்வது கண்டு, மகிழ்ச்சி அடைபவன்.

நிரம்பியிருக்கிற நீரைக் கொண்ட குளம் வருவோர் யாரென்று பார்ப்பதில்லை. குலம், கோத்திரம், பகை நட்பு பெரியவர் சிறியவர் என்று பார்ப்பதில்லை.

மதித்தும் துதித்தும் வருபவர்கள்மனம் குளிர உதவுகின்ற பாங்கு ஊருணிக்கு உண்டென்பதால், அதையே ஒப்புரவாளருக்கு உவமை காட்டினார்.

நீர் என்ற சொல்லுக்கு அமுதம் என்று ஓர் அர்த்தம். நீண்ட நாள் உயிர் காக்கும் குணம் அமுதத்திற்கு உண்டு என்று, கதைகள் பல புராணங்களில், காவியங்களில் கூறப்படுவதுண்டு.

அ + முதம் என்று அமுதம் பிரிகின்றது.

அ என்றால் அகமும் புறமும் என்பார்கள். **முதம்** என்றால் **மகிழ்ச்சி** என்பார்கள்.

உடலுக்குத் தாகம் தீர்த்து, ஏற்படுத்துகிற மகிழ்ச்சி புற மகிழ்ச்சி. மனத்துக்குத் திருப்தியை அளிக்கிற மனமகிழ்ச்சி அகமகிழ்ச்சி.

அதுபோலவே வந்தார்க்கு வரவேற்பு தந்தும், விரும்பியதை ஈந்தும், இல்லாமையைப் போக்கி, நல்லாண்மையை ஏற்படுத்துகிற பேரறிவாளன் வாழ்க்கை இயற்கைபோல, செயல் ஒழுக்கத்திற்குச் சான்றாக அமைந்திருக்கிறது என்று 5 வது குறளில் அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்

பொருள் விளக்கம்:

பயன்மரம் = இனிய பழங்களைத் தருகின்ற மரம்
உள்ளூர் = ஊரின் நடுவே
பழுத்தற்றால் = பழுத்து பயன்படுவதுபோல,
நயன் உடையான் = இரக்கம் மிகுந்த கொடையாளியின்
செல்வம் = செழுமை மிக்க வாழ்க்கையானது
கண்படின் = யாவர்க்கும் (ஞானத்தின்) நற்கொடையாக அமையும்.

சொல் விளக்கம்:

நயன் = இன்பம், உறவு, இரக்கம், கொடையாளி
கண் = உடம்பு, அறிவு, ஞானம், அகக்கண், புறக்கண்
செல்வம் = வாழ்க்கை

முற்கால உரை:

செல்வம் ஒப்புரவு செய்வான் கண்ணே படுமாயின், அது பயன்படுமரம் ஊர் நடுவே பழுத்தாற் போலும்.

தற்கால உரை:

ஊரின் நடுவே இருக்கும் பழுத்த நல்ல மரம், எல்லா மக்களுக்கும் பயன்படுவது போல, ஒப்புரவு உடையான் செல்வமும் எல்லோர்க்கும் பயன்படும்.

புதிய உரை:

இனிய பழங்களைத் தந்து, உள்ளூர் மரம் எல்லோர்க்கும் உதவுவதுபோல, இரக்கம் மிகுந்த கொடையாளியின் வாழ்க்கையும், யாவர்க்கும் நற்கொடையாக அமைந்து காக்கிறது.

விளக்கம்:

ஊர் நடுவே பழுத்த மரம் இருக்கிறது. இனிமையான கனிகளைக் கொடுப்பதால்தான், எல்லோரும் விரும்புகின்றனர். பயன்படுகிற காரணத்தால்தான், மரமும் மதிக்கப்படுகிறது. பழங்களும் பறிக்கப்பட்டு, சுவைக்கப்படுகிறது. போற்றப்படுகிறது.

பறிப்பாருக்கும் சுவைப்பாருக்கும் பெருமகிழ்வூட்டுகிற பழுத்த மரம் போல, நயனுடையான் செல்வம் இருக்கிறது. நயனுடையான் என்றதும், இரக்கப்படுகிறவன், ஈர நெஞ்சுடன் உறவு பாராட்டுகின்றவன், கொடைதந்து சீராட்டுகின்றவன் என்னும் குறிப்பை முதலில் காட்டுகின்ற வள்ளுவர், செல்வம் என்றார்.

செல்வம் என்றால் இன்பம், கல்வி, சீர், செழிப்பு, அழகு, ஆக்கம், நுகர்ச்சி என்று பொருள் கிடைப்பதால், இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக வாழ்க்கை என்று அமைந்து விடுகின்றன.

எல்லா பண்புகளுக்கும் உறைவிடமானது வாழ்க்கை. வாழ்க்கை என்னும் சொல், இவ்வளவு பண்புகளையும் குறிக்காது என்பதால்தான், செல்வம் என்று சிறப்பாகச் சொன்னார்.

இரக்கம் மிகுந்த வாழ்க்கையின் அகக் கண்ணும், புறக்கண்ணும், பொலிவான உடம்பையும், தெளிவான அறிவையும், நிறைவான ஞானத்தையும் கொண்டிருக்கும் என்னும் உண்மை நிலைக்கு - பழம் என்பதை உவமித்துக் காட்டினார்.

மரம் எனபது ஒப்புரவாளன உடல். பழம் எனபது ஒப்புரவாளனின் கருணை மிகுந்த கொடைகள். வாழ்க்கை என்ற ஊரிலே நடுநாயகமாக நடமாடுகின்ற உடலும், அதனுள்ளே பழுத்த அன்புச் சிந்தனைகளும், இன்ப செயல் முறைகளும், யாவர்க்கும் சொந்தமாகி, சுகமாகி மிளிர்கின்றன.

அதனால்தான் பயன்படுமரம் - நயன்படு வாழ்க்கை-வயப்படும் மக்கள் - சுகப்படும் உறவுகள் எல்லாவற்றையும் எழிலோவியமாக இந்த ஆறாவது குறளில் கூறியிருக்கிறார்.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்

பொருள் விளக்கம்:

பெருந்தகையான் = பெருமைக் குரியவன்
செல்வம் கண்படின் = வாழ்க்கையின், இரக்கப்படும்
கொடையால் உதவுவது; மரத்தற்றால் = வானத்திலிருந்து வருகிற
மருந்தாகி = (அகமும் புறமும் மகிழ்விக்கும்) அமுதம் போல
தப்பா = என்றும் தப்பாது உதவும

சொல் விளக்கம்:

பெருந்தகை = பெருமைக்குரியவன்;
பெருமை = வல்லமை, வீறு, விறல், மாட்சிமை, கீர்த்தி, சீர்மை
மருந்து = அமுதம்; **மரம்** = வானம்

முற்கால உரை:

செல்வம் ஒப்புரவு செய்யும் பெரிய தகைமையை உடையான் கண்ணே படுமாயின். அஃது எல்லா உறுப்பும் பிணிகட்கு மருந்தாய் தப்பாத மரத்தை ஒக்கும்.

தற்கால உரை:

ஒப்புரவாளனின் மிகுந்த செல்வம், ஒரு நல்ல மரத்தின் எல்லாப் பகுதிகளும் மக்களுக்கு மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும் (கா)

புதிய உரை:

பெருமைக்குரியவனது வாழ்க்கையானது, வானம் வழங்குகிற அமுதக் கொடைபோல, எல்லோருக்கும் உதவி மகிழ்விப்பதாகும்.

விளக்கம்:

5 வது குறளில் ஒப்புரவாளனின் உயர்தரமான உதவிகளை, ஊருணிக்கும், 6 வது குறளில் பழ மரத்திற்கும் ஒப்பிட்டுப் புகழ்ந்த வள்ளுவர் 7 வது குறளில் வானத்திற்கு ஒப்பிட்டுள்ளார்.

மீண்டும் மீண்டும் மரத்தையே ஏன் அவர் உவமை காட்டவேண்டும் என்று சிந்திக்கிறபோது, மரம் என்ற சொல்லுக்கு வானம் என்ற ஒரு பொருள் இருப்பதை அறிந்து, வள்ளுவரின் தமிழ்ப் புலமையையும், சொல்லைப் பயன் படுத்தும் திறமையையும் வாயார வாழ்த்தியே மகிழ்கிறோம்.

இயற்கையின் உயிர்க் கூறான நீருக்கும், இயற்கையின் இனிய வளர்பான மரத்திற்கும் மரியாதைதந்து உவமித்த வள்ளுவர், மூன்றாவது தடவையாக, வானத்தைக் கூறுகிறார்.

வானமானது வையக மக்களுக்கு வெளிச்சம், வெப்பம், காற்று, மழை என்ற அனைத்தும் அன்றாடம் அளித்து வாழச் செய்கிற சீர்மையை, மேன்மையைத்தான், பெருந்தகையானுக்கு நேர்ப்படுத்தி நவில்கின்றார்.

வானத்திலிருந்து வெளிப்படுகிற எல்லாமே, மக்களின் உடலை வளர்ப்பதற்கும், மனத்தை மகிழ்விப்பதற்குமே உதவுவதால்தான், வானத்தின் கொடையை மருந்து என அழைக்கிறார்.

நோய் தீர்க்கும் மருந்தானது, நலம் வளர்க்கும் துணையாகவும் அமையுமல்லவா! அமுதம்தான் மருந்தாக இங்கே குறிக்கப்படுகிறது.

உள்ளும் புறமும் ஏற்படும் மகிழ்ச்சியையே அமுதம் என்கிறோம். அந்த மகிழ்ச்சியை வானமானது, தினந்தினம் தந்து கொண்டேயிருக்கிறது. தவறாமல் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது என்றும் அதன் கொடை தப்பாது! அதன்

கொடைக்கு ஒப்பேது என்பதைத்தான் மருந்தாகித் தப்பாத வானம்போல, பெருந்தகையான் வாழ்க்கையும் அமைந்திருக்கிறது.

இதற்கும் மேலே ஒப்புரவாளரின் உன்னத நெஞ்சத்தின் பெருமையை எப்படிக் கூற முடியும்?

218. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் கடன்அறி காட்சி அவர்.

பொருள் விளக்கம்:

இடன் பருவத்தும் = வாழ்க்கையில் தக்க நிலைமை (இல்லறத்தில்)
இல் = இல்லாதபோதும்,
கடன் அறி = அதற்கான காரணத்தை அறிந்துகொள்கிற
காட்சியவர் = அறிவாளர்கள்
ஒப்புரவிற்கு = மற்றவர்கள் (மனம் குளிர) பயன்பெற உதவுவதற்கு
ஒல்கார் = மனமடங்க மாட்டார்கள்.

சொல் விளக்கம்:

இடன் = வாழ்க்கை, செல்வம்; **இல்** = இல்லறம், இன்மை
கடன் = காரணம், முறை, இறை, கடமை
காட்சியவர் = அறிஞர்; **பருவம்** = நிலைமை

முற்கால உரை:

தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்த இயற்கை அறிவுடையார் செல்வம் சுருங்கிய காலத்தும், ஒப்புரவு செய்தற்குத் தளரார்.

தற்கால உலை:

தம் பிறவியின் நோக்கத்தை அறிந்து கொண்ட அறிவாளர், தம்மிடம் உதவும் வாய்ப்பு இல்லாதபோதும், உலகுக்கு உதவும் செயல்பாட்டில் தளரார்.

புதிய உரை:

வாழ்க்கை இல்லற சூழ்நிலையில், தக்க நிலைமை இல்லாதபோது, அதற்கான காரணத்தை அறிந்து கெண்டு, பிறர்க்கு உதவும் பணியில் தொடர்வர். அந்தக் கடமையில் மனமடங்கமாட்டார்.

விளக்கம்:

மனிதன் என்பவன் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அப்படியே நிதமும் வாழ வேண்டும் என்பதே எல்லோரின் எதிர்பார்ப்பாகும். ஆனால், தனிமனிதனுடன் சேர்கிற துணையும், சுற்றி வரும் உறவும் அப்படி விட்டு விடுவதில்லை.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்று கூறுகிற அளவுக்குச் சுற்றமும் உறவும், சுருட்டி வளைத்துத் தொந்தரவுகள் உண்டு பண்ணுவது, மனித இனம் தோன்றியதிலிருந்து தொடர்ந்துதான் வருகிறது.

ஒழுக்கமாகிய அறத்தில் வாழும் அறன், துணை நலம் பெற்று இல்லறத்தில் ஈடுபடுகிறபோது, தேடிவருவது இன்பம் மட்டுமல்ல. இன்பத்தை விரட்டும் துன்பச் சூழ்நிலைகளும் தாம்.

அதைத்தான் **இல்பருவம்** என்கிறார் வள்ளுவர். இல்லறத்து நிலைமை என்றும் கூறலாம். இல்லாத நிலைமை என்றும் கூறலாம்.

இடன் என்றதும் செல்வம் என்றுதான் பொருள் கொள்கிறோம். செல்வம் என்பதற்கு வாழ்க்கை, செழிப்பு, சீர், இன்பம், பெருக்கம், நுகர்ச்சி, பாக்கியம் என்றெல்லாம் பொருள்கள் உள்ளன.

இடன் என்பதற்கு நல்ல காலம் என்றும் பொருள் உண்டு. ஒப்புரவாளர் வாழ்க்கையில் நல்ல காலம் இல்லாமல், அதனால், அவரது வாழ்க்கையில் சீரும் சிறப்பும், இன்பமும் ஏற்றமும், நுகர்ச்சியும் மலர்ச்சியும், செழிப்பும் கொழிப்பும், ஆக்கமும் பெருக்கமும், வாக்கியமும் போன்ற பல நிலைமைகள் மாறிப் போவதைத்தான் இல்பருவம் என்றார்.

அதனால் அறிவுள்ளவர்கள் கலங்கிவிட மாட்டார்கள். அதன் காரணத்தை அறிவார்கள். அதைத்தான் **கடன்அறி** என்றார் வள்ளுவர். இல்லாமைக்கான, இயலாமைக்கான காரணத்தை அறிந்து கொள்கிறவர், தமது கடமையையும், காப்பாற்றும் நிலைமையையும் உணர்ந்துகொண்டு, மனம் சுணங்கிப் போகாமல், கடமை குலைந்து போகாமல், மீண்டும், உலகுக்கு உதவுவதையே உயிர் மூச்சாகக் கொள்வர், என்று ஒப்புரவாளரின் நன்மைகள் புரியம் திண்மையான வாழ்க்கை உண்மை நிலையை எட்டாம் குறளில், பெருமிதமாக விளக்கிக் காட்டுகிறார்.

219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர செய்யாது அமைகலா ஆறு.

பொருள் விளக்கம்:

நயனுடையான் = இரக்கமும் உதவும் குணமும் கொண்ட உபகாரன்
நல்கூர்ந்தான் = வறுமெய்யால் வதங்கிப் போனாலும்
ஆதல்செயும் நீர = உதவி செய்யக் கூடிய ஒப்புரவு குணம்
செய்யாது = உதவி செய்யவிடாமல்
அமைகலா ஆறு = எந்த இடையூறையும் நிகழ்த்தாது. (உதவும்)

சொல் விளக்கம்:

நயனுடையான் = கொடைமனம் கொண்டவன்
நல்கூர்ந்தான் = வறுமையாளன்
நீர் = குணம்; **ஆறு** = பயன் ஒழுக்கம்; **கலா** = கலகம்

முற்கால உரை:

ஒப்புரவு செய்தலை உடையான் நல்கூர்ந்தானாதலாவது, தவிராது செய்யும் நீர்மையை உடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப் பெறாது வருந்துகின்றது இயல்பாம்.

தற்கால உரை:

உலக நலங் கருதிய நல்லோன், வறுமை உடையவன் ஆவது, அவன் செய்ய விரும்பிய உதவிகளைச் செய்ய முடியாமல் வருந்துகின்ற தன்மையே ஆகும்.

புதிய உரை:

ஒப்புரவாளன், தான் உடல் வறுமையால் வருந்துகிறபோதும், செய்கிற உபகாரங்களைச் செய்யாமல் நிறுத்திவிடுகிற இடையூறுகளுக்குப் பயன் கிடைக்காமல் செய்தும் காப்பான்.

விளக்கம்:

நல்கூர்ந்தான் என்னும் ஒரு சிறந்த சொல்லை, வள்ளுவர் இங்கே கையாண்டிருக்கிறார். நல் என்றால் நல்ல என்றும், கூர்தல் என்றால் ஆராய்தல், விருப்பம் கொள்ளுதல் என்றும் அர்த்தம்.

நல்கூர்ந்தான் என்றால் நல்லனவற்றில் அவன் நாட்டம் நிறைந்தவனாக, நுண்மையான ஆய்வு மதி கொண்டவனாக (ஆதல் என்றால் விருத்தியடைதல்) வளர்ச்சிப் பண்புள்ளவனாக என்றும் நாம் பொருள் கொள்ள இடம் உண்டு.

நல்கூர்ந்தான் என்பதற்கு வறுமையாளன் என்றும் பொருள் உண்டு. வறுமெய் என்பது வறுமை ஆகிறது.

வற்றிய மெய், வளமிழந்த மெய், வாழ்வை வதைத்துக் கொண்டு வதங்குகிற மெய் தான் வறுமெய் ஆயிற்று.

வாழ்க்கைச் சூழலில் உடல் நலிவுறுவதும், நோய்க்கு ஆளாவதும் இயற்கையல்லவா. செல்வம் மிகுதி கூட, நோய்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்துவதும் இயற்கைதானே!

அப்படிப்பட்ட, உடல் கேடுகள் உண்டானாலும் கூட, மனம் சோர்ந்து போகாமல், மற்றவர்க்கு உதவுகிற குணம் மாறுபடாமல், மடங்கிவிடாமல், தொடர்ந்து செய்கிற உதவிகளைத் துணிந்து செய்வார்கள் ஒப்புரவாளர்கள்.

அவர்கள் ஆற்றுகிற அரிய உதவிகளுக்கும், போற்றுகிற புனிதப் பணிகளும், வறுமெய்யானது இடையூறுகளை விளைவிக்காது. அப்படி விளைவித்தாலும், அதற்குரிய பயனை இடையூறுகள் பெற முடியாது.

அனைத்தையும் மீறி, ஒப்புரவாளன், உயர்ந்த தொண்டான ஒப்புரவினை வைத்துக் கொள்வான். வளர்த்துக் கொள்வான். மற்றவர்களையும் மகிழ்வித்து மகிழ்வான் என்று ஒப்புரவாளனது திண்மையான மனத்தின் தேர்ந்த நல்வினையை, 9 ஆம் குறளில் குறித்துக் காட்டுகின்றார்.

220. ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

பொருள் விளக்கம்:

ஒப்புரவினால் = உயர்ந்த உலகத் தொண்டாற்றலின் காரணமாக
கேடெனின் = கழிவும், சிதைவும் போன்ற கெடுதல்கள்
வரும் = பொறாமை கொண்டவர்களால் ஏற்படும்.
அஃது ஒருவன் = அப்படிப் பட்ட சூழ்நிலையில், ஒப்புரவாளனாகிய ஒப்பற்றவன்
கோள் விற்று = ஏற்பட்ட தீமைகளைப் புறந்தள்ளுகிற
தக்கது = தகுந்த செயல்களைச் செய்து
துடைத்து = அழித்து; வெல்லுவான்.

சொல் விளக்கம்:

கேடு = அழிவு, சிதைவு, தீமை, வறுமை, குறைவு
ஒருவன் = ஒப்பற்றவன்; **வில்** = விற்றல்
கோள் = தீமை, இடையூறு, புறந்தூற்றல், கோட்பாடு
தக்க = தகுதியான, தனதாக, பயன்படத் தகுந்த; **துடைத்து** = நீக்கி, அழித்து.

முற்கால உரை:

ஒப்புரவு செய்தலான ஒருவனுக்குப் பொருட்கேடு வரும் என்பருளராயின். அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து.

தற்கால உரை:

பொது நலங் கருதிப் பாடுபடுவதால், ஒருவனுக்குக் கேடு உண்டாகுமானால், அக்கேடு தன்னை விற்றுக்கூட வாங்கிக் கொள்ளும் தகுதி உடையது.

புதிய உரை:

ஒப்பற்றத் தொண்டினால், பொறாமை கொண்டவர்கள் ஏற்படுத்துகிற அழிவையும் தீமைகளையும், ஒப்பற்றவனான ஒப்புரவாளன் அதற்கேற்ற காரியங்களைச் செய்து (விரட்டி) வெற்றி பெற்றுத் தன் தொண்டினைத் தொடருவான்.

விளக்கம்:

ஒப்புரவின் வரும் கேடு என்பது, ஒப்பற்றத் தொண்டினால் உண்டாகின்ற புகழ் காரணமாகப், புழுக்கங் கொண்ட ஒழுக்கமற்ற பேர்கள், உண்டாக்குகின்ற கேடுகள்.

அத்தகைய கேடுகள் எல்லாம் ஒப்புரவாளரின் புகழை அழிக்கவும், பெயரைச் சிதைக்கவும், மதிப்பைக் குறைக்கவும், மானம் போவது போலப் புறந்தூற்றவும் செய்கிற சிறுமைத் தனங்களே.

அதனால் **ஒருவன்** என்றார். அதாவது ஒப்பற்றவன், உயர்ந்தவன், உறுதியானவன், உண்மையானவன்.

அத்தகைய ஆற்றலாளன், இழிஞர்கள் ஏற்படுத்திவிடுகிற தீமைகளை, இடர்ப்படுத்தும் இடையூறுகளை, புன்மை மதியால் புறந்தூற்றலை யெல்லாம் புரிந்து கொண்டு, அவற்றை அகற்றவும், அழிக்கவும், நீக்கவும், தன் தொண்டை நிலை நாட்டவும் கூடிய தகுந்த காரியங்களைச் செய்து வெல்வான். பிறர் இழைக்கும் கேடுகளைப் போட்டியாக நினைக்காமல், புறந்தள்ளி வென்று, தன் புனிதப் பணிகளைத் தொடர்வான்.

ஆகவே, உடலால், மனத்தால், ஆத்ம பலத்தால்தான் ஒப்புரவுப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். உடல் அழிவோ, மனச் சிதைவோ, ஆத்மாவின் குறையோ, அதனால் விளைகின்ற வ்றுமையோ, எதுவாக இருந்தாலும் ஒப்புரவாளன் தளர மாட்டான், தொண்டாற்றத் தயங்க மாட்டான். சிறந்தன செய்பவன், தகுந்தனசெய்வான், தன் பணியில் தீவிரம் காட்டி, உலக வாழ்க்கையில் ஒருவனாகத் - தலைவனாக வாழ்கிறான் என்று ஒப்புரவு அதிகாரத்தை முடித்து வைக்கிறார்.

23. ஈகை

ஒரு சமுதாயத்திலே வாழ்கிற மக்களை, மூன்று நிலையாகப் பார்க்கலாம். **தாழ்நிலை, சமநிலை, மேல்நிலை.**

சமுதாய வாசியான ஒருவர், தமக்குரிய அறிவு, பொருள், வசதி போன்றவற்றை அளவு கோலாக வைத்துப் பார்க்கிறபோது, அவருக்குக் கீழே தாழ்வான நிலைமையில் வதிபவர்கள்; தமக்குச் சமமாக, இணை நிலையில் வசிப்பவர்கள்; எல்லாவற்றிலும் தனக்கு மேலாக மேம்பட்ட நிலையில் விளங்குபவர்கள்.

நிலை வேறாக இருந்தாலும், ஒருவருக் கொருவர் உறவாடவும், கொடுக்கவும், பெறவும் போன்ற காரியங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். அப்போது, கொடுத்து வாங்கும் நிலையை, வளமான தமிழ்ச் சொற்கள், சுவையாகச் சொல்லிக் காட்டுகின்றன.

தனக்குத் தாழ்வாக உள்ளவர்களிடம் ஒன்றைக் கேட்கிறபோது, **கொடு** என்று அதிகாரம் செய்வது ஒருநிலை.

தனக்குச் சமமாக உள்ளவர்களிடம் ஒன்றைக் கேட்கிற போது **தா** என்று இயல்பான முறையில் கேட்பது ஒரு நிலை.

தனக்கு மேலாக உள்ளவர்கள் ஒன்றைக் கேட்கிறபோது FF என்று சொல்லில் குழைவையும் நெளிவையும் காட்டிக் கேட்டது மூன்றாம் நிலை.

இதையே ஈயென இரப்பது என்றும் சொல்வார்கள் ''பல்லெல்லாம் தெரியக் காட்டி, பருவரல் முகத்தில் தேக்கி, சொல்லெல்லாம் சொல்லி நாட்டி'' என்று ஈயென இரத்தல் செய்பவரின் ஏங்கும் நிலையை விளக்குகிறார் ஒரு கவிஞர்.

ஈயெனக் கேட்கும்போது, இல்லையென்று மறுப்பதும், ஈவதை விலக்கும் இழிசெயலைச் செய்வதும் பாவம் என்று மக்கள் மத்தியிலே ஒரு மரபே உண்டு.

ஆனால் ஈகிறபோதும், ஒரு மரபைக் காக்க வேண்டும்; மரியாதை செலுத்த வேண்டும். பெறுவோர் மனம் உறுத்தாதபடி பெருந்தன்மையுடன் தரவேண்டும் என்பதையே ஈகை என்று

ஒரு பொருள் பொதிந்த சொல்லைத் தமிழறிஞர்கள் படைத்திருக்கின்றனர்.

கை என்றால் ஒழுக்கம் என்று பொருள்.

ஒழுக்கம் என்கிறபோது, உடல் ஒழுக்கம், மன ஒழுக்கம் என இரண்டாகப் பிரிகிறது.

உடலாலும் ஒருவரை அவமானப்படுத்தலாம். மனத்தால், அது அளிக்கின்ற சொல்லால் கேவலப்படுத்தலாம். அப்படியும் சோர்ந்து விடாமல், ஈதலைச் செய்ய வேண்டும். அதுதான் உயர்ந்த பண்பாளர்களின் ஒப்புரவுத் தன்மை.

அதனால்தான், ஒப்புரவு என்னும் அதிகாரத்தை விளக்கிவிட்டு, அதில் பண்பாளர்களின் பெருமையை குறிப்பிட்டுக் காட்டி, அதன் தொடர்பாக, ஈவதில் உள்ள இதமான வழக்கத்தைப் பின்பற்றிப் பெருமையைச் சேர்த்துக் கொள்ள ஈகை எனும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

இல்லாத மக்கள் **ஈயாகப்** பறப்பார்கள். **தேனியாகத்** திரிவார்கள். **வண்டாகக்** கிடந்து குடைவார்கள். அதுதான் **ஈ** என்னும் சொல்லுக்கு அர்த்தமாகின்றது.

அப்படி அல்லல்படும் மனிதர்களுக்கு ஆதரவு தருவதுதான் கொடை. அளிப்பது வள்ளல் தன்மை. செய்வது தியாகம். தொழிலோ மேகம் போன்றது என்ற சீரிய கருத்துக்களையே ஈகை எனும் அதிகாரமாகத் தந்திருக்கிறார்.

221. வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

பொருள் விளக்கம்:

வறியார்க்கு = (உடலில் மனதில், வாழ்வில்) வலிமையற்று வருபவருக்கு

ஒன்று ஈவதே = அவருக்குத் தேவை என்று விரும்புவதைத் தருவதே

ஈகை = வரையாக் கொடையாகும்

மற்றெல்லாம் = விரும்பாததை வழங்குவது

எதிர்ப்பை = எதிர்பார்த்தவரிடம்

குறி = தன் பெருமையைச் சுட்டிக் காட்டி முன்னறிவிக்கும்

நீரது உடைத்து = குணம் கொண்டதாக அமையும்.

சொல் விளக்கம்:

ஈகை = வரையாக் கொடை, வள்ளண்மை

குறி = சுட்டிக்காட்டு, முன்னறிவி, நன்னடத்தை, ஒழுக்கம்

எதிர்ப்பை = எதிர்ப்பட்டவருக்கு (தன் நிறம் காட்ட)

நீரது = குணம், ஒன்று, பொருந்து,

முற்கால உரை:

ஒரு பொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே, பிறர்க்குக் கொடுத்தலாவது. அஃதொழிந்த எல்லாக் கொடையும் குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர்மை உடைத்து.

தற்கால உரை:

இல்லாதவர்களுக்குப் பயனை எதிர்பார்க்காமல் பொருளைக் கொடுப்பதுதான் ஈகை ஆகும். மற்றக் கொடுக்கல் எல்லாம் ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையனவாகும்.

புதிய உரை:

வாழ்க்கையில் வறுமைப்பட்டு வந்தவருக்கு, தேவைப்படுகிற பொருந்துகிற ஒன்றைத் தருவதே கொடையாகும். வேறொன்றைத் தருவது, வந்தவர்முன், தன் பெருமையைப் பறைசாற்றி பேற்கொள்கின்ற (குணமாகவே) முயற்சியாகவே அது அமையும்.

விளக்கம்:

வறியார் என்னும் சொல் எதைக் குறிக்கிறது? வறுமையாளர். எதில் அவர் வறுமையாளராயிருக்கிறார்? உடல் வறுமையா? மனவி வறுமையா? பொருள் வறுமையா? வாழ்வே வறுமையா?

அதை அறிந்து கொள்வதுதான் அருளாளரின் கடமையாகும். **ஒன்று ஈவதே** என்று அடுத்து வருகிற இரண்டு சொற்களும், மிக அருமையான, நுண்மையான குறிப்பொன்றைக் கூறுகிறது.

ஈவது என்று முடிவு செய்தவருக்கு எதை ஈவது? எப்படி ஈவது என்பதில்தான், புத்திசாலித்தனமும் அனுபவமும் பொதிந்திருக்கிறது.

ஒன்று என்பதற்குப் பொருந்துதல் என்று பொருள். வந்தவருக்கு உதவும் படியான, பொருந்துகிற ஒன்றைத்தான் தரவேண்டும். அதுவே ஈகை என்றால், ஈயும் அன்பர் தருவது பொருள் கொடையா, அருள் கொடையா, அறிவுக் கொடையா, வழி காட்டும் மாண்பா?

ஆகவே, வற்றிய உடல் என்றால், விருந்து. முற்றிய வறுமை என்றால் பணம் பற்றிய தொழிலுக்குப் பாதுகாப்பு என்று பொருந்துகிறதைத் தருவதுதான், துயர்தீர்க்கும் வள்ளண்மையாகும்.

இல்லாவிட்டால், எதிர்பார்க்காமல் தன்னிடம் இருப்பதைத் தருகிறபோது, அவரது வசதியையும், வளத்தையும், புகழையும், பறை சாற்றுவதாகவே அமையும்.

எதிர்காலத்தில் ஏதோ ஒன்று கிடைக்கும் என்ற பயன் கருதி, பரோபகாரத்தையே பாழாக்கிவிடும் செயலாய் அது அமையும் என்று வள்ளுவர் முதல் குறளிலேயே, முத்தாய்ப்பாக ஈகையின் இலக்கணத்தை வடிவாக்கித் தருகிறார்.

222. நல்லாறு எனினும் கொளல்தீது மேல்உலகம் இல்எனினும் ஈதலே நன்று.

பொருள் விளக்கம்:

நல்லாறு எனினும் = நல்ல பயன் கிடைக்கும் என்றாலும்
கொளல் = பிறரிடம் உள்ள பொருளை வவ்வுதல். (ஈகை என்ற பெயரில்)

தீது = பாவச் செயலாகும்
மேல் உலகம் = வாழ்க்கையில் மேம்பட்ட மக்கள் (அறிவுள்ளோரும் கூட)
இல்எனினும் = தேவையென்பார்க்குத் தரமறுப்பார்கள்.
ஈதலே நன்று = என்றாலும், பொருந்தும் உதவிகளை ஈவதே பெருமைக்குரிய அறமாகும்.

சொல் விளக்கம்:

நல்லாறு = நல்ல பயன்
கொளல் = வவ்வுதல், வாருதல், கவர்தல், கொள்ளுதல்
தீது = பாவம், உடம்பு, மரணம்.
மேல் = மேலிருப்போர், மேம்பட்ட
உலகம் = மக்கள், சிறந்தோர்; **நன்று** = நன்மை, சுகம், பெருமை.

முற்கால உரை:

ஏற்றல் வீட்டுலகிற்கு நல்ல நெறியென்பார் உளராயினும் அது தீது. ஈந்தார்க்கு அவ்வுலகம் எய்துதல் இல்லை என்பார் உளராயினும் ஈதலே நன்று.

தற்கால உரை:

பிறரிடமிருந்து ஒன்றைக் கொடையாகப் பெறுதல் நல்வழியே என்று ஒருவர் கூறினாலும், அவ்வாறு கொள்ளுதல் தீயது, கொடுத்தலான் புகழுலகம் இல்லையென்றாலும் ஒருவர் தடுத்தாலும் கொடுத்தலே நல்லது.

புதிய உரை:

ஈவோரிடம், நல்ல பயன் கிடைக்கும் என்று, அவர் வழங்குவதை வவ்வுதலும் கவர்தலும் பாவச் செயலாகும். சில மேல்நிலை மக்கள் ஈவதில்லை என்று மறுப்பார்கள். ஆனால் ஈதலே பெருமைக்குரிய செயலாகும். அது பெறுவோர்க்கும் தருவோர்க்கும் சுகம் பயக்கும்.

விளக்கம்:

கொளல் தீது என்பது, பிறரிடம் ஏமாற்றிப் பொருள் பெறுவது. அதனால் தான் கவர்தல், வவ்வுதல், வாருதல் என்று அர்த்தம் தருகிற **கொளல்** என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்.

மக்கள் எல்லோருக்குமே, பிறருக்கு உதவுகிற குணம் இருப்பதில்லை. வாழ்வில் எல்லா வளங்களையும் வசதிகளையும்

பெற்றிருக்கிறபோதும், பிறருக்கு ஈவதைப் பொறுப்பதில்லை. 'எச்சில்கையால் கூட காக்கையை விரட்டமாட்டார்கள்' என்னும் பழமொழிக்கு ஏற்ப, செல்வர்கள், அறிஞர்கள், மேல்நிலைக்கு உயர்ந்தவர்கள், உயர் பதவியில் உள்ளவர்கள் இருப்பார்கள் என்பதைக் குறிக்கவே **மேல் உலகம்** என்றார்.

எல்லாம் இருப்பவராக இருப்பது வேறு. இரக்கப்படுவது வேறு, எடுத்துக் கொடுப்பது வேறு.

கொடுக்கின்ற குணம், கருணை மனத்தின் உச்ச நிலை. ஆகவே தான், **மேல் உலகம்** என்று காட்டி, அது இல் எனினும் அந்த மேல் உலகமே இல்லை என்று ஈய மறுத்தாலும், ஈவது என்பது நன்று என்றார்.

மேல் உலகத்தார், தாங்கள் மட்டும் சுகம்பெற்று வாழ வேண்டும் என்று, சுய நலத்துடன் வாழ்கிறார்களே என்று ஆதங்கப்படும் வள்ளுவர், **ஈதலே நன்று** என்று ஏகாரம் இட்டுப்பாடுகின்றார்.

ஈதலே சுகம் என்கிறார். தேவையென்று தேடி வந்து தயங்கி நின்று, தயவைவென்று பெறுபவர்க்கு, எதுகிடைத்தாலும் மகிழ்ச்சிதான், சுகம்தான், அதுவல்ல முக்கியம்.

தன் பொருளைத் தரும் தியாக மனப்பான்மையிலும், ஈந்துவக்கும் செயலில் தான் சுகம் இருக்கிறது என்று வளம் உள்ளவர்கள் நலம் காக்க, 2வது குறளில் வழி காட்டுகிறார். ஈகை என்றாலே தியாகம் என்னும் ஒரு பொருள் இருப்பதை வள்ளுவர், வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்.

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

பொருள் விளக்கம்:

இலன் என்னும் = எதுவும் இல்லையென்று தன்னைப்பற்றி கூறுவானை

எவ்வம் உரையாமை = இகழ்ச்சியாகப் பேசாமல்

ஈதல் = பொருந்துகிற உதவிகளைச் செய்தல்

குலன் உடையான் = பண்பான உயர் குலத்தில் உள்ளவன்

கண்ணே உள = இடத்திலே இருக்கிறது.

சொல் விளக்கம்:

இலன் = வறிய நிலை
எவ்வம் = இகழ்ச்சி, வெறுப்பு, கபடம், துன்பம்
குலன் = குலத்தினன்.

முற்கால உரை:

யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரலை, பிறர்கண் சொல்லாமையும், அதனைத் தன்கண் சொன்னார்க்கு, மாற்றாதிதலும் இவை இரண்டும் குடிப்பிறந்தான் கண்ணே உள்ளன.

தற்கால உரை:

இரந்து வருபவனிடம் தான் வறுமை உடையவன் என்னும் துன்பம் தரும் சொல்லைக் கூறாது கொடுப்பது என்பது, உயர்ந்த குடிப்பிறந்தவனிடம் மட்டுமே இருக்கும்.

புதிய உரை:

எதுவும் இல்லாத வறியவன் தன்னிடம் இல்லையென்று கூறுவதைக் கேட்டு, இகழ்ச்சியாகப் பேசாமல், வேண்டியதை வழங்குகிற குணம், உயர்குலமகன் என்னும் இடத்திற்கு உயர்த்துகிறது.

விளக்கம்:

இலன் எனும் சொல், எதுவுமே இல்லாதவன், வசதியிலே வறியவன், வளத்திலே குறைந்தவன், வாழ்க்கையை இழந்தவன், வழியேதும் அறியாதவன் என்பதைக் குறிக்கிறது.

நொந்து போய்த் தன்னிடம் வந்து நிற்கிற ஒருவனைப் பார்த்து, இகழ்ச்சியாகப் பேசாமல் இருப்பது பெருந்தன்மை மட்டுமன்று; பேராண்மையாகும்.

வறியவனை இழிவாக நோக்குவது, வெறுப்பாக நினைப்பது, துன்பம் துளைத்தெடுப்பது போல, அலட்சியமாகப் பேசுவது, கபடமாகச் சிறிப்பது எல்லாம், சாதாரணமானவர்கள் செய்கிற சில்லறைத் தனமாகும்.

ஆனால், அப்படி எண்ணாமல், வெறுப்புற்றுப் பேசாமல், மனம் இரங்கி, தேவையை அறிந்து கொண்டு, அவனது துன்ப நிலையைப் புரிந்து கொண்டு, ஈயும் இதயத்தான், தன் உயர்குலப் பெருமையை **உடையான்**. அதாவது தகைக்க மாட்டான்.

குலப்பெருமையைக் காப்பவன் ஆவதால், அவன்தான் வழி வந்த குலத்தின் பெருமையை மேலும் உயர்த்துகிறான்.

குலன் உடையான் கண் என்கிறார் வள்ளுவர். குலப் பெருமையை உடைத்து அழிக்காத உடல் கொண்டவன், சிறந்த மனிதர்களிலும் சீர்மை மிக்கப் புனிதன் என்று வள்ளுவர் புகழ்கிறார்.

உயர்ந்த குடியில் பிறந்தாலும், அவன் உயர்ந்தகுலமகன்தான் என்று அவனை மேலும் உயர்த்துகிறது என்று இழிவாகப் பேசாத நாவையும், இதமாக வழங்குகிற கரங்களையும் வள்ளுவர், மிகவும் அருமையாக எடுத்துக்காட்டுகிறார்.

224. இன்னாது திரக்கப் படுதல் இரந்தவர் இன்முகம் காணும் அளவு.

பொருள் விளக்கம்:

இன்னாது = வறியவர் மனதுக்கு கீழ்மையான தீமைகள் நேராமல்
இரக்கப்படுதல் = உருக்கமான தயை செய்தல் (என்பது)
இரந்தவர் = வேண்டி விரும்பி வந்த (வறியவரின்) வரின்
இன்முகம் காணும் = முகமானது மகழ்ச்சி அடைகிற
அளவு = மட்டும் உதவ வேண்டும்.

சொல் விளக்கம்:

இன்னாது = கீழ்மையான தீமை
இரக்கம் = தயை, உருக்கம் உணர்வு
அளவு = மட்டும், வரையறை

முற்கால உரை:

ஒரு பொருளை இரந்தவர். அது பெற்றதனால் இனிதாகிய அவர் முகம் காணுமளவும் ஈதல் வேண்டும். என்றாலும் இரத்தலே அன்றி, இரக்கப்படுதலும் இனிதன்று.

தற்கால உரை:

ஒன்றை வேண்டி வந்தவர், அதனைப் பெற்றதனால் இனிய முகத்தவராகத் தோன்றுவதைக் காணும்வரை, கொடுப்பவர்க்கு இரக்கப்படுதலும் துன்பமானதே.

புதிய உரை:

வந்த வறியவர் மனம் புண்படாமல் உருக்கமான தயவு காட்டுவது அவரின் முகம் மகிழ்ச்சியைக் காணும் அளவுக்கு ஈந்து உதவுவதே ஈகையின் பெருமையாகும்.

விளக்கம்:

இன்னாது இரக்கப்படுதல் என்பது, துன்பம் கொடுக்காமல், வறியவர்மேல் உருக்கம் கொள்ளுதல். எண்ணத்தால், முகபாவத்தால், சொல்லால், செயலால் துன்புறுத்தக் கூடாது, என்று மூன்றாவது குறளில் **எவ்வம் உரையாமை** என்றார்.

எண்ணுவதே தவறு. எண்ணியது பேசுவது தவறு. பேசியதைச் செயல்படுத்துவது தவறு என்று ஒன்றன்பின் ஒன்றாக மனித மனத்தின் மாசுகளையும், மாண்புகளையும் வள்ளுவர் வகுத்துத் தொகுத்துக் காட்டுகின்றார்.

ஏன் இன்னாது இரக்கப்பட வேண்டும் என்றார்? மனித மனத்தை முகந்து காட்டும் மனிதமுகம், உணர்வுகளை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டது. ஏனெனில் உணர்வுகளை உருக்கமாக வெளிப்படுத்துகிற வகையில்தான் முகம் அமைந்திருக்கிறது.

உடலில் மற்ற உறுப்புக்கள் எல்லாம் நீண்ட மற்றும் குட்டையான தசைகளாலும், நீண்ட எலும்புகள், குட்டை எலும்புகளாலும் ஆனவையாகும். ஆனால் முகத்தின் தசைகள் ஓரங்குலம், அதற்கும் குறைந்த அளவு கொண்ட 32 குறுந்தசைத் துண்டுகளாலும், 14 சிறு சிறு எலும்புகள் இணைப்பாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான், நவரச பாவங்களை முகம் வெளிப்படுத்திக் காட்ட முடிகிறது.

இரந்தார்க்கு எவ்வளவு உதவலாம் என்றால், **இன்முகம் காணும் அளவு** என்கிறார். ஏற்பவர் அகம் குளிர்ந்து, மனம் மகிழ்ந்து இனிமையாகத் தெரியும் அதாவது விரியும் அளவுக்கு உதவ வேண்டும் என்கிறார்.

அளவு எவ்வளவு என்றால், அதை நான்காகப் பிரித்துச் சொல்வார்கள். எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பது அளவின் விரிவுகள். எண்ணித்தரலாம் பணத்தை. எடுத்துத்தரலாம் பொருளை. முகந்துதரலாம் தானியங்களை. நீட்டித்தரலாம் துணிமணிகளை.

இப்படி இருப்பதைக் கொடுத்து, ஏற்பவரை திருப்திபடுத்துகிறபோது. அவர் முகம் இன்முகமாகிறது. ஆகவே, இனிய செயல் வேண்டும். இரக்கப்படுவதில் உருக்கம் காட்ட வேண்டும். கொடுப்பதில் குறையளவு வேண்டாம் என்று ஈகையின் வாகைத் தன்மையை நான்காம் குறளில் நறுக்குத் தெறிந்தாற் போல் வள்ளுவர் கூறுகின்றார்.

225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்.

பொருள் விளக்கம்:

ஆற்றுவார் = எடுத்ததை முடிக்க வல்லாரின்
ஆற்றல் = வலிமை மிக்க முயற்சியானது
பசியாற்றல் = பசித்து வருபவரின் பசியைத் தணிப்பதேயாகும்
மாற்றுவார் = மாற்று வழி கண்டு தீர்த்து வைப்பார்
ஆற்றலின் பின் = முயற்சியின் சக்திக்கே பெருமை சேர்க்கும்.

சொல் விளக்கம்:

ஆற்றுவார் = எடுத்தது முடிக்க வல்லார்
ஆற்றல் = முயற்சி, பொறுமை, வலிமை, சக்தி
பின் = பெருமை, பின்புறம்.

முற்கால உரை:

தவத்தான் வலியார்க்கு வலியாவது, தம்மையுற்ற பசியைப் பொறுத்தல். அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையான் ஒழிப்பாரது வலிக்குப்பின்.

தற்கால உரை:

துன்பத்தைத் தாங்குவார் வலிமையுள், பசித்துன்பம் தாங்குதலே வலியது. ஆனால், அவ்வலிமையும் பசித்துயர் இல்லாமல், போக்கும் கொடையாளர் வலிமைக்குப் பிற்பட்டதே.

புதிய உரை:

எடுத்ததை முடிக்கும் வல்லமையாளர், பசியுடன் தம்மிடம் வந்தவரின் பசிபோக்கும் முயற்சி பாராட்டுக்குரியதே. ஆனால் வந்தவரின் பசியைத் தீர்த்து வைத்து, வழிகண்டு உதவுகிறபோது, அவரது வலிமைக்கு மேலும் பெருமை சேர்க்கும் முயற்சியாகி விடுகிறது.

விளக்கம்:

பசி என்பது பாவமல்ல. உடம்பில் உயிர்ப்புடன் விளங்குகிற உத்வேக உணர்வு. இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குள்ளாக வந்து போகும் நெருப்பு. அதாவது உணவைத் தகிக்கும் அனல். உணவு கேட்கும் வேட்கை.

வேட்கையை ஆற்றும் வேள்விதான் விருந்து படைத்தல். பசி தீர்க்கும் மருந்துதான் விருந்தோம்பல். அவ்வாறு உண்டி கொடுத்து உயிர்காக்கும் பெருமையுடையோரைத்தான் **ஆற்றுவார்** என்றார். ஆற்றுவார் என்றால் எடுத்த காரியத்தை விடாது தொடுத்து முடிப்பவர். **ஆற்றல்** என்பது அவர் மேற்கொள்கிற முயற்சி, அவர் மேற்கொண்ட முயற்சி பசி ஆற்றல். அதாவது பசியைத் தணித்தல்.

ஒரு வேளை உணவைத் தந்து, வாழ்த்தி வழியனுப்பி வைத்தால் அதன் பெயர் உதவி. அதற்கு வலிமையோ, ஆர்வமுள்ள முயற்சியோ தேவையில்லை. அதை ஒரு வேள்வியாகச் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கவே, **மாற்றுவார்** என்றார்.

மாற்றல் என்றால், தீர்த்தல் என்று பொருள். தொடர்ந்து வருகிற பசியைத் தொலைத்து விட உதவுதல். மீண்டும் வந்தால் அதை விரட்டுகிற ஆற்றலை அளித்து உதவுதல். அதாவது அவர் வறுமையை விரட்டி, வளத்தைத் திரட்டித் தரும் வண்ணம், வேண்டிய பொருள் உதவிகளை அளித்தல்.

கொடையாளர் தருகிற மாற்றானது, பசியை வெல்லும் வலிமையை அளித்தல். வாழ்வாங்கு வாழ வரம் கொடுப்பது போன்ற சூழ்நிலைகளை உருவாக்குதல்.

அப்படி மாற்றுவாருக்குரிய வலிமையே பெருமை தரும் என்கிறார் வள்ளுவர். பின் என்றால் பெருமை. பெருமைக்குரிய ஆற்றல் பசி தீர்ப்பதல்ல. பசிப்பிணியை விரட்டுவது. மீண்டும் வந்து வதைக்காது விரட்டுவது. அப்படிச் செய்கிற காரியத்தின் வலிமையே பெருமை தரும் என்று 5 வது குறளில் மிக அற்புதமாக எடுத்துரைக்கின்றார்.

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி

பொருள் விளக்கம்:

அற்றார் = ஏதும் அற்ற வறியவர்

அழிபசி = (உடல், மனம் ஆகியவற்றை) அழித்து விடுகிற பசியை

தீர்த்தல் = அறவே அழித்து, ஒழித்து விடுகின்ற உபகாரம், (செய்கிற)

அஃதொருவன் = அப்படிப்பட்ட ஒப்பற்றவன்

பொருள் = தனது தலைமை ஆக்கம் பெறத்தக்க அளவில்

வைப்புழிபெற்றான் = வையகத்தில் நிலையான இடம் பெற்றவன் ஆகிறான்.

சொல் விளக்கம்:

அற்றார் = தரித்திரர், இறந்தோர்; **அழிபசி** = அழிக்கின்ற அக்கினி
தீர்த்தல் = நீக்குதல், ஒழித்தல்
பொருள் = பொன், உடல், முதல், தலைமை, குணம்
வைப்புழி = வையகத்தில் ஓரிடம்

முற்கால உரை:

வறியாரது மிக்கப் பசியை, அறம் நோக்கித் தீர்க்க பொருள் பெற்றான் ஒருவன், தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமாகலான்.

தற்கால உரை:

வறுமைப்பட்டாரது நலங்களையெல்லாம் அழிக்கும் பசியை நீக்குக. அவ்வாறு நீக்குதலே, பொருளைப் பெற்றுள்ள ஒருவன், தன் பொருளைப் பாதுகாப்பாகச் சேர்த்து வைக்கத்தக்க இடமாகும்.

புதிய உரை:

வந்த வறியவரது அழித்தொழிக்கும் பசியை, நீக்குகிற அந்த ஒப்பற்ற கொடையாளன், வையகத்திலே தலைமை இடம் பெறுகிற நற்பேறினைப் பெறுகிறான்.

விளக்கம்:

வறியவனை **அற்றார்** என்கிறார் வள்ளுவர். உலக வாழ்க்கை சுகமெல்லாம் அற்றுப்போய், இற்றுப்போன இழிந்த நிலைக்கு ஆளானவன். இல்லையே என்று அவன் மனம் அலையவில்லை. குலையவில்லை. ஆனால், அவன் வயிற்றிலே விளைந்து வீறிட்டுக் கிளம்புகிற பசியானது, அவனை வெறுமையாக்குகிறது. வற்றல் ஆக்குகிறது அற்பமான மனிதனாக மாற்றி விடுகிறது.

அப்படிப்பட்டதை **அழிபசி** என்கிறார். ஆமாம் உடலையும். மனதையும் அழித்துப்போடுகிற ஆற்றல் பெற்றது பசி.

அதனைத் **தீர்த்தல்** என்று ஒரு அருமையான சொல்லை இங்கே இடுகிறார். **தீர்த்தல்** என்கிறபோது தீர்ப்புச் செய்தல். அதாவது, பாழாக்கும் பசியே! ஒழிந்துபோ! திரும்பவும் வராதே! தொந்தரவு தராதே! என்று எக்காளமிட்டு அழித்து வெற்றிகொள்ளும் வீர நிலை.

தீர்த்துத் திளைக்கிற அந்த ஒப்பற்ற உபகாரி, **பெற்றான்** எதைப் பெற்றான்? பொருளைப் பெற்றான். அதாவது தலைமை இடத்தைப் பெற்றான். எங்கே பெற்றான்! வையகத்தில்.

வையகத்தில், தனது வள்ளல் தன்மையால், பெருமை பெற்றவனாக, தலைமை இடத்தைப் பெற்றான்.

பொருள் என்பது பொருள் பொதிந்த சொல்லாகும் திரவியம் என்றொரு அர்த்தம். காற்று, தண்ணீர், வெப்பம், பூமி, ஆகாயம் என்பது இதற்கு அர்த்தம்.

இயற்கைக் கூறுகளாகிய பஞ்ச பூதங்கள் மக்களிடையே பிரபலம் ஆகி, வாழ்த்துதலுக்கும் வணக்கத்திற்கும் உரியதாக விளங்குவதுபோல, வயிற்றுப் பசியைத் தீர்த்து, வாழ்வு விசையை ஏற்படுத்தி, வாழ்வாங்கு வாழச் செய்கிற வள்ளல், அவன் வாழ்கிற இடம் மக்கள் மனங்களில். பெறுகிற புகழ் நிலையான புகழ்.

ஈகையின் எல்லையிலா ஆற்றலை ஆறாவது குறளில் மிக அருமையாக வள்ளுவர் விளக்கியிருக்கிறார்.

227. பாத்தூண் மரீஇ யவனை பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

பொருள் விளக்கம்:

பாத்தூண் = கஞ்சி சோறாக இருந்தாலும்
மரீயவனை = பகிர்ந்து உண்ணுகிற பண்பாளனை,
பசியென்னும் = உணவு கேட்டு வேதனைப்படுத்தும், பசியென்கிற
தீப்பிணி = நரக வேதனையானது
தீண்டல் = (கொட்டினால் விடம் ஏறுவதுபோல) தீண்டுதல்
அரிது = இல்லையாகும்.

சொல் விளக்கம்:

பாத்து = கஞ்சி; **ஊண்** = சோறு; **பிணி** = கட்டுதல், நோய்
தீ = நரகம்; சேர்ந்தார்க் கொல்லி; **தீண்டு** = விடம் தீண்டல்

முற்கால உரை:

எஞ்ஞான்றும் பகுத்துண்டல் பயின்றவ்வனை, பசி என்று சொல்லப்படுகிற தீய நோய் தீண்டுதலில்லை.

தற்கால உரை:

தன்னிடத்துள்ள உணவைப் பகுத்துண்ணும் பழக்க முடையவனைப் பசி என்று சொல்லப்படும் தீய நோய் நெருங்கி வருதலும் இல்லை.

புதிய உரை:

கஞ்சிச் சோறாக இருந்தாலும், தந்து உண்ணுகிற பண்பாளனை, நரகவேதனை தரும் பசி நோயானது, நச்சுத் தீண்டலைப்போல எதுவும் செய்து விட முடியாது. நெருங்கவும் முடியாது.

விளக்கம்:

கறி சோறு கொடுப்பதுதான் கௌரவம். காசு பணம் தருவது தான் குலப்பெருமை. அனைவரும் வியக்கும் வண்ணம், ஆடம்பரமான பொருட்களை அளிப்பதுதான் ஈகைத் தன்மை. என்பதெல்லாம் உலக இயல்பு. மன உலகில் உண்டாகும் மாயை.

இங்கே வள்ளுவர், எதார்த்தமான உண்மையை எடுத்துக் காட்டுகிறார். கையிலே ஒன்றுமில்லை. எஞ்சியிருப்பது கஞ்சிசோறுதான் அதாவது தனக்கு மட்டும் தான் இருக்கிறது. இந்த நிலையில் வந்து நிற்கும் பசித்தவரோடு, பகிர்ந்து கொள்ளும் பாங்கு.

அதனால், பசி தீர்ந்து விட வில்லை. பாழும் வயிற்றுக் குள்ளே பொங்கிப்புயலாய் வீசி, தனலாய் எரிக்கும் பசியின் நரகக் கொடுமையை, விரட்டி வெற்றிகாண முடிகிறது என்னும் உண்மையை இங்கே குறித்துக் காட்டுகிறார்.

பசியைத் **தீப்பிணி** என்கிறார். தீ என்றால் கொடுமையான, நெருப்பான என்று கூறலாம். ஆனால் நரகம் என்றொரு பொருளும் உண்டு.

வெறுமையாய்க் கிடக்கும் வயிற்றில் எழுகின்ற பசித்தீயானது, உடலிலே உள்ள உதரத்தீ, சினத்தீ, விந்துத்தீ என்னும் மூன்றையும் விட மோசமானது.

அந்தப் பசி உணர்வானது, வேட்டையான நச்சுப் பூச்சிகள் உடலைத் தீண்ட, அந்த நஞ்சு உடலெங்கும் ஓடி, உயிரை வதைப்பதுபோல, பசித்தீ உடலைத் தீண்டுகிறது. மனத்தைத் துண்டாடுகிறது. ஆத்மாவை அடங்கச் செய்கிறது.

எங்கேயோ இருப்பதல்ல நரகம். இந்த நரகம், உடலுக்குள்ளே கூடுகட்டிக் கொண்டு, பாடுபடுத்திக் கொண்டிருக்கிறது. வெம்மைத் தீயைத்தான் நரகம் என்று அழைக்கின்றார்கள்.

உடலெங்கும் பரவுகிற பசியெழுப்பும் வடவைத்தீ, நச்சுத் தீண்டலாக அமையா வண்ணம், கஞ்சி கொடுத்துக் காப்பவன் காக்கும் கருணையாளனாகவே காட்சியளிக்கிறான்.

பண்பு மிக்க உதவியாளன், பாத்துண்ணும் அருஞ் செயல், பிறப்பிக்கும் எல்லா கொடுமைகளையும் திருப்பி அனுப்பி விட்டு, திருப்தியை அளித்து, தேற்றி, மனத்துக்கும் உடலுக்கும் சுகத்தையும் சொர்க்கத்தையும் அளிக்கிறது என்று இந்த ஏழாவது குறளில், கஞ்சிச் சோற்றின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை வைத்திழக்கும் வன்கண வர்.

பொருள் விளக்கம்:

ஈ = (பிறர் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள) கொடுப்பதை
துவக்கும் = இன்றுதான் தொடங்குகிற ஆரம்பம் என்று
இன்பம் = மகிழ்ச்சி கொள்வதையும், அதன் விளைவுகளையும்
அறியார்கொல் = அறியாமல் பிதற்றுபவர்கள்.
தாம் உடைமை = தனக்குரிய பொருள் வளம் எல்லாவற்றையும்
வைத்து இழக்கும் = காத்திருந்து இழந்து வருந்துகின்ற
வன்கண் அவர் = அவர், கொடிய மனிதராவார்.

சொல் விளக்கம்:

ஈ = கொடுத்தல்; **துவக்கும்** = தொடங்குகின்ற
சொல் = அலட்டுதல், பிதற்றுதல்; **வன்கண்** = கொடிய

முற்கால உரை:

தம்முடைய பொருளை ஈயாது வைத்துப் பின் இழந்துபோம் அருளில்லாதார், வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து, அவர் உவத்தலான அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ!

தற்கால உரை:

தம் பொருளை வறியவர்க்குக் கொடாது சேர்த்து வைத்தும், பிறர் கொண்டுபோக இழக்கும் கொடியவர், கொடுத்து மகிழும் இன்பத்தை அறிய மாட்டாரோ!

புதிய உரை:

கொடுப்பதை முதல் நாள் துவக்குகின்ற இன்பம் எவ்வளவு பெரியது என்பதை அறியாமல் பிதற்றி வாழ்கின்ற கொடிய மனம் கொண்டவர், தன்னுடைய பொருளைக் காத்து இழக்கின்ற கீழ்மையாளராகவும் ஆகிவிடுகின்றார்.

விளக்கம்:

வன்கண் அவர் என்னும் சொற்களில் வள்ளுவர், ஈயாத பாவிகள் என்று மிகத் துல்லியமாகத் தெரிவித்து விடுகின்றார். வன் = கொடுமையான, கண் = உடல். கொடுமையான உடல், கொடுமையான மனம் கொண்டவர்கள், பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மனிதர்கள் ஆவார்கள்.

பிறர்க்குக் கொடுப்பது பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. எத்தனை முறை கொடுத்துக் கொண்டே வந்தாலும், அதை முதல் தடவை. இன்று தான் ஈதலைத் தொடங்கியிருக்கிறோம் என்று எண்ணி, முதல் நாளில் பெறுகின்ற இன்பம் இருக்கிறதே, அதை ஈடிலா இன்பம், பேரின்பம் என்றே கூறலாம்.

அப்படிப்பட்ட இன்ப நிலையை, இனிய கலையை அறியாதவர்களை **கொல்** என்கிறார். கொல்வது என்று ஓர் அர்த்தம். ஆனால் அவர் கொல்லச் சொல்லவில்லை. அவர்கள் அந்த இன்பத்தை அறியாமல், தான் செல்வந்தர் என்று அலட்டிக் கொண்டும், பேதமையால் பிதற்றிக் கொண்டும் அலைகின்றார்கள்.

அவர்கள் இழப்பது ஈத்துவக்கும் இன்பத்தை மட்டுமன்று. எல்லாமே பொருள் தான் என்று எண்ணி, புதையலைக் காக்கிற பூதம் என்பார்களே, அது போல் முடங்கி வாழ்ந்து, இன்பக் காலத்தை இழந்து, துன்பச் சூழலில் உழன்று, சோர்ந்து வீழ்வார்கள் என்பதையே **வைத்திழக்கும்** என்றார்.

இருந்தும் இல்லாத நிலையில் உழல்பவர்கள் என்பதையே வண் கண்ணராக வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வின் நோக்கமும்

பெருமையும் புரியாத பேதைகளாக நடமாடுகின்றார்கள் என, 8வது குறளில் இருந்தும் திருந்தாத மக்களின் இயல்பைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய தாமே தமியர் உணல்.

பொருள் விளக்கம்:

தமியர் = தாமே இணையில்லாதவர் என்று (தற்பெருமையோடு)
தாமே உணல் = தானே தனித்து உண்டு மகிழும் தன்மையானது
மன்ற = தமது தோற்றத்திலும், வாழ்வு நிலையிலும்
நிரப்பிய = குறைபாடுள்ளவராய், தரித்திரர்போல் ஆகி
இரத்தலின் = வறியவர் பிறரிடம் சென்று ஏந்தி இரப்பதைவிட
இன்னாது = இகழ்ச்சியான வாழ்வாகும்.

சொல் விளக்கம்:

தமியர் = இணையில்லாதவர்.
மன்ற = தோற்றம்; **நிரப்பிய** = தரித்திரம், குறைபாடு, நிறை.

முற்கால உரை:

பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கு ஈயாது, தாமே தனித்து உண்டல், ஒருவருக்குப் பிறர்பாற் சென்று இரத்தலினும் இன்னாது ஒரு தலையாகும்.

தற்கால உரை:

நிரம்ப தேடிச் சேர்த்தப் பொருளைத் தாம் மட்டுமே தமியராய் இருந்து உண்ணுதல், உறுதியாக இல்லை என, இரத்தலினும் கொடுமையானதேயாகும்.

புதிய உரை:

யாரும் தனக்கு இணையில்லை என்னும் தலைக்கனத்தோடு, தாமே தனித்து உண்டு வாழ்வது, தரித்திரமான தோற்றத்துடன், அவர் பிறரிடம் சென்று பிச்சையெடுத்து உண்பதை விடக் கேவலமானதாகும்.

விளக்கம்:

வசதியும் வளம் இருப்பதால், ஒருவர் எப்படி வேண்டுமானாலும் எண்ணிவாழ்வது, இழிவான வாழ்வு என்று வள்ளுவர் இங்கே 9வது குறளில், கடுமையாகச் சாடியுள்ளார்.

தமியர் என்றால் ஏகமானவர். அதாவது தானே தான் எல்லாம், நமக்கு நிகர் நாமே என்று ஒரு பொருள். நமக்கு யாரும் ஒப்பானவர் இல்லை. நிகரானவர் இல்லை என்று நாத்தழும்பேற பேசுகிற நாணமில்லாத நிலை.

அப்படிப்பட்ட ஆணவத்துடன் வாழ்கிறவர் அன்றாட உணவை எப்படி உண்ணுகிறார்? **தமியராக** தமியர் என்பதற்குத் தனிமை என்றும், கதியின்மை என்றும் வேறுபல பொருள்களும் உண்டு.

பெரும் செல்வந்தர் ஏன் தனிமைப்பட்டிருக்கிறார்? ஈயாததால். இரக்கமனம் இல்லாததால். அவருக்கு வேறுகதியே கிடையாது. தனிமைப்பட்டு, கதியிழந்து, அலைபாய்கிற நிலைமையைத்தான் தமியர் என்னும் சொல் குறிக்கிறது.

ஆகவே, தாமே தமியராக இருந்து உண்ணுகிறார். எப்படி? வறியவன் பிறரிடம் சென்று பெற்ற உணவை, தனியே இருந்து உண்ணுவதுபோலச். செல்வத்தின் அழகு சுற்றத்தோடு உண்ணல்.

வறியவனுக்குச் சுற்றம் இல்லை. ஏனெனில், அவனது வறுமை, உலகியலிலிருந்து தனியே பிரித்து விடுகிறது. வேறுபடுத்தி விடுகிறது. அதுபோல, நிரப்பிய பொருள் கொண்டவன், தரித்திரன் போலத் தனியே விடப்படுகிறான். அவனது தோற்றமும் தரித்திரத் தோற்றம்.

அதைத்தான் **மன்ற** என்ற சொல்லில் அழகாகக் குறிக்கிறார். அவன் பிச்சைக்காரன் போல தனியே உண்ணும் நிலை. இரத்தலின் இன்னாது என்கிறார் வள்ளுவர்.

இரத்தலே கொடுமை என்றால், அதிலும் கொடுமை இன்னாது என்று. கொடுக்கப் பிறந்தவன், கொடிய மனத்தால் கூனிக் குறுகி வாழ்வதற்குரிய நிலைமை வந்ததே என்று செல்வந்தரின் ஈயா சிந்தையின் இயல்பையும், அவர்கள் பெறுகிற அவமான வாழ்வையும், அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

230. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை

பொருள் விளக்கம்:

தில்லை = ஆசைப் பெருக்குடன் (விழைவுடன்)
இனித = நன்மை பயக்கின்ற

ஈதல் இயையா = கொடைகளைச் செய்ய இயலாதபோது,
கடை = எடுக்கின்ற முடிவில்
தூஉம் = மௌனம்தான் வருகிறது.
சாதலின் = (அப்படிப்பட்ட ஊமை எண்ணமாகிய மௌனம்)
இன்னாத = செத்துப் போகும் துன்பத்தைவிட துன்பம் செய்வதாகவே அமைந்து விடுகிறது

சொல் விள்ளகம்:

இன்னாத = துன்பம் தருவது; **இனித** = நன்மை தருவது
தில் = விழைவு, ஆசைப்பெருக்கம்; **ஊம்** = மௌனம், ஊமை
இயைதல் = இணங்குதல்; **கடை** = முடிவு.

முற்கால உரை:

ஒருவருக்குச் சாதல் போல இன்னாத தொன்றில்லை. அத்தன்மைத்தாகிய சாதலும், வறியார்க் கொன்றீதல் முடியாத வழி இனிது.

தற்கால உரை:

துன்பங்களிலெல்லாம் சாவது போன்ற துன்பம் ஒன்றும் இல்லை ஆனால், வறியவர்க்கு விரும்பிய ஒன்றைக் கொடுக்க முடியாத நிலையில், அச்சாவும் இன்பமேயாம் (என்று எண்ணத் தோன்றும்)

புதிய உரை:

ஆசைப் பெருக்குடன் நன்மை பயக்கும் வறியவருக்கு ஈவதற்கு ஒருவரால் இயலாத பொழுது, அவரது உள் மனம் ஊமையாகி மௌனமாகி விடுகிறது. அந்த மௌனமோ, சாதலை விடக் கொடுமையானதாக அமைந்து விடுகிறது.

விளக்கம்:

உடம்பில் சத்துப் போய்விடுவதால் தான், செத்துப் போகிறார்கள் மக்கள். அதேபோல், நோவு அதிகமாகும்போதுதான் சாவும் நேரிடுகிறது. ஆக, மனிதன் மரணத்திற்குத்தான் அஞ்சுகிறான். பயங்களிலே மரணபயம் தான் பயங்கர பயமாக, மனிதனைப் பயமுறுத்தி வருகிறது.

அந்த மரணத்தையும் விஞ்சுகிற ஒரு சக்தி உண்டென்று வள்ளுவர் தமது 10 வது குறளில் பெரிது படுத்திக் காட்டுகின்றார்.

வறியவர் ஒருவர் வருகிறார். தன் வறுமையை வெளிப்படுத்தி உதவி கேட்கிறார். கேட்டவருக்கோ, கொடையாக ஒன்றைத்தந்து, வறுமைக்கு விடை கொடுத்துவிட வேண்டும் என்று விரும்புகிறார். அவரிடம் உள்ளது இல்லாமை மட்டுமல்ல. இயலாமையுங்கூட. இல்லாமையால் நொந்து போன உடலும் இயலாமையில் நைந்துபோன மனமும் ஒரு முடிவுக்கு வருகிறது. என்ன முடிவு? மனம் மௌனமாகி, ஊமையாகி விடுகிறது; ஊமையான மனம் உள்ளே அழுகிறது; உருகிக் கசிகிறது; உயிரைப் பிழிகிறது.

அந்த மனத்தின் ஊமை நிலை, மரண அவதியைவிடக் கொடுமையாக இருக்கும். சாவு கூட ஒரு பரிகாரம் ஆகிவிடும். ஆனால், இவரின் மனமோ சாகாமல் செத்துக் கொண்டு, துடிக்கிறது.

இந்தத் துடிக்கும் காட்சியைத் தான் வள்ளுவர் **தில்லை** என்றார். தில் என்றால் விழைவு. விழைவு என்றால் ஆசைப் பெருக்கம்.

ஆசைப் பெருக்குடன் இல்லாருக்கு உதவ, இயலாமல் போக, அவர் மனம் சாவின் விளிம்பில் சஞ்சாரம் செய்கின்ற துன்பநிலை. ஆகவே சாவில் சஞ்சலப் படுகிற மனம்தான் இருக்கும். ஆனால், ஈவதற்கு இல்லாமல் சங்கடப்படுகிற மனத்தின் வேதனையோ சாவின் கொடுமையைச் சிறிதாகக் காட்டுகிறது.

ஈகை என்பதை ஈவதில் ஒழுக்கம் என்றோம். ஈயென்றால், ஈ, தேனீ, வண்டு என்று பல பொருட்கள் உண்டு. வசதியற்ற வறியவர், தன் பசிபோக்க, பாழ்நிலை தீர்க்க, ஈ போல் பறப்பர். தேனிபோல் தேடித் திரிவர். வண்டு போல் வட்டம் இடுவர். இவர்கள் வள்ளல்கள் முகம் நோக்கி, கரம்பாரத்து மகிழும் வல்லாளர்கள்.

இவர்களுக்கு ஈய இல்லையென்ற ஒருநிலை வந்தால், இறப்புதான் சிறப்பான முடிவாக இருக்கும் என்று சிணுங்கிக், குலுங்கி, சித்தபிரமை கொண்டு ஊமையாகி அழுகிற உள்மனத் தின் மௌனம், உலகளாவிய ஓர் உருக்கமான காட்சி என்று ஈகை அதிகாரத்தை வள்ளுவர் எடுப்போடு முடித்திருக்கின்றார்.

24. புகழ்

இல்லாதார் இரப்பர். இருப்பர் கொடுப்பர், நல்லோர்கள் புரப்பர். நயத்தோடு காப்பர். இந்த ஈர நெஞ்சின் நோன்புக்கும், மாண்புக்கும் தான் ஈகை என்று பெயர்.

நெருப்பென எரிக்கும் வறுமையை அணைக்கவும், அன்பால் அணைக்கவும் கூடிய ஆற்றலையே ஈகை என்றனர். ஈவதிலும் ஒழுக்கம் வேண்டும், மரபு காக்க வேண்டும், பெருமை சேர்க்க வேண்டும் என்னும் மேலாண்மையில் தான் புகழ் கிடைக்கும் என்பதனால் தான், ஈகைக்கு அடுத்த அதிகாரமாகப் புகழ் அதிகாரத்தை வைத்திருக்கிறார் வள்ளுவர்.

எதிர்பார்த்து வந்தவருக்கு இனிப்புச் சேதியாக உதவி, அவர் இதயத்தில் புகுவதைத்தான் புகழ் என்றனர். அதையும் புகல் என்றும் அழைத்தனர்.

விருப்பத்துடன், கொண்டாடிக் கொடுத்து, வீறு கொண்ட வறுமையை வெற்றி கொள்கிறபோது, பெறுகிற பேறு தான் புகழ் ஆகிறது.

எப்படியெல்லாம் புகழ் வந்து சேரும்?

அருஞ் செயல் ஆற்றுகிறபோது, வன்செயல்களை வென்று **வாகை** சூடுகிறபோது, எப்போதும் உள்ள வாழ்க்கையில் **ஏற்றம்** பெறுகிறபோது. மனத்தாலும் உடலாலும் **மேம்பாடு** காண்கிறபோது. **தோற்றத்தில்** பொலிவு கொள்கிறபோது. செயல்களில் **சீர்த்தியும் கீர்த்தியும்** பெறுகிறபோது.

புகழ் பெறுவதற்காகப் பண்ணுகிற காரியங்கள், எண்ணுகிற சிந்தனைகள், மேற்கொள்கிற முயற்சிகள், முடிக்க முடியாமல் தவிக்கிற தவிப்புகள், இழக்கிற இழப்புகள், எதிரிகளால் ஏற்படுத்தப்படும் தடைகள், தகர்ப்புகள், வந்து வழிமறிக்கும் தடங்களால் உண்டாகும் தடுமாற்றங்கள்.

இவைகளுக்கும் மேலாக நின்று ஆற்றுகிற அருஞ்செயல்தான், ஈகைதான், வாகை மேடையில் வீற்றிருக்கச் செய்து, வளரும் புகழை வளைத்துத் தந்து, வாழ்த்துகிறது; வாழ்விக்கிறது.

அறமாவது ஒழுக்கம். அது இல்லறத்தில் நிறைய உண்டு. துறவறத்தில், இன்னும் திண்மையாக உண்டு.

எந்த ஒழுக்கத்திலும், எதிரில் உள்ளவர்களுக்கு இன்பம் பயக்கும் வண்ணம் உதவுவதும், உபகாரம் செய்வதும் தான் மனித நேயத்தின் பெருமை.

அப்படிப்பட்ட பெருமைக்கு நிலைக்களமாக, கலைப் பீடமாக, காக்கும் தலமாக, கடமையாற்றும் நிலமாக உள்ளது தான் புகழ் ஆகும்.

அந்தப் புகழுக்குரியவர்களாக ஆக வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு அடிப்படைக் குணங்கள் எப்படி எல்லாம் இருந்தால், சிறப்பைத் தரும், செழிப்பைத் தரும், உவப்பைத் தரும், உலகத்தில் நிலைப்பைத் தரும் என்று வள்ளுவர், மிகத் துல்லியமாக அடுக்கித் தருகின்றார்.

எல்லோரிடமும் இசைந்து போகும் பண்பால், இசையெனும் புகழ் சேர்கிறது என்று, ஏற்படும் வழிகளைச் சுகவழியாகச் சொல்லித் தருகிறார் வள்ளுவப் பெருந்தகை.

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு

பொருள் விளக்கம்:

ஈதல் = இரந்தார்க்கு ஈந்து பகிர்ந்து கொடுத்துப் புரத்தல்.
இசைபட வாழ்தல் = (ஏற்றத்தாழ்வின்றி) இணக்க முடன் வாழ்தல்
அது இல்லை = அப்படிப்பட்ட செயல்கள் இந்தப் பிறப்பில்,
உயிர்க்கு ஊதியம் = உயிராகிய ஆன்மாவிற்கு, பயனளிக்கும்
வல்லது = வல்லமையை அளிக்கிறது

சொல் விளக்கம்:

ஈதல் = புரத்தல்; **இசைபட** = இணக்கமுற
வல்லது = வல்லமை உடையது; **ஊதியம்** = பயன்
இல்லை = இம்மை, இப்பிறப்பு, இந்த உலகம், இகபோகம்
உயிர் = ஆன்மா, சீவன், பிராணவாயு.

முற்கால உரை:

வறியார்க்கு ஈகை அதனால் புகழுண்டாக வாழ்க. அப்புகழல்லது, மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாதலான்.

தற்கால உரை:

வறியவர்க்குக் கொடுத்தலும், புகழுண்டாக வாழ்தலும், அல்லாமல், மாந்தர் உயிர்க்கு வளர்ச்சி வேறொன்றுமில்லை.

புதிய உரை:

இரந்தார்க்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பதுடன், அவர்களுடன் இணக்கமாக வாழ்கிற செயல்கள் எல்லாம், இப்பிறப்பில், உயிராகிய ஆன்மாவுக்கு வல்லமையை வளர்த்துக் காத்து மேம்படுத்துகிறது.

விளக்கம்:

ஈதல் என்பது, கேட்டவருக்குக் கொடுத்தல் என்பதைவிட, பாதிக்கப்பட்டவரைப் புரத்தல். பாதுகாத்தல், பகிர்ந்தளித்தல் என்கிற போதுதான், ஈதலின் மேன்மை வெளிப்படுகிறது.

இசைபட என்பதில், புகழ்கிற என்பதைவிட, இரந்து வந்தார்க்கு ஈந்து அனுப்புவதைவிட, அவரோடு இணக்கமாக இருக்கிறபோது, அவரது உடலும் மனமும் குளிர்கிறது.

உடலால் கொடுத்தும், உள்ளத்தால் மடுத்தும் (நிறைத்தும்) பெறுகிற இன்பம் உடலைச் சந்தோஷப்படுத்துகிறது. மனத்தை

மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. அதனால் ஆனந்தப்படுகிற ஆன்மாவின் சக்தி அதிகமாகிறது. வலிமைப் பெறுகிறது. வாழ்வை மேம்படுத்துகிறது.

அது வல்லது என்று நான் பொருள் கொண்டிருக்கிறேன். புகழுக்குரியது புரத்தல், பேணிக்காத்தல், பொருந்தப் பழகுதல். இப்படிப்பட்ட இனிய செயல்கள் தாம், ஆன்மாவை வளப்படுத்தி, வலிமைப்படுத்துகிறது.

இல்லை என்ற சொல்லுக்கு இன்மை, எதிர்மறை என்னும் பொருள்கள் இருப்பது போல, இம்மை என்ற பொருளுக்கும் இருக்கிறது.

இம்மை என்கிறபோது, இப்பிறப்பு, இந்த உலகம், இகபோகம் என்றும் பொருள்கள் கிடைக்கின்றன. இம்மெய் என்றும் நாம் பொருள் கொள்ளலாம். இம்மெய்யில் உள்ள ஆன்மாவுக்கு என்ன பயன் ஈவதால், இணைந்து போவதால் என்றால், மெய்யில் உலா வருகிற உயிரானது, அதாவது பிராணவாயுவானது பேரளவில் பெற இந்த ஈயும் இன்பம் உதவுகிறது என்பதால்தான், அது வல்லது என்றார்.

மெய் வல்லதாகிறது, மனம் வல்லதாகிறது, ஆத்மாவாக விளங்கிச், சீவனாக சிலிர்ப்புற்று, உயிர்க்காற்றாக உடலுக்குள் நிறைவது தான் ஊதியம். அந்த அற்புதமான ஊதியத்தை அடைவது தான் மனிதத்தின் பெரும்பேறு என்னும் பேருண்மையை வள்ளுவர் முதல் குறளில் முத்தாய்ப்பாகத் தொடங்கியிருக்கிறார்.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்

பொருள் விளக்கம்:

இரப்பார்க்கு = இரந்து நிற்பாருக்கு
ஒன்று = ஒருமுகப்பட்டு, ஒப்பற்ற பொருளை
ஈவார்மேல் = கொடுக்கின்றவரின் உடம்பில்
நிற்கும் புகழ் எல்லாம் = நிலைத்து நிற்கும் அருஞ்செயல் எல்லாம்
உரைப்பார் = புகழை முழக்கமிடுகிற
உரைப்பவை = விரித்துரைக்கும் மெய்யுரையாய் ஆகிறது

சொல் விளக்கம்:

உரை = முழக்கம்; **உரைப்பவை** = விரித்துரைக்கும் மெய்யுரை **ஒன்று** = ஒரு முகப்படு; **மேல்** = சரீரம்; **நிற்கும்** = நிலையாகத் தங்கும்; **புகழ்** = அருஞ்செயல்.

முற்கால உரை:

உலகத்து ஒன்றுரைப்பார் உரைப்பன வெல்லாம், வறுமையுள் இரப்பார்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈவார் கண் நிற்கும் புகழாம்.

தற்கால உரை:

உரையாலும் பாட்டாலும் சொல்லுவார் சொல்லுவன எல்லாம், 'இல்லை' என்று கேட்டு வருவார்க்கு, வேண்டும் ஒன்றைக் கொடுப்பவர் பேரில் நிற்கிற புகழ்களே ஆகும்.

புதிய உரை:

இரப்பார்க்கு, ஒருமுகத்தோடு, உயர்ந்த பொருளைக் கொடுப்பவரின் உடம்பில், அருஞ்செயல்கள் நிலைத்து நின்று, புகழை முழக்கமிடும். அதுவே விரித்துரைக்கும் மெய்யுரையும் ஆகும்.

விளக்கம்:

உரைப்பார் உரைப்பவை எல்லாம் என்றார் வள்ளுவர். உலக மக்களிடையே உயர்ந்தனவற்றைப் பேசுகின்ற சான்றோர்களின் சொற்கள், உண்மையை வெளிப்படுத்துகிற முழக்கமாகவே இருக்கும். அதைத்தான் **உரைப்பார்** என்றார்.

உரைத்தலில் உண்மையும், உறுதியும் உலக நடையும் வேண்டும் என்பதால், அதை **உரைப்பவை** என்றார். அதாவது உண்மை உறுதி ஒழுக்கத்தை விரித்துரைக்கும் மெய்யுரை என்றார்.

அப்படிப்பட்ட ஆற்றல் எல்லாம், ஒருவருக்கு ஒருமுகத்தோடு கொடுக்கிறபோதுதான் நலம் தரும். வளம் தரும். ஒருமுகம் என்றால், நேர்வழியாய் போகிற நினைவும் செயலும் என்று நாம் பொருள் கொள்ளலாம்.

மனம் வெறுத்து, உடல் பணிந்து தருவதும் ஈதல்தான். மனம் விரும்பி, உடல் நிமிர்த்தி ஆணவமாக அளிப்பதும் கொடைதான்.

ஆனால் இங்கே வள்ளுவர் கூறும் முறை - ஒன்று ஈவார். உடலும் மனமும் ஒன்றாகி, உருகித் தருபவர்.

அவரது **மேல்,** அதாவது அவரது உடலில், அப்படிப்பட்ட அருஞ்செயல்கள், நிலையாய் நிற்கும்; நிலைத்து நிற்கும்; புகழாய் நிற்கும்; பொலிவாய் நிற்கும்.

தருபவர் உடலில் செயல்களும் புகழ்களும் நிலைத்து நிற்கச் செய்கின்ற ஈயும் தன்மை. அதன் பெருமையை அகிலமெங்கும் முழக்கமிடும். அதுதான் அளிப்பவர்க்கு அகிலம் தரும் அன்புப் பரிசு.

இந்த அருஞ்செயலையே கொடை மடம் என்று புலவர் பெருமக்கள் போற்றிப் பரவுவர். வரையாது கொடுப்பதையே கொடை மடம் என்பர். அந்த செயலுக்கு உடலும் மனமும் ஒன்றி நிற்கும் உயராண்மைவேண்டும். அந்தப் பேராண்மை வழங்கும் வள்ளல் மேல் வானளாவி பரந்திருக்கும்.

முதல் குறளில், குறையாது கொடுப்பதால் ஆன்மா வலிமை பெறுகிறது என்றார். இரண்டாம் குறளில், உடல் பெருமைபெறுகிறது. உயர்ந்த செயல்களாற்றும் தகுதியைப் பெறுகிறது.

233. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்று இல்

பொருள் விளக்கம்:

ஒன்றா = (பகை பாராட்டிக் கொண்டு) பொருந்தாத
உலகத்து = உலக மக்களிடையே
அல் + ஆல் = மயக்கமும் நச்சுத் தன்மையும் நிலவியிருக்க
உயர்ந்த புகழ் = மேலாண்மை மிக்க அருஞ் செயலானது
பொன்றாது = அழிந்து போகாது
நிற்பது = நிலைத்து நிற்பது
ஒன்று இல் = ஒரு முகப்பட்ட இல்லறத்தால்தான் நடைபெறுகிறது.

சொல் விளக்கம்:

ஒன்றா = பொருந்தாமல் பகைக்கிற
பொன்றாது = அழியாது; **ஒன்று இல்** = உயர்ந்த இல்லறம்
அல்லால் = மயக்கமும், நச்சுத்தன்மையும், அதிசயம்.

முற்கால உரை:

தனக்கு இணையின்றாக, ஓங்கிய புகழல்லது, உலகத்து. இறவாது நிற்பது பிறிதொன்றில்லை.

தற்கால உரை:

ஒரே முறையாகப் பொருந்துதல் இல்லாத உலகத்தில், புகழ் ஒன்றுமே அல்லாமல், அழியாது நிலை பெறக் கூடியது வேறு ஒன்றும் இல்லை.

புதிய உரை:

மயக்கத்தையும் மாறான நச்சுத் தன்மை கொண்டு பொருந்தாமல் பகைபாராட்டுகின்ற உலக மக்களிடையே, மேலாண்மை மிக்க அருஞ்செயலை, அழிந்து போகாது காத்து நிலைக்கச் செய்வது ஒருமுகப்பட்ட இல்லறமே.

விளக்கம்:

ஒன்றா உலகம், அல் உலகம், ஆல் உலகம், என மூன்று சொற்களால், உலக மக்களின் நிலையைத், தரம் பிரித்துக் காட்டுகின்றார் வள்ளுவர்.

எதிலுமே ஒத்துப் போகாமல், எதையுமே ஏற்றுக் கொள்ளாமல், விதண்டாவாதம் செய்கிற, பகைமை பாராட்டுகிற, எப்போதும் பொருந்திப் போகாத உலகம்.

அந்த உலகம், அடுத்தவருக்கு மயக்கத்தையும் குழப்பத்தையும், கலக்கத்தையும், கடுமையான சூழ்நிலை களையுமே உருவாக்கும் அப்படிப்பட்ட உலகம், அதாவது மக்களிடம் எப்படிப் புகழை நிலை நிறுத்த முடியும் என்னும் ஒரு வினாவை எழுப்பி, விடையையும் விளக்கமாகத் தருகிறார்.

உயர்ந்த புகழானது, பிறர் தூற்றினாலும் சிறந்து விளங்குகிற அருஞ்செயலானது, பகைமை பாராட்டுவோர் மத்தியிலும், மனத்திலும், நிலையாய்த் தங்கி, நிலைத்து நிற்க வேண்டுமானால், உடல், மனத்தால், ஆத்மாவால் மட்டும் நிகழ்த்த முடியாது. ஒன்றுபட்ட இல்லறத்தால் மட்டுமே முடியும் என்கிறார் வள்ளுவர். ஒன்று இல் - ஒன்றுபடுகிற, மனமும் உடலும் பொருந்துகிற, ஒற்றுமையால், வாய்மையால், ஒப்பற்ற பணியால் மட்டுமே முடியும்.

இல்லறமாகிய நல்லறம். அந்த நல்லறத்தில் நற்பண்புகள் வந்தாரை மகிழ்விக்கும் வள்ளல் தன்மைகள். இணங்கி அவரோடு பழகும் இனிய குணங்கள். ஒன்றைத் தந்தாலும் நன்றாய்ப் பயன்படுகிற முறைகளில் வழங்குதல் எல்லாமே, பகைவரையும் பாராட்டச் செய்யும்; பொருந்தாதவரையும் பொருந்தவைக்கும்.

ஆத்மவலிமை சேரும் என்று முதற் குறளில், உடலும் மனமும் ஒருமுகப்படும் என்று இரண்டாம் குறளில், அழியாத புகழைப் பகைவரிடத்தும் நிலை நாட்டும் என்று மூன்றாம் குறளில், இல்லறச் சிறப்பையும் இணைத்துக் கூறுகிறார்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப் போற்றாது புத்தேள் உலகு

பொருள் விளக்கம்:

புத்தேள் உலகு = புதுமையை விரும்புகிற மக்கள்
புலவரை = ஊன் மலையாக வாழ்கிறவர்களை
போற்றாது = புகழ மாட்டார்கள்
நில வரை = இந்த பூமியின் எல்லை அளவையும் விஞ்சுகிற வண்ணம்
நீள்புகழ் = நெடுங்காலம் நிலைத்திருக்கிற அருஞ்செயலை
ஆற்றின் = செய்கிறபோது தான் புகழும்.

சொல் விளக்கம்:

நிலவரை = பூமியின் எல்லை ; **நீள்** = நெடுங்காலம்
புல = ஊன்; **வரை** = மலை; **புத்தேள்** = புதுமை
உலகு = மக்கள், உயர்ந்தோர்.

முற்கால உரை:

ஒருவன் நிலவெல்லைக் கண்ணே பொன்றாது நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேள் உலகம் அவனையல்லாது, தன்னை எய்தி நின்ற ஞானிகளைப் பேணாது.

தற்கால உரை:

நிலத்தளவும் நீண்டு பரவும் புகழ்ச் செயலை ஒருவன் செய்வானேயானால், புதிதாக வரும் உலகரும் அவனைப் போற்றுவாரேயன்றி, புலமையாளர்களைப் போற்றார்.

புதிய உரை:

அதிசயம் மிகுந்த அற்புதமான புதுமையை விரும்புகிற உலகமக்கள், பூமி அளவையும் விஞ்சுகிற, நெடுங்காலம் நிலைத்திருப்பது போன்ற அருஞ்செயலை ஆற்றுபவரைத்தான் போற்றிப் புகழ்வார்கள். ஊன்மலையாக உயிர் வாழ்கிறவர்களைப் பாராட்டவும் மாட்டார்கள்.

விளக்கம்:

நிலவரை நீள் புகழ் என்று வள்ளுவர் கூறியது, தேசம் கடந்து, காலம் கடந்து, நிலைத்து நிற்கும் புகழ். நீர்க்குமிழ் போலத் தோன்றி மறைவதல்ல. பன்னெடுங்காலம், பரவிக் கிடந்து பார்வைக்கு மலைப்பை ஏற்படுத்தும் மலைபோல, பாரெங்கும் பரவி நிற்கும் பெரிய செயலைச் செய்திட வேண்டும். அதுவே மனித உடல் எடுத்தோருக்குரிய மாபெரும் கடமை என்றார். அதைத்தான் **நீள் புகழ்** என்றார்.

நிலத்தின்மேல் நிலைத்து நிற்கும் மலை என்பதைத்தான் நிலவரை என்றார். அதற்கு எதிர்மறையாக **மாமிச மலை** என்று குறிக்க வந்த வள்ளுவர் மிகச் சாமர்த்தியமாக புலவரை என்கிறார்.

புல என்றால் புலவி. புலவு என்றால் ஊன். புலால் ஊன் மலை, மாமிசக் குன்று. சோற்றுப் பிண்டம். வெறும் காற்றுத்துருத்தி.

இப்படிப்பட்ட மனிதரை யார் ஏற்றுக் கொள்வார்? போற்றி மகிழ்வார்? அதனால் தான் புலவரைப் போற்றாது என்றார்.

உலகு என்றால் மக்கள்; அதாவது உயர்ந்த மக்கள். உயர்ந்த மக்கள் என்பவர்கள். தினந்தோறும் புதுமையை விரும்புகிறவர்கள். அதிசயமான செயல் முறைகளை எதிர்பார்ப்பவர்கள். அற்புதமான நடைமுறைகளை நயப்பவர்கள்.

அவர்கள்தான் நெடுங்காலம் நிலைத்திருக்கும் வண்ணம் காரியம் ஆற்றுகிறவரைப் போற்றி மகிழ்வர். பாராட்டிச் சிறப்பு செய்வர். வணங்கித் துதித்து வாழ்த்துவர்.

நடமாடும் பிணம் போல, உண்டு உறங்கி, தின்று கொழுத்துத் திரிபவர்களுக்கு எந்தக் காலத்திலும் மதிப்பில்லை, மரியாதை இல்லை. அடலேறு போன்ற ஆண்மை மிக்க உடல், அருஞ்செயல் ஆற்றுகின்ற பண்பே, வாழ்பவர் என்பதற்குரிய இலக்கணம் என்று 4 வது குறளில் நயம்படத் தெளிவு படுத்துகின்றார்.

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

பொருள் விளக்கம் :

நத்தம் = இருள் சூழ்ந்த இரவில்
போல் = (மூங்கில்) புதர் போன்றவற்றில்

கேடும் உள = அழிவை உண்டாக்கும் கேடுகள் உண்டு
சாக்காடும் = மரணத்தை உண்டாக்கும் கொடியகாடும்
ஆகும் = அப்படித்தான் அழிவை உண்டாக்கும் அந்த அழிவு தரும் காட்டையும்; கல்லால் = கல்லால் ஆன ஆலமரம்போல
வித்தகர் அரிது = ஆக்கிக் கொள்கின்ற சாதூரியம் ஆற்றலாளர்களுக்கு உண்டு.

சொல் விளக்கம்:

நத்தம் = இரவு, இருள்; **போல்** = புதர், மூங்கில்
சாகாடு = மரணம் உண்டாக்கும் காடு; **வித்திகர்** = சாதுரியர், அறிஞர்
கல்லால் = கல் ஆலமரம்; **அரிது** = அருமை.

முற்கால உரை:

திறமை உடையவர்க்கு புகழுடம்பிற்கு பெருக்கமாகும் வறுமையும் இல்லை. அது போல, அப்புகழுடம்பு நிலைபெறுவதாகும் மரணமும் இல்லை.

தற்கால உரை:

சங்கைச் சுடச் சுட வெண்மை பளிச்சிடல் போல் புகழ் வளர வரும் வறுமையும், புகழ் நிலை பெற உண்டாகும் இறப்பும், வாழ்வியல் திறம் மிக்கோர்க்கு அல்லாமல், பிறருக்கு வாய்த்தல் இல்லை.

புதிய உரை:

இருள் சூழ்ந்த இரவில் மூங்கில் புதர், கேட்டினை உண்டாக்குவதுபோல, மரணம் ஏற்படுத்தும் அடர்ந்த காட்டையும், வல்லமை உடையவர்கள், கல் ஆலமரம் போல் மாற்றிப் புகழ் பெறுவார்கள்.

விளக்கம்:

புகழ்ச்சி என்றதும் இகழ்ச்சி என்னும் எதிர்ச்சொல் வருவதுபோல, புகழில் வளர்ச்சி என்றதும் தளர்ச்சியும் அழிவும் நினவுக்கு வரும்.

இங்கே வள்ளுவர் இரண்டு கேடுகளைச் சம்பவிக்கும் இடங்களைக் காட்டுகிறார். காரிருள் சூழ்ந்த பகுதி, மூங்கில் புதர். அங்கே நுழைபவர் கதி அதோகதிதானே!

இன்னொருகாடு பெருங்காடு, மரணத்தை உண்டாக்கும் மகா கொடிய காடு. இதினுள் சென்றவர்க்கு சாவுதான் முடிவு.

இப்படி இரண்டு காடுகள். முதல் வகையான காடு, சாதாரண மனிதர்கள் கூட சமாளிக்க முடியாத கோர நிலை.

இரண்டாம் வகை. உடலெங்கும் இரணத்தை ஏற்படுத்தி மரணமே முடிவு என்று வீழ்த்துகின்ற அழிவுக்காடு.

இப்படிப்பட்ட காட்டினுள் சென்றால், ஆற்றல் மிக்கவர்கள் கூட அகால மரணத்தையே அடைவார்கள்.

ஆனால் வல்லவர் என்ன செய்வார்? புதருக்குள்ளே சிதறிப்போவாரா? அடர்ந்த காட்டிற்குள்ளே அழிந்து போவாரா? இல்லை; இல்லை. அவரது ஆற்றல் ஆக்க பூர்வமானது; ஆண்மை மிக்கது.

அடர்ந்த காட்டில், அச்சம் ஊட்டுகின்ற மரங்களை அவர் மாற்றிவிடுவார். கல்லால் ஆன ஆலமரமாக அவற்றை மாற்றி உயர்ந்து நிற்பார். இதைத்தான் **கல்லால்** - கல்லால் ஆன ஆலமரம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

ஆலமரம் அழிவதுதான் என்றாலும், அழியாப் புகழ் கொண்டவரின் நிலை, என்றுமே அழியாத கல் ஆலமரம் என்று குறிப்பிட்டு, நீள் புகழ் வல்லார்களுக்கு நித்தமும் வாழ்வுதான். புகழ்தான். அவர்கள் புகழ் அழியாது என்றும் 5 ஆம் குறளில், அழகுற குறித்துக் காட்டுகின்றார்.

ஏழு சொற்களில் அமைந்துள்ள குறட்பாவில், எத்தனை எத்தனை அர்த்தங்களைப் பொதிந்து வைத்து, வள்ளுவர் விளையாடி யிருக்கிறார் பாருங்கள்.

236. தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று

பொருள் விளக்கம்:

தோன்றின் = மற்றவர் முன்னே (அறியப்படும்போது)
புகழோடு = வெற்றிதரும் அருஞ்செயல் மேன்மையோடு
தோன்றுக = வெளிப்பட வேண்டும்
அஃதிலார் = அப்படிப்பட்ட ஆற்றல் எதுவும் இல்லாதார்
தோன்றலின் = அறியப்படுவதைவிட
தோன்றாமை = வெளிப்படாமல் இருந்து கொள்வது
நன்று = சுகம் தரும்.

சொல் விளக்கம்:

தோன்றுதல் = வெளிப்படல், அறியப்படுதல்; விளங்குதல்
புகழோடு = அருஞ்செயலோடு, வெற்றி, வாகை, மேன்மையோடு
நன்று = சுகம், நன்மை, சிறப்பு, வாழ்வு.

முற்கால உரை:

மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க. அக்குணமிலாதார் மக்களாய் பிறத்தலின், விலங்காய் பிறத்தல் நன்று.

தற்கால உரை:

ஒரு செயலில் ஒருவர் ஈடுபட்டால், அம்முயற்சிக்கும் தமக்கும் புகழுண்டாக ஈடுபடுவாராக. அத்திறம் இல்லார், அதில் ஈடுபடாதிருத்தலே நல்லது.

புதிய உரை:

மற்றவர்கள் முன்னே அறியப்படும்போது, அருஞ்செயல் ஆற்றுகின்ற மேன்மை நிலையில் வெளிப்படவேண்டும். அப்படிப்பட்ட ஆற்றல் இல்லாதவர்கள், அறியப் படாதிருப்பதே நன்மையாகும்.

விளக்கம்:

தோன்றின் என்பதற்கு, இங்கே இரண்டு வித இடங்கள். ஒன்று கற்றவர்கள் கூடிய அவையில். இரண்டாவது பொது மக்கள் கூடிய கூட்டத்தில்.

கற்றவர் சபைக்கு மேதைத் தன்மை வேண்டும். செயல் அருமை வேண்டும். மேதகு மேம்பாட்டுத்திறன், மேன்மை மிகு கேண்மையும் வேண்டும். எந்தத் திறனும் இல்லாமல், குறிப்பறிய மாட்டாத மனிதமரமாக நிற்பது கேவலம்தானே. ஆக, அந்த அறிவுத் திருவாளர்கள் இருக்குமிடத்திற்குச் செல்லாமல் இருப்பதே நன்மை தருகிற சிறப்பாகும்.

பொது மக்கள் கூடியிருக்கின்ற இடத்திற்கு, ஆயிரம் பேர்களில் ஆயிரத்து ஒன்றாகச் சென்று நிற்பது - சாதாரணமானவன் செயலாகும்.

புகழ் எனும் பெருமை பெற வேண்டியவன், புறம் நின்று வேடிக்கை பார்ப்பது வேதனை அளிக்காதா?

ஆக, நல்ல உடலும், நல்ல மனமும், ஆன்ம பலமும் உள்ள ஒருவரால் தான் அருஞ்செயல் ஆற்ற முடியும். வெற்றிவாகை சூடமுடியும். மேதையாக உலாவர முடியும். மேன்மை தன்மையில் மனித மனங்களைக் கவரமுடியும்.

எந்த ஆற்றலும் இலாதவர், அடிமையாக. வாழ்வார்; அல்லது அறியாமையாலே முடங்கிச் சாவார். இவர்கள் தங்களை வெளிப்படுத்த முயல்வதும், வருந்து படுவதும், வெட்கக்கேடான செயல் அல்லவா!

அதனால்தான் வள்ளுவர் ஆணித்தரமாகப் பேசுகிறார். தோன்றாதே! தோன்றினால் துன்பம் தான்!

ஆகவே, இறுதியாக ஒரு சொல்லைப் போட்டு, இந்தக் குறளை நிறைவு செய்கிறார். நன்று என்பதுதான் அந்தச் சொல். சுகம், நன்மை, சிறப்பு, வாழ்வு. என்று பொருள்.

வெளிப்பட முயன்று வேதனைப்பட்டால் சுகம் போய்விடும். உனது சிறப்பு சீரழியும். வாழ்வும் தாழ்வடையும். சுகமும் பாராமுகம் காட்டிப் போய்விடும். ஆகவே, எண்ணித் துணிக. தோன்றலின் தோன்றாமை எனும் விரதத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்து கொள் என்று வள்ளுவர் வாழ இயலாதார்க்கும் நல்ல வழிகாட்டி ஆற்றுப்படுத்துகிறார்.

237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை இகழ்வாரை நோவ தெவன்?

பொருள் விளக்கம்:

புகழ்பட = புகழ்பெற; வாழா = வாழ்வு நடத்தாத
தார்தம்மை = பிடரி மயிர் போன்ற தன்னை
தம்நோவார் = (தன் தாழ் நிலைக்காக) நொந்து கொள்ளமாட்டார்
இகழ்வாரை = வீணாக வாழ்கின்ற தன்னை இகழ்பவர்கள் மீது
நோவது எவன் = துன்புறுதல் எதற்காக?

சொல் விளக்கம்:

தார் = பிடரிமயிர், சிங்கக் கழுத்திலுள்ள சடை, உபாயம்,
நோவது = துன்புறுதல்.

முற்கால உரை:

தமக்குப் புகழுண்டாக வாழ மாட்டாதார், அது பற்றிப் பிறர் இகழ்ந்தவழி, தன் மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே தம்மை இகழ்வாரை நோவதென்.

தற்கால உரை:

புகழுண்டாக வாழ முடியாதார், தம் தகுதி இல்லாமையை எண்ணித் தம்மை நொந்து கொள்ளாதவராய்த், தம்மைப் பழிப்பாரை நொந்து கொள்வது எதற்காக?

புதிய உரை:

புகழ்பெற வாழ இயலாதவர், சிங்கத்தின் கழுத்திலுள்ள பிடரிமயிர் போன்றவராவர். தம் புகழுக்கு அருஞ்செயல்பட இயலாததை எண்ணி வருந்தாது, பிறர் இகழ்ந்தபோது, சிலிர்த்துக் கொள்வது எதற்காக?

விளக்கம்:

சிங்கத்தின் பிடிரிமயிர், சிங்கத்தின் தோற்றத்திற்குச் சிங்காரமாக அமைந்திருக்கலாம். அதனால் சிங்கத்திற்கு ஆற்றல் வந்து விடுமா என்ன? அது சினத்தின்போது, உடலை சிலிர்க்கும் போது, பிடரிமயிர் நிமிர்ந்தெழுந்து நிற்கலாம். அது கம்பீரத் தோற்றத்தைக் காட்டுமே ஒழிய, வலிமைக்குத் துணை தராதல்லவா!

அதுபோலவே புகழ் இல்லாத, புகழைப் பெற இயலாத, புகழைப் பெற முடியாத ஒரு மனிதன், அந்தச் சமுதாயத்திற்கு ஒரு அங்கம். அதாவது பிடரிமயிர் போல, அவனும் ஒரு முடிதான்.

முடி இருந்தாலும், முடியை இழந்தாலும், மனிதன் வருத்தப்படுவதில்லை. வாழ்வே தொலைந்ததென்று, நொடித்துப் போவதுமில்லை.

புகழ்பட வாழாதவன், தன் இழி நிலையை ஆராயாது, புகழுக்கு முயற்சிக்காது இருப்பதை எண்ணி வெட்கப்பட்டு வேதனையடையும் போதுதான், அவன் மனிதனாகிறான்.

முயற்சியில் ஈடுபடாமல் முடங்கிக்கிடப்பவன், முன்பொரு குறளில் கூறியது போல அவன் சதைப்பிண்டம். மாமிச மலை. சதைக் குன்று. சத்தற்ற பாண்டம். தகுதியற்ற தெண்டம்.

அதனால்தான் மயிரனைய மாந்தர் என்று பாடுகிறார். உயர் திணை என்பவனை, மிகவும் இழிவாகக் கூறிவிடாமல் மிருகங்களுக்குத் தலைமை தாங்கும் விலங்கினத்தில் வீரமுள்ள சிங்கத்தின் சடைமுடி என்று காட்டுகிறார்.

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை என்று திருமூலர் கூற்றுக்கு இவன் காத தூரம் கடந்தே இருக்கிறான். சோற்றுக்கு ஏங்கிச் சுழல்கின்ற மனிதனை, மற்றவர் எகுவர். இகழ்ச்சி மொழிகளை வீசுவர். பாழ் மகன் என்று பேசுவர். அதுபற்றி நோவதும் நொந்து தவிப்பதும் அவனுக்குப் புகழைத் தந்து விடுமா?

அதனால்தான், நோவது எவன் என்றார்? எதற்காக? பேடியாய் நின்று பெட்டைப் புலம்பல் செய்யும் பேதைக்கு மனித உடல் எதற்கு? மதிப்பு எதற்கு?

ஆகவே, ஏழாவது குறளில், வாழாமல் பாழாய்த் திரியும் பதடியை, மனிதனாக்க முயற்சித்து, சற்று கடுமையாகவே சாடியிருக்கிறார்.

238. வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

பொருள் விளக்கம்:

இசையென்னும் = புகழ் என்னும் அருஞ்செயலாற்றி
எச்சம் பெறாவிடின் = அதனைத் தொடர்ந்து வைத்துக் காக்க இயலாதவன்,
வையத்தார்க்கு எல்லாம் = இந்த உலக மக்கள் மத்தியிலே
வசையென்ப = (அவன்) ஒரு பிண்டமாகத்தான் கருதப்படுவான்

சொல் விளக்கம்:

வசை = குற்றம், நிணம், மாமிசம்
இசை = கீர்த்தி, பண்; **எச்சம்** = உண்மை, காரியம், சந்ததி.

முற்கால உரை:

புகழ் என்னும் எச்சம் பெறலாயிருக்க, அது பெறாதொழி வாராயின், வையகத்தார்க்கெல்லாம். அதுதானே வசையென்று நல்லோர் சொல்லுவர்.

தற்கால உரை:

புகழ் எனும் வைப்பினைப் பெறா விட்டால், உலகில் வாழ்வோர் எவராயினும், அவர்க்கெல்லாம் பழியாகும் என்று கூறுவர்.

புதிய உரை:

புகழ் எனும் அருஞ்செயலாற்றி, அதைத் தொடர்ந்து வைத்துக் காக்க இயலாதவனை, மக்கள் எல்லோரும் மாமிசப் பிண்டம் என்றே வசைபாடுவர்.

விளக்கம்:

இசை வேண்டும் யாக்கைக்கு. அதைப் பெற வேண்டும் உயிருக்கு. வாழும் காலம் வரை வாழ்ந்து கொண்டிருக்கும் புகழானது. அவர் மறைந்த பிறகும் தொடர வேண்டும். அப்படி வாழ்கிற வாழ்க்கையே அற்புதமான வாழ்க்கையாகும்.

பிறன் மேல் பொறாமைப் பட்டாலும், பகைமை பூண்டாலும், வெறுத்து ஒதுக்கினாலும், வீறாப்புப் பேசினாலும், ஒருவன் செய்கிற உயர்ந்த காரியங்களை, **இந்த ஒன்றா உலகம்** புகழும், மகிழும் என்று மூன்றாம் குறளில் கூறிய வள்ளுவர்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புத்தேள் உலகு ஏற்கும் போற்றும். புகழ் சாற்றும் என்று நான்காம் குறளில் கூறிய வள்ளுவர், புகழ்பெறாத ஒருவனைப் **புலவரை** என்றார்.

மாமிச மலை என்று மனம் வருந்திக் கண்டித்த வள்ளுவர், இந்த எட்டாம் குறளில், மாமிச மனிதர்களை, உயிரற்ற நடைவாசிகளை, மிக அற்பமாக, **வசை** என்று பாடுகிறார்.

வசை என்றால் இகழ்ச்சி சொல் என்பதைவிட, நிணம் என்ற பொருள்தான், நேரில் வந்து நின்று கொள்கிறது. நிணம் என்றால் மாமிசம், கொழுப்பு என்று பொருள்.

இசையுள்ளவன் உயிருள்ளவன், உயிர்ப்புள்ளவன். உலகம் மதிக்கத்தக்க அளவுக்குச் செயல் உள்ளவன், சீர்மை நிறைந்தவன். செயல் மறவன்.

வசையுள்ளவன் உயிருள்ள மாமிசப் பிண்டம். நடமாடும் தேகம் உள்ள தேர்ச்சியில்லாப் பண்டம் (உடல்). அவன் தலையற்றுத் திரியும் முண்டம். இப்படியெல்லாம்

வெளிப்படையாகக் கூற விரும்பாத வள்ளுவர், பொதுவான பொருள் விளங்கும் படி, வசையென்று கூறிச்சென்றார்.

எச்சம் பெறா விடின் அவன் துச்சம் தான். யாருக்கும் பயன்படாத எச்சில்தான். புகழ்தான் மனித வாழ்க்கையின் பேறு. அதைப் பெறுவதுதான் மனித ஆற்றலின் வீறு என்று, எட்டாவது குறளில், வசையான மாமிசத்தை, வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

குறையான உடலும், குறைவான செயலும், ஒருவனுக்கு மனநிறைவைத் தாராது என்று இங்கே கோடிட்டுக் காட்டுகிறார்.

239. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

பொருள் விளக்கம்:

இசையிலா = அருஞ்செயல் புரிய இயலாத
யாக்கை = உடலை
பொறுத்த நிலம் = ஏற்று சகித்துக் கொண்டிருக்கும் பதவியால்,
வசையிலா = குற்றம் இல்லாத
வண்பயன் = உதவிடும் செயல்கள் எல்லாம்
குன்றும் = குறைந்து மறைந்து போகும்.

சொல் விளக்கம்:

வண்பயன் = கொடையால் வரும் பயன்
நிலம் = பதவி, பூமி, வயல்; **யாக்கை** = உடல்; **பொறுத்து** = சகித்த.

முற்கால உரை:

புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம், பழிப்பில்லாத வளப்பத்தை உடைய விளையுள் குன்றும்.

தற்கால உரை:

புகழுண்டாக வாழாதவரின் உடலைச் சுமக்கும் நிலம், தனக்கு இயல்பாக அமைந்த பழியில்லாத வளமான புகழ்ப் பயனினும் குறைதல் ஆகிவிடும்.

புதிய உரை:

அருஞ்செயல் ஆற்ற இயலாதார் உடலானது வகிக்கின்ற பதவியும், அவரைச் சகித்துக் கொள்வதால், அந்தப் பதவியால் விளைகின்ற பயன்களெல்லாம் குன்றி வீணாகி விடுகின்றது.

விளக்கம்:

இசையிலாயாக்கை என்றார். புகழில்லாத யாக்கை. பொருளில்லாத உடல். வலிமையில்லாத தேகம். செயல்பட முடியாத சரீரம். இப்படிப் பல பெயர்களிலும், பயனற்றதாகப் பேசப்படும் பலமில்லாத உடல் - வளம் இல்லாத அமைப்பு.

இப்படிப்பட்ட உடலை, பதவி (அதிகாரம்)யில் அமர்த்தினால், அந்தப் பதவியும் பெருமை இழக்கிறது. பதவியால் விளையும் பயன்களும், பரிவுமிகு கொடைகளும்கூட அளிக்க முடியாமல் போகிறது.

தசைப் பிண்டம் (உடல்) ஒன்று, தட்டுக்கெட்டுப்போய் ஒரு பதவியில் அமர்ந்தாலும், கடமையாற்ற முடியாமல் போகிறதே என்ற வள்ளுவர், மிகவும் பொருள் பொதிந்த சொற்களை வைத்து, இந்தக் குறளை யாத்திருக்கிறார்.

நிலம் என்றும் (பூமி), **வண்பயன்** என்றும், குன்றும் என்றும் கூறியதாலே, பூமி அந்த உடலைத் தாங்கிப் பொறுத்துக் கொண்டது. அவரைச் சுமப்பதன் காரணமாக, விளைச்சல் குறைகின்றது என்று உரை எழுதிவிட்டார்கள்.

பூமி ஒரு பேதையைத் தாங்குவதால், விளைகின்ற பயன்குறையும் என்பதைவிட, ஒரு பதவி, பயனற்ற ஒரு மனித உடலைச் ஏற்றுக் கொண்டிருப்பதால், அந்தப் பதவியை ஆளத் தெரியாத அந்த ஆற்றலற்றவன், பதவியின் மூலம் பொழிய வேண்டிய பரோபகார உதவிகளைச் செய்யும் திறமையை இழந்து நிற்கிறான்.

அந்த இழப்புதான், பதவிக்கு மட்டும் பழியை ஏற்படுத்தாமல், பதவியில் அமர்ந்தவனையும், பதவிக்குரிய அதிகாரத்தில் கொடுக்கின்ற கொடையும், வழங்குகிற உதவியும் நின்று போய், குன்றிப்போகிறது.

'ஆற்றலிலாதான் கொண்ட படை இன்னா' என்பது போல, இசையிலா யாக்கை பெற்றவன் பதவியும், இன்னாததுதான் என்று ஒன்பதாம் குறளில், உறுதியற்ற உடலின் கீழ்மையை, உலக வாழ்வின் உண்மையைத், தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

பொருள் விளக்கம்:

வசைஒழிய = நிணம் ஒழித்து, கட்டுடல் வளர்த்து
வாழ்வாரே = தினம் காத்து வாழ்பவரே
வாழ்வார் = (சிறந்த பயனுள்ள வாழ்க்கையை) வாழ்கிறார்
இசையொழிய = அருஞ்செயலும் புகழும் இல்லாமல்.
வாழ்வாரே = வாழ்பவரே
வாழா = வாழத்தெரியாத
தவர் = மூடர் ஆவார்.

சொல் விளக்கம்:

வசை = நிணம், மாமிசம்; **இசை** = அருஞ்செயல் புகழ்
தவர் = தமர், மூடர், தவறு.

முற்கால உரை:

தம்மாட்டு வசை உண்டாகாமல், வாழ்வாரே உயிர் வாழ்வாராவார். புகழுண்டாமல் வாழ்வாரே இறந்தவராவார்.

தற்கால உரை:

பழி நீங்க வாழும் வாழ்வினரே நல் வாழ்வினர். புகழ் நீங்க வாழும் வாழ்வினர், நல்வாழ்வு வாழாதவர்.

புதிய உரை:

ஊளைச் சதையை ஒழித்து, கட்டுடல் வளர்த்து வாழ்பவரே, பயனுள்ள வாழ்க்கையை வாழ்கிறார். புகழும் அருஞ்செயலும் ஆற்ற இயலாதவர், அறிவிருந்தும் மூடராக அழிகிறார்.

விளக்கம்:

உடலில் உள்ள தசைக்கும், சதைக்கும் நிறைய வேறுபாடுண்டு. உறுதியானது; உழைப்புக்குத் தகுதியானது. இயக்கத்திற்கு எளிதானது. ஆற்றல் மிகு செயலுக்கு உறுதுணை பயப்பது. அடிப்படை தசைகள்.

சதை என்பது 'தளதள, தொள தொள' வென்று உருவாகியிருப்பது. உடல் அமைப்பைக் கெடுப்பது. உழைக்க மறுப்பது. செயலில் சுறுசுறுப்பை வெறுப்பது. பூமிக்குப் பாரமாக உடலை நடமாட வைப்பது.

அதனால் தான் வள்ளுவர் வசை ஒழிய என்றார். அதாவது நிணமாகிய மாமிசமானது, சதையாக இருப்பதை ஒழித்து அதாவது சதை தசையாக மாற்றி, சக்தியுடன் விளங்குபவரே, உலகில் பயனுள்ள வாழ்க்கை வாழ்கிறார். பிறர்க்குதவும் பெருமையான காரியங்களையும் புரிகிறார். பூமிக்குப் பெருமையானவராகத் திகழ்கிறார். ஆகவேதான் **வாழ்வார்** என்றார். அதாவது நிகழ்காலத்தில் வளமாக வாழ்கிறார். எதிர்காலத்தில் இன்னும் மேன்மையாக வாழ்வார். இறந்த காலத்திலும் சிறந்தவராகத் திகழ்ந்தார்.

ஆனால் இசையில்லாமல், வாழ்கிறவரை வள்ளுவர் **தவர்** என்கிறார். அவர் வாழ்வதே தவறு என்கிறார். அறிவிருந்தும் அவன் **அறிவீனன்;** சுறுசுறுப்புள்ளவராக இருக்க வேண்டியவன் உடலமைப்பால் மாறிய **மந்தன்,** செல்வ நிதி போன்ற சக்தி மிகுந்த உடலை, உபயோகிக்கத் தெரியாத **மதிகேடன்.** அதனாலே அவன் **கீழ்மகன்** என்று குறித்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

புகழ் அதிகாரத்தில் ஆன்ம வளத்தைக் காட்டினார். உடல் பலத்தைக் காட்டினார். பிறரோடு போராடி புகழ் புரியும் பேராண்மையை விளக்கினார். புதுமை விரும்பும் உலகத்திற்குப் புகழ்தான். பேரமுதம் என்று காட்டியவர், அது இல்லறத்தாரால் இயலும் என்று இல்லறப் பெருமைக்கு மகுடம் சூட்டினார்.

தொடர்ந்து, புகழ்பெற, வெறும் சதையாலான பிண்டம் உதவாது. கட்டுடல்தான் கைகொடுக்கும். வாழ்வளிக்கும். வாழ்வாங்கு வாழவைக்கும் என்று கூறியதுடன், நல்ல உடல். நல்ல மனம், நல்ல வாழ்வு என்ற தனது கொள்கையை இதுவரை கூறிய இல்லறவியலிலுள்ள 240 குறள்களிலும் வடித்துக்காட்டி வழிகாட்டியிருக்கிறார்.

3. துறவற வியல்

இல் ஒழுக்கம் பற்றிய இலக்கணத்தை இல்லறவியலில் எடுத்துக் கூறிய வள்ளுவர், தொடர்ந்து துறவறவியல் எனும் சீரிய பகுதிக்குள் வந்து விட்டார்.

துற + அற + இயல் = துறவறவியல்

துற + வறம் + வியல் = துறவறவியல்

இவ்வாறு இத்தலைப்பைப் பிரித்துப் பார்க்கிறோம்.

துற = பற்றொழித்தல்; அறம் = ஒழுக்கத்துடன்

இயல் = இலக்கணம். பற்றொழிக்கும் ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுக்கும் பகுதி என நாம் பொருள் கொள்ளலாம்.

துற = பற்றொழித்தல்; **வறம்** = பூமி; **வியல்** = பெருமை. பூமி வாழ்விலிருந்து பற்றொழித்து வாழ்கிற பெருமையை விளக்கும் பகுதி என்றும் நாம் பொருள் கொள்ளலாம்.

பற்றொழித்தல் என்கிறபோது **உள்ளத்தில் உள்ளதை, உலகத்தில் உள்ளதை, தனக்கென உள்ளதையெல்லாம்** உதறிவிட்டு, உலகில் வல்லமையோடு, வளமான தூய்மையோடு வாழ்ந்து காட்டும் வண்மையான வாழ்வு முறை இது.

பற்றொழிக்கும் பாங்கிலும் மூன்று நிலைகள் உள்ளன.

1. துறவு நிலை, 2. அறவு நிலை, 3. இறவு நிலை

உடலால் உலகம் நடை முறைகளைத் துறந்து விடுவது முதல் நிலை. அளவு என்றால், மிகவும் தெளிவாக. செம்மையாக உலகப் பற்றையெல்லாம் மனதிலிருந்து அறுத்தெறிவது இரண்டாம் நிலை. இறவு என்றால், உள்ளத்திலிருக்கும் பந்தபாசம், சொந்தம் சுற்றம்; சுகம், இகம் எல்லாவற்றையுமே இற்றுப் போகவும், இனிமேல், அப்படி எதுவும் எழாதவாறு இதய வண்மையோடு வாழ்வது. மூன்றாம் நிலை. இதுதான் இறைநிலை. இப்படி இருப்பவரைத்தான் இறைவன் என்று அழைப்பார்கள்.

துறவு வாழ்க்கைக்கு இரு கண்கள் போன்றவை தவம் காக்கும் **விரதங்கள்**. தெளிந்து வரும் **ஞானங்கள்**.

மனிதர்களுக்குப் புலன்களால் பிறக்கும் உணர்வுகள். உணர்வுகள் உணர்த்துகிற அறிவுகள். அறிவுகள் பட்டுப் பட்டுத் தெளிகிற தெளிவுகள். இவற்றால் விளையும் ஞானங்கள்.

இவ்வாறு நோன்புகளை உள்ளடக்கிய விரதம், அவை சிந்தனையால், சொல்லால், செயலால் தூய்மை நிலையிலேயே தொடங்கி, தொடர்ந்து, நெறி நின்றிட வேண்டும்.

ஆக, மனிதனைப் புனிதனாக மாற்றுகிற தவக்கோலம், விரத கோலம், ஞானசீலம் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர், தமது வாக்கு வன்மையால், வெளிப்படுத்துகின்றார்.

பீடை பிடித்தவனாக, நோய் படைத்தவனாகவே (கினிதன்) மனிதன் இருக்கிறான். அவனை மேன்மைப்படுத்திப் புனிதனாக்க வேண்டும் என்று பெருமுயற்சியை மேற்கொண்டு படைத்த துறவறவியல் குறள்களில், மனத்தின் மாசகற்றி, மேன்மைப்படுத்தும் முறைகளைக் கூறுகின்றார்.

25. அருளுடைமை

உடலால் பற்றுகளைத் துறப்பதை துறவு எனவும், **துறவு** பூண்டவரைத் **துறவி** என்றும் கூறுவார்கள்.

உடலாலும் மனத்தாலும் பற்றுகளை அறுத்தெறிபவரை **அறவு** கொண்டவர். அவரை **அறவி** என்று அழைப்பார்கள்.

உடலால், மனத்தால் ஆத்மாவினால், முற்றும் களைந்தவரை, பற்றுக்களை அழித்து உயர்ந்து நிற்ப வரை **இறவு** என்றும் அத்தகைய ஆற்றலாளரை, **இறவி** என்றும் பூசிப்பார்கள். இறவியானவரே, இறைவியாகி, இறைவனாகின்றார்கள்.

இப்படிப்பட்ட மூன்று நிலைகளிலும் ஒவ்வொன்றாகக் காலூன்றி, தடம் பதித்து, திறம் விளைத்து, திண்மையிலும் தூய்மையிலும் நிறைந்து நிற்க, வேண்டியது மெய்யல்லவா!

அதனால், துறவறவியலில் முதல் அதிகாரமாக அருளுடைமெய் என்னும் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

அருள் + உடை + மெய் என்று அருளுடைமை ஆகிறது.

கருணை, நல்வினை, தயவு, இரக்கம், கொடை என்னும் சொற்கள் எல்லாம் **அருள்** என்பது என்ன என்று விளக்குகிறது.

உடுப்பு, சூரியன், மனம் நெகிழு என்ற சொற்கள் எல்லாம் **உடை** என்பதற்கு உட்பொருளைத் தருகின்றன.

மெய் என்ற சொல்லோ மேனியைக் குறிப்பதோடு, உண்மை சத்தியம், திண்மை என்றெல்லாம் அர்த்தத்தை அளிக்கிறது.

ஆக, கருணைச் சூரியனாகக் காட்சியளிக்கும் மெய்தான் அருளுடைமெய் ஆகிறது.

இரக்கத்தால் இதயம் நெக்குருகி, மனம் நெகிழ்ந்து, உயிரின் உடுப்பாக ஆகியிருக்கும் மெய்யே, துறவறத்தைக் காக்கும் தூய சத்தியம் ஆகிறது.

உடை தோற்றத்தால் மட்டும் துறவியாக இருக்கக் கூடாது. உடல் காட்சி தருவதே துறவறத்தின் பெருமையைப்

பேசவேண்டும் என்று நினைத்ததன் விளைவே, துறவற இயல் என்று தலைப்பைத் தந்திருக்கிறார்.

துறவறத்தின் இலக்கணம் தூய்மையான மனத்தில் எழும் அருள்தான், என்று திண்மைபடக் கூறுகிறார். துறவறத்தின் பெருமையே, இரக்க குணத்திலும், கருணை சொல்லிலும், கனிந்த முகத்திலும், காக்கும் தயவிலும், கண்ணியம் மிக்க நல்வினையிலும், காருண்யக் கொடையிலும்தான் இருக்கிறது என்றே துறவறவியல் என்றார்.

அருளுடைமெய் என்னும் முதல் அதிகாரம், அவனியில் பிறந்த உயிர்கள் அனைத்தும் சமமானவை. அவையெல்லாம் தெய்வத்தின் சாயல், மகேசனின் மறுபதிப்பு என்றெல்லாம் எண்ணுகிற அருள் மனம். அதனை செயல் படுத்தும் அன்புக் குணம் அவர்களை வழி நடத்தி வாழ்விக்கும் புனிதத்தனம்.

இப்படி எல்லா செயல்களுக்கும் ஆதாரமாக, அடிப்படையாக விளங்கும் அருளுடைமைதான், துறவறம் பூண்டவரின் தேமதுரத் தரிசனமாகக் காட்சி தரவும், மெய் மறக்கவும் செய்யும் என்ற உண்மையான உலகநடையை மிகவும் மேன்மையுடன் மெருகேற்றித் தந்திருக்கிறார்.

241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

பொருள் விளக்கம்:

அருட் செல்வம் = கருணை மிகுந்த வாழ்க்கையானது
செல்வத்துள் செல்வம் = செழிப்பு மிகுந்த செல்வத்திற்குள்ளே ஆக்கம் மிகுந்தது
பொருள் செல்வம் = நல்ல உடல் உடைய வாழ்கையானது
பூரியார் கண்ணும் = இழிந்தவர் உடலிலும்
உள = இருக்கிறது (பயன் தராமல்)

சொல் விளக்கம்:

அருள் = கருணை, நல்வினை, தயவு, இரக்கம்
செல்வம் = செழிப்பு, ஆக்கம், வாழ்க்கை, கல்வி, பொருள்
பொருள் = உடல், பொன்; **பூரியார்** = கீழ்மக்கள்
கண் = உடம்பு; **உள** = மெய்ம்மை.

முற்கால உரை:

செல்வங்கள் பலவற்றுள் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமானது அருளால் வரும் செல்வம். அஃதொழிந்த பொருளான் வரும் செல்வங்கள் இழிந்தார் கண்ணும் உளவாம்.

தற்கால உரை:

உலகத்துச் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வமாவது, அருட் செல்வமே. மற்றை பொருட் செல்வங்கள் அருளற்ற கீழோரிடத்தும் உள்ளன.

புதிய உரை:

வாழ்க்கையிலே சிறந்த செழிப்புள்ள வாழ்க்கை, கருணை மிகுந்த வாழ்க்கையே. நல்ல உடல் வளம் கொண்டிருப்பவர் வாழ்க்கையே, சிறந்த வாழ்க்கை என்றாலும், இழிந்த கீழ் மக்களிடமும் வளமான உடல் இருந்தும், அருள் வாழ்க்கை இல்லாமல் போவது உண்மைதான்.

விளக்கம்:

துறவறத்தைப் பற்றி திறந்த மனத்துடன் பேச வந்த வள்ளுவர், துறவறநெறிக்குத் துணை நிற்பது, செல்வமல்ல. திறமான தேகம் தான் என்னும் உண்மையைத் தெரிந்து வைத்துக் கொண்டு, மக்களின் மனநிலையைத் தெரிந்து கொள்வதற்காகவே,

செல்வம் என்னும் சொல்லைப் போட்டு வைத்தார். அதிலும் நான்கு இடங்களில் **செல்வம்** என்று குறிப்பிட்டுள்ளார்.

துறவறத்திற்குத் தேவை கருணை நிறைந்த வாழ்க்கை முறை வேண்டும். அந்த வாழ்க்கைதான் - செழிப்பைத்தரும். ஆக்கத்தைத்தரும். பெருக்கத்தைத்தரும். உரியவருக்கு இன்பத்தைத்தரும். துறவறத்தில் விருத்தியைத் தரும்.

ஆகவே, செல்வம் என்பது வாழ்க்கையையும், அந்த வாழ்க்கை வழங்கும் பெருமைகளையும் குறித்துக் காட்டுகின்றன. ஆனால், பொருட் செல்வம் - பூரியார் கண். அடுத்துப் பல சிந்தனைகளை ஏற்படுத்தும் சொற்களையும் தந்திருக்கிறார்.

கீழானவர்கள், கூடிய நல்ல உடல் கொண்ட வாழ்க்கையை நடத்துகின்றார்கள். உடல்தான் நன்றாக உள்ளது. அங்கே அருள் என்பது இல்லை என்கிறார். அதை **உள** என்பதன் மூலம், மெய்தான் என்றும் வலியுறுத்துகின்றார்.

நல்ல உடலில் நல்ல மனம் என்பதுதான் உண்மை. ஆனால் கீழ்த்தரமான மக்களிடம் கட்டுடல் இருக்கும். கவின் மிகுந்த உடலும் இருக்கும். தோற்றததில் அழகும் சிறப்பும் இருக்கும். ஆனால், அந்த உடல் நடத்தும் வாழ்க்கையில், அருள் இருக்காது. அறநெறி பிறக்காது. கொடுமைகளே குவிந்து கிடக்கும்.

அதனால்தான், பொருட் செல்வமாகிய நல்ல உடல் கொண்ட வாழ்க்கையமைப்பு, கீழானவரிடம் இருந்தும், அது அருள் பயப்பதாக இல்லை. அன்பு பாராட்டுவதாக இல்லை.

மனிதம் ஒன்று தான். உடல் வள நிலையும் ஒன்றுதான். ஆனால் அங்கே அருள் விளைவதில் தான் வித்தியாசம் இருக்கிறது என்பதை, உயர்ந்தவர் உடலுக்கும், இழிந்தவர் உடலுக்கும் ஒப்புமை காட்டி வள்ளுவர் தெளிவு படுத்தியிருக்கிறார்.

242. நல்லாற்றான் நாடி அருள்ஆள்க பல்லாற்றான் தேரினும் அஃதே துணை

பொருள் விளக்கம்:

நல் = நல்குரவும் வறுமையும் மிகுந்த
ஆற்றான் = வலியில்லாத தரித்திரனை
நாடி = ஆராய்ந்தறிந்து (கண்டறிந்து)

அருள் ஆள்க = கொடை வழங்கிக் காத்தருள்க
பல்லாற்றான் = பலவகைப்பட்ட முறைகளில்
தேரினும் = ஆராய்ந்து பார்த்தாலும்.
அஃதே துணை = அந்த அருட்தன்மையே ஆதரவாகும்.

சொல் விளக்கம்:

நல் = நல்குரவு, வறுமை, மிகுதி
ஆற்றான் = தரிந்திரன், வலியில்லாதவன்; **நாடி** = ஆராய்ந்து
ஆள்க = வழங்குக, பணிவிடைசெய்க.

முற்கால உரை:

நன்றான நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறன் யாதென்று ஆராய்ந்து, அருளுடையாராக. எல்லா வாற்றானும் ஆராய்ந்தாலும், துணையாவது அவ்வருளே. பிறிதில்லை.

தற்கால உரை:

நல்ல வழிமுறைகளால் ஆராய்ந்து அருளைக் கொள்க. எத்தனை வகையாக ஆராய்ந்து பார்த்தாலும் அந்த அருளே துணையாகும்.

புதிய உரை:

மிகுந்த வறுமையால் வாடுகிற வலிவில்லாதவரைக் கண்டறிந்து அவருக்கு உதவுக. அவ்வாறு வழங்குகிற கருணையும் கொடையும், எல்லா வகையிலும் சிறந்த துணையாகிக் காத்தருள்கிறது.

விளக்கம்:

நல்லாற்றான் என்ற சொல்லுக்கு எல்லா உரையாசிரியர் களுமே நல்ல நெறிகள் என்றே உரையெழுதியிருக்கின்றனர்.

நல் + ஆற்றான் என்பது நல்லாற்றான்.

நல் என்றால் வறுமை, நல்குரவு. ஆற்றான் என்றால் தரித்திரன். வறுமையாளன். அதனால் வலிமையில்லாதவன்.

அப்படிப்பட்ட வறுமையாளனைத் தேடிக் கண்டறிய வேண்டும். அதனை அடுத்து **நாடி** என்றார். ஒருவரது உடல் நலத்தைக் கண்டறிய, வியாதிகளின் தீவிரத்தின் விவரமறிய, நாடிப்பிடித்துப் பார்ப்பார்கள் மருத்துவர்கள்.

வறுமையைத் தீர்க்கும் வைத்தியரான அருளாளருக்கு, நாடிச் செல்லத் தெரியவேண்டும்.

நாடி ஆராய்ந்து, கண்டறிந்து, அவருக்கு வேண்டிய தேவைகளை வழங்குக. அவரது இல்லாமையை விரட்டி, அவர் இதயத்தை ஆள்க. அன்பில் வாழ்க என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார்.

எப்படி முயன்றாலும், எப்படி ஆராய்ந்து வழிகளைக் கண்டு பிடித்தாலும், தேவையானவர்களைத் தேடிப் பிடித்து உதவுவது அருளுக்கு எப்போதும் துணையாக அமையும்.

தேரிய என்னும் சொல்லுக்கு கொள்ள என்பது பொருள். பல வழிகளை மேற்கொண்டாலும். அதுதான் துணை, அந்த அருள்தான் துணை.

துறவுக்கு அருள்தான் துணையாகும். பணமும் பதவியும் அல்ல. அவை பைசாச வெறிகளை ஏற்படுத்தும். மனிதர்களைப் புரிந்து கொள்ள, அவர்களின் மனங்களை ஆண்டு, அறநெறியால் செலுத்த, தேடிப்பிடித்து, வலுவற்ற மனிதர்களுக்கு, வலுவூட்டுங்கள். வல்லமை உடலுக்கு வந்துவிட்டால், வறிய எண்ணங்கள் மாய்ந்துவிட்டால், நெறிக்குள் செலுத்தி அமைதியை நிலை நாட்டலாம்.

உதவுதல் உள்ளத்தைப் பண்படுத்தும் என்பதால், தேடிப்பிடித்து, நாடியறிந்து, நன்மை செய்யுங்கள் என்று 2வது குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்

பொருள் விளக்கம்:

இருள்சேர்ந்த = அஞ்ஞானமும் ஆணவமும் கொண்ட
இன்னா = வெறுப்புடன் இகழ்கின்ற மக்களை,
புகல் = வெற்றிகாணும் உடல் வளம் கொண்டிருப்பதால்,
அருள் சேர்ந்த = கருணை நிறைந்த
நெஞ்சினார்க்கு = மனச் சாட்சி உள்ளவர்க்கு (வெற்றியே தவிர)
இல்லை = சாதல் இல்லை. நிலைத்து வாழ்வார்.

சொல் விளக்கம்:

நெஞ்சினார் = மனச் சாட்சி உள்ளவர்
இல்லை = சாதல், இம்மை; **இருள்** = அஞ்ஞானம், ஆணவமலம்
இன்னா = ஆகாமை, வெறுப்பு, தீமை, இகழ்ச்சி
உலகம் = மக்கள், குணம்; **புகல்** = உடம்பு, உடல், வெற்றி

முற்கால உரை:

இருள் செறிந்த துன்ப உலகத்துள் சென்று புகுதல், அருள் செறிந்த நெஞ்சினை உடையார்க்கில்லை.

தற்கால உரை:

அருள் அமைந்த மனத்தவர்க்கு அறியாமை எனும் இருள் அமைந்த கொடிய உலகியலில் புகும் நிலை இல்லை.

புதிய உரை:

அஞ்ஞானமும் ஆணவ மலமும் கொண்டு, வெறுப்புடன் இகழ்கின்ற மக்களை வென்று, மேம்பாடும் உடல் பலம் கொண்டவராகத் துறவறம் பூண்டவர் விளங்குவதால், அவருக்கு நிலையான வாழ்வு உண்டு. சாதல் என்பதே இல்லையாகும்.

விளக்கம்:

துறவறம் பூண்ட தூய நெஞ்சினார்க்குப் புகழால் சாதல் இல்லை. சாதல் இல்லை என்பதைத்தான் **இல்லை** என்று காட்டியிருக்கிறார்.

அவருக்கு யாரிடம் சாதல் இல்லாமல் நிலைத்த புகழோடு, நினைத்த காரியங்களையெல்லாம் முடித்து வெற்றி பெற்றிருக்கிறார்?

இந்த உலக மக்களை. மக்கள் எப்படிப்பட்டவர்கள்? அறியாமை மிகுந்த அஞ்ஞானம். எதிர்ப்பட்டவர்களையெல்லாம். ஏளனப் படுத்தும் ஆணவ மலம். உன்மத்தம் பிடித்தலையும் மயக்கம். துன்பத்தைப் படுத்தும் துயர முயற்சிகள் கொண்டவர்கள்தாம் உலகமக்கள். இதில் சான்றோரும் அடங்குவர்.

அருள் சேர்ந்த நெஞ்சினர், இப்படிப்பட்டவர்களின் மனத்திலே புகுவது எளிதன்று. அப்படி நுழைகிறபோது, அருளாளர் வெற்றி பெறுகிறார். அந்த வெற்றி - எதிர்ப்பாளர்

களின் இதயத்திலே புகும் வெற்றி. உடலை இணங்க வைக்கும் வெற்றி. அதைத்தான் வள்ளுவர் **புகல்** என்று குறித்தார்.

மக்கள் மனத்திலே புகுந்து வெற்றி கொள்கிற உடல் வளத்தை வள்ளுவர் மூன்றாவது குறளிலும் காட்டி மகிழ்கிறார்.

உடல் வளத்தால், ஆன்மபலத்தால், அவர் அஞ்ஞானிகளிடையே பெறுகிற வெற்றி, அவரை உயர்த்தி வைக்கிறது. உள்ளங்களில் நிறுத்தி வைக்கிறது.

உயிரோடு இருக்கும்போது, எதிரில் வாழ்கிறார். இறந்த பிறகும், மற்றவர்கள் நினைவில் வாழ்கிறார். என்றும் அவருக்கு இறப்பு இல்லை. சிறப்புதான் என்று கூறி, துறவிகளின் பெருமையை 3வது குறளில் மேன்மைப்படுத்திக் கூறுகிறார்.

244. மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை.

பொருள் விளக்கம்:

மன்னுயிர் = தன்னுடைய சீவனாகிய ஆத்மாவை
ஓம்பி = தீதுவராமற் பாதுகாத்து,
அருள் ஆள்வார்க்கு = நல்வினைகளை ஆற்றி வருபவருக்கு
தன் உயிர் = தன்னுடைய சீவாத்மாவானது
அஞ்சும் வினை = பயப்படுகின்ற பொல்லாச் செய்கைகளை
இல்என்ப = இல்லாமல் செய்து வாழ்வார்கள்.

சொல் விளக்கம்:

மன்னுயிர் = ஆத்மா, சீவன்; **ஓம்பி** = தீது வராமல்;
காத்து = மனத்தை ஒருக்கி, வளர்த்து
வினை = பொல்லாங்கு செய்கை.

முற்கால உரை:

நிலைபேறுடைய உயிர்களைப்பேணி. அவற்றின் கண் அருளுடையனாவானுக்கு, தன்னுயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று அறிந்தோர் சொல்லுவர்.

தற்கால உரை:

உலகத்து உயிர்களையெல்லாம் பேணி, அருள் ஒழுக்கம் கொண்டவனுக்குத், தன் உயிர் குறித்து, அஞ்சுவதற்குரிய தீய செயல்கள் உண்டாகா என்று தெளிந்தோர் கூறுவர்.

புதிய உரை:

தம் ஆத்மபலத்தை வளர்த்துக் கொண்டு, அருள் பாலிப்பவர்கள், தமது சீவாத்மா கலங்குவது போன்ற பொல்லாங்குகளைச் செய்ய மாட்டார்கள். உடலுக்குத் தீமை பயப்பனவற்றைச் செய்ய மாட்டார்கள்.

விளக்கம்:

மன்னுயிர் என்னும் சொல்லுக்கு உலகத்து உயிர்கள், நிலைபேறுடைய உயிர்கள் என்று பொருள் கொண்டிருக் கின்றார்கள். **மன்** என்ற சொல்லுக்குரிய பொருளாக, அதைக் கண்டிருக்கின்றார்கள்.

மன்னுயிர் என்றாலே ஆத்மா, சீவன் என்று பொருளிருக்கிறது. ஓம்புதல் என்றால், தீதுவராமல் காத்தல். அதாவது மனத்தை ஒருமைப்படுத்தி, உடலை நல்லொழுக்கத்தில் வயப்படுத்தி உயிர்க்காற்றை உடலுக்குள் நிரப்பி வளர்ப்பதையே, ஓம்புதல் என்றார் வள்ளுவர்.

நல்வினைகளாகக் கருணை மூலம் தயவு காட்டி, கடமையாற்றுகின்றவர்கள், தங்கள் சீவாத்மா சின்னா பின்னப்படுவதுபோல, சிதைந்துபோவதுபோல, வலிமையற்று வதங்குவது போன்ற நலிவுகளை உண்டாக்கும் இழிவான கீழ்த்தரமான காரியங்களைச் செய்யமாட்டார்கள். செய்யக்கூடாது.

அதனால்தான் தன் உயிர் அஞ்சும் வினை என்றார் வள்ளுவர். உலகத்தில் வாழ்வதற்குரிய காரியங்களைச் செய்வது உடல். உடலுக்கு ஆணையிட்டு, அப்படிச் செய், இப்படி செய்யாதே என்று செய்யச் சொல்வது மூளை என்கிற மனம். இந்த உடல் மனம் இரண்டையும் நல்வழிப்படுத்த, ஆற்றுவிப்பதுதான் ஆற்றுமா என்கிற ஆத்மா என்கிற உயிர்க்காற்று.

உயிர்க்காற்று உடலுக்குள் குறைகிறபோதுதான் ஆத்மவேதனைகள் அதிகமாகின்றன. உடலுக்குள்ளே இருக்கும் உயிர்க்காற்றை நிரப்ப இயலாமல், குறைப்பவைதாம் கெட்டகாரியங்கள். அதாவது உடலைக் கெடுக்கும் காரியங்கள்.

உடல் கெடும்போது, மனம் பாதிக்கப்பட, ஆத்மபலம் குறைய இப்படி அடுக்கடுக்காக அல்லல் ஏற்படாமல் தடுப்பதுதான் அறிவுடையோர்க்கழகு. இந்த அருமையான கருத்தைத்தான், வள்ளுவர் தன் உயிர் அஞ்சும் இன்னாதவைகளை இழைக்காமல்,

தன் மன்னுயிரை ஓம்புவோர்தான், அருளாளராகத் திகழ முடியும், மகிழ முடியும் என்று 4 வது குறளில், நறுக்குத் தெறித்தார்போன்ற, சீவாத்மாவின் சிறப்பைக் கூறியிருக்கின்றார்.

245. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கு மல்லல்மா ஞாலம் கரி.

பொருள் விளக்கம்:

வளிவழங்கு = உடலில் வாழ்கின்ற உயிர்க்காற்று அளிக்கும்
மல்லல் = (மன) வலிமையும்
கரி = வயிரம் போன்ற உடலையும்
மா = அழகையும்
ஞாலம் = கொண்டு உயர்ந்தோராவதால்,
அருள் ஆள்வார்க்கு = நற்செயல் மிக்க மேலோர்களுக்கு
அல்லல் இல்லை = துன்பமே இல்லை.

சொல் விளக்கம்:

வளி = உயிருக்குள் இருக்கும் வாயு (Vital Air in the System)
மல்லல் = வலிமை; **மா** = அழகு, மேன்மை, பெருமை.
ஞாலம் = உயர்ந்தோர்; **கரி** = வைரம், சாட்சி

முற்கால உரை:

அருளுடையார்க்கு இம்மையிலும் ஒரு துன்பம் உண்டாகாது. அதற்கு காற்று இயங்குகின்ற வளப்பத்தை உடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று.

தற்கால உரை:

அருளைப்போற்றி, நடப்பவர்க்குத் துன்பம் எதுவுமில்லை. இதற்குக் காற்று விசிறுகின்ற வளப்பமிக்க, இந்தப் பெரிய உலகத்து வாழ்ந்த பெருமக்களே சான்று.

புதிய உரை:

உடலிலே உலாவரும் உயிர்க்காற்று அளிக்கின்ற மனவலிமை, வைரம் போன்ற அழகான உடல், அதனால் உயர்வு பெற்றிருக்கும் உயர்ந்தோரான அருள் ஆள்வார்க்கு மெய்வருத்தம், மனவருத்தம் போன்ற எதுவுமே வாழ்க்கையில் வராது.

விளக்கம்:

வளி என்றால் காற்று என்றும், **வழங்கும்** என்றால் இயங்குகின்ற, விசிறுகின்ற, **மாஞாலம்** என்றால் பெரிய உலகம் என்றும் **கரி** என்றால் சான்று என்றும் முந்தையோர் பொருள் கொண்டார்கள்.

மேலே கூறிய 6 சொற்களுக்கும் வேறுபல ஆர்த்தங்களும் உள்ளன. வளி என்பதற்கு உலகில் வீசுகின்ற காற்று என்பதை விட, உடலில் உயிர்ப்புடன் உலாவரும் உயிர்க்காற்று என்று பொருள் கண்டிருக்கிறேன்.

வளி என்றால் வாயு, வாயு என்றால் Vital Air in the system உடலில் உள்ள முக்கியமான காற்று. இந்த உயிர்க்காற்று தான் 10வகைக் காற்றாகப் பிரிந்து உடலை பராமரிக்கிறது. பாதுகாக்கிறது. பலம் சேர்க்கிறது. வளம் சேர்க்கிறது. அழகு சேர்க்கிறது.

1. **கிராணன்:** இதயத்துடிப்பையும் சுவாசத்தையும் கட்டுப்படுத்துகிறது.

2. **அபானன்:** சிறு நீர் மற்றும் உடல் கழிவுகள் அனைத்தையும் வெளியேற்றுகிறது.

3. **சமானன்:** ஜீரணப் பணிக்கு சிறப்பாக உதவுகிறது.

4. **உதானன்:** உணவு, உயிர்க்காற்றை உட்கொள்வதை சரிசெய்கிறது.

5. **வியானன்:** உணவு சக்தியை காற்றுடன் உடலெங்கும் பரிமாறுகிறது.

6. **நாகா:** ஏப்பத்தை ஏற்படுத்தி, வாய்வை வெளியேற்றுகிறது.

7. **கூர்மான்:** இமைகள் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

8. **கிரிகாரன்:** தும்மல் இருமலை ஏற்படுத்தி, வேண்டா தவைகளை வெளியேற்றுகிறது.

9. **தேவதத்தன்:** கொட்டாவி மூலம் நிறைய காற்றை உட்கொள்ளச் செய்கிறது.

10. **தனஞ்செயன்:** இறந்த பிறகும் உடலில் இருந்து. இறுதியாக வெளியேறும் வீங்கல் காற்று.

இப்படி சுவாசிக்கும் உயிர்க் காற்றானது. உடலுக்குள்ளே சென்றதும் பத்துப் பிரிவாகப் பிரிந்து, பாங்குடன் பணியாற்றுவதைத்தான் வள்ளுவர், **வளிவழங்கும்** என்று குறித்தார்.

வளி உடலுக்கு வழங்குவது. மனவலிமை, உடல் வளமை ஆத்மாவுக்கு மேன்மை. இப்படிப்பட்டவரை உயர்த்தும் கேண்மை.

வள்ளுவர் மல்லல் என்றார், மா என்றார், ஞாலம் என்றார் கரி என்றார். இப்படிப்பட்ட சிறப்பாளருக்கு நோய் வருமா? வேதனை தருமா? மனநோய், உடல் நோய் எப்படி வரும்! அதனால், அவருக்குத் துன்பமே இல்லை என்று துணிந்து கூறினார். 4வது குறளில் மன்னுயிர் ஆத்மாவை ஓம்பு என்றார். அந்த ஆத்மா அளிக்கும் அரிய வாழ்க்கையைத்தான் ஐந்தாவது குறளில், மிக அருமையாக விளக்கியிருக்கிறார்.

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி அல்லவை செய்தொழுகு வார்.

பொருள் விளக்கம்:

பொருள் = தனது உடலைக் காக்கும் நெறிமுறைகளில்
நீங்கி = விலகியும் சிதறியும்,
பொச்சாந்தார் = (தம்மை) மறந்தும், குற்றங்களைச் செய்பவர்
என்பர் = என்று சொல்லப்படுபவர்
அருள் நீங்கிட = நல்வினைகளில் இருந்து விலகி
வார் = தொடர்ந்து
செய்தொழுகு = (தீவினைசெய்கையுடன்) நடக்கும்போது
அல்லவை = (நோய்களாலும் வேதனைகளாலும்) துன்பப்படுவர்

சொல் விளக்கம்:

பொருள் = உடல்; **பொச்சாந்து** = குற்றம், மறதி, பொல்லாங்கு
செய் = செய்கை, மனச் செய்கை, உடல் செய்கை
வார் = தொடர்ந்து; **ஒழுகுதல்** = நடத்தல்; **நீங்கு** = விலகு, சிதறு

முற்கால உரை:

உயிர்கள் மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்த்து, தவிரப்படும் கொடுமைகளைச் செய்தொழுகுவாரை, முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது, தாம் துன்புறுகின்றமையை மறந்தவரென்று, நல்லோர் சொல்லுவர்.

தற்காலை உரை:

அருள்விடுத்து, அதற்கு மாறான கொடுமைகளைச் செய்து வாழ்பவர், தாம் தேடிய பொருளை இழந்து, பிறரால் மறக்கப்பட்டவர் என்று சான்றோர் கூறுவர்.

புதிய உரை:

தனது உடல் அருமையை மறந்து, அருள் துறந்து தீவினைகளைத் தொடர்ந்து செய்பவர், நோய்களாலும் வேதனைகளாலும் துன்புற்று அழிவர்.

விளக்கம்:

பொருள் என்பதற்கு உறுதிப் பொருள் என்றும், செல்வப்பொருள் என்றும் பொருள் கொண்டிருக்கின்றனர். உடல் என்பதற்குப் பொருள் என்று ஒரு பொருள் இருப்பதால், நான் உடல் என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

உடலின் அருமையை, மெய்ம்மையை, மேன்மையை அறியாத மக்கள் தாம், உடலை மறப்பார்கள். ஒழுக்கத்தை வெறுப்பார்கள். விருப்பம் போல் நடப்பார்கள். வலிமையை அழிப்பார்கள். சக்தியைத் தொலைப்பார்கள். நோய்களால் இளைப்பார்கள். வேதனைகளால் களைப்பார்கள்.

இந்தக்கருத்தைத்தான் **பொருள் நீங்கி** என்றார். அந்த நிலை ஏற்பட்டவுடனே **அருள் நீங்கி** என்றார். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு வார் என்றார். ஒழுகுவார் என்றார். மனத்தாலும் உடலாலும் தொடர்ந்து ஒழுகுவதைத்தான் **செய்தொழுகு** என்றார்.

அதனால் ஏற்படும் விளைவுகளை, வள்ளுவர் மிக அருமையாக, தீவினையில் ஈடுபடுபவர்கள் அஞ்சி நடுங்கும் படியாக **அல்லவை** என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அல்லவை என்கிற துன்பம். நோய்களை அழைக்கும். வேதனைகளை மிகுவிக்கும். உடலில் வறுமையை விரிவுபடுத்தும். மெய் வருத்தத்தை மிகுதியாக்கும். மனவருத்தத்தைக் கடலாக்கும். வாழ்க்கையை ஒருவழியாக்கி விடும்.

ஆகவேதான், செய்தொழுகுவார். துன்பப்படுவார். அருளாளரும் ஆகாதன செய்தால் அல்லல்படுவார். எக்காலத்திலும் பொருளிலிருந்து நீங்கக் கூடாது என்ற உண்மையை உலகத்தார் உணர்ந்தாக வேண்டும் என்னும்.

வேட்கையுடன் 6 வது குறளில் பாடிய அவர், ஏழாவது குறளில், பொருளில்லார்க்கு இவ்வுலகமே இல்லை என்று ஆணித்தரமாகத் தொடர்ந்து பாடியிருக்கிறார்.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி ஆங்கு.

பொருள் விளக்கம்:

அருள் இல்லார்க்கு = கருணையும் நல்வினையும் இல்லாதவர்க்கு
அவ்வுலகம் இல்லை = அறிவுள்ளோர் அவையில் இடம் இல்லை.
பொருளில்லார்க்கு = நல்ல உடல் இல்லாதவர்களுக்கு
இவ்வுலகில் = வாழ்கிற இந்த உலகில்
ஆங்கு = அந்தப் பொழுதிலிருந்தே
இல்லாகி = மரணம் தொடங்கி விடுகிறது.

சொல் விளக்கம்:

அருள் = கருணை, நல்வினை; **அவ்** = அவை, அறிவுளோர் சபை
பொருள் = உடம்பு; **இல்** = மரணம், சாவு
ஆங்கு = அப்படியே, அந்தப் பொழுதே

முற்கால உரை:

உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின் பமில்லை. பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாகும்.

தற்கால உரை:

பொருளில்லார்க்கு இவ்வுலகில் வாழ்ந்தாலும். அவருக்கு உலகியற் பேறு இல்லை. அதுபோல, அருளில்லாதவர் புகழ் உலகில் புகுந்தாலும், அவர்க்குப் புகழ்ப் பேறு இல்லை.

புதிய உரை:

அன்பும் அறமும் இல்லாதவர்களுக்கு அறிவுள்ளோர் சபையில் இடம் இல்லை. நல்ல உடல் இல்லாதவர்க்கு, இந்த உலகில் மரண அவதிகள், அப்போதிருந்தே தொடங்கி, வாழ்வில்லாமல் ஆக்கிவிடும்.

விளக்கம்:

பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பமில்லை; உலகியற் பேறு இல்லை என்று பொருள் கொண்டிருக்கின்றனர்.

பொருள் என்றாலும், பொருளைப் பற்றியே நினைத்தாலும் கூடத் துன்பம் என்று தான் எல்லாக் கவிஞர்களும் பாடியுள்ளனர். அனைவரின் அனுபவங்களும் அப்படித்தான் அமைந்திருக்கின்றன.

இன்னல் தரும் பொருளை ஈட்டுதலும் துன்பம். பின் அதனைப் பேணுதலும் துன்பமே. அன்னது அழித்தலும் துன்பம். அதனைப் பிறர்பால் இழத்தலும் துன்பம். ஆக, பொருள் என்பது துன்பத்தைப் புரட்டிக் கொண்டு வரும் தூதுவன் என்றே சொல்லலாம்.

பொருள் என்பதற்கு நான் ' உடல் ' என்று பொருள்கூறி இருக்கிறேன். பொருளாகிய, உலகத்தின் முதல், உன்னத உடல் நலமானதாக இல்லையேல், அப்பொழுதே இந்த உலக வாழ்க்கை அழியத் தொடங்குகிறது. அதாவது **மரணம்** சம்பவித்து விடுகிறது.

மரணம் என்றால் சாவு அல்ல. இறப்பு அல்ல. வாழ்ந்து கொண்டே அனுபவிக்கிற சித்ரவதை. **ம** என்றால், நேரம், நஞ்சு, காலம், எமன் என்று அர்த்தம். **இரணம்** என்றால் காயம். உணவு போர் என்று அர்த்தம்.

நல்ல உடல், இல்லாவிட்டால், இந்த உலகில், காயத்தோடு போராட வேண்டியிருக்கும். உயிரைக் கவரும் எமனுக்கு உணவாகிவிட வேண்டியிருக்கும். அதைத்தான் **இல்லாகி** என்றார் வள்ளுவர்.

ஆங்கு என்றால் அப்பொழுதே என்று அர்த்தம். உடல் நலம் கெட்ட உடனேயே, உடலின் மரணம் தொடங்கிவிடுகிறது. மரணமானது உடம்பின் சத்தைக் குறைத்துக் கொண்டுவருகிறது அப்படிச் சத்துபோகும்போதுதான், செத்துப் போகின்றார்கள்.

ஆகவே, பொருளில்லாதவர், மரண வேதனை அனுபவிக்கும் அல்லலில் துடிக்கும் போது, அறிவோ, அன்போ, அடுத்தவர் மேல் இரக்கமோ, கடமையோ, கருணையோ எப்படி ஏற்படும்?

ஆகவே, அவர்களுக்கு நல்லவர்கள், வல்லவர்கள், உயர்ந்தோர்கள் கூடியுள்ள இடத்தில் இடமில்லைதான். வாழ்கிற சூழ்நிலையிலும் வாழ்வு இல்லை. எனவே, பொருளை ஒம்புங்கள் என்று தனது 7வது குறளில் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார் மற்றாதல் அரிது.

பொருள் விளக்கம்:

அருளற்றார் = கருணையில்லாத மனதுக்கு உரியவர்கள் கூட
பூப்பர் ஒரு கால் = தெளிவு பெற்றவராக ஒருவேளை மலரலாம்
பொருளற்றார் = (ஆனால்) நல்ல உடல் வளம் அற்றவர்
அற்றார் = இறந்தார் போல, வறுமையாளர் ஆவார்.
மற்றாதல் அரிது = முன்போல, அவர் நல்ல உடல் நலம் உள்ளவராய் வரவே முடியாது.

சொல் விளக்கம்:

பூப்பு = பூத்தல், உண்டாதல், மலர்தல்
அற்றார் = இறந்தவர், தரித்திரர், வறுமையாளர்.

முற்கால உரை:

ஊழான் வறியராயினார் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற் பொலிவர். அவ்வாறன்றி, அருளில்லாதார் பாவம் அறாமையின் அழிந்தாரே. பின்னொரு காலத்தும் ஆதலில்லை.

தற்கால உரை:

தம் பொருளை இழந்து போனவர், ஒரு காலத்தில் தாம் இழந்த பொருளைப் பெற்று, பொலிவடையவும் கூடும். ஆனால் அருளை இழந்தவர் இழந்தவரே. அதனை மீள அடைதல் அரிதாகும்.

புதிய உரை:

அருளிழந்து போனவர், ஒருவேளை, கருணை மனத்தை வளர்த்து மீண்டும் கடமையாற்றக் கூடும். ஆனால், நல்ல உடல் வளத்தை அழித்தவர், இறந்தவர் போல் வறுமையடைந்து போகிறார். அவரால் மீண்டும் முன்போல, நல்ல உடல் பெற்று சிறப்பாக வாழவே முடியாது.

விளக்கம்:

பொருளற்றார் பூப்பர் ஒருகால் என்பது, மிக சாதாரணமானதொரு நடைமுறை. ஆறிடும் மேடு மடுவும்போல் ஆம் செல்வம். செல்வம் வரும் போகும். அதனால் வாழ்வுக்கு மாற்றம் ஏற்படுமே தவிர, முயற்சித்தால், மீண்டும் செல்வத்தைப் பெற்று விடலாம்.

ஆனால், உடல் நலத்தை இழந்து விட்டால், அதனை குணப்படுத்தலாமே தவிர, முன்பிருந்த மேன்மை நிலையை பெற்று விடமுடியாது.

செல்வம் இழந்தால் பரவாயில்லை. அதனால் எதையும் இழந்து விடவில்லை. உடல் நலத்தை இழந்தால், உலகத்தையே இழந்தது என்பது பழமொழி (If Wealth is lost, nothing is lost. If Health is lost, everything is lost) என்பது ஆங்கிலப் பழமொழி **பொருளற்றார்** என்ற சொல்லை வள்ளுவர் குறித்திருக்கிறார். ஆற்றல் என்றால் தீர்ந்து போன விஷயம் என்று அர்த்தம். உடல் நலத்தை, வளத்தை, பலத்தை அழித்து விட்ட ஒருவர் - **அற்றார்** ஆகிறார். அதாவது இறந்தாற்போல, இயக்கமற்றவராக, செயல் குறைந்தவராக, சிந்தையால் எழுச்சி இல்லாதவராக, உணர்ச்சிகளில் உயிர்ப்பில்லாதவராக, எதற்கும் உதவாதவராக, உயிரோடு நடக்கின்ற பிணம்போல, நடமாடுகிறார்.

உடல் நலிந்தது என்றால், உள்ளே உள்ள செல்கள் சிதைந்து; செல்களால் ஆன திசுக்கள் தினவிழந்து; திசுக்கள் உண்டாக்கிய உறுப்புக்கள் வலிவிழந்து, உறுப்புக்கள் உருவாக்கிய மண்டலங்கள் மந்தகதி அடைந்து, உடலாகிய அங்கமே பாழாய்ப் போய் விட்டது என்பது தான் அர்த்தம்.

அப்படிப்பட்ட அழிந்த நிலைக்கு ஆளான உடல், மீண்டும் எப்படிப் பூப்படையும்? புத்துணர்ச்சி பெறும்? புதுப்பொலிவை அடையும்? பலத்தைப் பெறும்.

அதனால்தான் பொருளற்றார் அற்றார். அவர் மற்றபடி முன்போல் ஆகவே முடியாது. ஆனால், உடல் பாதிப்பால், பாதிக்கப்பட்ட மனம், அருளை இழந்தாலும், மீண்டும் மனம் தேறி, வருகின்ற வாய்ப்பு வரும். ஆகவே, அருளை வளர்க்க, பொருளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். என்னும் உயர்நெறி வாழ்க்கை முறையை 8 வது குறளில் எழிலாக எழுதிக் காட்டியிருக்கிறார்.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்.

பொருள் விளக்கம்:

தெருளாதன் = அறிவுத் தெளிவில்லாதவன்
மெய்ப்பொருள் = (உலகில்) உண்மையான பொருள் உடம்புதான் என்று

கண்டற்றால் = உணர்ந்து கொண்டால்,
தேரின் = மேலும் அந்த தெளிவில் ஞானம் பெற்று,
அருள் ஆதன் = அருள் மிகுந்த ஆத்மாவிற்கு
செய்யும் அறம் = ஒழுக்கமாக காரியங்களையெல்லாம் செய்து காப்பான்

சொல் விளக்கம்:

ஆதன் = ஆத்மா, உயிர், குரு, அறிவிலி, அறிவிலான்
தெருளாதான் = அறிவிலி; **தெருள்** = தெளிவு, ஞானம், தெளி

முற்கால உரை:

உயிர்க்கண் மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற் போலும்.

தற்கால உரை:

அருள் பேணாதவன் செய்யும் அறச் செயலை ஆராய்ந்து பார்த்தால், அது தெளிவில்லாதவன் மெய்யான பொருளைக் கண்டது போன்றதாகும்.

புதிய உரை:

அறிவில்லாத ஒருவன் தன் உடம்பைப் பற்றிய மெய்நிலையை அறிந்து கொண்டால், பெற்ற அந்த ஞானத்தால், தன் உடலில் உள்ள அருள் ஆத்மாவை மேம்படுத்த, மிகுந்த ஒழுக்கத்துடன் பேணிக் காப்பாற்றுவான்.

விளக்கம்:

மெய்ப்பொருள் என்றது உண்மையான பொருளாகிய உடம்பினை. உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன். அதனால் உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே என்றார் திருமூலர்.

உடம்பெனும் மெய்ப்பொருள் உடம்பிற்குள்ளே உறுபொருள் என்பது அறியாதவனைத் தெருளாதான் என்றார். ஆதான் என்ற சொல் அகராதிகளில் இல்லை. ஆதன் என்று தான் இருக்கிறது. ஆதன் என்கிறபோதும், குறளின் பொருள் மாறவில்லை.

தெருள் ஆதன் எனப்படும் தெளிவில்லாத அறிவிலி. அவன் மெய்ப்பொருளாகிய உடலின் மேன்மையை உணர்ந்து கொள்கிறான். மேலும் அவன் அந்த ஞானத்தில், தேருகிறபோது, அவன் உடலுக்குள்ளே உறுபொருளான ஆத்மாவை அறிகிறான்.

தெருளாதான் என்கிறபோது, அவன் அறிவிலியாகிறான். தெருள் ஆதன் என்கிறபோது. அவன் ஞானத்தால் உயிரைப்பற்றி அறிந்தவனாகிறான். அப்படி அறிந்து உடலின் மெய்யான நிலையை மேலும் மேலும் அறிந்து கொள்கிறபோது, அவன் அருள் மிகுந்த ஆத்மாவைப் பற்றி, ஆழமாக அறிந்து கொள்கிறான்.

ஆத்மாவைக் காக்க என்ன வழி என்று அறிகிறபோது அவன் அறம் தான் ஆன்ற வழி என்று செய்கிறான் என்பதைத்தான் வள்ளுவர் **செய்யும் அறம்** என்றார்.

அறம் என்பது ஒழுக்கம். ஒழுக்கம் செய்து, உயிரைக்காக்கும் உத்தம ஞானவான் ஆகிறான்.

தெருளாதான், அருளாதான் என்ற சொற்களுக்குப் பதிலாக, நான் தெருளாதன, அருளாதான் என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

தெருளாளன் ஞானத்தோடு உடல் பற்றி அறிந்தாலும், அறிவே இல்லாதவன் உடல் பற்றி நன்கு அறிந்தாலும் அது ஒன்று தானே. அதை உறுதிப்படுத்தவே **தேரின்** என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

மேலும் அறிவில் தெளிவு பெறுகிற போது ஞானம் வருகிறது. ஞானம் தான் ஆத்மாவை அறிகிறது. காக்க உதவுகிறது. வாழ்வில் உயர்வாக்குகிறது என 9 ஆம் குறளில் கூறுகிறார்.

250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின் மெலியார்மேற் செல்லு மிடத்து.

பொருள் விளக்கம்:

வலியார்முன் = (தன்னைவிட) வலிமையானவர்கள் முன்பாகவும்
தன்னின் மெலியார் = தன்னைவிட எளியார்கள் முன்பாகவும்
மேல் செல்லுமிடத்து = (யாராக இருந்தாலும் அவர்களுடன்) உடலை பற்றுடன் உறவாடும்போது
தன் = தன்னுடைய ஆத்மா போன்றவர்கள் என்று
நினைக்க = நினைப்பதே அருளுடைமையாகும்.

சொல் விளக்கம்:

வலியார் = வலிமையானவர்கள்; **தன்** = ஆன்மா, ஆத்மா
செல்லும் = பற்றுடன்.

முற்கால உரை:

அருளில்லாதவன் தன்னின் எளியார் மேல்தான் நலியச் செல்லும் பொழுது. தன்னின் வலியார் தன்னை நலிய வரும் பொழுது. அவர் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையினை நினைக்கவும்.

தற்கால உரை:

ஒருவன் தன்னிலும் வலிமை குறைந்தவனைத் தாக்கச் செல்லும்போது, தான் தன்னைப் பார்க்கிலும் வலிய ஒருவன் முன்நிற்கும் நிலையுண்டானால், எப்படி இருக்கும் என்பதை நினைப்பானாக!

புதிய உரை:

தன்னை விட வலிமையானவராக இருந்தாலும், தன்னை விட மெலியவராக இருந்தாலும், அவர் தன்னுடைய ஆத்மா போன்றவர்தான் என்று நினைப்பது தான், அருளுடைமை ஆகும்.

விளக்கம்:

துறவறம் பூணுகிற ஒருவருக்கு, தேகம்தான் ஆதாரம். தேகத்தின் திடமும், மனதின் மயக்கமிலா குணமும், ஆத்மாவின் ஆற்றல்மிகு சக்தியும் சேர்கிறபோது தான் துறவறம், அதன் பெருமையைப் பெறுகிறது என்று கருதிய வள்ளுவர், அருளுடைமைதான், துறவறத்தின் ஆரம்பப்பாடம் என்று அறிவிக்கிறார்.

அருளுடைமையே வாழ்க்கையில் எல்லாம் அற்புதமான வாழ்வு தரும் செல்வம் (வாழ்க்கை) என்று தொடங்கி, கருணை மனம், கடமை, குணம் இவற்றோடு, யாரையும் வெறுக்காத பண்பாண்மை வேண்டும் என்று தொடர்ந்து, பொருளாகிய உடலே அருளுக்கு ஊற்று என்று முத்தாய்ப்புடன் மொழிந்து, கடைசிக் குறளில், அருளுடைமை எப்படி உயிர் பெறும் என்று மிகத்தெளிவாக ஆறறிவு கொண்ட எந்த மனிதராக இருந்தாலும், எளிதாகப் பின்பற்ற முடியும் என்னும் இலக்கணத்தை, இலக்கியமாக்கித் தந்திருக்கிறார்.

எதிரிலே இருப்பவர் வலியவராக இருந்தாலும் சரி, கொடியவராக விளங்கினாலும் சரி, வறியவராக இருந்தாலும் சரி,

வெறுமையாளராக நின்றாலும் சரி, அவருக்கு ஆன்மா உண்டு. அந்த ஆன்மாவே அரிய சக்தி. அகிலத்திற்கு ஆனந்தத்தை அளிக்கும் அற்புத சக்தி.

தனக்குரிய ஆத்மா போலவே, அவருக்கும் உண்டு என்பதற்கும் மேலாக, தன் ஆத்மாவே அவர்தான் என்று நினைக்க வேண்டும் என்கிறார்.

அப்படி நினைக்கிறபோதே, அருளுடைமையானது ஒருவருக்கு உண்டாகிவிடுகிறது. அதுவே துறவறத்தை அறவறமாக்கி, ஆன்மிகபலத்தை அதிகரித்து வாழ்விக்கிறது. என்று இந்த அதிகாரத்தை அலங்காரமாக முடித்து வைக்கிறார்.

26. புலால் மறுத்தல்

துறவறம் பூண்டவர்களுக்கு முதல் அறிவுரையாக அருளுடைமை வேண்டும் என்றார். பிற உயிர்களின் மேல் பிரியமாக இருப்பதை விட, பிற உயிர்களை வதைத்துண்ணும் வழக்கத்திற்குத், தங்களையும் ஆட்படுத்திக் கொள்ளக்கூடாது என்னும் அறவுரைக்காகப் புலால் மறுத்தல் என்னும் 2 வது அதிகாரத்தைத் தந்துள்ளார்.

ஆதிகாலத்து மக்கள், மிருகங்களோடு மிருகமாக வாழ்ந்த போது, மிருகங்கள் பசிக்கு இரையாகிப் போனார்கள். அவற்றை எதிர்த்து வீழ்த்திய போது, அவற்றின் தசைகளும் உடம்பும் தின்பதற்குச் சுவையாக இருந்ததால், மரக்கறி உணவிலிருந்து, மாமிசக்கறி உணவுக்குத் தங்களை மாற்றிக் கொண்டார்கள்.

மிருகங்களின் உடற் பகுதிகளை முதலில் புலால் என்றனர். பிறகு புலவு என்றனர். தீயில் சுட்டு சாப்பிட்டுத் திருப்தி அடைந்தவர்களுக்கு உணவில் ஈடுபாடு கூடக் கூட, புதிய உணவு முறைகளைக் கண்டு பிடித்தனர்.

பிறகு **புலவு** என்பதற்கு மேலும் ஒரு பெயர் **புலாவு** என்று பெயர் சூட்டினர். புலெவு என்றும் பிரியமாக அழைத்தனர். சமைத்தனர். புலாவு என்றால் ஊனோடு பக்குவப்படுத்திய உணவு. அறு சுவை உணவுகளில் ஒன்றாக, வந்த விருந்தினர்களை மகிழ்விக்கும் விருந்தாக ஊன்கறி உணவு அமைந்து போனதால், புலால் உணவைப் பெரும்பாலான மக்கள் உண்ணத் தொடங்கினர்.

காலங்காலமாகத் தொடர்ந்த, இந்தச் சமுதாய உணவுப் பழக்கத்தை மாற்றியமைத்த, மத நிறுவனர்கள் பலரும், முயன்று பார்த்து, முடியாது என ஒதுங்கி விட்டனர்.

வள்ளுவர், இந்த வாழ்க்கை முறையைப் பார்த்தார். இல்லறம் பற்றி 200 குறட்பாக்களை எழுதிய வள்ளுவர், இந்த உணவுப் பழக்கத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை.

துறவறம் பற்றிப் பேச வந்ததும், புலால் மறுத்தல் என்னும் கொள்கையைத், துறவிகளுக்குரிய இலக்கணமாகச் சொல்லி வைத்தார்.

இல்லறத்தாருக்கு இந்தக் கருத்தை ஏற்க முடியும். ஏற்பவர்கள் ஏற்கட்டும். இயலாதவர்கள் தொடரட்டும்.

ஆனால், துறவறம் பூணுகிற தூய நெஞ்சினரால், புலாலை மறுக்க முடியும், வெறுக்க முடியும், ஒதுக்க முடியும் என்று எண்ணி அருளுடைமை வேண்டுவோருக்குப் புலால் உணவு வேண்டாமே என்று, அடுத்த அதிகாரமாக வைத்திருக்கிறார்.

புலால் மறுத்தல் என்பதில், மறுத்தல் எனும் சொல்லுக்குச் சில வித்தியாசமான அர்த்தங்களும் உள்ளன.

மறுத்தல் என்றால் தவறு, கோடானை, நாணுதல். புலால் உண்ணுவது தவறு என்று சொல்வது முதல் நிலை. புலால் உணவைப் பிறருக்குக் கொடுக்காமல் இருத்தலும் தவிர்த்தலும் இரண்டாம் நிலை.

புலால் உணவை எண்ணுவதும், உண்பதும் வெட்கக் கேடான செயல் என்று நாணி, அடியோடு வெறுத்து ஒதுக்குவது மூன்றாவது நிலை.

துறவறம் பூண்டோருக்குத் தொல்லைப்படுத்துவது இந்த உணவு முறையென்றாலும், வைராக்யத்துடன் வாழ்ந்திட வேண்டும் என்று வரம் பெற்ற வாழ்க்கையல்லவா துறவறம், ஆகவே, நாவடக்கம் வேண்டும், அதனால் மன அடக்கம் வரும் என்ற நல்ல கொள்கையாக, அருளுடைமை அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்துள்ளார்.

251. தன்னூன் பெருக்கத்திற்குத் தான்பிறி தூன்உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?

பொருள் விளக்கம்:

தன்னூன் = தனது உடல் தசைகளை
பெருக்கத்திற்கு = அதிகப் படுத்தி பருக்க வைப்பதற்காக,
பிறிதூன் உண்பான் = பிற உடலின் தசைகளை உண்பவனுக்கு
எங்ஙனம் = எவ்வாறு
தான் அருள் ஆளும் = அவன் ஆத்மா, அருளை (அடிமைப்படுத்தி) ஆட்சி செய்யும்?

சொல் விளக்கம்:

பெருக்கல் = அதிகப்படுத்துதல், பருத்தல்
ஆளும் = அடிமைப்படுத்தும்; ஆட்சி செய்யும். தான் (self) ஆத்மா

மூற்கால உரை:

தன் உடம்பை வீக்குதற் பொருட்டுத் தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன் எல்வகையான் அருளினை நடத்தும்?

தற்கால உரை:

தன் உடம்பைப் பருக்க வைப்பதற்காகத்தான், மற்றோர் உயிரைப் போக்கி, அதன் உடலை உண்பவன், எவ்வாறு அருளைக் கடைபிடிப்பவன் ஆவான்!

புதிய உரை:

தன் உடல் தசைகளைப் பெருக்க, பிற உடலின் தசைகளை உண்பவன் ஆத்மாவானது எவ்வாறு அருளை ஆட்சிசெய்யும்? அடிமையாக்கி வழி நடத்தும்!

விளக்கம்:

மிகவும் எளிதான, அருமையான பொருள் நிறைந்த குறள் இது. பிற உயிரின் உடல் தசைகளை உண்பவன், தனது வாய்ச் சுவைக்காக, நாவிற்காக, பழக்கத்தை விடமுடியாத இச்சைக்காக, உண்கிறான்.

அவன் மாமிச உணவை உண்கிறபோது, அவனது மனம் மகிழ்ச்சி கொள்கிறது. உடலும் உற்சாகம் கொள்கிறது. இந்த நிலையில் அவனது மனத்தையும், உடலையும் ஆற்றுப்படுத்துகிற ஆத்மா, மகிழ்கிறதா? உற்சாகம் கொள்கிறதா என்றால், சாதாரண மாந்தருக்கெல்லாம், உடல் வேட்கையும் மன வெறியும் சாட்டையாக ஆத்மாவைச் சுற்றி விடுகிறபோது, ஆத்மாதான்

அங்கே அடிமையாகி விடுகிறது. கோலெடுத்துக் குரங்காட்டும் குரங்காட்டி போல, மனமும் உடலும், ஆத்மாவின் மார்க்கத்தையே மாற்றிவிடுகின்றன.

உடல் பலம், மனபலம் என்பதைவிட, ஆத்மபலம் தான் அதிக ஆற்றல் மிகுந்தது. ஆத்மா தான் மனத்தை நிலைப்படுத்த வேண்டும். உடலை வழிப்படுத்த வேண்டும். ஆத்மா பலமற்றுப் போகிறது. அங்கே மனிதத்தனம் தான் வெற்றி கொள்கிறது. மலர்ச்சி மிக்க புனிதத்தனம் பின்வாங்கி ஒளிந்து கொள்கிறது.

அதனால் தான், தன்னூன் பெருக்கற்கு பிறிதூன் உண்பான் என்று வள்ளுவர் சொல்லாமல், **தான்** என்ற ஒரு சொல்லைத் தனியாகக் கூறியிருக்கிறார்.

தான் என்பது one's self என்று அகராதி பொருள் கூறுகிறது. self என்பதற்கு, அகநிலைப் பண்பு, அகநிலைக் கூறு, உள்ளுயிர் தன்மை, ஆன்மா என்று பலபொருட்கள் இருக்கின்றன.

பிற உயிரின் உடல் தசைகளை ஏற்று, விரும்பி உண்ணுகிற ஒருவரின் ஆன்மா, எப்படி அருளை ஆளும்? வளர்க்கும். ஒருவரின் அருளானது, எப்படி ஆன்மாவுடன் ஐக்கியமாகும்?

ஆதனால்தான், தான் என்ற சொல்லைத் தந்து, குறள்பாவின் இறுதியில், கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

ஆன்மா இல்லாமல் அருள் இல்லை. அருள் கலந்த ஆன்மாவே, துறவறத்திற்குத் துணையென்பதை, புலால் மறுத்தலில் முதல் குறளில், முடிவுபட எடுத்துரைக்கிறார்.

252. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு

பொருள் விளக்கம்:

பொருள் ஆட்சி = உடல் வலிமையை, ஆண்மையை
போற்றாதார்க்கு = காத்து, வணங்கி, வளர்க்காதவருக்கு
இல்லை= உடலுக்கு கேடுகளே உண்டாகின்றன
ஊன்தின்பவருக்கு = பிற உயிர் உடல் தசைகளை உண்பவருக்கு
அருள் ஆட்சி = கருணையை வளர்க்கும் கடமையும் முயற்சியும்
ஆங்கில்லை = அப்பொழுதே அழிந்து போகிறது.

சொல் விளக்கம்:

பொருள் = உடல்: ஆட்சி: மனமுயற்சி, மெய்வலிமை, பழக்கம், அனுபவம்

போற்றுதல் = புகழ்தல், பெறுதல், வணங்குதல், வளர்த்தல்

இல்லை = சாதல், இப்பிறப்பு, குறைதல், கெடுதல், காய்ந்துபோதல், நாசமடைதல்

முற்கால உரை:

பொருளாற் பயன் கோடல், அதனைப் பாதுகாவாதார்க்கு இல்லை. அதுபோல, அருளால் பயன் கோடல் ஊன்தின் பவர்க்கு இல்லை.

தற்கால உரை:

பொருளாளியாக விளங்கும் தன்மை, அப்பொருளைத் தேடிக் காப்பாற்றாதவர்க்கு இல்லை. அதுபோல், அருளாளியாம் தன்மை புலால் உண்பவர்க்கு இல்லை.

புதிய உரை:

உடலைக் காவாதார்க்கு, வலிமையும், ஆண்மையும், அழிந்துபோகின்றன. அதுபோல, ஊன்தின்பவர்களுக்குக், கருணையும், கடமை உணர்வும் முயற்சிகளும், அழிந்து போகின்றன.

விளக்கம்:

பொருளாட்சி, அருளாட்சி என்னும் இரண்டு சொற்களும் மிகமிகப் பொருள் பொதிந்தவை.

உடலை வலிமையாக்குவது, மனத்தில் அருளை வலிமையாக்குவது. இந்த வலிமையாக்கும் வேலைக்கு, எதை வலிமையாக்குகிறோம் என்கிற அடிப்படை உணர்வும் ஆர்வமும், ஆக்க பூர்வமான இலட்சியம் வேண்டும்.

அந்த இலட்சியத்தைக் குறிக்கும் சொல்லாகத்தான் **போற்றுதல்** என்ற சொல்லைப் பெய்திருக்கிறார்.

வளர்க்க விரும்புகிற ஒன்றை மதிக்க வேண்டும். துதிக்க வேண்டும். போற்றி ஏற்க வேண்டும். புகழ்ந்து பணியாற்ற வேண்டும். காத்து வளர்க்க வேண்டும். அப்பொழுது தான் வளர்ச்சி அங்கே பெருகும். பொருளாகிய உடலைப் போற்றி

வளர்க்காதவருக்கு, வலிமை குறையும். ஆண்மை மறையும். மேன்மை அழியும். கேடுகள் நிறையும். உறுப்புக்கள் உலர்ந்து சாயும். உணர்வுகள் பொன்றி மாயும். உடலின் அழகு தேயும். இவற்றையெல்லாம் குறிக்கத்தான் **இல்லை** என்னும் சொல்லால் குறித்துக் காட்டினார்.

அதுபோலவே **அருள் ஆட்சி** என்றார். ஆன்மாவில் அருள் ஆளவேண்டும் என்றால், கருணை வேண்டும். நல்வினை வேண்டும். இரக்கம், தயவு வேண்டும். கிருபையை மிகுவிக்கும் கட்டளை வேண்டும்.

ஊன் உண்பவருக்கு, ஆத்மா அடங்கிப்போகிறது. மனம் மங்கிப்போகிறது. உடல் ஒடுங்கிப்போகிறது. அப்புறம் எங்கே அருள் ஆட்சி செய்யும்? அதனால் தான் **ஆங்கில்லை** என்றார்.

ஊன் தின்கிறபோதே, ஆன்மாவிலே இடம் தேடிப்பிடித்திருக்கும் அருள் எல்லாம், அப்பொழுதே அழிந்து போகிறது. குறைந்து போகிறது. மறைந்து போகிறது. உலர்ந்து காய்ந்து, ஒழிந்து போகிறது என்கிறார் வள்ளுவர்.

உடலைக் காப்பதன் மூலம் உயர்வுகள் நிறைகின்றன. அருளைக் காப்பதன் மூலம் ஆன்ம அருள் நிறைகின்றது என்று 2வது குறளில், அருளிள் இணையிலா பெருமையானது- ஆண்மை மிக்க உடலில்தான் வெளிப்படுகிறது என்று சூட்சுமத்தைச் சொல்லுகிறார்.

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்கா தொன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

பொருள் விளக்கம்:

ஒன்றன் = பிறிதோருயிரின்
உடல் சுவை = தசைகளின் மேல் கொண்ட ஆசையுடன்
உண்டார் மனம் = உண்டவர் மனமானது,
படை நன்று = தூக்கமே சுகமானது என்பார்.
கொண்டார் நெஞ்சம் = அப்படித் தூக்கம் கொண்டவரது நெஞ்சமானது
போல் = (நெஞ்சம்) புதர்சூழ்ந்த மலைக்குகை போன்று
ஊக்காது = எழுப்பாது, சிந்திக்கச் செய்யாது, உற்சாகமும் படுத்தாது.

சொல் விளக்கம்:

படை = தூக்கம், படுக்கை, சேனை
போல் = புதர், பொந்து, மலைக்குகை
நன்று =சுகம், இன்பம்; **மனம்** = உள்ளம், அகம், நெஞ்சம்
ஊக்குதல் = எழுப்பல், உற்சாகப்படுத்துதல், சிந்தித்தல், கற்பித்தல்; **சுவை** = இனிமை, நாவின் உணர்வு, ஆசை

முற்கால உரை:

கொலைக் கருவியைத் தம் கையில் கொண்டவர் மனம், அதனால் செய்யும் கொலையையே போக்குவது அல்லாது, அருளைப் போக்காததுபோல, பிறிதோருடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ்வூனையே போக்குவதல்லாது, அருளைப் போக்காது.

தற்கால உரை:

கொலைக் கருவியைக் கையில் கொண்டவர் மனம், அருளென்னும் நல்ல தன்மையைக் கருதாது. அதுபோல, ஒன்றன் உடலைச் சுவைத்து, உண்டவர் மனமும் அந்நல்லதனைக் கருதாது.

புதிய உரை:

ஊனைச் சுவைத்து, மனம் போல உண்டவர் மனம், தூக்கமே சுகம் என்று தான் கொள்ளும். அந்த மனத்திலே எந்த எழுப்புதலும் முயற்சியும் இருக்காது. கற்பதும் சிந்திப்பதும். உற்சாகமும் போன்ற எல்லாமே இல்லாது போய் விடுகிறது.

விளக்கம்:

கறி உணவு சாப்பிடுவோர் மனத்திலே களிப்புத் துள்ளும். வயிறு நிறைவது கூடத் தெரியாமல் வாரித் தின்னச் சொல்லும். இந்தச் சுவைக்கு ஈடில்லை என்று எண்ணுகிறது உண்பவர் மனம் என்கிறார் வள்ளுவர்.

'உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு' என்பது பழமொழி. தொண்டர் என்றால் அடிமைகள். உலகப்பற்றில் ஈடுபட்டவர்கள் என்று அர்த்தம். ஆக, ஊன்கறி உணவை உண்டவர்கள், மனம் நிறைந்துபோன வயிற்றைத் தடவி நிம்மதி பெறுகிறது.

அதிகமாகச் சாப்பிடுவது உள்ளுயிரைக் கலங்கடிக்கும். அவதிகளில் ஆட்படுத்திவிடும் என்பது உடலியலார்களும் உணர்த்தும் உண்மை.

வயிறு நிறைந்ததும் கொஞ்சம் கண்ணயர வேண்டும் என்று எண்ணுவது மனித இயல்பு. அந்த மனித இயல்பைத்தான் வள்ளுவர் மிக அருமையாகப் **படை கொண்டார் நன்று** என்று சொல்கிறார்.

படை நன்று = தூக்கமே சுகம். படுக்கையே சொர்க்கம், என்று ஊன் கொண்டார், சுவை கண்டார் சொக்கிப் போகும் போது, மகிழ்ந்து போன மனத்தின் நிலை என்ன?

வள்ளுவர் மிகச் சுவையாக, **போல்** என்று சொல்லுகிறார். **போல்** என்றால் புதர், பொந்து, மலைக்குகை, கள்ளவழி என்று அர்த்தம்.

ஊனுண்ட மனது புதர்போல, விளையாத நிலம் போல, கொடுமையான குகைபோல, இளகாத மலை வழிபோல ஆகிவிடுகிறது. ஏன்? அங்கே உற்சாகம் கொள்கிற உணர்வுகள் இல்லை. முனைப்பை உண்டாக்கும் முயற்சிகள் இல்லை. சீர்மையை ஏற்படுத்தும் சிந்தனைகள் இல்லை. களிப்பூட்டும் கற்பிக்கும் வேலைகளும் இல்லை. எந்த விதமான எழுப்புதல்களும் அந்தக் கறி உண்ட இதயத்தில் இல்லை.

ஆகவே, நோயை மழுங்கடிக்கிற, மனத்தைக் கிறங்கடிக்கிற, உடலை நோகடிக்கிற, உற்சாகத்தைச் சாகடிக்கிற ஊன் உணவு தேவையில்லையல்லவா! என்று ஊன் உண்ட பிறகு ஏற்படுகிற உடல் வாதைகளையும், மனப் பூசல்களையும் மூன்றாவது குறளில் மிகத் தெளிவாகக் குறித்துள்ளார்.

254. அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல் பொருளல்லது தவ்வூன் தினல்.

பொருள் விளக்கம்:

கொல்லாமெய் எனில் = எந்த உயிரையும் கொல்லாத உடல் என்பது

பொருள் அருள் = நல்ல உடலும், கருணை மனமும் ஆகும்.

அல்ல = அப்படியில்லாமல்

கோறல் = பிற உயிர்களைக் கொன்று

தவ் = தன் நிலை பிறழ்ந்து

ஊன் தினல் = ஊனைத் தின்பது
அல்லது = கேடு மிகுந்த தீவினையாகும்.
யாது = அவர் (மனிதரல்லர்) அரக்காவார்

சொல் விளக்கம்:

அல்லது = தீவினை; கேடு; **யாது** = அரக்கர், ஊன்தின்பவர்
கொல்லாமை = கொல்லா மெய்; **கோறல்** = சொல்லுதல்
தவ் = தன்னிலை பிறழ்ந்து; **அல்ல** = இன்மை
எனின் = என்று சொல்லல்

முற்கால உரை:

அருள் யாதெனில் கொல்லாமை. அருளல்லது யாதெனில், கோறல். அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்.

தற்கால உரை:

அருள் யாது என்றால் அது கொல்லாமை. அருள் அல்லாதது யாது என்றால் அது கொல்லுதல். ஆதலால், அக்கொலையால் வந்த புலாலைத் தின்னல் சிறந்த பொருள் அன்று.

புதிய உரை:

எவ்வுயிரையும் கொல்லாத மெய்தான் சிறந்த அருள் பொதிந்த உடலாகும். (பொருள்) அவ்வாறின்றி, பிற உயிரைக் கொன்று, தன் நிலை பிறழ்ந்து, அந்த ஊனைத் தின்பவர் மனிதரல்லர்; அரக்காவர்.

விளக்கம்:

பிற உயிர்களைக் கொல்லுகிற மெய், கொல்லாதமெய் என்று இரண்டு வகை மெய்களைக் காட்டுகிறார் வள்ளுவர்.

பிற உயிரைக் கொல்லாதமெய் - பொருள் பொதிந்தது. அருள் நிறைந்தது. அதைக் **கொல்லாமை பொருள் அருள்** எனக் குறிக்கின்றார்.

அல்லது அதாவது தீவினை செய்து; கோறல் எனும் பிற உயிரைக் கொன்று, **தவ்** என்னும் தன்னிலையில் மாறி வந்து, ஊன் தின்பது யாராக இருக்கக் கூடும்? அவர் மனிதராக நிச்சயம் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர் அரக்கர் என்றே அழைக்கப்படுவார் என்று உறுதிபட வள்ளுவர் உரைக்கின்றார். **யாது** என்ற சொல்லுக்கு **ஊன்தின்பவர்** என்பது பொருள். ஊன் தின்பவரை அரக்கர் என்று அழைப்பதும் மரபுதான். யாது என்பதற்கு அரக்கர் என்றும் ஓர் அர்த்தம் உண்டு.

அல்லது யாது என்கிறார் வள்ளுவர். அல்லது என்பதற்குத் தீவினை என்று பெயர். தீவினையாகிய கேட்டினைப் புரிபவர் அரக்கராகத் தானே இருக்க முடியும். இரக்கமிலா ஈனர்கள் தாம் அரக்கர்கள் ஆகின்றனர்.

ஆகவே, நல்ல உடல் என்பதில் தான் நல்ல அருள் பிறக்கிறது. நல்ல உடல் என்பது கொல்லாமை தான் என்று ஓர் இலக்கணமே வகுத்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

இந்த நான்காவது பாடலில், கொன்று, ஊனைத் தின்பவர் கொடுமையாளர். அவர் இராக்கதர் என்றே கடுமையாகச் சாடுகிறார்.

மூன்றாவது குறளில், ஊன் உண்டால் உடல் சோரும். மதி மாறும். மந்தமாகும். துன்பமே சொந்தமாகும் என்று சொன்னவர், ஊன் தின்பவருக்கு நல்ல உடம்பும் நல்ல கருணை மனமும் அமையாது என்று துல்லியமாகத் தெரிவித்து விளக்குகிறார்.

255. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண அண்ணாத்தல் செய்யா தளறு.

பொருள் விளக்கம்:

உண்ணாமை = ஊன் உண்ணா மெய்யானது
செய்யாது = ஊனை உண்ணாது சீவிப்பதாம்
உள்ளது உயிர்நிலை = அந்த உடம்பில் தான் ஆத்மா நிறைவாக இருக்கிறது
ஊன் உண்ண = பிற உயிரின் உடல் தசைகளைத் தின்ன
அண்ணாத்தல் = வாய் பிளந்து அலைகிறபோது, உண்பவருக்கு
அளறு = நரக வாழ்க்கையையே அளிக்கும்.

சொல் விளக்கம்:

உண்ணாமை = உண்ணாதமெய், **உள்ளது** = உள்பொருள், ஆன்மா; **உயிர்நிலை** = உயிர் நிற்கும் உடல்
அளறு = குழப்பம், நரகம், சேறு.

முற்கால உரை:

ஒரு சாருயிர் உடம்பின் கண்ணே நிற்றல், ஊனுண்ணாமை என்கிற அறத்தின் கண்ணது. ஆதலான், அந்நிலை குலையவொருவன் அதனை உண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயப் பின் உமிழ்தற்கு அங்காவாது.

தற்கால உரை:

புலால் உண்ணாமையை உறுதியாகக் கொண்ட உடலே உயிர் நின்ற உடல். சேற்றுக் குழி கூட, புலால் உண்ணத் தன் பெருவாயைத் திறத்தல் இல்லை.

புதிய உரை:

ஊன் உண்ணாமல் வாழ்கிற உடலில்தான், மெய்யான ஆத்மா நிறைவாக வாழ்கிறது. பிற உடலைக் கொன்று தின்னுபவர்கள் வாழ்க்கை, குழப்பம் கூடிய நரக வாழ்க்கையாக அமைந்து விடுகிறது.

விளக்கம்:

உள் + அது + உயிர்நிலை. ஆன்மா, அது வாழ்கிற உடல், ஊன் உண்ணாது சீவிக்கிறபோது தான், நிறைவான ஆத்மாவாக, நிறைந்த நிம்மதியான வாழ்வை வழங்குகிறது.

ஆனால் பொதுவாக மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள்? ஊன் சோற்றைத்தான் உயிராக நினைக்கின்றார்கள். அப்படி உண்பதையே, தனது வாழ்க்கை நெறியாகவும், பிறப்புரிமை யாகவும் கருதுகின்றார்கள். பெருமையாகப் பேசுகின்றார்கள். பேரின்பம் கொள்கின்றார்கள்.

அப்படிப்பட்டவரை வள்ளுவர் எப்படி வெளிப்படுத்து கிறார் பாருங்கள். **அண்ணாத்தல்** என்ற சொல்லால் அவர்களை அடையாளம் காட்டுகிறார்.

ஊன் உண்ணுவதற்காக, உடலை வருத்தி அலைகின்றார்கள். வாய் பிளந்து திரிகின்றார்கள். கொட்டாவி விட்டுக் கொண்டு, ஏங்கிக் கிடக்கின்றார்கள் என்கிறார் வள்ளுவர்.

அப்படி அலைந்து திரிந்து ஊணுண்டவர்கள் வாழ்க்கை எப்படி அமைகிறது? அந்த வாழும் நிலையை **அளறு** என்கிறார். அளறு என்றால் **குழைசேறு. குழப்பம், நரகம்.**

எந்தப் பயிரும் விளையாத ஒரு பாழிடம், பயன்தராத நிலம்தான் சேற்றுப்பகுதி.

அதுபோலத், தெளிவில்லாத மன நிலையைத் தந்து கொடிய சூழ்நிலையால் குடியிருக்க வைப்பது குழப்பம்.

தீ அகமாக இருக்கும் அகத்தைத் தீயகமாக மாற்றிவிடும் நிலை. தீயகம் என்றால் நரகம் என்று அர்த்தம்.

ஆக, உடலைத் தீயகமாக மாற்றி, உருக்கிவிட்டு, உலை வைத்து, உதவாமல் செய்கிற உபத்திரவங்களை உண்டுபண்ணி, வாழ்வை அழித்து விடுகின்ற நிலையைத்தான், வள்ளுவர் அளறு என்றார்.

ஊன் உண்ண வேண்டும் என்று எண்ணும்போதே, அலறி ஓடவேண்டும் என்று வள்ளுவர் நினைத்தாரோ என்னவோ, அதை மிகவும் அச்ச மூட்டும் வகையில் **அளறு** என்றார்.

ஊன் உண்ணும் உடலில் உள்ள ஆத்மா, அல்லல் படும் என்ற உண்மையை 5 வது குறளில், மிக அருமையாக விளக்கியுள்ளார்.

256. தினற்பொருட்டால் கொள்ளாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

பொருள் விளக்கம்:

உலகு = ஒழுக்கம் சார்ந்த உயர்ந்தோர்
கொள்ளாது எனின் = தமது மனதுக்குப் பிடிக்க வில்லை , ஊன் எமக்குப் (பகை என்று கூறியபிறகு)
தினற் பொருட்டு = தின்பதற்காகவும்
விலைப் பொருட்டு = விற்கும் பொருட்டும்
ஆல் ஆல் = ஆலகால விடம் போன்ற
ஊன் தருவார் = புலாலைத் தருபவர்கள்
யாரும் இல் = யாருமே இருக்க மாட்டார்கள். வரவும் மாட்டார்கள்

சொல் விளக்கம்:

கொள்ளாது = மனதுக்குப் பிடிக்காமை; **உலகு** = ஒழுக்கம், உயர்ந்தோர்; **ஆல்** = நஞ்சு; **பொருட்டு** = காரணம்.

முற்கால உரை:

தின்னுதல் காரணமாக, உலகத்தார் கொள்ளாராயின், விலைப்பொருள் காரணமாக, ஊனை விற்பவர் எவரும் இல்லை.

தற்கால உரை:

தின்னும் பொருளாகப் புலாலை உலகினர் வாங்கிக் கொள்ள மாட்டார் என்றால், அப்பொருளை விற்பனைப் பொருளாகத் தருவார் எவரும் இரார்.

புதிய உரை:

ஒழுக்கம் நிறைந்த உயர்ந்தோர், (மக்கள்) ஊன் எமக்குப் பகை, என்று உறுதியாகக் கூறிவிட்ட பிறகு, தின்பதற்காக மட்டுமல்ல, விற்பதற்காகக் கூட ஊன் தருபவர் யாருமே இருக்க மாட்டார்கள்.

விளக்கம்:

உயிர்க்கொலை புரிபவரும், ஊன் சுவைத்து உண்பாரும், சாதாரண மனிதரல்லர். சண்டாளர். கொடிய அரக்கர் என்று முன் குறளில் கூறிய வள்ளுவர், புலால் மறுத்தலை எப்படி வெற்றிகரமாகச் செயல் பட முடியும் என்னும் நுணுக்கத்தை இந்தக் குறளில் கூறுகின்றார்.

கொள்ளாது: மனது விரும்பவில்லை: ஊன் உண்பதை வெறுக்கிறேன், பகைக்கிறேன் என்று யார் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அதைத் தொடர்ந்து உறுதியாகப் பின்பற்ற முடியாது.

ஏதோ ஒரு வேகத்தில், இனம் புரியாத சூழ்நிலை காரணமாக ஊனை ஒதுக்குவதாகக் கூறலாம். ஆனால், வாய் வீரம் பேசும் மக்கள் மீண்டும் அந்த வழிச் சேற்றுக்குள் வழுக்கி வீழ்ந்து விடுவார்கள். வாழ்க்கையிலும் நிறைய படுவார்கள்.

கொள்ளாது என்று யாரால் உறுதியாகக் கூறமுடியும்? அந்த வினாவுக்கு விடைதான் **உலகு** உலகத்தார் என்று கூறாமல் உலகு என்றார்.

ஒழுக்கத்தில் உயர்ந்த மக்கள் தாம் உலகு என்று போற்றப்படுகின்றனர் அதனால் தான் **உலகெனின்** என்றார். உலகாக விளங்கும் உயர்ந்த பண்பாளர்கள், ஒழுக்க சீலர்கள், உறுதியாகக் கூறிவிட்டால், அவர்கள் அருகில் யார் செல்ல முடியும்? ஊனை உண்ணுங்கள் என்று யாரால் சொல்ல முடியும்?

ஊன் விலைஞர்கள் கூட, அவர்களது உறுதியான உள்ளத்திற்குள் ஊடுருவி விட இயலாது. அதனால் தான் **யாரும் இல்** என்று வள்ளுவர் மிக உறுதியாக உரைக்கிறார்.

ஒழுக்கமில்லாத உடல் கூழைச் சேறு. அடக்கமில்லாத மனம் ஆலகால நஞ்சு. அதைக் குறிக்கத்தான் தினற்பொருட்டு ஆல், விலை பொருட்டு ஆல் என்று இரண்டு முறை குறிப்பிடுகின்றார்.

வேறு உயிர்களது உடலைச் சுவைப்பார், விடத்தைச் சுவைப்பார் என்று, புலாலை மறுக்கும் சூட்சமத்தை இந்த 6 வது குறளில் புரிய வைத்திருக்கிறார்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

பொருள் விளக்கம்:

பிறிதொன்றன் = பிறிதோருடம்பின்
புண் அது = தசையான அது
புல் ஆல் = ஊன் எனும் 'புன்மையான' நஞ்சு என்று
உணர்வால்பெறின் = உள்ள நெகிழ்வுடன் பகுத்தறிந்த பிறகு,
உண்ணாமெய் வேண்டும் = ஊன் உண்ணாத உடலாகக் காத்திட வேண்டும்.

சொல் விளக்கம்:

புலா = புலவு; **ஆல்** = நஞ்சு; **புண்** = தசை
உணர்வு = பகுத்தறிதல்; பாவித்தறிதல், அனுபவித்தறிதல், உள்ளம் நெகிழ்தல்

முற்கால உரை:

புலாலாவது பிறிதோருடம்பின் புண். அது தூய்தன்மை அறிவாரைப் பெறின். அதனை உண்ணாது ஒழியல் வேண்டும்.

தற்கால உரை:

புலால் என்பது பிறிதோர் உடலின் புண்ணே என்பதை ஒருவர் உணர்ந்தாரே யானால், அவர் அப்புலாலை உண்ணாதிருத்தலைக் காத்திட வேண்டும்.

புதிய உரை:

பிறிதோருடம்பின் தசையான அந்தத் தசைகள், ஊன் எனும் நஞ்சு என்று உணர்ந்தறிந்த பிறகு, அதை உண்ணாமல் தம் உடலைக் காத்திட வேண்டும்.

விளக்கம்:

மற்ற உயிரின் உடலில் உள்ள தசைகளை, விரும்புகிறவர்கள் ஊன், மாமிசம் என்று, பெரிதாகப் பேசி மகிழ்கின்றார்கள்.

மாமிச உணவை வெறுப்பவர்கள், மிக எளிதாக, அதிலும் இழிவாக, பிறிதொன்றின் புண் என்று கேலியாக எடி மகிழ்கின்றார்கள்.

புலால் என்னும் சொல்லை நாம் பிரித்துப் பார்க்கிறோம். புல்+ஆல் என்று பிரிகிறது. அது புன்மையான நஞ்சு என்று பிரிகிறது.

வேறொரு உடலின் தசைகளை விரும்பி உண்பார் ஒருபுறம். விலை பேசி விற்று வாழ்வார் மறுபுறம். இவர்களுக்கிடையில், இது பாவம் என்று விளக்கம் கூறி, பக்குவப்படுத்த முனைவோர் நடுப்புறம்.

யாராக இருந்தாலும், பிறர் கூறும் அறிவுரைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை. திருந்தி விடுவதும் இல்லை.

தானே திருந்தினால் தான் உண்டு என்கிற தத்துவ அனுபவ ஞானத்தை, இந்தக் குறள் மூலமாக, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது என்பார்களே, அந்த முறையில் அறிவுறுத்தி இருக்கிறார்.

ஒருவன் ஒன்றினை உணரவேண்டும். உணர்ந்தால்தான் அவன் உள்ளம் தோயும். நல்லதை அல்லதை ஆராயும். பிறகு ஓர் ஆழந்த முடிவுக்கு வரும்.

வள்ளுவர் வார்த்தைச் சித்தர் அல்லவா! அதனால் தான் உணர்வார் என்று ஒரு வார்த்தையை இங்கு வைத்திருக்கிறார்.

உணர்தல் என்பது ஐம்புலன்களால் உலகை உணர்ந்து கொள்வது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் மூலமாக, இந்த உலகின் இயல்புகளை உணர்வது. உணர்வுகள் தொடர்ந்து மனத்தில் பதிந்து, அறிந்து கொள்வதன் மூலம் அறிவது. அறிந்தவற்றில் தெளிவது. தெளிந்தவற்றில் தேர்ச்சி பெறுகிறபோது தான் ஞானம் உண்டாகிறது.

இப்படி உணர்கிற ஆற்றல் உள்ளவர், பிறிதோருடம்பின் புண்தான். அந்தத் தசைகள் என்று அறியும் போதுதான், அவரது விருப்பு வெறுப்பாக மாறுகிறது. அந்த வெறுப்புதான் சிறப்பான ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறது.

அதைத்தான் வள்ளுவர் **உணர்வார்ப் பெறின்** என்றார். அந்த உயர்ந்த நிலைக்கு மக்கள் எல்லாம் உயர்ந்து, உயர்ந்தோராக வேண்டும் என்னும் விருப்பத்தில்தான், மனத்திண்மையை உருவாக்கும் உணர்வைப் பற்றி, ஏழாம் குறளில் எடுத்தியம்பி இருக்கிறார்.

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார் உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

பொருள் விளக்கம்:

செயிரின் = உடல் நோய் மற்றும் மன நோயினின்றும்
தலைப்பிரிந்த = விட்டு நீங்கிய தெளிந்த அறிவுடைய
காட்சியார் = அறிஞர் பெருமக்கள்
உயிரின் தலை = பெருமை மிகுந்த உயிரினை
பிரிந்த ஊன் = விட்டுப் பிரிந்த உடல் தசைகளை
உண்ணார் = உண்ணவே மாட்டார்கள்.

சொல் விளக்கம்:

செயிர் = துன்பம், நோய், குற்றம், கோபம்
தலைப்பிரிந்த = விட்டு நீங்கிய ; **காட்சியார்** = அறிவுடையார்

முற்கால உரை:

மயக்கமாகிய குற்றத்தின் நீங்கிய அறிவினை உடையார், ஒரூயிரின் நீங்கி வந்த ஊனை உண்ணார்.

தற்கால உரை:

உயிரில் இருந்து நீங்கிவிட்ட உடலாகிய புலாலை, குற்றத்தில் இருந்து நீங்கிய அறிவினையுடையார் உண்ணமாட்டார்.

புதிய உரை:

உயிர் நீங்கிய சிறந்த உடலின் ஊனை, அறிவுத் தெளிவும், உடல் நலம் காக்கும் உயர்ந்தோரான அறிஞர்கள், உண்ணமாட்டார்கள்.

விளக்கம்:

செயிர் என்னும் பொருட் செறிவுள்ள சொல்லை வள்ளுவர் இங்கே வைத்துள்ளார்.

மனித உடல் என்றால் நோய்கள் இருக்கும். அதன் காரணமாக துன்பம் துணை சூழ நிறைந்திருக்கும். பேறு, இழவு, நரை, திரை, மூப்பு, பிணி என்னும் வாதனைகள் மிகுந்த வேதனைகள்.

மனித மனம் என்றால் ஆசுகளும் மாசுகளும் அதிகமாக இருக்கும். காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம் என்னும் ஆறுவகை ஆசுகள் மனத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும்.

இப்படிப்பட்ட உடல் மன உபாதைகளிலிருந்து, விடுபட்டு வந்த அறிஞர்கள் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

உடல் நோய்க்குப் புலால் உணவு ஊறு விளைவிக்கும். இந்த உண்மையான காரணத்தை ஏற்க மறுப்பவர்கள், ஏராளமானவர்கள் இருந்தாலும் உண்மை உண்மைதானே.

மரக்கறி உண்பாரைச் **சாது** என்று அழைப்பதும், மாமிசக் கறி உண்பாரை **யாது** (அரக்கர்) என்று அழைப்பதும் உலகில் நடை முறையில் உள்ள வழக்குதானே?

இறந்து போன உடல் என்றால், கேட்பவர்கள் கோபப்படுவார்கள் என்று நினைத்த வள்ளுவர், மிகவும் இலக்கிய நயத்துடன் உயிர் நீங்கிய உடல் என்கிறார்.

இப்பொழுதெல்லாம் கண் இழந்தவர்களைக் குருடர் என்று அழைத்தால் மனம் வேதனைப்படுகின்றார்கள் என்பதால், விழி இழந்தோர் என்று அழகாக அழைக்கின்றார்கள்.

இந்தப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே, ஆரம்பித்து வைத்திருக்கிறார் பாருங்கள்.

உயிரிழந்த உடல் என்கிறார். அதையும் மிக அழகாக, உயிரின் **தலை பிரிந்த** என்னும் சொற்றொடரால் சுட்டுகிறார். உயிர் எனும் பெருமைதனை இழந்த உடல்.

இப்பொழுதும் கூட, அடுப்பில் மாமிசம் வேகிறது என்பதற்குப் பதிலாகப், பிணம் வேகிறது என்று குத்திக்காட்டு வோர் நிறைய பேர்கள் உண்டு.

பிணம் என்று சொல்லாமல், உயிரைப் பிரிந்த நிணம் என்று சொல்லி, ஊன் தின்பவர்கள் மனம் நோகாமல், உண்மையைக் காட்டுகிறார்.

தெளிந்த அறிவுள்ளவர்கள், உயிர் பிரிந்த ஊனை உண்ணக் கூடாது. உண்டால், அவர்கள் பல நோய்களுக்கு ஆளாவர். அப்படிப்பட்ட குற்றமும், நோய்களும் வரக்கூடாது என்னும் உண்மை உணர்ந்த சாட்சியார்கள், மாட்சிமையோடு புலாலை மறுத்திட வேண்டும் என்று எட்டாம் குறளில் பட்டவர்த்தன மாகவும், அதே சமயத்தில் பதமாகவும் பேசுகிறார்.

259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

பொருள் விளக்கம்:

அவி சொரிந்து = உயிர்காக்கும் உணவு, நீர் போன்றவற்றை அதிகமாக ஈந்து.

ஆயிரம் வேட்டலின் = ஆயிரமாயிரம் கொடைகளைத் தர விரும்புதலைவிட,

ஒன்றன் = ஒருயிரின் (ஒரு மிருகத்தின்)

உயிர்செகுத்து = அழித்துக் கொன்று

உண்ணாமை நன்று = உண்ணாமல் இருப்பதே வாழ்வுக்கு ஆக்கம் தரும்.

சொல் விளக்கம்:

அவி = உணவு, சோறு, நீர், காற்று

சொரிந்து = அதிகமாகத் தந்து, ஈந்து; **வேட்டல்** = விரும்புதல்

செகுத்து = அழித்து, கொன்று

நன்று = சுகம், இன்பம், வாழ்வின் ஆக்கம்

முற்கால உரை:

தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒரு விலங்கின் உயிரைப் போக்கி, அது நின்ற ஊனை உண்ணாமை நன்று.

தற்கால உரை:

நெய் குருதி போன்றவற்றைச் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட, ஓர் உயிரைக் கொன்று, அதன் உடலை உண்ணாதிருப்பது உயர்ந்தது.

புதிய உரை:

உயிர்காக்கும் உணவு நீர் போன்றவற்றை அதிகமாக ஈந்து, ஆயிரமாயிரம் கொடைகள் செய்வதில் விருப்பம் கொள்வதைவிட, ஒரு விலங்கின் உயிரைக் கொன்று, அதன் உடலை உண்ணாதிருப்பது, வாழ்வுக்குச் சுகம் மட்டுமன்று. ஆக்கத்தையும் தரும்.

விளக்கம்:

அவி சொரிந்து என்றதும், ஆதி நாட்களில், வேள்விகள் செய்து, விரும்பி, அவற்றை வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டதைப் பரிமேலழகர், இந்தக் குறளுக்கு இப்படி உரையெழுதினார். தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து என்று எழுதினார்.

பிற்காலத்திலும், தற்காலத்திலும் உரை எழுதிய ஆசிரியர்கள் எல்லோரும் நெய் சொரிந்து வேள்வி என்றே தொடர்ந்து எழுதினர். எங்கோ வசதியுள்ள சிலர், தங்கள் பாவங்களையும் மீறிப் பலன்கள் பெற வேண்டும் என்பதற்காக, பக்தியற்ற பிரார்த்தனைகளே இன்று யாகம் என்னும் பெயரில் நடந்து வருகிறது.

ஆனால் **அவி** என்றால் உணவு நீர், தேவர் உணவு என்று பொருள்கள் உண்டு. **சொரிந்து** என்றால் அதிகமாகக் கொடுப்பது. இல்லை என்னாமல் ஈதல் என்று பல பொருள்கள் உண்டு.

இவ்வாறு ஆயிரமாயிரம் பேர்களுக்கு உண்டி அளித்து, உயிர் காத்து, உதவுவதற்கு விரும்புவதிலும், என்று அங்கே நிறுத்துகிறார். ஆயிரம் மனித உயிர்களுக்கு அன்ன ஆகாரம் தந்து உதவுவதைவிட, அங்கே ஒரு விலங்கைக் கொன்று உண்ணாமல் இருப்பது என்பது உயர்ந்தோருக்கான காரியம் என்று கூறுகிறார்.

நன்று என்ற சொல்லுக்குச் சுகம் என்றும், இன்பம் என்றும், வாழ்வின் ஆக்கம் என்றும் கூறலாம்.

ஓருயிரைக் கொல்லாமல் இருப்பதும், அதன் உடல் தசைகளை உண்ணாமல் இருப்பதும், மனத்துக்கு இன்பம். உடலுக்குச் சுகம் வாழ்வுக்கு ஆக்கம் என்கிறார் வள்ளுவர்.

செகுத்து என்பதானது கொஞ்சங் கொஞ்சமாகக் கொல்லுகிற கொடூரம். அப்படி உயிரை அழிக்காது காப்பது, அன்னதானம். ஆயிரம் பேர்களுக்கு அளித்துக் காப்பதை விட சிறந்தது என்று புலால் மறுத்தலின் புனிதத்தை ஒன்பதாம் குறளில் நம்பகமாக விளக்குகிறார்.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்.

பொருள் விளக்கம்:

கொல்லான் = பிற உயிர்களைக் கொல்லாதவனை,
புலாலை = விலங்குகளின் தசைகளை
மறுத்தானை = தவறென நாணி வெறுத்து ஒதுக்கியவனை
கைகூப்பி = அவரது ஒழுக்கத்திற்காக, கரம் குவித்து
எல்லா உயிரும் = மனிதன், விலங்குகள் உட்பட எல்லா ஆத்மாக்களும்
தொழும் = வணங்கும்.

சொல் விளக்கம்:

கை = ஒழுக்கம்; **கூப்பி** = கரம் குவித்து
உயிர் = பிராணி, விலங்கு

முற்கால உரை:

ஒருயிரையும் கொல்லாதவனை, புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிர்களும் கை குவித்து வணங்கும்.

தற்கால உரை:

ஒருவன் பிற உயிர்களைக் கொல்லாதவனாகவும், புலால் உண்ணாதவனாகவும் இருந்தால், அவனை உலகத்து உயிர்கள் எல்லாம் கை கூப்பி வணங்கும்.

புதிய உரை:

பிற உயிர்களைக் கொல்லாதவனையும், அவற்றின் தசைகளை உண்பது தவறென வெறுத்து, வெட்கப்பட்டு ஒதுக்குபவனையும், ஆத்மாவை மதிக்கும் எல்லோருமே கை குவித்து வணங்குவார்கள்.

விளக்கம்:

பிற உயிர்களைக் கொல்வதற்கு நினைவாலே அஞ்சுபவன், செயலாலே பிரியாதவன். அவன் சுய கட்டுப்பாடு உள்ளவனாக, தன்னைப் போல் பிற உயிர்களுக்கும் உள்பொருள் உண்டு என்பதால், தன்னைப்போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்று ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும் உத்தமன் ஆகிறான்.

புலால் உண்ணாதவன் என்பதைவிட, **புலானை மறுத்தானை** என்று வள்ளுவர் சொல்வதிலே, உள் அர்த்தமும் பொதிந்திருக்கிறது.

புலால் என்பது ஊனாகிய மாமிசத்தசையாக இருக்கலாம். ஆனால் அது புன்மையான நஞ்சு (புல் + ஆல்) எனக் கருதி, ஒதுக்குவதுதான், மறுத்தானின் மகிமையான செயலாகும்.

புன்மையான நஞ்சாகிய ஊனை நினைப்பதே **தவறு** என்றும், பிறருக்கு அதைக் கொடுக்காமல் இருக்கும். **கொடாமையே** பண்பட்ட பண்பாடு என்றும், ஊனைப்பற்றிப் பேசுதலும், வழங்குதலும், உண்ணுதலும் வெட்கப்பட வேண்டியவை என்றும் உள்ள மூன்று அம்சங்கள் தாம், **மறுப்பது!** என்பதைக் குறிக்கிறது.

வெறுப்பின் மேல் நிலைதான் மறுப்பு என்றும் நாம் கொள்ளலாம்.

ஒருயிரைக் காப்பது என்பது கடினமான காரியம். அழிப்பது என்பது மிகவும் எளிதான வேலை. பானை செய்பவனுக்குப் பல நாள் வேலை. உடைத்துப் போடுபவனுக்கு ஒரு நிமிட வேலை என்பது போல, உயிரைப் படைத்து உயிர்த்துக் காப்பது என்பது சிரமமான பணியாகும்.

அவற்றை அழித்து ஆனந்தப்படுவது அரக்கத் தனத்தின் உச்சக் கட்டக் கொடுமை என்பதைத்தான், **யாது** என்னும் சொல்லால் வள்ளுவர் குறித்துத் தந்தார்.

மற்றவர்கள் தொழுதிட, போற்றி வணங்கிட, ஏற்று மதித்திட வாழ்வது தான் வாழ்வாங்கு வாழ்வதாகும் என்னும் கொள்கை கொண்ட வள்ளுவர், புலால் மறுத்து வாழ்வதே புகழ்தரும் வாழ்வாகும் என்று கொள்கையை நிலைநிறுத்தி முடிக்கிறார்.

27. தவம்

அருளுடைமை என்னும் சீராண்மையை வளர்க்கவும், புலால் மறுத்து ஒதுக்கும் பேராண்மையை பெருக்கவும், உதவக்கூடிய உள்ளத் திண்மைக்குத் தவம்தான் கைகொடுக்கும், வழி நடத்தும் என்பதால் தான், துறவறவியலில் மூன்றாம் அதிகாரமாகத் தவம் வைக்கப்பட்டுள்ளது.

தவம் என்னும் சொல், தனித்துவம் மிக்கதாகவே விளங்குகிறது. தவ் + அம் என்று பிரிகிற சொல், தவத்தின் சீலத்தை, அருள் கோலத்தை அழகுபட விரித்துரைக்கிறது.

தவ் எனும் சொல்லுக்குத் **தன்னிலை பிறழ்ந்து சுருங்குதல்** என்று பொருள். தனது நிலையான மனித சுபாவ நிலையிலிருந்து மாறி, சுருங்கி நெறி நிற்றல்தான் **தவ்** என்றாகிறது.

அம் என்றால் அழகு, சீர், நீர் என்றெல்லாம் அர்த்தம் உண்டு.

சீராகத் தன்னிலை பிறழ்ந்து சுருங்குதல் என்றால், உடலுக்குத் தேவையான உணவு, உணர்வு, புலன்கள், நலன்கள் போன்ற எல்லாவற்றிலும் குறைத்து, நிறைவு காணுதல்.

மனித உடலுக்கும் மனத்துக்கும் பாதகமானவை **ஏழு** என்பர் 1. கர்வம் எனும் செருக்கு; 2. அற்ப ஆசை (உலோபம்); 3. காமம்; 4. பகை; 5. உணவாசை (போசனப் பிரியம்) 6. காய்தல் எனும் கோபம்; 7. சோம்பல் எனும் மடி.

இந்த ஏழும் உடலுக்குள் பெருகினால், உலகத் துன்பங்கள் எல்லாம் ஓடி வந்து ஒளிந்து கொள்ளும். அனைத்துக் கொள்ளும்.

ஆகவே, சுருங்குதல் என்பது, உண்டி சுருங்குதல், கோபம் சுருங்குதல், உட்பகை சுருங்குதல், (உட்பகை என்பது காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாச்சரியம்) புலன்களின் கடுமை சுருங்குதல்.

ஆகவே, தவம் என்பது உயிருக்கு உறுதி பயக்கும் செயல்களைச் செய்தலாகும். தேகத்திற்குத் தக்கன எது, தகாதன எது என்று பகுத்தறிந்து நடந்து கொள்ளுதலாகும். அத்துடன் நில்லாமல் தவத்திற்காக எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதை மனமுவந்து செய்தல் என்பது தான் முக்கியம்.

உலக வாழ்வைத் துறந்து, தனக்கு உள்ள உடமைகளைத் துறந்து, உள்ளத்தில் சுரக்கும் பற்றுக்களையெல்லாம் துறக்கும் தூய வினைகளே துறவற தர்மமாகும். அதுவே சீலம் நிறைந்த தவமாகும்.

ஆகவே தவம் என்பது, இயமம், நியமம் நிறைந்த விரதம் ஆகும். உடலால் உணர்வதும், மனதால் தெளிந்து எண்ணுவதும், எண்ணியதை சொல்வதும், சொல்லியதைச் செய்வதுதான் மனித இயல்பு என்றால், அவற்றையெல்லாம் அடக்கி, அறிவு வழி நடந்து, அனைத்துயிர்க்கும் துன்பம் இழைக்காமல், உதவுகின்ற உயர்ந்த சீலமே தவமாகிறது.

இந்தத் தவம் தான், இல்லறத்தில் ஈடுபட்டவர்களுக்கு தேவை என்றாலும், அவற்றில் ஈடுபட இயலாதவர்களாக அவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆனால், துறவறம் பூண்டவர்கள், இந்தத் தூய பணியைத் தொடங்கி, தொடர்ந்து, வாழ்நாள் முழுவதும் ஒழுகி, உதவி, உயர்ந்தோங்கி வாழவேண்டும் என்பதை வற்புறுத்தி, **தவம்** எனும் அதிகாரத்தை வள்ளுவர் தந்துள்ளார்.

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு.

பொருள் விளக்கம்:

உற்றநோய் = பிறர் தமக்கிழைத்த கேடுகளின் துன்பத்தை
நோன்றல் = பொறுத்துக் கொள்ளுதலும்
உறுகண் = பிறர் கேட்டிற்குப் பதிலாக துன்பங்களை
செய்யாமை = செய்யாமல் இருப்பதும்
தவத்திற்கு = மன ஒருமை உடைமைக்கு
உயிர் உரு = உடலும் ஆன்மாவும் போன்ற
அற்றே = தன்மையுடையதாகும்.

சொல் விளக்கம்:

உற்ற = நேர்ந்த, நிகழ்ந்த; **நோன்றல்** = பொறுத்தல், சகித்தல்
உறுகண் = துன்பம், நோய் ; **உயிர்** = ஆன்மா
உரு = உடல் உருவம்; **அற்றே** = அத்தன்மைத்தே

முற்கால உரை:

உண்டி சுருக்கம் முதலியவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையும் தவத்தின் வடிவாகும்.

தற்கால உரை:

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் ஆகியவையே தவத்திற்கு அழகாகும்.

புதிய உரை:

பிறர் இழைக்கிற துன்பக் கேடுகளைப் பொறுத்துக் கொள்வதும், செய்ததற்குப் பதிலாக அவருக்கு துன்பம் செய்யாமல் இருப்பதும் மன ஒருமை உடைய தவத்திற்கு, உயிரும் உடலும் போன்ற தன்மையதாக அமைந்து விடுகிறது.

விளக்கம்:

உண்டி சுருங்குதல், வெயிலில் காய்தல், நீரில் பனியில் நனைதல் போன்றவற்றால் உடலை வருத்திப் பெறும் துன்பம் என்று பரிமேலழகர் அக்கால வாழ்க்கை முறையை ஒட்டி எழுதிய உரையில் கூறுகிறார்.

தற்கால உரையாசிரியர்கள், தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் என்று தான் எழுதியிருக்கின்றனர்.

தானே வருவித்துக் கொள்ளும் துன்பமா? வேண்டுமென்றே இழைக்கும் துன்பமா? தெரியாமல் செய்து விடுகிற துன்பமா? எதைப் பொறுத்துக் கொள்வது என்று தெளிவாக்க வில்லை.

இயற்கையால் வருகின்ற துன்பம்; விலங்குகளால் விளைகின்ற துன்பம்; விடக் கிருமிகளால் ஏற்படுகின்ற துன்பம்; பகைவர்களால் ஏற்படுகின்ற துன்பம்; தனமன ஒருமைப்பாட்டை குலைக்கின்ற வழிகளில் உண்டாகும் துன்பம்.

தான் பாதிக்கப்படும் பொழுதெல்லாம், தவிர்க்க முடியாத கோபம் வரும். அதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், மன ஒருமை உடைமையை விளக்கும் தவத்திற்குப் பங்கம் ஏற்படுகிறபோது, விளைகிற கோபம் வேகமானது. அந்த வேகத்தையே விவேகத்தால் பொறுத்து அடக்கிட வேண்டும்.

அடக்குவது மட்டும் போதாது. பிற உயிர்களுக்குத் தம்மால் துன்பம் தோன்றி விடக் கூடாது. அடக்க முடியாத கோபத்தால், ஏதாவது விபரீதம் வரவே கூடாது என்பதற்காகத்தான் **உறுகண்** என்றார் வள்ளுவர்.

தான் எதிர்த்து செய்யும் செயலால், பிற உயிர்களுக்குத் துன்பமோ, நோயோ, அச்சமோ, தரித்திரமோ ஏற்பட்டு விடக்கூடாது.

அப்படி அமைகிற இரண்டு செயல்பாடுகளும், தவத்திற்கு உடல் போல, உயிர் போல என்று கூறுகிறார் வள்ளுவர்.

பிறர் பிழை பொறுப்பது உடல் போல, பிறருக்குத் துன்பம் இழைக்காமல் இருப்பது உயிர்போல. ஆகவேதான், தவத்திற்கு உடலாகவும் உயிராகவும் இருக்கின்ற இனிய காரியங்களை, இலக்கணமாக்கி, இலக்கிய நயத்துடன் வள்ளுவர் முதல் குறளாகத் தந்திருக்கிறார்.

262. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை அஃதிலார் மேற்கொள் வது.

பொருள் விளக்கம்:

தவம் = இயம நியமத்துடன் மேற்கொள்கிற தவமானது
தவமுடையார்க்கே = மன ஒருமை உடையவர்க்கே
ஆகும் = நிறைவேற்ற இயலுகிற காரியமாகும்.

அஃதிலார் = மன ஒருமைப்பாட்டு இல்லாதவர்
அதனை மேற்காள்வது = தவத்தைத் தொடர (நினைத்தல்) முயற்சித்தல்
அவம் = உடலுக்குத் தீமையும் உயிருக்குக் கேடும் பயக்கும்.

சொல் விளக்கம்:

தவம் = இயமம் நியமம் உள்ள விரதம்; தவமுடையார், மன ஒருமை உடையார்; **அவம்** = தீமை, கேடு, வீண்.

முற்கால உரை:

பயனேயன்றி தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே, ஆதலான், அத்தவத்தை அம் முற்றவமில்லாதார் முயல்வது பயனில்லாத முயற்சியாம்.

தற்கால உரை:

தவச்செயல்களை மேற்கொள்ளுதல், தவத்தன்மை உடையவர்க்கே தகும். அத்தன்மைகள் இல்லாதார் அச்செயல் களைக் கொள்ளுதல் அத்தவத்திற்கும் அச்செயல்களுக்கும் இழிவாகும்.

புதிய உரை:

தவம் செய்வதானது, மன ஒருமையும் உறுதியும் உடையவர்க்கே முடியும். மன ஒருமையும் மன உறுதியும் அற்றவர்கள், தவம் செய்யமுயல்வது, அவரது உடலுக்குத் தீமையையும் உயிருக்குக் கேடுகளையும் உண்டாக்கும்.

விளக்கம்:

தவம் என்பது இயமம் நியமத்துடன், கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து, தவறாது ஒழுகுவது. அவற்றைத் தினம் தொடர்வதற்கு மன ஒருமை, மன உறுதி, மன வலிமை வேண்டும்.

இயமம் என்பது 5 ஒழுக்கநெறிகள் உடையது 1. பிறருக்குத் தீங்கு செய்யாமை. (அகிம்சை); 2. உண்மையே பேசுதல் (சத்தியம்); 3 களவாடாமை; (அஸ்தேயம்); 4. புலன்களைக் கட்டியாளுதல் (பிரம்மச்சாரியம்); 5. பிறர் பொருள்மீது பேராசை கொள்ளாமை. (அபரிக்ரகம்).

அதேபோல நியமம் எனும் 5 ஒழுக்க நெறிகள். 1. உடல் மனம் தூய நிலை (லௌசம்); 2. மகிழ்ச்சி நிலை (சந்தோஷம்) 3. தவத்திற்குரிய ஒழுங்கு நிலை (தபசு); 4. சுய ஞானத்தை

உருவாக்குதல் (ஸ்வாத்தியாயம்); 5. மனக் கட்டளைக்குப் பணிதல் (பிரணிதாளம்).

இத்தகைய ஒழுக்க நெறிகளைக் கற்று, ஒரு சிறிதும் தவறாது தொடர்ந்து நடந்து கொள்ளும் பண்பு. அவற்றையே நினைத்துக் கொண்டிருக்கும் மன ஒருமை; அவற்றிலிருந்து விடுபடாத மன உறுதி. அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்தும் மனவலிமை.

இவைதான் தவம் என்று அழைக்கப்படுகிறது. மேற்கூறிய நல்வினைகளைச் செய்தால் தவம். இல்லையேல் அவம். உள்ளொன்று நினைத்துச் செயலொன்று செய்தால், வேதனை உடலுக்கு. சோதனை உயிருக்கு வாதனை பிறருக்கு.

தவம் - தவமுடையார் - அவம். அவம் அடைவார் என்று பிரித்துக் காட்டுகிற வள்ளுவர், துறவறத்தாருக்கு அருளுடைமை, புலால் உண்ணாமை என்பதைவிட, மன ஒருமை உடைமையே முதலில் வேண்டற்பாலது என்று, இரண்டாவது குறளில் இனிதாக எடுத்துரைக்கிறார்.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை அவர்கள் தவம்.

பொருள் விளக்கம்:

துப்புரவு வேண்டி = ஐம்புலன் நுகர்ச்சியை விரும்பி
மறந்தார் = தம் துறவு நிலையை மறந்தவரான
துறந்தார்க்கு = துறந்தவர்களுக்கு
மற்றை அவர்கள் = அறிவாளர்களான அவர்களுக்கு அடுத்து
கொல் = தடுத்து தாழ்ப்பாளிடுவதுதான்
தவம் = மன ஒருமை உடைமையின் உறுதியாகும்

சொல் விளக்கம்:

துப்புரவு = ஐம்புலன் நுகர்ச்சி, முறைமை, அனுபவம் **வேண்டி** = விரும்பி, இரத்தல். **கொல்** = குறுக்குத் தாழ்ப்பாள் பூட்டு; **மற்றை** = அடுத்துத் தொடர்வது; **தவ** = அறிவு.

முற்கால உரை:

இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்கு உண்டியும் மருந்தும், உறையுளும் உதவலை விரும்பி, தாம் தவம் செய்தலை மறந்தார் போலும்.

தற்கால உரை:

துறவிகளுக்கு உணவு முதலியன கொடுத்து உதவ வேண்டும் என்பதற்காகவே, மற்றவர்கள் தவம் மேற்கொள்வதைத் தள்ளி வைத்தாற் போலும்.

புதிய உரை:

ஐம்புலன் நுகர்ச்சியை விரும்பி, தனது துறவு நிலையை மறந்த துறந்தவர்களுக்கு அவர்களது அறிவானது தாழ்ப்பாள் போல தடுத்து நிறுத்துவதுதான் தவமாகும். அதுவே மன ஒருமை உடைமையின் பெருமையாகும்.

விளக்கம்:

உடலுக்கு வெளிப்பகை ஆறு. பேறு, இழவு, நரை, திரை, மூப்பு சாவு என்பவையாகும். மனத்துக்கு உட்பகை ஆறு. காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாச்சரியம்.

இந்தப் பனிரெண்டும் ஒரு மனிதனைப் பாடாய் படுத்திவிடும். அதுவும் சந்தர்ப்ப சூழ்நிலை சாதகமாக அமைந்து விட்டால், அந்த மனிதன் மீளவே முடியாது. அவற்றின் பிடியில் அடங்கியே அழிவான்.

துறவறம் பூண்டவர்கள் ஐம்புலன் நுகர்ச்சியில் ஆசைப்படுகிற போது, அவர்கள் தங்களையே மறந்து விடுகின்றார்கள். அப்படி ஐம்புலன்களை ஆட்டுவிக்கும் போகங்கள் 8 என்று கூறுவர்.

1. பெண், 2. ஆடை, 3. அணிகலன், 4. உணவு, 5. தாம்பூலம், 6. வாசனைப் பொருட்கள், 7. பாட்டு, 8. மலர் படுக்கையில் உறங்குதல்.

அன்றாடம் வாழ்க்கையில் எதிர்பார்க்கிற அனுபோகங்கள் இவை. இவற்றில் ஈடுபாடு கொள்ளாமல், இதயத்தை நழுவவிடாமல், எதிர்ப்போராட்டம் நடத்தி, வெற்றி கொள்ளும் வித்தையும் வீரமும் கொண்ட விவேகமான செயல்தான் தவமாகும்.

அப்படி அவர்கள் தங்களை மறக்கும்போது, யார் வந்து தடுக்க முடியும்? தானே தனக்குப் பகைவனும் நட்டானும் என்பதும், தன்னைத் தலைவனாகச் செய்வானும், தன்னைச் சிறுவனாகச் செய்வானும் தானே தான் என்பதும் உண்மையான மொழியல்லவா!

வள்ளுவர் **அவர்கள்** என்றும், **கொல்** என்றும் இரண்டு மணியான சொற்களைத் தந்திருக்கிறார்.

அவ என்றால் அறிவு. அவர்கள் என்றால் அறிவுள்ளவர்கள். கொல் என்றால் குறுக்குத் தாழ்ப்பாள், பூட்டு.

துறந்தவர்கள் மன உறுதியில் தளர்ந்து விடுகிற சமயத்தில், அவர்களது அறிவுதான், குறுக்குத் தாழ்ப்பாளாக அமைந்து, தடுத்தாள்கிறது. அந்தப் பூட்டுதான் தவமெனும் மன ஒருமை.

ஒருவரது மன ஒருமைதான் தவற்றை விரட்டும்; வலிமையைத் திரட்டும். குறிக்கோளுக்கு இட்டுச் செல்லும். அதனால்தான், இந்த மூன்றாம் குறளில் (தவத்தின் இலக்கணம் கூறினார். தவத்தை எல்லோராலும் ஏற்க முடியாது என்றார்). தவத்தினின்றும். நழுவினாலும், அவரது அறிவு சிறைமீட்கும் கோலாகும். சிறப்பூட்டும் நூலாகும் என்று உறுதி உண்மையை எடுத்துரைக்கின்றார்.

264. ஒன்னார் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும்.

பொருள் விளக்கம்:

ஒன்னார் = துறவற வாழ்வுக்குப் பொருந்தாதவர்கள்
தெறலும் = அவர்கள் கெடுக்கும் முயற்சிகளை அழிக்கவும்;
உவந்தாரை = துறவற நெறியில் விருப்பமான வரை
ஆக்கலும் = அவர்க்கு உதவி உயர்த்துதலும்
எண்ணின் = இலட்சிய நோக்கம் கொண்டிருக்கும்
தவத்தான் வரும் = தவ வலிமையால் செய்திட முடியும்.

சொல்விளக்கம்:

ஒன்னார் = பொருந்தாதவர்; பகைவர்
தெறல் = கெடுத்தல், அழித்தல், கோபித்தல்
உவத்தல் = மகிழ்தல், விரும்புதல்; **ஆக்கல்** = படைத்தல், உயர்த்தல்; **எண்ணின்** = நோக்கம் கொள்ளல்

முற்கால உரை:

தம் அறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், அதனை உவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும் தவம் செய்வார் நினைப்பாராயின், தவவலியால் அவர்க்குளவாம்.

தற்கால உரை:

பகைவர்தம் பகை உணர்வை மாற்றவும், நண்பர்களைப் பெருக்கிக் கொள்ளவும் நினைத்தால், அது தவ வலிமையால் முடியும்.

புதிய உரை:

துறவற வாழ்வுக்கும் பொருந்தாத மனத்தினராய்க் கேடு செய்வாரது முயற்சியை அழிக்கவும், துறவற வாழ்வுக்கு விருப்பமானவரைக் காத்து உயர்த்தவும் கூடிய வலிமை, இலட்சிய நோக்கமுடைய தவத்தால் நிகழ்த்திட முடியும்.

விளக்கம்:

தம்மை எதிர்ப்பாரைப் பகைவராகக் கருதுவதும், அவர்களை அழிக்க நினைப்பதும் ஆறறிவுள்ள மனிதர்களுக்கு கைவந்த கலையாகும். ஐந்தறிவு மிருகங்கள் தாம், எதிர்ப்பவைற்றை இப்படிச் செய்யும் என்றில்லை. எதிர்த்தால், அவர்களை உதிர்த்திடவேண்டும் என்ற வெறியைச் சாதாரண மக்கள் கொள்ளலாம். சாதுவாக மாறிவிட்ட துறவிகள் செய்யக் கூடாதல்லவா!

அதனால்தான் ஒன்னாதவற்றை மட்டுமே ஒதுக்கித்தள்ள வேண்டும். கோபிப்பதும். கெடுப்பதும். அழிப்பதும் துறவிகளுக்கு வரக் கூடாதல்லவா! ஆகவே, தம் அற நெறிக்குப் பொருந்தாதவற்றைச் செய்யும் பொருந்தாதவரை, அவரது முயற்சிகளை அழிப்பது முதல்பணி.

துறவறம் பூண வற்புறுத்தி அழைப்பது, ஒருவரது வாழ்வை அழிப்பதற்குச் சமம். ஆகவே, துறவற நெறியை விரும்புகிறவர்களுக்கு வழியமைத்து, காத்து, வளர்த்து வாழ்விப்பது இரண்டாம் பணி.

இந்த இரண்டு பணிகளுக்கும் காய்தல் உவத்தல் இல்லாத மனம் வேண்டுமல்லவா! அந்தப் பொதுமனம், புதுமனம் எப்போது வரும்? தவ வலிமையால்தான் வரும். தவம் எனும் கொள்கையான இலட்சிய வேட்கையில் தான் எழும்.

அதனால்தான் தவத்தின் வரும் என்றார் வள்ளுவர் அதிலும், எண்ணின் வரும் என்றார். எண்ணமே துறவற வாழ்வாக, துறவற வாழ்வே எண்ணமாக இருக்கும் போதுதான், மனம் சிந்திக்கின்றதாக இருக்கும். அந்தச் சிந்தனைகளே செழுமையைத்தந்து முழுமையை வழங்கும் என்பதால்,

எண்ணின் வரும் என்றார். தவமான மன ஒருமையால், செயல் ஒருமையால் நிகழும் என்று 4வது குறளில் தவத்தின் வலிமையை வியந்து பாடுகின்றார்.

265. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப் படும்.

பொருள் விளக்கம்:

வேண்டிய வேண்டி = தவம் செய்து தான் பெறவேண்டியதை எல்லாம்; ஈண்டு = விரைவாக
ஆங்கு எய்தலால் = அப்பொழுதே பெற்று, பயன் அனுபவித்தலால்,
செய்தவம் = ஒருமனத்துடன் செயலற்று இருப்பதை (தவத்தை)
முயலப்படும் = தொடர்ந்து செய்திட, நன்மைகள் மிகுதியாகவே கிடைக்கும்.

சொல் விளக்கம்:

ஆங்கு = அப்பொழுதே ; **எய்தலால்** = பயன் அனுபவித்தலால், பொருந்துதல், பெற்றுக் கொள்ளுதல்; **ஈண்டு** = விரைந்து, நிறைவாக; **முயலால்** = தொடர்ந்தேற்றி, ஊக்கம், உற் சாகம்
படும் = நன்மை, மிகுதி

முற்கால உரை:

முயன்றால், மறுமைக் கட்டாம் வேண்டிய பயன்கள், வேண்டியவாறே பெறலாம். ஆதலால், செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்.

தற்கால உரை:

ஒருவர் செய்யும் தவத்தின் ஆற்றலால், அவர் விரும்புவன விரும்பியவாறே அடையப் பெறுதலால், அத்தவம் இங்கு முயன்று செய்யப்படுவதாகின்றது.

புதிய உரை:

ஒருங்கி நிலை பெற்ற உள்ளத்துடன் செய்கிற தவத்தால், பெறவேண்டிய எல்லா பயன்களும் அப்பொழுதே கிடைப்பதால் உடனே தவத்தை விரைந்து, தொடர்ந்து, உற்சாகத்துடன் செய்ய வேண்டும்

விளக்கம்:

வேண்டிய என்ற சொல்லானது ஒரு துறவிக்கு என்ன வேண்டும்? என்று வினாவாக எழுந்து, விடையாகத் தொடர்கிறது.

உற்றதையெல்லாம் துறந்து, பற்றற்ற நிலைக்குள் வந்த துறவி, என்ன எதிர்பார்த்து, இந்தத் தவத்தை ஆற்றுகிறார்.

பள்ளத்தில் உள்ள நீரில் வாழ்கிற மீனினம், அந்தப்பழைய நிலை விட்டு; வருகிற புதிய வெள்ளத்தைக் காண, அதில் வாழ ஆசைப்படுவது போல, துறவியானவர் என்ன புதிய பயனை எதிர்பார்க்கிறார்.

''நல்ல துறவிகள் நடுங்குவதில்லை. நமனும் அங்கில்லை. இடும்பையும் இல்லை. இராப்பகல் இல்லை. அடைவதற்குரிய வழிப்பயன்களும் இல்லை'' என்று திருமூலர் (1598) காட்டுகின்றவைதான், துறவி விரும்பி வேண்டி, துதித்துக் கேட்டுப் பெறுகின்ற நன்மைகளாகும். ஆதலால், செய்தவம் ஈண்டு என்கிறார் வள்ளுவர்.

ஈண்டு என்றால், விரைவாக, நிறைவாக, மிகுதியாக இம்மெய்க்குள்ளே இயற்றுங்கள். தவத்தை என்று சொல்கிறார். ஏன் விரைந்து செய்ய வேண்டும்? இந்தப் பிறவிக்குள்ளே, நாளை நடப்பதை நாமறியோம். இன்று என்பது தான் பொய்யான உலகில் மெய்யான நிலை. ஆகவே, விரைந்து செய்யுங்கள்.

படும் என்றால் நன்மை, மிகுதி என்று பல பொருட்கள் உண்டு. கிடைக்கின்ற நன்மைகளைப், பெறுவதற்காக **முயல** அதாவது தொடர்ந்தேற்றி செய்து பெறுக என்கிறார்.

புலன்கள் என்பவை இளங்கன்றுகள்போல எப்பொழுதும் துள்ளித் திரிந்து, கொட்டிலுக்குள் அடங்காமல், அலைந்து மலையும் கன்றுகளை, அடக்குபவன்தான் நல்ல மேய்ப்பன். அதுபோல, தவத்தின் பயனை நுகருமாறு செய்யவிடாமல், புலன்கள் நெஞ்சினை மடக்கும். அதனை அடக்கிக் கட்ட வல்லார்க்கே நெஞ்சத் திடம் உண்டாகும்.

ஆகவே, அந்த நெஞ்சத்தின் ஆற்றலை அதிகப்படுத்திக் கொள்ள விரைந்து, விடா முயற்சியுடன், நோற்றுத் தவம் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறபோது, பெறுகிற பயன்கள்

எல்லாம், துறவிக்கு வேண்டியனவாக, அவர் விரும்பியனவாகக் கிடைக்கும் என்ற உண்மை நிலையை, மேன்மை வழியை, வள்ளுவர் 5ஆம் குறளில் தெளிவாகக் காட்டுகிறார்.

266. தவம்செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார் அவம்செய்வார் ஆசையுள் பட்டு.

பொருள் விளக்கம்:

தவம் செய்வார் = புலன் வழி போகாமல், உள்ளம் ஒடுங்கி, மன ஒருமையுடன் தவம் செய்கிறவர்.
தம் கருமம் = தமது ஆன்மாவின் ஒருமைக்கான காரியங்களையே
செய்வார் = மிகுதியாகச் செய்வார்
மற்றல்லார் = மற்றைய தீயோர்கள்
ஆசையுள்பட்டு = புலனாசைகளுக்கு வேகப்பட்டு
அவம் செய்வார் = வீணான கேடுகளையே செய்வார்கள்.

சொல் விளக்கம்:

தம் = ஆன்மாக்கள்; **கருமம்** = தொழில், கடமை, செய்கை
அல்லார் = தீயோர்கள்; **அவம்** = வீண், கேடு, தீவினை.

முற்கால உரை:

தம் கருமம் செய்வாராவார் துறந்த தவத்தைச் செய்வார். அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.

தற்கால உரை:

தவம் செய்பவர் என்று சொல்லப்படுபவர் தம் கடமையைச் செய்பவரே. அவரை அல்லாத மற்றவர், ஆசை எனும் பிடியுள் பட்டு, வீண் செயல் செய்பவரே.

புதிய உரை:

உள்ளம் ஒடுங்கி தவம் செய்பவர்கள், தங்கள் ஆன்மாக்கள் வலிமை பெற்றுய்யவே, கடமையாற்றுகின்றார்கள். தவவேடம் பூண்ட மற்ற தீயோர்கள், புலன் இன்பத்தில் சிக்கி, வீணான கேடுகளையே செய்து பட்டுப் போகின்றார்கள்.

விளக்கம்:

தவம் செய்பவர்கள், தங்கள் ஆனந்தத்திற்காகவே அரிய கடமைகளை ஆற்றுகின்றார்கள். ஆன் + நந்தம். என்பதே ஆனந்தம். அதாவது ஆன்மாவின் இன்பப் பெருக்கமே ஆனந்தம்.

ஆனந்தம் பெற, ஆன்மாவுக்கான காயெம் என்று கூற வந்த வள்ளுவர், மிக அழகாகத் **தம் + கருமம்** என்றார். **தன்** என்றால் ஆத்மா **தம்** என்றால் ஆத்மாக்கள். அதாவது ஆன்மாக்கள். ஆன்மாக்களின் அரிய சக்திக்காக, உயிர் படும் வேதனைகள் பனிரெண்டையும், பக்குவமாகப் பொறுத்துக் கொள்கின்றார்கள்.

அனல், சீதம், இடி, புனல், வாதம், ஆயுதம், நஞ்சு, மருந்து, பசி, தாகம், பிணி, பழி, உணர்ச்சி எனும் பனிரெண்டும் உயிருக்கு வேதனை தந்து, மனத்தைக் கலைத்து, உடலைச் சிதைத்து விடுவனவாகும்.

ஆனால், தவம் செய்யும் பக்குவர்கள், வேதனைகளை வென்று வலிமையாளர்களாக மாறி விடுகின்றார்கள். அதனால்தான், அற்புதவான்களை வள்ளுவர் தவம் செய்வார் என்றார்.

அத்தகைய கடன்களை ஆற்றாதாரை **அல்லார்** என்றார். ஆமாம் தீயவர்கள். பொய்வேடம் பூண்ட பேயர்கள். வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து, இழிவான செயல் செய்யும் இழிஞர்கள்.

அப்படிப்பட்டவர்கள் ஆசைகளுக்கு அடிமையாகி, துறவிகளுக்கேயுரிய பண்புகள் சிறிதுமில்லாமல், பிறரைக் கோபித்தல், நட்புறவு பாவித்தல், பயன் கருதி வேண்டியதைச் செய்தல், முனைந்து தின்றல், சுவைத்தல், தீமை செய்தல், பிறரை முறையின்றி தாழ்த்தல், உயர்த்துதல், தற்பெருமை பேசுதல் போன்ற எல்லா தீய குணங்களையும் கொண்டிருப்பதால்தான், அவர்களை அல்லார் என்றார். அவம் என்றார்.

அவர்கள் சத்திரத்து நாய்கள் போலக் கத்தித் திரிவர். குரங்குபோலத் தாவும் மனம் கொண்டதனால், கழுகுபோலப் பிறரைக் கொத்தித் திரிவர். ஆகவே, அவர்கள் புன் ஞானத்தார், ஞானமில்லாமல் தவவேடம் பூண்டு, அவத்திற்கு ஆளாகி, அழிகின்றார்கள். ஆகவேதான், கடுமையாகப் **பட்டு** என்று கூறியிருக்கிறார்.

267. சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

பொருள் விளக்கம்:

சுடச் சுடரும் = தீயிலிட்டு சுடுகிறபோது பிரகாசிக்கிற
பொன்போல = தங்கம்போல

துன்பம் = மெய்வருத்தம், மனவருத்தம் போன்ற
பவர்க்கு = கொடுமைமிக்க இடையூறுகளில்
சுடச்சுட நோற்கில் = பட்டு பட்டு சகித்து கொள்கிறபோது
ஒளிவிடும் = கடவுள் தன்மை உண்டாகி விடுகிறது

சொல் விளக்கம்:

சுடர் = பிரகாசித்தல்; **ஒளி** = ஞானம், புகழ், கடவுள் தன்மை
துன்பம் = மெய் வருத்தம், மனவருத்தம்
நோற்க = சகித்துக்கொள்ள
பவர் = நெருக்கம், இடையூறு, கொடுமை, ஒடுக்கம்

முற்கால உரை:

தீயின் கணோடும் பொன்னுக்கு அது சுடச்சுட, தன்னோடு கலந்த குற்ற நீங்கி, ஒளி மிகுமாறு போல தவம் செய்ய வல்லாருக்கு அதனான் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவம் நீங்கி ஞானமிகும்.

தற்கால உரை:

துன்பம் ஒரு பொழுதுக்கு ஒரு பொழுது வருத்தவும், அதனைப் பொறுத்துக் கொள்ளும் துறவினர்க்குச் சுடச்சுட ஒளியுண்டாகும் பொன்போல் ஒளி உண்டாகும்.

புதிய உரை:

தீயில் சுடப்படுகிறபோது பிரகாசிக்கிற தங்கம்போல துன்பக்கொடுமைகளைத் தவத்தின் காரணமாகச் சகித்துக் கொள்கிறபோது, ஞானம் மிகுதியால் கடவுள் தன்மை உண்டாகிவிடுகிறது.

விளக்கம்:

தவத்தின்போது அதிக இடையூறுகள், இடர்ப்பாடுகள் நேரிடும். இயற்கையின் மூலமாக, மிருகங்கள், பூச்சிகள் வாயிலாக, மனிதர்கள் வழியாக, தன் புலனடக்கமின்மை காரணமாக வருகின்ற துன்பங்கள்.

துன்பங்களைச் சந்தித்து, அவற்றிலிருந்து விடுபடுவதைச் சிந்தித்து, அவற்றின் மூலமாகச் சாதகமான உண்மைகளையும் நன்மைகளையும் வந்தித்து, வைராக்கிய மனத்துடன் தொடர்கிற போதுதான், தவம் முழுமை பெறுகிறது.

துன்பம் எனும்போது, வியாதி மூலமாக மெய்வருத்தம்; விருப்புகளால் மனவருத்தம் என்று நெருக்குகிறபோது. அவை

தீயாய் சுடுகின்றன. அதில் அமிழ்ந்து, வெற்றிகரமாக வெளியே வருவதற்குத்தான் பொன்னை இங்கே உவமையாகக் காட்டுகிறார்.

தீயில் படப்பட, தீயும் சுடச் சுட, பொன்னும் ஒளி பெறுகிறது. மக்களுக்குப் பயன்படும் வண்ணம் அணியாகிறது.

பொன் என்றாலும் உடல் என்று ஓர் அர்த்தம் உண்டு. உடலும் துன்பத் தீயில் உருகும்போது, பலவித சோதனைகளையும் வேதனைகளையும் ஏற்று, சாதனையாக மாற்றிக் கொண்டு வெளிவருகிறது.

நோற்கிற் என்றால் சகித்துக் கொள்ளுதல், பொறுத்துக் கொள்ளுதல் என்று பொருள். துன்பம் கண்டு புலம்பக் கூடாது. துவளக்கூடாது. இலட்சியத்தை மறந்து விடக்கூடாது. நம்பிக்கையை கைவிடக்கூடாது. காயப்பட்ட திண்மையான மனம், சாதாரண மனிதனுக்கே தேவையென்றால், துறவிகளுக்கு எவ்வளவு வேண்டும்?

துறந்த துறவியர்களுக்குத், துன்பமானது சிறந்த பாடமாக மாறுவதால்தான், ஞானம் மிகுதியாகிறது. எல்லாரையும் மதிக்கும் அன்பு, எல்லாருக்கும் உதவுகிற பண்பு. எல்லாரையும் காக்கின்ற கனிவு. இவற்றால், அவரது ஆத்ம சக்தியானது கடவுள் தன்மையை அடைந்து விடுகிறது.

அதுதான் துன்பத்தின் ஆற்றல். பொன்னுக்கு உடலை உவமை காட்டிப் பெருமை சேர்ந்திருக்கிற வள்ளுவர், இந்த 7ஆம் குறளில், ஞானத்திற்கு அனுபவங்கள் அவசியம் என்பதை வலியுறுத்தியிருக்கின்றார்.

268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

பொருள் விளக்கம்:

தன் உயிர் = தனது ஆன்மாவில் (உள்ள)
தான் = தான் எனும் பற்றினை
அறப் பெற்றானை = முழுதுமாக நீங்கப் பெற்றவனை
ஏனைய எல்லாம் = (மற்ற) உலகத்திலுள்ள
மன்னுயிர் தொழும் = சீவன்கள் எல்லாம் தொழுது வணங்கும்

சொல் விளக்கம்:

தன் = ஆன்மா ; **தான்** = தாள் எனும் சுயப்பற்று
மன்னுயிர் = சீவன், ஆன்மா; **எல்லாம்** = உலகம் முழுதும்.

முற்கால உரை:

தன்னுயிரைத்தான் தனக்குரித்தாகப் பெற்றவனை. அது பெறாதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும்.

தற்கால உரை:

தன்னுயிர் என்றும், தான் என்றும் உண்டாகும் பற்றுகள் முழுமையாக நீங்கப் பெற்ற தவத்தினனை, மற்றை உயிர்கள் எல்லாமும் வணங்கும்.

புதிய உரை:

தனது ஆன்மாவில் உள்ள 'தான்' எனும் அகப்பற்றினை முழுதும் நீங்கிய துறவியை, இந்த உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் தொழுது வணங்கும்.

விளக்கம்:

தன் என்றாலும் ஆன்மா. உயிர் என்றாலும் ஆன்மா. உயிர்க்காற்று ஆன்மா உள்ள உடல் கொண்ட எல்லோருக்கும், **தான்** என்ற அகங்காரம், தான் என்ற அகம்பாவம், சுயமோகம் நிறையவே உண்டு.

ஒருவரை அடியோடு அழிப்பது நோய், முதுமை, மற்றும் இயற்கை விபத்துகள் என்பதை விட, ஒருவரது தான் என்ற மோகமே முக்கிய காரணமாகிறது.

'இறைவனே! என்னை விரட்டுகிற ஒரு தீயவனிடமிருந்து காப்பாற்று. அந்தத் தீயவன் வேறு யாருமல்ல. நானேதான்!' என்கிறார் ஓர் அறிஞர். தானே தனக்கு நட்டாரும் பகைவனும் என்பதுபோல, தான் எனும் அழிவு சக்தியான திமிர் எண்ணத்தை, தன் ஆன்மாவிலிருந்து, எவன் விரட்டியடிக்கிறானோ, அவன் தான் வீரமகன், விவேகி, வெற்றித் துறவி.

இந்தக் குறளில், தவத்திற்கு ஆன்மாவே வழித்துணை என்று புலப்படுவதற்காக, வள்ளுவர், தன், உயிர், தான், மன்னுயிர் என்று நான்கு இடங்களில் குறித்துக் காட்டியிருக்கிறார்.

, தான் அற என்னும் சொற்களில், துறவறத்தின் முழுக் கோட்பாடும் காட்டப்பட்டு விட்டது. இதுவே மனித மாண்பின் மகத்துவத்திற்கு மணிக் கொடியாகவும் இருக்கிறது.

தான் என்பது முழுவதும் நீங்குவதற்கு, தன்னைப்பற்றிய அறிவும் தேவைப்படுகிறது. அந்த அறிவைத் தேடித்தான் துறவறம் பூண்டு, துடிப்புடன் முயற்சிக்கின்றார்.

ஐந்தாம் குறளில் முயல - படும் என்றார்.
ஆறாம் குறளில் தம் கருமம் செய்வார் என்றார்.
ஏழாம் குறளில் - துன்பத்திற்குத் தயாராகு. அதுதான் ஆனந்தத்தின் ஆணிவேர் என்றார்.

எட்டாம் குறளில், தன்னை - அறுத்து விலக்கு என்கிறார். ஆத்துமம் தழைக்கவும் செழிக்கவும், அறுமின் என்கிறார். ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்றார் திருமூலர். தான் எனும் கர்வத்தின் வெளிப்பாடே எதிலும் ஆசை வைப்பது. அதுவும் அளவுக்கு மீறி ஆசைவைப்பது.

பொறியும் உடலும் ஒத்து, செத்துத் திரிபவரே துறவி. அதுவே ஆன்ம அடக்கமும் ஒடுக்கமும் ஆகும். என்பதை இந்த எட்டாம் குறளில் திட்ட வட்டமாகத் தெளிவு படுத்துகிறார்.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு.

பொருள் விளக்கம்:

நோற்றலின் ஆற்றல் = தவத்தால் பெறுகிற ஞானமும் வலிமையும்
தலைப்பட்டவர்க்கு = மிகுதியாக வளர்த்துக் கொண்டவருக்கு
கூற்றம் = கொடிய பகைவரையும்
குதித்தலும் = வெற்றி கொள்ளுதலும்
கை கூடும் = நடந்தேறும், நிச்சயமாக நிகழ்ந்துவிடும்

சொல் விளக்கம்:

கூற்றம் = கொடிய சத்துரு, எமன், வார்த்தை
குதித்தல் = வெல்லுதல், துள்ளல்; **கைகூடல்** = சம்பவிக்கும்
தலைப்படுதல் = வளரச் செய்தல்; **ஆற்றல்** = ஞானம், வலிமை

முற்கால உரை:

தவத்தான் வரும் ஆற்றல் தலைப்பட்டார்க்கு கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்.

தற்கால உரை:

உள்ளத்தின் உறுதியால் போராற்றலில் ஓங்கி நிற்பவர்க்கு, அவரை வருத்தவரும் இறப்பும் எதிர் நிற்க மாட்டாமல், ஓடக் காண்பதுவும் கை கூடுவதாகும்.

புதிய உரை:

தவத்தால் பெறுகிற ஞானத்தையும் வலிமையையும் மிகுதியாக வளர்த்துக் கொண்டவருக்கு, அவரை எதிர்க்கும் கொடிய பகைவரையும் வெற்றி கொள்ளுதல், உறுதியாக நடந்தேறும் (வெல்லும்).

விளக்கம்:

கூற்றம் என்றவுடன் எமன், நமன், இறப்பு என்று தான் பலர் பொருள் கண்டிருக்கின்றனர். எமன் கண்ணுக்குத் தெரியாதவன். இறப்பு வரும் திசையைக் கூட அறிய முடியாது. ஆக, தெரியாததையும் யூகிக்க முடியாததையும் எதிர்த்து வெல்லுதல் என்பது கற்பனைக்கும் எட்டாததே!

ஆகவே, வள்ளுவர், வாழ்க்கையில் நிகழ்கின்ற சாத்தியமான கருத்துக்களையே எடுத்துக் காட்டுகிறார். (எமனைப்போல) கடுமையான எதிரி, கொடுமையான பகை, அந்தப் பகையை வென்றிட முடியும். எப்படி? செய்த தவத்தால் பெற்ற வலிமையால்.

வல்லமையின் பெருமையை விளக்கும் முகமாக, **நோற்றலின் ஆற்றல்** என்கிறார். மனப்பாகன் கைகூட்ட மாயத்தேரேறி வருகிற மக்கள், போகும் திசை புரியாது, வாழும் வகை அறியாது, மடிந்து போகின்றவர்கள். ஆனால், துறவறம் பூண்டவர்களோ, இயமம் நியமம் எனும் தேரேறி, சமாதி நிலை என்னும் ஆயத்தேரேறி வலம் வருகிற வல்லமையாளர்கள்.

அவர்கள் முன்னே எந்தப்பகை எழும்? எந்தப்பகை வெல்லும்? கூற்றம் குதித்தல் என்றார், எமன் குதிக்கிறான் என்று தான் முதலில் எண்ணத் தோன்றுகிறது. ஆனால், சொல்லுக்குள் சொல்லை வைத்துச் சூட்சமத்தை அடைத்து வைக்கும் சித்தரான

வள்ளுவர், கடுமையான பகையை வெல்லமுடியும், என்ற வார்த்தைச் சிலம்பாடி, கற்பாரை நெகிழ வைக்கிறார், மகிழச் செய்கிறார்.

தலைப்படுதல் என்பது நிச்சயமாக நடந்தேறுதல் என்றும், நிகழ்ந்து முடியும் என்ற பொருளைத் தருகிறது.

ஆகவே, நோற்றலின் ஏற்றமிகு ஆற்றல், ஊக்கமிகும் வலிமை, வல்லமை எல்லாம், தவத்தினைக் குலைக்க வருகிற அகப்பகை, புறப்பகை அனைத்தையும் வென்று, வாகை சூடி, துறவுப் பயணத்தைத் தூய்மைப் பயனாக்கி உதவுகிறது என்று 9வது குறளில், நோற்றலின் வல்லமையின் பெருமையை விளக்குகிறார்.

270. இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

பொருள் விளக்கம்:

காரணம் = வலிமை மிக்க ஆன்மாவுடன்
நோற்பார் சிலர் = தவம் மேற்கொண்டு ஆற்றுவோர் சிலர்தான்.
பலர் நோலாதவர் = பலர் பொறாமை குணத்தின் தவறு
காரணமாகவும்
பலர் இலர் = ஆன்ம வலிமையில்லாது வறுமையானதின்
காரணமாகவும்
ஆகிய = பலர் நோற்க முடியாதவர்களாகி விட்டனர்.

சொல் விளக்கம்:

இலர் = வறுமையானவர், இல்லாமை; **தவர்** = தவறு
பலர் = சபை; **காரணம்** = ஆன்மா; **நோலாமை** = பொறாமை

முற்கால உரை:

உலகத்துச் செல்வர்கள் சிலராக, நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ் செய்வார் சிலராக, அது செய்யாதார் பலராதலால் தான்.

தற்கால உரை:

தவமுடையவர் சிலராகவும் தவ மில்லாதவர் பலராகவும் இருத்தற்குக் காரணம், உறுதிப்பாடு உடையவர் சிலராகவும், உறுதிப்பாடு இல்லாதவர் பலராகவும் உலகில் இருத்தலேயாகும்.

புதிய உரை:

வலிமை மிக்க ஆன்மாவுடன் அரிய தவம் மேற்கொண்டு ஒழுகுபவர் சிலர் தான். ஏனென்றால், பொறாமை குணத்தால் தவறு செய்பவரும், உடல் மன வலிமையற்றவர்கள் பலராக இருப்பதால் தான் தவம் செய்பவர் சிலராக இருக்கின்றார்கள்.

விளக்கம்:

நோற்பாருக்கு உடல் வலிமை வேண்டும். மனவலிமை வேண்டும், ஆன்ம பலம் வேண்டும் என்னும் சீரிய உண்மையை, மிக அழகாக இந்தக் குறளில் காட்டியிருக்கிறார் வள்ளுவர்.

தவம் என்றாலே மன ஒருமை. ஒடுங்கி நிலைபெறும் உள்ளம். உள்ளம் பிரியாத ஓர்நிலை; இமைத்தும் அழியாதிருக்கும் தவ உணர்வு. புலன் வழி போகாத பேராண்மை, செயலற்று இருக்கும் சிந்தை. இழுக்காத நெஞ்சத்தின் திடம்.

இவ்வளவு குணங்களும் கொண்டவர்களாக, இந்த உலகில் சிலர்தான் வலம் வருகின்றனர். பொறாமை கொண்ட புன்மனத்தினர். மற்றவர்களைச் சினக்கிற மாய்மால குணத்தினர்; எதற்காகவும் தம்மை விற்றுக் கொள்கிற ஈனமனத்தினர்; வறுமை என்றால் பொருளில் மட்டுமல்ல; பொருளாகிய பொன்போன்ற உடலிலும்தான். அவர்கள் வறுமைப்பட்டு, வெறுமையுற்று, திறமையற்று, தேக நலம் விட்டு, நடைப் பிணமாய்த் திரிகின்றபோது, மனத்தில் சீலம் எப்படி வரும்?

அலங்கோலம் அவாவிக் கொண்டு, அவர் வாழ்க்கையை ஆட்சி செய்கிறபோது, அமைதியான மனம் எப்படி வரும்?

அதனால்தான் **இலர் பலர்** என்றார். இல்லாமையில் கொடிய பிடியில் இருப்பவர் பலர்.

பலர் நோலாதவர் என்றார், பொறாமை என்னும் தவற்றைப் புரிகின்றவர்; தவறுக்குள்ளே புரள்கின்றவர்; தவறுகளாலே புதையுண்டு போகிறவர்தாம் அநேகர் என்று நோலாதவர் என்றார்.

தீயவர்கள் என்றால் கூட்டம். தூயவர்கள் என்றால் அவை. இப்படி இருக்கின்ற மக்களின் இயல்பை, மிக நுண்மையாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

மேன்மக்கள் குறைவு. கீழ்மக்கள் அதிகம். கீழ்மக்கள் மேன்மக்களாக வர, தனக்குள்ளே உள்ள ஆன்மாவை, தன் வயப்படுத்த வேண்டும்; தன்னெறிப்படுத்த வேண்டும், தானே தனக்காக தலைப்பட வேண்டும் என்று தவத்தின் சுகத்தையும், அவத்தின் அகத்தையும் அருமையாகக் கூறி முடித்துள்ளார்.

28. கூடா ஒழுக்கம்

உடல் மனம் ஆத்மா ஆகிய மூன்றையும் வளர்த்துக் காக்கின்ற காரியம் எல்லாம் புண்ணியம் ஆகும். உடம்பைக் கெடுக்கிற எந்தச் செயலும் பாவம் ஆகும்.

புண்ணியம் என்பது அறம், தூய்மை, நல்வினைகள்; தெய்வத்தன்மையான செயல்கள்; தானம், தவம் கல்வி அனைத்தையும் உற்சாகமாகக் கொண்டு, ஒழுக்கத்துடன் செய்யப்படும் செய்கைகள்.

பாவம் என்பது தீச்செயல். ஆங்காரம் நிறைந்த அக்கிரம வினை அகத்திற்குத் தீமையும், தேகத்திற்குப் பங்கமும், ஆன்மாவிற்கு பாதகமும் விளைவிக்கின்ற மறச் செயல்கள்.

ஆக, பாவ வழியிலிருந்து விலகி, புண்ணியப் பாதையில் வாழ்வதற்காகவே, துறவு மேற்கொள்கின்றவர்கள். தூய்மையான வாழ்வையே தொடர வேண்டும். தொடர்ந்தாக வேண்டும்.

அப்படி, உள்ளத்தால் ஏற்றுக் கொண்டு, உடலால் ஒத்துக் கொண்ட வாழ்வின் சித்தாந்தத்தை, வரன் முறையாகக் கொள்வது தான் **ஒழுக்கம்** என்பதாகும். வாழ்வை அழிக்கும் வக்கிரம செயல்பாடுகளை அறவே விலக்குவதைத் தான் அறம் என்றனர்.

வாழ்வில் மேம்பட்ட மேலோர்கள், தங்கள் அனுபவங்களால் பெற்ற ஞானத்தால், விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கியவற்றை ஒழித்தலும் தான் ஒழுக்கம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

உலகத்தோடு ஒட்டியே செல்வது, சொல்வது, நன்னடத்தையைத் தொடர்ந்து ஒழுகுவது. சீலம், ஞானம், விருத்தி பெற வாழ்வது, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

அதிலும், உலக வாழ்வை ஒழுகி, உயர்ந்த வாழ்க்கை வாழ, தங்களை அர்ப்பணித்துக் கொண்ட துறவிகளுக்கோ, அப்படி வாழ்கின்ற பொறுப்பு, ஆயிரம் மடங்கு அதிகமாகும்.

அத்தகைய ஆன்ம ஞானம் மிக்க கூடாரத்தில் தங்கிக் கொண்டு, கூடா ஒழுக்கம் மேற்கொண்டால், ஏற்படும் முடிவுதான் என்ன?

அகத்தால் வருந்தாமல், உடலால் பொருந்தாமல், மன சாட்சிக்கும் திருந்தாமல், தூயவர்கள் என்று வேடமிட்டு வெளிச்சம் இட்டு, தீயனவற்றைச் செய்து வாழ்கிற வாழ்க்கையே, கூடாவொழுக்கம் எனப்படுகிறது. பிறருக்குத் தெரிந்து, இழுக்கமாக வாழ்வது மட்டும் கூடாஒழுக்கம் அன்று. பிறருக்குத் தெரியாமல், கொண்டிருக்கும் கொள்கை முறை வாழ்க்கைக்கு மாறாக செய்கிற வேறு செயலும் கூட, கூடாஒழுக்கமே ஆகும்.

அப்படி வாழ்கிறவர் கூடார் என்றே அழைக்கப்படுகின்றார். அப்படிப்பட்டவர் துறவறத்திற்கு மட்டும் பகைவர் (கூடார்) அல்லர். மனித இனத்திற்கே மாபெரும் வைரியாகவே கருதப்படுவார்.

கூடும் ஒழுக்கத்தால், தவசியர் நிலை பெறுவர்.
கூடா ஒழுக்கத்தால் 'அவசியர்' நிலை குலைவர்.

துறவிகள் நிலை குலையா வண்ணமும், இல்லறத்தார் மனம் கொள்ளும் வண்ணமும், கூடா ஒழுக்கம் எனும் அதிகாரத்தை, மன ஒருமையை வளர்க்கும் தவத்தின் பின்னே வைத்திருக்கிறார்.

**271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.**

பொருள் விளக்கம்:

வஞ்சமனத்தான் = கபடமும் சிறுமையும் நிறைந்த மனமுடைய தவசியின்

படிற்றோழுக்கம் = பொய் களவும், அடங்காத்தனமும் உள்ள செயல்கள் கண்டு

பூதங்கள் = உயிரானது, அந்த மோசம் அறிந்து

ஐந்தும் = அஞ்சுவதுடன்,

அகத்தே நகும் = உள்ளுக்குள்ளே இகழ்ந்து தாழ்ந்து போகும்.

சொல் விளக்கம்:

வஞ்சம் = கபடம், சிறுமை; **படிற்று** = பொய், களவு, அடங்காத்தனம்; **பூதம்** = உயிர், பஞ்சபூதங்கள்; **கள்** = களவு, மோசம்; **ஐந்து** = அஞ்சு, பயப்படு

நகும் = இகழும், தாழ்த்தும், அவமதிக்கும்

முற்கால உரை:

வஞ்சம் பொருந்திய மனத்தை உடையவனது மறைந்த ஒழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்து நிற்கிற பூதங்கள் ஐந்தும் தம்முள்ளே நகும்.

தற்கால உரை:

உள்ளொன்றும் வெளியோன்றுமாம் மனத்தவன், தன் தீய பழக்கத்தைப் பிறர்க்கு மறைப்பினும், அவன் உடலின் கண்ணே உள்ள ஐம்பூதங்களும் உள்ளுக்குள் சிரிக்கும்.

புதிய உரை:

கபடமும் சிறுமையும் நிறைந்த மனத்தினனாகிய துறவியின் பொய் களவைக் கண்டு, அவன் உள்ளே வாழும் உயிரானது அஞ்சி, உள்ளுக்குள்ளே அவமானமடைந்து தாழ்ந்து போகும்.

விளக்கம்:

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் என்பது வரையிலும், உரைகளில் எதுவும் மாற்றமில்லை. பொய் மனத்தான். அவனது களவும் கபடமும், அடங்காத்தனமும் ஆகியனவற்றை. **பூதங்கள் ஐந்து** என்னும் இடத்தில் தான் பொருள் மாற்றம் கண்டிருக்கிறது.

பூதம் என்றால் பஞ்ச பூதம் என்றனர். உடலில் உள்ள மண், விண், தீ, நீர், காற்று என்னும் ஐந்தும் உள்ளுக்குள்ளே இகழ்ந்து சிரிக்கும் என்றும் உரை தந்திருக்கின்றனர்.

பூதம் என்றால் **உயிர்** என்றும்; **கள்** என்றால் **மோசம்** என்றும்; **ஐந்து** என்றால் பயப்படு என்றும் பொருள் உள்ளன.

வஞ்சனையுள்ளவன் மனம் வஞ்சனை மனத்தின் வழியாகப், பொய், களவு, கபடம், சிறுமை, அடங்காத் தனம் போன்ற வற்றைச் செய்கின்ற **உடல்.** இந்த இரண்டையும் ஆற்றுப்படுத்துகிற ஆற்றுமா, அதாவது **உயிர்.** அந்த உயிர்படும் வேதனையைத்தான் வள்ளுவர் இங்கே குறித்திருக்கிறார்.

கண்காணிப்பார் இல்லையென்பதால் தான், துறவிகள் பலர் கள்ளம் பல செய்கின்றனர். அவர்கள், தாங்கள் போட்டிருக்கும் போலிவேடத்தால், தங்களை விற்றுக் கொண்டு, பகலைக் கழிக்கும் பாதகர்களாக மாறிவிட்டனர்.

ஆகவே, பூதமாகிய உயிர் ஐந்தாகி 'அதாவது அஞ்சி பயந்து' **கள்** எனும் அவனது மோசமான நிலையை எண்ணி, அகமாகிய உள்ளுக்குள்ளே, கூனிக் குறுகி, தாழ்ந்து இழிந்து, அவமானத்திற்குள்ளே அலை பாய்ந்து கிடக்கிறது.

வஞ்ச மனத்தின் செய்யும் தவறுகளை, இன்ப நுகர்வுகளைக் கண்டு, அவனது உடலிலுள்ள ஐம்புலன்களும், உள்ளுக்குள்ளே சிரித்து மகிழும் என்றும் பொருள் சொல்லலாம்.

தீய செயல்கள் ஒருவனுக்குத் திருப்தி அளித்தாலும், அவனை கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று, தீய்த்துவிடும். இப்படித் தீயவனாக மாறியவன், தீய்ந்து போகப் போகிறானே என்று அஞ்சித்தான், உயிரானது அவமானத்தால் அடங்கிப்போய் இருக்கிறது என்று கூடா ஒழுக்கம் எவ்வாறு .மன ஒருமையை மாய்த்து, மணி உடலைத் தீய்க்கிறது என்று முதல் குறளில் கூறியிருக்கிறார்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம் தான்அறி குற்றப் படின்?

பொருள் விளக்கம்:

தன்நெஞ்சம் = தனது மனமும் உயிரும்

தான் அறி = தான் கொண்டிருக்கிற உணர்வுகளில்

குற்றப்படின் = பழுதுபட்டு, அவமானமடைந்து போனால்!
வானுயர் = உடல் வலிமையிலும் பெருமையிலும் மேன்மையுற்று
தோற்றம் = மற்றவர்க்கு மேன்மை மிகு தரிசனம் தந்தாலும்,
எவன் செய்யும் = அது என்ன பலனைத் தரும்?

சொல்விளக்கம்:

வான் = வலிமை, பெருமை; **உயர்** = மேன்மை, மேலேறு
தோற்றம் = காட்சி, தரிசனம்; **தன்** = உயிர், ஆத்மா
அறி = உணர்வு ; **குற்றம்**= குறை, பழுது, அவமானம்.

முற்கால உரை:

தான் குற்றமென்று அறிந்த அதன் கண்ணே, தன் நெஞ்சு தாழுமாயின், ஒருவனுக்கு வான்போல் உயர்ந்த தவ வேடம் என்ன பயனைச் செய்யும்?

தற்கால உரை:

ஒருவன் தன் மனம் அறிய, தான் கொள்ளக் கூடாத குற்றம் கொண்டால், அவன் கொண்டுள்ள மிக உயர்ந்த கல்வி,- பதவி, புகழ் முதலியவை என்ன பயன் செய்யும்?

புதிய உரை:

ஒருவன், தனது உடல் வலிமையிலும், வார்த்தைப் பெருமையிலும் பிறருக்கு மேன்மையான (தவவேட) தரிசனம் தந்தாலும், அவன் மனமும் உயிரும் தான் கொண்டிருக்கும் உணர்வுகளில் கீழ்மையடைந்து தாழ்ந்திருக்கும் போது, அவனது தரிசனம் என்ன பயனைத் தரும்?

விளக்கம்:

வானுயர் தோற்றம் என்கிறார் வள்ளுவர். அதுதான் பொய் வேடம். இழிகுலத்துப் பண்பாடுகளில் ஈடுபாடு கொண்டு, பொய்த்தவ வேடம் பூண்டு, போசனத்திற்காகப் புலம்பித் திரிகிறவர்களையே, கவர்ச்சிகரமான தோற்றம், காட்டுகிற காட்சி என்ன பயனைத் தரும்?

ஞானமல்லாத தவவேடம். அது இந்த நாட்டிடை ஈனத்தையே செய்யும். உள்ளங்களில் ஊனத்தையே உண்டு பண்ணும். அப்படிப்பட்ட அவம் மிக்கத் தவவேடம் கொண்டவர் அதி கொலை வேடர் என்கிறார் திருமூலர்.

ஆடம்பர வேடத்தால் மற்றவர் நினைவைக் கவரலாம். ஆனால், அந்த வேடத்திற்குள்ளே விளங்கி நிற்கிற உயிரும்,

அதன் உயர்ப்பொருளான மனமும், குற்றங்களால் நெருக்குண்டு, குலைந்து போயிருக்கின்றனவே, அதற்கென்ன பரிகாரம்?

குற்றப்படின் என்றார். குற்றமே அந்த ஆன்மாவுக்குள் படிந்து போய்க் கிடக்கின்றன. அதன் மூலம் ஏற்படுகிற உணர்வுகள் எப்படி இருக்கும்? சாக்கடைக் கால்வாயிலிருந்து வருகிற காற்றின் மணம் நாற்றமாக இருப்பது போலவே கறைபட்ட மனத்திலிருந்து வருகிற சிந்தனைகளும், செயற்பாடுகளும், சொல்லாட்சிகளும், குறைபட்டனவாகத்தானே தெரியும்.

தன் நெஞ்சம் என்றார், ஆன்மாவின் அருள்பெற்ற நெஞ்சம்தான் அறி என்றார்; அந்த ஆன்மாவின் உணர்வு என்றார்.

ஆன்மாவின் அருள் பெற்ற நெஞ்சத்தின் அருள்மிகு உணர்வுகள், குற்றங்களால் கொலையுண்டு கிடக்கின்றன.

அங்கிருந்து வரும் அரக்கத்தனமான நிலைமையில் யாருக்கு என்ன பயன் கிடைக்கும்? தோற்றம் தருபவரும், தோற்றத்தில் மகிழ்பவரும், கடலில் அகப்பட்ட கட்டைபோல அலைந்தொழியத்தான் நேரிடும் என்று இரண்டாவது குறளில், இழுக்கத்தில் இருக்கும் துறவியின் இழிநிலையை விளக்கிக் காட்டுகிறார்.

273. வலியில் நிலைமையான் வல்லுவரும் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

பொருள் விளக்கம்:

வலிநிலை இல் = வலிமையும், உறுதியும் இழந்து
மையான் = குற்றமே இழைக்கிற இருள் மனத்தவன் ஒருவன்
வல்லுருவம் = விரைவாக வேடத்தை மாற்றிக் கொள்வதானது,
பெற்றம் = எருது ஒன்று
புலியின் தோல் = புலியின் தோலை
போர்த்து = போர்த்திக்கொண்டு
மேய்ந்தற்று = தகுதி பெற்றது போலாகும்

சொல் விளக்கம்:

வலி = வலிமை; **நிலை** = உறுதி
மையான் = குற்றமிழைப்பவன்; **வல்** = விரைவாக
உருவம் = வடிவம், வேடம்; **மேல்** = தகுதி.

முற்கால உரை:

மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினை உடையான் வலியுடையார் வேடத்தைக் கொண்டு தான் அதன் வழிப்படுதல், பசுகாவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு, பைங்கூழை மேய்ந்தாற் போலும்.

தற்கால உரை:

தவ வலிமை இல்லாதவன், தவக்கோலங்களைக் கொண்டிருப்பது, வலிமையில்லாத ஆன், வலிய புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு, அயலார் பயிரை மேய்வது போன்று.

புதிய உரை:

தவ வலிமையும் உறுதியும் இழந்து குற்றமிழைக்கும் ஒருவன், தன் இருள் வேடத்தை மாற்றி, அருளாளராக அலைவது, எருதொன்று புலித்தோல் போர்த்தி, தன்னைத் தகுதியாக்கிக் கொள்வது போலாகும்.

விளக்கம்:

எருது ஒன்று, தனக்கொரு தகுதிவேண்டும் என்பதற்காக, புலித்தோலைப் போர்த்திக் கொண்டு புலிவேடம் போட்டுக்கொள்கிறது. பயிரை மேய வேண்டும் என்பது குறிக்கோளாக இருந்தாலும், பிறர் தம்மைக் கண்டு அஞ்ச வேண்டும்: தூரத்தே நின்று தோற்றத்தைக் கண்டு மிரளவேண்டும் எனனும் தவறான ஆசை.

அதனால்தான், வள்ளுவர் அவனை **மையான்** என்றார். இருள் மனம் கொண்டவன்; குற்றம் செய்வதில் நாட்டம் உள்ளவன், தவத்தின் பெருமையைக் குலைப்பதில், திறமையானவன். ஆனால், மேலும் தன்னை மேம்படுத்திக் கொள்வதில், முயல்கிறவன்.

அவன் ஆசைகள், அவனை விரட்டுகின்றன; வெருட்டுகின்றன; வேட்கைகள் வெறியாகி, வேட்டை நாய்களாய் கவ்வுகின்றன.

அதனால், இழிகுலச் சிந்தனைகளும், பழிபடு பாவங்களும் பெரிதும் விரும்பி ஏற்கின்ற ஒருவன் சடை, சிகை, பூணூல் பூண்டு, தவ வேடம் பூண்டால் என்ன பயன்?

ஆக, தவப்புலிபோல் வேடம் ஏந்தி, தவம் செய்கின்ற அற்பர்கள், அவர்கள் மிருக மனிதர்கள். மிருகங்கள் செயலும்,

மனிதர்கள் வடிவும் கொண்டவர்கள். எப்படி வேண்டுமானாலும் காலத்துக்கேற்ப, தங்கள் களிப்புக்கு ஏற்ப, விரைவாக வேடத்தை மாற்றிக் கொள்வார்கள் என்பதையே **வல்லுருவம்** என்றார்.

விரைவாகத் தன் வடிவத்தை மாற்றி, உருவத்தைக் காட்டி, தோற்றத்தை ஒப்பனை செய்து, தமது ஆட்டத்தை ஆடவல்லார் கொதிக்கின்ற கூழில் கை வைத்தவர் போல, அவரது கதையும் கலங்கிப் போகும் என்னும் குறிப்பை, 3 வது குறளில் வள்ளுவர் காட்டியுள்ளார்.

274. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று.

பொருள் விளக்கம்:

தவமறைந்து = தவ வேடத்தில் மறைந்து கொண்டு
அல்லவை செய்தல் = தீமைகளைச் செய்தல்
புதல் மறைந்து = ஞானிகள் பின்னால் மறைந்து நின்று
வேட்டுவன் = கொலையாளியாகிய வேடதாரி
புள் = மதுபானத்தை (கையில்)
சிமிழ்த்தற்று = வைத்துக் கொண்டு; கண் மூடி இருப்பது போலாகும்.

சொல் விளக்கம்:

அல்லவை = தீயவை, தீமை: **புதல்** = புதர்
புதர் = ஞானிகள், புல்; **வேட்டுவன்** = வேடன், கொலையாளி
புள் = பறவை, மதுபானம், கள்குடிக்கை; **கண்மூடி** = அறிவிலி
சிமிழ்த்து = கையகப்படுத்துதல்; கண்மூடல்

முற்கால உரை:

வலியில் நிலைமையான தவ வேடத்தின் கண்ணே மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல், வேட்டுவன் புதரின் கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற்போலும்.

தற்கால உரை:

தவவேடத்தில் மறைந்து கொண்டு, அத்தவத்துக்கு மாறான செயல்களை ஒருவன் செய்வது, புதர்க்காட்டில் மறைந்து கொண்டு, வேடன் பறவையைப் பிடிப்பது போன்றது.

புதிய உரை:

தவ வேடத்தில் (வடிவம் மாற்றி) மறைந்து கொண்டு, தீயவைகளைச் செய்கிறவன், ஞானிகள் பின்னே மறைந்து நின்று, மதுபானம் குடிக்கிற அறிவிலி கண்மூடிக் கிடப்பது போலாகும்.

விளக்கம்:

புள் என்றால் பறவை என்றும், **சிமிழ்த்தல்** என்றால் பிடித்தல் என்றும் **வேட்டுவன்** என்றால், வேடன் என்றும் பொருள்கள் உண்டு. இவையெல்லாம், இயற்கையாக, படித்த உடனே ஏற்படும் அர்த்தங்கள் தாம்.

ஆனால், கொஞ்சம் ஆழமாக ஆய்ந்து பார்க்கிறபோது, கிடைக்கிற அர்த்தங்கள், வித்தியாசமானதாகவும், விவரம் நிறைந்ததாகவும் இருக்கின்றன.

புள் என்றால் மதுபானம். அதாவது கள் குடிக்கை. **வேட்டுவன்** என்றால் **கொலையாளி.** சிமிழ்த்தல் என்றால் கண்மூடல். அதாவது கண்டும் காணாததுபோல நடந்து கொள்ளுதல். அப்படி நடந்து கொள்பவனைக் **கண்மூடி** என்பர். அதாவது அறிவிலி, குருடன், கவனமில்லாதவன்.

இப்பொழுது கிடைத்திருக்கிற புதிய அர்த்தங்களுடன், குறளை மீண்டும் படிக்கிறோம்.

தவ வேடம் என்பது ஞானிகள் போல. தவம் மறைந்து என்பது ஞானிகள் பின்னே மறைந்து கொள்ளுதல். தீயவை செய்தல் என்பது தீயவைகளுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்கும் கள் குடிக்கை.

தவ வேடம் மற்றவர்கள் கண்களை எப்படி மறைக்கிறதோ, அதுபோலவே, கொலையாளியாகிற ஒருவன், ஞானிகள் பின்னே கள்ளுடன் நிற்கிறபோது அவனும் காக்கப்படுகிறான். அவன் இருக்கும் சூழ்நிலை அவனை மறைத்துக் காக்கிறது.

இருந்தாலும் தவ வேடம், அவச் செயல்களில் கலைவது போல, குடிகாரனும் தனது போதை மூலமாக வெளிப்படுத்தி, அழிகிறான்.

தவ வேடம் தற்காலிகமான பாதுகாப்பு போலவே, ஞானிகள் பின்னே கள்ளுடன் இருப்பது, சிறிது நேரம்தான்.

ஆகவே, ஞானமிலார் தவ வேடமாகிய சடை, சிகை, பூணூல், திருநீறு எல்லாம் போட்டு வேடமிட்டு வெளி வந்தாலும் அவர்கள் மூடுதல் இன்றி முடியும் மனிதர்களாகி வீழ்கின்றனர்.

நிரந்தரப் பாதுகாப்பு என்பது வேட்கை விட்டார் நெஞ்சில் தான் நிலைத்து நிற்கும் என்று 4வது குறளில் கூறுகின்றார்.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றன்று ஏதம் பலவும் தரும்

பொருள் விளக்கம்:

பற்றற்றேம் என்பார் = உலகில் சுக துக்கம் போன்ற எந்தப் பற்றும் இல்லை என்று

படிற்றொழுக்கம் = கூறுகிற பொய்த்துறவியின் பொய்யான ஒழுக்கம்,

எற்று எற்று என்று = குத்து, வெட்டு, கொல்லு என்று

ஏதம் பலவும் தரும் = (தெரிந்து கொண்ட) மக்களால் கொடுமையான துன்பங்கள் எல்லாம் உண்டாக்கும்

சொல் விளக்கம்:

பற்று = அன்பு, ஆசை, உணவு, செல்வம், இல்வாழ்க்கை

படிற்று = பொய், களவு, **ஏற்று** = குத்து, சொல்லு, புடை, வெட்டு, இரங்கு; **ஏதம்** = துன்பம், கேடு.

முற்கால உரை:

தம்மைப் பிறர் நன்கு மதித்தற் பொருட்டு யாம் பற்றற்றேம் என்று சொல்வாரது மறைந்த ஒழுக்கம், அப்பொழுது இனிது போலத் தோன்றுமாயினும், என்செய்தோம், என்செய்தோம் என்று தாமே இரங்கும் வகை, அவர்க்குப் பல துன்பங்களையும் கொடுக்கும்.

தற்கால உரை:

எப்பற்றும் இல்லாதவராக இருக்கிறோம் என்று சொல்லுவார் மேற்கொண்ட தீயொழுக்கம், பின்னர் என்ன செய்தோம், என்ன செய்தோம் என்று வருந்தத் தக்கத் துன்பம் பலவற்றைத் தரும்.

புதிய உரை:

எந்தப் பற்றும் எமக்கில்லை என்று பொய், களவு வாழ்க்கை வாழ்பவர்கள், குத்து, வெட்டு, கொல்லு என்று மக்களால் விரட்டியடிக்கப்படும் துன்பங்கள் பலவற்றையும் பெறுவார்கள்.

விளக்கம்:

எற்று எற்று என, இரண்டு முறை, இந்தச் சொல்லை, வள்ளுவர் பயன்படுத்தி இருக்கின்றார். எற்று எற்று என்றால் என்ன, எத்தன்மைத்து என்று இந்தப் பொருளை எடுத்துக் கையாண்டிருக்கின்றார்கள்.

வள்ளுவருக்கோ அளவில்லாத கோபம். ஞானிகள் போல நடிக்கும் மிருக மனிதர்களிடம். அவர்கள் வார்த்தைகளும் பொய். வாழ்க்கையும் சூதும் களவும். அவர்கள் தவறைத் தெரிந்து, தெளிந்து எந்தக் காலத்தில் மீண்டு வந்து வருந்தப் போகின்றார்கள்.

பொதுமக்களின் சுபாவம் என்ன? குண நலன்கள் என்ன? தூயவர்கள் என்று போலிவேடம் கட்டி, ஏமாற்றப் பட்டதைப் புரிந்து கொண்ட மக்கள்! ஐயோ பாவம்! என்று இரக்கப்படவா செய்வார்கள்? மகாத்மா போல மன்னித்தா விடுவார்கள்!

பாவியை விடாதே! போலியை விடாதே! வெட்டு, குத்து, கொல்லு என்று பழிதீர்க்கவும், பாடம் கற்பிக்கவும் தானே முயல்வார்கள்!

அத்தகைய பாமர மக்களின் உளவியலை நன்கு புரிந்திருக்கும் வள்ளுவர், தீமைகளுக்குத் தண்டனை நிச்சயம் உண்டு. அதுவும் உடனே கிடைக்கும் என்று, **ஏதம் பலவும் தரும்** என்பதாகக் குறிக்கிறார்.

பலவும் என்றால், அநேகமாக, ஒன்றுக்கும் மேற்பட்ட என்னும் பொருளில், துன்பங்கள் என்றால், எண்ணிக்கையில் அடங்காதவை ஏற்படும் என்று உண்மை நிலையை உரைக்கிறார்.

எற்று எற்று, அவர்களை உதை, எத்து, என்று கூறுகிற வள்ளுவர், தொடர்ந்து அடுத்த குறளிலும், தீயவர்களைக் கடுமையாகக் சாடியிருக்கிறார்.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.

பொருள் விளக்கம்:

நெஞ்சில் துறவார் = புலன் வழி போகின்ற புன்மையாளர்,
நினைவில் துறக்காதவர்,
துறந்தார்போல் = எல்லாவற்றையும் துறந்தவர்போல

வஞ்சித்து = மக்களையெல்லாம் பொய் மாயத்தால் கபடமாடி
வாழ்வாரின் = துறவியாக வேடமிட்டு வாழ்வார் போல,
வன்கணார் இல் = கொடுமையான திருடன் இவ்வுலகில்
யாருமில்லை

சொல் விளக்கம்:

கண்ணார் = பகைவர்; **கணன்** = திருடன்; **வன்** = கொடிய

முற்கால உரை:

நெஞ்சில் பற்று அறாது வைத்து, தானம் செய்வாரை வஞ்சித்து வாழும் அவர் போல், வன் கண்மையை உடையார் உலகத்திலில்லை

தற்கால உரை:

மனத்தில் பற்றற்ற தன்மை கொள்ளாமல், பற்றற்றவர்போல வஞ்சகமாகக் . காட்டி வாழ்கின்றவரினும் கொடுமையானவர் எவரும் இலர்.

புதிய உரை:

நினைவுகளில் துறக்காமல், துறந்தவர்கள் பெறுகிற பயன்களையெல்லாம் ஏய்த்துப்பெறும் துறவி வேடமிட்ட போலியைப் போல, கொடுமையான திருடன் உலகில் யாருமே இல்லை.

விளக்கம்:

தவவேட நெறி நில்லாதார் வேடம் பூண்டு என்ன பயன்? சிறிதும் ஞானமிலாதார் நீண்ட சடையும், தடை முடியும், தாடியும், பூணூலும் பூண்டு, நடித்தால், கிடைக்கும் பயன் எத்தனை நாளைக்கு?

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல, ஏய்த்துப் பாழாக்கும் எத்தர்கள் வாழ்வு எத்தனை நாள் தொடரும்?

'நினைப்பும் மறப்பும் இலாத நெஞ்சம்தான்' துறவியர் நெஞ்சம். வேட்கைகளை வெட்டி வீசியெறிந்தவர்கள் தான் துறவற ஞானிகள்.

செல்லும் அளவும் சிந்தையைச் செலுத்தி, சீண்டும் புலன்களை வெல்லும் வலிமை கொண்ட வல்லாளரே வீரத் துறவியர்.

கண்காணிப்பார் யாரும் இல்லையென்று கள்ளம் புரிவோரை, ஆடம்பரம் கொண்டு அடிசில் உண்போரை, வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதையரை, வள்ளுவர், மிக அருமையான சொல்லால் குறித்துக் காட்டுகிறார் - **வன்கணார்** என்று.

துறவிகளுக்காகத் தொண்டு செய்யும் பண்பு கொண்ட இல்லறத்தாரையும்; தானம் தந்து புரக்கின்ற தண்மதி கொண்ட கொடையாளர்களையும் ஏமாற்றிப் பெறுவதைத்தான் **வஞ்சித்து** என்கிறார்.

வாழ்வார் என்றால் உயிர்வாழ்தல், சீவித்தல் என்று பொருள். அதாவது பலமற்ற உயிர்கள், நலமற்ற உடல்கள், வளமற்ற சீவிகள் எல்லாம், பிறந்ததற்காக வாழ்வதுபோல, பெருமை இல்லாமல் மடிந்து போகும் தன்மைபோல, வஞ்சிக்கும் போலித் துறவியர் உயிர் வாழ்கிறார். அவர் கொள்கையிலும் உயரவில்லை. கோபுரம்போல, பயன்களிலும் உயரவில்லை.

பிச்சைச் சோற்றைப் பெரிதாய் எண்ணி, அரிதாய்ப் பெற்ற தவத்தை, தாறுமாறாகப் பயன்படுத்தி, ஏய்த்துப் பிழைக்கிறார்கள், என்றால், அவர்கள் எத்தர்கள் தானே!

ஏமாற்றுக்காரர், ஏய்ப்பாளர், தீமைகள் புரியும் வாய்ப்பாளர் என்று சொல்லாமல், **கொடுமையான திருடன்** (வன்கணார்) என்று கூறுகிற போது, வள்ளுவரின் உள்ளம் புரிகிறது.

கள்ளம் பாய்ந்த நெஞ்சுடன், தவவேடத்தில் வாழ்வார், காட்சிக்கு மட்டும் திருடனல்ல. இறை சாட்சிக்கும் ஈடில்லாத் திருடன்தான் என்று 6 வது குறளில், அற்பாசை கொண்ட பொய்த் துறவிகளின் வாழ்க்கையை அம்பலப்படுத்திக் காட்டுகிறார்.

277. புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து

பொருள் விளக்கம்:

புறம் குன்றி = பொய்த் தவ வேடத்தால் ஏய்த்தும், புறக் கொடை குறைந்து போகிற

கண் தனையர் = அளவைக் கண்ட விடத்து

அகம் = வேடதாரியின் ஆன்மாவே

குன்றி = மனோசிலை எனும் ஓர் கொடிய நஞ்சுபோல,

மூக்கில் = ஓர் மருந்தாக உதவி

கரியார் உடைத்து = கீழ் மக்களாகிய அவர்களை அழித்து விடுகிறது.

சொல் விளக்கம்:

புறம் = புறக்கொடை; **குன்றி** = குறைதல்; **தனை** = அளவு
குன்றி = மனோசிலை எனும் கொடிய நஞ்சு
மூக்கில் = ஒரு மருந்து; **கரியார்** = கீழ் மக்கள்.

முற்கால உரை:

குன்றியின் புறம்போல, வேடத்தால் செம்மை உடையாராயினும் அதன் மூக்குபோல, மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம்.

தற்கால உரை:

குன்றி மணியின் சிவந்த நிறத்தை வெளித் தோற்றத்தால் காட்டுவார் என்றாலும், குன்றி மணியின் மூக்கில் உள்ளது போன்ற கரிய உள்ளத்தை உடையவரையும் இவ்வுலகம் கொண்டுள்ளது.

புதிய உரை:

பொய் வேடத்தாலும் வஞ்சித்தும் கூட, புறக் கொடைகள் குறைந்து போவதைக் கண்ட போலியான ஆன்மாவே பொல்லாத நஞ்சாக மாறி, கீழ்மக்களை உடைத்து அழிக்கும் மருந்தாக மாறி விடுகிறது.

விளக்கம்:

4 வது, 5 வது, 6 வது குறட்பாக்களில் கூறியபடி, தவம் மறைந்து அல்லவை செய்தும், பற்றற்றேம் என்று படிற்றொழுக்கம் புரிந்தும், துறந்தார்போல் வஞ்சித்தும், மக்களிடையே எல்லாம் பெற்று வாழ்கிற போலித் துறவிகளின் பொல்லா செயல்களை விவரித்தார் வள்ளுவர்.

அனைத்தையும் துறந்ததாகத் தோற்றமளித்தாலும், அன்பு, ஆசை, அறுசுவை உண்டி, செல்வம், சுகபோக வாழ்க்கை இவற்றிலிருந்து, விடுபட்டு வெளியேறிவர இயலாதவர்களுக்குத், தங்கள் வருமானம் குறைவதைக் காணுகிறபோது, என்ன நடக்கும் என்பதைத்தான் எட்டாவது குறளில் கூறுகிறார்.

புறம் குன்றி என்பது - புறத்திலிருந்து வருகிற கொடை
தனையர் என்பது அதன் அளவைக் காணுவர்.
அகம் என்பது, அவரது ஆன்மா.
குன்றி என்பது மனோசிலை எனும் கொடிய நஞ்சு.

வரவின் அளவு குறைகிறபோது, மனம் வாட்டுகிறது. வதைக்கிறது, பதைக்கிறது. அப்பொழுதுதான் மனசாட்சி பேசவும் ஏசவும் ஆரம்பிக்கிறது. அது அந்த மாய மனித மிருகத்தை ஆன்மாவானது அலைக்கழிக்கிறது.

பாழும் பொருளின் மேல், பற்று கொண்ட பாவியை, ஆன்மாவானது நஞ்சாக மாறி, அவரது உடல் மனத்தை வருத்துகிறது. ஆசையின் காரணமாக கீழ்மக்களாகிப் போனதால், அவர்களை உடைத்து அழிக்கிறது.

கீழ்மக்களாக மாறிப்போனவர்களை உடைத்து அழிக்கும் அற்புத மருந்தாக, அவரது ஆன்மாவே அனைத்தையும் செய்து விடுகிறது என்னும் அற்புத தத்துவத்தை, வள்ளுவர் கூறியிருக்கிறார்.

குன்றி மணியின் சிவப்பு நிறம்போல தோற்றமும், அதன் கருமைபோல மனமும் என்று மற்றவர்கள் பொருள் கொண்டாலும், அருந்துறவிகளின் இறைவன் ஆன்மா என்பதை, வள்ளுவர், வளமான நெறியாக இங்கே வகுத்துக் காட்டியிருக்கிறார்.

278. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

பொருள் விளக்கம்:

நீர் ஆடி = தண்ணீரும் காற்றும்
மறைந்தொழுகு = தெரிந்தும் மறைந்தும் ஒழுகி உதவுவது போல
மாந்தர் பலர் = பல மனிதர்களும்
மனத்ததுமா = மனத்திலே உள்ள (தீய) வலிமையானது
சாக = அழிந்து போக,
மாண்டார் = பெரியோர்களாக மாற்றி உதவியது.

சொல் விளக்கம்:

மா = வலி; **சாக** = அழிய; **மாண்** = மாண்பு; **தார்** = படை
மாந்தர் = மனிதர்; **ஒழுகு** = தொடர்ந்து நெறிப்பட நிற்றல்

முற்கால உரை:

மாசு தம் மனத்தின் கண்ணதாக இருக்க, பிறர்க்குத் தவத்தான் மாட்சிமை உடையாராய், நீரில் மூழ்கிக் காட்டி, அதன் கண்ணே பறைந்து செல்லும் மாந்தர் பலர் உள்ளனர்.

தற்கால உரை:

மனத்தின் கண் குற்றம் நீங்காமல் படிந்திருக்கத் தவத்தினர்போல், தூய நீராடல் முதலியவற்றால், தம்மைப் பொலிவாகக் காட்டிக் கரவாக வாழ்கின்ற வேடமாந்தரும் உலகில் பலராவார்.

புதிய உரை:

நீரும் காற்றும் தெரிந்தும் மறைந்தும் ஒழுகி உதவுவதுபோல, மாந்தர்கள் ஒழுகி, மனதிலுள்ள மாசுகளைப் போக்கி விட்டால், அவர்கள் இந்த உலகின் மாட்சிமை மிக்கப் படையினராக விளங்குகின்றார்கள்.

விளக்கம்:

மாண்டார் என்பது பெரியோர். மாந்தராக விளங்குபவர் சிந்திக்கின்ற மனிதராக மாறுவதுதான் மரியாதைக்குரிய வளர்ச்சி. மனிதரையும் மாண் + தார் ஆக, அதாவது மாண்பும் மாட்சிமையும் மிக்கப் படையாக மாற்றுவது என்பது மகத்தான சாதனை.

உலக வாழ்க்கையை உள்ளத்தால் துறந்து, உடலால் மறந்து, உயர்ந்த வாழ்வில் புகுந்து பெருமை பெறுவது துறவறத்தின் சிறப்பம்சமாகும். இதற்கு இயற்கை உதவுகிற அற்புதத்தைத் தான் இந்தக் குறளில் வள்ளுவர் காட்டியுள்ளார். நீர், காற்று, வெப்பம். இந்த மூன்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிற மாந்தரே, மாண்டோர் ஆகிறார்.

நீர் தொடர்ந்து, இடை விடாமல் ஒழுகுவதைக் குறிக்க **ஒழுகு** என்றும்; காற்று மறைந்து ஒழுகுவதை **மறைந்து** என்றும் வள்ளுவர் கூறியது, அவர் வல்லமையைக் காட்டுகிறது.

நீரோட்டம் போல, மறைந்து உதவும் காற்றை, பிடித்துப் பயன்படுத்தும் கணக்கறிவாளராக ஒருவர் முயல்கிறபோது, கூற்றையும் உதைத்து விரட்டும் வலிமையைப் பெற்று விடுகிறார்.

நீராடி மறைந்தொழுகு என்று மனப் பயிற்சியின் பெருமையை வெளிப்படுத்திய வள்ளுவர், அப்படிப்பட்டவர் மனத்திலே உள்ள மாசுகளும் ஆசைகளும் **'சாக'** என்றார். மாசாக என்றார்.

மனத்திலே சலனங்களும் சபலங்களும் சாகின்றபோது, அவர்கள் மாண்பு மிக்கவர்களாக மாறிப் போகின்றார்கள், மாண்=மாண்பு; தார் = படை. அவர்கள் மாண்புமிகு படையினர். மாநிலம் காக்கும் மாவீரர்கள்.

கூடா ஒழுக்கத்தையே குறித்துக் காட்டி வந்த வள்ளுவர், நல்ல ஒழுக்கத்தினை வளர்க்கும் இயற்கை சக்திகள் உள்ளன. அதனைப் பயன்படுத்தி, ஆற்றல் மிக்கவர்களாக வாழ்ந்திட வேண்டும் என்று 8வது குறளில் வழிகாட்டுகின்றார்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்

பொருள் விளக்கம்:

யாழ்கோடு = ஆந்தை வஞ்சனையானது.
கணைகொடிது = அதன் ஒலியும் கொடுமையானது.
செவ்விதாங்கன்ன = அந்த ஆந்தையின் தன்மை போலவே,
வினைபடு = மறைந்து வாழும் பொய் வேடத்தாரின் எண்ணம்,
செய்கையின் பொல்லாங்கினை.
பாலால் கொளல் = (அவரது) குணத்தால் கண்டு கொள்ளலாம்.

சொல் விளக்கம்:

யாழ் = ஆந்தை, வீணை; **கோடு** = வஞ்சனை, கொடுமை, நடுநிலை நீங்குகை; **கணை** = ஒலி, அம்பு
வினை = கருத்து, செய்கை பொல்லாங்கு
பால் = இடம், குணம், கடமை, உரிமை.

முற்கால உரை:

அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலால் கொடியது. யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற் செவ்விது. அவ்வகையே தவம் செய்வோரையும் கொடியர் செவ்வியர் என்பது வடிவாற் கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்து கொள்க.

தற்கால உரை:

நேராக அமைந்த அம்பும் கொடுமை செய்யும். வளைவாக அமைந்த யாழும் இனிமை செய்யும். அவற்றைப் போல, தவத்தினரையும் அவரவர் செயல் நிலையால் அறிந்து கொள்க.

புதிய உரை:

இருட்டில் மறைந்து வாழும் ஆந்தை வஞ்சனை நிறைந்தது. அதன் குரலும் கூட கொடுமையானது. அதைப் போலவே, பொய்த் துறவியரின் தோற்றம் மட்டுமன்று; அவரது எண்ணம் செய்கை வாழ்க்கை எல்லாமே கொடுமையானது என்று அவர் குணத்தாலே கண்டு கொள்ளலாம்.

விளக்கம்:

யாழ் என்றதும் வீணை என்று தான் நினைவுக்கு வரும். ஆனால் யாழ் என்றால் ஆந்தை என்னும் ஒரு பொருளும் உண்டு. யாழ் என்பது வீணை, கின்னரம் என்று அழைக்கப்பட்டாலும், அவற்றிற்கும் ஆந்தை என்ற ஓர் அர்த்தம் இருந்து கொண்டே இருக்கிறது.

ஆந்தை பகலெல்லாம் மரப்பொந்து, பாழிடங்களில் தூங்கி, இரவில் இரைதேடப் புறப்படும். அது வஞ்சனை நிறைந்த பறவை. ஆந்தையின் ஒலியை அலறல் என்பார்கள். அபசகுனம் என்பார்கள். ஆகவே, ஆந்தை என்றாலே வஞ்சனை மிக்கது. கொடியது.

அதனால்தான் கோடு என்றும் கொடிது என்றும் வள்ளுவர் குறித்துக் காட்டினார்.

போலித் துறவிகளும், தங்கள் வாழ்க்கையைப் பகலில் மறைத்து, இரவில் வெளிப்படுத்திக் கொள்வார்கள். ஏமாற்றுவதற்கு இரவு நேரம் சாதகமானது.

நேரம் இரவு. நெஞ்சமோ கரவு, நிலைமையோ துறவு, பாமரர்கள் ஏமாற இதற்கு மேல் என்ன வேண்டும்? அதனால்தான் **வினைபடு** என்கிறார். **பால்** என்றால் செயல்படும் இடம்; ஏமாற்றுகிற குணம்; வஞ்சிக்கின்ற கடமை; அதுவேதன் வாழ்வின் உரிமை என்று வாழ்கிற போலித் துறவியை உவமித்துக் காட்ட, ஆந்தையை விட, வேறு பொருத்தமான உயிர் எதுவுமே இல்லை.

6வது குறளில் வஞ்சகத் துறவிகளை வென்கணார் என்றும், 7வது குறளில் விடத் தலை வாய்ந்த கீழ்மக்கள் (கரியார்) என்றார். ஆக, ஒன்பதாம் குறளில், வஞ்சகப் பறவையின் வடிவாக விளங்கும் வேடதாரிகள், வஞ்சனையே செய்கிற அசபதிகள். அதாவது பரமபத நூல்களைப் படிப்பார்கள். ஆனால், அதன்படி நடக்காதவர்கள். செபம் செய்யாதவர்கள்.

இவர்களை இனம் கண்டு கொள்ளுங்கள் என்று இந்தக் குறளில் மக்களை எச்சரிக்கின்றார்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

பொருள் விளக்கம்:

மழித்தலும் = மற்றவரது வாழ்க்கையை அழித்தலும்
நீட்டலும் = பெருங்கொடை கொடுத்துக் காத்தலும்
போன்றவற்றை
வேண்டா = ஒருவரால் விரும்பிச் செய்யவே வேண்டாம்.
உலகம் = பேரறிவு பெற்ற பெரியோர்கள்
பழித்தது = பாவம் என்று பழித்து ஒதுக்கியதை
ஒழித்துவிடின் = தவிர்த்து விலக்கினாலே போதுமானது

சொல் விளக்கம்:

மழித்தல் = அழித்தல்; **நீட்டல்** = பெருங்கொடை, ஈதல்
உலகம் = அறிஞர்கள்; **பழித்தது** = பாவம் என்றது.

முற்கால உரை:

தவம் செய்வார்க்குத் தலை மயிரை மழித்தலும், சடை ஆக்கலு மாகிய வேடமும் வேண்டா. உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்து விடின் போதுமானது.

தற்கால உரை:

உயர்ந்தோர் பழிக்கும் தீய ஒழுக்கத்தை நீக்கி விட்டால் துறவோர் தம் தலையை மொட்டையடித்துக் கொள்வதும்; முடியை வளர்த்து நீட்டிக் கொள்வதும் ஆகிய வேடங்கள் வேண்டியன அல்ல.

புதிய உரை:

தவ நெறியில் இருப்பவர்கள், மற்றவர்களுக்குப் பெருங்கொடை அளிக்கவும் வேண்டாம். பிறர் வாழ்வை அழிக்கவும் வேண்டாம். உலகப்பெருமக்கள் பழித்து வெறுத்த பாவத்தையெல்லாம் தவிர்த்து வாழ்ந்தாலே போதுமானது.

விளக்கம்:

கூடாஒழுக்கத்தை இதுவரையிலும் கூறி வந்த வள்ளுவர், கூடும் ஒழுக்கத்தைப், பத்தாவது குறளில் பாங்காகச் சொல்லுகிறார்.

தவசியர்கள், தங்கள் பெருமையை வளர்த்துக் கொள்ள, பிறருக்குக் கொடைகளை, அள்ளி அள்ளிக் கொடுக்கவும் வேண்டாம். தங்களை எதிர்ப்பாரை, தரைமட்டமாக அழித்துப் போடும் அவமானமான காரியங்களை செய்யவும் வேண்டாம்.

பாவம் என்று பெரியோர்கள் பழித்து ஒதுக்கிய காரியங்களைத் தவசீலர்கள், தவிர்த்து வாழ்ந்தாலே போதும் என்கிறார். இந்தக் குறளுக்கு உரைதந்த பெரியோர்கள் எல்லோரும் **மழித்தல்** என்றால் முடியைக் கழித்து மொட்டைபோட்டுக் கொள்ளுதல். **நீட்டல்** என்றால். சடாமுடியை நீட்டி விடுதல் என்றே பொருள் தந்திருக்கின்றார்கள்.

தவம் செய்பவர் என்றால் அந்தக் கோலம்தான் அழகுக் கோலம். அதை அலங்கோலமாக ஆக்குவோரும் அவர்கள் தாம்.

நீட்டல் என்றால் பெருங்கொடை, ஈதல் என்றே பொருள்கள் உள்ளன. மழித்தல் என்றால் மொட்டை ஆக்கல் என்று பொருள். மொட்டை ஆக்கல் என்றால், கூரின்மை ஆக்குதல். மற்றவர்கள் சிறப்பை அழித்தல் மிகுதியைத் தரைமட்டமாகுதல்.

ஆக, பிறரது வாழ்வை அழிக்கவும் வேண்டாம். வளம் கொடுப்பதாக நினைத்து, வாரி வழங்கவும் வேண்டாம்.

தவத்திற்கு வேண்டியதை மட்டும் கொள்ளுங்கள். தவத்தைக் கெடுப்பனவற்றைத் தள்ளுங்கள். வலிமையான துறவற வாழ்க்கையில் வெல்லுங்கள் என்று வள்ளுவர் இந்த அதிகாரத்தை முடித்துத், தொடர்கிறார்.

29. கள்ளாமை

தவநெறியில் வாழ்கிறவர்களுக்கு, கூடா ஒழுக்கம் கூடாது என்று கூறிய வள்ளுவர், கூடாத ஒழுக்கத்திற்குக் கூட்டிக் கொண்டு போகிற கவர்ச்சியைக் கொண்டது களவுதான் என்று எண்ணிய காரணத்தால், கூடா ஒழுக்கத்திற்குப் பிறகு, கள்ளாமை என்னும் அதிகாரத்தை வைத்திருக்கிறார்.

கள்ளாமை என்றால் களவு செய்யாமை என்று பொருள். களவு என்பது பஞ்சமா பாதகத்தில் ஒன்று. அதைப்பெரும்பாவம் என்றும், துரோகம் என்றும் பிரமித்துப் பேசுவார்கள்.

பெரும்பாவம் என்பது கொலை, பொய், களவு, கள்அருந்துதல், குருநிந்தை எனும் ஐம்பெரும் குற்றங்களாகும்.

களவு என்பதற்குப் பிறர் பொருளை அனுமதியின்றி மறைவாகக் கவருதல் என்று விளக்கம் அளிக்கின்றார்கள். கள் என்பதற்குப் பொய், மோசம், களவு, கஞ்சா என்றும் கூறுகின்றார்கள்.

ஆக, கள் என்றால் மனத்தால் வவ்வுதல் உடலால் கவ்வுதல் என்றும் கொள்ளலாம். அடுத்தவர்கள் பொருள் மீது அவாவுதல். அவாவியதால், மனம் கறைபட்டுக் குன்றிப்போக, உடலோ அதைப் பிறர் அறியா வண்ணம் பறிப்பதற்காக ஒழுக்கத்தில் கன்றிப்போக, பாதகச் செயல் நடந்தேறி விடுகிறது.

ஆகவே, பாதகச்செயலுக்குப் போகின்ற கள் எனும் களவை, கொள்ளாத மெய் கொண்டவர்களாக, துறவியரும், அவரது ஆன்மிக வழியால் ஒழுகும் இல்லறத்தாரும் கள்ளாமெய் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்னும் எண்ணத்தோடுதான் வள்ளுவர் கள்ளாமெய் என்று இந்த அதிகாரத்திற்குப் பெயர் சூட்டியிருக்க வேண்டும்.

துறவியருக்குத் தூய மனம் வேண்டும் என்றால், தீய குணம் தொலைய வேண்டும். தீய குணத்தைத் தேக்கிக் கொண்டிருக்கும் மனத்தின் வலிமை சாக வேண்டும்.

ஆந்தை போல வஞ்சனையுடன் கரந்தொழிகின்ற கீழ்மை அன்பு மொழியில்லாமல் ஆந்தைபோல் அலறி நிற்கும் இழிநிலை

அழிய வேண்டும். வேண்டியவர் என்றால் உதவுதல், விரும்பாதவரை ஒழித்துவிடுதல் என்னும் கள்ள மனம் இல்லாத மெய்வேண்டும் என்பதால்தான், கள்ளாமெய் என்றார் வள்ளுவர்.

கள்ள ஆசாரம் கொண்டது தான் கள்ளமெய். இப்படி கள்ளத்தனமாக ஒழுகுவோரில் பலவகை உண்டு. மங்கையரைத் தேடித்திரிவோர் **வேசிக் கள்ளர்**; மதத்தின் பெயரைச் சொல்லி மாண்புகளைக் கெடுக்கின்ற **ஆசாரக் கள்ளர்**; கைகுவித்து வணக்கம் செய்து கொண்டே, கள்ளத்தனம் செய்கிற **கும்பிடு கள்ளர்**; அழுதுகொண்டே காரியத்தை முடிக்கின்ற **அழு கள்ளர்**; நம்பிக்கைத் துரோகம் செய்கிற **மாசாலக் கள்ளர்**.

இப்படி உடம்பால் களவு செய்கிற உன்மத்தத் தனம் இல்லாத மெய்யானது துறவியருக்கு மிகமிக அவசியம் என்று **கள்ளாமெய்** எனும் அதிகாரத்தில், வள்ளுவர் வழிகாட்டி வருகிறார்.

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு

பொருள் விளக்கம்:

என் பான் = எனது தகுதி
எள்ளாமெய் = பிறர் இகழாத நிலைமையை
வேண்டுவான் = வேண்டி விரும்பிக் கேட்பவன்
எனைத்தொன்றும் = எவ்வளவுதான் ஒன்றிப் போனாலும்
கள்ளாமெய் = பிறர் பொருளைக் கவராத உடம்பையும்
தன்நெஞ்சு = ஆத்மாவுக்கு உட்பட்ட நெஞ்சையும்
காக்க = காத்துக் கொள்ள வேண்டும்.

சொல் விளக்கம்:

மெய் = உடல், நிலைமை; **எள்ளா** = இகழப்படாத
வேண்டுவான் = வேண்டிக் கேட்பவன்; **என்** = எனது
பான் = தகுதி, சிறப்பு, நல்வினைப் பயன்; **தன்** = ஆத்மா
நெஞ்சு = மனம்.

முற்கால உரை:

வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான், யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்க.

தற்கால உரை:

பிறரால் இகழப் படாமையை விரும்புபவன் என்பவன், பிறருக்குரிய எந்த ஒரு பொருளையும் கவர்ந்து கொள்ளத் தன் மனம் விரும்பாதவாறு காத்தல் வேண்டும்.

புதிய உரை:

பிற மக்கள் தன்னை இகழாத நிலையை வேண்டிக் கொள்பவன், பிறருக்குரிய பொருளின் மீது எவ்வளவு தான் ஒன்றிப் போனாலும், அதைக் களவாடாதவாறு, உடல், மனம், ஆத்மாவைக் காத்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

புகழப்படுகின்ற வாழ்க்கை, இகழப்படுகின்ற வாழ்க்கை என வள்ளுவர் இரண்டாகப் பிரிக்கிறார்.

புகழ் பெறுவதற்குப், பலப் பல தியாகங்களைச் செய்திட வேண்டும். புனித காரியங்களில் ஈடுபட வேண்டும். இனிதானவற்றில் ஈடுபாடு கொண்டு, பாடுபட வேண்டும்.

ஆனால், இகழப்படுவதற்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு சிறிய தவற்றைச் செய்தாலும், அவர் உலகம் அறிய இகழ்ச்சிக்கு ஆளாகி, ஈன வாழ்வுக்குத் தேராகி, அவமானப்பட்டு அழிகிறார்.

அதனால்தான், எடுத்த உடனேயே, எள்ளாமை என்றார். **எள்ளாதமெய்.** அதாவது இகழப்படாத உடம்பு. அப்படி ஒரு தேகம் வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்க வேண்டும். அதையே வேண்டுவான், தொழுவான், துதிப்பான் என்றார்.

என்பான் என்னும் சொல்லை இரண்டாகப் பிரிக்கிறோம். **என்** என்றால் எனது. **பான்** என்பது பான்மையிலிருந்து வந்த சொல். தகுதி, குணம், சிறப்பு நல்வினைச் செயல்.

எனது தகுதி என்ன? என் சிறப்பு என்ன? என் நல்வினைச் செயலும் பயனும் என்ன என்று எண்ணுகிறபோது, **எனைத்தோன்றும்** என்று ஒரு சொல்லைப் பதிக்கிறார்.

எவ்வளவுதான் ஒன்றிப் போனாலும், உள்ளம் பூதிந்துபோனாலும் உயிரைப் பிழிகிற ஆசை வந்தாலும் என்று பொருள் தருகிற சொல் பிறர் பொருள் மீது பேயாய் பற்று வைத்து, நாயாய் அலைவது.

அப்படிப்பட்ட நிலையைக் கள்ளாமெய், தன், நெஞ்சு என்று மூன்று சொற்களில் முத்தாய்ப்பாக விளக்குகிறார்.

பிறர் பொருளைப் பார்த்து அவாவும் மெய்; நினைப்பில் பறிக்க நினைக்கும் நெஞ்சு. அவற்றை அடக்கி ஆளும் ஆத்மா. இந்த மூன்றையும் **காக்க** என்கிறார் வள்ளுவர்.

உடலை மட்டுமோ, மனத்தை மட்டுமோ, ஆத்மாவை மட்டுமோ காப்பது கூடாது. இகழப்படாமல் புகழப்படுவது போல வாழ, இம்மூன்றையும் காக்க வேண்டும் என்று முதல் குறளில் கூறுகிறார்.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

பொருள் விளக்கம்:

பிறன் பொருளை = மற்றவனது உடமையை
களளதத்தால = வஞ்சனையால
கள்வேம் எனல் = திருடிக் கொள்வேன் என்று கருதுதல்
உள்ளத்தால் = ஆன்மா ஆகிய மனத்தால்
உள்ளலும் = நினைத்து ஆராய்வது கூட
தீதே = வாழ்வை அழித்து விடும்.

சொல் விளக்கம்:

உள்ளம் = ஊக்கம், முயற்சி, ஆன்மா; **உள்ளுதல்** = ஆராய்தல், நினைத்தல்; **கள்ளம்** = கபடம், வஞ்சனை
கள்வேம் = அபகரிப்பேன் (என)

முற்கால உரை:

குற்றங்களைத் தம் நெஞ்சால் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம். ஆதலால், பிறனொருவன் பொருளை அவன் அறியா வகையால் வஞ்சித்துக் கொள்வேமென்று கருதற்க.

தற்கால உரை:

பிறருக்குரிய பொருளை வஞ்சத்தால் பறித்துக் கொள்வோம் என்று எண்ணாதே. ஏனெனில் அதனை மனத்தால் நினைத்தலும் குற்றமேயாகும்.

புதிய உரை:

பிறரது உடமைகளை வஞ்சனையால் திருடிக் கொள்ளலாம் என்னும் ஆத்ம சிந்தனை கூட, அவரது வாழ்வையே அழித்துவிடும்.

விளக்கம்:

நினைப்பு பிழைப்பைக் கெடுக்கும் என்பது கிராமியப் பழமொழி. மனம்போல் வாழ்வு என்பது, குணக்குன்றாக விளங்குவோரின் அனுபவக் கூற்று.

சிந்திப்பதற்குப் பெயர்தான் மனம். மன் = சிந்தித்தல்: அம் அழகாக. அழகாகச் சிந்தித்தல் என்றால், சீராக, நேராக, செம்மையாக, ஒழுக்கமாக என்று அர்த்தம்.

ஒழுக்கமாகச் சிந்திக்கும் மனத்தால் என்ன பயன் என்றால், அதுதான் மனித உடலமைப்பின் மாண்புமிகு செயலாக அமைந்திருக்கிறது.

ஒழுக்கமாக, சீராக சிந்திக்கும்போது, பூரகம், இரேசகம் என்னும் சுவாசத் தொழிலானது, சுகமாகவும், சுமுகமாகவும் நடைபெறுகிறது.

இயல்பான சுவாசத்தால், நுரையீரலுக்குள் உயிர்க்காற்றின் பரிமாற்றம் சரியாக நடக்க, உயிர்க்காற்றைப் பெற்ற இரத்தமானது உடல் முழுவதிலும் உள்ள செல்களுக்கு விரைவாக ஓடி, சத்தான ரத்தத்தைக் கொடுத்து விட்டு, அங்கே தேங்கியிருக்கும் கழிவுகளை எடுத்துக் கொண்டு திரும்ப, இப்படி உடல் செழுமைக்கும் வலிமைக்கும் சரியான வண்ணம் சாதித்துக் கொண்டிருக்கிறது.

தீய எண்ணமானது மனத்திலே தோன்றிய உடனேயே, மனத்தில் ஒரு திகைப்பு. ஒரு வினாடி ஏற்படுகிற அந்தத் திகைப்பானது, சுவாசத்தின் சீரான தன்மையை நிறுத்திவிட்டுத் தொடங்க, அதனால், உயிர்க் காற்று பரிமாற்றம், வேகமான இரத்த ஓட்டம், கழிவுப் பொருள் அகற்றும் பணி எல்லாமே சீர் கெட்டுப் போகின்றன.

இப்படி அடிக்கடி தோன்றுகிற தீய எண்ணத்தால், தேகம் பெறுகிற இன்பத்தை விட, துன்பமே அதிகமாகிறது.

உள்ளல் என்றால் ஆராய்தல். அதாவது ஆழ்ந்து சிந்தித்தல். தவறான சிந்தனைகள், தேகத்தின் உள்ளுறுப்புக்களைத் தடுமாறச் செய்து, தத்தளிக்கவிட்டு, தொடர்ந்து செய்கிற தூய்மையான பணிகளைத் தோய்ந்து விழச் செய்கிறது.

அதனால்தான் மனம் போல வாழ்வு என்றனர். தீதல் என்றால் கருகிப்போதல். அழிந்து போதல். உடலுக்கு அடிப்படை ஆதாரமான செல்கள் அழிந்தால், தேகம் அழியும். அதனால் அவரது வாழ்வே அழியும் என்பதால்தான், தீதே என்று ஏகாரமிட்டு எச்சரிக்கின்றார்.

முதல் குறளில், உடல் மனம் ஆன்மா மூன்றையும் காத்துக் கொள் என்றவர், இரண்டாம் குறளில், உள்ளத்தை ஊறு விளைவிக்கும் நினைப்பிலிருந்து விலக்கிக்கொள், வாழ்வை காத்துக் கொள் என்று எச்சரிக்கின்றார்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அறவிறந்து ஆவது போலக் கெடும்

பொருள் விளக்கம்:

களவினால் = பிறர் பொருளை அனுமதியின்றி மறைவாகக் கவர்ந்ததால்
ஆகிய ஆக்கம் = பெற்ற வாழ்வின் எழுச்சியானது
ஆவது = அதிகமானாலும்
அறவிறந்து = முற்றும் முழுதுமாக ஒழிக்கப்பட்ட
போலக்கெடும் = புதர் போல அழிந்துபோகும்.

சொல் விளக்கம்:

ஆக்கம் = வாழ்வு, எழுச்சி; **அற** = முற்றும் முழுதுமாக
இறந்து = அழிதல்; **போல்** = புதர், போல
அறவிறந்து = எல்லைகடத்தல்

முற்கால உரை:

களவினால் உளதாகிய பொருள், வளர்வது போலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெடும்.

தற்கால உரை:

திருட்டினால் உண்டாகின்ற செல்வம், அளவில்லாமல் வளர்வது போலத் தோன்றினாலும், விரைவில் அழிந்து போகும்.

புதிய உரை:

பிறர் பொருளைக் கவர்ந்து பெற்ற வாழ்வானது, எழுச்சி போலத் தோன்றினாலும், முற்றும் முழுதுமாக ஒழிக்கப்பட்ட புதர்போல அழிந்து போகும்.

விளக்கம்:

திருடிப் பெற்ற, பிறர் பொருளைக் கவர்ந்து பெற்ற செல்வம் என்றே எல்லோரும் பொருள் கொண்டதை, நான் கவர்ந்து பெற்ற ஒரு எழுச்சி மிக்க வாழ்வு என்று கொண்டிருக்கிறேன்.

பெரிதும் பெற்ற வேட்கையாலும், வெறியாலும், வவ்விய மற்றவர்கள் உடமையும் பொருளும், ஒருவரிடம் அடைகிறபோது, பெறுகிறவர்களுக்குப் பேரதிர்ச்சியும், பேருணர்ச்சியும், பெருமை மேலோங்கிய புது உணர்ச்சியும் எழுவது இயற்கைதான்.

அதைக் குறிக்கத் தான் வள்ளுவர், **ஆக்கம்** என்னும் ஒரு சொல்லைப் படைத்து வைத்தார். வாழ்வு, எழுச்சி, பெருக்கம், விருத்தி, செல்வம் என்பதாக ஆக்கத்திற்குப் பொருள் கொள்ளலாம்.

ஆகவே, பிறர் பொருளைப் பேராசையால், பொய், வஞ்சனை, சூதினால் பெற்ற வாழ்வு, சுவைப்பது போலத் தோன்றினாலும், சுகமாக இருப்பது போலக் காட்சியளித்தாலும், அந்த வாழ்வானது, வளர்ந்த புதராகத் தான் அமையும். விளைந்த பதராகத்தான் அலையும். அங்கே ஆவதுபோல இருந்து, சாவது போல அழிந்து ஒழியும். ஏன் அந்த நிலை?

செல்வம் அழிந்தால் வேறு செல்வம் தேடிக் கொள்ளலாம். செல்வமே கிடைக்காவிட்டாலும், வறுமையோடு போராடியும் வாழலாம். களவினால் வந்த செல்வம் இழவாகப் போய்விட்டது என்று சமாதானப்பட்டுக் கொள்ளலாம்.

ஆனால் வள்ளுவரின் சிந்தை வேறு விதமாக சிந்திக்கிறது. களவுக்கு முன்னால் இருந்த அவனது வாழ்வு பால்போல இருந்தது. களவுக்குப் பின்னால் வந்த வாழ்வு, பாலில் கலந்த நஞ்சு போல மாற்றி விட்டது. பாலும் அழிந்தது. பாலைப் பருகியவனும் அழிந்தான். இதுதான் வாழ்க்கையின் உண்மையான யதார்த்த நிலை.

இதைத்தான் வள்ளுவர் **அளவிறந்து** என்றார். அளவு கடந்து இறந்து படுவது. அழிந்து படுவது என்றார். இந்தச் சொல்லை, அறவிறந்தும் என்றும் பலர் உரைக்கின்றார்கள்.

அறவிறந்து என்றால் முற்றும் முழுதுமாக வாழ்வே அழிந்துபோகிறது. களவாடியவன் பெற்றது வாழ்வு அல்ல. புதர் என்கிறார். புதர் அழிக்கப்படுவது போல, அவனது வாழ்வும் நிலைக்காது, செழிக்காது, சுவைக்காது, கவைக்குதவாது என்று கட்டியங் கூறுவதுபோலத், தெளிவு படுத்துகின்றார்.

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

பொருள் விளக்கம்:

கன்றிய = முதிர்ந்துபோன
காதல் = கொலை, கொல்லல் போன்ற வேட்கையை உடைய
களவின் கண் = களவு செயலினால்
விளைவு = உண்டாகும் வாழ்க்கையும்
கண் = அதன் வழி பெறுகிற சுகமான உடம்பும்
வீயா = சந்தேகமில்லாத அழிவையும்
விழுமம் தரும் = துன்பத்தையே பெறும்

சொல் விளக்கம்:

கன்றுதல் = முதிர்தல், பதனழிதல், **காதல்** = கொலை, கொல்லல், வேட்கை; **விளைவு** = ஆக்கம், வாழ்வு

கண் = உடம்பு; **வீ** = கேடு, அழிவு; **யா** = சந்தேகம், இல்லை

விழுமம் = வருத்தம், துக்கம், துன்பம்

முற்கால உரை:

பிறர் பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை, அப்பொழுது இனிது போலத் தோன்றி, தான் பயன் கொடுக்கும் பொழுது, தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

தற்கால உரை:

திருட்டினிடத்து உண்டாகும் கடுமையான பற்றுதல், பயனை அடையுமிடத்து. என்றும் நீங்காத துன்பத்தைத் தந்து விடும்.

புதிய உரை:

கொலை கொள்ளையில் கொண்டுபோய் விடுகிற களவினால் பெறுகிற வாழ்வும், அதனை அனுபவிக்கும் உடம்பும், சந்தேகம் இல்லாமல் அழிவையும் ஆறாத துன்பத்தையுமே தந்து நிற்கும்.

விளக்கம்:

நான்காவது குறளில், களவின் உண்மையான தன்மையை விளக்கிக் காட்டுகிறார் வள்ளுவர்.

கன்றிய காதல் என்னும் சொல் மிகவும் பொருள் பொதிந்தது. காதல் என்றால் அன்பு, ஆசை, ஆவல், என்று சுவையான அர்த்தங்கள் இருந்தாலும், தறித்தல், முறித்தல், கொலை, பொருதல் என்னும் பொருள்களும் உள்ளன.

வல்லமையால் சொல்லுக்குள் சொல்லை வைக்கும் வள்ளுவர், காதல் என்றதும், கிறங்கி விடுவார்கள் என்று எண்ணியிருப்பார் போலும், அதனால் கன்றிய காதல் என்றார்.

பிறரை அழிக்கின்ற ஆற்றலில் முதிர்ந்து போனது தான் களவு என்று, மிகத் தெளிவாக, களவின் வலிமையை இங்கே குறித்துக் காட்டுகிறார். களவின்கண் காதல் கொண்டவன், என்ன ஆவான் என்பதற்குரிய விளக்கமே இந்தக் குறளாகும். மூன்றாவது ஆக்கம் என்றார். அதாவது வாழ்க்கை என்றார். நான்காவது குறளிலும், வாழ்க்கை என்று குறிக்கவே விளைவு என்றார்.

பிறர் பொருளைக் கவர்ந்ததும் கிடைக்கிற எழுச்சிமிக்க வாழ்வில், வாழ்வும் அழியும். வசதியாக வாழ்கிற அவரது உடம்பும் அழியும். அவற்றை அழிக்கும் வரை, துக்கமும், வருத்தமும், துன்பமும் தொடர்ந்து வரும். அதுவும் சந்தேகம் இல்லாமலே வரும் என்பதைக் குறிக்க வீ + யா = வீயா என்றார்.

வீ என்றால் சாவு. யா என்றால் சந்தேகம், இல்லை என இரண்டு அர்த்தங்கள். சந்தேகம் இல்லாமல் சாவு தான் பரிசு. அதுவும் உடனடியான சாவு இல்லை. துள்ளத்துடிக்க, தொடர்ந்து படுக்க, அடுக்கடுக்கான துன்பங்கள் ஆறாகப்பெருகி, நாறாகக்கிழித்து, நாசமாக்கிவிடும் என்று களவின்கண் காதலை வெளிப்படுத்துகிறார்.

பிறர் பொருளில் நன்றாகத் தின்று கொழுப்பது மனிதசாதியின் மகத்தான செயல் என்பதைக் குறிக்கவே **இன் கண்**, என்றார். இனிய தோற்றமும் கொழு கொழு செழிப்பும், தளதளப்பும் கொண்டிருப்பார்கள், கொழுத்திருப்பார்கள், பழுத்திருப்பார்கள் என்று கூறுகிற வள்ளுவர், அவர்கள் அழிவு நிச்சயமானது. அதுவும் நைந்து நலிந்து, நாசமடைவது உறுதி. ஆகவே, துறவியரும் சரி, இல்லறத்தாரும் சரி, சாவு கொடுக்கும் களவிற்குள் காலை வைக்காதீர்கள் என்று கூறுகின்றார்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப் பொச்சாப்பு பார்ப்பார்கண் இல்

பொருள் விளக்கம்:

அருள் கருதி = நல்வினை ஆற்றிட சிந்திப்பதும்,
அன்புடையராதல் = கருணையுடன் மற்றவருடன்
இணக்கமாவதும் போன்ற
பார்ப்பார்கண் = பண்புகளை உடைய அந்தணரிடத்தும்
பொருள்கருதி = பிறரது உடமைகளைக் களவாட தீர்க்கமாகச்
சிந்திக்கும் போது; இல் = (அவரது) நற்குணம் அழிந்து போகிறது
பொச்சாப்பு = பொல்லாங்கு தான் மிகுதியாகிறது.

சொல் விளக்கம்:

அருள் = நல்வினை, மகிழ்வு; **அன்பு** = கருணை, பரிவு, பாசம்
ஆதல் = இணக்கமாதல்; **கருதல்** = தீர்க்கமாக ஆலோசித்தல்,
சிந்தித்தல்; **பொச்சாப்பு** = பொல்லாங்கு;
பார்ப்பார் = அந்தணர், ஆய்ந்தோர், உயர்ந்தோர், வேள்வியாளர்
இல் = இல்லை, சாவு.

முற்கால உரை:

அருளினது உயர்ச்சியை அறிந்து, அதன்மேல் அன்புடையாராய் ஒழுகுதல், பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி, அவரது சோர்வு பார்ப்பார் மாட்டு உண்டாகாது.

தற்கால உரை:

பிறர் பொருளைப் பறித்துக் கொள்ளுதலை விரும்பி, அவர் சோர்வினை எதிர்பார்ப்பவர் இடத்தில், அருளை எண்ணி அன்புடையவராக நடக்கும் தன்மை இல்லை.

புதிய உரை:

நற்செயல் புரியவும், கருணையுடன் பிறருடன் இணங்கி வாழ்வதும் கூடிய பண்புடைய அந்தணர் கூட, பிறர் பொருளைக் கவரும் பொல்லாங்கை நினைக்கும் போதே, எல்லாவற்றையும் இழந்து அழிந்து போகிறார்.

விளக்கம்:

துறவறம் பூண்ட தூயவர்களுக்கு அன்பும் அருளும் இரண்டு கண்கள் போன்றவை. இவற்றை வளர்க்க, எல்லோரிடையேயும் வாழ்ந்து காட்ட முயற்சிப்பதும், முனைப்புடன் நடப்பதுவும் தான் தவவாழ்க்கை ஆகிறது.

அப்படிப்பட்ட ஆற்றல் உடையவரைத்தான் வள்ளுவர் இந்தக் **குறளில் பார்ப்பார்** என்று பெருமையாக அழைக்கிறார். வெப்பத்தையும் குளிரையும் ஒன்றாய்க் கருதி உயிரின் வாதனையையும் வென்று நிற்பதால் **அந்தணர்** என்றும், உலகப் பற்றை ஆய்ந்து அறிந்து, அவற்றின் மேலமர்ந்து ஆட்சி செய்யும் ஆற்றலால் **ஆய்ந்தோர்** என்றும், உயர்ந்த வாழ்வை வாழ்ந்து, உலகோர்க்கு இலக்கணமாகத் திகழ்வதால், **உயர்ந்தோர்** என்றும், வேள்விகள் இயற்றி, ஞாலத்தின் சீலத்தை வளர்ப்பதால், வேள்வியாளர் என்றும் அழைக்கப்படுபவர்கள் தாம் **பார்ப்பார்** என்று அழைக்கப்பட்டார்கள்.

அத்தகைய ஆற்றல் மிக்க வேள்வியாளர்கள் கூட, அகத்தை அடக்க இயலாமல், அழிந்துபோகும் உடல் சுகத்தை விரும்பி, பொருள் கருதுகிற செயலைப் **பொச்சாப்பு,** என்கிறார் வள்ளுவர்.

பொச்சாப்பு என்றால் பொல்லாங்கு. பொல்லாங்கு என்றால் ஈனத்தனமான செயல். தன் தகுதியை மறந்து தீங்கு இழைத்தல் இல் என்றால் இல்லை, சாவு.

பார்ப்பார் தம் பண்பாற்றல் என்ன என்பதை மறந்து, ஈனத்தனமான செயல்களில் இறங்கி விட்டால், அதுவே பேரின்பம் என்று மயங்கி விட்டால், அவரது நிலைமை அழிவுதான். அறிவாற்றலும், செயல் ஊக்கமும் கொண்ட மாண்புமிகு தேகம் மரண அவஸ்தைக்குள்ளாகி விடும்.

ஆகவே, ஐம்புலன்களை வென்று வாகை சூடுகிற பார்ப்பாரையும் களவாசை, கவிழ்த்து விடும் என்பதால் கவனமாக இருக்க வேண்டும். மனிதர்கள் ஆனவர்கள் மகிமையோடு சிறக்க வேண்டும் என்று 5 வது குறளில் ஆணித்தரமாக அலசிக் காட்டுகின்றார்.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண் கன்றிய காத லவர்.

பொருள் விளக்கம்:

அளவின் கண் = ஞானம் மிகுந்த உடலுடன்
நின்றொழுகல் = எப்பொழுதும் ஒழுக்கமுடன் வாழ்வதில்
ஆற்றார் = (இயலாமல்) தோற்றவர்கள்
களவின் கண் = பிறர் பொருளைக் கவருவதில் ஆசைப்படு
கன்றிய = தேர்ச்சிபெற்ற
காதலவர் = கொலையாளியாகவும் மாறி விடுவார்கள்.

சொல் விளக்கம்:

அளவு = ஞானம்; **கண்** = உடம்பு; **நின்று** = எப்பொழுதும்
ஆற்றார் = தோற்றார், வலிமையில்லாதவர்.

முற்கால உரை:

உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின் கண் நின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார். களவின் கண்ணே மிக்க வேட்கையை உடையாராவர்.

தற்கால உரை:

களவு செய்தற்குப் பேராசை கொண்டவர், தமக்கு வேண்டிய தேவை என்னும் வரம்பில் நின்று, ஒழுங்காக வாழ்வு நடத்தார்.

புதிய உரை:

ஞானம் மிகுந்த உடலுடன், எப்போதும் ஒழுக்கநெறியில் வாழ வலிமையில்லாது தோற்றவர்கள், பிறர் பொருளை அடைகின்ற பேராசையில், கொலை செயலில் ஈடுபடும் வண்ணம் மாறி விடுவார்கள்.

விளக்கம்:

துறவியர், தூய மனம் கொண்டவர்கள் எவ்வாறு வாழ்ந்தாக வேண்டும் என்னும் வரை முறை ஒன்றை **அளவின்கண்** என்ற சொல்லில் வள்ளுவர் குறித்துக் காட்டுகின்றார்.

அளவு என்றால் ஞானம், **இன்கண்** என்றால் இனிய அதாவது தகை சான்ற தேகம். ஒரு மனிதருக்குத் தேவை **நலமான தேகம்,** தெளிவான **ஞானம்,** இந்த இரண்டுமே ஒருவரை ஒழுக்கமான வாழ்வை வாழ்கிற வல்லமையை அளிக்கின்றன.

அப்படி ஒழுகுவது ஒரு நாள் மட்டும் போதுமா என்றால், 'இல்லை, எப்பொழுதும்' என்று பதில் தருகிறார் வள்ளுவர்.

நின்று என்ற சொல்லுக்கு எப்பொழுதும், நிலையாக என்று அர்த்தம். எப்போதும் ஒழுக முடியவில்லை என்றால் என்ன காரணம்? அவர்களுக்கு மன உறுதி இல்லை. உடல் வலிமை இல்லை. ஆத்ம பலம் இல்லை என்று தானே அர்த்தம்.

அதைத்தான் **ஆற்றார்** என்கிறார். அதாவது **தோற்றார்** என்கிறார். ஒழுக்க நெறியில் வாழ இயலாமல் தோற்றவர்கள் மனம் அளவு கடந்த களவில் தானே போய் நிற்கும்?

அந்தக் களவுணர்வும் பேராசையில் கன்றிப்போகிறது. பெருமையில் குன்றிப்போகிறது. பிறர் பொருளைக் கவரமுயல்கிறபோது, தறித்தலும், முறித்தலும், காமவிச்சையில் துடித்தலும், கொலை கொல்லுகையில் ஈடுபடுதலும், பொருதலும்தான் நடக்கும். இந்தப் பொருட்களையெல்லாம், **காதல்** என்னும் ஒரு சொல்லில் வள்ளுவர் வைத்திருக்கிறார்.

அவ என்றால் அறிவு. செய்தல் என்றும் அர்த்தம். அவர் என்றால் அறிவுடையவர், செய்கிறவர் என்று வருவதால், களவின் கண் கன்றிய காதலால், எல்லா இழி செயல்களையும் செய்கிறவர் ஆகிறார்.

ஆகவே தான் எல்லை கடக்காது வாழ்கிற வாழ்க்கை இனிய வாழ்க்கை. மற்றதெல்லாம் தொல்லைகள் நிறைந்த துயர வாழ்க்கை என ஆறாவது குறளில் அறிவுறுத்துகிறார்.

287. களவென்னும் கார்அறிவு ஆண்மை அளவென்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்.

பொருள் விளக்கம்:

களவென்னும் = பிறர் பொருளை அபகரிப்பதில்
கார் அறிவு = மயங்கிப் போனவரின் அறிவும்
ஆண்மை = ஆளுந்தன்மையுள்ள உடலும்
அளவென்னும் = ஞானம் நிறைந்து
ஆற்றல் புரிந்தார் கண் = வலிமையும் பெருமையும் விரும்பிய போதிலும் ; இல் = அழிந்து போகும்.

சொல் விளக்கம்:

காரறிவு = மயக்கம் பொருந்திய அறிவு; **ஆண்மை** = மெய்
அளவு = ஞானம்; **ஆற்றல்** = வலிமை, பெருமை
புரிதல் = விரும்புதல்; **இல்** = சாவு, இல்லை.

முற்கால உரை:

களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை யுடையராதல், உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார் கண் இல்லை.

தற்கால உரை:

வரம்பான வாழ்வு நடத்துதல் என்னும் திறத்தைக் கைகொண்டவர்களிடத்துக், களவு என்று சொல்லப்படும் தீய அறியாமை இல்லை.

புதிய உரை:

பிறர் பொருளைக் கவர்வதில் மயங்கிப்போன அறிவும் தேகமும் உடையவரது, ஞானம் நிறைந்த வலிமையும் பெருமையும் விரும்பியதன் காரணமாகவே அழிந்து போகும்.

விளக்கம்:

கார் என்றால் அறிவு மயக்கம், ஆறாச்சினம், அஞ்ஞானம். கார் அறிவு என்கிறபோது, ஏதோ ஒரு தீய ஈர்ப்புச் சக்தியால் மயங்கிப்போன அறிவு, மங்கிப்போன திறமை என்று கொள்ளலாம்.

தீயதை நினைக்கும் பொழுது, தேகத்தின் இயற்கையான செயல் முறைகள் தடுமாறிப் போகின்றன. தறிகெட்டு மாறுகின்றன என்று முந்தைய குறளில் கூறிய வள்ளுவர், காரறிவு ஏற்பட்டு விடுகிறபோது, ஆற்றலும் வலிமையும் உள்ள

தேகமானது, மந்திர சக்தியில் மயங்குவதுபோல, களவுக்குக் கட்டுப்பட்டு விடுகிறது. கட்டுப்பட்டு விட்ட தேகத்தில், கட்டுக்கடங்காத குழப்பங்கள். ஆங்கே கிளர்ச்சி பெற்று, உடல் வளர்ச்சியை, உள்ளத்தின் மலர்ச்சியை, ஆன்மாவின் எழுச்சியை, அழித்து விடுகிறது.

அவர் எவ்வளவு ஆற்றல் பெற்றவராக விளங்கினாலும், வானம் போல் ஞானம் நிறைந்தவராக முழங்கினாலும், எல்லாம் அழிந்து போகும் என்பதைத் தான் **இல்** என்றார்.

ஆற்றல் புரிந்தார் என்றால் வெற்றியை விரும்பினார். பெருமையை வேண்டினார், வலிமையை வாஞ்சித்தார் என்று நாம் பொருள் கொள்கிறோம். அத்தனைத் தரமும் திறமும் இருந்தும், அவரால் அருமையாகப் பெருமையாக வாழ முடியாது. அவர் அனைத்திலும் தோற்று, அழிந்து விடுவார் என்கிற கருத்தை வலியுறுத்தவே **இல்** என்று கூறினார்.

நல்ல உடலில் நல்ல மனம். நல்ல மனமே நல்ல வாழ்வைத் தரும் என்று ஏழாம் குறளில், களவினது கசக்கும் உண்மையையும், அது கைக்கொண்டவரை அழித்தே தீரும் என்று வாழ்க்கை நிலைமையையும் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் களவறிந்தார் நெஞ்சில் கரவு

பொருள் விளக்கம்:

அளவறிந்தார் = ஞானத்தை அறிந்து கொண்டவரது
நெஞ்சத்து = அன்பு மனத்திற்குள்ளே
அறம்போல = நல்வினையாகிய ஒழுக்கம்
களவறிந்தார் = பிறர் பொருளைக் கவர்வதில் தேர்ந்தவரது
நெஞ்சில் = மனதிற்குள்ளே
கரவி = முதலை போன்ற வஞ்சகம் நிறைந்த கடும்பற்றுள்ளம்
நிற்கும் = நீங்காது நிலை பெற்று நிற்கும்.

சொல் விளக்கம் :

அளவு = ஞானம்; **நெஞ்சம்** = அன்பு, மனம்; **அறம்** = ஒழுக்கம்
நல்வினை = தவம்; **கரவு** = முதலை, வஞ்சகம், அற்ப ஆசை, கடும்பற்றுள்ளம்

முற்கால உரை:

அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து. அறம் நிலை பெற்றாற்போல நிலைபெறும். களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனையே நிலைபெறும்.

தற்கால உரை:

தத்தம் வரம்பறிந்து வாழவேண்டும் என்னும் உறுதியுடையவர் நெஞ்சில், அறம் நிலைபெற நிற்பதுபோல், களவுத் தொழிலைக் கருதியவர் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.

புதிய உரை:

ஞானத்தை அறிந்தவரது நெஞ்சில் நல்வினையாகிய ஒழுக்கம் நின்று காப்பதுபோல, களவினில் தேர்ந்தவரது நெஞ்சில், வஞ்சகம் (மிக்க முதலைபோல்) வாழ்ந்து, வாழ்வளிக்கும்.

விளக்கம்:

ஞானம் அறிந்தவர், அறிய வல்லவர் நெஞ்சத்தில் எப்போதும் ஒழுக்கம் மேலோங்கிநிற்கும். நல்வினைகள் தவமியற்றுவது போல வாழும். ஆகவே, அவர்கள் நெஞ்சத்தில் அமைதியும், ஆனந்தமும், நிம்மதியும் நீடித்து நிற்கும். அதனால்தான் அந்த அற்புதநிலையை அறம் போல நிற்கும் என்றார்.

ஆனால், அளவு இல்லாத களவு மனம் கொண்டவரைத், தேர்ந்தார் என்பதில் தவறில்லை. தேவையில்லாத கோரைகள், புல் பூண்டுகள், களைகள் விதைபோடாமலேயே விரைவாக வளர்வது போலத் தீய நினைவுகள் தோன்றிவிட்டால், அது அக்கினிக் குஞ்சாக ஆரம்ப நிலையில் இருந்து, ஆவேசம் கொண்ட அக்கினிப் புயலாக மாறுவது போல, வேகம் பெற்றுவிடும்.

களவு கொண்டவர் நெஞ்சமானது, சுழல் நீர் பரப்புபோல. அந்த நெடுநீர் நெஞ்சத்தில், வாழ்வது முதலை போன்ற முரண்டு பிடித்த எண்ணங்கள். அந்தக் காரணத்தினால்தான். **முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.** என்னும் பழமொழியையும் நம் முன்னோர்கள் படைத்துச் சென்றிருக்கின்றனர்.

நீருக்குள் இருக்கும்போது, யானையையும் பிடித்திழுக்கும் வல்லமை உள்ளது முதலை. அதுபோல, வஞ்சக நெஞ்சுக்குள்ளே வாழ்கிற களவென்னும் முதலை, அழியாது வாழும். அதாவது 100 ஆண்டு காலம் வாழ்கிற முதலையைப்போல, களவு என்னும் முதலையும், கொண்டவரது நெஞ்சுக்குள்ளே, அவர் வாழ்கிற

வரை, வீழ்கிறவரை வாழும். அதனால் தான் **கரவு** என்னும் ஒரு அருமையான சொல்லை இங்கே தந்திருக்கிறார்.

முதலை கொண்டதை விடாதது போலவே, முரடனும் தான் கொண்டதை விடாமல், கண்டதிலும் காமமுற்று, காதலுற்று, கடைசியில் தன் அழிவைத்தானே தேடிக் கொள்கிறார். நெருப்பின் இருக்கையாக உடல் இருந்தால், அதற்கேது சக்தி? தீய நெருப்பின் இருக்கையாக நெஞ்சம் இருந்தால் ஏது தூய சக்தி?

எல்லாம் அந்தக் கரவிலே மறைந்து போகும் என்று எட்டாவது குறளில், களவு நெஞ்சத்தின் கடுமையைக் கூறி, வெளிவந்து விட வேண்டுமென்ற தன் வேட்கையை விவரித்திருக்கிறார்.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல மற்றைய தேற்றா தவர்

பொருள் விளக்கம்:

களவல்ல = பிறர் பொருளைக் கவர்வது தவிர
மற்றைய = வேறெதுவும் நினைவில் கொள்ளாத
தேற்றா தவர் = மரம் போன்ற மூடர்கள்
அளவல்ல = ஞான மற்ற செயல்களை
செய்து ஆங்கே = செய்கின்ற அந்த இடத்திலேயே
வீவர் = கேடுற்று அழிவர்.

சொல் விளக்கம்:

வீவர் = கேடு, சாவு; **தவர்** = தமர், மூடர்; **தேற்றா** = ஒருமரம்

முற்கால உரை:

களவல்லாத பிறவற்றை அறியாதவர், அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்த பொழுதே கெடுவர்.

தற்கால உரை:

களவு எனும் ஒன்றையன்றி, மற்ற நற் செயல் எதனையும் அறியாதவர், வரம்பில்லாத செயலைச் செய்து அப்போதே கெடுவர்.

புதிய உரை:

பிறர் பொருளைக் கவர்வது தவிர, வேறெந்த நினைவும் இல்லாத, மரம் போன்ற மூடர், அறிவில்லாமல் தீயன செய்கிற அந்த இடத்திலேயே கேடுற்று அழிவர்.

விளக்கம்:

தீச்செயல்கள் நெருப்புபோல. தன்னையும் எரித்துக் கொண்டு, தன்னைச் சார்ந்தவர்களையும் எரிக்கும் ஆற்றல் கொண்டது.

அதுபோலவே, தீய எண்ணம் தோன்றுகிறபோதே, அவன் தீயவனாகின்றான். அவனது எண்ணம் தீய கருக்கொள்கிறது. அது தீமையாக உருக்கொள்கிறது. செயல்பாட்டுக்கு இட்டுச்செல்கிறது. இந்தத் தீயானது தொடருமேயன்றி தணியாது.

தீ தணியாவிட்டால் என்ன ஆகும்? இந்தக் கேள்விக்கு விடையாக 9வது குறள் உருவாகி வந்திருக்கிறது.

களவைத் தவிர வேறு சிந்தனை இல்லாதவன் **களவல்ல** என்னும் சொல்லில், சொல்லிக் காட்டுகிறார். ஏன் வேறு சிந்தனை இல்லையென்றால், அந்தத் தீய எண்ணம் எனும் தீ, நல்லனவற்றை யெல்லாம் எரித்து வெறுமையாக்கிவிட்டது. ஆக, அவன் நெஞ்சம் முழுவதும், தீய நினைவே தேங்கிக் கிடக்கிறது.

அப்பொழுது, ஆறறிவு மனிதனாக இல்லை. உணர்வுள்ள ஒரே ஒரு அறிவினனாகத்தான் இருக்கிறான். அவனது உணர்வு முழுவதும், ஒன்றே ஒன்றில், கடும் பற்றுள்ளத்தோடு, அதாவது கரவோடு கரைந்து விட்டிருக்கிறது.

ஆகவே, மூடன் என்று பெயர் பெறுகிறான். **தவர்** என்றால் **தமர்**. தமர் என்றால் **மூடர்**.

மூடன் செய்யும் எந்தக் காரியமும், முட்டாள் தனமாக அமையும். விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். அந்த விளைவு, இறுதியில் அவன் முடிவாகத்தான் அமையும்.

அதனால் தான் **வீவர்** என்றார். கேடு அடைவர். அல்லது சாவுக்கு ஆளாவர். இந்த இரண்டும் தான் ஞானமில்லாமல், அறிவற்று செய்கிற அழிவு வேலைக்கு, இழிவுப் பரிசாகக் கிடைக்கிறது.

ஆகவே, களவு என்பது எண்ணும்போதும் துன்பம் தரும், செய்யும் போதும் சேர்த்து அழித்து விடும் என்று இக்குறளில், களவின் கடுமையான முகத்தைக் காட்டி நம்மை எச்சரிக்கின்றார்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத் தள்ளாது புத்தேள் உலகு.

பொருள் விளக்கம்:

கள்வார்க்கு = களவு செய்கின்றவர்க்கு
உயிர்நிலை தள்ளும் = உடம்பும் (குன்றி) கைவிட்டு விடும்.
கள்ளார்க்கு = களவு செய்யாதவர்க்கு
புத்தேள் உலகு = விருந்தும், சுற்றமும், உயர்ந்தோரும்
தள்ளாது = தள்ளாமல் வாழ்த்தும்.

சொல் விளக்கம்:

உயிர் நிலை = உடம்பு; **தள்ளும்** = குன்றும், தடுமாறும், கைவிடும், மனப்பாற் சோர்தல்
புத்தேள் = புதுமை, விருந்து, சுற்றம்.

முற்கால உரை:

களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும். அது செய்யாதார்க்கு நெடுஞ்சேனமாகிய புத்தேள் உலகும் தவறாது.

தற்கால உரை:

களவு செய்வார்க்கு, உயிரோடு வாழும் நிலையும் விரைவில் நீங்கிப்போகும். களவைக் கருதாதவர்க்குப் புகழுலகு உறுதியாக வாய்க்கும்.

புதிய உரை:

களவு செய்கின்றவரது உடல் குன்றி, விரைவில் அவரைக் கைவிட்டுவிடும். களவு செய்யாதவர்க்கோ, அவரது சுற்றமும், சுற்றிவாழும் உயர்ந்தோரும் வாழ்த்துகிற வாழ்வைத் தரும்.

விளக்கம்:

களவு செய்கின்றவர் நெஞ்சம் முழுவதும் களவு நினை. அதனால் அவரது இயல்பான சுவாசம் தடைபட்டு, இதய ஓட்டம் தடைபட்டு, உள்நோய்ப்புக்கள் நெருக்குற்று, கெடுக்கு கெடி, வேதனைகளை அனுபவிப்பதால், நோய்க்கு நோய் உடலானது, சக்தியிழந்து, செத்தழியும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

இதனைத்தான் வள்ளுவர் **தள்ளும் உயிர்நிலை** என்றார். **தள்ளுதல்** என்றால் குன்றிப்போதல், கூனிக்குறுகிப் போதல், தடுமாறுதல், தத்தளித்தல், மனம் சோர்ந்து போதல்.

கைவிட்டுவிடுதல். அதாவது ஒழுக்கம் விட்டு விலகவே, உடல் நிலை மோசமாகி, நாசமாகி அழிகிறது.

இதைத்தான் தெய்வம் நின்று கொல்லும் என்றனர். உடம்பு எனும் ஆலயத்தின் உள்ளே குடியிருக்கும் ஆன்மாவான உயிர் எனும் தெய்வம், (தெய் = தண்டித்தல்), தவறு செய்கின்றவரின் உடலை, கொஞ்சங் கொஞ்சமாகத் தண்டிப்பதையே நின்று கொல்லும் என்றனர்.

நின்று கொல்வதைத்தான், **தள்ளும்** என்றார். குன்றும் என்றார். ஆனால், கள்ளாதார் மனமானது கபடு இன்றி இருத்தலால், சுவாசம் அம்சமாக அமைந்து விடுவதால், அவரின் உடல் பலமாக மாறுகிறது. அந்தப் பலமான உடலில் பலமான மனம், பக்குவமான குணம் அமைகிறது.

அந்த அற்புத மனிதரை, அவர் வாழும் அதிசய வாழ்வைக் காணுகிற விருந்தினராகிய புதிய மனிதர்கள், சுற்றியே வாழ்ந்திருக்கும் சுற்றத்தார்கள். அறிவில் சிறந்த பெரியோர்கள், உயர்ந்தோர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

வாழ்த்தி மகிழ்கின்றனர். வரவேற்றும் புகழ்கின்றனர். எல்லோரின் வாழ்த்தும், போற்றுதலும், அவரை ஒரு புதுமை நிறைந்த வாழ்வை பூரிப்புடன் வாழ உதவுகிறது. உற்சாகம் ஊட்டுகிறது என்று கள்ளாமை அதிகாரத்தை வள்ளுவர் முடித்து வைக்கிறார்.

30. வாய்மை

மனதிலே கரவும், செயலிலே களவும் ஒருவருக்கு உகந்ததல்ல. உயர்வும் அல்ல. களவுக்குள் கால் பதித்தவர்கள் வாழ்க்கை காலமெல்லாம் நலிவிலும் அழிவிலும் தான் கழியும் என்ற உண்மைகளை கள்ளாமை அதிகாரத்தில் கூறிய வள்ளுவர், கரவும் களவும் வாராதிருக்க, வாயும் மெய்யும் செம்மையாக இருக்க வேண்டும் என்று, வாய்மை அதிகாரத்தை அடுத்ததாக வைத்திருக்கிறார்.

வாய்மை என்றால் **உண்மை** என்று பொருள். **சொல்** என்று ஒரு பொருள். **வலிமை** என்றும் ஒரு பொருள்.

உண்மையை சொல்வதற்கு வலிமை வேண்டும் என்பதைத் தான் வாய்மை என்ற வார்த்தை வற்புறுத்துகிறது போலும்.

கற்கண்டை எந்தப் பக்கம் கடித்தாலும் இனிப்பது போல, வாய்மை என்ற சொல்லை எப்படிப் பிரித்தாலும் **உண்மை** என்ற அர்த்தத்தையே தருகிறது.

வாய்+மெய் என்று இந்த சொல்லைப் பிரித்துப் பார்க்கிறோம். வாய் என்றால் வாக்கு, மெய், சொல் என்றும்; மெய் என்றால் உண்மை, திண்மை, நீதி, வாய் என்றும் பொருள் தருகின்றன. ஆகவே, உண்மை தான் உயிர் மூச்சான பொருளாக, வாய்மை தருகிறது.

உள்+மெய் தான் உண்மை என உருவானது என்ற இந்த உள்ளும் மெய்யும், மீண்டும் வாய்மையைத் தான் சுட்டிக் காட்டி நிற்கின்றது.

அகத்தில் எழுகின்ற மன வெழுச்சியின் அந்தரங்கம். உண்மை ஆகிறது. அந்த உண்மையானது இயல்பானது. உடலிலேயே எதார்த்தமாக விளங்குவது. அறிவாகத் திகழ்வது. மனதில் சான்றாக வெளிப்படுவது.

ஆகவே, இருளற்ற சிந்தையிலிருந்து வெளி வருகிற இனிய குரலே வாய்மையாகும். துறவியருக்கு மட்டும்தான் வாய்மை வேண்டுமா என்றால், மனித உடல் கொண்ட மாந்தர் அனைவர்க்கும் வேண்டிய ஒன்று தான் வாய்மை.

வாய்மை மிகுந்தால் தூய்மை வரும். வாய்மை குறைந்தால் கீழ்மை வரும். கீழ்மையான வாழும் முறைக்கு **கீழ்க்கை** என்று பெயர். கீழ்க்கையை வாழ்க்கையாகக் கொண்ட மனிதன், **கினிதன்** என்று அழைக்கப்படுகின்றான். கினிதன் என்றால் பீடைபிடித்தவன், நோய் பிடித்தவன்.

ஆகவே, வாய்மை எனும் நிலை, கள்ளாமைக்குப் பிறகு வருகிறது. பள்ளத்தை நோக்கியே வெள்ளம் பாயும். கள்ளத்தை நோக்கியே உள்ளம் தோயும். கள்ளத்திலிருந்து கரையேறி விட்டால், காட்சியும் இனிது, புலன்மாட்சியும் இனிது. பெறுகின்ற எண்ணமும் இனிது. பேசுகின்ற மொழியும் இனிது. அந்த இனிய நிலையின் எழுச்சியே வாய்மை என்று வழங்கப்படுகிறது. நல்லோர்களால் வாழ்வேற்கப்படுகிறது.

291. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்

பொருள் விளக்கம்:

வாய்மை என = உண்மையான பெய் என்பது
படுவது எனின் = எப்பொழுது மேன்மை படைக்கிறது என்றால்,
யாது தீமை = அரக்கத்தனமாக தீமை செய்யாமலும்,
யாதொன்றும் = அரக்கத்தனமாக சிறிதேனும்
இலாதசொலல் = துன்பம் தராதனவற்றை சொல்வதாகும்.

சொல் வவிளக்கம்:

வாய்மை = உண்மையான மெய்; **படுவது** = மேன்மை அடைவது;
யாது = அரக்கன், அரக்கத்தனம்.

முற்கால உரை:

மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

தற்கால உரை:

உண்மை என்று எல்லோராலும் சிறப்பித்துச் சொல்லப்படுவது எது என்றால், பிறருக்குச் சிறிது கூடத் தீங்கு உண்டாக்காத சொற்களைச் சொல்லுதல் என்பதே ஆகும்.

புதிய உரை:

உண்மையான மெய் எப்பொழுது மேன்மை பெறுகிறது என்றால், அரக்கத்தனமான சொற்களைச் சொல்லி, அடுத்தவர்மேல் அரக்கத்தனமான செயல்களைச்செய்யாமல் இருக்கும்பொழுதுதான்.

விளக்கம்:

பிறரை மதிப்பவன் மனிதன். பிறருடைய அருமை, பெருமைகளை மதித்தும், துதித்தும் ஏற்றிப் போற்றுவது மனிதம். தன்னை நேசிப்பது மனித குணம். மற்றவரையும் மதித்து உறவாடுவது மனிதத்தின் மாண்பு மனம்.

இப்படிப்பட்ட பாரம்பரியமிக்க பண்பாட்டைப் படைப்பது வாய்மை. இணைப்பது கேண்மை. அதற்காகவே முனைப்புதான் மேன்மை.

அப்படி இல்லாமல், தனக்குப் பிடித்தமான கருத்தை, அடுத்தவர்மேல் திணிப்பதும், ஏற்றுக் கொள்ளுமாறு துளைப்பதும், அவர்களை வற்புறுத்திப் பணிய வைப்பதும், வலியுறுத்தி

செயல்படுத்த வைப்பதையும் கொள்கையாகக் கொண்டவன் மனிதனல்ல, அரக்கனாகிறான். அவன் குணமானது அடுக்கவை வைப்பதும், சிதைப்பதுந்தான்.

ஆகவேதான் வள்ளுவர் '**யாது**' என்ற சொல்லை இரண்டு முறை சொல்லி, அரக்கத்தனமில்லாத அன்பான சொல்லும், செயலுந்தான் உண்மையான மெய்யென்று கூறி, வாய்மையின் பெருமையைத் தொடங்கி வைக்கிறார்.

292. பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்

பொருள் விளக்கம்:

பொய்மை = பொய்வேடமிட்டு
வாய்மை = வலிமையாக உண்மை பேசினாலும்
இடத்த = அதைப் பிரித்துப் பார்க்கும் பொழுது.
புரை தீர்ந்த = சாதனையுள்ள அந்த தைரியம்
நன்மை பயக்கும் = மேம்பாட்டைப் பிறப்பிக்கலாம்
எனில் = ஆனால்? (வள்ளுவர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை)

சொல் விளக்கம்:

இடத்தல் = பிரித்தல், விரிந்து நிற்றல்
பொய்மை = பொய்வேடம்; **புரை** = எதிர்காலம், பெருமை,
சாதனை: **தீர்ந்த** = துறந்த, தைரியமான
நன்மை = மேம்பாடு, புதுமை; **பயக்கும்** = பிறப்பிக்கும்
எனின் = ஆனால்; **வாய்மை** = வலிமை

முற்கால உரை:

பிறருக்குக் குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்மைச் சொற்களும், மெய்மைச் சொற்களின் பாலவாம்.

தற்கால உரை:

குற்றம் நீங்கிய நன்மையைப் பிறருக்கு விளைவிக்கு மேயானால், பொய்யான சொற்களும் கூட, உண்மைச் சொற்களுக்கு உரிய இடத்தில் வைத்து எண்ணப்படும்.

புதிய உரை:

பொய்வேடமிட்டு, வலிமையாகப் பொய்பேசினாலும், அதைப்பிரித்துப் பார்க்கும் பொழுது, எவ்வளவு மேம்பாட்டை பிறர்க்கு அது கொடுத்தாலும் கொடுக்கலாம்! ஆனால்? (அந்தப் பயனை வள்ளுவர் ஏற்றுக்கொள்ள வில்லை)

விளக்கம்:

உண்மை என்பது உள்ளத்திற்கு அழகு. உன்னதமான கம்பீரம். உலகத்தார்க்கு உற்றுழி உதவும், உயர்ந்த சொல் முறையும், நடைமுறையும் ஆகும். அப்படிப்பட்ட உண்மையைப் பேசுதல் பண்புடையோரின் பிறவிக் குணம். அதில் பொய், பிறர்க்கு உதவுகிறேன் என்பது போலக் களவு பேசுவதும், கரவு செய்வதும், அதற்காகப் பொய்வேடமிடுவதும் அதையே வலிமையாக வற்புறுத்தித் தினிப்பது எல்லாம் வாய்மைக்குப் புறம்பான வாழ்க்கை முறை ஆகும்.

அந்த வலிமை மிக்க பொய்வேடம் ஆயிரம் புகழைத்தரலாம். பெருமையைத் தரலாம். ஆனால் சான்றோர்க்கு ஏற்பல்ல என்று, வள்ளுவர் நினைக்கிறார். அதனாலேதான் 'ஆனால்' என்ற கேள்விக் குறியோடு முடிக்கிறார்.

வாழ்வுக்கு வழிமேடை வாய்மை. அதை எந்த நிலையிலும் இழிவு படுத்தப்படுவது, ஏற்க முடியாது என்பதை, இரண்டாவது குறளில் வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

293. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள் விளக்கம்:

தன்நெஞ்சு = 'தன்' ஆத்மாவானது
அறிவு = உணரும்போது
பொய்யற்க = பொய்யில்லாமல் காக்கவும்
பொய்த்தபின் = அப்படியில்லாமல் தவறிவிட்டால்
தன் = ஆத்மாவின்
நெஞ்சு = துணிவு
தன்னைச்சுடும் = ஆத்மாவின் துணிவே சுட்டெரித்துவிடும்.

சொல் விளக்கம்:

தன் = ஆத்மா, **நெஞ்சு** = ஆத்மா; **அற்க** = தங்குதல், நிலை பெறுதல்
பொய்த்தல் = தவறிய; **நெஞ்சை** = ஆத்மாவை

முற்கால உரை:

ஒருவன் தன் நெஞ்சு அறிவது ஒன்றனை, பிறர் அறிந்திலன் என்று பொய்யாது ஒழிக. பொய்த்தாராயின் அதனை அறிந்த அவன் நெஞ்சே துன்பத்தை எய்துவிக்கும்.

தற்கால உரை:

ஒருவன் மனதாறப் பொய் சொல்லக் கூடாது, மீறிச் சொன்னால், அதனைக் குறித்து அவன் நெஞ்சமே அவனைப் பெரிதும் வருத்தும்.

புதிய உரை:

ஒருவன் தன் ஆத்மா அறிவதுபோல, பொய்யில் நிலை பெறக்கூடாது. அவன் வாய்மையில் தவறிவிட்டால், அவனது ஆத்மாவே, அவனை ஆத்மவேதனைக்கு உள்ளாக்கி அழித்துவிடும்.

விளக்கம்:

சோற்றுக்காக சுழல்கின்ற மக்கள்தான் இருக்கிறார்கள். உடலாகிய ஆக்கைக்குத் தீனிபோட்டுப் பிறகு காக்கைக்கு இரையாகிற மக்களாகத்தான் இருக்கிறார்கள் என்று பெரியோர்கள் எண்ணி வேதனைப் படுவது உண்டு. அந்தச் சோற்றுக்காகவும், வாழ்க்கை வசதிக்கான பேற்றுக்காகவும், வாய்மையும் தவறிப் பொய்க் குழியில் போய் விழுந்து விடுகிறார்கள்.

தனக்காகப் பொய் பேசி, பிறருக்காக உண்மை என்று காட்டப் பொய் வேடம் போடுகிறார்கள். கபட நாடகமாடிக் கட்டுரைத்து, கேட்பவர்களை நம்பச் செய்யலாம். கெட்டிக்காரத் தனமாகவும் தப்பிக்கலாம். தண்டனை இல்லாமலும் தாண்டி வந்து விடலாம். ஆனால், அவன் உள்ளே இருக்கின்ற ஆத்மா, அவனது பொய்மையில் வெம்பி, வெதும்பி அவனை வேதனைக்கு உள்ளே ஆழ்த்தி விடும், வீழ்த்திவிடும்.

ஆகவே புறத் தண்டனையை விட ஆன்மா அளிக்கும் அகத் தண்டனை, ஆண்டவன் அளிக்கும் தண்டனையைவிட, கடுமையானது என்று தமது மூன்றாவது குறளில் முத்தாய்ப்பாகக் கூறுகிறார் வள்ளுவர்.

294. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்

பொருள் விளக்கம்:

உள்ளத்தால் = ஆத்மாவின் ஊக்கத்தால்
பொய்யாது = மெய்மை தவறாது
ஒழுகின் = முறைப்படி நடப்பவன்
உலகத்தார் = உயர்ந்த மக்கள்
உள்ளத்துள் எல்லாம் = மனம் முழுவதும் மனசாட்சியை உண்டு பண்ணியவாறு
உளன் = நீக்கமற நிறைந்து இருக்கிறான்.

சொல் விளக்கம்:

உள்ளத்தால் = ஆத்மாவின், ஊக்கம்; **பொய்யாது** = தவறாது

ஒழுகின் = முறைப்படி நடத்தல்; **உளன்** = நிறைந்திருத்தல்

மூற்கால உரை:

ஒருவன் தன் உள்ளத்திற்கேற்ப, பொய் கூறாது ஒழுகுவானாயின், அவன் உயர்ந்தோர் உள்ளத்துள் எல்லாம் உளனாம்.

தற்கால உரை:

ஒருவன் தன் உள்ளம் அறிய, பொய்பேசாமல் நடப்பானேயானால், அப்படிப் பட்டவன், உலகத்தார் எல்லாருடைய உள்ளங்களிலும் இடம் பெற்று இருப்பான்.

புதிய உரை:

ஆத்மாவின் ஊக்கத்தால், மெய்மை தவறாது, முறைப்படி நடப்பவன், உயர்ந்த மக்களின் உள்ளங்களில் எல்லாம், நீக்கமற நிறைந்து வாழ்கிறான்.

விளக்கம்:

பொதுமக்களின் வாய்ப் பேச்சுக்கும், வாய் வீச்சுக்கும், ஆளாவதும், ஆட்கொள்வதும் மிக எளிது. ஆனால் அவர்கள் வாயாறப் புகழும் வகையில் வாழ்வதும், அவர்கள் மனதிலே புகுவதும், ஆசைமிகுதியால் புகழ்வதும் போன்றவற்றை பெறுவது அவ்வளவு எளிது அல்ல.

அப்படிப்பட்ட புகழ்பெற ஒருவன், தவறாது நடக்க வேண்டும் என்பதை, ஒழுகுதல் என்ற உயர்ந்த சொல்லை இங்கே பெய்து இருக்கிறார். நீர், நிற்காமல் தொடர்ந்து கொண்டே செல்வதைத்தான் ஒழுகுதல் என்பார்கள். அதுபோலவே வாய்மையிலும், மெய்மையிலும், வழிமுறைமாறாது, நேர்மைப்பட ஒழுகிக் கொண்டு, இருக்கும் வாழ்க்கைதான், புற வாழ்க்கையில் போற்றப்படும். அக வாழ்க்கையில் ஆனந்த தீபமாக ஏற்றப்படும் அப்படிப்பட்ட வாய்மையாளன் அகிலத்தார் மனங்களிலே எப்படி வாழ்கிறான் என்றால், அவன் மக்கள் மனதில் ஏற்படுத்திய மகிமையால் தான் என்பதைத் நான்காவது குறளிலே நளினமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரின் தலை

பொருள் விளக்கம்:

மனத்தொடு = ஆத்மா உருவாக்குகிற

வாய்மை = உண்மை பேசும் வலிமையை

மொழியின் = பேசுகிற ஒருவன்
தவத்தொடு = காட்டிலே வாழ்ந்து
தானம் செய்வாரின் = வேள்வி செய்பவர்களுக்குப் மேலான
தலை = தலைவனாகப் பெருமை மிக்கவனாகத் திகழ்கிறான்.

சொல் விளக்கம்:

தொடு = உருவாக்குகிற; **வாய்மை** = வலிமை; **தவம்** = காடு
தானம் = வேள்வி; **தலை** = தலைவன், மிக்கான்

முற்கால உரை:

ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாகின், அவன் தவமும், தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்பு உடையவன்.

தற்கால உரை:

ஒருவன் மனமாற உண்மையைச் சொல்வானாயின், அவன் தானத்தையும், தவத்தையும், ஒருங்கே செய்வாரைக் காட்டிலும் சிறந்தவனாவான்.

புதிய உரை:

ஆத்மா உருவாக்குகிற, உண்மை பேசும் வலிமையை ஒருவன் பெற்றிருந்தால் அவன், காட்டிலே உருவாக்கி வேள்வியைச் செய்கின்றவர்களுக்கும், மேலாண்மை மிக்க தலைவனாக விளங்குகிறான்.

விளக்கம்:

காட்டிலே வாழ்ந்துகொண்டு, கட்டுப் பாட்டோடு இருப்பது எளிது. சத்தியத்தைக் கடைப்பிடிப்பதும் எளிது. மாசில்லாமல், மற்றவர்கள் மனம் கோணாமல் இருப்பதும் எளிது.

ஆனால் மக்கள் மத்தியிலே வாழ்ந்து கொண்டு இல்லறம் நடத்துகிற எல்லோருக்கும், சுற்றுப்புற சூழல் எல்லாம், பற்றுகிற படர்தியாகவே இருக்கும். அங்கே உண்மை பேசுவதும், வாய்மையைக் காப்பதும், நேர்மையில் நடப்பதும், நெஞ்சத்தின் விருப்பப்படி வாழ முயல்வதும் எல்லாம் மிகவும் கடினந்தான்.

இப்படிப்பட்ட எதிழலான சூழலை அணைத்து, வாய்மையைக் காத்துக் கொண்டு வாழ்கிறவன் செம்மாந்த நெஞ்சங் கொண்டவன். சிறந்தவன். அவனுக்கு ஈடு, இணை எவருமில்லை. கல்வி, கேள்வியிற் சிறந்த செகத்தாரும், காலத வேள்வியின் தவத்தாரும் அவனுக்கு இணையில்லை என்பதை ஓந்தாம் குறளில் அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

296. பொய்யாமை அன்ன புகழில்லை, எய்யாமை எல்லா அறமும் தரும்

பொருள் விளக்கம்:

பொய்யாமை = வாய்மை தவறாததற்கு
அன்ன = இணையான
புகழில்லை = அறிய செயல் எதுவுமில்லை
எய்யாமை = ஆனால், பொய்பற்றி அறியாமலே இருந்தால்
எல்லா அறமும் = சகலவிதமான ஒழுக்கங்களையும்
தரும் = தந்து வாழ்விக்கும்

சொல் விளக்கம்:

பொய்யாமை = வாய்மை தவறாமை; **அன்ன** = இணையான, ஒத்த
புகழ் = அரும் செயல்; **எய்யாமை** = அறியாமை; **அறம்** = ஒழுக்கம்

முற்கால உரை:

ஒருவனுக்கு இம்மைக்கு பொய்யாமையை ஒத்த புகழ் காரணமில்லை. மறுமைக்கு மெய் வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும்.

தற்கால உரை:

ஒருவனுக்குப் பொய் சொல்லாமையைப் போன்ற புகழ் வேறு ஒன்றும் இல்லை. அந்த நிலையே அவனுக்கு எல்லாவிதமான அறங்களையும் நீங்காமல் கொண்டு வந்து சேர்க்கும்.

புதிய உரை:

வாய்மை தவறாததற்கு இணையான அரிய செயல் எதுவுமில்லை. ஆனால், பொய் பற்றி அறியாமலே ஒருவன் இருந்தால், அவனை அது சகலவிதமான ஒழுக்கங்களையும் தந்து வாழ்விக்கும்.

விளக்கம்:

என்றுமே அழியாத, ஆனால் ஏற்பதற்கு அழகான ஒரு கருத்தை வள்ளுவர் ஆறாவது குறளில் மிக நுணுக்கமாகத் தந்துள்ளார். வாய்மை பேசுவது வலிமை. பொய் பேசாமல் இருப்பது பெருமை என்றெல்லாம் பேசிய வள்ளுவர், புகுத்தியிருக்கும் புதுக் கருத்துதான் பாரிலே எந்த அறிஞனும் சொல்லாத கருத்து.

தேர்ந்து கொண்டு உண்மை பேசுவதும், தெரிந்து கொண்டு பொய் பேசாமல் இருப்பதும் சாமர்த்தியந்தான். சக்தி படைத்த செயல்தான். ஆனால், பொய் பற்றியே அறியாதவனாக, தெரியாதவனாக, நெஞ்சுக்குள்ளே இடந்தராதவனாக, வாய்மைதான்

வாழ்வின் மூச்சு என்று நடப்பவனாக ஒருவன் இருக்கிறான் என்றால், ஆயிரமாயிரம் ஒழுக்கங்களும், கீர்த்திகளும் அவனைத் தேடிக் கொண்டுவரும். அவனை வான் புகழுக்கு வழி நடத்தும், வற்றாத செல்வங்களுடன் வாழ்விக்கும், ஆக, **பொய் தெரியாது வாழ்வது ஒரு பேராண்மை** என்று வள்ளுவர் ஒரு புரட்சிக் கருத்தை இந்தக் குறளிலே புகுத்தி இருக்கிறார்.

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று

பொருள் விளக்கம்:

பொய்யாமை = வாய்மை தவறாமல்
பொய்யாமை = புனைவேடம் போடாமல்
ஆற்றின் = வாழ்ந்து காட்டுகிறபோது
பிற அறம் = மற்றைய ஒழுக்க நெறிகளை
செய்யாமெய் = செய்யாத தேகமும்
செய்யாமை = செய்யாமல் தவிர்த்து வாழ்தலும்
நன்று = நல்வினையாகவே ஆகிவிடுகிறது.

சொல் விளக்கம்:

பொய்யாமை = வாய்மை தவறாமை
பொய்யாமை = புனை வேடம்; **செய்யா மெய்** = செய்யாத தேகம்
நன்று = நல்வினை

மூற்கால உரை:

ஒருவன் பொய்யாமையையே, பொய்யாமையையே செய்ய வல்லானாகின் அவன் பிற அறங்களைச் செய்யாமையே, செய்யாமையே நன்று.

தற்கால உரை:

ஒருவன் எப்பொழுதும் பொய்யாமையாகிய அறத்தைப் போற்றிக் கடைப்பிடித்து வருவானேயாகின், அவன் எப்பொழுதும், மற்ற அறங்களைச் செய்யாவிட்டாலுங் கூட அவன் நன்மையையே அடைவான்.

புதிய உரை:

வாய்மை தவறாமல், புனைவேடம் போடாமல் வாழ்ந்து காட்டுகிற ஒருவருக்கு, மற்ற ஒழுக்கங்களைச் செய்யாவிட்டாலும், தவிர்த்துவிட்டாலும் கூட அதுவும் அவனுக்கு நல்வினையாகவே ஆகிவிடுகிறது.

விளக்கம்:

உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம் செய்யாதீர். நன்மை புரியா விட்டாலும் தீமை புரியாதீர். உண்மை பேசாவிட்டாலும் பொய்மை பேசாதீர். அந்தப் பொய்மையையே அறியாதவராக இருக்கின்ற பேராண்மையின் பெருமையை நாம் பார்க்கும் போது, வள்ளுவர் இந்தக் குறளில் பொய்மை பேசாதீர். பொய்மையில் நடவாதீர் என்ற ஒரு உயர் நெறியை, உயிர் நெறியாகக் குறித்துக் காட்டுகிறார்.

பொய்மையை நினைக்காத ஒருவன் புன்செயல்களில் ஆட்பட மாட்டான். ஏனென்றால், புன்மைச் செயல்கள் அவனுக்குத் தெரியாது. வராது.

ஆகவே முறைப்படியான வாழ்க்கையை நெறிப்படி வாழ்கின்றபோது, அங்கே அழுக்கும், இழுக்கும் சேர வாய்ப்பில்லை. அதனால் அவனது பல்வினைகள் எல்லாம் நல்வினைகளாக மாறி, வாழ்வுக்கு ஆக்கத்தையும், வழி நெடுகச் சுகத்தையும் வாரிவழங்கிக் கொண்டே வருகிறது.

298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை வாய்மையாற் காணப் படும்

பொருள் விளக்கம்:

புறத்தூய்மை = வீரத்தின் மெய் நிலையானது
நீரான் = அவரவர் குணத்திற்கு ஏற்ப
அமையும் = உண்டாகும்
அகத்தூய்மை = உள்முகமாகிய ஆன்மாவின் மெய் நிலை
வாய்மையால் = அவர் பேசுகின்ற உண்மையால் வெளிப்பட
காணப்படும் = மனங்களிலே ஏற்றுக் கொள்ளப்படும்

சொல் விளக்கம்:

புறம் = வீரம், சரீரம்
தூய்மை = மெய்மை, நன்மை; **நீரான்** = குணத்தால்
காணப்படும் = மனதில் ஏற்றுக் கொள்ளப்படும்

முற்கால உரை:

ஒருவனுக்கு உடம்பு தூய்தாம் தன்மை நீராலே உண்டாம். அது போல மனம் தூய்தாம் தன்மை வாய்மையால் உண்டாகும்.

தற்கால உரை:

உடம்பு தூய்மையாக ஆதல் தண்ணீரால் ஏற்படும். மனம் தூய்மையாக ஆதல் ஒருவன் சொல்லும் உண்மையால் உண்டாகும்.

புதிய உரை:

ஒருவனது வீரத்தின் மெய் நிலையும், விளையும் நன்மையும் அவனது குணம் போலவே அமையும். அதுபோலவே ஒருவனது ஆக்மாவின், மெய் நிலையும், மேன்மை நிலையும், அவன் பேசும் மெய் மொழிகளால் அமையும்.

விளக்கம்:

புற உடம்பின் அழுக்கானது நீராலும், அக உடம்பின் இழுக்கானது வாய்மையாலும் தூய்மைபெறும் என்றே எல்லா உரை ஆசிரியர்களும் பொருள் கண்டிருக்கின்றனர்.

இங்கே வாய்மையையே பேசுகிற ஒருவனின் வாழ்க்கை விவேகம் நிறைந்தது மட்டுமல்ல; வீரம் மிகுந்ததும் கூட. அப்படிப் பட்ட ஒரு வீரனால் நன்மையும், சுகமும் ஏற்படுகிறது என்றால் அது அவனது குணம் போலவே தானே அமையும்.

ஆன்மாவுக்கு மேன்மை சேர்ப்பது மெய்மையும், பொய்யாமையும். இந்த அக வீரத்தினால் அடுத்தவர்க்கு அமைகிற நன்மை எல்லாம், அவர் பேசுகிற மொழியால்தானே அமையும்.

ஆகவே புற வாழ்வுக்கு என்று ஒரு வீரமும், அக வாழ்விற்கு என்று ஒரு வீரமும் உண்டு என்பதைத்தான் வள்ளுவர் இங்கே குறிப்பிடுகிறார். புற வீரம் செயலால் அமைகிறது. அகவீரம் சொல்லால் அமைகிறது. எனவே வாய்மைக்குரிய வீரத்தை இருவிழிகளாகவே சொல்லும், செயலும் இருப்பதை, இந்த எட்டாவது குறளில் திட்ட வட்டமாகத் தெளிவாக்குகிறார்.

299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு பொய்யா விளக்கே விளக்கு

பொருள் விளக்கம்:

எல்லா விளக்கும் = ஒருவர் வாழும் வாழ் நாட்கள் எல்லாம்
விளக்கல்ல = புதுமையும், பெருமையும் நிறைந்த நல்ல நாட்களாக அமைவதில்லை.
சான்றோர்க்கு = உண்மையை ஓம்பிச் சான்றாக வாழ்பவர்களுக்கு
பொய்யா விளக்கே = பொய்யில்லாத உண்மை பேசும் நாளே
விளக்கு = நல்ல நாளாகும்

சொல் விளக்கம்:

விளக்கு = நாள், ஒளி; **நாள்** = புதுமை, இளமை
சான்றோர் = சான்றாகத்திகழ்பவர்

முற்கால உரை:

புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்காகா. துறவான் அமைந்தார்க்கு விளக்காவது, மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

தற்கால உரை:

புறத்து இருள் போக்கும் எல்லாச் சுடர் விளக்குகளும் விளக்குகள் ஆகா. பெரியோர்களுக்கு அகத்திருளைப் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே சிறந்த விளக்காகும்.

புதிய உரை:

உண்மைக்குச் சான்றாக விளங்குகிற ஒருவர், அவர் வாழும் வாழ் நாட்கள் எல்லாம் சிறந்த நாட்களாக அமையாது. பொய்மை கலவாத மெய்யான சொற்களை பேசும் பொழுதுதான் அவர் வாழும் நாள், பெருமையும் புதுமையும் பெறுகிறது.

விளக்கம்:

விளக்கு என்றதும் ஞாயிறு, திங்கள் தீப்பந்தம், அகல் விளக்கு என்பனவற்றைத்தான் எல்லோரும் பொருள் கொண்டு இருக்கின்றனர். இவ்வளவு சின்ன விஷயத்தையா வள்ளுவர் பெரிதாக எடுத்துக் கொண்டு பாடியிருப்பார் என்று எண்ணுகிற போது, ஏதோ உட்பொருள் ஒன்றை ஒளித்து வைத்து இருக்கிறார் என்றே எண்ணத் தோன்றியது. அந்தத் தூண்டலின் விளைவாகத் ஆய்வைத் தொடர்ந்தபோது, விளக்கு என்ற சொல்லுக்கு 'நாள்' என்றொரு பொருள் கிடைத்தது. நாள் என்றால், புதுமை, இளமை, நன்னாள் - என்றெல்லாம் பல பொருள்கள் இருக்கின்றன.

வாய்மையைப் பின்பற்றுகிறவர்கள் ஒரு நாளைக்கு அல்ல. ஒவ்வொரு நாளும் வாய்மை பேச வேண்டும் என்று வள்ளுவர் விரும்புகிறார். அப்படி பேசுகின்ற நாட்கள் தான் மேன்மையான நாட்கள். வாய்மை தவறினால் அது வீணான நாட்கள். ஞாயிறும், திங்களும், தீப்பந்தமும், அகல் விளக்கும் புற இருளைப் போக்கிப் புதுமையை விளைவிப்பதுபோல, அக இருளையும் வாய்மையால் போக்குங்கள். உயர்ந்த உலகத்தை உருவாக்குங்கள் என்று வாய்மையாளர்களின் வாழ்நாட்களுக்கு வரலாறு படைக் கிறார் வள்ளுவர்.

300. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற

பொருள் விளக்கம்:

இல்லை = இம்மையாகிய இப்பிறப்பில்

யாம் கண்டவற்றுள் = நம்மால் காணப்பட்ட பொருள்கள்

எல்லாவற்றிலும்

எனைத் தொன்றும் = எவ்வளவுதான் உலகம் முடிவுவரை எந்தப்
பொருள் இருந்தாலும்
நல்ல பிற = நன்மை தருகின்ற பொருள்களில் (அவை எல்லாம்)
வாய்மை இன் = வாய்மை போன்ற இனியது எதுவும் இல்லை

சொல் விளக்கம்:

இல்லை = இம்மை, இப்பிறப்பு; **எனை** = எவ்வளவு;
தொன்றும் = ஊழ், உலக முடிவு
இன் = இனிய, நல்ல, நன்மை தருகிற

முற்கால உரை:

யாம் மெய் நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் இல்லை.

தற்கால உரை:

யாம் உண்மையாகக் கண்ட அறங்களுள் உண்மையைச் சொல்லுதலைக் காட்டிலும் சிறந்தனவாகக் கூறத்தக்க பிற அறங்கள் வேறு எவையும் இல்லை.

புதிய உரை:

உலகம் முடிவுவரை இருக்கும் வேறு எந்தப் பொருளைக் காட்டிலும், இப்பிறப்பில், யாம் உண்மையாகக் கண்டறிந்த பொருள்களில், வாய்மையைவிட நன்மைதரும் இனிய பொருள் வேறு எதுமே இல்லை.

விளக்கம்:

இயற்கை என்ற சொல் இயல் + கை என்று பிரிகிறது. இயல் என்றால் ஒழுக்கம். கை என்றால் ஒழுக்கம். ஒழுக்கத்தின் உறைவிடமாகத் தொடர்ந்து நடைபெறும் தொழில் இடமாக, உயிர்களுக்கு எல்லாம் உதவுகிற திருவிடமாக, எப்பொழுதும் இயங்கிக் கொண்டு இருக்கும் நடைத்தளமாக, யாவரையும் காத்துப் அடைக்கலமாக, தவறாது பேணும் தாய் நிலமாக இயற்கை விளங்குவதால்தான், அதற்கு ஈடு இணை எதுமில்லை என்றார்கள்.

அதனால்தான் வள்ளுவரும், ஒழுக்கத்திற்கு இயற்கையை உவமையாகக் காட்டினார். உலகெல்லாம் இருக்கும் ஒழுக்கத்தைக் காட்டிலும், மனிதருக்கு ஒழுக்கமே சிறந்தது என்பதை வாய்மை ஒழுக்கத்தைக் காட்டி இந்த அதிகாரத்தால் உயிர்களுக்கு எல்லாம் இருக்கின்ற உயிர் பராமரிப்பு, உயர்ந்த பாதுகாப்பு என்று புரிந்துகொள்ளுமாறு புரிய வைத்தார்.

31. வெகுளாமை

கொப்பளிக்கும் கோபத்திற்குக் கப்பம் கட்டுகிற ஒரு காரியத்தைச் செய்கிற கொடூரமான நடவடிக்கை வெகுளி என்பார்கள். இந்த வெகுளியானது வேண்டாதவரை விலக்கவும், அவர்மீது வெறுப்பைக் காட்டி வெருட்டவும், தன்னுடைய இயலாமையை வெளிப்படாமல் தடுக்கவும், இவ்வாறு தடைபோட்டுத் தடுத்துத் தன்னைக் காத்துக் கொள்கிற சுய நல வேலைதான் வெகுளியாகும்.

வெகுளி என்றால் வெருட்டுதல் என்று அர்த்தம். வெருட்டுதல் என்றால், மற்றவரை அச்சப்படுத்துதல், அச்சுறுத்துதல் என்று அர்த்தம்.

வெகுளியைக் கோபம் என்பார்கள். கோபம் என்றால் உடம்பு எரிச்சல் என்று ஒரு பொருள் உண்டு. வெகுளி என்றால் சினம் என்பார்கள். சினம் என்றால் தணியாக் கோபம் என்றும், பெருங்கோபம் என்றும், பிரமிப்புடன் சுட்டிக் காட்டுவார்கள்.

கோபமாகிய உடல் எரிச்சலும், சினமாகிய மன வெறுப்பும்தான் ஒருவருக்கு வெகுளித் தீயை உக்கிரமமாகப் பற்ற வைக்கிறது. அந்த ஆலவாய்த் தீயானது, ஆன்மத் தீயாகப் பற்றித் தீய்த்துவிடும். அதனால்தான் வள்ளுவர், கோபமும், சினமும் கொள்ளாத வெகுளாமெய்யுடன் வாழ வேண்டும். என்று விரும்புகிறார்.

உள்ளத்திற்கு அமைதி தருவது உண்மை. உள்ளத்தைக் காயப்படுத்துவது பொய்மை.

பொய் பேசுபவருக்குக் குழப்பம் அதிகரிக்கும். வார்த்தைகள் தடுமாறும், நீதிக்குப் புறம்பாக நெஞ்சம் கொந்தளிக்கும். நெருப்புப் பொறியாக நினைவுகள் கொந்தளிக்கும்.

வெகுளி எனும் தீ, தன்னையே எரித்துக் கொண்டு, தான் இருக்கும் இடத்தையும் எரித்து அழித்து விடும். ஆகவே, வாய்மையானது, வெகுளாமையை வளர்த்து, வற்றாத இன்பத்தில் நீராட்டுவதால், வாய்மையின் பின் வெகுளாமையை வள்ளுவர் வைத்திருக்கிறார்.

301. செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்
அல்லிடத்துக் காக்கின்என் காவாக்கால்என்

பொருள் விளக்கம்:

செல்லிடத்து = வள மெய்யும், வலிமையும் உள்ள ஒருவன்.
சினம் காப்பான் = தனக்கு ஏற்பட்ட கோபத்தை பிறர்மேல் காட்டாமல் அடக்கும்போது.
காப்பான் = உண்மையான காவல் வீரன் ஆகிறான்
அல்லிடத்து = வறிய மெய்யும், வீரமும் இல்லாதவன்
காக்கின் = அடுத்தவர்மேல் வரும் கோபத்தை அடக்கிக் கொண்டால்.
காவாக்கால் என் = கோபப்படவில்லை என்று சொல்லுவது ஒழுங்கற்ற செயலாகும். (கேவலமான விளக்கமாகும்)

சொல் விளக்கம்:

செல்லிடம் = வளமையான காலம்; **காப்பான்** = காவல் வீரன்
அல்லிடம் = வறுமெய்யால் வலிமையற்றவன்
வாக்கு = ஒழுங்கின்மை

முற்கால உரை:

தன்சினம் பலிக்கும் இடத்தில் அதனை எழாமல் தடுப்பானே, அருளால் தடுப்பவன் ஆவான். ஏனைப் பலியாவிடத்து அதனைத் தடுத்தால் என். தடாது ஒழிந்தால் என்.

தற்கால உரை:

சினம் செல்லும் இடத்தில் அது வெளிப்படாமல் தடுத்து நிறுத்திக் கொள்பவனே, சினம் வராமல் தடுத்துக் கொள்பவன் ஆவான். சினம் செல்லாத இடத்து அதனைத் தடுத்து நிறுத்தினால் தான் என்ன? தடுத்து நிறுத்தாமல் விட்டால்தான் என்ன?

புதிய உரை:

வளமையை உடைய வலியவன், தன் சினத்தை வெளிப்படுத்தாது அடக்கிக் காக்கிறபொழுது, அவன் சிறந்த காவல் வீரன் ஆகிறான். வலிமையின்றி இளைத்தவன் பிறர் மேல் கோபத்தைக் காட்டவில்லை என்று பேசினால் அது கேவலமான விளக்கமாகும்.

விளக்கம்:

தமிழர்க்கு வீரமும், விவேகமும் இரண்டு கண்கள். தமிழினத்துக்குப் புகழ்மேல் பொல்லாத ஆசை. அதனால், 'புகழெனின் உயிரும் கொடுப்பார்' - என்று பாடிப் பாவைப் பட்டார்கள். புலவர்கள் கூடிய சபையில் பெயர் வாங்குவதைவிடப் போர்க்களத்தில் மரணம் அடைவதையே பெருமையாகக் கருதினார்கள்.

அந்த அடிப்படையில்தான் ஆகாயத்து இடிபோன்று ஆரவாரத்துடன் எழுகின்ற கோபத்தை, அடக்கி ஆளுகிறபோது, அவன் வீரனாகிறான். அவனது படைமடத்தின் பண்பாற்றல் அங்கே போற்றப்படுகிறது.

வலிமையற்றவன் வீரமற்றவண் ஆகிறான். வீரம் புரிய அவனுக்கு உடலில் வலிமையும் இல்லை. மனதில் உரமும் இல்லை. அவன் கோபப்பட முடியாத ஒரு இழி நிலையை மறைப்பதற்காக, தான் கோபத்தை அடக்கிக் கொண்டேன் என்கிறான். அது பொய்யான சொல். போலியான கௌரவம். பங்கப்பட்ட வீரம். பழுதான வாழ்க்கை என்று வள்ளுவர் இங்கே பலமற்றவனை பரிகாசப்படுத்திப் பேசுகிறார்.

302. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும் இல்லதனின் தீய பிற

பொருள் விளக்கம்:

செல்லா இடத்து = உன் வலிமைக்கு மிகுதியானவர் இடத்து
சினம் = உனக்கு ஏற்படுகின்ற கோபமானது
தீது = மரணத்தைக் கொடுக்கும்
செல்லிடத்து = (உம்மைவிட) வலிமை குறைந்தவர்கள் இடத்து,
இல்லதனின் = எந்தவித காரணமும் இல்லாமல்
கோபப்படும்போது
தீய பிற = தீயவைகளே ஏற்படும்

சொல் விளக்கம்:

இடத்து = வலிமை மிக்காரிடத்து; **தீது** = மரணம்
இல்லதன் = காரணம்; **இன்** = ஏற்றுக்கொள்ளுதல்

முற்கால உரை:

ஒருவன் வெகுளிதன்னின் வலியார்மேல் இடின், தனக்கே தீதாம். மற்ற எளியார் மேல் இடினும் அதனின் தீயன பிற இல்லை.

தற்கால உரை:

தன்னால் யாதொன்றும் செய்ய முடியாத இடமாகிய வலியார்மேல் சினம் கொள்வதனால் ஒருவனுக்குத் தீங்குதான் உண்டாகும். மெலியார்மேல் சினம் கொள்வது எப்படிப் பார்க்கினும் தீங்கு பயப்பது வேறொன்றும் இல்லை.

புதிய உரை:

தன்னைவிட வலியார் மீது கோபத்தால் மோதுகிறபோது மரணமே நிகழ்கிறது. அதனிலும் தம்மைவிட வலிமை குறைந்தவரிடம் மோதுகிற பொழுது, வேறுபல தீய விளைவுகளும் ஏற்படுவதாகிறது.

விளக்கம்:

சினம் சேர்ந்தாரைக் கொல்லும் என்னும் பழமொழியை மிக ஆழமாக வள்ளுவர் சொல்கிறார். ஒருவருக்குச் சினம் ஏற்பட்டு விட்டால், அவர்தன்னைமறக்கிறார். தன்தகுதியை இழக்கிறார். தன் திறமையை அழிக்கிறார். ஒரு தேவையற்ற செயலைச் செய்யத் துடிக்கிறார்.

ஆகவே, பாறையிலே தலையை மோதினால் மண்டை உடையும், பனியிலே மோதினால் மயக்கம் வரும் என்பதுபோல, தன்னைவிடப் பலமுள்ள பகைவரிடம் மோதுகிறபொழுது அது பாவச் செயலாகி விடுவதால், அதற்குப் பரிகாரமாக மரணமே சம்பவிக்கிறது.

அதுபோலவே மெலிந்தவரிடத்தில் மோதினாலும், உடலுக்கும், வாழ்வுக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய தீயவைகளே தொடர்நிகழ்ச்சிகளாகத் தோன்றும். ஆகவேதான் எழுகிற கோபத்தை வலியார் மேலும் காட்டக் கூடாது. எளியார் மேலும் காட்டக்கூட்டாது, என்று வீரத்தைக் காக்கின்ற விவேகமும் வேண்டும் என்றும் இரண்டாம் குறளில் வள்ளுவர் வழிகாட்டுகிறார்.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

பொருள் விளக்கம்:

யார்மாட்டும் = எவரிடத்திலும்
வெகுளியை = தணியாப் பெரும் கோபத்தை
மறத்தல் = (வெகுளியை மறத்தல்) விட்டு விடவேண்டும். இல்லை என்றால்
தீய பிறத்தல் = மரணவேதனைகள் உண்டாவது
அதனால் = மிகுதியாக
வரும் = தொடர்ந்து வந்து சேரும்

சொல் விளக்கம்:

மறத்தல் = விட்டுவிடல், பொல்லாங்கு
வெகுளி = தணியாக்கோபம்; **தீய** = தீது, மரண வேதனை
அதனால் = மிகுதியாக

முற்கால உரை:

யாவர்மாட்டும் வெகுளியை ஒழிக்க. ஒருவர்க்குத் தீயனவெல்லா முளவாதல் அதனால் வரும் ஆகலால்.

தற்கால உரை:

ஒருவன் யாரொருவரிடத்திலும் சினங்கொள்ளாமல், அந்தச் சினத்தை அறவே மறந்துவிட வேண்டும். இல்லை என்றால், அந்தச் சினத்தினால், தீமையான விளைவுகள் தாம் ஏற்படும்.

புதிய உரை:

எவரிடத்தும் பொல்லாங்கு மிக்க பெருங்கோபத்தை விட்டுவிட வேண்டும். இல்லை என்றால், அவர் உடம்பில் உண்டான கோபமானது, மரண வேதனைகளை மிகுதியாக்கிக் கொண்டுவரும்.

விளக்கம்:

முதல் குறள் 301-ல் வலிமையைக் காட்டக்கூடிய இடத்தில் கூட ஒழுக்கத்தைக் காக்க வேண்டும் என்கிறார். வெகுளியால் மற்றவருடன் மோதும் போது தீய விளைவுகள் வருவதுடன் சில சமயங்களில் மரணம் கூட நிகழும் என்கிறார். இந்த மூன்றாவது குறளில், வெகுளியால் இறப்பு நிகழும் என்பதைவிட உடம்பு பாதிக்கப்படுவதால் மரண வேதனைகளே மிகுதியாக வரும் என்கிறார்.

மனவெறுப்பானது ஒழுங்கான சுவாசத்தை மாற்றி, பாதிக்கிறது. செல்களில் உள்ள கழிவுகள் வெளியேறாமல் தேங்கி விடுகின்றன. உறுப்புக்கள் செயலற்றுப் போய் விடுகின்றன. அதனாலே உடம்பு உஷ்ணமாகி, எரிச்சல் ஏற்பட்டு விடுகிறது. அதனால் நச்சுப் போன்ற ரணங்கள் உடம்பில் ஆங்காங்கே உண்டாக, அவரது வாழ்வே நோய்க் களமாகி விடுகிறது.

ஆகவே பலம் இல்லாரிடத்தும், அல்லது பலம் உள்ளாரிடத்தும், இல்லையில்லை, எல்லோரிடத்தும், உங்கள் கோபத்தைக் காட்ட வேண்டாம். கொடுங்கரம் நீட்ட வேண்டாம். பழிபாவத்தில் மாட்ட வேண்டாம் என்று பண்பான ஒரு அறிவுரையை, இந்தக் குறளிலே எடுத்துச் சொல்கிறார்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற

பொருள் விளக்கம்:

உளவு = உட்காரியமான, இரகசியம்

பிற = மற்ற

சினத்தின் = தனியாப் பெருங்கோபத்தினால்

பகை = உட்பகையாக மாறி விடுகிறது

உளவோ = அந்தப் பகையின் வி[illegible]க்காரியமானது
நகை = விளையாட்டு, மற்றும் உடன்சேருகிற நட்பு
உவகை = காமம், மற்றும் சந்தோசம் அல்லதுக்தையும்
கொல்லும் = கொன்று அழித்து விடும்

சொல் விளக்கம்:

நகை = இன்பம், நட்பு; **உவகை** = காமம், சந்தோசம்
பகை = உட்பகை, நரம்பு, உடல்
உளவோ = உட்காரியம், இரகசியம்

முற்கால உரை:

துறந்தார்க்கு அருளான் உளவாய முகத்தின்கண் நகையையும், மனத்தின்கண் உவகையையும் கொன்று கொண்டிடுகின்ற சினமோ அல்லது அதனின் பிறவாம் பகைகளும் உளவோ ? இல்லை.

தற்கால உரை:

முகத்தில் வெளிப்படும் சிரிப்பையும், அகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியையும், அழிக்கின்ற சினத்தைவிட, ஒருவனுக்கு பகையான பொருள் வேறு ஏதேனும் ஒன்று உண்டோ? ஒன்றுமில்லை.

புதிய உரை:

சினமானது உடலின் உட்பகையாக மாறி, இரகசியமாக அவனின் இன்பம், விளையாட்டு, காமம் மற்றும் சந்தோசம் ஆகியவைகளைக் கொன்று கொளுத்திவிடுகிறது.

விளக்கம்:

கொடுமைக்கடலாக விளங்குவது கோபம். கோபத்திற்கு ஈடும், உவமையும் எதுவும் இல்லை. அந்தக் கோபத்திற்கு ஈடு கோபந்தான். கோபத்தை அழிக்கக்கூடிய பகை இதுவரை உலகில் தோன்றவில்லை. ஆகவே சினத்திற்குப் பகை என்று எதுவும் உண்டோ என்று வள்ளுவர் வியந்து பாடுகிறார்.

பகை என்றால் பகைவர் என்பதைவிட, உடல், நரம்பு, உலகம் என்றெல்லாம் பொருள் உண்டு. எனவே சினம் உடலுக்குள் உட்பகையாகப் புகுந்தபின், உடல் அமைப்பைக் கெடுத்து, நரம்பு மண்டலத்தை நாசப்படுத்தி, உணர்ச்சிகளை முடமாக்கி, உடலில் இயல்பாக ஏற்படுகின்ற விளையாட்டு, மகிழ்ச்சி, காமகுணம், சந்தோசம் போன்ற வற்றை எல்லாம் ஒழித்து விடுகிறது.

'நரம்பு கோணிடில் நாம் அதற்கு என்செய்வோம்' என்கிறது விவேக சிந்தாமணி. கோபமானது நரம்பு மண்டலத்தையும்

கொன்று விடுவதால்தான், பகையாகக் கொல்லும் பாவத்தை சினம் என்றுபாடி, நான்காவது குறளில் சினத்தின் நாசத்தை வெளிப்படுத்துகிறார்.

305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்

பொருள் விளக்கம்:

தன்னைத்தான் = தன் ஆத்மாவையும் மனதையும்
காக்கின் = காத்தற் பொருட்டு
சினம்காக்க = சினத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.
காவாக்கால் = அப்படிக் காப்பாற்றா விட்டால்
தன்னையே = தன் ஆத்மாவையே
கொல்லும் = வருத்தி அழிக்கின்ற வலிமை கொண்டது
சினம் = நெருப்பாகும்

சொல் விளக்கம்:

தன்னையே = தன் ஆத்மாவையே; **தன்** = ஆத்மா
தான் = மனம்; **சினம்** = நெருப்பு; **கொல்லும்** = மாய்க்கும்

முற்கால உரை:

தன்னைத்தான் துன்பம் எய்தாமல் காக்க நினைத்தானாயின், தன் மனத்து சினம் வராமல் காக்க. காவானாயின், அச்சினம் தன்னையே கெடுக்கும். கடும் துன்பங்களை எய்துவிக்கும்.

தற்கால உரை:

ஒருவன் தன்னைத்தானே காத்துக் கொள்ள எண்ணுவானே ஆனால், தனக்குச்சினம் வராமல் காக்க வேண்டும். அப்படிக் காத்துக் கொள்ளாவிட்டால் அந்தச் சினமே அவனைக் கொன்றுவிடும்.

புதிய உரை:

தன் உடலை மட்டுமல்ல, மனதையும், ஆத்மாவையும், காப்பாற்றிக் கொள்ள விரும்புகிற ஒருவன், நெருப்பாக எரிக்கும் சினத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால், மனச் சோதனைகளையும், ஆத்ம வேதனைகளையும் கொடுத்து, அவன் ஆத்மாவைக் கொன்றுவிடும்.

விளக்கம்:

உடலை அழிக்கும், உடன் பிறியும் நட்பை அழிக்கும். உலக வாழ்வின் இன்பங்களை எல்லாம் அழிக்கும் என்று சொல்லிக் கொண்டு வந்த வள்ளுவர். உடலின் தெய்வமாக விளங்கும் ஆத்மாவை மறக்கவில்லை. அவர், ஆத்மா அழிகிறபோது அங்கே எற்படுகிற அவதிகளை எல்லாம் சொல்கிறார்.

ஆத்ம வேதனை என்பது உயிர் வேதனை. உயிர் வேதனைகளாவன:

1. அனல் 2. குளிர் 3. இடி 4. புனல்
5. காற்று 6. ஆயுதம் 7. நஞ்சு 8. மருந்து
9. பசி 10. தாகம் 11. நோய்
12. பரிவுணர்ச்சி

இந்த வேதனைகளால் கொஞ்சம், கொஞ்சமாக ஆத்மாவைக் கொன்று, உடலைத் தின்று, தீப்பிழம்பாக சினம் தீய்த்துவிடும். அதனால்தான், சினம் என்பதற்கு நெருப்பு என்றும், போர் என்றும் கூறுகிறார்கள்.

ஆகவே ஆன்மாவைக் காப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

306. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்

பொருள் விளக்கம்:

சினம் என்னும் = கோபம் என்கிற
சேர்ந்தாரை = உற்றார், உறவினர் போன்றவர்களை
கொல்லி = நெருப்பாய் அழித்து
ஏமப்புணையை = விடுவதோடு அவனைக் காத்து உதவுகிற
இனம் என்னும் = அவனுக்குத் துணையாகச் சேரும் கூட்டம் ஆகிய குலத்தையெல்லாம்
சுடும் = காளவாயில் வேக வைப்பது போல அவித்துக் கொன்று விடும்

சொல் விளக்கம்:

சேர்ந்தார் = உற்றார், உறவினர்; **கொல்லி** = கொல்லும் நெருப்பு
இனம் = துணையாகச் சேரும் கூட்டம், குலம்.
ஏமம் = காவல்; **புணை** = உதவி

முற்கால உரை:

சினம் என்னும் நெருப்பு, தனக்கு இனமானவரையே அன்றி, அவருக்கு இனமாகிய ஏமப் புணையையும் சுடும்.

தற்கால உரை:

சினம் என்னும் சேர்ந்தாரை அழிக்கும் நெருப்பு, ஒருவனுடைய, இன்பத் தெப்பத்தையும் சுட்டெரிக்கும்.

புதிய உரை:

சினம் என்பது தான் சேர்ந்திருப்பவனை எரித்து அழிப்பதோடு, அவனுடன் சேர்ந்திராத, ஆனால் சேர்ந்து இருந்து உதவுகின்ற உற்றார், உறவினர்களை எல்லாம் ஒரு சேர அழித்துத் தொலைத்துவிடும்.

விளக்கம்:

உலகத்து நெருப்புக்கு, தான் இருக்கும் இடத்தை அழிக்கவும், தன்னை வந்து சேரும்போது, சேர்ந்த பொருளை அழிக்கவுந்தான் முடியும். ஆனால் மனிதனுக்கு வருகிற கோபம் இருக்கிறதே, அவன் உடல், மனம், ஆன்மா என்று அவனை முழுமையாக அழிப்பதுடன், அவனைச் சார்ந்தும், சேர்ந்தும். உதவியும், தொடர்ந்தும் வருகிற உற்றார் உறவினர்; அவன் அருகில் இல்லாமல், அயல் இடத்தில் இருந்தாலும் அவர்களையும் சேர்த்து அழிக்கின்ற சக்தி படைத்ததாக இருக்கிறது என்பதைத்தான் வள்ளுவர், இந்தக் குறளில், உலகமகா கொடுமையிலும் கொடுமை என்று கூறியிருக்கிறார்.

அதனால்தான் சித்தர்கள் எல்லோரும்,

'வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை'

என்றுபாடுகிறார்கள். நெருப்பில் எவ்வளவு விறகுகள் போட்டாலும் எரியும். விறகில்லா விட்டால் அது அணைந்துபோகும். உடம்பிலே உண்டாகின்ற சினம் என்னும் நெருப்புக்கு, விறகு வேண்டாம் எரிய. சிறகு வேண்டாம் பறக்க. உறவு வேண்டாம் அழிக்க. அது உடலை எரித்து விட்டுத்தான் அகலும் என்பதால்தான், சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி என்கிறார்.

307. சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு நிலத்துஅறைந்தான் கைபிழையாது அற்று

பொருள் விளக்கம்:

சினத்தை = கோபத்தை
பொருளென்று = உடலாகவே
கொண்டவன் = ஆக்கிக் கொண்டவன்
நிலத்து = பூமியில் உள்ளவர்களுடன்
அறைந்தான் = மோதலில் ஈடுபட்ட அவனது
கை = ஒழுக்க வாழ்வானது
பிழையாது = தப்பிக்காது
அற்று = அழிந்து போகிற, தீமைகளை உண்டாக்கும்.

சொல் விளக்கம்:

பொருள் = உடல்; **நிலம்** = நிலத்தில் உள்ளார்

அறைதல் = மோதல்; **கை** = ஒழுக்கம்

பிழையாது = தப்பாமல்; **அற்ற** = அழியும்

முற்கால உரை:

சினத்தை தன் ஆற்றல் உணர்த்துவது ஒரு குணம் என்று கற்றுக் கொண்டவன், அவ்வாற்றல் இழத்தலன். நிலத்தின்கண் அறைந்தவன்கை அந்நிலத்தை உறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது

தற்கால உரை:

நிலத்தை அறைந்தவர், கை தண்டனை பெறலாய், மதிக்கும் பொருளாய் கோபம் கொண்டோர் அழிவர்.

புதிய உரை:

கோபத்தை உடல் முழுதும் தேக்கிக் கொண்டவன், பகைவரிடம் மட்டுமின்றி, உலகத்தாரோடு எல்லாம் மோதுவதால், அவனது ஒழுக்க வாழ்வு அழியும்படியான தீமைகளை எல்லாம் உண்டாக்கிக் கொள்கிறான்.

விளக்கம்:

கோபத்தை ஒரு முக்கிய பொருளாகக் கொண்டவன், சண்டைபோடுகிறபோது, அவனுக்கு அழிவு தப்பாது என்றும், நிலத்தில் அறைந்தவன் கையானது நிச்சயமாக முறிந்து விடும் என்றும், எல்லோரும் பொருள் சொல்லி இருக்கிறார்கள். பொருள் என்றால், உடம்பு என்று ஒரு பொருள் இருப்பதால், அவனது உடலே கோபக்களமாகக் கொந்தளித்துக் கிடக்கிறது என்றும், அந்தக் கொந்தளிப்பின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்ட அவனால், நொடி நேரம்கூட, சிந்தனை செய்ய இயலாமல் நிலை குலைந்து போகிறான் என்றும்; அப்படி வெறி கொண்ட அவனது எரிதழல் போன்ற கோபங்கள், பல திசைகளிலும், விரிந்து, எதிர்ப்படுகின்ற எல்லாரிடமும், மோதித் தாக்குகின்ற முரட்டுத் தனத்தில் இரங்கி விடுகிறான். என்றும் கூறியிருக்கிறேன்.

ஆகவே, அவன் காத்து வந்த ஒழுக்கமான பண்புகளும், ஒழுங்கான வாழ்வு முறைகளும், அழிந்து போகின்ற இழி நிலைக்கு ஆளாக்கி விடுகின்றது. அவனுள் இருக்கின்ற ஆக்ரோசமான பேய்கள் எல்லாம், அழிந்து போகின்ற ஆறாத காயங்களை உண்டுபண்ணி விடுகின்றன. ஆகவே, சினம் கொண்டவன் முதலில் தன்னுடன் மோதிக் கொள்கிறான். பிறகு பகையோடு போராடுகிறான். பிறகு அண்டை அயலாரிடம் எல்லாம் சண்டையிட்டுக் கொள்கிறான்.

கெடுத்து, பாழாகிப் போகிறான் என்று எழுவது சூளில் வள்ளுவர் விளக்கிக் காட்டுகிறார்.

308. இணற்எரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று

பொருள் விளக்கம்:

இணற் எரி = பல சுடர்கள் உள்ள பயங்கர நெருப்பு
தோய்வன்ன = தீய்த்துத் தொலைப்பது போல
இன்னா செய்யினும் = தீங்குகள் பல செய்தாலும்
புணரின் = அந்தத் தீங்குகள் அலைபோல வந்தாலும்
வெகுளாமை = கோபப்படாமல்பொறுப்பது
நன்று = நன்மையான வாழ்வைத் தரும்

சொல் விளக்கம்:

இணற் எரி = பல சுடர் உள்ள நெருப்பு
தோய்தல் = கலக்குதல், துவைத்தல்
புணரின் = அலைபோல; **நன்று** = நன்மை, வாழ்வு.

முற்கால உரை:

பல சுடரை உடைத்தாய பேறெரி வந்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், அவனை வெகுளாமை ஒருவர்க்குக் கூடுமாயின் அது நன்று.

தற்கால உரை:

கொளுந்துவிட்டு எரியும் தீயினால் சுடுவது போன்ற துன்பங்களை ஒருவன் தொடர்ந்து செய்தாலும், குற்றமுணர்ந்து அவன் உறவுகொள்ள வருவானேயானால் அவனைச் சினந்து கொள்ளாமல் இருப்பது நல்லது.

புதிய உரை:

பலதிக்கும் பாய்கின்ற பயங்கர நெருப்பான கோபத்தை ஒருவன், அலைகள் தொடர்வது போல தீங்குகளைச் செய்தாலும், அவனிடம் கோபப்படாமல் பொறுமை காக்கும்போது, பொறுத்தவனுக்கு பெருமையான வாழ்வைக் கொடுக்கும்.

விளக்கம்:

பலதிசைகளிலும், பயங்கரமாகப் பாய்ந்து, பாழாக்குகிற பலம் கொண்ட எரி சக்திதான் கோபம் என்கிறார். அப்படிப்பட்ட அனல்சக்தியானது அழிக்கும் வரை ஓயாது. அதே நேரத்தில் அந்த

அடுத்துத் தொடர்ந்து பற்றிக் கொண்டே வரும். முற்றிக் கொண்டே வரும். அதைத்தான் புணரி என்ற சொல்லால் அலை என்று குறிப்பிடுகிறார்.

அலைகளின் இயல்பு ஓயாது, அடங்காது. தொடராமல் இருக்காது. ஒரு முடிவை அடையும் வரை முடியாது. அதுபோலவே, கோபமாகிய நெருப்பும் கொந்தளிக்கும் கடலில், புயல் வேகத்தில் புறப்பட்ட பொல்லாத அலை என்று குறிப்பிடவருகிறார். கோப அலை கொடுமையில் முடியும். அல்லது கொலையில் முடியும். மரணத்தில் முடியும். அல்லது பல மாற்றங்களில் முடியும். ஆகவே, அக்கினிக்குஞ்சான கோபத்தை மடியில் மட்டுமல்ல, உடலில் எங்கு வைத்தாலும் ஆபத்துத்தான் என்பதை, எட்டாவது குறளில் பட்டவர்த்தனமாகப் பேசுகிறார் வள்ளுவர்.

309. உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

பொருள் விளக்கம்:

உள்ளத்து ஆல் = உள்ளம் முழுவதும் பயங்கர நச்சு எண்ணம் கொண்ட

உள்ளான் = பகைவனைப் போல

வெகுளி எனின் = கோபத்தைக் கொண்டவன் (அந்த நேரத்தில், அந்த சமயத்தில்)

உள்ளிய எல்லாம் = மனதில் உள்ள அந்தரங்கமான கொடிய ஆசைகள் எல்லாம்.

உடன் எய்தும் = உடனுக்குடனே முடித்துவிடும்.

சொல் விளக்கம்:

உள்ளிய = மனதில் உள்ள அந்தரங்கமான;

உடன் = தாமதமின்றி; **எய்தும்** = நடந்து முடியும்

(உள்ளத்து) **ஆல்** = விஷம்; **உள்ளான்** = பகைவன், உள்மனிதன்

மூற்கால உரை:

தவம் செய்யும் அவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும், நினையானாயின், தான் கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும்.

தற்கால உரை:

ஒருவன் தன் உள்ளத்தால் சினத்தைப் பற்றி நினைக்காது இருப்பானே ஆனால், அவன் நினைத்த தன்னைகளை எல்லாம் ஒருங்கே அடையப் பெறுவான்.

புதிய உரை:

நச்செண்ணம் கொண்ட பகைவனைப் போல, உள்ளே இருக்கும் கோபத்தால், அவன் மனதிலுள்ள கொடிய நினைவுகள் எல்லாம், யோசித்துப் பார்ப்பதற்குள் வெளியாகி, கொடிய விளைவுகளை உண்டாக்கி விடுகின்றன.

விளக்கம்:

வள்ளுவர் கோபத்தை உடலுக்குள்ளே ஒளிந்து நடமாடுகிற அந்தரங்கமான பகைவன் என்கிறார். விஷத்தன்மை கொண்ட பகைவனுக்கு எதிரியை வெட்டி அழிப்பதும், வேறோடு சாய்ப்பதும், மீண்டும் முளை விடாமல் முடிப்பதும்தான் இலட்சியமாக இருக்கும்.

ஆகவே, உடலுக்குள்ளே ஓங்காரமிட்டுக் கொண்டு இருக்கிற கோபத்தை வள்ளுவர், அந்தரங்கமான அரக்கன் என்கிறார். உடல் முழுவதும் பரவி, உள்ளத்திலே கோபம் கொழுந்து விட்டு எரிவதால், அங்கே உணர்வுகள் மங்கிப் போகின்றன. சிந்தனைகள் முடங்கிப் போகின்றன. செயல் திறன்கள் பயங்கரம் என்கிற போர்வையைப் போர்த்திக் கொள்கின்றன. அதனால் கோப்பட்டவன் யோசிப்பதற்குள், அவன் அந்தரங்கத்தில் எதிர்பார்த்து, ஆனால் வெளியில் நடைபெற வேண்டாம் என்று விரும்பாத, கொடுமைகள், கோரங்கள், கொடூரங்கள், எல்லாமே நடந்து முடிந்து விடுகின்றன. எனவேதான் கோபம் பொல்லாதது. அடக்கினாலும் நில்லாதது. கோபக்காரனின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாதது. ஆகவே கோபத்தை மனதிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று மந்திரா லோசனையாக ஒன்பதாவது குறளில் கூறுகிறார்.

310. இறந்தார் இறந்தார் அனையார் சினத்தை துறந்தார் துறந்தார் துணை

பொருள் விளக்கம்:

இறந்தார் = கோபத்தால் நெறிகடந்து போனவர்
இறந்தார் = உணர்வற்ற சவத்துக்கு
அனையர் = ஒப்பானவர், (அப்படிப்பட்ட சினத்தை)
துறந்தார் = வெறுத்துக் கைவிட்டவர்கள்
துறந்தார் = ஏற்கனவே கைவிட்ட நல்லவர்களுக்கு
துணை = உதவி புரிபவராக ஆகி விடுகிறார்

சொல் விளக்கம்:

இறந்தார் = நெறிகடந்து சென்றார்
இறந்தார் = உணர்வற்ற சவம்; **துறந்தார்** = வெறுத்துக் கைவிடுதல்
துறந்தார் = சினத்தைக் கை விட்டவர்

முற்கால உரை:

சினத்தின்கன்னே மிக்கார். உயிருடையார் ஆயினும் செத்தாரோடு ஒப்பர். சினத்தைத் துறந்தார், சாதல் தன்மை யராயினும் அதை ஒழிந்தார் அளவினர்.

தற்கால உரை:

சினத்தின் அளவு கடந்தவர், உயிருடன் காணப்பட்டாலும், செத்தாரைப் போலவே கருதப்படுவார். சினத்தை அறவே துறந்தவர், துறந்தவர்களுக்கு ஒப்பாகக் கருதப்படுவர்.

புதிய உரை:

கோபத்தால் நெறிகடந்த ஒருவன் உணர்வற்ற சவத்துக்கு ஒப்பானவனாகக் கருதப்படுகிறான். அத்தகைய ஆட்கொல்லி சினத்தை, வெறுத்துக் கைவிடுகிற ஒருவன் ஏற்கனவே சினத்தைக் கைவிட்டவருக்கு உதவுபவனாக உயர்த்தப்படுகிறான்.

விளக்கம்:

கோபத்தை நினைக்க வேண்டாம். கோபத்தை மறக்க வேண்டும். கோபம் ஊட்டியவனை மன்னிக்க வேண்டும். கொடுமைகள் கூண்டிலே, குற்றவாளியாக கோபம் கொண்டுபோய் நிறுத்திவிடும். கொத்திக் கிழிக்கும் கழுகுபோல ஆத்மாவைக் குதறிக் கிழிக்கும் - கதறி அழச் செய்யும். பதறி விழச் செய்யும். அப்படிப்பட்ட பொய்படகில், பூசல் புயலில், பயணம் போகிற ஒருவன் போய்ச் சேருகிற இடம், புதை சேறாகும், புதை குழியாகவும் மாறிய பொய்காடாகவும் ஆகும்.

அதனால்தான் அப்படிப்பட்ட கோபக்காரனை, நெறிநீங்கிய நீசன், நினைவுகள் இழந்த சரீரன், அவன் இருப்பது சவம்போல. சிரிப்பது விஷம்போல. அவன் இருந்தும் இறந்தவனாகவே ஜீவிக் கிறான் என்று கூறிய வள்ளுவர், அத்தகைய அடங்காக் கோபத்தை, அகில உலக மகா எரிசக்தியை, அடக்கி, வெறுத்துக் கைவிடும் போது, அவன் அனைத்தையும் வென்ற ஆண் தகையாக மதித்து உயர்த்தப்படுகிறான். அவன் சினத்தை விரட்டிய மகாத்மாக்களுக்குத் தோன்றும் துணையாகவும், தோன்றாத் துணையாகவும் இருந்து உதவுகிறான். அவன் பேராண்மை, வரலாற்றுப் பெருமை பெறுகிறது என்று வெகுளாமையின் நுட்பங்களை எல்லாம் வியந்து, வியந்து, வள்ளுவர் போற்றிப் பாராட்டுகின்றார்.

32. இன்னா செய்யாமை

இன்னா செய்யாமை என்ற இந்த அதிகாரத் தலைப்பு **இன்னா + செய்யா + மெய்** என்று பிரிகிறது.

இன்னா என்பதற்கு கீழ்மையான தீமை, நெறி கெட்டகேடு, தன்மையற்ற தவறு, தீண்டப்படாத தீமை, கொடுமையான குற்றம் புலம் அழிக்கும் பொல்லாங்கு என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

இப்படிப்பட்ட குற்றங்கள், தவறுகள், கேடுகள், தீங்குகள், தீமைகள் இவற்றைச் செய்யாத உடல். அதுவே சிறந்த, ஒழுக்கம் காக்கும் உடல் என்று வள்ளுவர் சொல்ல வருகிறார். இன்னா என்பதற்குத் தவறு என்று ஒரு பொருள் உண்டு. தவறு என்ற சொல்லை உண்டாக்கித் தருகின்ற **'தவ்'** என்ற சொல்லிற்கு, **தன்னியல் பிறழ்ந்து ஒழுகுதல்.** தன் - ஆத்மா. தன்னொழுக்கம் என்பது ஆத்மாவின் ஒழுக்கம். அத்தகு ஒழுக்க நிலையில் இருந்து. தாழ்ந்து, இறங்கி, கிறங்கி கீழாக வருதல் என்று பொருள் வருகிறது.

அதேபோல, **'தவ்'** என்ற சொல்லுக்கு **சிதைவு** என்று பெயர். இப்பொழுது, நாம் ஒரு தெளிவான பொருளுக்குள் வருகிறோம் உடலாலும், மனதாலும், ஒம்பப்படுகின்ற ஒழுக்கத்திலிருந்து, பிறழ்ந்து சுருங்கா வண்ணம் செம்மாந்து நிற்கிற மெய்யே செய்யாமெய் எனப்படுகிறது.

உடல் ஒழுக்கத்தில் சிதைவு. மன ஒழுக்கத்தில் சிதைவு - ஆத்ம ஒழுக்கத்தில் சிதைவு எல்லாம், அறியாமையால் விளைவதைவிடத், 'தான்' என்ற ஆணவத்தால், திமிர் கொண்ட அகங்காரத்தால், ஆத்திரம் கொண்ட ஆத்மாவினால் ஏற்பட்டுவிடுகிறது. அதனால், கோபந்தான் அனைத்து அடாவடித்தனத்திற்கும் மூலமாக இருக்கிறது என்பதைக் குறித்துக் காட்டவே, வள்ளுவர், 'இன்னா செய்யாமை' அதிகாரத்தை வெகுளாமைக்குப் பின் வைத்திருக்கிறார்.

311. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா செய்யாமை மாசற்றார் கோள்

பொருள் விளக்கம்:

சிறப்பு ஈனும் = தலைமை பேறு தரத்தக்க
செல்வம் பெறினும் = சொர்க்க வாழ்க்கை பெறினும்
பிறர்க்குஇன்னா = மற்றவர்களுக்குக் கேடுகளை
செய்யாமை = செய்யாத தேகத்தைக் காப்பது
மாசற்றார் = பெருமை உடையோரது
கோள் = வலிமையாகும்

சொல் விளக்கம்:

சிறப்பு = தலைமை, உற்சவ ஆராதனை; **ஈனும்** = தரும்
செல்வம் = சொர்க்க வாழ்க்கை
பிறர்க்கு இன்னா = மற்றவர்களுக்கு கேடுகள்; **கோள்** = வலிமை

முற்கால உரை:

யோகமாகிய சிறப்புத் தரும் அனிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கு இன்னா செய்து பெறலாம் ஆயினும், அதனை செய்யாமை, ஆகமங்கள் கூறியவாற்றான் மனம் தூயாரது துணிவு.

தற்கால உரை:

பெரும் சிறப்பைத் தருகின்ற அழியாத செல்வத்தைப் பெருவதாக இருந்தாலும், பிறருக்குத் துன்பம் செய்யாது இருத்தலே குற்ற மற்றவரின் கொள்கை ஆகும்.

புதிய உரை:

தலைமைப் பேறு தரத்தக்க சொர்க்க வாழ்வு பெறுவதாக இருந்தாலும், மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்காத தேகத்தைக் காப்பது என்பது, பெருமை உடையோரின் வலிமை ஆகும்.

விளக்கம்:

தீங்கு இழைக்காத தேகம் என்பதைக் குறிக்கச் செய்யாமெய் என்றார் வள்ளுவர். உடலைக் கெடுத்துப் பாதகம் செய்பவை எனை உள்ளுக்குள்ளே நடமாடும் ஏழு குணங்களைக் கூறுவார்கள்.

1. கர்வம் 2. அற்ப ஆசை 3. காமம் 4. பகை
5. போஜனப்பிரியம் 6. கோபம் 7. சோம்பல்

இந்த ஏழுபாதகங்களையும் வெற்றிகரமாகக் கடந்து வாழ்பவர்களைத் தான் மாசற்றார் என்றார்.

இப்படிப்பட்ட மாசற்றாருக்கு உடல் வலிமையும், மன வலிமையும் இயல்பாகவே இருக்கக் கூடியனவாகும். மனதாலும், உடலாலும், வலிமை கொண்டவர்கள், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க விரும்பமாட்டார்கள். ஏனெனில் வலிமையானது பண்பாட்டைப் பாராட்டுகிறது. பாடறிந்து ஒழுகச் செய்கிறது. அதனால் பதவி ஆசையோ, தலைமைக் கர்வமோ, செல்வச் செருக்கோ - எதுவும் அவர்களைப் பாதிக்காது என்கின்ற, பேராண்மை மிக்க பண்பாற்றலையே முதல் குறளில் கூறுகிறார்.

312. கறுத்து இன்னாசெய்த அக்கண்ணும் மறுத்து இன்னா செய்யாமை மாசற்றார் கோள்

பொருள் விளக்கம்:

கறுத்து = மனக்குறைவுபட்டு
இன்னா செய்த = பொல்லாங்கு செய்த
அக்கண்ணும் = பகைவரது உடம்புக்கும்
மறுத்து = தவறிப் போய்
இன்னா செய்யாமை = தீங்கு செய்தாத தேகத்தைக் கொண்டிருப்பது
மாசற்றார் = காம, வெகுளி, மயக்கம் தீர்த்த பரிசுத்தமானவர்களின்
கோள் = வலிமையாகும்.

சொல் விளக்கம்:

கறுத்து = மனக்குறைப்பட்டு; **கண்** = உடம்பு; **மறுத்து** = தவறி
மாசற்றார் = பரிசுத்தவான்; **கோள்** = வலிமை

முற்கால உரை:

தம்மேல் செற்றம் கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தவிடத்தும், மீண்டும் தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு.

தற்கால உரை:

ஒருவன் வெகுண்டு தமக்குத் துன்பம் செய்த போதிலும், திரும்ப அவனுக்கு எவ்விதத் துன்பத்தையும் செய்யாமல் இருப்பதுதான், குற்றமற்ற உயர்ந்தோரின் கொள்கை ஆகும்.

புதிய உரை:

மனக்குறையால் வெறுத்துத் துன்பம் இழைக்கின்ற, பகைவனது உடலுக்குத் தவறியும், துன்பம் இழைக்காத தேகம் கொண்ட பரிசுத்தவான்களுக்கு, அதுவே பெருமை தரும் வலிமையாகும்.

விளக்கம்:

ஒருவன் மற்றவனுக்கு எப்பொழுது பகைவனாகிறான்? வேண்டாதவனாகிறான்? வெறுக்கத் தகுந்த காரியங்களைச் செய்கிறான்? அவனுடைய மனதில் ஏதோ ஒன்றுக்காக, மனக்குறைபட்டுப் போகும்போது, எண்ணங்களில் கறைபட்டுப் போகும்போது; அகமானது அழுக்காகும்போது, ஆசைகள் நிறைவேறாமல் வெறுப்பு அடையும்போது, இவற்றை எல்லாம் ஒருசேரக் குறிப்பதற்காகவே **'கறுத்து'** என்ற வார்த்தையைப் பெய்திருக்கிறார்.

ஆற்றுக்கு ஊற்றுக்கண் தேவைப்படுகிறது. பால்கறக்க முலைக்கண் தேவைப்படுகிறது. காட்சிகளைப் பார்க்க முகக்கண் தேவைப்படுகிறது. இங்கே பகை கொண்ட மனதில் பாழாக்குகின்ற காரியத்தை உடன்பட்டுச் செய்கிற உடம்பைக் குறிக்க **'கண்'** என்கிறார். ஏன் உடம்பைக் கண் என்றார் என்றால், அதற்கு அகக் கண்ணும், புறக் கண்ணும் உண்டு என்பதால். அந்த உடற் கண்ணை ஊனக்கண்ணாக மாற்றாமல், ஞானக்கண்ணாக மாற்றுகிற வல்லமை படைத்தவர்களைத்தான், **மாசற்றார்** என்ற சொற்களை அடுத்தடுத்து இரண்டு குறள்களிலும் வடித்து வைத்து இருக்கிறார்.

313. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் உய்யா விழுமம் தரும்

பொருள் விளக்கம்:

செய்யாமல் = நேர்மை நெறிபார்க்காமல்
செற்றார்க்கும் = கொலை வெறி பிடித்தலைகிற பகைவரையும்
இன்னாத = துன்பம் இழைக்காமல்
செய்த = அரியசெயல்செய்தார்க்கு
பின் = எதிர்கால வாழ்வை
உய்யா = ஈடேற்றுகின்ற
விழுமம் தரும் = சிறப்பு, நன்மைகளைத் தரும்

சொல் விளக்கம்:

செய்யாமல் = நேர்மையின்றி
செற்றார் = கொலை வெறி பிடித்தவர்; **உய்ய** = ஈடேற்றுதல்
விழுமம் = சிறப்பு, நன்மை; **பின்** = எதிர்காலம்
இன்னாத = துன்பம் இழைத்தல்

முற்கால உரை:

தான் முன்போர் இன்னாமை செய்யாது இருக்க, தன்மேல் செற்றம் கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், அச்செயல் அவனுக்கு கடக்க முடியாத இடும்பையைக் கொடுக்கும்.

தற்கால உரை:

ஒருவன் தான் ஒரு குற்றமும் செய்யாது இருக்கும் நிலையில், தனக்குத் துன்பம் இழைத்தவர்களுக்கு, தான் எதிர்க் கெடுதி செய்வானேயானால், அந்தச் செயலானது, அவனுக்குத் தப்பிப் பிழைக்க முடியாத துன்பத்தைத் தரும்.

புதிய உரை:

தீய மனம் கொண்டு. கொலை வெறியை மேற்கொள்ளும் பகைவர்களுக்கும் துன்பம் இழைக்காத ஒருவனுக்கு, எதிர்காலம் எல்லாம், வாழ்வித்து ஈடேற்றுகின்ற சிறப்பெல்லாம் வந்து சேரும்.

விளக்கம்:

பாதகம் செய்வது பகைவனின் நோக்கம், அதிலும் கொலை வெறி கொண்டு அலைவது, கீழ்மைகளின் பிறவிக் குணம். அவர்களை நேரில் கண்டாலும் பயங்கரம். கனவில் கொண்டாலும் பயங்கரம்.

அப்படிப்பட்ட ஆலகால விஷம்போன்ற பகைவர்களை, அருள் விழியோடு பார்ப்பதும், அருள்பாலிப்பதும் கஷ்டமான காரியந்தான், அவர்களை நினைவால் மறக்க முடியாமலும், மனதால் மன்னிக்க முடியாமலும் இருப்பதுதான், மனித இயல்பாகும். அதையும் மீறி ஒரு அரிய செயலாக, பகைவருக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாமல் பொறுத்துக் கொள்வது, பேராண்மையிலும், பேராண்மை ஆகும். அத்தகைய அரிய குணம் கொண்டவர்கள் வாழ்வை, எதிர்காலமே பொறுப்பேற்றுக் கொண்டு, எல்லாச் சிறப்புக்களையும், மேன்மைகளையும் கொடுக்கும் என்கிறார் வள்ளுவர்.

எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுக்கமுடியும். நல்வினை விதைத்த நல்லோர்கள் எதிர்காலம் நன்மையையே நல்கும் என்ற உண்மையை நிலை நாட்டிக் கூறுகிறார் வள்ளுவர் இந்த மூன்றாவது குறளில்.

314. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்

பொருள் விளக்கம்:

இன்னா செய் = கேடுகள் விளைவிப்போர்
தாரை = நேர்வழி செல்லுமாறு
ஒறுத்தல் = அடக்குதல்
அவர் நாண = அவர் அடங்கி பின்னடைய
நன்னயம் = இன்சொல், மற்றும் இனிய செயல்களில்
செய்துவிடல் = குற்றத்தை விடுமாறு செய்ய வேண்டும்

சொல் விளக்கம்:

தாரை= ஒழுங்கு, நேரோடல்
ஒறுத்தல் = அடக்குதல், அலைத்துக் குறைத்தல்
நாண = அடங்க, அஞ்சிப் பின்னிட
நன்னயம் = இன்சொல், செயல்கள்; **விடல்** = விடுதல், குற்றம்

முற்கால உரை:

தமக்கு இன்னாத வற்றைச் செய்தாரை துறந்தார் ஒருத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவருக்கு இனிய உவகைகளைப் செய்து, அவ்விரண்டினையும் மறத்தல் ஆகும்.

தற்கால உரை:

தனக்குத் துன்பம் கொடுத்தவரை தண்டித்தலாவது, அவர் வெட்கப்படும் படியாக, நல்ல நன்மைகளைச் செய்து அவர் செய்த தீமைகளையும், தான் செய்த நன்மைகளையும் மறந்துவிடல்.

புதிய உரை:

கேடு விளைவித்தவர்கள் நேர்வழி நடக்குமாறு அடக்குதல், அவர் அடங்கி, அஞ்சிப் பின்னடையுமாறு, இனிய சொற்களாலும், செயல்களாலும் குற்றத்தை விடுமாறு செய்ய வேண்டும்.

விளக்கம்:

இன்னா செய்தாரைத் தண்டித்தல் என்றுதான் இதுவரை எல்லோரும் உரை செய்து இருக்கிறார்கள். அவர் நாண, அதாவது அவர் வெட்கப்படும்படி என்றும் பொருள் கண்டு இருக்கிறார்கள். இங்கே நான், செய்தாரை என்ற சொல்லில் இருந்து 'தாரை' என்ற சொல்லைப் பிரித்து இருக்கிறேன்.

'தாரை' என்றால் நேரோடல் என்று அர்த்தம். அதாவது நேர்வழி செலுத்துதல். 'ஒறுத்தல்' என்ற சொல்லுக்கு 'அடக்குதல்' என்ற பொருள் கண்டு இருக்கிறேன்.

குற்றத்திற்காக ஒருவனைத் தண்டிக்கும்போது, வருந்தலாம். வருந்தாமலும் போகலாம். திருந்தலாம். திரிந்தும் போகலாம். ஆனால், வள்ளுவரின் உள்ளத்தில், தவறு இழைத்தவரைத் தண்டிக்க வேண்டாம். அவனது பகை உணர்ச்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக, அலைத்துக் குறைத்து அடக்க வேண்டும் என்கிறார்.

அப்போதுதான் அவர் அஞ்சுவர். வாடுவர். அடங்குவர். பின்னடைவர். அதற்கு இனிய சொற்களும், செயல்களுந்தான் உதவும் என்கிற கருத்தைத்தான் நான்காவது குறளில் நன்னயமாக வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

315. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தம்நோய்போல் போற்றாக் கடை

பொருள் விளக்கம்:

தம் நோய்போல் = தன் ஆத்ம வேதனையைப் போல
பிரிதின்நோய் = பகைவர்களின் வேதனையும் இருக்கும் என
போற்றாக்கடை = எண்ணி ஏற்காத (பங்கிடுதல்) முடிவு எடுக்கும்
அறிவினான் = அறிவின் ஆன் = அறிவுள்ள ஆத்மாவினால்
ஆகுவது உண்டோ = எந்தப் பயனும் உண்டோ? இல்லை.

சொல் விளக்கம்:

ஆன் = ஆன்மா; **ஆகுவது** = ஆவது; **நோய்** = துன்பம், வேதனை
தம் = ஆத்மா, பங்கிடுதல்; **போற்றார்** = பகைவர்; **கடை** = முடிவு

முற்கால உரை:

துறந்தார்க்கு, உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினால் ஆவதொரு பயனுண்டோ? பிரிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தன போல்க் குறிக்கொண்டு காவாவிடத்து.

தற்கால உரை:

பிற உயிகளுக்கு ஏற்படும் துன்பங்களைத் தனக்கு உண்டாகும் துன்பங்களாக எண்ணி, அவ்வுயிர்களைக் காப்பாற்றா விட்டால் ஒருவன் தான் பெற்றுள்ள அறிவினால் ஆகக் கூடிய பயன்யாது? ஒன்றுமில்லை.

புதிய உரை:

தன் ஆத்ம வேதனையைப் போலவே தன் பகைவர்க்கும் வேதனை உண்டு எனும் உணர்வை பங்கிட்டுப் போற்றாமல், முடிவு எடுக்கும் அறிவான ஆத்மாவினால் என்ன பயன்? ஆவது ஒன்றும் இல்லை.

விளக்கம்:

ஒரு ஆத்மாவிற்கு வேதனையானது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல், மயங்கல், வருந்தல் முதலியவற்றால் விளையும். அதுபோன்ற வேதனைகள் நல்லார்க்கும் உண்டு. போற்றாராகிய (பகைவர்) பொல்லார்க்கும் உண்டு. பொல்லாரின் வேதனையை தாம் அனுபவிக்கின்ற வேதனைபோல் தான் இருக்கும் என்று எண்ணிப் பார்ப்பது சாதாரண மனிதர்களுக்கு உரிய சகஜ குணமாகும்.

ஆனால் வள்ளுவரோ, அதற்கும் ஒருபடி மேலே சென்று, தனது பகைவர் வேதனைகளைத் தமது வேதனையாக எண்ணி, உணர்வால் பங்கிட்டுக் கொள்கின்ற பண்பு இருக்கிறதே. அதைத்தான் போற்றுகின்ற முடிவு என்கிறார்.

அப்படிப் போற்றாத முடிவு மாசற்றார்க்கு மாசினையே நல்கும். எனவே உணர்வால் பகைவரை அணுக வேண்டும். அவர் வேதனைக்கு மருந்தாக மாற வேண்டும் என்று ஒரு மணியான யோசனையைச் சொல்லிச் செல்கிறார்.

316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை வேண்டும் பிறன்கண் செயல்

பொருள் விளக்கம்:

இன்னா என = கேடுபயக்கும் என
தான் = தனது ஆன்மா
உணர்ந்தவை = எல்லாவற்றிலும் அறிந்து கொண்டதை
பிறன்கண் = தனது பகைவன் உடலையும் பாதிக்கும்
செயல் = துன்பம் செய்வதில்
துன்னாமை வேண்டும் = பொருந்தாத மனம் வேண்டும்

சொல் விளக்கம்:

ஆன் = ஆத்மா; **துன்னாமை** = பொருந்தாமை; **பிறன்** = பகைவன்
கண் = உடம்பு; **செயல்** = காவல், ஒழுக்கம்

முற்கால உரை:

இவை மக்களுக்கு இன்னாதன என அனுமானத்தால் அறிந்தவற்றை; பிறன் மாட்டுச் செய்தலை, மேவாமை துறந்தவனுக்கு வேண்டும்.

தற்கால உரை:

ஒருவன் துன்பம் தருபவை என்று தான் கண்டு அறிந்தவற்றை, மற்றவனிடத்தில் செய்யாது இருக்க வேண்டும்.

புதிய உரை:

கேடுபயக்கும் எனத்தன் ஆன்மா கண்டறிந்தவற்றை எல்லாம் தன் பகைவன் உடலையும் பாதிக்கும் வண்ணம் செய்கின்ற செயல்களில் பொருந்தாத மனம் வேண்டும்.

விளக்கம்:

இங்கே ஒருவன் என்று சொல்லப் படுகிறவன், ஒழுக்கவானாகிய அறனையே குறிக்கும். அவன் இல்லறத்தில் இருப்பவன் ஆனாலும், கேடு அறங்களைத் துறப்பவனாகவே இருப்பதால், அவனைத் துறந்தவன் என்று அழைக்கிறார்கள்.

கேடுகளும், தீமைகளும் தனக்கு எவ்வளவு துன்பங்களைத் தரும் என்று தன் ஆன்ம சோதனையில் அவன் அறிந்து கொள்கிறபோது, தன்பகைவன் உடலுக்கும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் கண்ணும், கருத்துமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் **பிறன்கண் செயல்** என்கிறார்.

பிறரது உடம்பில் தூசு படக்கூடாது என்பது போல, மாசுபடக் கூடாது. பிறனுக்குத் துன்பம் இழைப்பதில் மனம் பொருந்தக் கூடாது என்பதைக் கடுமையாகச் சொல்வது போலத், துன்னாமை வேண்டும் என்கிறார்.

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம் மாணா செய்யாமை தலை

பொருள் விளக்கம்:

எனைத்தானும் = எந்த வகையாலும்
எஞ்ஞான்றும் = எப்பொழுதும்
யார்க்கும் = யாவருக்கும் மனத்து மனம்

ஆன் ஆம் = ஆன்மாபோன்றவற்றால்
மாணா = மாட்சிமைப்படாத தீமைகளை
யாமைசெய் = ஒருநாளும் செய்யாதிருப்பது
தலை = சிறந்ததாகும்

சொல் விளக்கம்:

மனத்து+ஆன் = மனம், ஆன்மா; **மாணா** = மாட்சிமைப் படாத
யாமை = பரணி, ஒருநாள்; **தலை** = சிறந்தது

முற்கால உரை:

மனத்தோடு, உளவாகின்ற இன்னாத செயல்களை எக்காலத் தும், யாவர்க்கும், சிறிதாகினும் செய்யாமை தலையாய அறம்.

தற்கால உரை:

எவ்வகையாலும், எப்பொழுதும், எவர்க்கும் மனம் அறிய துன்பந்தரும் செயல்களை செய்யாது இருத்தலே சிறந்ததாகும்.

புதிய உரை:

எந்த வகையாலும், எப்பொழுதும், யாவர்க்கும், தம் மனதுக்கும், ஆன்மாவுக்கும் மாட்சிமைப்படாத துன்பச் செயல்களை, ஒரு நாளும் செய்யாமல் இருப்பதே பெருமைக்குரிய வாழ்வாகும்.

விளக்கம்:

பிறருக்குத் துன்பங்களை ஒரு பொழுது செய்யலாம். ஏதாவது சிறுவகையால் செய்யலாம், யாரேனும் ஒருவர்க்குச் செய்யலாம் என்று மனதாலும், ஆத்ம சுகத்தினாலும் எண்ணுவது மனித இயல்பு. அப்படி ஒருபொழுது, ஒரு அளவு, ஒரு உயிர் என்று எண்ணவே கூடாது என்பதற்காகத்தான், எப்பொழுதும், யாருக்கும், எவ்வகையாலும் என்று அறுதியிட்டு, உறுதியாகச் சொல்கிறார்.

மனதுக்கு மேன்மை தராததைக் குறிக்கவோ, **'மாணா'** என்கிறார். 'மாணா' என்றால் மாட்சிமைப்படாத, மாட்சிமை என்றால் அமைதி என்று அர்த்தம். தன் மனம், ஆன்மாவிற்கு அமைதி வேண்டும் என்றால், அமைதிகாக்க ஒரு நாள் கூடத் துன்பம் இழைக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில், **'யாமை'** என்ற சொல்லைப் பெய்திருக்கிறார். அப்படியவன் துன்பம் இழைக்காத போது சிறந்தவனாகிறான். பெருமைக்குரியவன் ஆகிறான். வான் புகழ் பெறும், வளர்மிகு தலைவன் ஆகிறான் என்று **'தலை'** என்ற சொல்லைச் சொல்லி, ஏழாவது குறளில் அறனுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகிறார்.

318. தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ மன்னுயிர்க்கு இன்னா செயல்

பொருள் விளக்கம்:

தன் உயிர்க்கு = தன்னுடைய ஆன்மாவிற்கு
இன்னாமை = ஆகாமை என்பதை
தான் அறிவான் = தன் மனதால் நன்கு அறிபவன்
மன்னுயிர்க்கு = பெருமை மிக்க பிற உயிர்களுக்கு
என்கொலோ = என்ன வருத்தமாக இருந்தாலும்
இன்னா செயல் = துன்பம் இழைக்க மாட்டான்

சொல் விளக்கம்:

தன் = ஆத்மா; **தான்** = ஆத்மா; **இன்னாமை** = ஆகாமை
என்கொலோ = என்ன வருத்தமோ
மன்னுயிர் = பெருமைக்குரிய
இன்னா = துன்பம்

முற்கால உரை:

பிறர் செய்யும் இன்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாம் தன்மையை அனுபவித்து அறிகின்றவன், நிலைபேறுடைய பிற உயிர்கட்கு தான் அவற்றைச் செய்தல் என்ன காரணத்தால்?

தற்கால உரை:

தனக்கு பிறர் இழைக்கும் துன்பத்தை நன்கு அறிந்த ஒருவன், பிற உயிர்களுக்கு அத்தகைய துன்பங்களைச் செய்தல் என்ன காரணம் பற்றியோ? அவ்வாறு செய்வது தகாது என்க.

புதிய உரை:

தன்னுடைய ஆன்மாவிற்கு, ஆகாமையான துன்பங்கள் தன் மனதால் நன்கு அறிபவன், பெருமைமிக்க பிற உயிர்களுக்கு, என்ன வருத்தமாக இருந்தாலும் துன்பம் இழைக்கமாட்டான்.

விளக்கம்:

என்கொலோ என்றால் என்ன காரணமோ என்று கூறினார்கள். நான் இங்கே என்ன வருத்தமோ என்று சொல்லியிருக்கிறேன். தனக்கு உடல், மனம், ஆன்மாவிற்குரிய வருத்தங்களை விளைவிக்கின்ற எந்த உயிருக்கும் இன்னா செய்யக் கூடாது.

தான் செய்கின்ற தீங்கும், தீமையும், பிற உயிர்களை எவ்வாறு பாதிக்கும், பாழ்படுத்தும் என்பதை, தன் உயிர்க்கு நேர்கிறபோது, என்னதுயர்களை உண்டாக்கும் என்பதை அறிகின்ற அறிவாளனாகிய அறனை, இங்கே 'தான்அறிவான்' என்கிறார்.

ஆத்ம வேதனைகளின் அளவற்ற துன்பங்களை அறிந்த காரணத்தினால்தான், தன் ஆன்மாவைச் சிறந்த ஆன்மா என்பது போலப் பிற உயிர்களுக்கும் பெருமை உடையதாக இருக்கின்றது என்பதை எட்டாவது குறளில் கூறுகிறார் வள்ளுவர்.

319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்

பொருள் விளக்கம்:

பிறக்கு இன்னா = தான் வெறுக்கின்ற மாற்றார்க்கு தீங்கினை
முற்பகல் = முதலில்
செய்யின் = செய்தால்
இன்னா = அந்தத் தீமையான
பிற்பகல் = தான் வாழ்கின்ற ஊழிக்காலம் வரை
தமக்கு = தமுக்கடித்து ஆரவாரத்துடன்
தாமே = தீப்பிழம்பாய்
வரும் = தொடரும்

சொல் விளக்கம்:

பகல் = தினம், ஊழிக்காலம், நெடுங்காலம்
பிற்பகல் = எதிர்வரும் காலம்; **முன்** = முதல்
தமக்கு = தமுக்கு, தண்டோரா, ஆரவாரம்
தாமே = எரிவு

முற்கால உரை:

பிறருக்கு இன்னாதனவற்றை ஒருபகலது முற்கூற்றின் கண், செய்வராயின், தமக்கு இன்னாதன, அதன் பிற் கூற்றின்கண் அவர் செய்யாமல் தானே வரும்.

தற்கால உரை:

பிறருக்குத் துன்பமானவற்றை முற்பகலில் ஒருவர் செய்தால், அவருக்குத் துன்பம் பிற்பகலில் தாமே வந்து சேரும்.

புதிய உரை:

தான் வெறுக்கின்ற மாற்றார்களுக்குத் தீமைகளை **முதலில்** செய்தால், அந்தத் தீமைகளின் தாக்கம், அவர் வாழ்கிற ஊழிக்காலம் வரை, தண்டோராப் போட்டுக் கொண்டு, தீப்பிழம்பாய் வந்து, தொடர்ந்து தாக்கும்.

விளக்கம்:

பகல் என்றால் காலையில் இருந்து மாலைவரை உள்ள பொழுது என்று பொருள் கண்டு இருக்கிறார்கள். அதனால்தான் ஒருவன் காலையில் துன்பம் செய்தால், மாலையில் தனக்கு துன்பம் வரும் என்று உரைகண்டு இருக்கிறார்கள்.

நான் இங்கே பகல் என்பதற்கு, நெடுங்காலம் என்றும், ஊழிக்காலம் என்றும் பொருள் அறிந்து சொல்லியிருக்கிறேன். **'முன்'** என்றால் முதலில் என்றும் **'பின்'** என்றால் எதிர்காலம் என்றும் புதிய பொருளைத் தந்து இருக்கிறேன்.

ஒருவன் பிறருக்குத் தீமைகளை தான் முதலில் தொடங்கி வைக்கிற செயல் ஆனது, தொடர்ந்து விளைவுகளை ஏற்படுத்துகிற வினையாக மாறுகிறது. அந்த மாறிய தீவினையே ஊழ் வினையாக வந்து, அவன் வாழ் நாள் முழுவதும், உறுத்தி, வருத்தி, தமுக்கடித்து ஊருக்கெல்லாம் உரைத்து, தீப்பிழம்பாக எரித்துத் தொலைக்கிறது.

தீங்கிழைத்தவன் மரண பரியந்தம் அந்த தீங்கிழைத்த பயனை அனுபவிப்பான் என்றும், சாதாரண தீச்செயல் எவ்வாறு சக்கராயுதமாகச் சுழன்று, தீப் பிழம்பாக வந்து எரித்துச் சுடுகிறது என்கிற உண்மையை வள்ளுவர் ஒன்பதாவது குறளில் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார்.

320. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார் நோய்இன்மை வேண்டு பவர்

பொருள் விளக்கம்:

நோய் எல்லாம் = துன்பங்களுக்கு எல்லாம்
நோய்செய்தார் = வேதனைதந்து விரட்டுகிற
மேலவாம் = பெருந்தன்மைமிக்க அறன்
நோயின்மை = தனக்குத் துன்பமே வேண்டாம் என்கிற
வேண்டு = விருப்பத்தை
பவர் = போர்த்திக் காத்துக் கொள்வதால்
நோய் செய்யார் = பிறருக்குத் தீமைகளைச் செய்யமாட்டார்

சொல் விளக்கம்:

நோய் = துன்பம், குற்றம், வேதனை
மேலவாம் = பெரியதன்மை, வான்தன்மை; **வேண்டு** = விரும்ப
பவர் = மூடுகை, போர்த்தல்

முற்கால உரை:

இன்னாதனவெல்லாம் பிரிதோர் உயிர்க்கு இன்னாதன செய்தால் மேலவாம் அதனால் தம் உயிர்க்கு இன்னாதன வேண்டாதார் பிரிதோர் உயிர்க்கு இன்னாதன செய்யார்.

தற்கால உரை:

துன்பம் எல்லாம் முன்பு பிறர்க்குத் துன்பம் செய்தார்மேலே சேர்வனவாகும். ஆதலால் பின்பு துன்பப்படாமல் வாழ விரும்புபவர்கள், இப்பொழுது இதற்குத் துன்பம் செய்ய மாட்டார்கள்.

புதிய உரை:

துன்பங்களுக்கு எல்லாம் வேதனை தந்து விரட்டுகிற பெருந்தன்மை மிக்க அறன் ஆனவன், தனக்குத்துன்பமே வேண்டாம் என்கிற, விருப்பத்தைப் போர்த்திக் காத்துக் கொள்வதால், பிறர்க்குத் தீமைகளைச் செய்யமாட்டான்.

விளக்கம்:

வாழ்க்கையில் சுகம் கொடுப்பது செல்வம், பதவி, அதிகாரம் போன்றவைகள் அல்ல. உடலால் சந்தோசம். மனதால் மகிழ்ச்சி. ஆன்மாவால் களிப்பு. இவை இருந்தால்தான் ஒருவன் சுகமாக வாழ்கிறான். அவன் வாழ்க்கை சொர்க்க பூமியாக அமைகிறது.

மனிதப் பிறவி எடுத்த மாபெரும் புண்ணியத்தை, அவன் தினம், தினம் ருசிக்கிறான். ரசிக்கிறான். அப்படிப்பட்ட உயர்ந்த வாழ்வை ஒருவன் வாழ வேண்டும் என்பதற்காகவே, பத்தாவது குறளில் தீமையை விரட்டு. தேகத்திற்கு இன்பங்களைத் திரட்டு! என்று வான்புகழ் கருத்துக்களை வள்ளுவர் வாரி வழங்குகிறார்.

33. கொல்லாமை

கொல்லா + மெய் என்று இந்த அதிகாரத்தைப் பிரித்திருக் கிறேன். அதாவது எந்த உயிரையும், சாவுக்கு ஆளாக்காத, சத்திய வாழ்க்கையில் வாழும் சுத்த தேகம் என்று சொல்லலாம்.

ஒரு உயிரைக் கொல்லுதல் என்பது. உயிரைப் பிரிக்கும் சாவாகும். இது ஒரு முறையாகும் இன்னொரு முறை கொல்லாமல் கொல்லுவது. உடல் துடிக்கும், மனம் கொதிக்கும். ஆன்மா வெடிக்கும். ஆனாலும் உயிர்பிரியாது. இதுதான் கொல்லாமல் கொல்லும் முறை.

உடலால் மரணம், மனதால் நோவு. ஆன்மாவால் வேதனை. மரணம் என்பது நச்சுக்காயம். நோவு என்பது, துடித்துத் துவள்வது. வேதனை என்பது வெந்து, குலைவது. ஆக, அற்பமானவர்கள் பெறுகிற அற்ப சந்தோசத்திற்காக உயிர் வதை செய்வது, இது உலக இயற்கை.

ஒழுக்கத்தை வலியுறுத்துகின்ற அறத்துப்பாலில், வள்ளுவர் கொல்லாமையைச் கூறுகிறார் என்றால், அது ஒழுக்கத்தின் உச்சக்கட்ட நிலையாகும் என்பதால்தான். தீமையின் முடிவு சாவை நோக்கிச் செல்கிறது. அதனால்தான் இன்னா செய்யாமை வேண்டு மென்ற வள்ளுவர், உயிர்வதை செய்யக் கூடாது என்ற கொள்கையை, அடுத்ததாக, 'கொல்லாமை' அதிகாரத்தில் வைத்திருக்கிறார்.

321. அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்

பொருள் விளக்கம்:

அறவினை எனில் = புண்ணிய செயல் என்பது
யாது கொல்லாமை = அரக்கத்தனமாக உயிர் வதை செய்யாமை
கோறல் = அப்படிக் கொல்லும் கொலை ஞனாகிறபோது
பிறவினை = அகிலத்திலுள்ள பாவங்கள், காமக்குரோதங்கள்
எல்லாம் = சகலமும்
தரும் = அவனைத் தொடர்ந்து வந்து சாடும்

சொல் விளக்கம்:

அறவினை = புண்ணியச் செயல்; **யாது** = அரக்கத்தனம்
கொல் = உயிர்வதை; **கோறல்** = கொல்லுதல்
பிறவினை = காமம், பாவம் போன்றவை
எல்லாம் = சகலம், அகம்

முற்கால உரை:

அறங்கள் எல்லாம் ஆகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஓர் உயிரையும் கொல்லாமையாம் அவற்றைக் கொல்லுதல், பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் தானே தரும் ஆதலால்.

தற்கால உரை:

அறச்செயல் என்பது யாதென்றால், எந்த ஒரு உயிரையும் கொல்லாது இருத்தல் ஆகும். கொல்லுதல் என்பது அறம் அல்லாத செயல்கள் எல்லாவற்றையும் உருவாக்கும்.

புதிய உரை:

புண்ணிய வாழ்க்கை என்பது, அரக்கத்தனமாகப் பிற உயிர்களைக் கொல்லாது இருப்பது ஆகும். அப்படிச் கொல்கிறபோது, அகிலத்தில் உள்ள, காம, குரோதங்கள் எல்லாம் வந்து அவனைச் சாடும்.

விளக்கம்:

அகிலத்தில் உள்ள சகலபாவத்திற்கும் சாத்தான் போலத் தலைமை தாங்குவது காமம். காமம் ஏற்பட்ட உடனேயே, அவன் இந்திரியங்கள், அறுந்துபோன மின்சாரக் கம்பிகள் ஆகிவிடுகின்றன. அது பட்ட இடமும், தொட்ட இடமும், எரிந்து அழிவதுபோல, காமம் கொண்டதேகத்தில் அகக்கண் பொசுங்குகிறது. புறக்கண் மழுங்குகிறது. அவன் வாழ்வே புதை சேற்றில் விழுந்த வனைப்போல் ஆகிவிடுகிறது.

ஆகவே கண்ணியமில்லாத கொலைச் செயலை நிறுத்து, புண்ணியச் செயலான உயிர்காக்கும் கலையை வளர்த்து, என்று கொல்லாமை அதிகாரத்தை தொடங்கி வைக்கிறார்.

322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

பொருள் விளக்கம்:

பகுத்து உண்டு = தெளிவாய் கூறப்பட்டு உள்ளது என்னவென்றால்
பல்லுயிர் = பல உயிர்களையும்
ஓம்புதல் = தீதுவராமல், காப்பாற்றி வளர்த்தல்
நூலோர் = கற்றறிந்த அறிஞர்கள்
தொகுத்தவற்றுள் எல்லாம் = ஒழுங்குபடுத்திய கருத்துக்கள் எல்லாவற்றிலும்
தலை = சிறந்ததாகும்

சொல் விளக்கம்:

பகுத்தல் = வகுத்துத் தெளிவாய்க் கூறுதல்; **உண்டு** = உள்ளது
ஓம்புதல் = தீதுவராமல் காத்தல்; **தொகுத்து** = ஒழுங்காக்கி
வற்றுள் = வண்மை, கருத்து

முறகால உரை:

உண்பதனை பசித்த உயிர்கட்குப் பகுத்துக் கொடுத்து உண்டு, ஓவகை உயிர்களையும் ஓம்புதல், அறநூல் உடையார் துறந்தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம்.

தற்கால உரை:

கிடைத்த உணவைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு, அப்படிப் பல உயிர்களையும் காப்பாற்றுதல் என்பது அறநூலோர் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாகிய அறம் ஆகும்.

புதிய உரை:

தெளிவாய் வகுக்கப்பட்டுள்ள அறநெறிகளைக் கற்றறிந்தார் அளவு படுத்திய கருத்துக்கள் யாவற்றிலும் தீதுவராமல் எல்லா உயிர்களையும் காப்பாற்றி வளர்த்தல் சிறந்ததாகும்.

விளக்கம்:

பகுத்துண்டு என்ற உடனேயே, உணவைப் பகிர்ந்து உண்டு என்றுதான் மேலோட்டமாக எண்ணி, உரை எழுதி இருக்கின்றார்கள். பல உயிர்களையும் தீதுவராமல் காப்பாற்றுவதுதான் முக்கியம் என்பதால், உணவைப் பகிர்வது என்பது சிறப்பாக இல்லை.

உண்டு என்றதும் உள்ளது என்ற அர்த்தத்தை விட்டுவிட்டு, உண்டி என்ற எல்லோரும் எண்ணி விட்டனர்.

புதிய உரையாக அறிஞர்கள் தொகுத்த கருத்து (வற்று)க்கள் எல்லாவற்றிலும், பிற உயிர்களுக்கு இன்னா செய்யாமல், உயிர்வாதை இல்லாமல் பாதுகாப்புத் தருவதே பெருஞ்செயலாகும் என்பதால்தான் வள்ளுவரும், ஓம்புதல் என்ற வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்.

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சார பொய்யாமை நன்று

பொருள் விளக்கம்:

ஒன்றாக = நிச்சயமாக
நல்லது = நன்மைபயக்கும் ஒழுக்கமானது

கொல்லாமை = உயிர்வதை செய்யாமை ஆகும்.
மற்று அதன் = அதைத் தொடர்ந்து
பின்சார = அந்தப் பெருமையைப் பற்றிக் கொள்ள
பொய்யாமை = கொல்லா ஒழுக்கத்திலிருந்து தவறாமை
நன்று = நன்மை பயப்பதாகும்.

சொல் விளக்கம்:

ஒன்றாக = நிச்சயமாக; **நல்லது** = அறமாகிய ஒழுக்கமானது
பின் = பெருமை; **சாரா** = பற்றிக்கொள்ள
பொய்யாமை = தவறாமை

முற்கால உரை:

நூலோர் தொகுத்த அறங்களுள், தன்னோடு இணைப்பதின்றி, தானேயாக நல்லது கொல்லாமை. அஃது ஒழிந்தால் பொய்யாமை அதன் பின்னே நிற்க நன்று.

தற்கால உரை:

இணையில்லாத, நல்ல ஒரு அறமாகக் கருதப்படுவது கொல்லாமை ஆகும். அதற்கு அடுத்த நல்லறமாக வைத்துக் கருதத் தக்கது பொய்யாமை ஆகும்.

புதிய உரை:

நிச்சயமாக நன்மை பயக்கும் ஒழுக்கமானது உயிர்வதை செய்யாமை ஆகும். அதைத் தொடர்ந்து பெருமைமிக்க அந்த ஒழுக்கத்தைப் பற்றிக் கொண்டு தவறாமல் தொடர்வது நன்மை பயப்பதாகும்.

விளக்கம்:

கொல்லாமையின் சிறப்பை வலியுறுத்த வள்ளுவர் நிச்சயமாக என்று சொல்லுகிறார். நன்மை பயக்கும் ஒழுக்கங்களில் கொல்லாமை முக்கிய இடத்தை வகுப்பதால், அதன் பெருமையைப் பற்றிக் கொள்ளுங்கள். அதிலிருந்து தவறாமல் ஒழுக்க வாழ்வைத் தொடருங்கள் என்று, நல்லதொரு நடைமுறை வாழ்க்கையை மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

324. நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி

பொருள் விளக்கம்:

நல் ஆறு என = வாழ்வுக்கு நல்ல வழியென
படுவது = மனதில் புலப்படுவது

யாதெனில் = என்ன என்றால்
யாது = அரக்கத்தனமாக
ஒன்றும் = ஓர் உயிரையும்
கொல்லாமை = கொல்லாததை
சூழும் = ஆலோசனை செய்து (ஏற்று)
நெறி = நிமிர்ந்து நிற்றலே ஆகும்.

சொல் விளக்கம்:

நல்லாறு = நல்லவழி; **நெறி** = நிமிர்ந்திரு
படுவது = புலப்படுவது, மனதில் தோன்றுவது
யாது = இராக்கதம்; **சூழும்** = ஆலோசனை பண்ணுதல்

முற்கால உரை:

மேற்கதி வீடுபேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாதென்றுவினவின், அஃது யாதோர் உயிரையும் கொல்லாமை யாகிய அறத்தினைக் காக்கக்கருதும் நெறியேயாகும்.

தற்கால உரை:

நல்ல நெறியென்று சொல்லப்படுவது எது என்று கேட்டால், எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாமை என்னும் அறத்தைப் போற்றி நிற்கும் நெறியே ஆகும்.

புதிய உரை:

வாழ்வுக்கு நல்ல வழியென மனதில் புலப்படுவது என்ன என்றால், அரக்கத்தனமாக எந்த ஒரு உயிரையும் கொல்லாமல் இருப்பதை யோசித்து அதன் வழி நிமிர்ந்து நடத்தலே ஆகும்.

விளக்கம்:

கருணை சிறிதும் இல்லாமல் கண்ட உயிர்களைக் கொல்லும்போது மனதில் கொண்ட வெறித்தனத்துக்கு, கரைகாணா இன்பம் கிடைத்தது என்பது மனித மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை கொடுக்கும். அது அளவிலா சந்தோசமல்ல. அற்ப சந்தோசம். அதில் நிற்பதும், நிலைப்பதும், நெஞ்சிலே நஞ்சினைக் குவிக்கும் செயலாகும்.

ஆகவேதான், அருளில் இருந்து வழுவுகிற நிலையை அரக்கத்தனம் என்றார். அரக்கத்தனம் வந்து விட்டாலே முரட்டுத்தனமும், முட்டாள் தனமும் முட்டி மோதிக் கொண்டு பீறிட்டுக் கிளம்பும். ஆகவேதான், யோசித்து, கொல்லாமை ஒழுக்கத்தைக் கைக்கொள்ளுங்கள். அதிலே நெஞ்சத்தை ஒருநிலைப்

படுத்தி நிமிர்ந்து நில்லுங்கள். வாழ்க்கைப் பேற்றினை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று நான்காவது குறளில் நறுக்குத் தெறித்தாற் போல் குறிக்கிறார்.

325. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் தொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை

பொருள் விளக்கம்:

நிலைஅஞ்சி = உலகத் தலைமைக்கு
நீத்தார் = பாவச்செயல் துறந்தார்
உள்எல்லாம் = மன எழுச்சிஎல்லாம்
கொலைஅஞ்சி = பிற உயிர்களின் உயிர்வதைக்குப் பயந்து
கொல்லாமை = கொல்லாமையை மேற்கொள்ளும் பொழுது
சூழ்வான் = உறவினர், மற்றும் சூழ்ந்தவர்கள் மத்தியில்
தலை = பெருமைக்குரிய பேற்றினைப் பெறுகிறான்

சொல் விளக்கம்:

நிலை = உலகம்; **அஞ்சி** = தலைமை; **நீத்தார்** = பாவம் துறந்தவர்கள்
உள் = மன எழுச்சி; **சூழ்வோன்** = உறவினர், சூழ்ந்து நிற்பவர்கள்.

முற்கால உரை:

பிறப்பு நின்ற நிலையை அஞ்சி, பிறவாமை பொருட்டு, மனை வாழ்க்கையைத் துறந்தார் எல்லாருள்ளும், கொலைப் பாவத்தை அஞ்சி கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்தவன்.

தற்கால உரை:

தீமை நிறைந்த சூழ்நிலையைக் கண்டு அஞ்சி அதனை விட்டு நீங்கியவர்கள் எல்லாருள்ளும், கொலை செய்வதற்கு அஞ்சிக் கொல்லாமை என்னும் அறத்தைப் போற்றுகின்றவன் தலை சிறந்தவன் ஆவான்.

புதிய உரை:

பாவம் துறந்தவர் தமது மன எழுச்சியால் கொலைக்கு அஞ்சிக் கொல்லாமையைக் கடைப் பிடிக்கிறபோது, அவர் உறவினர் மற்றும் சூழ்ந்தவர் எல்லாருக்கும் நிலைவேறுடைய தலைமை நிலையை அடைகிறார்.

விளக்கம்:

தலைமைப் பேற்றை விரும்புகிறவன், தவறுகள் செய்யாதவனாக, பாவங்கள் புரியாதவனாக, கொலை உணர்வு

கொள்ளாதாவனாக இருக்க வேண்டும் என்று கருதிய வள்ளுவர், இந்தக் குறளைத் தந்திருக்கிறார்.

கொலைக்கு அஞ்சுவது பிறவி ஒழுக்கம். கொலையைத் தவிர்ப்பது துறவி ஒழுக்கம். அந்தக் கொலை உணர்வுக்கு அஞ்சி, கொல்லாவிரதத்தைக் கைக் கொள்வது மனிதர்களின் புனித ஒழுகுகமாகும். அப்படிப்பட்டவருக்குத்தான், சுற்றத்தார் மட்டுமல்ல, சூழ்ந்து இருக்கும் மற்றவர்கள் இடையேயும், பெரும்புகழ் பரவுகிறது. அதன் காரணமாகத் தலைமைப் பேறும் நிலை பெறுகிறது என்று ஐந்தாவது குறளில் தலைமையாளருக்குரிய தகுதியைத் தெளிவு படுத்திக் காட்டுகிறார்.

326. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று

பொருள் விளக்கம்:

கொல்லாமை = உயிர்வதை செய்யாத ஒழுக்கத்தை
மேற்கொண்டு = ஏற்றுக்கொண்டு
ஒழுகுவான் = உயர்வாழ்வு வாழ்பவன்
வாழ்நாள் = வாழ்கின்ற காலம் வரை
மேல்செல்லாது = வருங்காலத்திலும் அழியாமல்
உயிர் = ஆன்மா
உண்ணும் = அனுபவித்து மகிழும்
கூற்று = (அவனும்) வரலாறாக விளங்குவான்

சொல் விளக்கம்:

மேல் = வருங்காலம்; **செல்லாது** = அழியாது; **உயிர்** = ஆன்மா
உண்ணும் = அனுபவித்து
வாழ்நாள் = வாழ்கிறகாலம் வருங்காலம்; **கூற்று** = வரலாறு,

முற்கால உரை:

கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது, வாழ்நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்று செல்லாது.

தற்கால உரை:

கொலை செய்யாமை என்னும் அறத்தை மேற்கொண்டு நடந்து கொள்பவனது வாழ்நாளின் மேல், உயிரைக் கொண்டு செல்லும் சாவு என்ற கூற்றுவன்கூட அவனது உயிரைப் பறிக்கச் செல்லமாட்டான்.

புதிய உரை:

உயிர்வதை செய்யாத ஒழுக்கத்தை ஏற்றுக் கொண்டு, உயர் வாழ்வு வாழ்பவன் வாழ்கிறகாலம், மற்றும் எதிர்காலம் எல்லாம் வீணே அழியாமல், அவனது ஆன்மா அனுபவித்து மகிழ்கிற வரலாறு ஆகவே அமையும்.

விளக்கம்:

வாழ்க்கை என்பதற்கு ஒரு சுவையான விளக்கம் தருவார்கள். அதாவது, சாகின்ற மனிதனுக்கும், சாகாத எமனுக்கும் இடையே நடைபெறுகிற போராட்டம் என்று. அந்தப் போராட்டத்தில் மனிதன் சலித்துப் போகிறான். இளைத்துக், களைத்து, இறுதியில் தன்னைச் சாவின் கையில் ஒப்படைத்துக் கொள்கிறான்.

அங்கே, மனித உடல் கரைகிறது. அவன் வதிந்த வாழ்வு காற்றுப்போல கரைகிறது. ஆனால் விளைத்த வரலாரோ வாழ்ந்து கொண்டு இருக்கிறது. அப்படி வாழ்கிற வாழ்வைத்தான் ஆன்மா அனுபவிக்க விரும்புகிறது. இந்தக் கூர்மையான குறிப்பைத்தான் வள்ளுவர் இந்தக் குறளிலே குறித்து இருக்கிறார்.

மற்றவர்கள் எழுதிய உரையில், கொல்லாமையைக் கடைப்பிடிப்பனிடம், கூற்றும்வராது. சாவும் நேராது என்பதுபோல, ஒரு பிரமையை உண்டு பண்ணியிருக்கிறார்கள். ஆனால் வள்ளுவரோ, நிதர்சன உண்மையாக பிற உயிர்களை வதை செய்யாதவனை வரலாறு வாழ்த்தும். வையகம் வணங்கும். அதனைச் செவிமடுக்கும் அவனது சிந்தையும், செந்தமிழ்த் தேன் குடித்ததுபோலக் களிப்புறும் என்கிறார்.

327. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை

பொருள் விளக்கம்:

நீப்பின் = பற்றற்ற நிலையான துறவுக்குரிய
உம் = ஆக்கப்பொருள்
தன்னுயிர் = தன் ஆத்மா பெறுவதற்கு உரிய சூழல் அமைவதாக இருப்பினும்
பிறிதுதான் = பிற ஆன்மாக்களின்
இன்னுயிர் = பெருமை மிகுந்த ஜீவனானது
நீக்கும் = நீக்குகிற
வினை செய்க = செயலைச் செய்யக் கூடாது

சொல் விளக்கம்:

நீப்பு = துறவு, பற்றற்ற நிலை; **உம்** = அக்கப் பொருள்
தன்னுயிர் = தன் ஆன்மா; **பிறிதுதான்** = பிறஆன்மா
இன்னுயிர் = பெருமை மிகுந்த ஜீவன்

முற்கால உரை:

அது செய்யாவழி தன்னுயிர் உடம்பின் நீங்கிப் போகுமாயினும், தான் பிறிதோர் இன்னுயிரை, அதன் உடம்பின் நீக்கும் தொழிலைச் செய்யற்க.

தற்கால உரை:

ஒருவனின் உயிர்போகக் கூடியதாக இருந்தாலும், அந்நிலை பிற உயிர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டி, அவன் வேறோர் உயிரைப் போக்கும் ஒரு செயலை ஒருபோதும் செய்யக்கூடாது

புதிய உரை:

பற்றற்ற துறவு நிலையில், ஆக்கமெல்லாம் தன் ஆன்மாவுக்குக் கிடைப்பதாக இருந்தாலும், பிற ஆன்மாக்களின் பெருமைக்குரிய ஜீவன்களைப் பிரிக்கும் செயலைச் செய்யற்க.

விளக்கம்:

துறவு என்பது இயல்பாக நடந்து விடுவது இல்லை. சுற்றி வருகின்ற உறவு. வீழ்த்திக் கலக்குகின்ற சரிவு. பற்றிக் கொதிக்கின்ற பிரிவு. பாசப் போராட்டத்தின் விரிவு. இப்படி எல்லாம் பல பெருங்கடல்களைக் கடந்துதான் துறவு காலுன்ற வேண்டி இருக்கிறது.

அத்தகைய துறவுக்குள் கால் பதிக்கிற ஆன்மாக்கள் பெறுகிற ஆனந்த சுகமும், அனந்த கோடி களிப்பினைப் பெறும் மனமும், ஒருவனை எப்படி எல்லாம் மயக்கி, பிதற்றும். உட்காரச் செய்யும். அந்த மயக்கத்தைப் பெற்றவர்கள், தன்னிலை பிறழ்ந்து காறுமாறாக நடப்பார்கள். தறிகெட்டுத் திரிவார்கள். தீமைகளையும், பொல்லாங்குகளையும், தலைக்கு மிஞ்சிச் செய்வார்கள்.

ஆகவே, ஆன்ம சுதத்திற்காக அடுத்த உயிர்களை வதைக்காதே, அழிக்காதே என்று துறவின் சீர்மையை இந்த ஏழாவது குறளில் கோடிட்டுக் காட்டுகிறார்.

328. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்கு கொன்றாகும் ஆக்கம் கடை

பொருள் விளக்கம்:

நன்றாகும் = செம்மையும், சிறப்பும்
ஆக்கம் = உயர்ந்த அதிகாரமும்
பெரிதெனினும் = கீர்த்திமிக்க வல்லமையுடன் கிடைப்பதாக இருந்தாலும்
கொன்றாகும் = பிற உயிர்களைக் கொல்வதால் உண்டாகும்
ஆக்கம் = எழுச்சியானது
சான்றோர்க்கு = கற்றறிந்த அறிஞர்களையும்
கடை = இழிந்தோராக்கி விடுகிறது.

சொல் விளக்கம்:

ஆக்கம் = அதிகாரம், எழுச்சி; **நன்றாகும்** = செம்மை, சிறப்பு
பெரிது = வல்லமை, கீர்த்தி; **கடை** = கீழ்மை.

முற்கால உரை:

தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும், செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும் துறவான் அமைந்தார்க்கு ஓர் உயிரை கொல்ல வரும் செல்வம் கடை.

தற்கால உரை:

வேள்விக் கொலையினால் பெரும் செல்வம் வரும் என்றாலும் கொலையால் வரும் எப்படிப் பட்ட செல்வத்தையும் சான்றோர்கள் மிக இழிவான ஒன்றாகவே கருதுவார்கள்.

புதிய உரை:

வல்லமையும் புகழும் சிறப்பும் மிகுந்த அதிகாரம் கிடைப்பதாக இருந்தாலும், அந்த எழுச்சிக்காக கொலைச் செயலைப் புரியும் பொழுது சான்றோர்களும் இழிந்தோர்களாக ஆகிவிடுகிறார்கள்.

விளக்கம்:

வாழ்க்கையில் நலம் வளம் பலம் இவற்றுக்கும் மேலே வல்லமை படைத்தவைகளாக விளங்குவன பதவி பணம் புகழ் அதிகாரம் ஆட்சி முதலியன. தன் நிலையை மறப்பதும் இவற்றிற்காகத் தன் உயிரை இழப்பதையும் கூட மக்களில் பலர் பெருமையாகவே கருதுகிறார்கள்.

உடலால் அழிந்தாலும் உயிரால் மடிந்தாலும் அல்லது துயரால் கிடந்தாலும் அவர்கள் நோக்கமும் ஏக்கமும் அதிகாரத்திற்காகவே ஆசைப்படுகிறது. அல்லல் படுகிறது. இப்படிப்பட்ட விருப்பம்தான் ஆசையாக மாறி முடிவில் வெறியாக ஆகி முடிவைக் கொடுத்துவிடுகிறது.

எனவே அதிகாரமானது அகக் கண்ணை மறைக்கும். புறக் கண்ணை அழிக்கும் அறிவுள்ளவர்களே அகப்பட்டுக் கொண்டு திண்டாடி அழிந்துபோவதால், அகிலத்து மக்களே நீங்கள் ஆக்கம் பெரிதென்று ஆசைப்பட்டு அகமகிழாதீர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் எட்டாவது குறளில் எச்சரிக்கிறார்.

329. கொலை வினையர் ஆகிய மாக்கள் புன்மை தெரிவார் அகத்து.

பொருள் விளக்கம்:

கொலை வினையர் = கொலையைத் தொழிலாகக் கொண்டவர்களாக
ஆகிய மாக்கள் = மாறிய மனித விலங்குகள்
புலை வினையர் = இழிந்த சண்டாளர்கள் ஆவார்கள்
அகத்து = அவர்களின் உள்ளத்தில் உள்ளதை
புன்மை = அவர்களது பார்வையின் மூலமாகவே
தெரிவார் = மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்

சொல் விளக்கம்:

கொலை வினையர் = கொலைத் தொழிலர்
புலை வினையர் = சண்டாளர் ஈனர் இழிகுலத்தார்
புன்மை = பார்வை ஈனம்; **தெரிவார்** = அறிந்து கொள்வார்
அகத்து = மனதில் உள்ளது

முற்கால உரை:

கொலைத் தொழிலை உடையாராகிய மாந்தர் அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தார் ஆயினும் அறிவார் நெஞ்சத்துக் கொலைத் தொழிலினை.

தற்கால உரை:

கொலையைத் தொழிலாகக் கொண்டவர்களை கொலைத் தொழில் செய்யும் இழிந்த மக்கள் என்றுதான் அறிவுடைய மனிதர்கள் கருதுவார்கள்.

புதிய உரை:

கொலையைத் தொழிலாகக் கொண்ட மனித விலங்குகள், ஈனப் பிறவி பெற்ற சண்டாளர் ஆகின்றார்கள். அவர்கள் உள்ளத்தில் உள்ளதை எல்லாம் அவர்களது பார்வைகளின் மூலமாகவே மக்கள் அறிந்து கொள்கிறார்கள்.

விளக்கம்:

ஆன்மா அந்தரங்கமானது. வடிவம் தெரியாதது. ஆனால் அதனுடைய சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் முகந்து கொண்டு வெளி உலகத்திற்குக் காட்டுவது முகம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அகத்தை அகிலத்திற்குக் காட்டுவதற்கு வெளிக் கொண்டுவந்த முகத்திற்கு உதவுகிற உறுப்புக்கள் கண்கள் ஆகும். அந்தக் கண்களின் ஒளி தான் பார்வையாக மாறுகிறது. பார்வையில் நவரசங்களும் வந்து விழுமல்லவா?

ஆகவே, கொலை வினையர்கள் அவர்களது பார்வையால் அகப்பட்டுக் கொள்கிறார்கள் என்ற கருத்தை, வள்ளுவர் மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

330. உயிருடன்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொருள் விளக்கம்:

உயிர் உடம்பின் = மற்றவர்கள் உடம்பை விட்டு உயிரை
நீக்கியார் என்ப = நீக்குகிற செயலை செய்பவர்கள்
செயிருடம்பின் = தனது ஊனமுற்ற உடம்புடன்
செல்லா = செத்துத் திரிகிற
தீவாழ்க்கை = ஈன வாழ்க்கையை வாழ்கின்ற
அவர் = சண்டாளர்கள் ஆவார்கள்.

சொல் விளக்கம்:

செயிர் = ஊனம் செல்லாதல்

செல்லாதல் = இறந்துபோதல்

முற்கால உரை:

நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழி தொழில் வாழ்க்கையினை உடையாரே, இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கினவரென்று சொல்லுவர் வினைகளை அறிந்தோர்.

தற்கால உரை:

நோய் பொருந்திய உடம்புடன் வறுமைமிகுந்த இழிந்த வாழ்க்கை உடையவர்களை பல உயிர்களை பல உடம்புகளில் இருந்து நீக்கியவர்கள் என்று குற்றம் சாட்டுவர் பெரியோர்.

புதிய உரை:

மற்ற உடல்களில் இருந்து உயிர்களைப் பிரிக்கும் மாக்கள் எல்லோரும், தமது ஊன ஊடம்புடன் நடைப்பிண வாழ்க்கையை வாழ்கின்ற ஈனர்களாக ஆகிறார்கள்.

விளக்கம்:

ஒரு உயிரை ஒருவன் கொல்லும் பொழுதே தானும் உடலால் நலிந்தவனாகி, உயிரால் இழிந்தவனாகிறான். அவனது உடல் எல்லா உறுப்புக்களைக் கொண்டு இருந்தாலும் ஊனமானதாகவும், அவனது மனம் சிந்திக்கின்ற திறம் கொண்டதாக இருந்தாலும் ஈனமாகவும் கருதப்படுகிறது.

ஊனமும் ஈனமும் ஞானத்தை வேரறுத்து வீழ்த்துவதால், அவனது வாழ்வு மரணக் குழியில் அல்லாடிக் கிடக்கின்றது. அதனால், அவன் ஜகத்திலே செத்துத் திரியும் ஜீவனாக வாழ்கிறான்.

எனவே கொல்லாமையின் கொடுமையைத் தெரிந்துகொண்டு நீங்கள் அதைச் செய்யாமையில் சிறப்புடன் வாழுங்கள் என்று வள்ளுவர் இந்த அதிகாரத்தை சிறப்புடன் முடிக்கிறார்.

34. நிலையாமை

அதிகார விளக்கம்:

நிலையாமை என்ற சொல்லுக்கு நிலை இல்லாமை என்று எல்லோரும் பொருள் கண்டு இருக்கிறார்கள். மற்றவர்கள் நிலையாமெய் என்றதை நிலையாம் + மெய் என்று நான் பொருள் கொண்டு இருக்கிறேன்.

ஏனென்றால் 'நிலையாம் மெய்' என்பதை மெய் நிலையாம் என்று வகுத்துத் தொகுத்து இருக்கிறேன்.

உடம்பைச் சோற்றால் அடித்த சுவர் என்பார்கள். ஆனால் அது காற்றால் பிடித்த சுவர்தான். காற்றுக்கு ஆத்மா என்று ஒரு பெயர் உண்டு. உடம்பினுள்ளே ஜீவனாக உலவுகிற காற்றாகிய ஆத்மாவை **ஜீவாத்மா** என்பார்கள்.

உடம்பிலிருந்து வெளியேறி விடுகின்ற காற்று பரந்திலுள்ள (காற்றோடு) ஆத்மாவோடு கலக்கிறபோது புறக்காற்றைப் **பரமாத்மா** என்கிறார்கள்.

ஒருவர் இறந்துபோனால் அதாவது சுவாசிக்கும் சக்தியை இழந்துபோனால் அவர் சிவத்தில் இருந்து சவம் என்ற பெயரைப் பெறுகிறார். அதை மிகவும் மங்கலகரமான சொல்லிலே ஜீவாத்மா பரமாத்மாவோடு கலந்து விட்டது என்கிறார்கள்.

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடைப்பட்டுக் கிடக்கின்ற எல்லைகளே வாழ்க்கை என்று பெயர் பெறுகிறது. இந்த உண்மையான நிலையைத்தான் வள்ளுவர் மெய் நிலை என்று கூறவந்து, அவருக்கே உள்ள பாணியில் நிலையாம் மெய் என்றார். அதை எல்லோரும் நிலையாமை என்று எடுத்துக் கொண்டனர்.

உடலுயிர் பரிக்கும் கொல்லாமை என்ற அதிகாரத்திற்குப் பிறகு உடலுயிர் உறவு என்ற மெய் நிலையின் மேன்மைமிகு அதிகாரத்தை வைத்து இருக்கிறார்.

331. நில்லாத வற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு ஆண்மை கடை

பொருள் விளக்கம்:

நில்லாத = நிலையில்லாத
வற்றை = கருத்துக்களை எல்லாம்
நிலையான = உலகில் வாழ்விக்கும்
என்றுணரும் = என்று அறிந்து கொள்கிற
புல்லறிவு = கீழ்மையான அறிவு
ஆண்மை = ஆளுந் தன்மையான மனமுயற்சியை
கடை = தடை செய்யும்

சொல் விளக்கம்:

நில்லாத = நிலையில்லாத; **வற்றை** = கருத்தை
புல்லறிவு = கீழ்மையான அறிவு
ஆண்மை = மனமுயற்சி, ஆளுந்தன்மை; **கடை** = அழிந்து
மேலும் = தாழ்ந்தோன் ஆக்கும்

முற்கால உரை:

நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதல் உடையதென்று கருதுகின்ற புல்லிய அறிவினை உடையராதல் துறந்தார்க்கு இழிவு.

தற்கால உரை:

நிலையற்றவைகளை எல்லாம் நிலைத்து நிற்கக் கூடியன என்ற உண்மையான அறிவினை உடையவராக ஒருவர் இருத்தல் அவரது இழிவான நிலையைக் குறிப்பிடுவதாக இருக்கும்.

புதிய உரை:

நிலையில்லாத கருத்துள்ள பொருள்களை எல்லாம் வாழ்வுக்குத் துணை என்று நம்புகிற ஒருவரது கீழ்மையான அறிவு, அவரது மனமுயற்சி, ஆளுந்தன்மையை அழித்து மேலும் தாழ்ந்தோர் ஆக்கும்.

விளக்கம்:

வாழ்க்கையில் வருகிற எல்லா வற்றையுமே பொய் நிலை என்று சொல்லி ஒரு உன்னதமான வாழ்வை வழி நடத்துகிற உடம்பை மெய் நிலை என்று வள்ளுவர் குறிக்கிறார். உலக மாயையை உவந்து ஏற்கும் அறிவு புல்லறிவு. அந்த மாயையில் இருந்து விடுபட்டு வெளி வந்து மணியான வாழ்க்கையை வாழ்வது நல்லறிவு என்கிறார் வள்ளுவர்.

புல்லறிவின் பேராதிக்கம் ஆன்மாவின், ஆற்றலை, புரையோட வைக்கும். மனதின் ஆற்றலை மண்மூடச் செய்யும். உடம்பின் உயர் எழுச்சியை ஓரம் போக்கிவிடும். ஆகவே நிலை இல்லாத பொருளின் மீது நெஞ்சத்தால் அலைபாயாதே என்று முதல் குறளில் படிப்போரை வினாக்குறிக்குள் விட்டுவிடுகிறார்.

332. கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந்து அற்று.

பொருள் விளக்கம்:

கூத்தாட்டு = மகிழ்ச்சியை மிகுவிக்கும் நடனம், நாடகம், கூத்தில்
அவைக் குழாத்து = கூடிக்கலையும் கூட்டம் போல
பெருஞ் செல்வம் = இன்பம், கல்வி, அழகு, செல்வம் இவற்றை உடைய பெரிய வாழ்க்கையின்
போக்கும் = விதமும்
விளிந்து அற்று = கேடுகளை விளைத்து அழிந்துபோகும்

சொல் விளக்கம்:

கூத்தாட்டு = மகிழ்ச்சிமிகு நடனம், நாடகம்
குழாம் = கூட்டம்; **அவை** = அறிவு; **செல்வம்** = வாழ்க்கை
விளிந்து = சாவு, கேடு.

முற்கால உரை:

ஒருவன் மாட்டு பெரிய செல்வம் வருதல், கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கண் சான்றோர் குழாம் வந்தாற் போலும், அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்த வழி, அக்குழாம் போயினாற் போலும்.

தற்கால உரை:

கூத்தாடும் அவைக்களத்தில் மக்கள் கூட்டம் முதலில் வந்து சேருவதும், இறுதியில் கலைந்து போவதும் போன்றது, செல்வம் ஒருவனிடம் வருங்காலத்தில் வந்து, போகும் காலத்தில் அடியோடுபோய் விடும் என்பதும் ஆகும்.

புதிய உரை:

கல்வியும், அழகும், இன்பமும் மிகுந்த பெரிய வாழ்க்கையும், கூத்தாடும் சபையில் கூடி, இருந்து கலைந்து போவது போல பெருகிய வாழ்க்கையும் பின்பு குலைந்து போகும். இன்பவாழ்வின் எல்லையில்லாப் பெருக்கமும் குலைந்து அழிந்து போகும்.

விளக்கம்:

கூத்தாடுகிற சபையில் கூட்டம் சேர்ந்தால் கூத்தாடுபவர்களுக்குக் கொண்டாட்டம். அங்கே எழுகின்ற கைதட்டல், ஆரவாரக் கூச்சல் இடி முழக்கம் போன்ற வெடிச்சிரிப்பு எல்லாமே அவர்களை மெய்மறக்க வைக்கும். காட்சி முடிந்ததும், மாட்சி முடிகிறது. காண வந்த கூட்டம் ஈசலாகப் பறந்து போகிறது.

அதுபோலவே மனித வாழ்க்கை. அதிலே வந்து சேருகிற அழகும், கல்வியும், ஆக்கமும், இன்பமும், செழிப்பும் எல்லாம் செல்வமாகி, வாழ்வுக்கு வண்ணம் கூட்டுகின்றன.

அந்த வண்ணத்திற்கு வடிமாய் அமைந்திருப்பது மெய்யாகிய உடம்பு. அந்த வாழ்வில் சுவடுகளாக வந்த எல்லா நிலையும் அழியும். ஆனால் வாழ்க்கை அழிவதில்லை. ஆனால் மெய்யில் உள்ள, சக்தியும், செழுமையும் சிதைந்துபோனால் இருளாகி விடுகிறது என்கிற தத்துவத்தை வள்ளுவர் இரண்டாம் குறளில் எடுத்துக் கூறுகிறார்.

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்

பொருள் விளக்கம்:

அற்கா = நிலையில்லாமல்
இயல்பு இற்று = வரலாறு அழிவது
செல்வம் = செல்வ வாழ்க்கை
அதுபெற்றால் = அப்படிப்பெற்ற செல்வ வாழ்க்கையை
அற்குப = நிலைத்து நிற்பதற்கு
ஆங்கே = வாழும் காலத்தே
செயல் = ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும்

சொல் விளக்கம்:

அற்கா = நிலையாக; **இயல்பு** = வரலாறு; **இற்று** = அழிவது
செல்வம் = செல்வ வாழ்க்கை; **அற்குப** = நிலைபெற
ஆங்கே = அக்காலத்தே; **செயல்** = ஒழுக்கம்

முற்கால உரை:

நில்லாத இயல்பினை உடைத்து செல்வம். அதனைப் பெற்றால் அதனால் செய்யப்படும் அறங்களை, அப்பொற்ற பொழுதே செய்க.

தற்கால உரை:

செல்வமானது நிலைத்து நிற்காத இயல்பை உடையதாகும். அத்தகைய செல்வத்தை ஒருவன் பெற்றால் செய்யக்கூடிய நிலையான அறச் செயல்களை, அவன் பெற்ற அப்பொழுதே செய்ய வேண்டும்.

புதிய உரை:

நிலை இல்லாத வரலாற்றை உடைய செல்வ வாழ்க்கையைப் பெறுகிற ஒவ்வொருவரும், அந்த வாழ்வு நிலைத்து இருக்க வேண்டுமானால் ஒழுக்கத்தை வாழ்நாள் எல்லாம் காக்க வேண்டும்.

விளக்கம்:

உணவின் சுவைக்கு உப்பு தேவை. ஆனால் அந்த உப்பே உணவு ஆகிவிடாது. வாழ்க்கைக்கு செல்வம் தேவை. ஆனால் அந்தச் செல்வமே வாழ்க்கை ஆகிவிடாது.

செல்வம் வந்துபோகும் வரலாறு உடையது. இருந்து ஏற்கும் இயல்பு உடையது வாழ்க்கை. அதை மகிழ்ந்து அனுபவிக்கும் இயல்பு உடையது மெய்.

அந்த மெய்யானது நிலைத்து, நீடித்து, நெறியான இன்பத்தை அளிக்கத் துணையாக நிற்பது ஒழுக்கம். ஒழுக்கமானது வலிமையால் பிறப்பது.

ஆகவே, வலிமை சார்ந்த ஒழுக்கமான வாழ்வு வாழ்ந்தால் வாழ்வும் செழிக்கும். வரலாறும் தழைக்கும் என்று வள்ளுவர் மூன்றாவது குறளில் கூறுகிறார்.

334. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாளது உணர்வார்ப் பெறின்

பொருள் விளக்கம்:

நாள்என = தினம், தினம் புதுமைகளை
ஒன்றுபோல் = மதிப்பிற்குரியதாக
காட்டி = வாழ்க்கை காட்டுகிறபோது
அது = அதை
உயிர்ஈரும்வாள் = ஆன்மா அறிகிற ஒளியாக
உணர்வார் = கற்று அறிந்தால்
பெறின் = பயன்பெறலாம்.

சொல் விளக்கம்:

நாள் = தினம், இளமை, புதுமை, ஆயுள்
ஒன்று = மதிப்பிற்குரிய, ஒப்பற்ற; **உயிர்** = ஆன்மா
ஈரும் = அறிவு; **வாள்** = ஒளி, கத்தி; **உணர்வார்** = கற்றறிதல்

முற்கால உரை:

நாள் என்று அறுக்கப்படுவதொரு கால வரையறைபோல. தன்னைக் காட்டி, ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர். அஃது உணர்வாரைப் பெறின்

தற்கால உரை:

வாழ்க்கையில் உண்மை நிலையை ஆராய்ந்து அறியக் கூடிய அறிவுடையோர் ஒவ்வொரு நாளையும், உடம்பின் வாழ்வை அறுத்துக் குழைத்துக் கொண்டு வரும் வாள் என்று கருதுவார்கள்.

புதிய உரை:

ஒவ்வொரு நாளும், வாழ்க்கை புதுமையையும், இளமையையும் தருவதால், அந்த மேன்மையை, ஆன்மா அறியும் ஒளியாக பின்பற்றுகிற பகுத்தறிவால், மேலும் பயன் பெறலாம்.

விளக்கம்:

ஒவ்வொரு நாளும் தொடங்குவதை பிறப்பு என்பார்கள். இருளுக்குப்பின் நாள்வருவது பிறப்பு. ஒருவன் இரவு முழுவதும் உறங்கி விழித்து எழுவதும் பிறப்பு. பிறப்பு என்றால் பிரமிப்பு ஊட்டும் ஒரு பெரிய சம்பவம். வாழ்க்கையில் ஏற்படுகின்ற சம்பவம், ஒருவனது உடலுக்கு இளமையையும், மனதுக்கு எழுச்சியையும், அவன் பார்வைக்குப் புதுமையையும் வழங்குகின்ற சிறப்பால்தான், தினம், தினம் ஒருவனது வாழ்க்கை தேனாமிர்தமாக இனிக்கிறது.

அப்படி எழுச்சியையும், மலர்ச்சியையும் ஊட்டுகின்ற, அன்றாட வாழ்க்கையின் ஆனந்தத்தை ஆன்மா அறிகிறபோது, அது ஆன்ம ஒளியாகப் பரவுகிறது.

அந்தப் பேரொளியைப் பகுத்தறிவினால் மேலும் பெருக்கிக் கொள்கிறபோது, உடல் முதிர்ந்து சுருங்காது. மனம் அதிர்ந்து மயங்காது. ஆன்மா துவண்டு அடங்காது. அதுதான் வாழ்க்கையின் சிறப்பு. அப்படித்தான் வாழ வேண்டும் என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார்.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப் படும்

பொருள் விளக்கம்:

நாச்செற்று = வார்த்தை தடித்து
விக்குள் = நிச்சயமாக கொடுமை நிகழ்வதற்குள்ளாக
வாரா = வருத்துவதற்கு

முன் = முன்னாலேசென்று
மேல் = வருங்காலம் கருதி
நல்வினை = நல்லகாரியங்கள்
செய்ய = செய்திட
படும் = சிறந்த நன்மைகள் ஏற்படும்

சொல் விளக்கம்:

நா = அறிவு, வார்த்தை; **செற்று** = செறிவு, மிகுதி
வி = நிச்சயம்; **குள்** = கொடுமை; **மேல்** = வருங்காலம்
படும் = நன்மைபயக்கும்

முற்கால உரை:

உரையாடா வண்ணம் நாவை அடக்கி விக்குள் எழுவதற்கு முன், வீட்டிற்கு ஏதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும்.

தற்கால உரை:

ஒருவர் பேச முடியாதபடி நாவைத் தடுத்து விக்குளானது எழுவதற்கு முன்பாகவே, அதாவது சாவு நெருங்குவதற்கு முன்பாகவே, நல்ல அறச் செயல்கள் அனைத்தும் அவரால் விரைவாகச் செய்து முடிக்கப்பட வேண்டும்.

புதிய உரை:

வார்த்தை தடித்தால், வாழ்க்கையில் கொடுமைகள் நிகழும் என்பதால், தன் வருங்காலம் கருதி, நல்ல செயல்களை முன்பாகவே செய்துவர, சிறந்த நன்மைகள் வாழ்வில் உண்டாகும்.

விளக்கம்:

பந்து விளையாட்டில், தன்னிடம் பந்து, வந்து சேருகிறவரை, ஒருவன் காத்திருந்தால், அதற்குள் எதிரிகளின் இடையூறுகள் வரும். அல்லது பந்தை எடுத்து ஆட முடியாதபடி சிக்கலான சூழ்நிலைகள் ஏற்படும். அதனால்தான், 'பந்துக்காகக் காத்திராதே, பந்தை நோக்கி நீ முன்புறமாக ஓடி விளையாட வேண்டும்' - என்ற பழ மொழியை உண்டாக்கினார்கள்.

அதுபோல, நோயில் நலிந்து, பாயில் கிடந்து, சாவில் அழிந்து போகின்ற காலம் வரை, நீ காத்திருந்து, அதற்குள்ளாகவே நற் செயல்களை முடிக்க வேண்டும் என்கிறார்கள் உரை ஆசிரியர்கள்.

ஆனால் நோயில் கிடப்பதற்கும் பாயில் படுப்பதற்கும் சாவின் வாயில் துடிப்பதற்கும், மனித உடல் அமையும் என்பது உண்மையை

உணர்ந்து, வருங்காலமானது வருத்த வாழ்வைச் சந்திக்காமல், முன் கூட்டியே சிந்தித்து நன்றாக வாழ்கிறபோதே நல்ல வினைகளைச் செய்வதைத் தொடர வேண்டும். அதுவே அவரது இன்றைய வாழ்விற்கு புலமாகி. நாளைய வாழ்விற்கும் பலமாகி, வளமான வாழ்வை வாரி வழங்கிவிடும் என்று, ஐந்தாம் குறளில் அருமையாக உணர்த்துகிறார்.

336. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு

பொருள் விளக்கம்:

நெருநல் = சற்றுமுன்
உளன் = மெய்யாகவே இருந்தான் இந்த
ஒருவன் = ஒப்பற்றவன்
இன்றில்லை = இப்பொழுது இறந்துவிட்டான்
என்னும் = என்கிற
உலகு உடைத்து = மக்களைத் தோற்கடிக்கின்ற
பெருமை = வெற்றியை உடையது உலகு

சொல் விளக்கம்:

நெருநல் = சற்றுமுன்; **உளன்** = மெய்மை; **ஒருவன்** = ஒப்பற்றவன்
இல்லை = சாதல்; **இன்று** = இப்பொழுது; **என்னும்** = யாவும்
பெருமை = வீறு, வெற்றி; **உடைத்து** = வெளிப்படுத்து
உலகு = மக்கள், ஒழுக்கம்.

முற்கால உரை:

ஒருவன் நெருநல் உளனாயினான். அவனே இன்றில்லை ஆயினான் என்று சொல்லும் நிலையாமை நீதி உடைத்து இவ்வுலகம்.

தற்கால உரை:

நேற்று ஒருவன் இருந்தான். அவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும், நிலையாமை என்னும் பெருமையை உடையது இவ்வுலகம்.

புதிய உரை:

ஒப்பற்ற ஒருவன் சற்றுமுன் இருந்தான். இப்பொழுது இறந்து போனான் என்று மக்களைத் தோற்கடித்து வெற்றி மமதையுடன் விளங்குகிறது இந்த உலகம்.

விளக்கம்:

உலகத்தின் மமதை என்பது, நிலையாமையை நிலைப்படுத்திக் காட்டுகின்ற ஒரு மலையாமை. மக்களை மாய்வித்து தோற்கடிக்கிற வெற்றியைத்தான் மமதை என்கிறார் வள்ளுவர். சாவது திண்ணம் என்கிற எண்ணம், சரித்திரமாய்த் தொடருவதைச் சகலரும் அறிவார்கள்.

சாவு வெற்றிபெற அவ்வளவு எளிதாக இடம் கொடுத்துவிடக் கூடாது. சாவானது ஒழுக்க வாழ்வு உள்ளவனிடம் சலசலப்புக் காட்டவே அஞ்சும். ஆகவே மெய் நிலையை, மேன்மை நிலையாக்கிக் கொள்ளுங்கள் என்று ஆறாம் குறளில் நீராய் உருகுகிறார் வள்ளுவர்.

337. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல

பொருள் விளக்கம்:

ஒருபொழுதும் = ஒரு காலத்தில்
வாழ்வது = எப்படி வாழ்வது என்ற முறையை
அறியார் = அறியாதவர்கள்
பல அல்ல = பலவாறு சிந்தித்து சிதைகிறார்கள்
கருதும் = சிந்தனை செய்தால்
கோடி = மேன்மை மிக்க விஷயம் புரியும்.

சொல் விளக்கம்:

பொழுது = காலம்; **வாழ்தல்** = ஜீவித்தல்
கருதுப = சிந்தி, ஒத்திரு
கோடி = இளமை, புதுமை, மேன்மை சேரும் விஷயம்

முற்கால உரை:

ஒரு பொழுதளவும், தம் உடம்பும் உயிரும் இயைந்து இருத்தலைத் தெளியமாட்டார், மாட்டாது வைத்தும் கோடியளவு மன்றி அதனினும் பலவாய நினைவுகளை, நினையா நிற்பர் அறிவிலாதார்.

தற்கால உரை:

ஒரு சிறு பொழுது கூட வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறியமாட்டாதவர்கள், வீணாக எண்ணுவனவோ ஒரு கோடி அளவினதாக மட்டுமல்ல, அதற்கு மேலும் பல கோடி எண்ணங்களைக் கொண்டனவாக இருக்கும்.

புதிய உரை:

எந்தக் காலக் கட்டத்தில் வாழ்கிறோம் என்று அறிந்து தெரியாதவர்கள் பல கோடி எண்ணங்களை வைத்துக் கொண்டு திண்டாடி சிதைகிறார்கள். அதைச் சிந்தித்தால், வாழ்வின் இளமையும் அதுகூறும் புதுமையும் புரியும்.

விளக்கம்:

ஒரு பொழுது என்றவுடன் எல்லோரும். சிறுபொழுது, காலநேரம் என்று உரை கண்டு இருக்கின்றனர். ஆனால் பொழுது என்பதற்கு, இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலத்தையும் குறிக்கும் சொல்லாக அமைந்திருக்கிறது.

ஒரு மனிதன் ஒரு கால கட்டத்தில்தான் வாழ முடியும். இன்றைக்கு வாழ். நேற்றைய நிகழ்ச்சிகளை நினைத்து, நெருப்பில் துடிப்பதுபோல் துடிக்காதே.

நாளைக்கு எண்ணிக் கொண்டு வாடாதே என்ற வாழ்வு முறைதான் எல்லோரும் எதிர்பார்க்கின்ற சிறந்த வாழ்க்கை முறையாகும்.

மூன்று காலங்களையும் மனதில் போட்டுக் கொண்டு குழம்பாமல் ஒரு கால கட்டத்தை தான் மனதில் வைத்துக் கொண்டு, அந்தக் காலத்திற்கு ஏற்ப வாழவேண்டும் என்பதைத்தான் வள்ளுவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

மனதில் பல கோடி எண்ணங்கள் வரும். அவை எல்லாம் வாழ்வுக்கு உதவாது. வாழ்க்கையை நொறுங்கடித்து விடும். ஒருகாலத்தில் வாழ்வதற்கு நீங்கள் முயற்சிக்கும் போது, உடலின் இளமையும், புதுமையும், மேன்மை தரும் விஷயமும் நன்கு புரியும் என்கிறார் வள்ளுவர்.

338. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே உடம்போடு உயிரிடை நட்பு

பொருள் விளக்கம்:

குடம்பைதனித்து = நீர் நிலையில் இருந்து தனித்து
புள் = நீர்ப்பறவை
பறந்து = அவசரப்பட்டு, விரைவாக
ஒழியுஅற்றே = நீங்குவதுபோல
உடம்போடு = ஆசையில் வருந்தும் உடலோடு
உயிரிடை = உயிர் கொண்டிருக்கிற
நட்பு = தொடர்பும் (அப்படித்தான்) இருக்கிறது

சொல் விளக்கம்:

குடம்பை = நீர்நிலை; **புள்** = நீர்ப் பறவை
பறந்தது = அவசரப்படுதல், விரைவாய் ஓடல்
நட்பு = தொடர்பு, ஒழிய நீங்க

முற்கால உரை:

முன் தனியாத முட்டை தனித்துக்கிடப்பதனால் இருந்த புள், பருவம் வந்துழி பறந்து போன தன்மைத்து, உடம்பிற்கும், உயிர்க்கும் உளதாய நட்பு.

தற்கால உரை:

உடம்போடு உயிருக்கு இருக்கும் உறவானது, தான் வாழ்ந்த கூடு தனியே இருக்க அதனை விட்டு விட்டு வேறு இடத்துக்குப் பறவையானது பறந்து போய்விடுதல் போலாகும்.

புதிய உரை:

நீர் நிலைக்கு வருவதும் போவதும் தெரியாத அளவுக்கு, நீரைப் பயன்படுத்தி வெளியேறுகிற நீர்ப்பறவைபோல, உடம்போடு உயிர் கொண்டு இருக்கும் தொடர்பும் அமைந்து இருக்கிறது.

விளக்கம்:

கூட்டிலே வாழ்கிற பறவை, தேவைக்காக நீர்ப்பரப்பிற்கு வந்து, ஆவலைப் பூர்த்தி செய்து கொண்டபிறகு, அவசரப்படுவது போல, விரைவாய் ஓடிவிடும். நீரைப் பற்றியோ, அதன் சீரைப் பற்றியோ பறவைக்குக் கவலை இல்லை.

தன்னிச்சையாக வருவதும், தன்தொழில் முடிந்ததும் அது வேறிடம் நோக்கிப் போய்விடுகிறது. அதுபோல, தாயின் கர்ப்பப் பையை நோக்கி ஆண் அனுப்புகிற விந்திலுள்ள அணுக்களானது, தாயின் கர்ப்பப்பையின் கருமுட்டையை நோக்கியே ஓடுகின்றன. அணுவும், முட்டையும் கூடிக்கலக்கிறபோது அங்கே அவராகிய காற்றும் உள்ளே புகுந்து உயிர்ப்பு வேலையைச் செய்கிறது. ஆண்டு அவர் வந்ததால்தான் அந்தக் காற்குக்கு ஆண்டவர் என்று பெயர் வந்தது.

காற்றாகப்புகுந்து தன்னிச்சையாக வந்து தங்கிக் கொண்ட உயிரானது, தன்னிச்சையாகப் பறப்பதைத்தான் நீர்ப்பறவையும் செய்கிறது என்று வள்ளுவர் இந்தக்குறளில் குறிப்பிடுகின்றார்.

339. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

பொருள் விளக்கம்:

சாக்காடு போலும் = செத்துக்கிடப்பது போல
உறங்குவது = உறங்க வேண்டும்
உறங்கி = ஆழ்ந்து தூங்கி
விழிப்பது = கண்திறப்பது போல
பிறப்புபோலும் = சிறந்த துவக்கமாக அமையும்.

சொல் விளக்கம்:

சாக்காடு = சாவு, சாதல்; **பிறப்பு** = நல்ல தொடக்கம்

முற்கால உரை:

ஒருவனுக்கு சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும். அதன்பின் பிறப்பு வருதல், உறங்கி விழித்தலோடு ஒக்கும்.

தற்கால உரை:

ஒருவனுக்கு இறப்பு என்பது மீளா உறக்கம் கொள்வது போன்றதாகும். பிறப்பு என்பது அவன் தூங்கி எழும்போது ஏற்படும் விழிப்புப் போன்றதாகும்.

புதிய உரை:

செத்துக் கிடப்பதுபோல ஆழ்ந்து உறங்குங்கள். அவ்வாறு உறங்கி விழிக்கும் போது, உடம்பில் ஏற்படும் புத்துணர்ச்சியே அந்த நாளின் சிறந்த தொடக்கமாக அமைந்து விடும்.

விளக்கம்:

உடலுக்கு களைப்பும், இளைப்பும், அயர்வும், உலைவும் எல்லாம் எழுவதும். உடலை உழுவதும் இயற்கையாக நடப்பனவாகும். இவற்றை எல்லாம் நாம் கண்டு கொள்ளாமல் இருந்தால், உடம்புக்கு நோய் வரும். நோவு வரும். சாவும் வரும். ஏனென்றால், உடம்பிலே சத்துக் குறைகிற போதுதான், செத்துப் போகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதனால்தான், எட்டுமணி நேர உறக்கம் வேண்டும் என்று இப்பொழுதும் சொல்கிறார்கள்.

ஆழ்ந்து தூங்குவதைத்தான் ஆங்கிலத்தில் (Deep sleep. Dead Sleep)என்கிறார்கள். டெட் ஸ்லீப்பைத்தான் வள்ளுவர் சாக்காட்டு உறக்கம் என்கிறார்.

அவ்வாறு ஆழ்ந்து உறங்கி விழிக்கும் பொழுது, தசைகள் (Flesh) எல்லாம் புத்துணர்ச்சி (Fresh) பெறுகின்றன.

புத்துணர்ச்சி பெறுகின்ற ஆன்மாவும், பூரிப்புப் பெறுகின்ற அவயவங்களும், எதிர்ப்படும் புதுமையானவைகளைச் சிந்திக்கின்றன. இளமையானவைகளைச் சந்திக்கின்றன.

அறைகுறை உறக்கம், உடலை அலைக்கழித்துச் செயல்பட முடியாமல் செய்துவிடும். நிறைவான தூக்கமே மெய் நிலைக்கு குறைவற்ற செல்வமாக அமையும்.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு

பொருள் விளக்கம்:

உடம்பினுள் = உடம்பின் உள்ளே
துச்சில் இருந்த உயிர்க்கு = தங்குமிடமாகக் கொண்டிருந்த உயிருக்கு
புக்கில் = புகலிட வீடாக
அமைந்தின்று = அமைந்து இருந்தாலும்
கொல்லோ = பூட்டுமில்லை, தாழ்ப்பாளுமில்லை

சொல் விளக்கம்:

புக்கில் = புகலிடம், தங்குமிடம், வீடு, உடல்
கொல்லோ = பூட்டு, தாழ்ப்பாள்
துச்சில் = தங்குமிடம், சரீரம், ஒதுக்கிடம்

முற்கால உரை:

வாத முதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போன்ற உயிர்க்கு எஞ்ஞான்றும் இருப்பதோர் இல் இதுகாறும் அமைந்ததில்லை போலும்.

தற்கால உரை:

உடம்பின் ஒருபக்கம் ஒதுக்கமாகவே குடியிருந்துவரும் உயிருக்கு, எப்போதும் நிலையாகக் குடியிருந்து வாழும் இல்லம் ஒன்று இதுவரையில் அமைந்திட வில்லை போலும்.

புதிய உரை:

உடம்பு முழுவதும் உலாவருகின்ற உயிருக்கு, உடல் தங்கும் இடமாக இருந்தாலும், அந்தப் புகலிடமாகிய வீட்டில், அந்த உயிரைத் தடுக்கவோ, பாதுகாக்கவோ ஏற்றதுபோல ஒரு பூட்டும் இல்லை. தாழ்ப்பாளும் இல்லை.

விளக்கம்:

உடல் என்பது ஒன்பது வாசல்கள் கொண்ட ஒரு வீடு. அந்த வீட்டுக்கு உள்ள ஒன்பது வாயில்களும் அழிவுகளை ஏற்படுத்தும், கழிவுகளை அகற்றும் வகையில் அமைந்து இருக்கின்றன.

எந்த நேரத்திலும், எந்தச் சமயத்திலும் கழிவுகளை நீக்கித் தூய்மையைச் சேர்ப்பதுதான், உடல் உறுப்புக்களின் உன்னதத் தொழிலாக அமைந்திருக்கிறது. மனிதன் சுவாசிக்கின்ற காற்று உடலுக்குள்ளே வந்ததும், அது பத்து விதக் காற்றுக்களாக மாறிப் பத்து விதப் பணிகளைச் செய்கின்றன. அவற்றின் பணிகளால்தான், உடல் செழிப்பும், கொழிப்பும் கொண்டு, தழைத்தோங்கி வாழ்கிறது.

இந்தப் பத்துக்காற்றுக்களும் பறவைபோல விரைவாகப் பறப்பதும், உள்ளே விரைவாகப் பிறப்பதும், இயற்கையின் இன்றியமையாத பணியாக இருந்து இயங்குவதால்தான்.

உடலிலுள்ள ஒன்பது ஓட்டைகளுக்கும் மூடிகள் இல்லை. அடைத்து வைக்கும் பூட்டாகவும் இல்லை. தடுத்து நிறுத்தும் தாழ்ப்பாளாகவும் இல்லை. இந்த மெய்நிலையை சிந்தித்தால், மேன்மை தரும் செயலாக ஒன்றே ஒன்று நமக்குத் தெரியும். அதுதான், **மெய்யைப் பத்திரப்படுத்துவது. பாதுகாப்பது. பராமரிப்பது** ஆகும்.

மெய்நிலையை, நிலையாமை என்று மாற்றி சொல்லி கேட்போர் நெகிழ்ந்து போய் உண்மையை உணரும் வண்ணம் நெக்குருகப் பாடுகிறார் வள்ளுவர்.

35. துறவு

கள்ளாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை போன்ற அதிகாரங்களில் தீமை பயக்கும் முறைகளை எல்லாம் தொகுத்துச் சொல்லிக் கொண்டு வந்த வள்ளுவர், அடுத்ததாகத் 'துறவு' என்ற அதிகாரத்தை வைத்திருக்கிறார்.

நல்லறம் நடத்த வேண்டிய அறனாகிய இல்லறத்தான், ஒழுக்கத்தை அழுக்குப் படுத்துகிற காரியங்களைத் தவிர்க்க வேண்டும். நீக்கவேண்டும் என்ற சொல்ல வேண்டிய கடமை உணர்வால், **'துறவு'** என்னும் அதிகாரத்தை வைத்து இருக்கிறார்.

துறவு என்றால், நீத்தல், சந்நியாசம் சாமியார் ஆகிவிடுவிகுதல், இல்லறம் துறத்தல் என்றுதான் பலரும் பொருள் கூறியிருக்கிறார்கள். அது உலக நடைமுறை என்றாலும், துறவுக்குரிய உண்மையான பொருள் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

துறவு என்ற சொல், துற+வு= என்று பிரிகிறது. 'துற' என்றால் கைவிடு தவிர் என்று அர்த்தம் ''உ'' - என்றால் அகச்சுட்டு, புறச்சுட்டு என்று குறிக்கின்றன. அகத்தில் உள்ள மாசுகளையும், புறச் செய்கைகளான இழி செயல்களையும், தவிர்க்க வேண்டும் என்பதைக் குறிக்கத்தான், 'துறவு' - என்ற சொல்லை வள்ளுவர் பொறித்து இருக்கிறார்.

மாசுகள் மனத்தையும், இழி செயல்கள், நலத்தையும், குலத்தையும், ஆன்மாவின் அகத்தையும் அழித்துப் போடும் என்பதால் தான், தூயனவற்றை கைக் கொள்ளுங்கள் நீங்கள் தீயனவற்றைத், துறவுங்கள்.

மனதை நேர்மைப் படுத்துங்கள் உடலைச் சீர்மைப் படுத்துங்கள். ஆன்மாவைத் தூய்மைப்படுத்துங்கள் என்பதாகத்தான் 'துறவு' என்ற அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருக்கிறார்.

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

பொருள் விளக்கம்:

யாதனின் = சந்தேகமில்லாமல் ஒப்பில்லாத
யாதனின் = அரக்கத்தனமான செயல்களிலிருந்து
நீங்கியான் = வெளி வந்தவன்
நோதல் இலன் = வாழ்க்கை படுதலான பலவீனமோ, துன்புறுதலோ இல்லாமல் இருப்பதால் முன்பு இருப்பதை விட மிகுதியடை
அதனின், அதனின் = இனிமையில் வாழ்கிறான்.

சொல் விளக்கம்:

யாது = அரக்கத்தனம்; **யா** = இல்லை, சந்தேகம்
தனின் = ஒப்பின்மை; **நோதல்** = பலவீனமடைதல், பழுதுபடல்
அதனம் = அதிகம், மிகுதி

முற்கால உரை:

ஒருவன் யாதொரு பொருளின் நீங்கினான் அவன் அப்பொருளால், அப்பொருளால் துன்பம் எய்துதல் இலன்.

தற்கால உரை:

ஒருவன் எல்லாவற்றையும் ஒருங்கே துறக்காவிட்டாலும், எந்தயெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ அவன், அந்த அந்தப் பொருள்களினால் துன்பம் அடைதல் என்பது இல்லை.

புதிய உரை:

ஒப்பபின்மை இல்லாத அரக்கச் செயல்களில் இருந்து விடுபட்டு, வாழ்பவன் வாழ்வில், பழுதோ, பலாவீனமோ, மிகுதியாக வரும் துன்பமோ இல்லாதவனாக வாழ்கிறான்.

விளக்கம்:

கேடுகளை விளைவிக்கும் செயல்களில் கொடூரமானவற்றையே அரக்கத்தனம் என்பார்கள். ஒருவன் மனதிலே, கேடுகளை விளைவிக்க வேண்டும் என்று எண்ணுகிற பொழுதே, அரக்கத்தனமும் சேர்ந்து கொள்கிறது. அதைத்தான் 'யாதனின்' என்றார்.

அரக்கத்தனம்மாறி, இரக்கத்திற்குள்ளே அவன் பிரவேசிக்கின்ற பொழுது, அவனது வாழ்விலே வன்மை குறைகிறது. அதனால் மனதிலே இனிமையும், உடலிலே வலிமை மிகுதியும்.

ஆன்மாவிலே தெளிவின் வெகுமதியும் நிரம்ப, அவன் நோதல் இல்லாமல், நோய்களும் இல்லாமல் நிறைவாழ்வு வாழ முடிகிறது என்பதை வள்ளுவர் முதற் குறளில் விளக்குகிறார்.

342. வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின் ஈண்டு இயற்பால பல

பொருள் விளக்கம்:

வேண்டின் = விரும்புகிறபோதே

உண்டாக = ஒருமுடிவாக

துறக்க = தீயவற்றைக் கைவிடுக

துறந்த = துறந்தவுடன்

பின் = வருங்காலத்தில்

இயல்பால் = ஒழுக்கத்தால்

ஈண்டு = விரைவாக

பாலபல = பல முறையிலும் (எடுத்தமுடிவை) பலப்படுத்துக.

சொல் விளக்கம்:

வேண்டின் = விரும்புதல்; **உண்டாக** = ஒருமுடிவாக

துறக்க = கைவிடுக; **பின்** = பிற்காலம்

ஈண்டு = விரைவாக; **இயல்பால்** = ஒழுக்கத்தால்

பல = பலப்படுத்திட

முற்கால உரை:

எல்லாப் பொருள்களையும் துறந்தால் ஒருவர்க்கே இம்மைக்கண்ணே உறவாம், முறைமையை உடைய இன்பங்கள் பல. அவ்வின்பங்களை வேண்டின் அவற்றைக் காலம் பெறத் துறக்க.

தற்கால உரை:

ஒருவனுக்குத் துன்பம் இல்லாத நிலைமை ஏற்பட வேண்டுமானால், எல்லாவிதப் பொருள்களும், இருக்கும் காலத்திலேயே அவன் துறந்துவிட வேண்டும். துறந்தபின் இவ்வுலகில் அவன் பெறக் கூடிய உயர்ந்த இன்பங்கள் பலவாகும்.

புதிய உரை:

நீ விரும்புகிற போதே ஒரு முடிவோடு, தீயனவற்றைத் துறக்க வேண்டும். அப்படித் துறந்து விட்டால் வருங்காலத்தில், தீயன திரும்பாமல் உன் ஒழுக்கத்தால் விரைவாகப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

துறப்பதற்குத் திறமான நெஞ்சு வேண்டும். ஆசைகளைத் திறப்பதற்குத்தான் மனம் அலைபாயுமே தவிர, அடக்குவதற்கு ஆட்பட்டு வராது. அதனால்தான், விருப்பப்படும் பொழுதே மனதிற்குள் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார்.

துறக்கின்ற நினைவை உறுதியாக எடு. அதையும் ஒரு முடிவாக எடு. ஏனென்றால், எதிர்காலத்தில் ஆசைகள் வந்து உறுதியைக் குலைத்து, முடிவை அழித்து விடும். இவ்வாறு நடப்பது மனிதர்களிடையே இயல்பாகவே இருக்கிறது.

ஆகவேதான் எடுத்த முடிவை உறுதிப் படுத்தி, எதிர் காலத்திலே, உன் ஒழுக்கத்தால், உன் முடிவை விரைவாகப் பலப்படுத்திக் கொள். அப்பொழுதுதான் உன்துறவுக்கு, மகிமையும், மரியாதையும் உண்டு என்று இரண்டாம் குறளில் எச்சரிக்கிறார்.

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு

பொருள் விளக்கம்:

ஐ + தன் = வியப்பு மிகுந்த, அதிசயமான ஆன்மாவின்
புலதை = நுண்மையை
அடல் வேண்டும் = வெல்ல வேண்டும்
வேண்டிய = வெல்வதற்கு வேண்டிய
எல்லாம் = அனைத்து முயற்சிகளையும்
ஒருங்கு = ஏககாலத்தில் ஒருசேரக் கொண்டு
விடல் வேண்டும் = தீயவற்றை விலக்கிவிட வேண்டும்

சொல் விளக்கம்

அடல் = பொருதல்; **ஐ** = நுண்மை, வியப்பு
தன் = ஆத்மா; **புலம்** = நுண்மை; **எல்லாம்** = அனைத்தும், சகலமும்
ஒருங்கு = ஏககாலத்தில்

முற்கால உரை:

வீடெஸ்துவார்க்கு செவிமுதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும். கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத்தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்.

தற்கால உரை:

ஐந்து பொறிகளுக்கு உரியவையான ஐந்து புலன்களையும் ஒருவன் அடக்கி வெல்ல வேண்டும். அந்த நிலையில், ஐம்புலன் வெற்றிக்கு உரிய பொருள்களை எல்லாம் அவன் ஒருங்கே விட்டுவிட வேண்டும்.

புதிய உரை:

வியப்பூட்டும் நுன்மையான அறிவாற்றல் கொண்ட ஆன்மாவை அடக்கி ஆளவேண்டும். என்றால் அப்படி விலக்கி விடுகிறதை எல்லாம் விரும்பிய உடனேயே ஏககாலத்தில் ஒருசேரப் பூரணமாக விட்டு விடவேண்டும்.

விளக்கம்:

இரண்டாவது குறளில் தீயவற்றைத் துறக்க உறுதியாக முடிவுஎடு. அந்த முடிவு எதிர்காலத்திலும் நிலையாகத் தொடர உன் ஒழுக்கத்தினால் விரைவாகச் செயல்படு என்றார்.

மனதின் உறுதிக்கும், எடுக்கின்ற முடிவின் விரைவிற்கும், எதிர்காலம் முழுவதும் அந்த முடிவைத் தொடர்கிற நிறைவிற்கும், பின்புலமாகப் படு ஆற்றல் மிக்க புயல் நிலமாக விளங்குவது ஆன்மாதான். என்பதால்தான் மூன்றாவது குறளில் ஆன்மாவை வெல்ல வேண்டும் என்று வழிகாட்டுகிறார்.

ஆன்மாவை எப்படி வெல்ல வேண்டும்? செய்ய விரும்புகிற சகலத்தையும் ஒரே நேரத்தில் பரிபூரணமாகச் செய்யும்போது தான் ஆன்மாவை வெல்ல முடியுமென்று கூறி, ஆன்மாவை அடக்கும் உபாயத்தையும் நான்காவது குறளில் கூறுகிறார்.

344. இயல்பாகும் நோன்பிற்கு ஒன்று இன்மை உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து

பொருள் விளக்கம்:

இயல்பாகும் = ஒழுக்கத்தை
நோன்பிற்கு = நிலை நிறுத்துகிற விரதத்திற்கு
ஒன்றின்மை = யாதொன்றிலும் பற்றில்லாமல் இருப்பதுதான்.
உடைமை = அந்த உரிமையை
மயல் = (உமது) பயமும், மயக்கமும்
மற்றும் = ஏனைய அழிக்கும் நினைவுகளும் வந்து
பெயர்த்து = மாற்றிவிடத் தூண்டும்

சொல் விளக்கம்:

இயல்பு = ஒழுக்கம்; **நோன்பு** = விரதம்
ஒன்றின்மை = யாதொன்றிலும் பற்றில்லாமை
உடைமை = உரிமை; **மயல்** = பயம், மயக்கம்

முற்கால உரை:

பற்றப்படுவதொரு பொருளும் இல்லாமை தவம் செய்வார்க்கு இயல்பாம், அஃதன்றி ஒன்றாயினும் உடமை, அத்தவத்தை போக்குதலான், மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம்.

தற்கால உரை:

யாதொரு பொருட்பற்றும் இல்லாமல் இருத்தல், தவம் செய்வதன் இயல்பாகும். ஏதேனும் ஒருபற்றுடையராக இருந்துவிட்டால் மீண்டும் பொருள்மீது ஆவல் கொண்டு மயங்குவதற்கு வழி ஏற்பட்டு விடும்.

புதிய உரை:

ஒழுக்கத்தை நிலை நிறுத்தும் விரதத்திற்கு, யாதொன்றின் மீதும் பற்றில்லாத நிலையே வேண்டும். அந்த விரத உரிமையைப் பின்பற்ற விடாமல், பயமும், புலன் மயக்கமும், ஆசைகளைக் கிளப்பிவிட்டுத் திசை திருப்பிவிடும்.

விளக்கம்:

ஒழுக்கம் என்பது சாதரண சிறு செயல் அல்ல. உயர்ந்த தவ நெறியைப் போன்றது. உன்னதமான விரத வேள்வியைக் கொண்டது. சத்திய சோதனை போல, நித்தியம், நோய்களும், நோவுகளும் வந்தாலும், உத்தமமாகக் கடைப்பிடிக்க வேண்டிய உயிர் நெறியாகும்.

அந்தப் பெருமையைத்தான், நோன்பு ஒன்றின்மை என்று குறிக்கிறார். அந்த விரதப் பெருமையை, தவ உரிமையை, அற்ப ஆசை என்னும் கனல்போன்ற காமக் கதிர்களும், மாசுகள் என்னும் வண்ணத் தூள்களும் வந்து மனதைத் தூண்டிவிடும். விஷப்பற்களால் தீண்டிவிடும்.

நமது வாழ்வின்விசையை மாற்றித் திசை திருப்பி விடும். அதில் மயங்கிவிடக் கூடாது. மயங்குகின்ற நிலைதான் எப்பொழுதும் மனதிற்கு உண்டு என்பதால், மனதை அடக்கும் மணியான மந்திரமாக, பற்றின்மையை நான்காவது குறளில் இலக்கணமாகக் கூறுகிறார்.

345. மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்பறுக்கும் உற்றார்க்கு உடம்பும் மிகை.

பொருள் விளக்கம்:

மற்றும் = பிறதீய வினைகளோடு
தொடர்பாடு = காம நுகர்ச்சியும்
எவன்கொல் = (சேர்ந்தால்) அவன் அழிவை யார் குறுக்குத் தாழ்போட்டுத் தடுக்க முடியும்?
பிறப்பு = உண்டாகின்ற
மிகை = காமக் கோட்டினை
உற்றார்க்கு = துறக்க முயற்சிக்கிறவனுக்கு
உடம்பும் = உடம்புதான்
அறுக்கும் = இல்லாமல் அழித்துக் காக்கும்

சொல் விளக்கம்:

மற்று = பிறதீவினை; **தொடர்பாடு** = காம நிகழ்ச்சி
கொல் = குறுக்குத்தாழ்; **பிறப்பு** = உண்டாக்குதல்
அறுக்கல் = இல்லாமல் செய்தல்; **மிகை** = கேடு, குற்றம்

முற்கால உரை:

பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு, அதற்குக் கருவியாகிற உடம்பும் மிகையாம். ஆனபின், அதற்குமேலே இயைபில்லனவும் சில தொடர்பாடு உளவாதல் என்னாம்.

தற்கால உரை:

தீமையின் தோற்றங்களை நீக்க முயலுகின்றவர்களுக்கு, உடம்பே மிகையானதொரு பொருளாக இருக்க, அதற்மேல் வேறு பொருள்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய இன்றியமையாமை அவர்களுக்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை.

புதிய உரை:

பிற தீவினைகளோடு, காம நுகர்ச்சியிலும் ஈடுபடுகிற ஒருவனது அழிவை, யாரால் தடுக்க முடியும்? அந்தக் காம நுகர்ச்சியின் கேட்டைத் தடுக்க முயலுகிறவனுக்கு, அவன் உடம்பே உறுதிபட இருந்து உதவும்.

விளக்கம்:

மனதுக்கு மயக்கத்தையும், ஆன்மாவுக்குச் சிறக்கத்தையும், உடலுக்குக் கலக்கத்தையும் உண்டு பண்ணுகிற தீவினைகளை அழிக்க, யாதொன்றின் மீதும் பற்றின்மை வேண்டுமென்று நான்காவது குறளில் வள்ளுவர் கூறினார்.

பல தீவினைகளில் அரக்கத்தனமான (யாது) கொடுமை நிறைந்தது காமநுகர்ச்சி என்று குறிப்பிட்டு, அது கண்டவனைசும்மா விடாது. கொண்டவனைக் கொல்லாமல் போகாது என்று, உடல்காக்கும் உபாயத்தை, ஐந்தாவது குறளில் கூறுகிறார்.

காட்டுத்தீயைப் போல காமத் தீ ஒருவனை அழிப்பதால், அவனை அழிக்க யாருமேதேவையில்லை. அவனே அழிந்து போவான் என்று இந்தக் குறளிலே கோடிட்டுக் காட்டுகிறார்.

ஆசையால் வதங்குகின்ற ஆசைப்படாத உடம்பே ஒருவனைக் காப்பாற்றும் என்பதால், மெய்யுணர்வு கொண்டு தீப்பையான தீமைகளை புறந் தள்ளுங்கள். என்று பாடம் புகட்டுகிறார். பொய்யா மொழி புலவர்.

346. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்

பொருள் விளக்கம்:

யான் என = நான் என்று
தென்னும் = கொந்தளித்துக் கிளப்புகிற
செருக்கு = அகங்கார, ஆணவத்தால்
அறுப்பான் = அழித்து விடுபவனின் (புகழ்)
வானோர்க்கு = வலிமையும் பெருமையும் உடையவர்க்கு
உயர்ந்த = அறிஞர் பெருமக்களாகிய சான்றோரிடையே
உலகம் புகும் = நன்மக்கள் மனதில் உட்சென்று அவர்களிடையே தங்கிவிடும்

சொல் விளக்கம்:

தென்னும் = கொந்தளிக்கிற; **செருக்கு** = அகங்காரம், ஆணவம்
வான் = வலிமை, பெருமை; **உயர்ந்த** = அறிஞர் பெருமக்கள்
உலகம் = உலகத்து நன்மக்கள்

முற்கால உரை:

தான் அல்லாத உடம்பை யான் என்றும், தன்னோடு இயைபு இல்லாத பொருளை என தென்றும் கருதி, அவற்றின் கண் பற்றுச் செய்வற்கு ஏதுவாகிப் மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கும் எய்தற்கறிய வீட்டு உலகத்தை எய்தும்.

தற்கால உரை:

யான் என்னும் அகப்பற்றையும், எது என்னும் புறப் பற்றையும் நீக்குபவன், வேறு பல வகைகளில் இயல்பான

வான்புகழ் கொண்டவர்களைக் காட்டிலும் மேலானதொரு புகழ் உலகத்தை அடைவான்.

புதிய உரை:

தன்னைப் பற்றிய கொந்தளிப்பு மிக்க ஆணவத்தின் ஆரவாரத்தை அடக்கி அழிப்பவன், வலிமையாளனாக விளங்குவதால், அவனது பீடும், பெருமையும் சான்றோர் உலகமாகிய உள்ளத்தில் உட்சென்று உயர்வைத் தரும்.

விளக்கம்:

யான் என்ற நினைப்பு ஞான மில்லாதவன் செயல். அது நாணமில்லாதவனுக்கு ஆபரணம். கலங்கிய புத்தி உள்ளவனின் கூட்டாளி.

அந்த நான் என்னும் செருக்கு கொந்தளிக்கும் ஆணவமாக, ஆரவாரிக்கும் அகங்காரமாக, புயலாகப் புறப்படுகிற இறுமாப்பாக விளங்குவதால், அதை அழிப்பதற்கு ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றல் உடையவனே திறமை மிக்க வலிமையாளன் ஆகிறான். அவன் தீமையைத் துறப்பதில் பெற்ற வெற்றியானது எட்டுத்திக்கும் பரவுகிறது. சான்றோர்கள், பெரியோர்கள், நாடுபோற்றும் நன்மக்கள் உள்ளத்திலே அவன் புகழ் புகுந்து பரவுகிறது.

அவர்கள் கொண்டகளிப்புடன் கூடிக் குலாவுகிறது. ஆகவே, ஆறாவது குறளில், காமத்தை வென்றவன், தீமைகளின் நாமத்தைக் கொன்றவன், உலகிற் பிறந்த பேற்றினைப் பெறுகிறான் என்று பெருமை பொங்கச் சொல்லுகிறார்.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப் பற்றி விடாஅ தவர்க்கு

பொருள் விளக்கம்:

பற்றி = உலக ஆசைகள் உள்ளும் புறமும்
விடாஅ = விடாமல் தொடருகிற
தவர்க்கு = தீய செயல் புரிவோருக்கு
இடும்பைகள் = வறுமை, நோய், பயம் முதலியவைகள்
பற்றினை = அதன் காரணமாக
பற்றி = பற்றிக் கொண்டு
விடாது = விடாது அழித்துவிடும்

சொல் விளக்கம்:

பற்றி = காரணம், பற்று, உலக ஆசைகள்
விடாஅ = உள்ளும் புறமும் விடாத
தவர்க்கு = தீச்செயல் ஆற்றுவோருக்கு

முற்கால உரை:

இருவகைப் பற்றினையும், இறுகப் பற்றி விடாதாரை பிறவித் துன்பகள் இறுகப் பற்றி விடா.

தற்கால உரை:

அகப் பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் இறுகப் பற்றிக் கொண்டு, அவற்றை விடாதவரைத் துன்பங்கள் இறுகப் பற்றிக் கொண்டு, அவர்களை விடமாட்டா.

புதிய உரை:

உலக ஆசைகளைப் பற்றிக் கொண்டு தீச்செயல்கள் புரியும் துன்மார்க்கர்க்கு, அவர் கொண்ட பற்றின் காரணமாகத் துன்பமும், ஆபத்தும் தொடர்ந்து, அகமும், புறமும் விடாது அவரைத் தாக்கி அழித்து விடும்.

விளக்கம்:

'அ' என்ற சொல்லுக்கு அகச் சுட்டு, புறச் சுட்டு என்று பெயர். அகத்தின் சுகத்தை அழித்து, புறத்தின் முகத்தைக் கெடுத்து, ஜகத்தின் வாழ்வினை அழித்து, பற்றுக்கள் எல்லாம் தீயாகப் பற்றிக் கொள்ளும். நொடிக்கு நொடி அவருக்குள்ளே அது முழுதாக முட்டிக் கொள்ளும். வறுமை வரும். பயம் ஏற்படும். நோய்கள் உண்டாகும். ஆபத்து அடிக்கடி நிகழும். வேதனைகள் வந்து அவர்களுக்குள்ளே தொற்றிக் கொள்ளும்.

ஆக, தான் பட்ட இடத்தை, தொட்ட இடத்தை எரித்து தானும் எரிந்து அடங்குகின்ற தீயசெயல்கள், தீமையாளரை விடாது விரட்டிப் பிடித்துக் கொல்லும் என்று ஏழாவது குறளில் வள்ளுவர் குறிக்கிறார்.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

பொருள் விளக்கம்:

தலைப்பட்டார் = தீமைகளை எதிர்த்தவர்
தீர = முற்றும் தீர்மானமாக
துறந்தார் = தீமைகளை விலக்கிவிடுவார்

மயங்கி = மதிகலங்கி
வலைப்பட்டார் = தீமைகளின் கைகளில் சிக்குண்டவர்கள்
மற்றையவர் = முன்பு சுட்டியது போல, துன்பங்களையே அனுபவிப்பர்.

சொல் விளக்கம்:

தலைப்பட்டார் = எதிர்த்தவர்; **தீர** = தீர்மானமாக
மயங்கி = மதிகலங்கி; **மற்றை** = முன்பு சுட்டியதுபோல

முற்கால உரை:

முற்றத் துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார். அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிற்பட்டார்.

தற்கால உரை:

முற்றும் துறந்தவர்களே உயர்ந்த நிலையை எய்தியவர்கள் ஆவார்கள். அப்படித் துறக்காதவர்கள் துன்பவலையில் அகப்பட்டவர் ஆவார்கள்.

புதிய உரை:

தீமைகளைத் துணிந்து தீர்மானமாக முடிவெடுத்து எதிர்த்தவர்களே துறக்க முடியும். சிறிதளவு மதிமயங்கினால் கூடத் தீமையின் வலையிலே சிக்கிச் சீரழிந்து போவார்கள்.

விளக்கம்:

தீமைகளை எதிர்ப்பதற்குத் துணிவு வேண்டும். துணிவு என்பது சிந்தை ஏற்றுக் கொள்கின்ற தீர்மானமான முடிவு. வள்ளுவரின் 'எண்ணித்துணிக' - என்பதனை நாம் எண்ணிப் பார்க்கலாம். மாறுபடுகின்ற தன்மை உடையதால்தான் உடல் என்றனர். ஆசைப்பட்டு வருந்துகிற தன்மை உடையதாக இருப்பதால்தான் மெய்யை உடம்பு என்றனர். ஒரு நிலையில் நிற்காத தன்மை உடையதாய் இருப்பதால்தான் அதை மனம் என்றனர்.

ஆக, ஒரு மனிதன் பலவீனங்களின் மொத்த உருவமாகத் திகழ்கிறான் என்று குறிப்பிட வந்த வள்ளுவர், தீமைகளை எதிர்க்கும் வல்லவரைத் தலைப்பட்டார் என்கிறார். எளிதில் தாழ்ந்துவிடுகிற, வீழ்ந்து படுகிற மனிதர்களை வலைப்பட்டார். அவர் தீமையின் வஞ்சகத்திற்கு விலைப்பட்டார் உயிர் வாதையோடு கொலைப் பட்டார் என்று கூறி, துணிவான மனமே இனிதான வாழ்க்கையைத் தருகிறது என்று இந்த எட்டாவது குறளில் குறிக்கிறார்.

349. பற்று அற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று நிலையாமை காணப் படும்.

பொருள் விளக்கம்:

பற்றற்ற = உலக ஆசைகள் இல்லாமல்
கண்ணே = அவரவர் உடம்பே
பிறப்பு அறுக்கும் = ஆசையின் முனையையே அழித்துவிடும்
மற்று = அதனால்
மெய்நிலை = அழிக்கும் ஆற்றல் பெற்ற மெய்நிலையானது
காணப்படும் = (அவரவர் ஆற்றலுக்கேற்ப) வெளிப்படும்

சொல் விளக்கம்:

பற்றற்ற = உலக ஆசைகள் அற்ற; **கண்** = உடம்பு
பிறப்பு = ஆரம்பம், முனை; **காணப்படும்** = வெளிப்படும்

முற்கால உரை:

ஒருவன் இருவகைப் பற்று அற்றபொழுதே அப்பற்றுறுதி அவன் பிறப்பை அறுக்கும். அவை அறாத பொழுது அவற்றால், பிறந்து இறந்து வருகிற நிலையாமை காணப்படும்.

தற்கால உரை:

அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் விட்ட உடனேயே அந்த பற்றற்ற தன்மை தொடர்ந்து துன்பங்கள் தோன்றாமல் செய்து விடும். அப்படி நிகழாதபோது தீமையின் தோற்றம், அழிவு ஆகியவைகளைப் பொறுத்து நிலையாமை காணப்படும்.

புதிய உரை:

உலக ஆசைகளை அறுத்து அழிக்கின்ற உடம்பிற்கு அதன் உண்மை நிலையும், அழகும், உயர்வு எல்லாம் அங்கே மிகுதியாக வெளிப்படும்.

விளக்கம்:

ஆசைகள் என்பது மனதின் குணம் என்பார்கள். அதையே மிகக் கடுமையாக, மனதின் தீக் குணம் என்பார்கள். சரமாரியாகச் விடுகிற அம்பு என்பார்களே, அதுபோலே குதித்துக் கொட்டும் அருவியாக, மனதை உதைத்துக் கொண்டு வெளியே வருகின்றன அசைகள். நினைத்தவுடன் பாடுகிற ஆசு கவிபோல, கண் விழித்தவுடன் கூடிக் கும்மாளம் இடுவதுதான் ஆசையின் பண்புகளாகும்.

ஆகவே, உடலை வாட்டுகின்ற ஆசைகளை, உடலால் தான், அழிக்க முடியும், வேர் அறுக்க முடியும் என்ற ஒரு புதுக் கொள்கையை வள்ளுவர் இங்கே புகுத்திக் காட்டுகிறார். மெய்யை மேலோட்டமாக உடம்பு என்று சொல்லாமல், கண்ணே என்று இங்கே குறிப்பிட்டு இருப்பதால், உடம்பானது வலிமையை விளைவிக்கும் ஊற்றுக் கண்ணாக இருப்பதால் தான்.

உடலில் வலிமையினால்தான் உலக வாழ்க்கையை அனுபவிக்க முடியும். உடலின் வலிமையால்தான் உலக அசைகளை மனவயலில் இருந்து களையாகப் பிடுங்கி எறிய முடியும் என்கிறார் வள்ளுவர்.

350. பற்றுக பற்றுஅற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

பொருள் விளக்கம்:

பற்று அற்றான் = உலக ஆசைகளைக் கடந்தவன்
பல்+தினை = பற்றினை , சிறுசிறு அனுபவங்களைக் ககூட
பற்றுக = ஏற்றுக்கொள்க
அப்பற்றை = ஏற்றுக்கொண்ட அந்தக் கொள்கையை
பற்றுவிடற்கு = உலக ஆசைகளை அழிப்பதற்கு
பற்றுக = நீபொருந்திக்கொள்க

சொல் விளக்கம்:

பற்றற்றான் = உலக ஆசைகளை கடந்தவன்
பல் தினை = பலவாறான அனுபவங்கள்
பற்று = பெற்றுக்கொண்டதை; **பற்றுக** = பொருந்திக்கொள்க

முற்கால உரை

எல்லாப் பொருளையும் பற்றி நின்று பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை, இதுவே நன்னெறியென்று மனத்திற் கொள்க. கொண்டு அதன்கண் உபாயத்தால் அம்மனத்தால் செய்க. விடாது வந்த பற்றை விடுதற்கு.

தற்கால உரை:

ஒரு பொருளிலும் பற்றில்லாத அறிவாற்றலில் சிறந்தோனது அன்பை, ஒருவன் தன் மனத்தில் பற்றிக் கொள்ள வேண்டும். இருவகைப் பற்றுக்கலையும் ஒழிப்பதற்கு அவன் அந்த அன்பையே உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

புதிய உரை:

உலகில் உள்ள அனைத்தையும் கடந்த உயர்ந்தவரிடம் பெற்ற அனுபவங்களை ஏற்றுக் கொண்டவர், அதன் தொடர்ச்சியாகப் பொருந்த வாழ்ந்தால், உலக ஆசைகளை விட்டுவிட முடியும்.

விளக்கம்:

பற்றற்றான் என்ற சொல்லுக்கு, கடவுள் என்றும், உலகில் உள்ள அனைத்தையும் கடந்தவன் என்றும் பொருள்கள் உண்டு. கட+உள் = என்று பிரிகிற சொல்லுக்கு, தன்னிடம் உள்ளதைக் கடந்தவன். தன் உள்ளத்தைக் கடந்தவன். இந்த உலகத்தைக் கடந்தவன் என்று பொருள் கிடைக்கிறது. மனிதக் கடவுள், மனிதன் படைத்த கடவுள் என்று இருபெரும் வித்தியாசங்கள் இங்கே எழுகின்றன.

உயிரோடு உலா வருகின்ற மனிதக் கடவுள். அந்த உன்னத நிலையை அடைவதற்காகச் செய்த தவங்கள், மேற்கொண்ட விரதங்கள், பெற்ற அனுபவங்கள் மிக அதிகமானவை. ஆக, ஒழுக்கத்தைப் பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவரும் அவரது அனுபவங்களை உணர்க. தெரிந்து கொள்க. பொருந்தித் தொடர்க. பற்றி வாழ்க. அப்பொழுதுதான் பற்றினை விடமுடியும். என்று 'பற்றுக அப்பற்றினை' என்று பண்பான முறைகளைக் காட்டுகிறார் வள்ளுவப் பெருமகனார்.

36. மெய் உணர்தல்

மெய் உணர்தல் என்றதும் பிறப்பு, மற்றும் வீடுகளுக்கான காரணங்களை உண்மையால் உணர்தல் என்று பரிமேலழகரும், உலகில் உள்ளவற்றையெல்லாம் உள்ளபடியே கண்டறிந்து உண்மையை உணர்தல் என்று இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களும் பொருள் கொண்டிருக்கின்றனர். நாம் ஆய்வோடு இத்தலைப்பை அணுகுகிறபோது, வித்தியாசமான குறிப்புடனும், வீறுபெற்ற கருத்துடனும் ஒளிர்வதை நம்மால் உணரமுடிகிறது.

மெய்+உணர்+தல், என்று மெய் உணர்தலை மூன்று சொற்களாகப் பிரித்து இருக்கிறோம். **'மெய்'** என்றால் உடல் என்றும், **'உணர்'** என்றால் கற்றறி, விழித்தெழு என்றும், **'தல்'** என்றால் தந்திரம், உபாயம் என்றும், **'உபாயம்'** - என்றால் போர்க்கவசம் என்றும் பொருள் வருகிறது.

உடலைக் காக்கின்ற போர்க்கவச உத்திகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதைத்தான் மெய் உணர்தல் என்று குறிப்பிட்டு இருக்கிறார். யோகம் என்பது மெய்காக்கும் யாகம். மெய்க்கு எந்த ஊறுகளும், காயங்களும் ஏற்படாமல் காக்கின்ற போர்க்கவசம். உடலை உயர்வாக வைத்திருக்க உதவுகிற உபாய சாகரம். அப்படிப்பட்ட அருமையான கருத்துக்களை மெய் உணர்தலில் எழுதிய வள்ளுவருக்கு, இதன் பிறகுதான் 'பொருட்பால்' எழுதுகிற உத்வேகம் பிறந்திருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

தீமைகளைத் துறந்தார்க்குத் தேகமே திவ்ய விருந்தாக அமையும் என்பதால்தான், துறவுக்குப்பிறகு 'மெய் உணர்தல்' அதிகாரத்தை வைத்திருக்கிறார்.

351. பொருள் அல்லவற்றைப் பொருள்என்று உணரும் மருளான்ஆம் மாணாப் பிறப்பு

பொருள் விளக்கம்:

பொருள் = மெய்யாகிய உடலைத் தவிர
அல்லவற்றை = வெறுமை உடைய
பொருள் என்று = வாழ்வு தரும் செல்வமென்று, மற்றவற்றை
உணரும் = அறிந்துகொண்டு இருக்கிற
மருள் + ஆன் = மதிகலங்கிய ஆன்மாவை உடையவனுக்கு
மாணாப் பிறப்பு = மாட்சிமை இல்லாத வாழ்வே அமைகிறது

சொல் விளக்கம்:

பொருள் = பொன், உடம்பு; **வற்றை** = வெறுமை
மருள் = மதிகலங்கிய; **ஆன்** = ஆன்மா
மாணா = மாட்சிமை இல்லாத

முற்கால உரை:

மெய்ப் பொருள் அல்லவ்ற்றை மெய்ப் பொருள் என்றுணரும், விபரீத உணர்வானேல், இன்பமில்லாத பிறப்பு உளதாம்.

தற்கால உரை:

மெய்ப் பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள்தான் என்று தவறாக என்னும் மயக்க அறிவினை உடையவன், சிறப்பில்லாத உயர் வாழ்வு வாழ்பவன் என்று பிறரால் கருதப்படுவான்.

புதிய உரை:

மெய்யான உடலைத்தவிர மற்ற பொருளை எல்லாம், துணை என்று நம்புகிற மதிகலங்கிய ஆன்மா உடையவன், மாட்சிமை இல்லாத வாழ்வையே அடைவான்.

விளக்கம்:

உலகத்துப் பொருட்களை எல்லாம் தனக்கு வேண்டும் என்று தாண்டிக் குதிக்கிற மனோபாவம்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது.

பொருளைத் தேவைக்குச் சேர்க்கிறவன் என்பதைவிட, மலைபோலக் குவிக்கிறவன் என்பதில்தான் மன நிம்மதி இருக்கிறது என்று மனிதக் கூட்டம் நம்பிக் கொண்டு வாழ்கிறது. அப்படி எண்ணுகிறவர்களின் ஆன்மா அலறித் துடித்து. அறற்றிக் கொண்டு இருக்கிறது. அந்த அறற்றல்களும், அழுகையும் ஆன்மாவின் பலத்தைக் குறைக்கிறது. அதனால் ஆன்ம சக்தி மறைகிறது.

அவதிப்படுகிற ஆன்மாவை வைத்திருக்கிறவனுக்கு, அமைதியும் ஆனந்தமும் எப்படிக் கிடைக்கும்? ஆகவே அவனது வாழ்வு, வெட்டி முறிக்கப்பட்ட மரமாக, வெறுமை விளையாடும் தரித்திர பூமியாக விளங்குகிறது. அதனால் அவனது சுகவாழ்வில் சூன்யமே கவ்விக் கிடக்கிறது என்று முதல் குறளில் வள்ளுவர் சொல்லுகிறார்.

352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு

பொருள் விளக்கம்:

மருள்நீங்கி= பேய்க்குணமுடைய அஞ்ஞானம் நீங்கி
மாசறு = தீமைகளைத் தீர்த்த
காட்சியவர்க்கு = அறிஞர் பெருமக்களுக்கு
இருள்நீங்கி = ஆணவமலம் நீங்கி
இன்பம் பயக்கும் = அகமகிழ்ச்சியையே படைக்கும்

சொல் விளக்கம்:

இருள் = ஆணவமலம்; **இன்பம்** = அகமகிழ்ச்சி
மருள் = பேய்க் குணம்; **மாசறு** = தீமையை விலக்கல்
காட்சியவர் = அறிஞர்கள்

முற்கால உரை:

அவிச்சையின் நீங்கி மெய்வுணர்வுடையராயினார்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்.

தற்கால உரை:

மயக்கத்திலிருந்து விலகி, குற்றமற்ற மெய்யுணர்வு உடையார்க்கு அம்மெய்யுணர்ச்சி துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிக்கும்.

புதிய உரை:

பேய்க்குணம் படைத்த அஞ்ஞான ஆணவமலத்தை விலக்கித் தீய குற்றங்களைத் தீர்த்துவிடும் அறிஞர்களுக்கு, அகமகிழ்ச்சியே அளிக்கும்.

விளக்கம்:

அகத்தில் மகிழ்ச்சி ஏற்படும் என்று சொல்லும் பொழுது கேட்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால் அகமாவது மகிழ்வதாவது? ஏனென்றால், அகத்திலே ஆணவமலம், அஞ்ஞான மலம், காமமலம், சூதுவாது நிறைந்த எல்லா மலங்களும் பின்னிக்

கொண்டு கிடப்பதால் அகத்திலே வறட்சிதான் நிலவுமே தவிர, மகிழ்ச்சி வருவதற்கு வாய்ப்பே இல்லை. அதனால்தான், பாசமலங்களை மனது உள்ளவரை பைசாசம் என்றனர். அதாவது எதற்குமே ஒத்துவராத பேய்க்குணம். ஆக, பேய்க்குணத்தை விரட்டுபவரே பேரின்பம் பெறுவர். அற்புதமான அறிவினைத்தான் காட்சி என்பார்கள். அதனாலே வள்ளுவர் அறிஞர்களைக் குறிக்க, 'காட்சியவர்' என்ற ஒரு சொல்லாலே இங்கே குறிப்பிடுகிறார். காட்சியவர் அகத்திலே மாட்சிதான் ஆட்சி செய்யும். அதுதானே இயற்கை. அந்த இயற்கையைத்தான் இரண்டாவது குறளில் வள்ளுவர் வகைப்படுத்தி விளக்குகிறார்.

353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணியது உடைத்து

பொருள் விளக்கம்:

ஐயத்தின் = தீயவை பற்றிய சந்தேகங்களை
நீங்கி = விலக்கி
தெளிந்தார்க்கு = தேகத்தைப் பற்றிய தெளிவான அறிவு உடையவருக்கு
வையத்தின் = வாழ்கின்ற இந்த உலகத்தின்
வானம் = அமுதமானது
நணியது உடைத்து = அவரோடு ஒன்றிக்கலந்து உண்டாகிக் கொண்டே இருக்கும்

சொல் விளக்கம்:

ஐயம் = தீயவை பற்றிய சந்தேகம்
தெளிந்தார் = தேகம் பற்றிய தெளிவு உடையார்
வானம் = மழை, அமுதம்; **நணியது** = அண்மையில் உள்ளது

முற்கால உரை:

ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு, எய்தி நின்ற நில உலகத்தினும், எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதல் உடைத்து.

தற்கால உரை:

ஐயப்பாட்டிலிருந்து நீங்கி, மெய்யணர்வு பெற்றவர்களுக்கு குறைந்த அளவே பார்வையில் படும், இந்த நடைமுறை உலகத்தைவிட, பரந்த அளவு இயற்கைப் பெருவெளியே கூட மிக நெருக்கத்தில் இருப்பதாகவே கருதப்படும்.

புதிய உரை:

தீமைகளைப் பற்றிச் சந்தேகம் அற, தேகத்தின் மேன்மைபற்றி நன்கு உணர்ந்த அறிஞர்களுக்கு, வையத்தின் அமுதமாகிய மகிழ்ச்சி முழுவதும் அவரோடு கூடவே வாழும்.

விளக்கம்:

வையம், வானம், என்று இரண்டு சொற்கள் இங்கே இடம் பெற்று இருக்கின்றன. வையம் என்பது வாழ்கிற பூமி. வானம் என்பது மழையாகிய அமுதம் சுரக்கும் பூமி. அமுதம் என்றால் மகிழ்ச்சி (அ=அகம், புறம், முதம் = மகிழ்ச்சி) 352 - வது குறளில் தேகத்தைப் பற்றித் தெரிந்தவர்க்கு அகமகிழ்ச்சி ஏற்படுமென்றார். ஆனால் இந்தக் குறளில் ஐயம் நீங்கித் தெளிந்துவிட்டால், அக உலகிலிருந்தும், புறவுலகிலிருந்தும் மகிழ்ச்சி பொங்குமென்கிறார். அகமும், புறமுமென்பது ஒன்றில் ஒன்று கலந்தது.

அதனால் உடல் சந்தோசமும், மன மகிழ்ச்சியும், ஆன்மாவின் களிப்பும், மெய்நிலையைப் பற்றி முழுதும் உணர்ந்தார்க்கு உண்டாகுமென்று வள்ளுவர் கூறுகிறார்.

354. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

பொருள் விளக்கம்:

ஐயுணர்வு = ஐந்து முக்கிய புலன்கள் (பஞ்சேந்திரியங்கள்)
எய்திய = பொருந்தி இருக்கின்ற
கண்ணும் = அந்த உடம்பினால்
பயமின்றே = பயன் எதுவுமில்லை
மெய்யுணர்வு = உடல்பற்றிய எல்லா உண்மையான அறிவும்,
தெளிவும் இல்லாமல்,
இல்லாதவர்க்கு = தவறுசெய்கிறவர்களுக்கு

சொல் விளக்கம்:

ஐயுணர்வு = ஐம்புலன்கள் (பஞ்சேந்திரியங்கள்)
கண் = உடம்பு; **பயம்** = பயன்; **தவர்க்கு** = தவறுகிறவர்க்கு

முற்கால உரை:

செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டால் ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டு, தம் வயத்தாய வழியும் அதனால் பயனில்லையே யாம் மெய்யினை உணர்தல் இல்லாதவர்க்கு.

தற்கால உரை:

மெய்யுணர்வு இல்லாதவர்கள் ஐந்து புலன்களின் உணர்வுகளை அடக்கி வென்றிருந்த போதிலும், அதனால் அவர்களுக்கு நிலைத்த பலன் ஏதும் ஏற்படுவதில்லை.

புதிய உரை:

உடல் உணர்வு இல்லாமல் தவறு செய்கிறவர்களுக்கு, உடம்பு பற்றி நன்கு அறிந்திருந்த போதிலும், அதனால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை.

விளக்கம்:

ஐம்புலன்கள் யாவும் உடலைத் தரமாகக் காக்கவும், உரமாக வளர்க்கவும், உண்டாக்கப் பட்ட சிறப்பு உறுப்புக்களாகும். வெப்பம், காற்று, நீராகிய மூன்றால் உருவாக்கப்பட்ட இயற்கை நிலையைப் போல, உடலும் வெப்பம், நீர், காற்றால் சமைக்கப்பட்டிருக்கிறது. இயற்கையோடு உடலை, ஒத்து உடன் செல்லவே ஐம்புலன்கள் உதவுகின்றன.

இந்த ஐம்புலன்களை வைத்துக் கொண்டு உடலைப் பற்றி சிந்திக்காமல், உடலுக்கு உயர்தன்மையை உருவாக்காமல் இருந்தால், அது தேங்காயை உருட்டுகிற நாய்க்குச் சமமாகும்.

புலனை ஆங்கிலத்தில் (Sense) என்பார்கள். ஐந்து புலன்கள் சரியாக இருந்தால் 'காமன்சென்ஸ்' (Comman Sense) என்பார்கள். புலன் ஒன்று கெட்டாலும் அதற்குப் பெயர், 'நோ சென்ஸ்' (No Sense) என்பார்கள். புலன்கள் ஐந்தும் சரிவரப் பணியாற்றாமல் போனால் அதை 'நான் சென்ஸ்' (Non Sense) என்பார்கள். அதுவே தீமைகளுக்குத் துணைபோகுமானால், அதை 'நியூசென்ஸ்' (Nuisence) என்பார்கள்.

இன்றைய மனிதர்களின் எண்ண ஓட்டத்திற் கேற்ப, இந்தக் குறள் அமைந்திருப்பது, வள்ளுவரின். தொலை நோக்குச் சிந்தனையின் பெருமையைப் பறை சாற்றுகிறது.

355. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு

பொருள் விளக்கம்:

எப்பொருள் = எல்லாவிதமான உடல் அமைப்பும்

எத்தன்மைத்து ஆயினும் = எந்த சுபாவத்துடன் அமைந்திருந்தாலும்

அப்பொருள் = அந்த உடம்பினை

மெய்ப்பொருள் = அரும்பாண்டம் என்று

காண்பது = அறிந்து காப்பதுதான்

அறிவு = அறிவாகும்.

சொல் விளக்கம்:

பொருள் = பொன், உடம்பு, திரவியம் அரும்பாண்டம்

மெய்ப்பொருள் = உண்மையான உடலின் பெருமை

முற்கால உரை:

யாதொரு பொருள், யாதோர் இயல்பிற்றாய் தோன்றினும் அத்தோன்றிய வாற்றை கண்டொழியாது, அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

தற்கால உரை:

எந்தப் பொருள் எப்படிப்பட்ட வகையில் தோன்றினாலும், அதனுடைய தோற்றத்தை மட்டும் கொண்டு மயங்காமல், அந்தப் பொருளின் மெய்யான பொருளைக் கண்டறிவதுதான் உண்மையான அறிவாகும்.

புதிய உரை:

ஒரு உடலானது எந்த மாதிரி குணம், சுபாவம் கொண்டிருந்தாலும் அந்த உடம்பினை அரும்பாண்டம் என்று உணர்ந்து, பொன்போலக் காப்பதுதான் அறிவாகும்.

விளக்கம்:

உடலானது மூன்றுவிதமான அமைப்புகளால் உருவான தோற்றம் கொண்டது என்பர் மேல் நாட்டு அறிஞர்கள்.

1. குண்டான, குள்ளமான உடலமைப்பு (Endomorph)
2. உயரமான, வாட்டசாட்டமான அரக்க உடலமைப்பு (Ectomorph)
3. நடுத்தர நளினமான உடலமைப்பு (Mesomorph)

இந்த மாதிரி உடல் அமைப்புகளில், குணம் (Quality); சுபாவம் (Quantity) போன்ற தன்மைகள் உடம்புக்கு உடம்பு மாறுபட்டு இருக்கும்.

வலிமையோ, எளிமையோ, வறுமையோ, வெறுமையோ, இல்லாமையோ, இயலாமையோ, இப்படி ஏதாவது ஒன்று இருந்தாலும் அப்பாண்டத்தை (சட்டி, கடம்) உண்மை என்று உணர்ந்து அறிந்து, தெளிந்து காப்பதுதான் ஆன்மாவின் அறிவு என்பார்கள். அறிவு என்றால் அறிய வேண்டிய ஞானம் என்று பொருள். உடலைக் காப்பதில், எல்லா மனிதர்களும். ஞானவான்களாகத் திகழ வேண்டும் என்பதுதான் வள்ளுவரின் பேராவல் ஆகும்.

356. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றுஈண்டு வாரா நெறி

பொருள் விளக்கம்:

கற்று = தொடர்ந்து கற்றுக் கொண்டதும்
ஈண்டு = இப்பொழுதே என்று
மெய்ப்பொருள் கண்டார் = உடலின் சிறப்பினை அறிந்து கொண்டவர்கள்
மற்று = உடனே
ஆண்டு = அப்பொழுதே
வாராநெறி = ஒழுக்கத்துடன் வாழ்கிறசெயல்களை
தலைப்படுவர் = ஏற்றுக்கொண்டு செயல்படுவர்.

சொல் விளக்கம்:

கற்று = தொடர்ந்து பயிலுதல்; **ஈண்டு** = இப்பொழுதே
தலைப்படுவர் = வாழ்பவர்; **வாரா நெறி** = ஒழுகும் உபாயம்

முற்கால உரை:

இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு, அதனால் மெய்ப் பொருளை உணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்.

தற்கால உரை:

இவ்வுலகத்தில் கற்க வேண்டியவைகளை எல்லாம் கற்று, உண்மைப் பொருளை நன்கறிந்தவர்கள், மீண்டும் இல்லற நெறிக்கு வாரா வகையில் தூயதுறவர நெறியை அடைவார்கள்.

புதிய உரை:

தினம் தினம் கல்வி பயில்வது போல, உடலின் உயர் தன்மையைக் கண்டறிந்து, அப்பொழுதே உடல்காக்கும் வழிகளைப் பின்பற்றுவதை ஏற்று, ஒழுக்கத்துடன் செயல்படுபவர்கள் சிறந்த வாழ்வை வாழ்வர்.

விளக்கம்:

'கற்று' என்ற ஒரு சொல்லை வள்ளுவர் இந்தக் குறளில் பெய்திருக்கிறார். கற்பது இப்பொழுதே கற்பது என்பதற்காகக் 'கற்றுஈண்டு' என்றார். இயற்கையைப் பற்றிக் கற்பது 'கற்க' (க = பஞ்ச பூதங்கள், உடல், வியாதி, எமன்) ஒழுக்கத்தைக் கற்பது, 'கற்கை'.

ஆக, உடலைக் காக்கத்தான் கற்க வேண்டும் என்பதில், வள்ளுவர் உறுதியாக இருக்கிறார். தொடர்ந்து பயில்வதைத்தான் **கல்வி** என்றார். தினம் உடலுக்குப் பயிற்சி செய்கிறவன்

பயில்வானாகிறான். தினம் மூளைக்குப் பயிற்சி செய்கிறவன் **வித்வான்** ஆகிறான். ஆன்மாவிற்குப் பயிற்சி செய்கிறவன் **மகான்** ஆகிறான். இந்த மூவகைப் பயிற்சிகளுமே உடலைக் காக்கின்ற உபாயங்களைத்தான் அளிக்கின்றன. அப்படிப்பட்ட ஒழுக்கமான வழிகளை, இப்பொழுதே செய்யுங்களென்று ஏழாவது குறளில் இயம்புகிறார்.

357. ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

பொருள் விளக்கம்:

ஓர்த்து = கூர்ந்து கேட்டு, ஆராய்ந்து, தெளிந்து
உள்ளம் = ஆன்ம ரூப ஞானத்தின் முயற்சியால்
உள்ளது = உண்மையான
உணரின் = உடலின் மேன்மையை தெரிந்து கொண்டால்
வேண்டா பிறப்பு: விரும்பாத தீமையயின் தொடக்கத்தையே
பேர்த்து = பெயர்த்து எறிந்து
உள்ள = உண்மையான வழியில்
ஒருதலையாய் = உறுதியாகக் காப்பாற்றி வாழ்வர்.

சொல் விளக்கம்:

ஓர்த்து = கூர்ந்து கேட்டு, ஆராய்துதெரிந்து
உள்ளம் = ஆன்ம ரூப ஞானம்
உள்ளது = உண்மையானது; **ஒருதலை** = நிச்சயம்
பேர்த்தல் = பெயர்த்து; **வேண்டா** = வெறுப்பு

முற்கால உரை:

அங்ஙனம் கேட்ட உபதேச மொழிப் பொருளை ஒருவன் உள்ளம் அளவகையலானும், பொருந்து மாற்றானும் தெளிய ஆராய்ந்து, அதனால் முதற்பொருளை உணருமாயின் அவனுக்கு மறு பிறப்புளதாக நிகைக்க வேண்டா.

தற்கால உரை:

ஒருவன் உள்ளமானது உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாக அதனை உணருமாயின், பின்னர் வாழ்க்கையில் மாறிவரும் துன்பங்களைப்பற்றி அவன் எண்ணை வேண்டியதில்லை.

புதிய உரை:

ஆராய்ந்து அறிந்தும், கூர்ந்து கேட்டும் உள்ளத்தில் மெய்யைப் பற்றிய ஞானம் வந்ததும், அந்த உறுதியுடன், வெறுக்கின்ற தீமை எல்லாவற்றையும் வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேண்டும்.

விளக்கம்:

உடலின் உண்மையான மேன்மையைப் பற்றி, தானே ஆராய்ந்து அறிவது ஒரு முறை. பெரியோரின் உபதேச மொழிகளைக் கேட்டுத் தெளிவது ஒரு முறை. சிந்தித்ததால் ஏற்பட்ட சொந்த புத்தி; ஐம்புலன்களால் வெளி உலகில் கேட்டு வந்த புத்தி. இரண்டுந்தான் ஒருவனை வாழவைக்கும் என்பது வள்ளுவரின் கருத்து.

அப்படி ஏற்பட்ட ஆன்ம ஞானத்தால், மனம் உறுதியாகிறது. உடலில் செயல் நிலைப்பாடுகள் உண்டாகிறது. அந்த உறுதி வந்தவுடனேயே விரும்பாத தீமைகளை வேரோடு பெயர்த்து எறிந்து விட வேண்டும் என்று வேகத்துடன் வலியுறுத்துகிற வள்ளுவர், உடம்பைப் பற்றி உணர்ந்து கொள்ளுங்கள், தெரிந்து கொள்ளுங்கள் என்று இந்தக் குறளில் தெளிவாக்குகிறார்.

358. பிறப்புஎன்னும் பேதமை நீங்க சிறப்புஎன்னும் செம்பொருள் காண்பது அறிவு

பொருள் விளக்கம்:

பிறப்பு என்னும் = தீமைகளின் பிறப்பிடமாகிய
பேதமை = அறிவின்மையானது
நீங்க = விலகுமாறு
சிறப்பு என்னும் = உடல் ஒன்றுக்கே உரிய மேன்மைக்கு
செம்பொருள் = ஒழுக்கமாகிய உண்மை அறத்தால
காண்பது = உடலைக்காப்பது
அறிவு = அறிய வேண்டிய அறிவாகும்.

சொல் விளக்கம்:

பேதமை = அறிவின்மை; **சிறப்பு** = ஒன்றுக்கே உரியது
செம்பொருள் = அறம், ஒழுக்கம்

முற்கால உரை:

பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சைகெட வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பது, ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

தற்கால உரை:

ஒருவரின் பிறப்புடன் சேர்ந்து தோன்றும் அறியாமை நீங்க, வேண்டுமானால் அவனுக்கு சிறப்பு அளிக்கவல்லது என்று கூறப்படுகின்ற உண்மையென்னும் பொருளைக் காண முயல்வதே அறிவுடைமையாகும்.

சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள், அவ்வுணர்வு ஒழுக்கங்களை அழித்துப்பின் சாரமாட்டா.

தற்கால உரை:

ஒருவன் தன்னைச் சாரக்கூடிய பொருள்களின் தன்மைகளை மெய் உணர்வின் மூலம் அறிந்து, அவற்றின் மேல் பற்றுக் கொள்ளாமல் நடப்பானாயின், அவனைச்சாரக் கூடிய துன்பங்கள் அவனது உணர்வினை அழித்துச் சாரமாட்டா.

புதிய உரை:

உடலைத் துணைபெற்ற முக்கியத்துவத்தை உணர்ந்து ஒருதலைப் பட்சமில்லாமல் உண்மையான ஒழுக்க வாழ்வு வாழ்கிறபோது, பிற தீமைகள் அவனைச் சேரமாட்டா.

விளக்கம்:

உடலிலே ஏற்படுகின்ற மாற்றங்கள், வேதனைகள் ஆறு. மனதிலே ஏற்படுகின்ற மாசுகள், மனதைக் கெடுக்கும் கேடுகள் ஆறு. ஆன்மாவின் அமைதியைக் கெடுத்து வேதனைக்குள் வீழ்த்தி அலறித் துடிக்கவைப்பவைகள் பன்னிரண்டு. இவைகள் யாவையென்பதை முன்னரே தெரிவித்திருக்கிறோம். கண்டு தெளிக.

இந்த மூன்றுவித வேதனையால்தான் ஒரு மனிதன் மெலிகிறான், நலிகிறான். அழிகிறான். இவற்றிலிருந்து விடுபட, நீங்கள் உறுதியாக உடம்பைக் காக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். அவற்றின் சாகசங்களை வெல்லுங்கள் என்பதாக ஒன்பதாம் குறளில் வள்ளுவர் உறுதிபடக் கூறுகிறார்.

360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்

பொருள் விளக்கம்:

காமம் = உலக இச்சையில் ஊறி, விரும்பிய பொருளாசையில்,
வெகுளி = அவைகள் கிடைக்காத பொழுது ஏற்படுகின்ற சினம்
மயக்கம் = கொடுக்கிற மதிமயக்கம்
இவை மூன்றன் = உடலில் ஏற்படுகின்ற இந்த உட்பகை மூன்றின்
நாமம் கெட = நினைப்பு அழிய
கெடும் நோய் = துன்பங்கள் எல்லாம் அழிந்துவிடும்

சொல் விளக்கம்:

நாமம் = நினைப்பு, இணக்கம், ஐயம்

புதிய உரை:

தீயவற்றிற்கு அஞ்சி, அந்த அறியாமையிலிருந்து அகன்று, உறுதியாக உடல்காப்பதே உண்மையான மேன்மையாகும். ஒழுக்கத்தைப் பின்பற்றி உடலைக் காப்பதே உண்மையான அறிவாகும்.

விளக்கம்:

தீமை செய்வதற்கு அஞ்ச வேண்டுமென்கிறார். அந்த அச்சவுணர்வுதான் தீமைகளைப் பழிக்கும். தீச்செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும். தீய எண்ணங்களை ஈற்படாமல் அழிக்கும். அவ்வாறு நிர்மலமாக மாறுகிற நெஞ்சில்தான், நேர்மையும், நீர்மையும் நிறைந்துவரும். சாதாரண உடலைப் பொருள் என்ற வள்ளுவர், ஒழுக்கத்தால் சிறக்கின்ற அதே உடலுக்குச் **செம்பொருளென்று** பெயர் சூட்டுகிறார். உலகில் உங்களது தலையாய கடமை உடலைப் பண்பாற்றலுடன் பராமரித்துக் காப்பதுதான் என்று வலியுறுத்துவதற்காக, அறிவு, அறிவு என்று பல இடங்களில் குறிப்பிடுகிறார். அறிவு என்பது அறிய வேண்டிய ஆன்ம ஞானம். ஆறறிவு படைத்த மக்களே, நீங்கள் ஞானியாக மாற வேண்டாம். ஞானவான்களாக வாழுங்கள் என்ற தனது விருப்பத்தை விடாமல் கூறிக் கொண்டே வருகிறார்.

359. சார்புஉணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்து
சார்தரா சார்தரு நோய்

பொருள் விளக்கம்:

சார்பு உணர்ந்து = உடலின் துணையின் முக்கியத்துவத்தை அறிந்து
சார்புகெட = மனச்சாய்வும் ஒரு தலைப்பட்சமுமின்றி
ஒழுகின் = ஒழுக்கம்காத்து வாழ்ந்தால்
மற்ற = பிற தீமைகளை
சார்தரா = அணுகவிடாமல்
சார்தருநோய் = சார்ந்து வருகின்ற துன்பங்களை எல்லாம்
அழித்து = அழித்து விடும்

சொல் விளக்கம்:

சார்பு = துணை; **சார்பு** = மனமச்சாய்வு, ஒருதலைப்பட்சம்
சார் = அணுகு; **நோய்** = வேதனை

முற்கால உரை:

ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம் பொருளை உணர்ந்து இருவகைப் பற்றுமற ஒழுகவல்லனாயின், அவனை முன்

முற்கால உரை:

ஞானயோகங்களின் முதிர்ச்சி உடையார்க்கு விழை, வெறுப்பு, அவிச்சை என்னும் இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங்கூட கெடுதலான். அவற்றின் காரிய மாய வினைப்பயன்கள் உளவாக.

தற்கால உரை:

காம வெறுப்பு, கடும் சினம், மயக்க அறிவு ஆகிய இக்குற்றங்கள் மூன்றினுடைய பெயர்களும் கெட்டொழியும் படியாக நடந்து கொண்டால், துன்பங்கள் பலவும் வராமல் கெட்டொழிந்து விடும்.

புதிய உரை:

உட்பகையாகிய காமம், வெளிப் பகையாகிய சினம், ஆன்மப் பகையாகிய மயக்கம், இந்த மூன்றின் நினைப்பை அழித்து, இணக்கத்தை ஒழித்தால்தான், உடலில் ஏற்படுகின்ற வாதைகள், வேதனைகள் எல்லாம் மறைந்தொழியும்.

விளக்கம்:

காம உணர்வை வெல்ல முடியாது, கட்டுக்கடங்காமல் வரும். கோபத்தையும் தள்ளமுடியாது. எப்பொழுது மதிமயங்குகிறது. எப்பொழுது புத்தி கலங்குகிறது என்று யாராலும் சொல்ல முடியாது.

கடலில் சூள் கொள்ளும் சூறாவளிபோல மனிதர்களைக் கலங்க அடிக்கின்ற இந்த மூன்றையும், தள்ளவும் முடியாது. வெல்லவும் முடியாது.

சிங்கத்தை அதன் குகையிலேயே அடக்கிப் பிடி என்பார்கள். குகைவிட்டுக் கிளம்பிய சிங்கத்தை பகையெதுவும் தடுத்து நிறுத்த முடியாது. அதுபோலப் பகையாக, விஷப்புகையாக இருந்து வெளிவருகிற, காமம், சினம், மயக்கம் இம்மூன்றையும், அவைகள் தோன்றுகிற இடமாகிய சிந்தையிலேயே அழித்து விடவேண்டும். அந்த நினைப்பை எரித்து விடவேண்டும். அதனால்தான், நாமம் கெட என்றார். நாமம் என்றால் இங்கே பெயர் என்ற பொருள் இல்லை. அந்த நினைவு கெட என்பதையே நாமம் கெட என்றார் வள்ளுவர்.

37. அவா அறுத்தல்

ஒரு பொருளைப் பார்க்கிறோம். அது வேண்டுமென்று விரும்புகிறோம். அது கிடைத்தால் மகிழ்கிறோம். கிடைக்காவிட்டால், மறந்து விடுகிறோம். அதற்குப் பெயர் **விருப்பம்.**

ஒரு பொருளை விரும்புகிறோம். அது வேண்டும் என்ற விருப்பமானது வேகம் பெறுகிறது. அது எந்த சூழ்நிலையிலும் மனதைவிட்டு நீங்காமல், சுரந்து கொண்டே இருப்பதால், அது மாசாகிற்து. இந்த மாசு. ஆசு வாக வடிவெடுத்து ஆசையாக மாறிவிடுகிறது.

உண்டாகிற ஆசை, நல்லதாக இருந்து, நல்வினையாக மாறினால் அதற்கு **வேட்கை** என்று பெயர். உண்டாகின்ற ஆசை தீயதாக இருந்தால், தீவினையாக அமைந்தால், அதற்கு **வெறி** என்று பெயர். இந்த வெறியைத்தான் வள்ளுவர் மிக அழகாக **'அவா'** என்று அழைக்கிறார்.

அவாவுவது என்றால் இச்சித்தல் அதாவது மனித மாண்பிலிருந்து கீழிறங்கிவிடுதல். பேராசை கொள்ளுதல். விடாது பற்றிக் கொள்ளுதல். ஆசைப் பெருக்கம் என்ற அவாவினை, திருமூலர் மிக அழகாகச் சாடிப் பாடியிருக்கிறார்.

''ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே''

மனிதர்களுக்கான துன்பங்களுக்கெல்லாம் மூல காரணமாக அமைந்திருப்பது அவாதான். அவா கொள்ளும்போது, ஆனந்தமான சூழ்நிலை இருந்தாலும், மாறிப்போய் விடுவதால், மனித வாழ்வின் மகத்துவமே அங்கே ஆட்டம் கண்டு விடுகிறது. இதைப்புரிந்து கொண்டால் போதும். ஆனால் பின்பற்ற வேண்டாமா?

திருமூலர் ஆசையை விடவிட என்றார். வள்ளுவரோ அவாவை அறுத்தல் என்கிறார். மெய்யுணர்வு மிக்கவரே அவரவை அறுக்க முடியும் என்பதால், மெய்யுணர்வு அதிகாரத்திற்குப் பின் இந்த அதிகாரத்தை வைத்திருக்கிறார்.

361. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து

பொருள் விளக்கம்:

அவாஎன்ப = ஆசை கொள்ளுதல் என்பது
எல்லா உயிர்க்கும் = எல்லா உயிர்களுக்கும் உண்டு
எஞ்ஞான்றும் = எப்பொழுதும்
தவா அப்பிறப்பு = உறுதியான தொடக்கத்தை
ஈறும் = தந்து
வித்து = அறியவைக்கும் அறிவுடையவராக்கும்

சொல் விளக்கம்:

தவா = உறுதிநிலை; **வித்து** = அறிஞன், அறிதல்
ஈனும் = உண்டாக்கும்

முற்கால உரை:

எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது . வருகின்ற வெறுப்பினை விளைவிக்கும் வித்து அவாவென்று சொல்லுவர் நூலோர்.

தற்கால உரை:

எல்லா உயிர்களுக்கும், எப்பொழுதும் விடாது துன்பத்தை விளைவிக்கும் விதையே அவாதான் என்று ஆன்றோர்கள் சொல்லுவார்கள்.

புதிய உரை:

ஆசை என்பது எல்லா மக்களுக்கும் உண்டு. அந்த ஆசை எப்பொழுது ஆரம்ப நிலையில் இருக்கிறதோ அப்பொழுதே அவர்களுக்கு அறிதலை உண்டாக்கி அறிஞராக்கும்.

விளக்கம்:

அவாவின் ஆரம்ப நிலை. அது முளைவிட்டுக் கிளம்புகிற இள நிலையில், மனதுக்கு இதமாகவே இருக்கும்.

எந்தத் தீய செயலும் தோன்றுகிற போது இனிய முகம் காட்டும். துணைவருவது போலத் தோற்றத்தை உண்டாக்கும். உடலுக்குச் செழிப்பைத் தருவதுபோல, மாயையை ஏற்படுத்தும். மனதுக்கு அறுசுவை விருந்தாக உண்பிக்கும். அதுதான் தங்களை உய்விக்கும் என்று தடித்தனமாக நம்பவைக்கும். கொடிய மிருகங்களின் குட்டிகள்,

குட்டியாய் இருக்கும் பொழுது அழகாகத் தோன்றுவது போல, விஷ ஜந்துக்களின் குஞ்சுகள் கவர்ச்சியாகத் தெரிவதுபோல, தீமையின் தொடக்கமும், தேவதைபோலவந்து திருப்தியான காட்சியைத் தந்து விடும் என்று முதல் குறளில் வள்ளுவர் அவாவின் அமைப்பை, நமக்குப் புரிய வைக்கிறார்.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றதுவேண்டாமை வேண்ட வரும்

பொருள் விளக்கம்:

வேண்டுங்கால் = விரும்புகிற பொழுது
பிறவாமை = பிற அழகான எண்ணங்களையே
வேண்டும் = விரும்ப வேண்டும்
மற்றது = அப்படியில்லாவிட்டால்
வேண்டாமை = நாம் விரும்பாமல் வெறுக்கிற தீயவைகள்
வேண்டவரும் = மன்றாடி வந்து நம்மைப் பிடித்துக் கொள்ளும்

சொல் விளக்கம்:

வாமம் = அழகு; **வேண்டாமை** = வெறுப்பு
வேண்ட = மன்றாடி

முற்கால உரை:

பிறப்பு துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமையை வேண்டும். அப்பிறவாமைதான் ஒரு பொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத்தானே உண்டாகும்.

தற்கால உரை:

ஒருவன் ஒன்றை வேண்டும்போது துன்பமில்லாத நிலைமையையே வேண்டுவான். அத்துன்பமில்லாத நிலைமையும் அவன் அவாவின்மையை விரும்புவதன் மூலந்தான் வரும்.

புதிய உரை:

விரும்புகிற பொழுதே அழகான எண்ணங்களையே விரும்பவேண்டும். இல்லையென்றால், வெறுத்து ஒதுக்குகிற தீய நினைவுகள் மன்றாடிக் கொண்டு மனதுக்குள் வந்து விடும்.

விளக்கம்:

மனத்துக்கண் மாசிலன் ஆதல் வேண்டுமென்பதுதான் வள்ளுவரின் வாழ்க்கையின் வேட்கையாக அமைந்து இருந்தது.

ஆனால், மனதில் எப்பொழுதும் மலைபோல் அமர்ந்து, நிலையில்லாமல் ஆக்கி வைக்கின்ற ஆறு உட்பகைகள் உண்டே!

(1) காமம் (2) குரோதம் (3) லோபம்
(4) மோகம் (5) மதம் (6) மாச்சர்யம்.

இந்த ஆறு அவாக்களும் மனதுக்குள்ளேயே அகலக் கால்பரப்பி ஆரவாரமிட்டுக் கொண்டு இருக்கின்றன. இவற்றை முழுதுமாக வெளியேற்றி வெற்றிபெற முடியாது என்பதால், அந்த ஆறையும் மூடுவதுபோல, மூடிமறைப்பதுபோல, நல் நினைவுகளைப் பரப்ப வேண்டும். படிப்படியாக நிரப்ப வேண்டும் என்பதால்தான், நீங்கள் விரும்புகிறபோதே நல்ல நினைவுகளை நினையுங்கள் என்கிறார்.

மனமாசுகளின் வீரியத்தையும், மனிதர்களது பலவீனத்தையும் இந்த இரண்டாவது குறளில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை யாண்டும் அஃதுஒப்பது இல்

பொருள் விளக்கம்:

வேண்டாமை அன்ன = தீயவற்றை வெறுத்து ஒதுக்குவது என்பது
விழுச்செல்வம் = சிறப்பான வாழ்க்கையாகும்
யாண்டும் = எங்கெங்கும்
அஃதுஒப்ப = அந்த சிறந்த வாழ்க்கைக்கு உவமையாக அமையும்
தில் = சுகக் காலம்
ஈண்டில்லை = வேறு எதுவுமில்லை

சொல் விளக்கம்:

விழுச்செல்வம் = மேன்மையான வாழ்க்கை, சொர்க்கம்
யாண்டும் = எங்கேயும்; **வேண்டாமை** = வெறுத்தல்; **தில்** = காலம்

முற்கால உரை:

ஒருபொருளையும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை. இனி அவ்வளவே என்று கேட்கப்படுகின்ற துறக்கத்தின் கண்ணும் அதனை ஒப்பது இல்லை.

தற்கால உரை:

அவாவின்மையைப் போன்றதொரு சிறந்த செல்வம் அதனைக் கொண்டிருப்பவன் தன்னிடத்தில்லை. வேறு எங்கும் கூட அதற்கு ஈடாக ஒன்றுமில்லை.

புதிய உரை:

அவாவை வெறுத்து அழிப்பது என்பது அற்புதமான வாழ்க்கையைத் தரும், அப்படி வாழ்கின்ற சுகக்காலத்துக்கு ஈடானது வேறு எங்குமில்லை. எதுவுமில்லை.

விளக்கம்:

அவாவை அழிக்கமுயற்சிக்கிறவனுக்கு ஆற்றல் பெருகி வருகிறது. அவனது வாழ்வில் அளவிடற்கரிய இன்பம் வந்து நிறைகிறது. அதனால் அவனது அன்றாட வாழும் நாட்கள் சுவையாகப் பிறந்து, சுகமாக வளர்ந்து, சொர்க்கமாக மாறிவிடுகிறது. அதைக் குறிக்கவே 'விழுச்செல்வம்' என்றார்.

அப்படி வாழுகின்ற சுகமானகாலம் சொல்லற்கரிய விழா எடுத்துக் கொண்டாடுவதுபோல, அவனை வாழ்விக்கும் என்று மூன்றாம் குறளில் அவாஅறுத்தலினால் வரும் அழுத வாழ்க்கையைக் குறித்துக்காட்டுகிறார்.

364. தூய்மை என்பது அவாஇன்மை மற்றது
வாய்மை வேண்ட வரும்

பொருள் விளக்கம்:

தூய்மை என்பது = பரிசுத்தமான மெய் வாழ்க்கை என்பது
அவா இன்மெய் = ஆசைப்படாத உடம்பேயாகும்
மற்றது = மற்றய இன்பங்கள் எல்லாம்
வாய்மை = உண்மையாக வாழும்போது
வேண்டவரும் = விரும்புவது போல வந்த சேரும்

சொல் விளக்கம்:

தூய்மை = பரிசுத்தம்; **அவா இன்மை** = ஆசையில்லாத உடல்
வாய்மை = உண்மை

முற்கால உரை:

ஒருவருக்கு வீடென்று சொல்லப்படுவது அவாயில்லாமை. அந்த அவாயில்லாமைதான், மெய்மையை வேண்டத்தானே உண்டாம்.

தற்கால உரை:

தூய்மையென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது, அவாயின்மையாகும். அவாயின்மையானது உண்மையை விரும்புவதின் மூலம் வருவதாகும்.

புதிய உரை:

பரிசுத்தமான வாழ்க்கையென்பது ஆசைப்படாத உடலால் அமையும். அதனைச் சார்ந்த மற்ற இன்பங்கள் எல்லாம் உண்மையாக வாழ்கிறபோது விரும்புவதுபோலவே தொடர்ந்து வரும்.

விளக்கம்:

அவாதான் மனதை அழுக்காக்கி விடுகிறது. அந்த அசடுகள், அழுக்குகள், அகற்ற முடியாமல் போவதால், கசடுகளாக மாறி, மனிதரது உடலையும், உள்ளத்தையும் கசக்கிப் பிழிந்து விடுகிறது. மனதில் கசடற வாழ்வது மகானுக்குரிய பண்பு என்பார்கள். ஆனால், சாதாரண மனிதனும், அவாவை அழிக்க முயன்றால் நிச்சயமாக அழிக்க முடியுமென்று வள்ளுவர் நம்புகிறார். அந்த நம்பிக்கையைத்தான் இந்த நான்காவது குறளில் நயமாக உரைக்கிறார்.

இல்லத்தை அன்றாடம் நன்றாகக் கூட்டி குப்பைகளை வெளியேற்றுவதுபோல உள்ளத்தில் உண்டாகும் ஆசைக் கழிவுகளையும், அவாக்குப்பைகளையும் பெருக்கித் தள்ள வேண்டுமென்று உருக்கமாக இங்கே எடுத்துரைக்கிறார்.

365. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்

பொருள் விளக்கம்:

அற்றவர் என்பார் = உலகப் பொருள்களை இச்சிக்காதவர்களே
அவாஅற்றார் = அவாவை அடக்கியவராவார்
மற்றையார் = இச்சிப்பதை கைவிடாத மக்கள்
அற்றாக = முற்றிலுமாக
அற்றது இலர் = வெறுத்து விலக்கும் ஆற்றல் இல்லாதவராகிறார்

சொல் விளக்கம்:

அற்றவர் = இச்சைகளில் பற்றில்லாதவர்
அற்றாக = முற்றிலுமாக; **அற்றது** = அழித்து

முற்கால உரை:

பிறவியற்றவரென்று சொல்லப்படுவார் அதற்குமேலே ஏதுவாகிய அவா அற்றவர்கள். பிறவேதுக்களற்று அறிதொன்றும் அறாதவர்கள், அவற்றால் சில துன்பங்கள் அற்றதல்லது அவபோற் பிறவி அற்றிலர்.

தற்கால உரை:

பற்றற்றோர்கள் எனப்படுபவர்கள் ஆசைகளை விட்டவர்களே ஆவார்கள் ஆனால் ஆசைகளை விடாதோர்கள் பற்றுக்களை அவ்வளவாக விட்டவர்கள் ஆக மாட்டார்கள்.

புதிய உரை:

உலகப் பொருள்களை இச்சிக்காதவர்களே அவாவை அடக்கியவராவார். இச்சிப்பதைக் கைவிடாத மக்கள் முற்றிலுமாக அவாவினால் அல்லற்படுகிறார்கள்.

விளக்கம்:

மலையிலிருந்து அருவி கொட்டுவதுபோல, மனதிலிருந்து ஆசைகளும் கொட்டுகின்றன. இந்த ஆசை அருவி கொட்டுவதோ, தேனீக்களைப் போல. அவாவினால் ஆளப்படுகின்ற மக்கள், தேனீக்களின் விஷத் தீண்டலால் தேகமெல்லாம், வேதனைகளுடன் திண்டாடிச் சாய்வதுபோல அவாவுக்கு அடிமைப் பட்டவர்களும், கொடுமையான வாழ்க்கையையே அனுபவிக்கிறார்கள். குற்றுயிராய் மடிகிறார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட இன்னல்மிகு வாழ்க்கையே வேண்டாம். இதயத்திலிருந்து இச்சையைக் களை எடுத்து விடுங்கள். மனதை ஒரு நிலைப்படுத்துங்கள் என்று வள்ளுவர் வழி காட்டுகிறார்.

366. அஞ்சுவது ஒரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஒரும் அவா

பொருள் விளக்கம்:

அஞ்சுவது = அச்சப்பட்டு
ஓரும் = ஆராய்ந்து தெளிந்து (அவாவை அழிப்பவன்)
அறனே = ஒழுக்கமுள்ளவனே
ஒருவனை = ஒப்பற்றவனாக இருந்தாலும்
ஓரும் = தெளிவாக
அவா = பேராசையானது
வஞ்சிப்பது = வஞ்சித்து அவனை அழித்துவிடும்

சொல் விளக்கம்:

ஓர்தல் = ஆராய்ந்து அறிதல், பிரிதல்
அறன் = ஒழுக்கமுள்ளவன்; **ஒருவன்** = ஒப்பற்றவன்
வஞ்சிப்பது = கெடுப்பது

முற்கால உரை:

மெய்யுணர்தல் உயிராகிய காரணங்கள் எல்லாம் எய்தி அவற்றான் வீடு எய்தற்பாலனாய ஒருவனை மரபின் வழியாய் புகுந்து பின்னும் பிறப்பின் கண்ணே வீழ்த்திக் கெடுக்க வல்லது அவா. ஆதலால் அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது.

தற்கால உரை:

ஒருவனை வஞ்சித்துக் கெடுப்பது அவாவேயாகும். ஆதலால் அந்த அவாவுக்கு அஞ்சி வாழ்வதே அவனது அறமாகும்.

புதிய உரை:

ஒழுக்கம் உள்ளவனின் அஞ்சும் குணம் ஆராய்ந்து தெளிந்து அவாவை அழிக்கும். ஆனால் ஒப்பற்றவனாக இருந்தாலும் அவாவானது அவனை ஏமாற்றித் தெளியவிடாமல் செய்து முற்றுமாக அழித்துவிடும்.

விளக்கம்:

அஞ்சுவதற்கு அஞ்சுவது அறிவுடைமை. அஞ்சாதது ஆணவம். ஆணாவமானது அறிவை மயக்கும். அகங்காரத்தை வளர்க்கும் அற்ப குணங்களை மிகுதிப்படுத்தும். அடாவடிச் செயல்களில் ஈடுபடுத்தும்.

மனதிலே எரியும் தீயாக, மாசு எரிகிறபோது, அதை மேலும் எரியூட்டும் தூண்டுகோலாக இருப்பது அவாவாகும். ஒழுக்கமுள்ள அறன், உண்மை நிலைக்குப் பயந்து அவாவை புறம் தள்ளுகிறவன். ஆனால் எல்லாத் திறமைகளும் கொண்டிருக்கும் ஒப்பற்றவனாகிய ஒருவன், அவாவுக்குள் ஆட்கொள்ளும்போது அவனை ஏமாற்றி, வேண்டாத வழிகளைக் காட்டி அவனை அழித்து விடுகிறது.

தன்வீட்டு நெருப்பாக இருந்தாலும் சுடும். நம் வீட்டுத் தங்க ஊசியாக இருந்தாலும் குத்தினால் வலிக்கும். அதுபோல நமக்குள்ளே தகிக்கிற அவாவும் நம்மைச் சுடும் என்று வள்ளுவர், அவாவின் ஆக்கிரமிப்பு அதிசயத்தை தெள்ளத் தெளிவாக விளக்குகிறார்.

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை தான்வேண்டும் ஆற்றான் வரும்

பொருள் விளக்கம்:

அவாவினை = ஆசைப் பெருக்கத்தை
ஆற்ற = முற்றிலுமாக
அறுப்பின் = அறுத்து வீழ்த்துவது

தவாவினை = மலையைப் பெயர்க்கும் காரியமாகும்
ஆற்றான் = அந்த நினைவுபெற்ற வலிமையில்லாதவன்
தான் = ஆன்மாவானது
வேண்டும் = விரும்புவதுபோல
வரும் = எல்லாப் பயன்களும் வந்து சேரும்

சொல் விளக்கம்:

தவாவினை = மலை, உறுதியான செயல்
தான்வேண்டும் = ஆன்மாவிரும்புகிற
ஆற்றான் = வலிமையில்லாதவன்

முற்கால உரை:

ஒருவன் அவாவினை அஞ்சி துவரக்கெடுக்க வல்லனாயின் அவனுக்குக் கெடாமைக்கு ஏதுவாகிய வினைதான் விரும்பு நெறியானே உண்டாகும்.

தற்கால உரை:

ஒருவன் அவாவினை முற்றிலும் நசுக்கக் கூடியவனாக இருந்தால் அது கெடாமைக்கு ஏதுவான நற்செயல். அவன் விரும்புகிற வழியில் ஆராயப்படும்.

புதிய உரை:

அவாவினை எழவிடாமல் அடக்கி அழிப்பவனது உறுதியான செயல் மலையைத் தகர்ப்பதுபோலாகும். அந்த நினைவின் எழுச்சிபெற்ற வலிமையில்லாத ஒருவனுக்கு, அவனது ஆன்மா விரும்புகிறபடியே எல்லா வெற்றிகளும் உண்டாகும்.

விளக்கம்:

அறிய செயலை ஆற்ற விரும்புவதை உதாரணமாக மலையைத் தகர்ப்பது என்பார்கள். அவாவினை அடக்குதல் என்பது வேறு. அடக்கி நிறுத்துதல் என்பது வேறு. அதனை அழித்து இல்லாமல் ஆக்குதல் என்பது வேறு. அழிக்கும் ஆற்றலைத்தான் மலையொத்த செயல் என்கிறார். உடல் வலிமையற்ற ஒருவன் மனதால் அவாவினை அடக்க விரும்பினால் அதற்கு அவனது உடல் மட்டுமல்ல, அவனது ஆன்மாவும் உதவும். உயிர்ப்பினைத் தரும்.

அதைத்தான் ஆன்றோர்கள் ஆன்மபலம், ஆன்ம சக்தி என்கிறார்கள். ஆன்ம பலத்தால் மலையையே அசைக்க முடியும். இந்த அவாவினால் என்ன செய்ய இயலும் என்று வள்ளுவர் இந்த ஏழாவது குறளின் ஆன்மாவின் அபூர்வ சக்தியை வெளிப்படுத்தி விழிப்புணர்வை ஊட்டுகின்றார்.

368. அவாஇல்லார்கு இல்லாகும் துன்பம் அஃது தவாஅது மேன்மேல் வரும்

பொருள் விளக்கம்:

அவா இல்லார்க்கு = பேராசை இல்லாதவர்களுக்கு
துன்பம் = உடல் வருத்தம், மனவருத்தமாகிய வேதனைகள்
இல்லாகும் = எல்லாம் இல்லாமல் போகும்
அஃது உண்டேல் = அப்படியின்றிப் பேராசை நிரம்பிவிட்டால்
தவாஅது = துன்பங்கள் ஒழியாது.
மேன்மேல் = அதிகத்திற்கும் அதிகமாக
வரும் = வந்து கொண்டே இருக்கும்

சொல் விளக்கம்:

துண்பம் = மனவருத்தம்; **தவா** = ஒழியாத; **உண்டேல்** = நிரம்ப
இல் = இல்லை; **மேன்மேல்** = அதிகம் அதிகம்

முற்கால உரை:

அவா இல்லாதார்க்கு வரக்கடவது ஒருதுன்பமும் இல்லை. ஒருவர்க்குப் பிற காரணங்கள் எல்லாம் இன்றிப் பழுதொன்று உண்டாயின் அதனாலே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

தற்கால உரை:

ஆசையற்றவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை. ஆசையொன்று ஏற்பட்டு விட்டாலோ துன்பங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஒழியாமல் மேலும் வந்து கொண்டுதானிருக்கும்.

புதிய உரை:

அவா அற்றவர்களுக்கு மனதாலும் மெய்யாலும் வேதனைகள் வராமல் அழியும். ஆசையானது மனதிலே நிரம்பிவிட்டால் துன்பங்கள் அழியாமல் அதிகத்திற்கும் அதிகமாக ஏற்பட்டு அழித்து விடும்.

விளக்கம்:

ஆசையில்லாத நெஞ்சம் களங்கம் இல்லாதது. தெள்ளிய நீரோடை போன்று தெளிவானது. தூய்மைப் பாத்திரமாக ஒளிர்வது. வாய்மைக்குரிய வாகனமாக மிளிர்வது. அங்கே துன்பங்கள் தலைகாட்டாது. தொலைந்துபோகும். ஆக, அவா இல்லாதவர்களுக்கு மெய்மை வருத்தும் வாதைகள், மனதை மறுக்கும்

வேதனைகள் எல்லாமே இல்லாமல் போவதால் அமைதியும், ஆனந்தமும் அவர்களை அண்டியே கிடக்கின்றன.

ஆசை நிரம்பிய நெஞ்சமானது தேள் கடித்த குரங்குபோன்றது. ஒரு குரங்கிற்கு தேள் கடித்தால், சாராயத்தைக் குடிக்கவைத்தால், அதற்குப் பேயும் பிடித்து விட்டால், அதன் செய்பாடுகள் எப்படி இருக்குமோ அப்படித்தான் ஆசைப்பட்டவர்களது வாழ்க்கை அல்லல்களில் முடியும். அவர்கள் வாழ்வும் மடியும் என்கிறார் வள்ளுவர்.

369. இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும் துன்பத்துள் துன்பம் கெடின்

பொருள் விளக்கம்:

அவாஎன்னும் = ஆசை என்னும்

துன்பத்துள் துன்பம் = துன்பத்தின் எல்லைக்கே உடலும், மனமும் செல்வதால்

உள் கெடின் = அகமகிழ்ச்சி அழிந்துபோகிறது. ஆனால் அவாவை அழித்தவர்களுக்கு

இன்பம் = இன்பமானது

இடையறாது = தடைபடாமல்

ஈண்டும் = மிகுதியாக விரைந்து வந்துகொண்டிருக்கும்

சொல் விளக்கம்:

ஈண்டும் = விரைந்து, மிகுதியாகி; **இடையறாது** = தடைபடாது

துன்பம் = மெய்வருத்தம் மனவருத்தம்; **உள்** = அகமகிழ்ச்சி

முற்கால உரை:

அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவர்க்குக் கெடுமாயின் அவன் வீடுபெற்ற வழியேயன்றி, உடம்போடு நின்ற வழியும் இன்பம் இடையறாது.

தற்கால உரை:

துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாகிய அவா என்னும் துன்பம் கெட்டு ஒழிந்துபோனால், இவ்வுலக வாழ்க்கையில் ஒருவருக்கு இன்பமானது இடைவிடாமல் வரும்.

புதிய உரை:

ஆசைகளால் துன்பத்தின் எல்லைக்கே போய்விடுவதால், இருக்கிற அகமகிழ்ச்சி எல்லாம் அழிந்து போகிறது. ஆனால்

ஆசையை அழித்தவர்களுக்கு இன்பமானது தடைபடாது, முடிவடையாது, விரைவாக வந்து நிறைந்து வாழும்.

விளக்கம்:

அவாவினால் அல்லல் வரும் என்றார் முந்தைய குறளில். ஆனால் இந்தக் குறளில் அவாவென்னும் ஆசைப் பேய்கள் துன்பத்தின் எல்லைக்கே துரத்திச் சென்று விடும். அதனால் வாழ்க்கையே வீணாகிவிடும் என்ற ஒருவரையறையை வரைந்து காட்டுகிறார் வள்ளுவர். ஆனால் அவா அற்றவர்களுக்கு இன்பமானது ஊற்றாக ஊறும். இன்பச் சுனையாக சுரக்கும். சுவாசக் காற்றாக உயிர்ப்பிக்கும். சுகத்தில் வாழவைக்கும் சொர்க்கமாக வாழ்விக்கும் என்ற பேருண்மையை வள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்

பொருள் விளக்கம்:

அவாநீப்பின் = அவாவை நீக்குகிறவன்
ஆரா = பேரன்பின்
இயற்கை = இலக்கணமாகத் திகழ்கிறான்
அந்நிலையே = அப்படி அவன் வாழ்கிற வாழ்க்கையே
பேரா = பெருமைமிகுந்த
இயற்கை = தகுதியும், பாக்கியமும்
தரும் = தந்து உயர்த்தும்

சொல் விளக்கம்:

ஆரா = பேரன்பு; **இயற்கை** = இலக்கணம் பகுதி, பாக்கியம்
பேரா = பெரிய, பெருமை

முற்கால உரை:

ஒருகாலும் நிரம்பாத இயல்பினை உடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைக் கொடுக்கும்.

தற்கால உரை:

ஒருக்காலும் நிறைவு பெறாத இயற்கைத் தன்மையை உடைய அவாவினை ஒருவன் ஒழிப்பானேயானால், ஒழித்த அந்த நிலையிலே

அவனுக்கு எப்பொழுதும் மாறாத தன்மையை உடைய இயற்கை இன்பத்தைத் தரும்.

புதிய உரை:

அவாவை நீக்குகிற ஒருவன் பேரன்பின் இலக்கணமாகத் திகழ்கிறான், அந்த நிலையே அவனுக்கு மிகப்பெரிய தகுதியையும் தந்து கௌரவிக்கிறது.

விளக்கம்:

அவாதான் அன்பைக் கெடுக்கிறது. மனிதப் பண்பைத் தடுக்கிறது. ஊர்வம்பை விலைக்கு வாங்குகிறது. உடலையும், உயிரையும் வாட்டி வதைத்திருக்கிறது. வருத்த சமுத்திரத்தில் அவனைத் தூக்கிப் போட்டுத் திக்குமுக்காடவைக்கிறது.

இந்த இழப்பும், உழப்பும் ஈனத்தனமான பிழைப்பும் வேண்டாம் என்பதை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த வள்ளுவர் இந்தக் குறளில் அவா இல்லாதவன் பேரன்பின் பெட்டகமாகத் திகழ்கிறான். இனிமைக்கு இலக்கணமாக மகிழ்கிறான். அவனைத்தேடிப் பெருமைகளும், தகுதிகளும், பதவிகளும், பாக்கியங்களும், தடைபெறாது வந்து கொண்டே இருக்கின்றன. வாழ்விற்கு வளத்தையும், வற்றாத இன்பத்தையும் வழங்குகின்றன.

அறுமின். ஓசைப்படாமல் அவாவின் உயிரை அறுமின். அகமகிழ்ச்சி கொண்டு ஆற்றல்மிக்கவராக எழுமின் என்று, ஆறறிவு படைத்த மனிதர்களை எல்லாம் அழைத்து, ''அவா அறுத்தல்'' என்னும் அதிகாரத்தை முடித்து வைக்கிறார்.

38. ஊழ்

ஒழுக்கத்தை உறுதியாகக் கடைப்பிடிக்க உயர்நெறிகளை, ஒப்பற்ற முறையில், உன்னத வழிகளையெல்லாம் முப்பத்தேழு அதிகாரங்களில் முனைப்புடன் விளக்கி வந்த வள்ளுவர், ஒழுக்கத்தை வளர்க்கும், உயர்நெறிகளை, உன்னத வழிகளை எல்லாம். உடலுக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை 'ஊழ்' அதிகாரத்தில் உரைத்து இருக்கிறார்.

ஊழ் என்பதற்குப் பழவினை. விதி, வினைப்பயன்முறை, பூர்வ ஜென்மம், செய்தொழிலின் பயன் என்றெல்லாம் பொருள்கள் உண்டு. மதியென்பது சிந்தித்தல். விதியென்பது சிந்தித்த செயலின் வெளிப்பாட்டு விளைவு.

ஒன்றை நாம் செய்கிறோம். அந்த நேரத்தில் ஒருபயனைத் தருகிறது. பின்னர் அந்தக் காரியத்துக்கும் நமக்கும் தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. அதற்குப் பெயர் **செயல்** என்பதாகும். நாம் செய்யும் செயலானது ஏதாவது ஒருபலனைத் தொடர்ந்து தந்துகொண்டே இருந்தால் அதற்கு **'வினை'** என்று பெயர்.

இந்த வினையானது, செய்த வினைக்கேற்ப இரண்டு வகைப்படுகிறது. நன்மையை நல்குகிற வினைக்கு **நல்வினை** என்றும், தீமையை உண்டாக்குகிற வினைக்குத் **தீவினை** என்றும் பெயர்.

இந்த இருவினைகளும், நாம் செய்த **பழவினை** என்று அழைக்கப்படுவதற்கு வேறு ஒரு பெயர்தான் **'ஊழ்வினை'**. இந்த ஊழ்வினையானது வந்து உடலை உறுத்தும். வாழ்வையே வருத்தும் என்பார்கள். அவனவன் செய்கிற வினைக்கேற்ப அவன் உடல் ஆட்படுகிறது. அல்லற்படுகிறது என்பதைத்தான் ஊழ்வினை என்ற அதிகாரத்தில் விளக்குகிறார்.

உடலின் உண்மையான மேன்மையை அறிந்து கொள்ளுங்கள் என்று மெய்யுணர்விலும், உடலை நாசப்படுத்துவதில் அவாவுக்குள்ள ஆட்கொல்லித் தனத்தையும் விளக்கிய வள்ளுவர்; அடுத்ததாக, அவரவர் செய்யும் வினைகள்தான் நித்திய உதவியையும் கொடுக்குமென்று 'ஊழ்' என்ற அதிகாரத்தைப் பின்னதாக வைத்து இருக்கிறார்.

371. ஆகுகூழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள் போகுகூழால் தோன்றும் மடி

பொருள் விளக்கம்:

ஆகூழால் = நல்லதிர்ஷ்டம் தரும் பழவினை

அசைவு இன்மை = முயற்சி

தோன்றும் = உண்டாகும்

கைப்பொருள் = ஒழுக்கமுள்ள உடலானது கொடுமை நிறைந்த தீச்செயலால்

மடிதோன்றும் = கேடுகளும், நோய்களும் உண்டாகும்

சொல் விளக்கம்:

ஆகூழ் = நன்மைதரும் பழவினை

தோன்றும் = உண்டாகும், **அசைவின்மை** = முயற்சி

கை = ஒழுக்கம்; **பொருள்** = உடம்பு

போகூழ் = தீய பழவினை; **மடி** = நோய்

முற்கால உரை:

ஒருவருக்குக் கைப்பொருளாதற்கு காரணமாகிய ஊழான் உயர்ச்சி உண்டாம். அஃது அழிதற்கு காரணமாகிய ஊழான் மடி உண்டாம்.

தற்கால உரை:

ஆக்கும் முறைமையால் சோம்பலும், முயற்சியாகும். போக்கும் முறைமையால் முயற்சியும் சோம்பலாகும்.

புதிய உரை:

பழவினைப்பயனில் உண்டாகும் நல்வினையால் ஒழுக்கம் உள்ள உடலுக்கு மேலும் முயற்சிகள் பெருகும். முன்வினை தருகிற தீவினையால் உடலுக்கு நோய்களும் கேடுகளும் மிகுதியாக உண்டாகும்.

விளக்கம்:

ஆகுகூழ் என்பது ஆக்கம் தருகின்ற நல்வினை. போகுகூழ் என்பது கொடுமை பயக்கும் கடுவினை. நல்வினை உடலின் மனதைச் சாந்தப்படுத்துகிறது. ஆன்மாவை ஆனந்தப்படுத்துகிறது. உடல் உறுப்புக்களாகிய எலும்புகளை வலிமைப் படுத்துகிறது. நரம்புகளை, இரும்புபோல மாற்றுகிறது. அதனால்தான் அந்த உடலில் மகிழ்ச்சியும், எழுச்சியும், முயற்சியும் பெருகும் என்கிறார்.

தீவினையால் திகைக்கிற தேகமானது தடுமாறிப் போகிறது. தடம் புரள்கிறது. பயணத்தில் பங்கம் ஏற்படுகிறது. பகையான

சோம்பல் முற்றுகையிடுகிறது. வாய்ப்புக்காகக் காத்திருந்த நோய்கள் வளைத்துக் கொள்கின்றன. கேடுகள் கிடுக்கிப்பிடி போட அவரது இன்பம் முடிந்து போகிறது. எதிர்காலமோ விழுந்து சாகிறது.

372. பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவுஅகற்றும் ஆகல் ஊழ் உற்றக்கடை

பொருள் விளக்கம்:

பேதை = அறிவிலி (செய்கிற)
படுக்கும் = இழிவான கொடுமைமிக்க செயல்
இழவு ஊழ் = அவமானம் தரும் வினையாகி
அறிவு அகற்றும் = அவனது அறிவையே அழித்து விடும்
ஆகல் ஊழ் = நன்மையான பழவினை
உற்ற = நன்கு பொருந்தி
கடை = மேம்படுத்தும்

சொல் விளக்கம்:

பேதை = அறிவிலி; **படுக்கும்** = இழிவான, கொடுமைமிக்க
இழவு = அவமானம்; **உற்ற** = பொருந்த; **கடை** = மிகப்பண்ணும்

முற்கால உரை:

ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப்பொருள் இழத்தற்கு ஏதுவாவிய ஊழ் வந்துற்ற விடத்து அஃது அதனைப் பேதையாக்கும். இனி அவன் அறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற்கு ஏதுவாகிய ஊழ் வந்துள்ள இடத்து அஃது தனை விரிக்கும்.

தற்கால உரை:

இழப்பிற்குரிய முறைமை அறியாமையைத் தரும். ஆக்கத்திற்குரிய முறைமை அறிவை விரிவாக்கும்.

புதிய உரை:

அறிவிலி ஒருவன் செய்கிற இழிவான கொடிய செயல் அவமான வினையாகி அவனது அறிவையெல்லாம் அழித்துவிடுகிறது. ஆனால் நன்மைதரும் பழவினையானது உடலோடு பொருந்தி வாழ்வையே மேம்படுத்துகிறது.

விளக்கம்:

அறிவில்லாத ஒருவன் உடலால் வறுமையாகிறான். வாழ்விலே வறுமையாகித் தரித்திரனாகிறான். அவனுக்குள்ளே அவன் ஒடிந்து, மடிந்துபோவதால் அவன் செயல்கள் இழிவான தாகவும் கொடுமையானதாகவும், அவமானம் விளைவிக்கிற

தாகவும். மரணம் (உடற்காயம்) உண்டுபண்ணுவதாகவும் அமைந்து அவனைச் சிந்திக்கும் திறனற்றவனாக்கி விடுகிறது. ஆனால் நற்பயன் விளைவிக்கும் நல்வினைகளோ, உடலோடு பொருந்துகிறது. நிகழ்ந்ததெல்லாம் சரியென்று நினைவை நிமிரவைக்கிறது. வாழ்வை மேம்படுத்துகிறது.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றதன்
உண்மை அறிவே மிகும்

பொருள் விளக்கம்:

நுண்ணிய = புத்தி கூர்மையைத் தருகிற
நூல்பல = கல்வி நூல்கள் பலவற்றை
கற்பினும் = மன ஒருமையுடன் கற்றாலும்
தன் = ஆன்மாவின்
உண்மை அறிவே = உள்ள, உடல், எழுச்சியின் உணர்வுபோலவே
மிகும் = மேம்படும்

சொல் விளக்கம்:

நுண்ணிய = புத்தி கூர்மையுள்ள; **கற்பினும்** = மனஒருமையுடல்
தன் = ஆத்மா; **உண்மை அறிவு** = அகமும், புறமும் காணும் எழுச்சி

முற்கால உரை:

பேதைப்படுக்கும் ஊழ் உடையானொருவன், நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையும், கற்றானாயினும் அவனுக்குப் பின்னும், தன் ஊழையானாகிய பேதமை உணர்வே மேற்படும்.

தற்கால உரை:

ஒருவன் நுட்பமான பல்வேறு நூல்களைக் கற்றறிந்த போதிலும், அதற்குப் பிறகும் அவனது உண்மையான உள்ள அறிவு முன்வந்து மேம்படுத்தி நிற்கும்.

புதிய உரை:

புத்தி கூர்மையுள்ள ஒருவன் எவ்வளவுதான் மன ஒருமையுடன் கற்றாலும், அவனது ஆன்மா, மனம், உடல் ஆகியவற்றின் பெற்றிருந்த அறிவுதான் மிகுமே தவிர, விரைவாக வேறு எதையும் மேம்படுத்தி விடாது.

விளக்கம்:

நுண்மை என்பது புத்தி கூர்மை. நூல் என்பது சான்றோர்களின் கருத்துத் தொகுப்பு. கல்வி என்பது அறிவோடு அகழ்ந்து ஆராய்ந்து கற்பது. கற்பு என்பது மனம் ஒன்றிய மன ஒருமைப்பாடு.

இவை அனைத்திற்கும் அடித்தளமாக, ஆதாரமாக, எழுச்சிப் பிழம்பாக எல்லாவற்றையும் ஏற்று மிகுதிப்படுத்துகிற மேன்மைத் திருவாக அமைந்திருப்பது ஆன்மாவும், மனமும், தேகமும்தான். இந்த மூன்றிலும் முன்பு கற்கும் செயலில் ஈடுபட்டு, கலைஞானம் மிகுந்த வினையாக ஆற்றியிருந்தால்தான், இப்போது அவன் கற்கும் வினைக்கு புத்துணர்ச்சியும், பெருவளர்ச்சியும் ஏற்படும். முன்பு அந்தக் கலை, ஞானச் செயல் வினைகள் இல்லாமல் இருந்தால், இப்போது அவன் மேற்கொண்டிருக்கும், அறிவுச் செயலும் வளராமல் ஆரம்ப நிலையிலேயே இருந்து விடும்.

கல்வியும், அறிவும் ஒரு நாளில் உண்டாகிவிடுவதல்ல. தொடர்ந்து விடாது, ஆர்வத்தோடு கற்கும் பொழுதுதான் அது வினையாகிக் கை கொடுக்கும் என்று மூன்றாவது குறளில் கூறுகிறார்.

374. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

பொருள் விளக்கம்:

இருவேறு = பெரிய ஒப்பில்லாத
உலகத்து = இந்த உலகத்திலே
இயற்கை = தகுதிமிக்க பாக்கியம் என்பது
திருவேறு = நல்வினைபுரியும் தெய்வீக வாழ்க்கை வேறு
தெள்ளியர் ஆதல் = தெளிந்த அறிவுடையர் ஆதல்
வேறு = தனியாகும்

சொல் விளக்கம்:

இரு = பெரிய; **தனி** = ஒப்பில்லாத
இயற்கை = தகுதி, பாக்கியம்; **திரு** = நல்வினை, தெய்வீகம்
தெள்ளியர் = கல்வியிற் சிறந்தோர்

முற்கால உரை:

உலகத்து ஊழினான் ஆய இயற்கை இரண்டு கூறு. ஆதலால் செல்வமுடையர் ஆதலும் வேறு. அறிவுடையராதலும் வேறு.

தற்கால உரை:

உண்மை நட்பு என உலகப்போக்கு இருவகை. எனவே செல்வமும் அறிவும் தொடர்பின்றியும் சேரும்.

புதிய உரை:

ஒப்பில்லாத பெரிய உலகத்தில், தகுதிமிகுந்த பாக்கியம் நிறைந்த வாழ்க்கையில் நல்வினை ஆற்றுகின்ற தெய்வீகப் பண்பு

வேறு. கல்வி அறிவிற் சிறந்திருப்பது வேறு. இரண்டும் இணக்கமில்லாத வேறாக இருக்கின்றன.

விளக்கம்:

உலகமானது ஒன்றிலிருந்து ஒன்று உருவானது. ஒன்றில் ஒன்று அணைத்துக்கொண்டும், ஒன்றின் ஒன்றாகத் தழைத்துக் கொண்டும், ஒன்றுக்கு ஒன்று உதவி வடிவாகி, முடிவில்லாமல் முதிர்ந்து, அழிவில்லாமல் கிளர்ந்தும் வருவதால், இந்த உலகத்தில் இரண்டு அரியவைகள் இணக்கமாக இருப்பதில்லை. அதனதன் தனித்தன்மையின் ஆணிவேரை வைத்துக் கொண்டுதான் ஆட்டம் போடுகின்றன. இரண்டும் இணங்கினால் முரண்டு பிடிக்கிற வேறுபாடுகளும் முனைந்து போகும்.

ஆனால் இரண்டும் இணைந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்த்த வள்ளுவர், கல்வி வேறாக இருக்கிறதே, நல்வினை வேறாக இருக்கிறதே; நல்வினையும் கல்வியும் ஒன்றிணைந்தால் வாழ்க்கையின் பாக்கியம் எப்படியும் உயர்ந்துவிடுமே என்கிற கருத்தை, ஊன்று கோலாக்கி, எழுந்து உயர்ந்து நிற்கிறார் வள்ளுவர் இந்தக் குறளில்.

375. நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு

பொருள் விளக்கம்:

செல்வம் = சொர்க்கம் போன்ற வாழ்க்கை
செயற்கு = வாழ்க்கையே வேண்டுமென்று அவாவுவோர்க்கு
நல்லவை எல்லாம் = நல்லோர் சபை எல்லாம்
தீயவாம் = தீய கூட்டமாகத் தெரியும்
தீயவும் = தீமைசெய்கிற கூட்டமெல்லாம்
நல்லவாம் = நல்ல உறவாகத் தெரியும்

சொல் விளக்கம்:

நல் அவை = நல்லவர்கள் சபை; **தீயவை** = தீயோர் கூட்டம்
செல்வம் = சொர்க்க வாழ்க்கை

முற்கால உரை:

செல்வத்தை ஆக்குதற்கு நல்லவையெல்லாம் தீயவாய் அழிக்கும். அதுவேயன்றி தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும் ஊழ்வயத்தான்.

தற்கால உரை:

செல்வம் தேடும்போது, முறைமை சூழலுக்கு ஏற்ப நல்லவை தீமைதரும். தீயவை நம்மை தரும்.

புதிய உரை:

வாழ்க்கையைச் சொர்க்கமாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அவாவுகிற, வெறிகொண்ட ஒருவனுக்கு நல்லவர்கள் எல்லாம் தீயவர்களாகத் தெரிவார்கள். தீயவர்கள் வேண்டியவர்களாகமாறி. அவனது அழிவுக்குத் தீவினை பின்புரமாகச் செயல்படுகிறது.

விளக்கம்:

இன்னல் ஏற்படாத வாழ்க்கை அமைய வேண்டுமென்று அறிவுடையோர் விரும்புவர். இன்னல்கள் வரவே கூடாது. இன்பமே வேண்டுமென்று பேதைகள் பிரியப்படுவர். பிரயாசைப் பட்டு, பெருந்துன்பப் பெருங்குழியில் விழுந்து கிடப்பர்.

எப்படியேனும் இன்பத்தையே வாழ்க்கையாக்கிக் கொள்ள வேண்டும் என்று வேகமும், வெறியும் கொள்பவர்கள் நல்வினைகளை நசுக்கிப் போடுகிறார்கள். தீவினைகளைத் தேரோட்டமாக்கி திரிய விடுகிறார்கள். இந்தத் தீவினைத் தேரோட்டத்தில் அல்லும் பகலும் போராட்டங்கள் வெடித்து நல்லவர்களை ஒதுக்கிவிடவும், தீயவர்களை அணைத்துக் கொள்ளவும், சந்து பொந்துகளை உருவாக்கி விடுகின்றன.

ஆகவே, வாழ்க்கையில் செல்வமென்பது மகிழ்ச்சிதான். வாழ்க்கையின் மகிழ்ச்சி என்பது நல்வினைகள் தான். நல்வினைகள் ஒருவனுக்கு நிழலாக இருந்து, துணையாகத் தொடர்ந்து, நிலையாகப் பதிந்து, நெஞ்சம் விரும்புகிற நல்வாழ்க்கையில் நிறைவுடன் வாழச்செய்கிறது.

376. பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச் சொரியினும் போகா தம

பொருள் விளக்கம்:

பரியினும் = தீவினையால் ஏற்படுகின்ற விளைவுகளின்
பால்அல்ல = அமுதமான பயன்களை
ஆகாவாம் = ஆன்மாவானது ஏற்றுக்கொள்வதில்லை
உய்த்து = எப்படியேனும் காரியத்தை முடிக்க
சொரியினும் = மிகுதியாக முயன்றாலும்
கா = காவல் காத்து விழிப்பாயிருந்தாலும்
போ = தீமைதரும் பயன்கள் அழிவதில்லை
தம = துன்பங்களை நிரப்பிக் கொண்டே இருக்கும்

சொல் விளக்கம்:

பரி = பாதுகாப்பு; **ஆ** = ஆன்மா; **காவாம்** = காப்பது
பால் = அமுதம்; **உய்த்து** = அனுபவிக்க; **சொரி** = மிகுதி
போ = அழிதல்; **கா** = விழிப்பாய் இருத்தல், காத்தல்; **தம** = நிரம்ப

முற்கால உரை:

தமக்கு ஊழலல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும், தம்மிடத்து நில்லாவாம். ஊழால் தமவாய பொருள்கள் புறத்தே கொண்டுபோய் சொரிந்தாலும் தம்மைவிட்டுப் போகா.

தற்கால உரை:

உரிமையற்றவை காவல் செயினும் போதலும், உரிமை உள்ளவை தள்ளினும் சேர்தலும் முறைமையாம்.

புதிய உரை:

தீவினையால் ஏற்படுகின்ற அமுதப் பயன்களை களிப் பாக்கிக் கொண்டாலும் ஆன்மா ஏற்றுக் கொள்வதில்லை. அதுபோல, தீவினைப் பயன்களை மிகுதியாக்க கொள்ள விழிப்போடு முயற்சித்தாலும் அவை அழியாமல் துன்பங்களை நிரப்பிக் கொண்டேயிருக்கும்

விளக்கம்:

ஊழ்வினையானது இருகூறாகப் பிரிந்து அவை உண்டாக்குகின்ற பயன்கள், உடலையும், ஆன்மாவையும், உறுத்திக் கொண்டேதானிருக்கும். நல்வினையால் ஏற்படும் நல்ல பயன்களால் உடல் வனப்பும், செழிப்பும் அடைகிறது. மனம் இளமையும், வளமையும் கொள்கிறது. ஆன்மாவோ முழுமை அடைகிறது. அதற்கு எதிர்மாறாக தீவினையால் ஏற்படுகின்ற பயன்களை ஆனந்தக்களிப்போடு ஏற்றுக் கொண்டாலும், போற்றிக் கொண்டாலும், அவனது ஆன்மா ஏற்றுக் கொள்வதில்லை. அவன் எவ்வளவுதான் பயன்களை அனுபவிக்க முயற்சித்தாலும், அந்தத் தீவினைத் துன்பங்கள் அழிந்து போகாமல், மீண்டும், மீண்டும் மனதுக்குள்ளே நிரம்பி, நெருடிக் கொண்டே இருக்கும்.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

பொருள் விளக்கம்:

வகுத்தான் = தீவினைகள் செய்தவன்
வகுத்த = முறைப்படுத்திய

வகை = தந்திரங்கள் எல்லாம்
அல் ஆல் = மதிமயக்கத்தையும், கடும் நஞ்சையும் போன்றதாகும்
கோடி = அதைப் புதுமையென்று
தொகுத்தார்க்கு = குவித்துத் திரட்டியவர்களுக்கு
துய்த்தல் = அந்த வினைப் பயனை அனுபவித்தல்
அரிது = முடியாதது ஆகிவிடும்

சொல் விளக்கம்:

வகுத்தான் = தீவினையை வகுத்தவன்; **வகை** = தந்திரம், முறை
அல் = இருள்; **ஆல்** = நஞ்சு; **கோடி** = புதுமை
தொகுத்தல் = திரட்டுதல்
துய்த்தல் = வினைப் பயனை அனுபவித்தல், ஐம்பொறி நுகர்ச்சி

முற்கால உரை:

ஐம்பொறிகளால் நுகரப்படும் பொருள்கள் கோடியே உயர்ந்து தொகுத்தார்க்கும், தெய்வம் வகுத்த வகையால் அல்லது நுகர்தல் உண்டாகாது.

தற்கால உரை:

'இதற்கு இது' என முறைப்படி அன்றிக் கோடிக் கணக்கில் வைத்திருப்பாரேனும் நுகர முடியாது.

புதிய உரை:

தீவினையாளன் தந்திரத்தால் உண்டாக்கிய எல்லாமே நஞ்சைப் போன்றது. மதிமயக்கம் அளிக்கவல்லது. தீவினையால் தான் உண்டாக்கிய புதுமைகளை எப்படித்தான் திரட்டிக்காத்தாலும். அவனால் அதை அனுபவித்து மகிழ முடியாது.

விளக்கம்:

தீவினையால் பிறப்பது தீமைகள்தான். தீமைகள் கொடுப்பது துன்பங்கள்தான். துன்பங்கள் எல்லாம் வாழ்வின் இழப்புக்களுக்கு, வழிநெடுகக் குழப்பங்களுக்கு, விரித்துக் கொண்டே போகின்றன. தீவினையாளன் எத்தனைதான் தந்திரங்களில் தேர்ந்திருந்தாலும், எவ்வளவு தான் புதுமையாக விளைச்சல்களை அறுவடை செய்திருந்தாலும், அவனால் அவற்றைத் திரட்டித்தான் பார்க்க முடியும், ஐம்புலன்களால் அவற்றை அனுபவிக்க முடியாது. அநியாயமாக வந்தவையெல்லாம் அநியாயமாகவே தொன்றி, ஆக்கியவனை அழித்துவிட்டுத்தான் மறையும் என்பார்கள். இந்த உண்மையை வள்ளுவர் இந்தக் குறளில் எடுத்துரைக்கிறார்.

378. துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால ஊட்டா கழியும் எனின்

பொருள் விளக்கம்:

துறப்பார் = தீவினைகளை விடுபவரது
மன் = பெருமை
துப்புரவு = ஐம்பொறி நுகர்ச்சியால் முழுமைபெறுகிறது தீவினையால்
உறற்பால = மனம்போல அனுபவிக்க முடியாமல் போகிறபோது
இல்லார் = தரித்திரனாகிறான்
ஊட்டா கழியும் = பகையுண்டாகி

சொல் விளக்கம்:

துறப்பார் = கைவிடுதல்; **மன்** = பெருமை
துப்புரவு = ஐம்பொறி நுகர்ச்சி; **இல்லார்** = தரித்திரன்
ஊட்டல் = பகையுள்ளான்

முற்கால உரை:

வறுமையான் முயற்சி இல்லாதான் துறக்கும் கருத்துடையராவர். ஊழ்கள் ஒருதற்பாலவாய துன்பங்களை உருவியாது ஒழியுமாயின்.

தற்கால உரை:

முறையும் சூழலும் உரியதைப் பெறத் தடையானால் பெறமுடியாதவர் ஆவார்.

புதிய உரை:

தீவினையைத் துறந்தவன் பெருமையும், ஐம்பொறி நுகர்ச்சியின் பெருமையும் பெறுகிறான். தீவினையால் பயன்களை அனுபவிக்க முயற்சிக்கிறவன், மனம் பகையாகி அனுபவிக்க முடியாமல் தரித்திரனாகிறான்.

விளக்கம்:

நல்லவர்களுக்கு எப்பொழுதும் நன்மையே விளையும். அவர் செய்யும் செயல்களில் நலமே நிறையும். வாழ்க்கை முழுதும் வற்றாத வளமை பொழியும். அவர் வாழ்கிற ஒவ்வொரு பொழுதையும் உல்லாசமாகக் களிக்கிறார். உற்சாகமாகச் சுகிக்கிறார். அவர் பெயருக்குப் பெருமையும், வாழ்வுக்கு மேன்மையும், நல்ல முழுமையும் கிடைப்பதால் அவர் வாழ்வுக்குச் சான்றாகத் திகழ்கிறார்.

தீமை செய்பவருக்கு, விளையும் பயன்கள் மினையாகவே இருக்கும். வாழ்க்கையில் வந்து சந்திப்பன எல்லாம் வினையாகவே

முடியும். அவரது உடல் நலிய நலிய, ஐம்புலன் நுகர்ச்சிகள் அழிய அழிய, உடலால் வெறுமையாகிறார் வாழ்வையிலும் கருமைப் படிகிறது. உடலில் சக்தி இல்லாமையும், செயல்களில் வீரியம் இயலாமையும் சேர்ந்து கொள்வதால் அவர் கரித்திரர் ஆகிறார். வரம்பெற்று வந்த வாழ்வு சிரமற்றவன் தொங்குவதுபோல இருக்கிறது என்று எட்டாவது குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

379. நன்றாங்கால் நல்லவாக் காண்பார் அன்றாங்கால் அல்லல் படுவது எவன்

பொருள் விளக்கம்:

நன்றாம்கால் = நல்வினையாற்றுவோரின் இரத்தக்கலப்பு உறவெல்லாம்
நல்லவா = நல்லோர்களாகத் திகழ்வார்கள் என்பதை
காண்பார் = கண்முன்னே கண்டு மகிழ்வார்
அன்றாங்கால் = நல்வினை செய்யாத தீவினையாளர் பரம்பரைக்கு
அல்லல் = துன்பங்கள்
படுவது = ஒன்றன்மேல் ஒன்றாக வருவதற்கு
எவன் = யார் காரணம் (அவன்தான்)

சொல் விளக்கம்:

கால் = இரத்தக் கலப்பு, உறவு; **காண்பர்** = கண்முன்னே தெரிவர்
அன்றாங்கால் = தீவினைகள் சந்ததி; **அல்லல்** = துன்பம்
படுவது = ஒன்றன்மேல் ஒன்று உறுவது

முற்கால உரை:

நல்வினை விளையுங்கால் அதன் விளையாய இன்பங்களை துடைக்குந் திறன் நாடாது இவை நல்லனவென்று இயைந்து அனுபவிப்பார். ஏனைத் தீவினை விளையுங்கால் அதன் தொடர்பான துன்பங்களை அனுபவியாது நாடி அல்லலுறுவது எவன் கருதி.

தற்கால உரை:

நல்லவை உண்டாகும்போது அவற்றை நல்லவை என்று கருதி இன்பம் பெறுகிறவர்கள், தீயவை உண்டாகும்போது அவதியற்றுக் கலங்குவது எதற்காகவோ? கலங்குவது கூடாது என்பதாம்.

புதிய உரை:

நல்வினையாளர், தமது இரத்தக்கலப்பு உறவினர் எல்லோரும் நன்றாக வாழ்வதை அவரே கண்டு களிப்பார். தீவினையாளர்,

சந்ததிக்கோ ஒன்றன்மேல் ஒன்றாகத் துன்பங்கள் வந்து தொலைப் பதை அவர் கண்டு கொண்டு துன்பங்களை அனுபவிப்பார்.

விளக்கம்:

இருவினைகள் என்று ஊழ்வினையைப் பிரித்த வள்ளுவர், நல்வினையின் நயங்களையும், தீவினையின் பயங்களையும் தெளிவாகத் தெளித்துக் கொண்டேவந்தார்.

வினையாற்றியவருடைய வரலாற்றையும் வாழ்வு முறையை மட்டும் சொல்லிவிட்டு விடாமல், அவரைத் தொடர்ந்து வருகிற சந்ததியாரைப் பற்றியும், தூண்டிலில் சிக்கிய மீன்போல ஒரு தோற்றத்தை உண்டுபண்ணிக் காட்டுகிறார். அதில் தவறு பண்ணாத சந்ததிகள் தீவினையால் தத்தளிப்பதையும், நல்வினையால் நல்வாழ்வு பெறுவதையும் சொல்லுகிறபோது நல்வினையாளன் மகிழ்கிறான். தீவினையாளன் தானும் துன்பப்பட்டு, தன்பரம்பரையும் தன்னால் அழிவதையும் காண்கிறான் என்பதை விளக்கிச் சொல்லுகிறபோது அறிவுடையான் எவனும் தீவினைப்பக்கம் செல்லவே மாட்டான்.

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

பொருள் விளக்கம்:

ஊழில் = தொடர்ந்து செய்து வருகிற பழவினைகளைப்போல
பெருவலி = பெரும்வலிய சக்தி
யாவுள = எதுமெய்யாக இருக்கும்
மற்றொன்று = அந்த நல் - தீவினைகளைமாற்ற வேறு ஒன்று வந்து
சூழினும் = மாற்ற முயன்றாலும்
தான் = ஆன்மாவானது
முந்து உறும் = முந்திக்கொண்டு வந்து முடிவுகளைச் செய்யும்

சொல் விளக்கம்:

ஊழ் = பழவினை; **யா** = எது; **ஊ** = மெய்; **தான்** = ஆத்மா

முற்கால உரை:

தன்னை விளக்கும் பொருட்டு தனக்கு மறுதலை ஆவதோர் உபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாய மேயானும் பிறிதொன்றாலும் வலியாக அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். அதனால் ஊழ்போல் மிக்க வலியுடையன யாவை உள.

தற்கால உரை:

முறமையையும், சூழலையும் விட வலியது எது? மாற்றத்திட்டமிடினும் அவையே முன் நிற்கும்.

புதிய உரை:

தொடர்ந்து செய்துவருகிற பழ வினைகளைப் போல பெரும் சக்தி, எதுமெய்யாக இருக்கும்? அந்த நல் - தீவினைகளை மாற்ற வேறு ஒன்று வந்து மாற்ற முயன்றாலும் ஆன்மாவானது முந்திக் கொண்டு வந்து, முடிவுகளைச் செய்யும்.

விளக்கம்:

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும், உயிர்க் காற்றால் வாழ்கிறான். உயர் பேச்சால் மகிழ்கிறான். அவனவன் செய்யும் செயல்களால் இனம் பிரிக்கப்படுகிறான்.

வாழ்க்கையில் மனம்போல வாழ்வது ஒருமுறை. மானம்போக வாழ்வது இன்னொருமுறை. எப்படியேனும் வாழ்கிறமுறை, தப்படிப்போடுகின்ற தடித்தனமுடையவனின் தலையாய பண்பாக அமைகிறது. நாலுபேர் மகிழ நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லது செய்பவரின் அன்பும், பண்பும், ஆத்மார்த்தமாக அமைந்து விடுகிறது.

செயல் ஆற்றுபவன் ஜீவிப்பவன். செயலாற்றோன் சவத்திற்குச் சமானம். ஒவ்வொருசெயலும் முன்வினையாக அமைந்து, பிறகு பின்வினையாகி, பிறகு பழவினையாகிறது. அதுதான் ஊழ். ஊழ் என்பது ஒருவனின் செயலாகப் பரிணமித்து உடலும், உயிருமாக இரண்டரக் கலந்திருக்கிறது.

அத்தகைய உயிர்ப்பு மிகுந்த செயல்களை ஆத்மாதான் கணிக்கிறது. கட்டுபடுத்துகிறது. நேர்நெறியை நிலைப்படுத்த முயல்கிறது. அதனால்தான் ஊழைவிடச்சக்தி மிகுந்தது உலகத்திலே இல்லை. அதன் உயிர்ப்பாற்றலை ஆன்மாதான் அரசாள்கிறது. அந்த ஊழேவிட மாபெரும் சக்தியாகத் திகழ்கிறது என்று கூறி வள்ளுவர் அறத்துப்பாலை முடித்து வைக்கிறார்.

அறத்துப்பால் முற்றுப் பெற்றது.
பொருட்பால் புதிய உரையில் உங்களை சந்திக்கிறேன்.

அன்புடன்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

அறிஞர்களின் அன்பான கவனத்திற்கு

இதுவரை வெளிவராத புது உரையை எழுதுவதற்காக...

1. திருக்குறளில் உள்ள அதிகார வரிசையை மாற்றாமல் அப்படியே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

2. புதிய பொருள் கூற வேண்டும் என்பதற்காக. எந்த ஒரு சொல்லையும், எங்கேயும் புதிதாகச் சேர்க்கவில்லை.

3. எந்த இடத்திலும், எந்த ஒரு சொல்லையும் நீக்கிக் குறைக்கவில்லை.

4. எதற்காக இந்த உரை வந்திருக்கிறது என்பதற்கான விளக்கத்தை அந்தந்தக் குறளுக்குக் கீழே தந்திருக்கிறேன்.

எல்லோருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் புதிய உரையை எளிய இனிய தமிழில் தந்திருக்கிறேன்.

★ என் புதிய உரை உங்களை மகிழ்விக்கும்.

புதிய உரை எழுதுவதற்காக சொல்லும், பொருளும் கொடுத்துதவிய நூல்கள்.

1. அபிதான சிந்தாமணி
   (முதல் பதிப்பு - 1913)

2. ஆனந்தவிகடன் அகராதி
   (முதல் பதிப்பு -1935)

3. வின்சுலோ - தமிழ் ஆங்கில அகராதி
   (முதற் பதிப்பு - 1862)

4. பிங்கல நிகண்டு
   (பிங்கலமுனிவர்)

5. ஆங்கிலம் - தமிழ் சொற்களஞ்சியம்
   (சென்னை பல்கலைக்கழகம் - 1965)

6. தற்காலத் தமிழ் சொல்லகராதி
   (முதல் பதிப்பு - 1925)

7. திருமந்திரம்
   (திருமூலர்)

8. திருக்குறள்
   (பரிமேலழகர் உரை)

9. இருபதாம் நூற்றாண்டு
   திருக்குறள் உரையாசிரியர்கள்

10. எனது விளையாட்டுத் துறை
    இலக்கிய நூல்கள்

''திருக்குறள் புதிய உரை'' பாராட்டுரை

ஊரறிந்த, உலகறிந்த ''திருக்குறள்'' வாழ்வியல் நூலுக்கு, ஒரு மாபெரும் ''புதிய உரை'' எழுதிப் புரட்சியைச் செய்திருக்கிறார். உரையாசிரியர் டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள். இவர் விளையாட்டுத் துறையைத் தமிழ் இலக்கியத்தில் புகுத்திப் புதுமை செய்தவர்; செய்து கொண்டு இருப்பவர், ''விளையாட்டுக் களஞ்சியம்'' என்கிற விளையாட்டுத் துறை தமிழ் இலக்கிய மாத இதழைத் தொடர்ந்து, இருபத்து நான்கு ஆண்டுகள் நடத்தி, அதன் வெள்ளி விழா ஆண்டை நோக்கி வீறு நடை போட்டுக் கொண்டு இருப்பவர். விளையாட்டுத் துறை மற்றும் உடற்பயிற்சிகளுக்காக இதுவரை 200-க்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டவர்.

நாட்டிலே நடமாட விட்டிருக்கும் உரைநூல் ஏட்டிலேயெல்லாம், பரிமேலழகரைப் பின்பற்றியே திருக்குறள் உரைகள் திகழ்கின்றன. புதிய கோணத்தில், புதிய பார்வையில், புதிய சிந்தனையில் இவரைப்போல எவரும் திருக்குறளை இதுவரை ஆய்வு செய்தது இல்லையென்றே கூறலாம். திருக்குறளின் அதிகாரங்களிலோ, குறள்பாக்களின் சொற்களிலோ, இவர் எந்தவித மாற்றமும் செய்யவில்லை. துருவித்துருவி, ஆய்ந்து ஆய்ந்து பார்த்து, குறள்பாக்களின் சொற்களுக்கு உண்டான ஏனைய அர்த்தங்களைக் கண்டறிந்து, அவற்றிலே சிறந்தவைகளை, பொருந்துபவைகளைப் பொறுத்திப் புரட்சிகரமாக ஒரு புதிய உரையை எழுதித் தந்திருக்கிறார். ஏன் இப்படியும் இருக்கக் கூடாது என்ற கேள்வியை, உங்கள் உள்ளத்திலே எழுப்பிக் கொண்டு, ''புதிய உரை'' நூலைப் படித்தால் புரியும் - தெரியும். உண்மைதான் என்று உங்கள் உள்ளமே அறியும்.

உரையாசிரியர் டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள், ஒவ்வொரு குறளுக்கும் பொருள் விளக்கம், சொல் விளக்கம், முற்கால உரை, தற்கால உரை, புதிய உரை என்று எழுதியிருப்பதோடு, புதிய உரைக்கான விளக்கத்தையும் விரிவாகவே எழுதியிருக்கிறார்.

நவில்தொறும் நூல் நயம் போலும் என்பதற்கொப்பப் பயில்தொறும் பல புதிய கருத்துக்களை வாரி வழங்கிக் கொண்டிருப்பது வையப் பொதுமறையாகிய திருக்குறளேயாகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் எல்லாத் துறைக்கும் இயல்புதான் என்றால், அது திருக்குறளுக்கு மட்டும் விதிவிலக்காகி

விடுமா? எனவே, இந்தப் புதிய உரை காலத்தின் கட்டாயம். தேவைக்குக் கிடைத்த திறவுகோல். வாழும் மனிதனுக்கு வாய்த்த் வாழ்வியல் வசந்தம்.

சுவரை வைத்துத்தான் சித்திரம் என்பது போல. ஒருமனிதனுக்கு உடலை வைத்துத் தானே வாழ்வே உருப்பெறுகிறது. சிதைந்த சுவற்றிலே சித்திரங்களா வரைய முடியும்? உடல் நலமின்றேல், உள்ள வாழ்க்கைதான் நலமாகவா இருக்கும்? உடலில்தானே, உள்ளம், ஆன்மா, அறிவு, ஆற்றலெல்லாம் ஒருங்கிணைந்து இருக்கின்றன. எனவே, உடலைக்காக்கும், உபாயங்களை, உள்ளத்தை மேம்படுத்தும் வழிமுறைகளை, ஆன்மாவின் மூலம் அறியக் கூடிய அறநெறிகளை, திருவள்ளுவர் தனது திருக்குறளின் மூலம் கூறாமலா குறை வைத்திருப்பார். அவர் சித்தரல்லவா! கூறித்தான் வைத்திருக்கிறார் இலை மறை காயாக. காலங்காலமாக நாம்தான் அவைகளை கண்டுகொள்ளாது இருந்திருக்கிறோம்!

'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள்' என்றார் கர்த்தர் இயேசு. உரையாசிரியர், டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா அவர்கள், புதிய கண்ணோட்டத்தோடு திருக்குறளிலே எதையோ தேடியிருக்கிறார். அவர் தேடியதையே கண்ட டைந்திருக்கிறார். அதற்குரிய ஆதாரங்களை ஆய்ந்தறிந்து, சொற்பொருள் விளக்கமென அள்ளித்தெளித்து, தனது கருத்தை நிலை நாட்டியிருக்கிறார்.

குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்கள் வேண்டுமானால் கண்டுகொள்ளாமல் இருக்க லாம். புதிய சிந்தனையாளர்களுக்கு இந்நூல் கிடைத்தற்கரிய ஒரு புதையல். ''எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்கிற திருவள்ளுவரின் குறளுக்குக் கிடைத்த ஒரு நற்சான்று இந்த நல்லுரை.

இந்தத் ''திருக்குறள் புதிய உரை'' நூலின் மூலம், தமிழ் இலக்கிய உலகில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிற டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள், அடுத்தடுத்துத் திருக்குறளின், **''பொருட்பால்''**, **''காமத்துப்பால்''** போன்ற வைக்கும் புதிய உரைகளை எழுதித், தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க வேண்டு மென வேண்டி, விரும்பி வாழ்த்துகிறேன். .வணங்குகிறேன்.

அன்புடன்,

''உடற்கல்விக் கலைமாமணி''

உலக துரை,

விழுப்புரம்.

ஆசிரியரின் பிற நூல்கள்

01. விளையாட்டுக்களின் விதிகள்
02. விளையாட்டுக்களின் கதைகள்
03. விளையாட்டுக்களில் வினோதங்கள்
04. விளையாட்டு உலகில் வீரக் கதைகள்
05. வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்
06. விளையாட்டுக்களில் சொல்லும் பொருளும்
07. விளையாட்டுக்களில் வினாடி வினா-விடை
08. விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்
09. விளையாட்டுத் துறையில் பொது அறிவு நூல்
10. விளையாட்டு விழா நடத்துவது எப்படி?
11. விளையாட்டுக்களுக்குப் பெயர் வந்தது எப்படி?
12. விளையாட்டுக்களின் வரலாறும் வழிமுறைகளும்
13. விளையாட்டுத் துறையில் கலைச் சொல் அகராதி
14. விளையாட்டுத் துறையில் ஆங்கிலம், தமிழ், அகராதி
15. நலமே நமது பலம்
16. உடற்கல்வி என்றால் என்ன?
17. உலக நாடுகளில் உடற்கல்வி
18. உடலழகுப் பயிற்சி முறைகள்
19. உடற்கல்வியைக் கற்பிக்கும் முறைகள்
20. தேகத்தை தெரிந்து கொள்வோம்
21. பெண்களும் பேரழகு பெறலாம்
22. ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள்
23. பேரின்பம் தரும் பிராணாயாமம்
24. பயன்தரும் யோகாசனப் பயிற்சிகள்
25. பலம் தரும் பத்து நிமிடப் பயிற்சிகள்
26. இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள்
27. நீங்களும் உடலழகு பெறலாம்
28. நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம்
29. நீங்களும் உயரமாக வளரலாம்
30. நீங்களும் வலிமையோடு வாழலாம்
31. நீங்களும் நோயில்லாமல் வாழலாம்
32. நீங்களும் மகிழ்ச்சியோடு வாழலாம்
33. நீங்களும் இளமையாக வாழலாம்

34. உடலுக்கு அழகு தரும் எடைப் பயிற்சிகள்
35. உடல் எடையும் உணவுக் கட்டுப்பாடும்
36. உடலழகுப் பயிற்சி முறைகள்
37. எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம்?
38. உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புகள்
39. கிரிக்கெட் ஆட்டத்தின் கதை
40. கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி - பதில்
41. கேரம் விளையாடுவது எப்படி?
42. சதுரங்கம் விளையாடுவது எப்படி?
43. ஒலிம்பிக் பந்தயத்தின் கதை
44. கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள்
45. அகில உலக ஓடுகளப் போட்டி விதிமுறைகள்
46. குண்டான உடம்பைக் குறைப்பது எப்படி?
47. முக அழகைக் காப்பது எப்படி ?
48. தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள்
49. பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?
50. 1984ல் ஒலிம்பிக் பந்தயங்கள்
51. பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்
52. சியோல் ஒலிம்பிக் பந்தயங்கள்
53. இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள்
54. வெற்றி விளையாட்டு காட்டுகிறது (சிறுகதை)
55. அர்த்தமுள்ள விளையாட்டுக்கள்
56. தமிழ்நாட்டுச் சடுகுடுப் பாடல்களும் சடுகுடு ஆட்டமும்
57. மறைந்து கிடக்கும் மனித சக்தி
58. குழந்தைகளுக்கான உடற்பயிற்சியும் விளையாட்டும்
59. விளையாட்டுத் துறையில் தமிழிலக்கிய வளர்ச்சி
60. குறளுக்குப் புதிய பொருள்
61. வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்
62. தெரிந்தால் சமயத்தில் உதவும்
63. வானொலியில் விளையாட்டுக்கள்
64. நமக்கு நாமே உதவி
65. விளையாட்டு அமுதம்
66. விளைய்ாட்டு உலகம்
67. விளையாட்டுச் சிந்தனைகள்
68. விளையாட்டு விருந்து
69. விளையாட்டு ஆத்திச்சூடி
70. வாழ்க்கைப் பந்தயம்

71. சிந்தனைச் சுற்றுலா
72. சிந்தனைப் பந்தாட்டம்
73. அவமானமா? அஞ்சாதே!
74. அனுபவக் களஞ்சியம்
75. பாதுகாப்புக் கல்வி
76. கைப்பந்தாட்டம்
77. கால்பந்தாட்டம்
78. கூடைப்பந்தாட்டம்
79. பூப்பந்தாட்டம்
80. வளைகோல் பந்தாட்டம்
81. வளையப்பந்தாட்டம்
82. மென் பந்தாட்டம்
83. சடுகுடு ஆட்டம்
84. கோ கோ ஆட்டம்
85. நல்ல கதைகள் பாகம் I, பாகம் II, பாகம் III
86. மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள்
87. வேஷங்கள் விளையாடுகின்றன (சிறுகதைகள்)
88. பண்புதரும் அன்புக் கதைகள்
89. நல்ல பாடல்கள்
90. நல்ல நாடகங்கள்
91. நவரச நாடகங்கள்
92. நவனின் நாடகங்கள்
93. சுவையான நாடகங்கள்
94. தெய்வ மலர்
95. நல்ல நல்ல கதைப் பாடல்கள்
96. செங்கரும்பு (கவிதைத் தொகுப்பு)
97. கடவுள் கைவிட மாட்டார்
98. மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?
99. Quotations on Sports and Games
100. General Knolwedge in Sports and Games
101. How to break ties in Sports and Games?
102. Physical Fitness and Health

நன்றியுரை

8.12.2000 அன்று, தி. நகர், வாணிமகாலில்

நடைபெற்ற, நூல் வெளியீட்டு விழாவில், தலைமை ஏற்று

'திருக்குறள் புதிய உரை' நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றிய,

தமிழ் நாடு பள்ளிக் கல்வி இயக்குனர். **திரு. அரங்க தெய்வமணி** அவர்கட்கும்,

முதல் நூலைப்பெற்று வாழ்த்துரை வழங்கிய

சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் **திரு. அறிவொளி** அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி.

அன்புடன்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

'பல்கலைப் பேரறிஞர்' - என்று
படித்தவர்களால் பாராட்டப்படுகின்ற
டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா M.A., M.P.Ed.,
Ph.D., D.Litt., D.Ed., FUWAI அவர்கள், உடலியல்,
விளையாட்டு, கதை, கவிதை, நாடகம் இலக்கிய
ஆய்வுகள், ஆங்கிலம் - தமிழ் அகராதி, கலைச்
சொல் அகராதி, இன்னும் பல்வேறு தலைப்புக்
களில் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களை
எழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இவர் எழுதிய சிறந்த நூல்களுக்காக
மூன்று முறை தேசிய விருது பெற்றுள்ளார்.
தமிழக அரசின் விருதையும் பெற்றிருக்கிறார்.

உடல் காக்கும் கலையை உலக மக்களுக்கு
உணர்த்தி உற்சாகம் ஊட்டுவதற்காக,
''விளையாட்டுக் களஞ்சியம்'' என்னும் மாத
இதழைத் தொடர்ந்து 25 ஆண்டுகளாக நடத்தி
வருகிறார்.

மக்களுக்கு உடல் நலத்தில்
விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த
''ஓட்டப் பந்தயம்'' என்னும் முழு நீளத்
திரைப்படத்தை, எழுதி, இசையமைத்து,
நடித்து, இயக்கி, தயாரித்து திரையிட்டுள்ளார்.

மன நலம் மற்றும் மகிழ்ச்சியை உண்டாக்கும்
வண்ணம், பாடல்கள் எழுதி இசையமைத்துத்
தயாரித்து இசை ஒலி நாடாக்களை
வெளியிட்டிருக்கிறார்.

இசை, நடனம் மற்றும் இசைக்கருவிகளில் பயிற்சி
தருவதற்காக **''சஞ்சு கல்சுரல் அகாடமி''** - என்ற
நிறுவனத்தை அமைத்து, அதன் தலைவராக
இருந்து வழி நடத்தி வருகிறார்.

ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரியில்
ஆய்வுத்துறைத் தலைவராகவும்,
பேராசிரியராகவும் பணியாற்றிய
அனுபவமானது, **''திருக்குறள் புதிய உரை''**
எனும் இந்த நூலின் முழுமைக்கு, மேலும்
செழுமை ஊட்டி இருக்கிறது.